கவிதையும் வாழ்க்கையும்

[சென்னை அரசாங்கப் பரிசு பெற்ற நூல்]

அ. மு. பரமசிவானந்தம்

வள்ளியம்மாள் கல்வி அறம்,
அண்ணா நகர், சென்னை — 102.

தமிழ்க்கலைப் பதிப்பகம்
சென்னை — 30

493

கவிதையும் வாழ்க்கையும்

[சென்னை அரசாங்கப் பரிசுபெற்ற நூல்]

அ. மு. பரமசிவானந்தம்

வள்ளியம்மாள் கல்வி அறம்,
அண்ணா நகர், சென்னை - 102.

தமிழ்க்கலைப் பதிப்பகம்
சென்னை — 30

உரிமைப் பதிப்பு
முதற் பதிப்பு, ஜனவரி, 1963
இரண்டாம் பதிப்பு, 1970
மூன்றும் பதிப்பு, 1977
நான்காம் பதிப்பு, ஜூன், 1981

விலை ரூ. 20-00

(மத்திய அரசு வழங்கிய
சலுகைவிலைத் தாளில்
அச்சிடப்பெற்றது)

விற்பனை உரிமை:

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை-1

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-600 014.

நூல்பற்றி...

'மலரினும் மெல்லிது காமம்,' என்றார் வள்ளுவர். அக் காமத்தோடு தொடர்பு கொண்டுள்ள வாழ்க்கையும் அத்தகையதே. காமத்தின் 'செவ்வி தலைப்படுவார் சிலர்' என்றார் அவர். அதே போலத்தான் வாழ்க்கையின் செவ்வியில் தலைப்பட்டு அதை உணர்ந்து துய்ப்பவர்களும் உள்ளார்கள். பரந்த உலகில் வாழ்க்கை நிறைந்திருந்த போதிலும், அதன் அமைப்பையும், கூறுபாடுகளையும், அடிப்படையினையும் அறிந்து, வாழ்வாங்கு வாழ்பவர் ஒரு சிலரே யாவர். அவருள்ளும் 'தாம் பெற்ற இன்பம் வையகம் பெறுக,' என்ற நல்ல உள்ளத்தோடு உலக வாழ்வினை உள்ளத்துள் உணர்ந்து அதைப் போற்றுவார் ஒரு சிலரே! அச் சிலருள் அவ்வாழ்வைக் கவிதையாக்கி உலக மக்கட்கு வழங்குபவரே கவிஞராவர்.

மலர்ச்செடிகள் காடுகளில் நிறைய உண்டு. ஆனால், அவற்றைக் கண்டு போற்றுபவர் யாவர்? முள்ளும் கல்லும், செடியும் கொடியும் நிறைந்த காட்டுக்குள்ளும் மலர் கண்டு கவி பாடுபவர் ஒரு சிலரே. அம் மலரைப் பார்த்து அதன் நலன் துய்ப்பாரையும் காணல் அரிது. ஆனால், அம் மலர்ச் செடிகளையும் கொடிகளையும் செம்மையாக வீட்டிலும் தோட்டத்திலும்—தேவையாயின் பூந்தொட்டிகளிலும் வளரவைத்து—அவற்றில் பூக்கும் மலர்களைக் கண்டும் பயன்படுத்தியும் துய்ப்பவர் பலராவர். தேன் உண்ணும் வண்டுகள், அப்பூக்களில் தேனை உண்ண வரும் காட்சியும் ஒரு சிறந்த

காட்சியாகும். கவிஞன் அதே நிலையில் வாழ்வினை— செம்மைப் படுத்தப்பட்ட வாழ்வினை - சிறந்த காதல் வாழ்வினை - அதன் அடியாகப் பிறக்கும் அற வாழ்வினை - அழகுபடத் தன் கவிதையில் காட்டு கின்றான். நல்ல கவிதையும் வாழ்வும் பிரிக்க முடியாதன. இந்த அடிப்படையில் எழுந்ததே இந்நூல்.

தொல்காப்பியனார் காலந்தொடங்கி இன்று வரை தமிழில் எத்தனையோ கவிதைகள் - இலக் கியங்கள் தோன்றின. ஆயினும், அவையனைத்தும் வாழவில்லை. வாழ்வோடு பொருந்திய மெய்க் கவிதைகளே சிறக்க வாழ்கின்றன. இந்நிலை உலக மொழிகளிலுள்ள கவிதைகள் அனைத்துக்கும் பொருந்தும். கவிதையும் வாழ்க்கையும் பிறந்து வளர்ந்த வரலாற்றையும், அவை இணைந்து வாழும் வாழ்க்கை முறையையும் இந்நூலில் ஒல்லும் வகை காட்டியுள்ளேன். தமிழ் வளர்ச்சிக்கு இந் நூல் சிறிதே உதவக் கூடும் என நம்புகிறேன். நல்லார் கண்டு நலமுளதேல் கொள்ள வேண்டுகிறேன்.

தமிழ்க்கலை இல்லம்,
சென்னை-30
31-1-'63

அ. மு. ப

பொருள்

I கவிதை

		பக்கம்
1.	கவிதை-ஒரு கலை	... 9
2.	கவிதையும் கவிஞனும்	... 25
3.	கவிதையின் வகைகள்	... 46
4.	கவிஞர் வெற்றி	... 77
5.	கவிதை நலன்	... 100

II வாழ்க்கை

1.	மண்ணும் விண்ணும்	... 151
2.	உயிர்த்தோற்ற வளர்ச்சி	... 171
3.	மனித வாழ்க்கை	... 196
4.	அகமும் புறமும்	... 223

III கவிதையும் வாழ்க்கையும்

1.	வாழ்வோடு பிணைந்த கவிதை	... 257
2.	பத்துப் பாட்டு	... 273
3.	எட்டுத் தொகை	... 299
4.	குறள்	... 327
5.	காப்பியங்கள்	... 348
6.	சமய இலக்கியங்கள்	... 368
7.	கம்பரும் சேக்கிழாரும்	... 378
8.	பிற்கால இலக்கியங்கள்	... 392
9.	இக்கால இலக்கியங்கள்	... 401
10.	Books referred	... 412

1. கவிதை ஒரு கலை

கதிரவன் வானவீதியில் இடைநின்று ஒளிரும் அந்த இடைவேளை; கோடையல்லாவிட்டாலும் கொதிக்கும் வெயிலின் நிலை தெரிந்துதான் இருந்தது. அந்த வெயிலிலும் தெருவிலே கூட்டம் நிறைந்திருந்தது. கிராமத் திண்ணைகளில் பலர் உட்கார்ந்திருந்தனர். வீட்டோரங்களில் பலர் நின்றிருந்தனர். தெருப்புழுதியிலே, கழைக்கூத்தாடி தன் வேடிக்கைகளை யெல்லாம் ஒன்றன்பின் ஒன்ருகக் காட்டிக் கொண்டிருந்தான். வளையா நெடு மூங்கிலின்மேல் நின்று, அவன் ஆடும் காட்சியை அனைவரும் கண்டனர். ஆட்டம் அழகுதான்; அனைவரும் கைகொட்டி ஆரவாரம் செய்தனர். அவன் 'கரணம்' போடுவதும், தாவி ஆடுவதும், தலை கீழாகத் தொங்குவதும் காண்போர் அனைவர்தம் கண்ணையும் கருத்தையும் பற்றி ஈர்த்தன. அவர்கள் உள்ளங்களிலெல்லாம் இன்பவெள்ளம் ஊற்றெடுக்கச்செய்தான் அக் கூத்தாடி. இளங்குழந்தைகளும் பெரியவர்களும் தங்களை மறந்த நிலையில், அவன் ஆடல் கண்டு மகிழ்ந்தார்கள். அவர்களை அவ்வாறு முழுக்க முழுக்க மகிழவைக்கும் அந்தக் கழைக்கூத்தாடியின் நிலை என்ன?

பாவம்! கழைக்கூத்தாடி தன் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டல்லவா, அந்த வேடிக்கைகளைக் காட்டிக் கொண்டிருந் தான்! வழுக்கி விழுந்தால் அவன் கதி என்ன என்பதை அவன் அறிவான். அத்தனைபேர் கைகொட்டி ஆரவாரிக்கும் அந்த நிலையில் அவன் உள்ளம் மகிழ்ச்சியிலா செல்லும்? எப்படி எப்படி வளைந்து நெளிந்து, வழுவாது ஆடவேண்டும் என்ற எண்ணத்திலே, அவன் உள்ளத்தில் மகிழ்ச்சி பிறக்க வழியேது? கொதிக்கும் வெயிலினுல் உடலில் வழிந்தோடும் வியர்வையை

அவன் வேதனையோடுதான் துடைத்துக் கொள்வான். ஒரு வகையாகத் தன் விளையாட்டுக்களை முடித்துக்கொண்டு கீழே இறங்கி, 'அப்பாடி' என்று ஒரு பெருமூச்சு விடுவான். அம் மூச்சிலேதான் எத்துணை உள்ளச்சோர்வு கலந்திருக்கும்! ஆனால், அதேவேளையில் அங்குள்ளவர் அனைவரும், 'ஆடல் முடிந்து விட்டதே!' என்று மகிழ்ச்சி நீங்குவர். பாவம்! கூத்தாடியின் உள்ளச் சோர்வு அவர்களுக்கு எப்படித் தெரியும்? ஆடி ஓய்ந்த அவன், அப்பார்வையாளர் தரும் பணம் காசுகளைச் சேர்த்துக் கொண்டு மூட்டை கட்டுவான். ஆம், கழைக்கூத்தாடியின் ஆடல், கலைகளுள் ஒன்றுதான். எனினும், அவன் கலை மற்றவர்களுக்கு இன்பம் தருகின்றதேதவிர, அவன் வரையில் அது ஒரு வாழ்க்கைப் போராட்ட நிகழ்ச்சியாகத்தானே முடிகின்றது! ஆனால், கவிஞன் காட்டும் கவிதைக் கலை அப்படிப்பட்டதன்று.

ஆடலும் பாடலும் இடையறாது இயங்கும் நாடு நம் அருமைத் தமிழ்நாடு. தண்ணார் தமிழ் அளிக்கும் இப் பொன்னாட்டில் ஆடற்கலையும் பாடற்கலையும் பன்னெடுங் காலமாக வாழ்ந்து வருகின்றன. ஆடற்கலை சிறந்த ஒன்றாகப் பண்டும் போற்றப்பட்டது; இன்றும் உலக மக்களெல்லாம் ஒருசேரப் போற்றக்கூடிய வகையில் நம் நாட்டுப் பரதமாகிய ஆடற்கலை சிறந்துள்ளது. இக் கலைபற்றியும் இதன் அமைப்பு முதலியன பற்றியும் சிலப்பதிகாரம் அழகுபட விரிவாக விளக்கியுள்ளது. ஆம். இளங் கன்னிகை ஒருத்தி கலை நலமெல்லாம் தோன்ற ஆடுவதே இக்கலை.

நடன அரங்கில் மக்கள் நிறைந்திருக்கிறார்கள். ஆடவரும் பெண்டிரும், இளைஞரும் அணிஅணியாக நாடக அரங்கில் அமர்ந்துள்ளனர். குறித்த வேளையில் திரை நீக்கப்படுகின்றது. ஒசிந்த பூங்கொம்பென நின்ற கன்னியின் ஆடல் தொடங்கு கின்றது. ஆடலில் எத்தனையோ வகை. பெண் தன்னை எத்தனை வகையில் வளைக்க முடியுமோ அத்தனையும் செய்து கலை நலத்தைக் காட்டுகின்றாள். காண்கின்றவர் தம்மை மறந்து கலைவய மாகின்றனர். நாடக அரங்கில் நெடுநேரம்

அவர்கள் அமர்ந்திருந்தும் நேரம் செல்வதே அவர்களுக்குத் தெரியவில்லை. தன்னை மயிலாகவும், மற்றும் பாம்பாகவும், பல்வேறு பொருளாகவும் ஆக்கி அலங்கரித்துக்கொண்டு, அப் பெண் ஆடும் நலமெலாம் கண்ணால் அள்ளிப் பருகி ஆனந்த முறக் காண்போர் கைதட்டி ஆரவாரிப்பர். தலைவர் அக் கலை நலத்தையெல்லாம் பாராட்டிப் பேசுவர். ஆனால், அதேவேளையில் அப்பெண்ணின் நிலை என்ன? தன் புகழ் கேட்டு அவள் உள்ளம் மகிழும்; கை தட்டும் ஆரவாரம் அறிந்து உணர்ச்சி பொங்கும். எனினும், தாங்கமுடியாத நகைப் பளுவையும், சுமக்க இயலாத ஆடை அலங்காரங்களையும் தாங்கியும் சுமந்தும், மயிலாகியும், பாம்பாகியும் அடி பிறழாது நடிக்க வேண்டுமே என்ற கவலையில்—நிமிடத்துக்கு நிமிடம் நெளிந்துநிற்கும் நிலையில்—அவள் உள்ளம் என்ன பாடு படும்! வழியும் வியர்வையையும் துடைக்க முடியாது; கண் கூச்சமிடும் ஒளி விளக்கின் வெளிச்சத்தை விட்டகல முடியாது. நட்டுவனார் பாட்டுக்கும் தாளத்துக்கும் ஒப்ப நின்று ஆடவேண்டிய அந்தக் கொடிய நிலையை எண்ணின், அவள் உள்ளம் வருந்துமே! ஏதோ பொழுது போக்குக்கு என்று அக் கலையைக் கற்பவர் ஒரு சிலர் இருப்பினும், பலர் அதை வாழ்க்கைக்கு வருவாய் தேடித்தர என்றுதானே பயில்கின்றனர்? படங்களிலும், அரங்கங்களிலும், மணம் முதலிய நிகழ்ச்சிகளிலும் நடித்து, தம் வாழ்வுக்கு வேண்டிய பொருள்பெறும் நடன மாதர்கள்தாமே நாட்டில் அதிகம்! குறைந்தது மூன்று மணிநேரம் ஆடி அலுத்து நிற்கும் அந்நாட்டியப் பெண்ணின் உள்ளமும் உடலும் அந்த வேளையில் எத்துணைச் சோர்வினைப் பெற்றிருக்கும்! கண்ட மக்க ளெல்லாம் கருத்தழிந்து எல்லையற்ற இன்ப வாரிதியில் திளைக்கும் அந்த வேளையில், அந்த இன்பத்துக்கு மூல காரணமாயிருந்த அந்த மங்கையின் நிலை இவ்வாறாய்ச் சோர்வுற்ற நிலைதானே? ஆம். ஆனால், கவிஞன் காட்டும் கவிதைக் கலையோ, இந்நிலைக்கு மாறுபட்ட ஒன்றுதான். மற்றவர் மகிழத் தானும் மகிழ்வதே கவிஞனின் கலை.

'முத்துக் குளிப்பதொரு தென் கடலிலே' என்று நம் நாட்டுப் பெருமை தோன்றப் பாட்டிசைக்கின்றார் கவிஞர்

பாரதியார். அதைக் கேட்க நமக்கெல்லாங்கூட உள்ளம் மகிழ்கின்றது. எடுத்த முத்தைத் தரத்துக்கேற்பப் பிரித்து விலை மதிக்கிறார்கள். அரசியர் தொடங்கி அனைவரும் தத்தம் தகுதிக்கு ஏற்பப் பணம் கொடுத்து முத்துக்களை வாங்கி அணிகின்றார்கள். அதை அணிந்துகொண்டு, அழகுபடுத்திக் கொண்டு வெளியே உலாவுவதிலேதான் அவர்கள் எத்துணைப் பெருமை கொள்ளுகிறார்கள்! ஆனால், அதே வேளையில், அந்த முத்துக்களைக் கடலுள் ஆழ்ந்து குளித்தெடுக்கும் அத் தொழிலாளியைப்பற்றி அவர்கள் எண்ணுவதில்லை. எண்ணத் தேவையும் இல்லையே!

ஆழ்கடலின் அடித்தளத்தில் முத்துக்குளிப்பவன், தன் வாழ்வைப் பொருட்படுத்தாது, வரும் ஊதியத்தால் தன் குடும்பத்தை வாழவைக்கவேண்டும் என்ற ஒரே நோக்கோடு, உயிருக்கு மன்றாடிக்கொண்டு படும் அல்லலை எண்ணவும் முடியவில்லையே! ஆம். முத்துக் குளிப்பதும் ஒரு கலைதான்; பிறநாட்டாருக்கெல்லாம் கைவரப்பெறாத ஒரு கலைதான்! அம் முத்தும் விலை மதிக்கமுடியாத ஒரு பெரும் பொருள்தான். அதை அணிபவர்களும் தம் உடலையும் அதையும் ஒத்து நோக்கி நோக்கி உள்ளம் பூரிக்கின்றார்கள். ஆனால், அந்த முத்தை மூழ்கி எடுக்கும் அக்கலைஞனோ — முத்துக் குளிப்பவனோ எள்ளளவாவது உள்ளத்து இன்பம் கொள்ள முடியுமோ! கடலுக்குள் எந்த நேரத்திலும் காத்திருக்கும் கொடுமைக்கும் அல்லலுக்கும் ஆளாக நேருமே என்று எண்ணி அஞ்ச வேண்டுபவன்தானே அவன்! கரைக்கு வந்து சேர்த்தனவற்றையெல்லாம் கொடுத்துவிட்டு, 'அப்பாடா' என்று அண்ணாந்து நோக்கித் தன் சோர்வைப் போக்கிக்கொள்ளும் அத் தொழிலாளியைப் பார்த்திருக்கிறோமே! ஆம். அவன் தன் வாட்டத்திற்கிடையே, தான் வாழ்வதற்காகப் பாடுபட்டு, தன் வாட்டத்தையும் மறந்து, மற்றவர்களுக்குத் தன் கைத் திறன்மூலம் மகிழ்வளிக்கின்றான். ஆனால், கவிஞன் கலை அந்த வகையில் அமைவதன்று; கவிஞன் தானும் மகிழ்ந்து, மற்றோரையும் மகிழ்விக்க வகை காண்பதே கவிதையாகும்.

'கழைக்கூத்தாடியின் கதையைப் போன்றதுதான் சர்க்கஸ் விளையாட்டுக்காரன் கதையும். சிறப்பாகச் சிங்கம் புலி இவற்றைப் பழக்குபவனை எண்ணிப் பார்க்கவேண்டும். அவன் தன் வயிற்றுப் பிழைப்புக்காகவன்றோ அவற்றைப் பழக்கும் ஒரு கலையைச் சாதனமாகக் கொண்டுள்ளான்? சிங்கமும் வெம்புலியும் உறுமும்போதும், சீறும்போதும் அந்த இரும்புக்கூண்டுக்குள் இருக்கும் அவன் உள்ளம் எப்படி இருக்கும்? தூரத்தில் உட்கார்ந்துகொண்டு வேடிக்கை பார்க்கும் மக்களுக்கே அக்காட்சி கொடுமையுடையதாக இருக்குமே! அதுவும் சிங்கத்தின் வாயில் தன் தலையை விடும்போது அவன் மனம் எவ்வாறு இருக்கும் என்பதை அவனேயன்றி, வேறு யாரால் உணர முடியும்? அவன் முற்றத்துறந்த முனிவனாயின் சரி. புலி வாயும், சிங்கத்தின் வாயும், பூஞ்சோலையும் ஒருவேளை அத்துறவிக்கு அப்போது—அந்தத் துறவு நெறியின் தூய்மைப் பாதையிலே—ஒன்றாகலாம். ஆனால், அவன் தன் வயிற்றுப் பிழைப்புக்காகவன்றோ இந்த விளையாட்டை மேற்கொண்டிருக்கிறான்? பார்ப்பவர் கைகொட்டி ஆரவாரிக்கும் போதெல்லாம் அவன் உள்ளத்தில் இன்பத்தேன் பாயுமா? இந்த ஆரவாரத்தில் அமைதியாய் இருக்கும் சிங்கங்கூட ஆர்ப்பரித்து எழினும் எழும். அதை அடக்க வேண்டும் அவன்; பிறகு தன் செயலை மேற்கொள்ள வேண்டும். இந்த நிலையில் அவன் உள்ளத்தில் மகிழ்ச்சி பிறப்பதெங்கே? 'எப்போது விளையாட்டுக்கள் முடியும், வெளியே வரலாம்!' என்றுதானே அவன் 'உள்ளம் கழியும் நாழிகைகளைக் கணக்கிட்டுக் கொண்டிருக்கும்! வேடிக்கை பார்ப்பவர் தம்மை மறந்த நிலையில் ஒருமணி நேரத்தை ஒரு நொடியாக எண்ணின போதிலும், அந்தக் கூண்டில் இருக்கும் அவனுக்கு அது ஒரு யுகமாகவல்லவோ தோன்றும்? அவன் மேலே பார்வைக்குப் பெரிய 'கோட்டும்', அதன்மேல் பதக்கங்களும் அணிந்து தோற்றமளிப்பினும், உள்ளம் என்ன செய்துகொண்டிருக்கும்? ஆம். அவனைக் காண்போர், அவன் வனவிலங்கை ஆட்டும் சிறப்புக்களைக் கண்டு வியப்போர்—கைகொட்டி ஆரவாரிக்கலாம்; தங்கப்பதக்கங்கள் வழங்கலாம், அவற்றைப் பெறும்போதும் தனது மாத

ஊதியத்தைப் பெறும்போதும் ஒரு வேளை அவன் மகிழலாம். எனினும், அந்தக் கொடிய கூண்டுக்குள் தன் கைத்திறனைக் காட்டும் அந்த வேளையில்—அனைவரும் தன் திறமையைக் கண்டு கைகொட்டி, ஆரவாரித்துப் போற்றும் அந்தவேளையில், அவன் உள்ளத்தில் ஏது மகிழ்ச்சி? ஆனால். கலைஞன் நிலை—கவிஞன் நிலை—இதுவன்று. அவன் கலை, தானும் மகிழ்ந்து மற்றோரையும் மகிழ வைப்பதே!

ஒன்றன்பின் ஒன்றாக இவ்வாறே எல்லாக் கலைஞர்களையும் கவிஞனோடு ஒப்பிட்டுக் காணமுடியும். அந்தக் காட்சிகளின் முடிவெல்லாம் பெரும்பாலும் ஒன்றாகவேதான் அமையும். மற்றவர் மகிழும் அதே வேளையில், மகிழ்ச்சியூட்டும் அக் கலைஞன் அந்த மகிழ்ச்சியில் திளைக்க முடிவதில்லை. அது மட்டு மன்று; மற்றவர் மகிழ, அதன்மூலம் தன் வாழ்வைப் பெருக் கவே அக் கலைகளை அவன் பயன்படுத்திக் கொள்ளுகின்றான். ஓவியக் கலைஞனும் சிற்றுளிக் கலைஞனும் மற்றக் கலைஞர்களும் பெரும்பாலும் அந்த வகையில்தானே வாழ்வை நடத்து கின்றார்கள்? எங்கோ ஒருவர் இருவர், வேறு வருவாயால் வாழத் தெரிந்தவர்கள், இக்கலைகளைப் பொழுதுபோக்காகக் கொள்வார்கள். சிற்றுளி கொண்டு, சிதறும் துகள் தரும் தொல்லைக்குச் சலியாது, பெரிய கல்லைப் பெருமைசான்ற பதுமையாக்கும் அக் கைவண்ணத் திறன் வாய்ந்த தொழிலாளி யின் துயரை எண்ணிப் பார்க்க முடியுமா? ஓவியக் கலைஞன் மட்டும் என்ன, உள்ள நிறைவிலா வாழ்கின்றான்? ஆனால், கவிஞர் என்றுமே தம் கவிதை புனையும் தொழிலை வாழ்வுக்காக விற்பதில்லை; அப்படி விற்றதாகக் காணப்படும் கவிதைகளோ, என்றென்றும் வாழ்வதுமில்லை. அதுமட்டுமன்று; கவிஞன் தான் வருந்தி வருந்தி நூல் எழுதினாலும் அது கவிதையாகாது, ஏதோ சொல் கொண்டமைத்த ஒரு கவிதைச் சுவராக நிற்குமே ஒழிய, மற்றவர் மனத்தை மகிழவைக்கும் மலர்ச்சோலையாக அது நிச்சயம் இராது. கவிஞனுடைய உள்ள மகிழ்ச்சியில் உதிப்பதே கவிதை. உள்ளத்தை வருத்தி உதட்டில் சொல்லாக வரும் கவிதைகள் வெற்றுக் கவிதைகளாகி வீணாகக்

கெட்டொழியுமேயன்றி, அவை என்றென்றும் வாழா. ஒரு சில கவிதைகள் தோன்றிய நாள் இன்னதென் அறியா நெடுங் காலத்துக்குமுன் உண்டான போதிலும், இன்றும் வாழ்வ தற்கும், ஒருசில தோன்றிச் சில நாள்களுக்குள்ளே கேட்பாரற்று வீழ்வதற்கும் காரணம் இதுவேயாகும்.

கவிஞன் எப்போது பாட்டிசைக்கின்முன்? கழைக் கூத்தாடி தனது அன்றைய வருவாயை எண்ணும்போது ஆடுகின்முன். முத்துக் குளிப்பவன் காலம் பார்த்து, இடம் பார்த்து, பிற சுற்றுச் சார்புகளெல்லாம் பார்த்துத் தன் தொழிலைத் தொடங்குகின்முன். சர்க்கஸ்காரன் அந்த ஆட்டவேளையின் கடைசிக் கட்டத்தில், முள் வேலிகளுக்கு இடையில் தனக்குக் காவலாகப் பலர் சூழ்ந்து நிற்க, தன் கலை நலத்தைக் காட்ட முற்படுகின்முன். ஆடரங்குள் அழகணங்கின் நிலையும் அத்தகை யதே. அவர் யாவரும் தம் எதிரில் நிற்கும் மக்கள் மன நிலையை ஒட்டி நீட்டியும் குறுக்கியும் தம் கலைநலத்தைக் காட்டுவர். ஆனல், கவிஞன் அந்த நிலையில் பாட்டிசைக்க முடியாது. முதலாவதாக மற்றவரை மகிழ்விக்க வேண்டும் என்ற ஒன்றுக்காக மட்டும் அவன் கவிதை ஊற்றும் புறப் படாது. ஆம். கவிதை மற்றவர்களை மகிழ்விப்பதுதான். ஆனல், மற்றவரைத் தன் கவிதையால் மகிழ்வித்து அதனல் பொருள் பெறவேண்டும் என்ற உணர்வுவழிக் கவிதை கட்டாயம் உருப்பெற்று உதட்டில் ஓடி வராது.

கவி எப்படிப்பட்டவன் என்பதைத் தமிழர் மட்டுமன்றி மற்றவர்களும் வரையறுத்துள்ளார்கள். மற்றவர் தன்னைப் புகழவேண்டுமே என்பதற்காகமட்டும், ஒருவன் உண்மைக் கவிஞனுக முடியாது. மற்றவர்களிடம் பொருள் பெற வேண்டுமே என்பதற்காக மட்டும் கவிஞன் கவிபாட முடியாது. ஏதாவது கட்டாயத்தின்பேரில், யாருக்காவது பாடித்தர வேண்டுமே என்பதற்காக மட்டும், கவிஞன் தன் கடையை விரிக்க முடியாது. ஒரு வேளை ஒரு சிலர் விரித்திருக்கலாம். ஆனல், அவர்கள் கவிஞர் வரிசையில் சேர்க்கப்படாராய், அவர்தம் 'கவிதைகளும்' கவிதையென எண்ணப் படாதன

வாய்க் கழிந்தொழிந்திருப்பதைக் காலத்தேவன் நம் கண்முன் காட்டிக்கொண்டேயிருக்கிறான் என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. தனக்காகவும், மற்றவர்தம் கட்டாயத்துக்காகவும் கவிஞன் கவி பாடவில்லை என்றால், பின்பு கவிதைதான் எப்படி உருவாகிறது? ஏன் உருவாகிறது? இதை எண்ணிப் பார்க்கத் தான் வேண்டும்.

'காரிகை கற்றுக் கவி பாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே', என்றார் ஒரு பிற்காலப் புலவர். பாவம்! கவி இயற்றுவதில் அவர் பட்ட அல்லலும் அவதியும் ஒருவேளை இவ்வடிகளாக உருப்பெற்றிருக்கலாம். ஆம். கவி பாடுவது அவ்வளவு எளிதன்றுதான். கவி பாடுதலுக்கு வேண்டிய இலக் கணங்களை வகுத்துத்தரும் நூல் 'காரிகை' எனப்படுகிறது. 'யாப்பு' என்பது யாத்தல், கட்டுதல் என்ற பொருள்களில் வழங்குவது. சொற்களைக்கொண்டு ஒரு 'கட்டு' அல்லது பாடலை அமைப்பதையே 'யாப்பு' என்று குறித்துள்ளார்கள். அந்த யாத்தல் இலக்கணத்தை விளக்க வரும் நூலே 'யாப்பருங்கலக் காரிகை' என்று பெயர் பெற்றது. 'யாப்பருங் கல விருத்தி' என்னும் ஒரு நூலும் உண்டு. இவற்றுள் எழுத்துத் தொடங்கி உறுப்புக்களின் அமைப்பையும் பிறவற் றையும் கூறி, பின்னர்ப் பாடல் இயற்றுவதைப் பற்றிய விளக் கங்களும் கூறுவர். இந்தக் காரிகையைப் படித்தால்தான் பாடல் இயற்ற முடியும் என்று எண்ணுகின்றனர் சிலர். அந்த எண்ணத்தின் அடிப்படையில் எழுந்ததுதான் மேற்கண்ட அத் தொடர். காரிகையின் இலக்கணங்களைக் கற்று, அதன்படி ஒருவன் பாடல் எழுதத் தொடங்குவானாயின், அது மிக எளிய காரியமாகாது என்பது உண்மைதான். அப்படியாயின், ஏன் அதற்கென் இலக்கண வரம்பினை உண்டாக்கி வைத்தார்கள்? அதன்படி பாட முடியாதென்றால், அந்த நூல்தான் எதற்கு? இத்தகைய கேள்விகள் எழுதல் இயல்பு அன்றோ! எனினும், ஆய்ந்துணர்ந்து பார்த்தால் இக்கேள்விகளுக்குப் பொருள் இல்லை என்பது புலனாகும்.

தமிழ் நாட்டுப் பழைய இலக்கணம் தொல்காப்பியம் என்பது. அதில் கவிதை பற்றிய ஒரு பகுதி உண்டு. 'செய்யுள்

இயல்' என்று அப்பகுதி தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதில் இந்த 'யாப்பு'ப் பற்றிய இலக்கணமும் குறிக்கப் பெற்றுள்ளது. யாப்புக்கு அங்கமாக அமைய வேண்டிய எழுத்து, அசை, சீர் முதலியவற்றை அது விளக்குகின்றது. அந்த அங்கங்களால் ஆக்கப்படுவதற்கே யாப்பு என்பது பெயர் என அது முடிவு கட்டவில்லை. அதற்கு மேலும் ஒன்றிலே சென்றுதான் யாப்பு நிறைவுறுகின்றது. அது என்ன?

'பொன் மலர் நாற்றமுடைத்து' என்று உவமைக்காகப் புலவர்கள் பாடியிருப்பதை நாம் அறிவோம். இயற்கையில் அரும்பும் மணம் நிறைந்த மலரை நாம் காண்கின்றோம். கலைஞன் கைவண்ணத் திறனையெல்லாம் பெய்து கண்டோர் வியக்கும் வண்ணம் பொன்னால் அதேவகையான வண்ண மலரைச் செய்வதையும் காண்கின்றோம். என்னதான் பொன்னா லானதாயினும், இயற்கை மணம் நிறைந்த மலரிடம் மக்கள் கொண்டுள்ள ஈடுபாடு அப் பொன்மலரிடம் கொள்வதில்லை. ஏன்? பொன்மலர் எவ்வளவு அழகாக—கலைஞன் கற்பனைக்கு இருப்பிடமாக—இருப்பினும், அதற்கு இயல்பான மணம் இல்லாததே அது சிறப்படையாததற்குக் காரணம். அதே நிலையைத்தான் கவிக்கும் ஏற்றிக் காட்டுகின்றார் ஆசிரியர் தொல்காப்பியனார். 'வெறுஞ் சொல்லும், அசையும், சீரும், தொடையும், அடியும் கொண்டு ஆக்கும் அனைத்தும் ஆக்கப் படுவன ஆகா; யாத்தல் என்னும் பெயரைப் பெற்றனவாகா; சிறப்பாகக் கவிதை அல்லது பாட்டு என்னும் பயன் தருவன ஆகமுடியாது என்று திட்டமாகக் கூறுகின்றார் அவர். அவை யாவும் யாப்புக்கு இன்றியமையாத உறுப்புக்களே. எனினும், உயிரற்ற உடலில் எல்லா உறுப்புக்களும் அமைந்திருப்பினும் அவற்றால் பயனில்லையன்றோ! பொன் மலராயினும், நாற்ற மின்றேல் சிறப்பில்லையன்றோ! அதுபோன்றே அந்த யாப்பின் உயிராக அமையும் பொருள் அமையவேண்டிய வகையில் அமையாவிடின், அதற்குச் சிறப்பு இல்லை என்று திட்டமாகக் கூறுகின்றார். ஏதோ எழுத்தையும் சொல்லையும் அடுக்கிப் பாடுபவன் கவிஞனாக முடியாது. அவற்றுடன் தான் கூற

நினைத்த பொருளை நன்கு அதில் விளங்கவைத்து, முடிய நாட்டலே யாப்பின் முற்றிய விளைவாகும் என்பது அவர் கருத்து. ஆகவே, யாப்பு என்பது பொருளை உயிர் நாடியாகக் கொண்டு இயங்கும் ஒன்று என்பது நன்கு புலப்படும். இதை நன்கு பயில்வோர் உளங் கொள்ளுமாறு ஆசிரியர் தொல் காப்பியனார்,

> 'எழுத்து முதலா ஈண்டிய அடியில்
> குறித்த பொருளை முடிய நாட்டல்
> யாப்பென மொழிப யாப்பறி புலவர். —பொருள் 384

என்கிறார். அவ்வாறு சொல்லும்போது மிக எச்சரிக்கையாய் இருக்கின்றார். இவ்வாறு வரையறுத்துச் சொல்லுவதும் யாவருக்கும் எளியதன்று. தாமே அவ்வாறு சொன்னதாகச் கூறிக்கொள்ளவும் அஞ்சுகின்றார் அவர். நிரம்பக் கற்றார் இயல்பு அதுதானே? தெரியாதனவற்றையெல்லாம் தெரிந்தனவாகக் காட்டிப் பறையறையும் குறைகுடங்கள் போலன்றி, கற்றுத் துறைபோய வல்லவராகிய தொல்காப்பியர், 'இவ்வாறு யாப்பறி புலவர் சொல்லுகின்றனர்' என்று குறிக்கும்போது யாப்பின் ஏற்றம், இன்னும் சிறந்து விளங்குகின்ற தன்றோ! ஆகவே, யாப்பு ஒன்றப் 'பாட்டிசைத்தல்' எளிதன்று. இதை எண்ணித்தான் 'காரிகை கற்றுக் கவி பாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே,' என்று பிற்காலத்தவர் பாடினர் போலும்! பாவம்! அவர் அடிப்படையை அறியாது அலமந்தவர் என்றுதான் கூறவேண்டும்.

தமிழ்நாட்டுப் பழைய பேரிலக்கணம் தொல்காப்பியந் தான். எனினும், அத்தொல்காப்பியத்துக்கு முன் அகத்தியம் என்ற ஓர் இலக்கண நூல் இருந்ததென்பதையும் அனைவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆசிரியர் தொல்காப்பியரும் அகத்தியர் மாணவர் பன்னிருவருள் சிறந்தவர் என்பதும் ஏற்றுக்கொண்ட வரலாறே. எனினும், தொல்காப்பியத்துக்கு முதனூலாகிய அகத்தியத்தின் முழுப்பகுதியும் கிடைக்கவில்லை;

சிதைந்த சில சூத்திரங்களே நமக்குக் கிடைக்கின்றன. அவற்றுள் ஒன்று,

'இலக்கிய மின்றேல் இலக்கண மின்றே;
எள்ளின் றாகில் எண்ணெயு மின்றே
எள்ளினின்று எண்ணெய் எடுப்பது போல
இலக்கி யத்தினின்று எடுபடும் இலக்கணம்.'

என்பதாகும். இதில் ஆசிரியர் அகத்தியனார் இலக்கியத்திற்கும் இலக்கணத்திற்கும் உள்ள தொடர்பினை விளக்குகின்றார். 'இலக்கணம் முன்னா இலக்கியம் முன்னா?' என்றால், இலக்கியந்தான் முன்னது என்பது தெளிவு என்பதைக் காட்டுகின்றார். உண்மைதானே! ஒரு சித்திரம் முன் இருந்தால்தானே, அதைப் பார்த்த ஒருவன் சித்திரம் இப்படி இப்படி இருந்தது என்று எடுத்துக்காட்ட முடியும்! சித்திரமே இல்லையானால், எப்படி அதுபற்றி விளக்கமுடியும்? அப்படி ஒன்றைப்பற்றி விளக்க முற்படின், அது காணாத ஒன்றைப்பற்றிய கற்பனையாகுமே ஒழிய, எப்படி ஒன்றன் இலக்கணமாக அமைய முடியும்? கவிதைக்கும் அது பொருந்துவ தன்றோ! கவிதை ஒன்று இருந்தால்தானே அது இன்னின்ன வகையில் அமைந்திருந்தது என்று எடுத்துக் கூறமுடியும்? இலக்கியம் ஒன்று இருந்தால் தானே அந்த இலக்கியத்தின் இலக்கணம் இத்தன்மைத்து என்று வரையறுக்க முடியும்? இதை விளக்க அகத்தியம் கையாண்ட உவமை சிறந்த ஒன்று. முதற்பொருளாகிய எள் இருந்தாலன்றோ அதன்வழிப் பிழிந்தெடுக்கும் எண்ணெயைப் பெறமுடியும்? எள் இன்றேல், எண்ணெய் ஏது? அதுவே போன்று, இலக்கியம் இருந்தால்தானே அதன் வடிவையும் அமைப்பையும் கண்டு பிழிந்து, அதன் சாறாக இலக்கணத்தை வடிக்க முடியும். இலக்கியமில்லையானால், பின் இலக்கணம் எப்படி உண்டாகும்? ஆம் இந்த உண்மையின் அடிப்படையை மறந்தவர்தாம் காரிகையை விட்டுப் பேரிகையை யடிக்க நினைப்பவர் என்பதில் ஐயமில்லை.

யாப்பிலக்கணத்தில் சொல்லியபடியே எழுத்தெண்ணிப் பாட முடியாதென்றால், பின் கவிதை உண்டாவதுதான்

எவ்வாறு? கவிதை கட்டுப்பாட்டுக்கு அடங்காத ஒன்று? அடங்காத ஒன்றாயின், அதற்கு இலக்கணமெல்லாம் எதற்கு? இவைபோன்ற கேள்விகள் எழுதல் இயல்புதானே? கவிதை ஊற்றுப் பிறக்குமிடத்தை ஒருவாறு வரையறை செய்யின் இக் கேள்விகளுக்கெல்லாம் விடைகாண முடியும். இன்று நாட்டிலும் உலகிலும் எத்தனையோ மொழிகளில், எத்தனையோ வகையான பாடல்களைப் பாடுகின்றனர். அத்தனையும் மக்களால் போற்றப்படுவதில்லையே! காரணம் என்ன? கவிதை நாம் முன் கூறியபடி வெற்று எழுத்தாலும் சொல்லாலும் ஆக்கப்படுவதாயின், எப்படிப் போற்றப்பட்டிருக்கும்? ஆனால், கவிதை அவற்றின் உச்சியில் தன் இயல்பான உயிர் நலம் கொண்டு ஒளிர்வதாகு மல்லவா! ஆகவே, உயிர் நலமுடைய கவிதைகளே எம்மொழியிலும் மக்களால் போற்றப்படுகின்றன. அல்லாதன...நாம் சொல்ல வேண்டா.

கவிகள் நிலைபெற்று வாழ்வதற்கு அவற்றின் உள்ளீடாகிய உயிர்ப்பொருள்களே காரணம் என்பது கண்டோம். கவிதையைக் கலைகளுள் ஒன்றாக—ஏன் கலைகளுக்கெல்லாம் மேலாய கலையாகக் காணல் வேண்டும். கலை என்பன ஓவியமும், சிற்பமும், நடனமும் கற்பனையுந்தான் என்றால், அக்கலைகள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்துக் கணக்கிடின், அவற்றின் உச்சியில் ஓங்கும் கலையே கவிதைக் கலையாகும். இக்கவிதைக் கலையின் உடல் உறுப்புக்களே யாப்பிலக்கணத்தில் காணப்படும் எழுத்தும் அசையும், சீரும், தளையும், அடியும், தொடையும், பிறவும், இதன் உயிர்நாடிதான் பொருள்.

'ஆமாம்; பாடுகின்ற கவிஞன் பொருள் இன்றிக்கூடப் பாடுவனா?' என்று கேட்கத் தோன்றும். அதற்கு இற்றை நாளில் மட்டுமின்றி இடைக்காலத்திலும் உண்டாகி மறைந்து போன எத்தனையோ பாடல்கள் சான்று தருகின்றன. தொல்காப்பியர் காட்டியபடி, 'குறித்த பொருளை முடிய நாட்டாது,' குன்று முட்டிய குருவிபோன்று இடர்ப்பட்டு மாய்கின்ற புலவரே, நாட்டில் பலராவர். அப்படியாயின், பின்பு

யார்தான் கவிதையை வாழவைக்க முடியும்? கவிதைக்குப் பிறப்பிடந்தான் எது?

வெறும் புறத்தோற்றத்தால் மட்டும் கவிதை அமைந்து விடாது. அவ்வாறு புறத்தோற்றத்தோடு—பட்டாலும், பீதாம்பரத்தாலும், பதக்கங்களாலும் தம்மை அலங்கரித்துக் கொள்வதோடு—நின்றுவிட்ட பிற்காலப் புலவர்தம் பாட்டுகளும் அவர்தம் வாழ்வோடு நின்றுவிட்டனவே! கவிதைதான் உள்ளத்தின் ஊற்றுப்பெருக்கு. உள்ளம் செம்மைப்பட்டவரே உயரிய கவிதைகள் இயற்றி மங்காப் புகழ்பெற்றுள்ளனர். நம் நாட்டில்—தமிழ்நாட்டில்—மிகு பழங்காலம் தொட்டு, வரலாற்றிலே இவ்வுண்மை விளங்குகின்றது. கவிதையை ஒரு கலையாக—உயிருள்ள மெய்க்கலையாக—வாழவைத்த—உளத்தால் நலம் பரப்பிய புலவர் பலர், வாழ்ந்து சென்றிருக்கின்றனர். முரஞ்சியூர் முடிநாகராயர் முதல் பாரதியார் வரையில், தமிழ் நாட்டில் வாழ்ந்து கவிபாடிய புலவர்களை வரிசையாக வைத்துப் பார்ப்பின், இவ்வுண்மை நன்கு விளங்கும். ஆங்கில நாட்டுப் புலவர்களையும் பிற நாட்டுப் புலவர்களையுங்கூட, இவ்வாறு ஆராய்ந்து காணின், உண்மை தோன்றும். கவிதை தோன்றும் இடமாகிய உள்ளம் சிறந்ததாக அமையவேண்டும். தூய உள்ளத்தே பெருகும் கவிதை உருப்பெற்று உருண்டு ஓடிவரும். அவ்வாறு வரும் கவிதைகள் வையகத்தை வாழ வைக்கும் கவிதைகளாய் விளங்கும். இவற்றையெல்லாம் எண்ணித்தான் போலும் பாரதியார்,

> 'உள்ளத்தில் உண்மைஒளி உண்டாயின்
> வாக்கினிலே ஒளிஉண் டாகும்;
> வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
> கவிப்பெருக்கும் மேவு மாயின்,
> பள்ளத்தில் வீழ்ந்திருந்த குருடரெல்லாம்
> விழிபெற்றுப் பதவி கொள்வார்;
> தெள்ளுற்ற தமிழ்அமுதின் சுவைகண்டார்
> இங்குஅமரர் சிறப்புக் கண்டார்.'

என்று பாடினார். உண்மை இதுதான். எங்கே தூய உள்ளம் உண்டோ, அந்த இடத்திலிருந்து கவிதை வெள்ளம் புறப்பட்டு வர, அது வையத்தை வாழவைக்கும் தெள்ளிய நீரோடையாய்ச் சிறக்கின்றமையை உலகம் அறிந்துள்ளதே. மற்றோர் அடியவர்—ஆண்டவனைப் பாட வந்தவர்—இதே கருத்தை 'உளங் குளிர்ந்த போதெலாம் உவந்துவந்து பாடுவன்,' என்று கூறியிருக்கின்றாரே! இவற்றையெல்லாம் ஒத்து நோக்கின், கவிதை நல்ல உள்ளத்தில் தோன்றும் ஒன்று என்பதும், அக்கவிதையை அந்த நல்லவர்கள் தங்கள் உள்ளத்திலிருந்து உதடு வழியாக உலகுக்கு உதவி, தாம் இன்புறுவது உலகு இன்புறக் காணும் வகையில் பாடுவார்கள் என்பதும், அந்த வெள்ளப்பெருக்கு வையகத்தை வாழவைக்கும் என்பதும் உறுதி.

இவ்வாறு உள்ளம் தூயராய்க் கவிதைக் கலைஞராய் ஒரு சிலர் மட்டும் சிறந்து நிற்பதற்குக் காரணம் என்ன? உள்ளம் நல்ல கவிதைக்குப் பிறப்பிடம் என்று கண்ட காரணத்தினாலே, அவ்வுள்ளத்தைப் பற்றி ஒரு சிறிது ஆராயின், கவிதையின் தோற்றத்தைப் பற்றியும் ஒருவாறு அறிந்துகொள்ள இயலும். உள்ளம் நல்லதா அன்றிக் கெட்டதா என்பதை அறிவது எப்படி? ஒருமை உணர்வே அதற்கு வழிகாட்டியாய் அமைவது. கவிஞன் தான் எடுத்துக்காட்ட விரும்பிய பொருளைப்பற்றி ஆழ்ந்து நினையாது, பல பொருள்களைப்பற்றி ஓடவிட்ட உணர்வுடையவனாய்ப் பாடத் தொடங்குவனாயின், அவன் கவிதை, கலை நிரம்பிய கவிதையாக முடியாது. எடுத்த ஒரு பொருள் பற்றி நன்கு விளக்க வேண்டுமாயின், தானே அப்பொருளானாலன்றி—அல்லது தான் வேறு அப்பொருள் வேறு என்ற நினைவு நீங்கினாலன்றி—அல்லது அப்பொருள் பற்றிய ஒரு நினைவைத்தவிரப் பிற பொருள்களின் நினைவை உள்ளத்திலிருந்து நீக்கினாலன்றி, அப்பொருள் பற்றிய கவிதை பிறக்க வழியில்லை. ஒன்றிய நல்ல உள்ளந்தான் கவிதைக் கலையை உருவாக்கும். ஒன்றிய உள்ளமே கலைநலம் காணும் உள்ளம் என்பது துணிபு. அந்த ஒன்றும் உள்ளத்து ஊற்றுப்

பெருக்கெடுக்கும் கவிதையே கலையாகச் 'சிரஞ்சீவித்துவம்' பெற்று வாழ்வது.

அவ்வொன்றிய உள்ளம் பெறுவது எளிதன்றுதான். 'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது!' என்று தாயுமானவர் பாடியதன் கருத்து அதுதான். அவ்வாறு பல விடங்களில் பறந்து செல்லும் சிந்தையை அடக்குவது எளிதன்று. ஆனால், அடக்கி ஒரு வழிச் செலுத்தாவழிக் கவிஞன் தன் கலையை வாழ வைக்க முடியாது. இந்த மன அடக்கத்துக்கும் ஒருமை உணர்வுக்கும் வெற்று ஏட்டுப்படிப்பு மட்டும் பயன் தாராது. உணர்வு அடக்கும் நல்ல உள உரம் தேவை. கல்லாதவனும் கலைஞனாக முடியும். ஆம்; அவன் உணர்வு ஒருமைப்பாடுமானால், அவன் கலைஞனே யாவன்.

காட்டில் வாழும் ஒரு வேட்டுவனைக் கலைஞனாகக் காண்கின்றார் சுந்தரர். அவன் கலைகளை யாரிடமும் எழுத்தறக் கற்க வில்லை. கலை என்பது என்ன என்பதுகூட அவனுக்குத் தெரியாதிருந்திருக்கலாம். அவன் காட்டில் வேட்டையாடச் சென்ற பொழுது காணாத ஒரு பொருளைக் கண்டான்; கண்ட உடனே கருத்தழிந்தான்; தன்னை மறந்தான்; உடன் வந்தவரை மறந்தான்; ஊரையும் மற்றவரையும் மறந்தான். அங்கே மலை மேற்கண்ட இலிங்கத்தை அன்றி மற்றையது ஒன்றும் அவனுக்குப் பொருளாகப் படவில்லை. பலர் சென்று அழைத்தும் மனம் திரும்பவில்லை. அந்த இலிங்கமே அவன் வாழ்வாய் முடிந்தது. இலிங்கத்துக்கு ஊறு உண்டானால், அதைத் தனக்கு உண்டானதாக நினைத்தான். அதன் கண்ணில் இரத்தம் வடியத் தன் கண்ணை இடந்து அப்பினான். ஆம்; அத்தகைய ஒன்றிய உணர்வோடு கடவுளைக் கண்டார் கண்ணப்பர் என்று பெரிய புராணம், அவர் வரலாற்றை எடுத்துரைக்கின்றது. கல்வி நலமே காணாத அந்தக் கண்ணப்பருக்கு ஒருமை உணர்வு உண்டாயிற்று என்றால், அது கலை நலத்தின் பாற்பட்டதே. எத்தனையோ கற்றவர்களைப் பாராட்டுகின்றார் சுந்தரர். வேத மொழியில் விற்பனர் பலர் போற்றப்படுகின்றனர். கலை வளர்ப்பதாகக் கூறிக்கொள்ளும்

அரசரும் பிறருங்கூட அவர்தம் பாட்டில் இடம் பெறுகின்றனர். எனினும், சுந்தரர் அவர்களையெல்லாம் கலை நலம் பெற்ற வராகக் காணவில்லை; கலை மலிந்தவராகப் பாராட்டவில்லை. ஆனால், வேடராகிய கண்ணப்பரை, 'கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்,' என்று பாடுகின்றார். அதன் கருத்து என்ன? ஒருமை உணர்வைத் தூண்டி, அவ்வுணர்வின் வழியிலே ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடி வருவதுதான் கலை என்பது தெளிவாகின்றது. இவ்வாறு ஒருமை வாழ்வில் ஒன்றிய உணர்வினராய், கொண்ட கருத்தை நாட்டுக்கு நன்கு விளங்குமாறு பாட்டிசைக்கும் வல்லவரே கவிஞராவர். அவர்தம் பாடல்களே கவிதை எனப்படும் கலை நிறைந்த பெட்டகங்கள் ஆகும்.

எனவே, உலகில் பல கலைகள் வாழ்ந்தாலும் கலைஞனை யும், கற்பாரையும், கேட்பாரையும் ஒருசேர மகிழ்விக்கும் கலை, கவிதை ஒன்றே என்பதும், அக் கவிதை வெற்று எழுத்தாலும் சொல்லாலுமட்டும் ஆக்கப்படுவதன்று என்பதும், பொருள் நலமே அதன் உயிர்நாடி என்பதும், அக்கவிதைக் கலையில் அனைவருமே வல்லவராக முடியாது என்பதும், எங்கோ ஒரு சிலர்தான் அக்கலையில் சிறந்தவராக முடியும் என்பதும், அதற்கு அவர்தம் உள்ளத்தூய்மையும் ஒருமை உணர்வுமே இன்றியமையாதனவாய் அமைகின்றன என்பதும், அந்த நல்லுள்ளத்து ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடிவரும் கவிதையே கலையாய் உலகை வாழவைக்கும் என்பது அறிந்தோம்.

2. கவிதையும் கவிஞனும்

கவிதை என்பதற்குப் பொருள் என்ன? அது பாட்டா, உரைநடையா, இரண்டும் கலந்ததா? அது நீண்ட அளவினதா, சில அடிகளால் ஆகியதா? யாப்பிலக்கணத்துக்குக் கட்டுப் பட்டதா, அன்றிக் கங்குகரையற்ற வெள்ளப் பெருக்கா? கவிதை எதைப் பற்றிப் பாடுவது? மனிதனையா? மற்றவைகளையா? விண்ணையா? மண்ணையா? கவிதைக்கு எல்லைகள் எவை? இவ்வாறு பல்வேறுவகை வினாக்கள் உள்ளவாறு கவிதையைப்பற்றி அறிய நினைப்பவர்தம் உள்ளத்து எழுதல் இயல்பு. சாதாரணமாகக் கவிதை என்றால், ஏதோ பாட்டு என்ற அளவிலேதான் பலரும் பொருள் கொண்டிருப்பர். ஆனால், பாட்டு மட்டும் கவிதையாய்விடாது என்பதை முன்னமே கண்டோம். பொருள் நலம் சார்ந்தது கவிதை என்றோம். 'அப்படியானால், பொருள்நலப் பண்புகளும், பிற இயல்புகள் அனைத்தும் கலந்த உரைநடையுங்கூடக் கவிதையாகிவிட முடியுமா?' என்ற வினா உடனே எழுதல் இயல்பு. 'ஆம்' என்று அதற்குத் தட்டாமல் விடையிறுக்கலாம். சிலப்பதிகாரத்தில் வரும் உரைநடைக் கோவைகளும், இறையனார் அகப்பொருளுக்கு வரைந்த உரையும் பாட்டுக்கள் அல்லவாயினும், அவற்றைக் கவியென்றே கொள்ளல் வேண்டும். கவி என்பது, ஆசிரியனது ஆழ்ந்த உள்ளத்து உயர்ந்துள்ள எண்ணங்களின் வெளிப்படையான உருவமே யாகும். அவ்வுள்ளம், 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்க' என்ற வள்ளுவர் வாக்குப்படி, உயர்ந்தவற்றையே உள்ளின், அவ்வுள்ளம் பெற்றெடுக்கும் ஒவ்வொரு சொல்லும் கவிதான். சொல்லும், அடியும், பாட்டும், உரைநடையும் கவிதைகளாக

முடியும்; அவை கவிஞன் உயர்ந்த உள்ளத்தைப் பிரதிபலிக்கும் உணர்வுடையவையாயின். தமிழ் நாட்டில் மட்டுமின்றி ஆங்கில நாட்டிலும் கவிதைக்கு இத்தகைய மதிப்பினைக் கொடுத்துள்ளார்கள். ஆங்கில அகராதி ஒன்று 'கவிதை' என்பதற்குப் பொருள் கூறுங்கால், 'கவிஞனுடைய உயர்ந்த எண்ணத்தை வெளியிடும் கலைநலம் வாய்ந்த பாடலே கவிதை,[1] என்று கூறுகிறது. அது எல்லாக் கலைநலமும் பொருந்திய உரைநடையும் கவிதையாகும் என்பதையும் விளக்குகின்றது. எனவே, கவிதை என்பது பொருளாற் சிறப்படையும் ஒன்றே என்பது தேற்றம். அதே அகராதி, கவிஞனுக்கு இலக்கணம் கூறுகையில், 'கவிஞனவான் உயர்ந்த கற்பனைத்திறனும் விரிந்த நல்ல நோக்கும் உடையவனாகி, அவற்றை உலகுக்குத் தெள்ளத் தெளிய எடுத்து விளக்குபவனாயும் இருக்க வேண்டும்,' என்று கூறுகின்றது. இதிலேதான் எவ்வளவு உண்மை அடங்கியிருக்கின்றது! உலகில் வாழ்கின்ற மாந்தர் அனைவரும் தம் கண்முன் எத்தனையோ பொருள்களைக் காண்கின்றனர். அறிவற்ற விலங்குகளும் பிறவும் போக, ஆறறிவு பெற்ற மனிதன் காணும் பொருள்கள் பல. ஆனால் எல்லாப் பொருளும் மனிதனுக்கு உணர்வூட்டுவனவாக அமைகின்றனவா? பெரும்பாலும் இல்லையென்று சொல்லி விடுவர். ஆனால், ஒரு சிலர் எல்லாப் பொருள்களிலும் இனிய நலம் பலவும் காண்கின்றனர். ஓடுகின்ற ஓடையின் கீத ஒலியும், அசையும் மரங்களின் பாட்டொலியும், வானோங்கிய மலைகளின் மாண்பும் ஒரு சிலரையே மகிழ்விக்கின்றன. அந்த மகிழ்ச்சியில் திளைக்கின்றவர் யாரோ அவரே கலைஞராவார். அவ்வாறு இன்பத்தில் ஆழ்தல் மட்டும் கவித்தன்மையின் நிறைவைப் பெற்றுவிட முடியாது. தான் மட்டும்

1. The Concise Oxford Dictionary of current English, p. 882. Poetry—Art or work of the poet, elevated expression or elevated thought or feeling in metrical form, prose having all the qualities of poetry except metre.

அனுபவிப்பவன் முற்றிய கவிஞனாக முடியாது. 'தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்,' என்ற வள்ளுவர் வாய்மொழிப்படி, 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று வாரி வழங்குபவனே இறைநலம் பெற்ற கவிஞனாவன். கண்ட கவின் சிறப்பைத் தாம் மட்டும் அனுபவிப்பவரும் சிலர் உள்ளனர். அவர்கள் 'பருத்திக் குண்டிகை' என்று பவணந்தியார் கூறும் வகையில் பயனற்று ஒழிவார்கள். எனவேதான் தன் உயரிய உணர்வுகளை உலகுக்கு உணர்த்தும் நல்லாசிரியனே கவிஞனாகின்றான். அவன் கவியே கவிதை என்னும் சிறப்பையும் பெறுகின்றது.

நாள்தோறும் சூரியன் கீழ்த்திசையில் தோன்றுவதை நாம் காணுகின்றோம்; அதே சூரியன் மாலையில் மறைவதையும் காண்கின்றோம். ஆனால், அவற்றைப்பற்றிச் சிந்திப்பார் எத்தனை பேர்? ஏதோ பொழுது விடிந்தால் வேலைக்குப் போக வேண்டும் என்று எண்ணிப் புறப்படுபவரே பெரும்பாலோர். அதேபோன்று, மாலையில் வீட்டுக்கு வருபவர் பலர். விடிந்தால் வயல்வெளிக்குச் சென்று மேய்ந்து மாலையில் கொட்டிலை நோக்கித் திரும்பும் மாடுகள் போன்று உழைப்பவரே, இன்று மட்டுமன்றி என்றுமே உலகில் பலராய் வாழ்கின்றனர். ஆனால், அந்த உதயசூரியனின் தோற்றத்திலும் மாலைக்கதிரவனின் கிரணங்களிலும் எத்தனை எத்தனை வகையான இன்ப உரைகளைக் காண்கின்றார்கள், தம்மை மறந்து இன்பக்கவி பாடும் மெய்க் கவிஞர்கள்! அன்றாட நிகழ்ச்சியாய் அனைவருக்கும் காட்சிப் பொருளாய்க் கழியும் அதே சூரியன், கவிஞர்களுக்கு எத்தனை உண்மைகளை எடுத்துக் காட்டுகிறான்! வடமொழிக் காவியத்தைத் தமிழில் பாடவந்த கம்பர், வெறுங் கதையை மட்டும் பாடிச் செல்லவில்லை. அவரது கவியுள்ளம் கண்டகண்ட விடந்தோறும் கற்பனையில் திளைப்பது. எளிய பொருள்கள் அவருக்குப் பல உண்மைகளை உணர்த்தின. புரண்டோடும் கோதாவிரி யாற்று வெள்ளம், உண்மையில் கவி எப்படிப்பட்டது என்பதை அவர் உள்ளத்துக்கு உணர்த்திற்று. அவ்வுண்மையைக் கண்டு, அவர் காணும் கதிரவனது அறவுரையையும் பின்பு காணலாம்.

கவிஞர் நாட்டுக்கு அணியானவர். எந்த நாட்டிலும் கவிஞர் போற்றப்படுகின்றனர். நாடு புரக்கும் நல்ல அமைச்சரினும், அரசரினும், கவிஞர் சிறந்தவர் என்பது எந்நாட்டவரும் கொண்ட முடிவுதானே! எனவே, கவிஞர் புவிக்கு அணியாகின்றனர். அவர்தம் பாடல்கள் நாட்டை என்றென்றும் வாழவைக்கின்றன. அப்பாடல்களில் முன் கூறியபடி சிறந்த பொருள்கள் விளங்குகின்றன. கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலன்களின் நுகர்வும் நல்ல கவிதையிலே இடம்பெறல் வேண்டும். சிலர் சில பாடல்களை எண்ணியெண்ணிச் சுவைப்பதைக் கண்டிருக்கிறோமன்றோ! தன்னை மறந்த நிலையிலே வண்டியோட்டியின் வாய் முணுமுணுத்துப் பாடுவதைக் கண்டுள்ளோமே! அவ்வாறு மறந்த நிலையில், ஒன்றிய உணர்வில், மனிதனை ஆழ்த்துவதே கவிதை. ஆம்; அக் கவிதை, பயில்வார் ஐம்புலன்களையும் ஒருவழிப்படுத்துவதாக இருக்கவேண்டும். அப்பாடல்கள் தமிழ்நாட்டு அகமும் புறமும் தழுவியனவாக அமையவேண்டும்; தமிழ் நாட்டுப் பண்புக்கு ஏற்றபடி ஐந்திணையின் நெறிகளை யெல்லாம் விளக்கவேண்டும்; அழகு நிறைந்திருக்க வேண்டும்; அனைத்தினுக்கும் மேலாக, அமைதியும் ஒழுக்கமும் பெற்றுத் திகழவேண்டும்; இவை யெல்லாம் கவியின் இயல்புகள் தாமே! இவற்றைக் கோதாவிரியின் வெள்ளப் பெருக்கிலே கண்டு கண்டு மகிழ்கின்றார் கம்பர். கவிதையையும் கோதாவிரியையும் ஒருமைப்படுத்திச் சிலேடையாகப் பாட்டிசைக்கின்றார் கம்பர். அந்தப் பாடலையும் கவிதை என்னாது வேறு என்ன என்பது?

> 'புவியினுக்கு அணியாய் ஆன்ற
> பொருள்தந்து புலத்திற் றாகி
> அவிஅகத் துறைகள் தாங்கி
> ஐந்திணை நெறிஅ ளாவிச்
> சவியுறத் தெளிந்து தண்ணென்
> றொழுக்கமும் தழுவிச் சான்றோர்
> கவிஎனக் கிடந்த கோதா
> விரியினை வீரர் கண்டார்.'

என்பது கம்பர் பாட்டு. கோதாவிரியினை வீரராகிய இராமனும் இலக்குவனும் கண்டார்கள் என்பது அவர் கூற விரும்புவது. அந்த வீரராகிய இராமனும் இலக்குவனும் அந்த ஆற்று வெள்ளத்தை எப்படிக் கண்டார்களோ நாமறியோம். ஆனால், கவிஞர் அதைக் கவிதையாகக் காண்கின்றார். கோதாவிரி, புவிக்கு அழகாகப் பல பொருள்களை ஈர்த்துக் கொண்டு, சூழ்ந்துள்ள நிலங்களில் தாவிப் பாய்ந்து, உள்ளிடங் களுக்கும் சென்று, முல்லை முதலிய ஐந்திணை நிலங்களில் உருண்டோடி, அழகாக ஓடிச் செல்லும் வெள்ளத்தையுடையது என்பது ஆற்றுக்குப் பொருந்துவதாகும். ஆனால், அதுவே கவியாகும்போது எவ்வளவு சிறக்கின்றது! ஆறு உண்டான அந்த நாள் முதல் அதைக் கோடிக்கணக்கான கண்கள் காண்கின்றன; அவைகளெல்லாம் அவ்வெள்ளத்தில் நிறைவையும் நுரையையும் கண்டன. ஆனால், கவிஞரின் கண்களோ வெள்ளத்தில் கவியையே கண்டன. அதன்மூலம் உண்மைக்கவி எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை எவ்வளவு தெள்ளத்தெளியக் கவிஞர் கம்பர் உணர்த்திவிட்டார்!

ஆம். கவிஞர்கள் இப்படிப்பட்டவர்களே; சாதாரண மனிதர்கள் காணமுடியாத பல உண்மைகளை உலகுக்கு உணர்த்துபவர்களே. இவ்வுண்மை தமிழ்க் கவிஞர்களுக்கு மட்டுமின்றி, உலகக் கவிஞர் அனைவருக்குமே பொருந்துவ தாகும். இந்த அடிப்படையிலே கவிஞர், உலகை ஒன்றிய உணர்வில் காண்கின்றனர். கவிஞர்களுக்கு நாடும் ஊரும் வேற்றுமை உணர்ச்சியை வளர்க்கமாட்டா! 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்,' என்று பாடியவன் ஒரு தமிழ்க்கவிஞன் தானே! அவன் உலகுக்கு ஒருமையைத்தானே உணர்த்து கின்றான்! அன்று மட்டுமன்றி இன்றும் கவிஞன் உலக ஒருமையையே தன் வாழ்வாகக் கொண்டு வாழ்கின்றான். உலகில் வாழும் மனிதனை மட்டுமன்றி, விலங்கையும் பிற உயிர்களையும் ஒத்து நோக்கும் பண்பாடு கவிஞன் உள்ளத்தே முகிழ்க்கும் ஒரு பண்பாடுதானே? அறம் உரைத்த வள்ளுவே, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்,' என்று உயிரினத்திலர்

வேறுபாடற்ற ஓர் உலகைக் காண்கின்றார். அதை இன்று வாழ்ந்த பாரதியார், 'காக்கைக் குருவி எங்கள் சாதி; நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்,' என்று எல்லாருக்கும் எளிமையில் புரியும் வகையில் கூறிவிட்டார். கவிஞன் வாழ்க்கையே அதுதான்.

நம்மை ஆண்ட ஆங்கிலேயர்கள் நம்மைவிட்டு நீங்க வேண்டும் என நாம் நினைத்தோம்; அமைதிப் போரிட்டோம்; வெற்றி கொண்டோம். அவர்களும் நீங்கி விட்டார்கள். ஆனால், அவர்கள் நாட்டுக் கவிஞர்களாகிய ஜெகப்பிரியரும், மில்டனும், கீட்ஸும், ஓர்ட்ஸ்வொர்த்தும் இந்திய மண்ணில் நிலைபெற்று விட்டார்கள்! அவர்களையும் வேண்டாவென்று எந்த இந்தியனாவது கூறுவானா? மொழிவெறி காரணமாக ஆங்கிலம் வேண்டாவென்று பேசப்படினும், அந்த எண்ணத்தின் ஆழ்ந்த உள்ளத்தடத்தில் தங்கிய இப்புலவர்களை— கவிஞர்களை—நாட்டை விட்டு ஓட்ட முடியுமா? வடக்கும் தெற்கும் வாதாடி வழக்காடும் இன்றைய நிலையிலேயும் கவிஞர் தாகூர் பொன்மொழிகளைப் போற்றாத் தமிழன் இருக்க முடியுமா? அதைப்போன்றே, வள்ளுவர் பெருமையை வெளிப்படையாகப் புகழாவிடினும் உள்ளத்தில் எண்ணிப் பார்க்காத வடநாட்டு நற்புலவன் ஒருவனும் இருக்க மாட்டானே! எண்ணிப் பார்ப்பின், கவிஞன் எப்படி உலகை ஒன்றுபடுத்துகிறான் என்பது புலனாகும்!

மேலை நாட்டிலே நடந்த முதற்பெரும் போரிலே ஜெர்மனியும் இங்கிலாந்தும் எதிரிகளாய் நின்றன. இங்கிலாந்திலிருந்த ஜெர்மனியரும், ஜெர்மனியிலிருந்த ஆங்கிலேயரும் சிறைப்பட்டனர். ஆனால், ஜெர்மனி நாட்டுக் கலைப் பொக்கிஷமாகிய 'கதே'யின் கவிதைகளை ஆங்கில நாட்டில் யாராவது சிறையிட்டனரா? அதைப்போன்றே ஆங்கிலக் கவிஞர் தம் கற்பனை ஓவியங்களை மாற்றார் நாட்டில் சிறை வைத்தனரா? இல்லையே! எனவே, போரும் பொறாமையும் கொந்தளிக்கும் நாடுகளிலுங்கூட, அமைதியையும் ஒற்றுமையையும் நிலைநாட்ட முயல்பவராகிய

கவிஞர்தம் கவிதைகள் நிலைபெற்று வாழ்தல் ஒருதலையன்றோ? ஆம்! அக்கவிதைகள் நல்ல உள்ளத்தில் உருவான உயர்ந்த கவிதைகளாய் இருந்தால்தான் இந்தநிலையில் 'வாழும்' என்பதை மறந்துவிடக் கூடாது.

இவ்வாறு அனைவர் உள்ளத்தையும் கட்டிப் பிணிக்கும் ஆற்றலைக் கவிஞன் எங்குப் பெற்றான்? எவ்வாறு பெற்றான்? அதற்காக அவன் எங்கும் ஓடியாடவில்லை. அவன் உள்ளமே அவனுக்கு அதைத் தந்தது. உலகை அவனுக்கு உணர்த்தும் வகையில் உணர்த்திற்று. அவ்வுணர்ச்சி பாட்டாக ஊற்றுப் பெருக்கெடுத்தது. அதுவே யாதொரு வேறுபாடுமற்ற வகையில் அனைவர் உள்ளத்தையும் மகிழ்வித்தது. இந்த உலகில் வாழும் மக்களுக்குத் தேவையெல்லாம் ஒரு வேளை கிடைக்காமல் இருக்கலாம். ஆனால், கவிஞன் காட்டும் உலகத்தில் மனிதன் தன் தேவைகளைக் கட்டாயம் பெற்றே தீருவான். கவிஞன் காட்டும் கவிதைக் கண்ணாடி இயற்கையின் தோற்றத்தை எழிலுற மக்களுக்குக் காட்டுகின்றது. அக்காட்சி எல்லா மக்களின் மனத்துக்கும் மகிழ்ச்சியை அளிக்கின்றது. அதனாலேயே உலகம் அத்தகைய நல்ல கவிஞர்களை நாடிடை யிட்டும், தேயமிடையிட்டும், காலமிடையிட்டும் ஓடிச் சென்று பற்றிக்கொள்ளுகின்றது.

வெள்ளத்தைக் கவியாகக் கண்ட கம்பரை விட்டுச் சற்று விலகிச் சென்றுவிட்டோம். மறுபடியும் அவரைக் காண்போம். அவர் காட்டும் சூரியனை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். நாள்தோறும் நம் கண்முன் தோன்றி மறையும் சூரியன், அவரது கவிதைக் கண்களுக்கு ஓர் உயரிய உண்மையை உணர்த்துகின்றான். அவ்வுணர்ச்சி பாட்டாக உருப்பெற்று வருகின்றது. அப்பாட்டு இதுதான்:

"துறக்கமே முதல வாய
　　தூயன யாவை யேனும்
மறக்குமா நினையல் அம்மா
　　வரம்பில தோற்ற மாக்கள்

இறக்குமா றிதுவென் பான்போல்
முன்னை நாள் இறந்தான்; பின்னுள்
பிறக்குமாறு இதுவென் பான்போல்
பிறந்தனன் பிறவா வெய்யோன்."

இதில் கம்பர் கண்ட காட்சி என்ன? நமக்கு அவர் காட்டியது என்ன? நாள்தோறும் தோன்றி மறையும் சூரியனை வைத்து, நம் வாழ்வையே தெளிய வைத்துவிட்டார் அவர். சூரியன் தோன்றுவதுமில்லை; மறைவதுமில்லை. அவன் நின்ற இடத்தில் நிலையாக நிற்கிறான். உலகம் சுழல்கின்றது. இரவு பகல் உண்டாகின்றன. இதையே 'பிறவா வெய்யோன்' என்றார். ஆயினும், அவன் பிறந்து மறைவது போலக் காட்டுகின்றானே! அதன் கருத்தென்ன? 'உறங்குவது போலும் சாக்காடு, உறங்கி விழிப்பது போலும் பிறப்பு' என்ற வள்ளுவரின் கருத்தை ஒட்டிக் கதிரவன் தோற்ற மறைவுகளுக்குரியதாக ஒரு நீதியைப் புகட்டுகின்றார் கம்பர். வெய்யோன் பிறந்து மறையாதவன். அதுபோன்று, உயிரும் பிறந்து மறையாத ஒன்றுதான். எனினும், அவன் தோன்றி மறைவதைப் போன்று, உயிரும் பிறந்து மறைவதைப் போன்ற நிலையிலே உழல்கின்றது. எல்லையில்லாத உயிரினம் இறந்து மறைவதைப் போன்று, முன்னாள் மாலையில் மறைந்த அந்தச் சூரியன், அவ்வுயிர்கள் மறுபடியும் பிறப்பதைப் போன்று மறுநாள் தோன்றினான் என்று உயிர்த்தோற்றம் ஒடுக்கமாகிய ஓர் உயரிய நிலையினை, அவர் கவியுள்ளம் அக்கதிரவனது அன்றாடச் செயல் முறையில் கண்டது என்றால், அக் கவிஞரைப் போற்றாதிருக்க முடியுமோ!

கம்பர் ஞாயிற்றைக் கண்ட வகையிலே சங்க காலப் புலவன் திங்களைக் காண்கின்றான். நாள் தோறும் நாம் காண்கின்ற அதே திங்கள்தான். அது திங்கள் தோறும் வளர்ந்தும் குறைந்தும், மறைந்தும் தோன்றியும் வரும் அதே முறையை உடையதுதான். நாம் அதைக்கண்டு ஏதோ நாளைக் கணக்கிட்டு மறந்து விடுகிறோம். சிலர் அதைப் பற்றியுங்கூடக் கவலையுறுவதில்லை. ஆனால், புலவன் அப்படிக் காணவில்லை; திங்களின் ஒவ்வொரு செயலும் அவனுக்கு

ஒவ்வோர் உண்மையை உணர்த்துகின்றது. செல்வத்தில் சிறந்தோர் ஒருபக்கம் சரிந்து வீழ்கின்றனர். வறியவர் ஒரு பக்கம் உயர்ந்து ஓங்குகின்றனர். மாய்தலும் பிறத்தலும் மாநிலத்தின் அன்றாட நிகழ்ச்சிகளே. இவற்றையெல்லாம் அறியாதாரும் அறிந்துகொள்ளும்படி சந்திரன் எல்லோரும் காணும் வகையில் வானவீதியில் உலவிவருகிறான் என்கின்றான் அவன்.

> 'தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும்
> மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்
> அறியா தோரையும் அறியக் காட்டித்
> திங்கள் புத்தேள் திரிதரும் உலகம்' (புறம்)

என்று அப்புலவன் கூறும்போது அவனது கவியுள்ளத்தை நாம் வியவாதிருக்க முடியுமா; கவிதை உள்ளத்தைத் தொடுவது என்பது இவ்வடிகளால் எப்படி விளங்குகின்றது?

உயர்ந்த பொருள்களாகிய வானத்துக் கதிரவனிடத்திலும், வையத்து வெள்ளத்திலும் மாத்திரம், இத்தகைய உயர்ந்த கருத்துக்களைக் கவிஞர்கள் கண்டார்கள் என்று சொல்ல முடியாது. சாதாரணப் பொருள்களும் கவிஞன் கண்களுக்கு உயர்ந்த அறமுறைக்கும் ஞானாசிரியராகக் காட்சியளிக்கும். ஊரும் எறும்பும், மண்கிளறும் நாங்கூழ்ப் புழுவும், பறக்கும் காக்கையும், வெட்டுண்டு தளிர்க்கும் மரமுங்கூடக் கவிஞர்களின் கண்களுக்குப் புதுப்புதுப் பொருள்களை உணர்த்திக் கொண்டேதான் இருக்கும். நாங்கூழ்ப் புழுவினைக் கண்டு தம்மை மறந்த நிலையில், கவிஞர் சுந்தரம் பிள்ளை அவர்கள், அப்புழுவினையே முன் நிறுத்தி எவ்வளவு அழகாகத் தம் மனோன்மணீயத்தில் பாடியிருக்கின்றார்! அந்தப் புழு அவர்தம் கவிக் கண்களுக்கு எத்தனை எத்தனை உண்மைகளை உணர்த்துகின்றது! அதன் பாட்டிலும் பண்பிலும் அவர் எவ்வளவு மூழ்கியிருக்கின்றார்! அவர் நாங்கூழ்ப் புழுவினைத் தியாகியாகவன்றோ காண்கின்றார்! அதன் வாழ்வையே மற்றவர்பொருட்டு அர்ப்பணித்ததாக அன்றோ அவருக்கு அது காட்சியளிக்கின்றது!

"ஒஓ நாங்கூழ்ப் புழுவே!
உன்பாடு ஓவாப் பாடே;
உழைப்போர் உழைப்பின் உழுவோர் தொழில்மிகும்;
உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்து நீ;
எம்மண் ணுயினும் நன்மண் ணுக்குவை!
விடுத்தனை இதற்கா எடுத்தஉன் யாக்கை!
இப்புற் பயிர்நீ இங்ஙனம் உழாயேல்
எப்படி யுண்டாம்?"

என்று அந்த நாங்கூழ்ப்புழுவை நோக்கி அவர் கேட்கும் கேள்வியிலேதான் எத்துணைச் சிறந்த கவியுள்ளம் காட்சி அளிக்கின்றது! அனைவரும் அற்பமெனக் கருதும் அந்த நாங் கூழ்ப்புழு உழவர்களுக்கெல்லாம் வேந்தாகவன்றோ அக்கவிஞர் கண்ணுக்குக் காட்சி அளிக்கின்றது! அது மட்டுமா? 'விடுத்தனை இதற்கா எடுத்த உன் யாக்கை' என்று, அது தன் வாழ்வையே அர்ப்பணித்துக் தியாகத் தீயில் குதித்ததாகவன்றோ ஆசிரியரின் கவியுள்ளம் எண்ணுகின்றது! நாம் நாள்தோறும் பார்த்துப் பார்த்து மிதித்துச் செல்லும் அதே நாங்கூழ்ப்புழுவே, கவிஞர் சுந்தரம் பிள்ளையின் கண்ணிலும் பட்டது. ஆனால், அவர் உள்ளம் கவியுள்ள மன்றோ! அதனாலே அவர் உள்ளம் கற்பனையில் துள்ளிற்று; அதன்வழியே பல உண்மைகளைக் கண்டது; கண்டதைக் கவியாக வாரி வழங்கிற்று. இதுவே கவிதையை உலகுக்கு அளிக்கும் உயர்ந்த நெறியாகும்.

உலகில் பல பொருள்கள் கவிஞர்களாலேயே ஏற்றம் பெறுகின்றன. மக்களால் மதிக்கத் தகாத பொருள்கள்கூடக் கவிஞர்கள் நாவில் சிறந்து நலமுறுகின்றன. சொற்புலவர் வாக்குக்கு ஏங்கிக் கிடந்த பழந்தமிழ் நாட்டுப் புரவலர்களை நாம் மறக்க முடியாதே! 'புலவர் பாடும் புகழே' தன் வாழ்வின் இலட்சியமாகக் கொண்ட பாண்டியன் நெடுஞ்செழியனை அறியாதார் யார்? இவ்வாறு பெருநில மன்னரும், பிறவியிலே கடைப்பட்ட பொருள்களும் புலவர்தம் கவிதைகளால் பொலிவுற்று என்றும் வாழக் காண்கிறோம்.

பொருள்களால் கவிதை சிறப்பது உண்டேனும் பெரும் பாலும் கவிஞர்தம் கவிதைகளாலேயே பொருள்களைச் சிறப்புறச் செய்வர். அவர்தம் கவிதையால் சாகாவரம் பெற்ற உயிர்கள் எத்தனை எத்தனையோ! மேற்கண்ட நாங்கூழ்ப்புழு அவ்வாறே சிறப்புப் பெற்றதன்றோ! எனவே, உள்ளத்தால் தூய கவிஞனது கவிதை, தாழ்ந்த பொருளுக்கும் அமரத்துவம் வழங்கும் அமிர்தம் என்று கொள்ளுதல் வேண்டும்.

கவிதைக்கு வெறுஞ்சொற்கள் அவ்வளவு முக்கியமல்ல. கருத்தும் உள்ளப் பெருக்குமே மிக மிக இன்றியமையாது வேண்டப்படுவன என்பதை மேலே கண்டோம். இதைக் கொண்டு ஒரு சிலர், கவிதைக்குச் சொல்லே தேவையில்லை என எண்ணிவிட்டால், தவறு உண்டாகும் என்று எண்ணு கின்றேன். கவிதைக்கும் சொல்லுக்கும் உள்ள தொடர்பை அறியத்தான் வேண்டும்.

கவிதை முன்னு சொல் முன்னு என்று ஆராய்வார் ஒரு சாரார். சொல் மனிதன் வளர்ச்சிப் பாதையில் ஒரு மைல் கல். ஆனால், அவன் அக்கல்லைக் கடப்பதன் முன்னமே பல கற்களைக் கடந்து வந்திருக்கிறான். மொழி, மனிதன் உள்ளக் கருத்தை மற்றவர்களுக்கு உணர்த்தப் பயன்படும் ஒரு கருவியாகும். ஆனால், மனிதன் தோன்றியதும் அவனுடன் அவன் வழக்கத்தி லுள்ள மொழியும் தோன்றிற்று என்று ஆராய்ச்சியாளர் கூற முடியாது. மனிதன் தன் மொழியை எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் கழித்துத்தான் உருவாக்கிக் கொண்டிருப்பான். அந்த மொழியும் ஒரு நிலையில் நில்லாது, காலம் செல்லச் செல்லச் சிதைந்தும் மாறியும் திரிந்தும் வந்துகொண்டுதானே இருக்கிறது? ஆனால், அத்தகைய ஒரு மொழி உண்டாவதற்கு முன்னுலும் அவனது உள்ளக் கருத்தை மற்றவர்களுக்கு உணர்த் திக்கொண்டுதானே இருந்திருக்க வேண்டும்.

இன்றும் நம்மிடை வாய்ப்பேச்சற்ற ஊமையர் பலரைக் காண்கின்றோம். அவர்கள் பேச முடியாத காரணத்தால் மௌனிகளாய் வாழ்கின்றார்கள். ஏனினும், அவர்கள்

கையாலும் பார்வை முதலியவற்ருலும் தங்கள் கருத்தை உணர்த்துவதோடு, மற்றவர்களின் கருத்துக்களையும் உணர்ந்து கொள்வதைக் காண்கின்ருேம். விலங்குகளும் பறவைகளும் தம் உள்ள உணர்ச்சியை மொழிகளாலா உணர்த்துகின்றன? அவற்றின் செயலும் ஒலியும் உணர்ச்சிகளைத் தூண்டி ஒன்றிய வாழ்வினை உண்டாக்கவில்லையா? அவ்வாறே மனிதனும் மொழி உண்டாவதற்குமுன் தன் செயல்கள் மூலமும், உறுப்பு அசைவு களின் மூலமும் தன் கருத்தை உணர்த்தியிருப்பான். ஆனல், அவன் ஊமைபோலப் பேசமுடியாதவன் அல்லன்; பேசத் தெரிந்தவனே. பேச்சும், சொல்லும், பிற மொழி இலக்கணங் களும் முதல் மனித இனத்துக்குத் தெரியாதன அல்லவா! எனினும், அவன் வாய் குரல் எழுப்பியிருக்கும்; இசை பாடி யிருக்கும்; அச்சுறுத்தியிருக்கும்; அவலமாக அரற்றியிருக்கும். அவைகளிலெல்லாம் கவிதை நலம் நிரம்பியில்லை என்று சொல்ல முடியுமா? அப்படிச் சொல்வார்களானல், அவர்கள் கவிதையை உணர்ந்தவர்களாக முடியாது. குயிலின் இனிய குரலில் மயங்கி நிற்கும் மக்கள் எத்தனைபேர்! குயில் ஒலியின் பாட்டில் என்ன பொருள் கண்டார்கள் அவர்கள்? அது விளக்கிப் பேசியதுதான் என்ன? வண்டுகள் பண் மிழற்றும் பண்பினைப் பாராட்டிப் பாடியிருக்கின்றனரே! அதன் கருத் தென்ன? வண்டுகள் என்ன மொழியில் என்னென்ன பொருள் களை எடுத்து விளக்கின? அவற்றின் பொருள்கள் திட்டமாக நமக்குத் தெரியா. ஆனல், அவற்றின் பாடற் கவிதையில் மனம் கொடுத்துப் பரவசமடைகின்ருேம். காதலனைப் பிரிந்த தலைவியருக்கு அக் குயில் ஒலி, எத்தனை ஆயாசத்தை உண் டாக்குகின்றது? சங்ககாலம் தொடங்கி இன்றுவரைத் தமிழ் நாட்டில் மட்டுமன்றி, பிற நாடுகளிலும் குயிலொலி போற்றப் படுவதை ஆங்கிலப் பாடல்கள் மூலமும், பிற வழியும் கேட்டும் படித்தும் அறிகிருேமன்ருே! அந்தப் பாட்டின் கவிதை நலம்—கலை இன்பம்—எல்லாம் மொழியின் அடிப்படையில் உண் டாயின அல்லவே! அது போன்றேதான் மனிதன் பாடும் கவிதையும், அவன் கண்ட மொழி உண்டாகும் முன்னமே தோன்றியிருக்க வேண்டும் என்று கொள்வர் அறிவுடையோர்,

உயிர்ப்பொருள் மட்டுமன்றி, மனிதன் கைவண்ணத் திறனால் ஆக்கும் குழலும் யாழும் தண்ணுமையும் பிற பண் இயங்களும் நம் வாழ்வையே மறக்க வைக்கின்றனவே! அவை நமக்கு ஒருமை உணர்வை நல்கவில்லை என்று சொல்லமுடியுமா? அதில் கவிதை உணர்ச்சியும் கலை நலனும் காணவில்லை என்றால், உலகம் சிரியாதா! அவற்றை இயக்கும் கலைஞர்களை உலகம் பாராட்டுகிறதே! எனவே, கவிதைக்கலை மொழி வரம்புக்கு அப்பாற்பட்ட ஒன்றாகும் என்பது விளங்குகிறது.

இவ்வாறு மொழிக்கு முன்னமே கவிதை தோன்றியிருப் பினும், மொழியினாலேயே கவிதை சிறப்படைந்தது எனலாம். மொழி அதற்கு மூலகாரணமன்று என்றாலும், மொழி அதைச் சிறப்பிக்கத் துணையாய் அமைகின்றது. உடலுக்கு உயிர் இன்றியமையாததுதான். அந்த உடலொடு கூடிய உடம்புக்குப் பிற ஆடை அணிகள் மேன்மேலும் அழகு செய்வன அல்லவோ? அவ்வாடை அணிகள் உயிரற்ற உடலுக்கு இடின், அதைக் கண்டு வியப்பார் யார்? ஒருவருமிலர். அவ்வகையிலேதான் கவிதைப் பண்பும் அமைகின்றது. கவிதைக்குப் பொருள் உயிர்நாடி. அமைந்தாழ்ந்த நல்ல பொருள் இன்றேல், கவிதை இல்லைதான். எனினும், அக்கவிதை யாவர் மட்டும் சென்று சிறக்க வேண்டுமாயின், அதற்குச் சொற்கள் அழகு படுத்தத்தான் வேண்டும். எனவே, கவிதைக்கு அடிப்படை சொற்கள் அல்ல என்றாலும், கவிதையை உலகில் வாழவைக்கும் வகையில் அணிசெய்து சிறப்பிக்கும் பெருமை சொற்களுக்கே உண்டு.

பொருள்கள் எப்படிக் கவிஞர் வாய்மொழியில் விளக்க முற்றுப் போற்றப்படுகின்றன என்பதை மேலே கண்டோம். அதைப்போன்றே சொற்களும் புலவர் நாவில் பொருந்திக் கவிதையை மேலும் மேலும் அழகுபடுத்தும் என்பதையும் காணல் வேண்டும். கவிஞன் உள்ளம் எப்படிக் கருத்தால் நிறைந்து, ஒன்றன்பின் ஒன்றாக உருப்பெற்று ஊற்றெடுத்து ஓடி வருமோ, அப்படியே சொற்களும் அவன் நாவில் உருண்டோடும். சொல்லுக்குப் பின் சொல்ல வேண்டுவது

என்ன என்று எண்ணிக் கொண்டிருப்பானாயின், அவன் கவி தட்டுப்பட்டதாகும். சொற்களின் அகராதியாக அவன் இருக்க வேண்டும். கொண்ட கருத்தைக் கவிதையாக்கி மற்றவருக்கு வாரி வழங்க வழிகாட்டுவன சொற்களேயன்றி, வேறென்ன? எனவே, அவன் சொற்களைத் தன் ஆணைவழிச் செலுத்தும் திறமை உடையவனாக வேண்டும். அப்போதுதான் கவிதை தங்குதடையின்றி ஊற்றெடுக்கும். 'இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று' என்று ஒருவகையில் கூறியது போன்று, ஓர் அளவு பொருள் நலம் குறைந்திருந்த போதிலும், சொற்களின் அமைப்பு முறையாலே அக்குறை தோன்றாது. ஆனால், அதற்காகச் சொற்களுக்கே முதலிடம் தந்து பொருளை மறந்துவிடுதல் கவிஞன் கொள்கையாகாது. கவிதையின் அடிப்படை, உள்ளம் உருக்கும் பொருளேயாம்! ஆம்! அந்த அடிப்படை முக்கியம்.

கவிதையின் ஆழம் அளப்பதரியதாகும். சொல்லும் பொருளும் சேர்ந்தது கவிதை என்று சுருக்கமாகச் சொல்லி விட்டோம். ஆனாலும், அவற்றின் ஆழத்தை அளந்தறிதல் என்பது எளிதன்று. ஒரு சிலர் வெறுஞ் சொற்களை வைத்துக் கொண்டு விளையாடலைப் புரிவார்கள். ஒரு சிலர் உயர்ந்த கருத்துக்களை வைத்துக்கொண்டு சொல்லத் தெரியாமல் திண்டாடுவார்கள். ஆனால், இரண்டையும் ஒருசேரக் கைவரப்பெற்ற புலவர்கள் பாடல்களின் ஆழம் காணுதல் அவ்வளவு எளிதன்று. இத்தகைய நல்ல கவிஞர்தம் கவிதைகளை உள்ளத்து அமைத்துத்தான் போலும் வள்ளுவர், 'பயில்தொறும் நூல் நயம் போலும்' என்றும், 'அறிதொறும் அறியாமை கண்டற்றால்' என்றும் பாடிச் சென்றிருக்கிறார்! பயில்தொறும் நூல் நயம் காண்பது எவ்வாறு? ஒரு நூலைப் பயிலும் ஒருவன், திரும்பத் திரும்ப அந்நூலைப் பயில்வானாயின், ஒவ்வொரு முறையும் படிக்குந்தோறும் புத்தம் புதிய கருத்துக்களை அந்நூலின் பாக்கள் அவனுக்கு வாரி வழங்கிக் கொண்டே இருக்கவேண்டும். நூலின் நயம் பயிலப் பயில மேலும் மேலும் இனிக்கவேண்டுமே தவிரப் புளிக்கக் கூடாது.

'அளவுக்கு மிஞ்சினுல் அமிர்தமும் நஞ்சு' என்பது நல்ல பாடலுக்கு—கவிதைக்குப் பொருந்துவதன்று. அதைப் போன்றதே மற்றொன்றின் கருத்தும்; ஆனல், சற்று விரிந்து செல்வது. ஒன்றைப் பற்றி ஆய்ந்து ஆய்ந்து உண்மை காண முயலுகின்றுன் ஒருவன். ஆராயும் ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு புது உண்மை புலப்படுகின்றது. ஆனல், அந்த அளவோடும் அது நின்றுவிடவில்லை. அவன் ஒன்றைக்கூட அறிந்தாலும், 'அவன் அறியாது விட்டது முன்னையிலும் இப்போது அதிகமாக அவனுக்குத் தெரிகின்றது. எனவே—அவன் அப்பொருளைப் பற்றி அதிகமாக அறிய அறிய, அது பற்றிய அறியாத பகுதி மேலும் மேலும் பெருகிக்கொண்டே போகின்றது. வள்ளுவர் இந்த இரண்டு உவமைகளையும் நன்கு தேவையான இடங்களில் அமைத்துள்ளார். நாம் அதை விடுத்துக் கவிதையின்வழிக் கருத்தைச் செலுத்துவோம். ஆம். கவிதை என்பது பயில்தொறும் புத்தம்புதிய கருத்துக் களைப் பயில்வார்க்கு உண்டாக்கிக் கொண்டிருக்கவேண்டும். அதனுடன் அக்கவிதை பற்றி அதிகமாக அறிய அறிய, அது பற்றி அறிய வேண்டுவன இன்னும் அதிகமாகிக்கொண்டே செல்ல வேண்டும். இப்படிச் சென்றுல், 'கவிதையின் முடிந்த பொருளைக் காண்பது எப்போது? கவிதையின் நிலையே அதுதான். கவிதையின் முடிந்த முடிபை ஒருவராலும் அறுதியிட முடியாது என்பதே உண்மைக் கவிக்கு இலக்கண மாகும். ஏன்? பாடும் கவிஞனே அதன் கருத்தை அளந்து ஆழங்காண முயலினும், முட்டாது சென்றுகொண்டே இருக்க வேண்டும். அத்தகைய கவிதைகளைப் பாடுவோர் என்றும் வாழ்பவரேயாவர். அத்தகைய நூல்கள் கவிதைகள்—நம் நாட்டில் உண்டா? ஏன் இல்லை! வள்ளுவர் திருக்குறள் ஒன்றே போதுமே! இன்னும் எத்தனையோ பாடல்கள் உள்ளன. அவற்றைப் பற்றிப் பின்னர் ஆராய்வோம்.

வள்ளுவர் குறள் மிகச் சிறிய அளவிற்று. இரண்டடியும் இல்லை என்னுமாறு ஒன்றே முக்கால் அடியால் ஆக்கப் பட்ட ஒன்று அது. படிக்கவும் அவ்வுளவு கரடு முரடானது

அன்று. பள்ளியில் பயிலும் சிறிய பிள்ளையும் அதை மனப்பாடஞ் செய்து ஒப்பித்துப் பரிசும் பெற்றுவிடுகின்றான். ஒவ்வொரு குறளுக்கும் எளிமையாகவும் பொருள் விளங்கி விடுகிறது. என்றாலும், அக்குறளை 'ஓதற் கெளிதாய் உணர்தற்கு அரிதாகியதெனப்' பலர் பாராட்டுகின்றனரே, ஏன்? அக்குறள் பற்றி, 'கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்,' என்றும், 'அணுவைத் துளைத்து எழுகடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்' என்றும், பல பாடல்கள் வழங்கப்படுவது ஏன்? அதுதான் கவிதையின் பண்பாடு. கவிதை என்பது பல அடிகளால், சந்தங்களால், பிறவற்றால் ஆகிய ஒன்று என்று எண்ணுவார், ஏமாற்ற மடைந்தவரே யாவர். கவிதை ஒரு சொல்லிலும் உண்டு; அடியிலும் உண்டு. குறள் ஒன்றேமுக்கால் அடியில் தெள்ளத் தெளிந்த கவிதையாகும். அது கற்பனை கலந்த காட்சிகளையும் இயற்கையையும் விளக்கும் எழுத்தோவியம் என்று சொல்ல முடியாது என்பர் சிலர். எனினும், மக்கள் வழுக்கி விழா வகையில் அவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய அறநெறிகளை விளக்கிக்கொண்டே செல்வது குறள் என்பதை அறியாதார் யார்? அத்தகைய பாடல்களைக் கவிதைகளாக்கிச், சாகாது வாழவைத்த பெருமை வள்ளுவர் ஒருவருக்குத்தான் உண்டு.

தோன்றிய நாள் தொட்டு இன்றுவரை குறள் போற்றப் படுகின்றது. எல்லாக் காலத்தவரும், எல்லாச் சமயத்தவரும், எல்லா நாட்டவரும், எல்லா இனத்தவரும்—ஏன்?—எல்லாக் கட்சியினருங்கூட—அத் திருக்குறட் கவிதையைப் போற்றிப் பாதுகாக்கின்றார்களே! அது ஏன்? அது கவிதை ஆனமை யினாலேதான்; கவிதைகளுக்கெல்லாம் கவிதையானமையினாலே தான். அந்நூலைப் பயிலப்பயிலப் புதுநலம் தோன்றிக் கொண்டே இருக்கின்றது. அந் நூலைக் கற்கக் கற்க, அறிந்த நிலையினும் அறியா நிலை விளக்கமாகின்றது. எல்லாருக்கும் ஏற்ற வகையில் அமைந்த கவிதை ஊற்று அது. சைவரும், வைணவரும், சமணரும், பௌத்தரும், மகமதியரும், கிறிஸ்தவரும் தத்தம் சமயக் கொள்கைகளை அதில்

காண்கின்றனர். எல்லா நாட்டவரும் தத்தம் நாட்டுப் பண்பினை அதில் கண்டறிகின்றனர். எல்லாக் காலத்தவரும் தத்தம் காலத்துக்கு ஏற்ற கருத்துக்கள், அக்கவிதைக் கருவூலத்தில் அமைந்திருப்பதைக் காண்கின்றனர். பல கட்சியினருங்கூடத் தத்தம் கட்சிக் கொள்கைகளுக்கு ஏற்ற உரையைக் காண அக் குறள் இடம் தருகின்றது. அதனாலே, அது இன்றும் வாழ்கின்றது; என்றும் வாழும். எனவே, கவிதையின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக, வள்ளுவர் குறள் ஒன்றே இங்குப் போதும். பிற கவிதைகளைப் பற்றிப் பின்னர்க் காண்போம்.

இத்தகைய கவிதைகளைக் கவிஞன் ஏன் பாடவேண்டும்? அவனுக்கு வேறு வேலையில்லையா? இவ்வாறு பாடிப் பிழைப்பது தான் அவன் தொழிலா? அன்றிப் புகழுக்கு ஆசைப்பட்ட கவிஞன், என்றென்றும் புகழால் தான் வாழவேண்டும் என்ற எண்ணத்தால் இக் கவிதைகளைப் பாடுகின்றானா? இக்கேள்விகள் சிலர் உள்ளத்து எழுதல் இயல்பு. ஆனால், அத்தகைய ஒரு குறிக்கோளுடன் கவிஞன் ஒரு கவிதையைப் பாட இயலாது. அப்படிப் பாடினாலும், பெரும்பாலும் அவன் இறப்பதற்கு முன்பே அக்கவிதை இறந்துவிடும். இன்று நாம் கண்முன்னே எத்தனையோ கவிஞர்களைக் காண்கின்றோம். அவர்கள் பாடல்கள் பத்தி பத்தியாகப் பத்திரிக்கையில் வெளி வருகின்றன. அவற்றைப் பாராட்டவும் சிலர் இருக்கின்றனர். எனினும் அவை நீரிற் குமிழியே போன்று, தோன்றிய அந்த அடிச்சுவட்டிலேயே தம் கல்லறைக்குச் சென்றுவிடுவதை நாம் அறியோமா! எனவே, கவிஞன், அக்கவியால் தான் வாழ வேண்டுமென்று கருதினாலும், புகழைத் தேடவேண்டுமென்று நினைத்தாலும், அவன் எண்ணத்தில் மண் விழத்தான் செய்யும்.

கவிஞன் கைம்மாறு கருதாதவன். அங்ஙனமாயின் ஏன் பாடவேண்டும்? பலன் ஒன்றையும் எதிர்பாராது அவன் பாடினால், அவன் வாழ்வது எவ்வாறு? அந்த நிலையைப் பற்றி எண்ணுவதுதான் உண்மைக் கவிஞனை நம்முன் கொண்டுவந்து

காட்டும். உண்மைக் கவிஞன் ஒருவனை முன்நிறுத்தி, அவனை அவ்வாறு கவி பாடவேண்டிய காரணம் என்ன என்று கேட்டால், நிச்சயம் அவன் பதில் சொல்லமுடியாது. அவன் தனக்காகப் பாடவில்லை. கவிஞன் மட்டுமன்றிப் பெரும் பாலரான மெய்க்கலைஞர்கள் அவ்வாறுதானே உள்ளார்கள்! விஞ்ஞானக் காட்சியில் தன்னை மறந்து மூழ்கித் திளைத்த 'நியூட்டன்' போன்ற பேரறிஞர்களை, 'அல்லும் பகலும் ஆய்வுக் களத்தில் ஏன் இப்படி அல்லல் உறுகின்றீர்கள்?' என்று கேட்டால், அவர்கள் என்ன பதில் கூற முடியும்? ஒரு புன்சிரிப்பை வேண்டுமானால் பதிலுக்கு அவர்கள் புலப்படுத்த லாம். அவ்வளவே! தான் உணவு கொண்டதையும் கொள்ளாததையுங்கூட அறிய முடியாது, ஏதோ ஓர் உணர்ச்சி தன்னைச் செலுத்த, அதன் வழியே தன்னை ஒப்படைத்து, அதனால் ஒரு பேருண்மையைக் கண்டுபிடிக்கும் முயற்சியிலேயே, அந்த விஞ்ஞானியின் கருத்தும் வாழ்வும் கழிகின்றன. கவிஞன் நிலையும் அத்தகையதே. அவன் ஏன் பாடுகின்றான்? இதற்குப் பதில் சொல்லத் தெரியாது அவனுக்கு. அவனை அறியாமல் ஏதோ ஓர் உள்ளொளி அவனை ஆட்கொள்ளுகிறது; அவன் உணர்வை மலைக்குக் கொண்டு செல்லுகிறது; ஆற்று வெள்ளத்தில் மூழ்க வைக்கிறது; கதிரவன் வெம்மையில் நிற்க வைக்கிறது; வான வெளியில் சிறகொடு பறக்க வைக்கிறது; இப்படி எத்தனை எத்தனையோ வகைகளில் அந்த உணர்ச்சி கவிஞனை நன்கு ஆட்டிப் படைக்கின்றது. அந்த உணர்ச்சி வழியே அவன் ஈர்த்துச் செல்லப்படும் வேளைகளில் அவன் வாயிலிருந்து முத்துக்கள் உதிர்கின்றன. அம் முத்துக்களாகிய சொற்களே கவிதைகளாக உருப்பெறுகின்றன.

கவிஞன் தன்னை மறந்த அந்த உணர்வு நிலையில் பாடுகின்ற பாட்டு, உயர்ந்த ஒரு கலைப் பொக்கிஷமாகத் திகழுவதாகும். அந்தப் பாட்டில் மலையும் காடும், ஆறும் மடுவும், ஏன்—மற்றச் சாதாரணப் பொருள்களுங்கூட இடம் பெற்றிருக்கும். நாம் முன்னே கண்டபடி, நம் கண்ணுக்கு மிகச் சாதாரணமாகத் தெரியும் அந்தப் பொருள்கள் கவிஞனது உணர்வு வயப்பட்ட

கண்களுக்கு உயர்ந்தனவாகத் தோற்றமளிக்கும். அத்தோற்றத்தைக் கவிதைக் கண்ணாடி வாயிலாக, அக்கவிஞன் நமக்குக் காட்டுகின்றான்.

அத்தகைய கவிஞன் பாடும் பாடல்கள் உயர்ந்த பொருள்கள் பற்றியனவாகத்தான் இருக்கவேண்டு மென்பதில்லை. நல்லதைப் பாடும் அக்கவிஞன், அல்லதைப் பற்றியும் பாடத் தயங்கமாட்டான். குன்றின்மேல் நின்று எக்களித்துப் பாடும் அவனுடைய உள்ளம், குகைகளிலும் புகுந்து அங்குக் குமையும் மக்களின் கொடுமைகளையும் எண்ணிப்பாடும். அந்தப் பாடலைச் சொல்லும்போதும் அது கவிநலம் வாய்ந்ததாகவே இருக்கும். இன்பத்தின் இனிமை கவியின் உள்ளத்தை எப்படி ஆட்கொண்டு சாகாவரம் பெற்ற கவிதையை உருவாக்குகின்றதோ, அப்படியே துன்பத்தின் கொடுமைகளும் அந்த வகையில், அவன் உள்ளத்தை உருக்கி உணர்த்துவனவாகும். இமயத்தின் உச்சியில் நிற்கின்ற எக்களிப்பில் தம்மையே பறிகொடுத்த பாரதியார்,

> **"மன்னும் இமய மலைஎங்கள் மலையே;**
> **மாநில மீதது போற்பிறி திலையே;**
> **இன்னரு நீர்க்கங்கை யாறுஎங்கள் யாறே,**
> **இங்கிதன் மாண்பினுக்கு எதிரெது வேறே?"**

என்று இயற்கைகளையெல்லாம் போற்றிப் பாடி இன்பில் திளைக்கிறார். அதைப் போன்றே அவர் அருமைத் தமிழ் மொழியை எண்ணும்போதும் அத் தமிழ்நாட்டை நினைக்கும் போதும்,

> **"செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்**
> **தேன்வந்து பாயுதுஎன் காதினிலே!"**

என்று இன்ப வாரிதியில் திளைக்கின்றார். அதே பாரதியார் துன்பத்திலும் தம்மை மறந்து கவிதையை வாரி வீசுகின்றார். பாரதநாட்டு மக்கள் பிற நாடுகளுக்குச் சென்று, இரப்பர்த் தோட்டங்களிலும், கரும்பு, தேயிலைத் தோட்டங்களிலும் நின்று, வாடி வாழ்விழந்து வருந்தி நிற்கும் நிலையினை எண்ணும் போது அப்படியே தம்மை மறந்துதானே,

"தேயிலைத் தோட்டத்திலே—பாரத
சேய்கள் சென்று சென்று மாய்கிறார் ஐயையோ!
நாட்டை நினைப்பாரோ,—எந்த
நாளினில் போய் அதைக் காண்பதென்றே அன்னை
வீட்டை நினைப்பாரோ,—அவர்
விம்மி விம்மிவிம்மி விம்மி அழுங்குரல்
கேட்டிருப்பாய் காற்றே!"

என்று கசிந்து பாடுகிறார்! எனவே, கவிஞன் இன்பம் தரும் பொருள்களை மட்டும் பாடி, தன்னை என்றென்றும் இன்ப வாரிதியில் மூழ்கவைத்துக் கிடப்பவன் அல்லன் என்பதும், துன்பத்தைக் கண்டபோதும், தானும் துன்பத்துள் மூழ்கி அத் துன்பமேயாகிப் புலம்புவான் என்பதும் தெளிவாகின்றன. இசை வகையிலேயும் இதனாலேதான் இன்ப எக்களிப்பில் பாடுவதற்குப் பலப்பல இராகங்கள் இருப்பன போன்று, துன்பத்தை விளக்கவும் முகாரி முதலியவாய இராகங்கள் உள்ளன என எண்ண வேண்டியுள்ளது. எனவே, எத்தகைய சூழ்நிலையிலும் தன்னை மறந்து நின்று; தான் வேறு அப்பொருள் வேறு என்ற வேறுபாடு அற்று, தனக்காக அன்றி, உணர்ச்சியில் கவிதை மழை பொழியும் மேகமாய்க் கவிஞன் விளங்குகின்றான் என்பது தேற்றம்.

இவ்வாறே கவிஞனையும் அவன் பாடும் கவிதை நலத்தையும் இணைத்துப் பார்த்துக்கொண்டே செல்லின்; அதற்கு நம் வாழ்நாள் போதாது. எப்பொருளையும், தன் எண்ணத்தால் சிறந்ததாக்கிப் பாடும் அப் பண்பார் கவிஞன் வாழ்ந்தால்—அவன் கவிதை வாழ்ந்தால்—உலகம் வாழ்கிறது. 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம், அது இன்றேல் மண்புக்கு மாய்வது மன்,' என்ற வள்ளுவர் வாக்கு இக்கவிதைப் பண்புடையார் மாட்டும் நன்கு பொருந்துவதாகும்.

இதுகாறும் கண்டவற்றால் கவி என்பது பாடல் மட்டு மல்லாது, உரைநடையும் கலந்த உயர்ந்த உணர்வு வயப்பட்ட தென்பதும், அக்கவியைப் பாடும் கவிஞன் உள்ளத் தூய்மையும்

உயர்ந்த பண்புகளும் உடையவனுவான் என்பதும், மக்கள் கண்களுக்குச் சாதாரணமாகத் தெரியும் பொருள்கள், கவிஞன் கண்களுக்குத் தனியான உயர்வைக் காட்டி உணர்வைக் கொளுத்தி அவனைப் பாடவைக்கும் என்பதும், ஆறும் பிறவும் கவிஞனுக்கு எவ்வெவ்வாறு உவமையாக்கப்படுகின்றன என்பதும், கவிஞன் கால தேய இடை எல்லைகளைக் கடந்து யாண்டும் என்றும் நிலவி வாழ்பவன் என்பதும், இயற்கைப் பொருள்களைக் கண்ட கவிஞன் அவற்றில் தோய்ந்து அவை புகட்டும் அறநெறிகளை எவ்வெவ்வாறு அள்ளிப் பருகி மற்றவர் களுக்கும் வழங்குகிறுன் என்பதும், உண்மைக் கவிதை உள்ளுந் தோறும் உயர்வடையும் ஒன்று என்பதும், குறள் ஒப்பற்ற கவிதையாய் விளங்குகிற தென்பதும், தன்னலம் கருதாது உணர்ச்சிப் பெருக்கின் வயப்படும் கவிஞனே தன் கவிதையைப் பாடுகிறுன் என்பதும், கவிஞன் கைம்மாறு கருதாது உணர்வு வயத்தால் பாடுகின்றுன் என்பதும், அந்நலத்துடன் அவலம் முதலிய அனைத்தையும் அவன் பாடவல்லன் என்பதும் தெளிவா கின்றனவன்றே?

3. கவிதையின் வகைகள்

கவிதையைப்பற்றி ஒருவாறு உணர்ந்த நாம் அக் கவிதையின் பிரிவுகள் பற்றியும் உணர்ந்துகொள்ளல் அவசியமன்றோ? கவிதை பாட்டிலும் உரைநடையிலும் பயில்வது என்றாலும், பெரும்பாலும் பாடலே கவிதையாகக் காண்கின்றோம். பொருட்செறிவும் பிற இயல்புகளும் அமைவதோடு, சந்தமும் இசையும் பொருந்தி அமைக்கப்பட்ட பாடல்களில் அவை பொருந்துமாயின், கவிதை மிகவும் சிறப்பாகும் அன்றோ! எனவே, கவிதை பாடல் வழி எவ்வெவ்வாறு அமைகின்றது எனக் காணல் வேண்டும். அப்பாடல் நெறியே தமிழில் மிகப் பரந்து கிடக்கும் ஒன்றாகும்.

'செய்யுள் இயல்' என்பது தொல்காப்பியத்துள்ள பா நலம் குறிக்கும் பகுதி என்பதைக் கண்டோம். அதில் தொல்காப்பியர் செய்யுளுக்குப் பலவகையாக இலக்கணங்களைக் காட்டுகின்றார். அவற்றை அறியுமுன் தமிழ் நாட்டில் பாட்டிற்கு வழங்கும் பெயர்களையும், பொருள்களையும் அறிதல் அவசியமாகும். 'செய்யுள்' என்ற சொல் செய்யப்படும் ஒன்றற்குப் பெயராகின்றது. எழுத்து, அசை முதலிய உறுப்புக்களைக் கொண்டு, அவற்றால் ஒன்றைச் செய்து முடித்தல் செய்யுளாகும். ஆங்கிலத்தில் 'Stanza' என்று வழங்கும் சொல்லுக்கு நேராக இது அமைகின்றது. எனவே, செய்யப்படுவனவெல்லாம் செய்யுள்களே. சாதாரண வண்டி ஓட்டிக்கொண்டு, தன் வேலைக்கிடையிலே வேடிக்கையாகப் பாடும் வண்டிக்காரன் பாட்டு முதல், உயர்ந்த வேதாந்தப் பாடல்கள்வரை செய்யப்படுவன தாமே? எனவே, அவற்றைச் செய்யுள்கள் என்று கூறலாமன்றோ?

தொல்காப்பியச் செய்யுள் இயலிலும், பின் வந்த யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கல விருத்தி என்னும் இலக்கண நூல்களிலும் செய்யுளுக்கெனத் தனித்தனியே இலக்கணங்கள் வகுத்துள்ளனர். அந்த இலக்கண வரம்பில் மேற்கண்ட வண்டிக்காரன் தெம்மாங்கும் பிற பாடல்களும் இடம்பெற வழி இல்லை என்பர் இலக்கண நூலோர். **'செய்யுள் தாமே மெய்பெற விரிப்பின், பாவே பாவினம் என இரண்டாகும்'** என்று யாப்பருங்கல ஆசிரியர் செய்யுளை வரையறுத்து விடுகின்றார். பாவெனவும் பாவினம் எனவும் செய்யுள் இரண்டு வகையிலேதான் அடங்க வேண்டும் என்பது அவர் துணிபு. தொல்காப்பியர் செய்யுள் இயலிலே செய்யுளுக்கு உறுப்பாவன இவை இவை என முதற்சூத்திரத்தால் விளக்கி, அவற்றை யெல்லாம் அந்த இயல் முழுதும் விளக்கிக் கொண்டே செல்கின்றார்; இறுதியாக,

> **"செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி**
> **இழைத்த இலக்கணம் பிழைத்தன போல**
> **வருவன வெனினும் வந்தவற் றியலால்**
> **திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே."** (545)

என்று ஒரு புறநடையையும் காட்டியுள்ளர். இருநூற்று முப்பத்து நான்கு சூத்திரங்களில் செய்யுளின் இலக்கணங்களை யெல்லாம் கூறிவந்த தொல்காப்பியனார்க்கு, அவ்வளவு கூறியும் செய்யுள் இலக்கணம் அவற்றுள் அடக்கக்கூடிய ஒன்று அன்று என்பது புலப்பட்டிருக்க வேண்டும். பலவகை உறுப்பினங்களையும் அழகுகளையும் கூறி, அவ்வவற்றின் இயல்புகளையும் வரிசையாகக் காட்டிய அவர், இறுதியில் செய்யுளை இவ்வாறு வரிப் புனைந்த சட்டங்களுக்குள் எப்படி மாட்டி நிறுத்த முடியும் என்று எண்ணியிருப்பார்; எனவே தான், இந்த இறுதிச் சூத்திரமாகிய புறநடையையும் உடன் கூறவேண்டிய அவசியத்தைக் கண்டார். புறநடையில் அவர் கூறுவன யாவை?

'மேலே செய்யுள் இலக்கணத்தில் கூறிய அனைத்தும் தவறின போன்று சில பாடல்கள் அமையினும், அவற்றையும்

ஆராய்ந்து, இயல்பறிந்து, செய்யுளின் வேறுபடுத்தாது ஏற்றுக்கொள்ளல் அறிந்தோர் கடன்,' என்று கூறுகின்றார் அவர். ஆம். அக் கருத்து எப்படிக் காலந்தோறும் பொருந்தியுள்ளது? எவ்வளவு காலம் மாறினும் காலமும் கருத்தும் பொருந்தச் செய்யுளுக்கு ஒப்ப அமைந்தன யாவற்றையுமே செய்யுளாகக் கொள்ளவேண்டுமென அவர் வரையுறுப்பது தெள்ளிதின் புலனாகின்றதன்றோ? இந்தப் புறநடையினால் வண்டிக்காரன் பாட்டுங்கூட இலக்கண வழக்கப் பாட்டாக ஏன் மாறக்கூடாது?

செய்யுளின் உறுப்புக்களாக அவர் மாத்திரை தொடங்கிப் பலப்பலவற்றைக் கூறுகின்றார். அவற்றையெல்லாம் ஈண்டு நாம் ஆராய வேண்டா. ஒன்றுமட்டும் காணல் சால்புடைத்து. மொழி திருத்தம் பெற்று, வரையறை செய்யப்பட்ட பின்னரே இந்த இலக்கணங்கள் அமைந்தன. ஆனால், செய்யுள் அல்லது பாட்டு, அதற்கு முன்னமே வழக்கத்தில் இருந்துதானே வாழ்ந்திருக்கும்? எழுத்துப் பெறாத சில இன்றைய மொழிகளிலேகூடப் பல பாடல்களைக் காண்கிறோம். செம்மைப் படாத—திருந்தாத—மொழிகளிலும் பல பாடல்கள் உண்டே! அவைகளெல்லாம் தொல்காப்பியனார் இலக்கண வரம்புக்கு அப்பாற் பட்டனவா என்ற ஐயம் தோன்றுதல் இயல்பே. எனினும், 'இலக்கியத்தினின்று எடுபடுவது இலக்கணம்' என்று முன்னமே நாம் கண்டோமாதலால், அந்த வகையில்தான் தொல்காப்பியரும் இச் செய்யுள் இலக்கணத்தைச் செய்திருக்க வேண்டும் எனக் கொள்ளல்வேண்டும். அவ்வாறு கொள்ளின், எழுத்து வழக்கற்ற அந்தத் தொலை நெடுங்காலம் தொட்டு, தாம் வாழ்ந்த காலம் வரையில் அமைந்த செய்யுள் இலக்கணங் களையெல்லாம் ஒருங்கே தொகுத்துத் தொல்காப்பியர் தம் வரம்பைக் கோலினார் என்று கொள்ளல் பொருந்தும். ஆனால், அந்த வரம்பைத் திட்டமாக்கி, அதைக் கடக்கலாகாது என்ற கட்டுப்பாட்டை அமைக்காது, புறநடையால் வருங்காலச் செய்யுள்களையெல்லாம் தன் எல்லையுள் புக இடந்தந்தமை யாலேதான் தமிழ்ச் செய்யுள்—தமிழ்க் கவிதை நலம்

நாள்தோறும் வளர்ந்துகொண்டே செல்கின்றது. இம் முறை தான், செய்யுள் வழக்கு முறைக்கு மட்டுமன்றி, எல்லா வாழ்க்கை நெறிக்குமே பொருந்துவதாகும். அவை பற்றி யெல்லாம் அறிஞர் கூறியிருப்பன நோக்கின் நன்கு புலனுகும்.

இச் செய்யுள்களைப் பாவெனவும் பாவினமெனவும் பிரித்தார்கள் என்பதைக் கண்டோம். அவற்றைப் பற்றியும் ஒரு சிறிது அறிதல் நலம் பயப்பதாகும். அவ்வகைப் பாவினத்துள்ளும் பலப்பல தமிழ்க் கவிதைகள் உருவாகி உள்ளன. எனவே, அவற்றைப் பற்றி அறிதலும் கவிதைக் கூறுபாடுகளைக் காண்பதாகும். காலத்தால் பின்னர் வந்த யாப்பருங்கல விருத்தியும், காரிகையும் பெரும்பாலும் தொல் காப்பியத்தின் அடி ஒட்டியே செல்லுகின்றமையினுலும்; தொல்காப்பியமே தொன்மையான இலக்கண நூலானமை யாலும், அதிற்காணும் பாகுபாடுகளை உணர்வதே போது மானதாகும்.

தமிழில் நால்வகைப் பாக்களே முக்கியமாகப் பேசப் படுவன. அவை வெண்பாவும், ஆசிரியமும், கலிப்பாவும், வஞ்சிப்பாவும் ஆம். அவைகளைச் சார்ந்து அவற்றின் இனமாகப் பலப்பல காலப்போக்கில் தமிழில் இடம் பெறலாயின. சங்க கால இலக்கியங்களையும், பிற்கால இலக்கியங்களையும் ஒப்பு நோக்கின், இவ்வுண்மை நன்கு புலப்படும். பிற்காலத்தே தோன்றிய பல்வகைப் பாவினங்களையும் உள்ளடக்கியே யாப்பருங்கலம் இலக்கணம் வகுக்கின்றது. தொல்காப்பியத் தில் நால்வகைப் பாக்களையும் அவை காணும் பொருள்களையும்,

'ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே.' (411)

எனவும்,

'அந்நிலை மருங்கின் அறம்முத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப' (412)

எனவும் விளங்கக் கூறியுள்ளார் ஆசிரியர். மேலும், வஞ்சியும் கலியும் ஆராய்ந்தால், அவையும் வெண்பா ஆசிரியம் என்ற இரண்டினுள்ளேயே அடங்கும் என்பது.

'பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின்
ஆசிரி யப்பா வெண்பா என்றாங்கு
ஆயிரு பாவினுள் அடங்கும் என்ப. (413)

எனவும்,

'ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை
வெண்பா நடைத்தே கலிஎன மொழிப. (414)

எனவும் கூறுதலால் விளங்கும். எனவே, தமிழ்க் கவிதைகள் —செய்யுள்கள்—முதன் முதலாக வெண்பாவிலும் ஆசிரியப் பாவிலுந்தான் இயங்கி வந்தன என்பது ஒருதலை. பின்னர்க் காலம் செல்லச் செல்ல, அவை நான்காகி, பின்னர் அந்நான்கும் பல்வேறுவகை இனங்களாய்ப் பரவி, எத்தனையோ வகையில் செய்யுள் நிலை விரிந்துவிட்டது என்பதும் இன்று நாம் காண்ப தொன்று. இக் காலத்தில் அந்த யாப்பிலக்கண எல்லைக்கு அப்பாலும் பல பாடல்கள் விரிவடைந்துள்ளன. அவற்றின் சொல்லும் பொருளும் அறிந்து, கவிதைப் பண்பு கலந்திருக்கும் கவின் கண்டு, அவற்றையும் தொல்காப்பியர் வரைந்த புறநடை யிலக்கணத்தின்வழிப் பாட்டெனவே கொள்ளல் வேண்டும்.

தொல்காப்பியத்தில், பா வகையில் இந்த நால்வகைப் பிரிவினை மட்டும் கூறப்படுவதோடல்லாது, பரிபாடல் முதலிய பிரிவினைகளும், பாக்களின் சிலச்சில பிரிவினைகளும் பேசப் படுகின்றன. அவற்றோடு பொருள் நலத்தால் பாகுபடுத்தப் பட்டு, விளக்கும் பொருளின் அடிப்படையில் அமையும் செவியறிவுறூஉ, கைக்கிளை, புறநிலை வாழ்த்து முதலிய வகைப் படுத்தப்பெறும் பாடல்களும் பேசப் பெறுகின்றன. செய்யு ளியலில் வெறும் பாவின் இலக்கணம் கூறவேண்டுமாயினும் அப் பாக்கள் நாம் முன் கூறியபடி செம்மைப் பொருள்வழிச் செல்லாவாயின் சிறவா என்பதை உளத்துக் கொண்டேதான்

தொல்காப்பியர், இவ்வாறு பொருளால் பெயர்பெறும் பாடல் வகைகளையும் தம் செய்யுள் இயலில் இடம்பெற வைத்துள்ளார். எனவே பொருளாற் சிறக்கும் கவிதை வகை இங்கே சிறந்து விளக்கப் பெறுகின்றதன்றோ?

தொல்காப்பியர் தம் செய்யுள் இயலிலே கவிதை எவ்வாறு அமையவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டிச் செல்கின்றார். கவிதை என்பது ஓரளவு கவிஞன் கற்பனையின் ஊற்றுப் பெருக்கத்தில் தோன்றி வளர்வதானாலும், அது வாழ்வோடு பிணைந்த ஒன்றாகத்தான் இருக்கவேண்டும் என்பதை நன்கு அறிந்தவர் தொல்காப்பியர். எனவேதான், அவர் செய்யுளியலில் பாட்டுக்களைப் பாகுபடுத்தும்போதும், இன்னின்னவற்றிற்கு இவ்விவ் வகையான பாடல்கள் அமையவேண்டும் என்று கூறும்போதும், அவற்றை மக்களின் வாழ்வோடு சார்த்தியே கூறுகின்றார். இச் செய்யுளியல், செய்யுள் எவ்வெவ்வாறு அமையவேண்டும் என்பதைக் காட்ட வந்ததாகலின், இன்ன பொருளுக்கு இன்ன வகையில் செய்யுள் அமைத்தல் சிறந்ததாகும் என்பதை எடுத்துக் காட்டுகிறது. 'புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து' செவியறிவுறூஉ, கைக்கிளை, அங்கதம் ஆகிய பலவற்றைத் தனித் தனி விதந்தோதுகின்றார் ஆசிரியர். அவற்றுள் ஒன்றைப்பற்றி அவர் காட்டும் நெறியறிந்து மேலே செல்லலாம்.

வாழ்தல் அனைவருக்கும் இயைந்த ஒன்று. மற்றவரை 'வாழ்க' என்று வாழ்த்துவது இயற்கையுங்கூட. உலகம் வாழ வழி வகுக்கும் நல்லவர்கள் அனைவரையும் வாழ்த்துவார்கள். அந்த வாழ்த்து நல்ல கவிதையாக அமையின், சிறப்பாய் விளங்கும். பாட்டாகிய அக் கவிதை எவ்வாறு அமைய வேண்டும் என எண்ணிப் பார்ப்பவர் ஒரு சிலர். சிலர் வாழ்த்தின், சொல்வழித் தவறு நேருமோ என அஞ்சி வாழ்த்துப் பாடல் பாடவும் மறுப்பர். அவர் கூற்றின் உண்மையை நாம் ஆராய முற்படவேண்டா. நமக்கு அது தேவையும் அன்று. ஆனால், அவ்வாழ்த்து எவ்வாறு அமையவேண்டும் என்று தொல்காப்பியனார் கூறுவதை மட்டும் ஈண்டு நோக்குதல் நலமாகும்.

'வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்று
ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தன்றே.' (418)

என்று தெளிவாக வாயுறை வாழ்த்து அமைய வேண்டிய வகையைக் கூறி விளக்குகின்றார் அவர். கொடுஞ்சொற்கள் இல்லாது, எதிர்காலம் சிறக்கும் என்று சொல்லி, செவ்விய உள்ளத்தால் வாழ்த்துவது அன்றோ வாயுறை வாழ்த்து! இவ்வாழ்த்தும் பிறவும் வெண்பா, ஆசிரியப்பா ஆகியவற்றில் அமைக்கப் பெறவேண்டும் என முந்திய சூத்திரத்தால் செய்யுள் வகையை விளக்கிக் கூறிவிட்டார். இவ்வாறே, வெறுஞ் செய்யுள் இலக்கணத்தை மட்டும் காணாது, அதனால் கூறப் பெறும் பொருளையும் உள்ளடக்கியே கவிதையின் சிறப்பைக் காட்டுகின்றார் ஆசிரியர் தொல்காப்பியர்.

வாழ்த்து மட்டுமன்றி, வசை பற்றிய பாடல்களையும் அங்கதம் என்று வகைப்படுத்துகின்றார் அவர். ஆனால், அது வாழ்வுக்கு வேண்டப்படாத ஒன்றாதலாலே, அதைப் பற்றி அதிகமாக விளங்கக் கூறாது, இன்னதன்மைத்து என இலக்கணம் மட்டும் காட்டி மேலே செல்கின்றார். ஆனால், பிற்காலத்தே இவற்றை வைத்துக்கொண்டு, 'கவிதை பாடுவோம்' என்று விருது கட்டிக்கொண்ட புலவர் சிலர், வசை பாட வல்லவர் என்று தம்மைக் கூறிக்கொண்டு, மற்றவரை மருட்டியே வாழ்ந்து வந்துள்ளனர். 'வசை பாடக் காளமேகம்' என்று ஒரு புலவரே அதெற்கெனப் புறப்பட்டு விட்டார். இவர்களுக்கு ஏற்பப் பாட்டியல் என்ற நூலும் உண்டாயிற்று. அதிலே எழுத்துக்களை நச்செழுத்தென்றும், அமுத எழுத்தென்றும் பிரித்து, இன்னின்ன எழுத்தை முதலாக வைத்துப் பாடினால் பாட்டுக்குடையவன் வாழ்வான் என்றும், இன்னின்ன எழுத்தை முதலாக வைத்துப் பாடினால் மாள்வான் என்றும் ஆசிரியர் கூறியுள்ளனர். வெண்பாப் பாட்டியலும், சிதம்பரப் பாட்டியலும் அவற்றில் முக்கியமானவை போலும்! தமிழ் நாட்டில் வழங்கும் பிரபந்த வகைகளைக் கூறிக்கொண்டே வருகின்ற இந்

நூல்கள் இவ்வாறு இசை பாடவும், வசை தூற்றவும் வகுத்துக் கொண்ட வழி வியப்புக்குரிய ஒன்றாகும். எனினும், இவை காலத்தால் மிக மிகப் பிந்தியனவாதலான் இவற்றைப்பற்றி நாம் மிக்க கவலையுற வேண்டா. ஏன், நாடே இவற்றைப்பற்றிக் கவலையுறவில்லை, இந் நூல்களின் வாழ்வைப்பற்றித் தமிழ் நாட்டில் இன்று ஆயிரத்தில் ஒருவருக்குக்கூடத் தெரியாதே! நாமும் இவற்றைவிட்டு மேலே செல்வோம்.

தொல்காப்பியத்திலே இவ்வளவு திட்டமாக வரையறுத்த செய்யுட் பிரிவினைப் 'பா' என்று கூறுகின்றார். 'பா' என்பது என்ன? செய்யுளா? கவிதையா? பாட்டா? அன்றி வேறா? செய்யுளைப் 'பா' எனவே வழங்கினர். செய்யுளில் ஒருவகையாகிய 'பா' பொருளாலும் பண்பாலும் சிறந்துள்ளதாயின், அது மக்கள் மனத்தைத் தொடும் கவிதையாயிற்று. அப் பாவே பண்ணொன்றப் பாடப்படின் 'பாட்டு' எனப் பெயர் பெற்றது. உரைநடையினும் பாட்டுச் சிறப்புறுதற்கு உரிய காரணம், அது பண் ஒன்ற, கருத்துக்கு மட்டுமன்றிக் கேட்பார்தம் காதுக்கும் இனிமை பயக்கும் வகையில் பாடப்படுவதே யாகும். இவ்வமைப்பு நிலை, தமிழ் நாட்டில் மட்டுமன்றி, பிற மொழி வழங்கும் நாடுகளிலும் உண்டு. ஆங்கில நாட்டில் 'Poem, Hymn' என வழங்கும் பாடற்றொகுதிகள் இசையோடு பொருந்தியனவேயாம். ஆங்கிலத்தில் கவிதையாகிய பாட்டு 'Poetry' எனப் பெயர் பெறுகின்றது. ஒரே வகைப்பட்ட அமைவுடைப் பாட்டாயின், 'Verse' எனப் பெயர் பெறுகின்றது. ஒரே வகைப்பட்ட அமைவுடைய அடிகளைக் கொண்ட பாட்டு 'Stanza' ஆகின்றது. ஓர் இசைத்தன்மை கொண்டு, வரையறுத்த அடிகளால் அமைந்து, உடன் இசை நலம் பொருந்திய பாட்டு, 'Song' ஆகின்றது. அந்த இசைப் பாடலே கடவுளைப் பாடுவதாக அமையின், 'Hymn' ஆகிறது. இந்த வகைகளும் வேறுபாடும் தமிழிலும் உண்டு. செய்யப் படுவது செய்யுள் என்பது கண்டோம். அதைப் போன்றே பாடப்படுவது பாட்டு என்று சொல்லிவிடலாம். அடிகளால், இலக்கண முறைப்படி கவிஞனால் ஆக்கப்பெற்ற செய்யுள்

பாடப்பெறுமாயின், அது பாட்டாகின்றது. தொல்காப்பியத்திலும் பாக்களைப் பிரிக்கும் ஆசிரியர், அவை பாடப்படுதற்கு ஏற்ற தனித்தனி ஓசை வகைகளையும் பிரித்துக் காட்டுகின்றார். பாட்டு என்பதற்கு இலக்கணம் கூறும்போது, 'அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே' (344) என்கின்றார். செய்யுளாகிய பாவினத்தின் பல்வேறு இயல்புகளையும் கூறி, அவற்றின் சேர்க்கைகளாலும் அமைப்பாலும் பொருந்தும் அடியினை விளக்கி, அவ்வடிகள் அளவுக்கேற்பவும், அமைப்புக் கேற்பவும் பொருந்தி வருதலே பாட்டு எனக் காட்டுகின்றார் ஆசிரியர். இதைத்தான் ஆங்கிலத்தில் 'Stanza' அல்லது 'Song' என்ற பிரிவுக்கு அந்நாட்டார் பொருளாகக் கொள்கின்றனர். எனவே, அடிகள் சிலவோ, பலவோ பொருந்தியது பா ஆகின்றது. அப் பா, பாடப்படும்போது பாட்டாகின்றது, இலக்கண விளக்கம், அடியும் தொடையும் பரவி நடப்பதே பாட்டாகும் எனக் குறிக்கின்றது. எனவே, பாட்டு, கவிதையாகிய பாவினைப் பண்ணொன்றப் பாடுவதேயாகும்.

பாடல் என்ற சொல்லுக்கே 'இசைப்பா' என்ற பொருளும் உண்டு. சிலப்பதிகாரத்தே மங்கல வாழ்த்துப் பாடல் உள்ளதை நாம் அறிவோமே! மங்கல வாழ்த்தாக இசை பொருந்தப் பாடப்பெறும் பாடல்களன்றோ அவை? 'பாடித்தம்' என்ற சொல் உச்சரிக்கப்படுவது என்ற பொருளில் வழங்குகின்றது. சமயப்பாடலைத் தோத்திரம் என்ற சொல்லால் வழங்குகின்றோம். இப்பாடல் கற்பாரை மட்டுமின்றிக் கேட்பாரையும் தன்னிடத்தே பற்றி ஈர்க்கும் தன்மை வாய்ந்தது. வெற்று இசைக்கே அந்தப் பண்பு உண்டன்றோ? தமிழ் நாட்டில் வழங்கும் இசையில் மயங்காதார் யார்? பாடல் வழியிலேதான் இசையை அனுபவிக்க முடியும் என்றால், 'குழல் இனிது யாழ் இனிது என்ப' என்ற தொடருக்கே பொருள் இல்லை யாகுமே! குழல் வழித் தோன்றும் இசைப் பாடலின் பொருள் என்ன? யாழ் எதைப் பற்றிப் பாடுகின்றது? அதன் பொருள் என்ன? இன்றும் இராக ஆலாபனையும் நம்மை மயங்கவைக்கும் நிலையைக் காண்கின்றோம். ஆம். இவை

யெல்லாம் இசைக்கு இருக்கும் தனி ஆற்றலைக் காட்டுகின்றன. அந்த இசையே, சொல்லிய பாவின் பொருள்நலம் தோன்றும் வகையில் அமைந்து, அப்பாவும் கவிதை நலமெல்லாம் கலந்த ஒன்றாய் இருப்பின், அதனினும் கவிதை இன்பம் வேறு உண்டோ?

கவிதையைக் காண எங்கெங்கோ சென்றோம். ஆனாலும், அனைத்தும் கவிதையோடு தொடர்பு உடையனவே. இனி, 'இவ்வகையான கவிதைகளைப் 'பாடினால் கேட்டற்குரியவர் யார்? மக்கள் தாமே?' என்ற எண்ணம் தோன்றல் இயல்பே. ஆம்! மக்கள் வாழ்க்கைக்கெனவேதான் கவிதை அமைந்துள்ளது. அதனை இல்லையென்று மறுப்பார் இல்லை. என்றாலும், கவிஞன் உள்ளம் அந்த நிலையைத் தாண்டி அப்பாலும் செல்லுகின்றது. மக்கள் மட்டும் கேட்டலைக் காட்டிலும் மற்றைய விலங்கும், பறவையும், பிறவும் கேட்டுத் துய்க்கும் வகையில் கவி அமையின், அது சிறக்கும் என அவன் எண்ணியிருப்பான். மேலும், சிலவற்றை மனிதனிடம் கூறின், மன அமைதியும் பெற இயலாது. அல்லது அவனுக்கு வேண்டாத பொருளாயின், வெறுப்பும் தோன்றுதல் கூடும். அகப்பொருளாகிய ஒருவனும் ஒருத்தியும் பெற்ற இன்பம், பிறருக்கு எடுத்துப் பேச முடியாத ஒன்றுதானே? அதையே மயிலுக்கும், குயிலுக்கும், ஓடைக்கும், பூவுக்கும் சொல்லுவது போலப் பேசி 'உள்ளக் களித்தல்' இயல்பு என்பதை இலக்கியங்கள் வற்புறுத்துவதைக் காண்கின்றோமன்றோ? மேலும், மனிதன் தவறி நடப்பனாயின், அவனை நேரே நிறுத்திக் குற்றங்களைக் கூறிப் பழித்துத் திருத்த முற்படின், அவன் வெறுப்படையானோ! அவன் செயலை அஃறிணையின்மேல் ஏற்றி அறிவுறுத்தும் வகையில் விளக்கின், அதனால் பயன் உண்டாகும். அதிலே கவிதைவழிக் கற்பனையும் பிறக்குமே! முன்னர்ச் சூரியனையும், நாங்கூழ்ப் புழுவையும் முன்நிறுத்திக் கவிஞர்கள் கற்பனைக் கடலிலே மிதந்து உலகுக்குக் கவிதை வழங்கிய உண்மைகளையெல்லாம் காணவில்லையா? அந்த நிலை கவிதைக்கு இன்றியமையாத ஒன்றேயாகும். இவற்றையெல்லாம் எண்ணித்தான் போலும் ஆசிரியர் தொல்காப்பியனாரும்'

'ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல பிறவும் நுதலிய நெறியால்
சொல்லுந போலவும் கேட்குந போலவும்
சொல்லியாங்கு அமையும் என்மனார் புலவர். (502)

என்கிறார். பவணந்தியாரும்,

'கேட்குந போலவும் கிளக்குந போலவும்
இயங்குந போலவும் இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினும் அறையப் படுமே.' (409)

என்று கூறி இதையே விளக்குகின்றார். எனவே. கவிஞன் தன் கற்பனைத்திறன் ஒன்றுக்கு மட்டுமன்றி, கவிதையின் நலன் கனிந்து விளங்கவும், நாட்டுக்கும் உலகுக்கும் உணர்த்த வேண்டியவற்றைத் தெள்ளிதிற் காட்டவும். இவ்வாறு மனிதனல்லாத மற்றையவற்றை முன்னிறுத்திப் பாடுவது இயல்பே என்பது தேற்றம். இந்த வகையில் நம் நாட்டைப் போன்றே ஆங்கில நாட்டிலும் புலவர் பற்பலர் வாழ்ந்து அவர்தம் இலக்கியத்தை வளம்படுத்தி இயற்கைப் புலவர்களாய் இன்றளவும் சாகா வரம் பெற்றுச் சிறப்பதை நாம் அறியோமா? ஆங்கிலத்தில் மட்டுமன்றி, வளம் பெற்ற எம்மொழியிலும் இத்தகைய கற்பனைக் கவிஞர் உள்ளனர். அவர்தம் கவிதைகளாலேதான் அம்மொழிகள் வாழ்கின்றன என்றுகூடச் சொல்லலாம். வடமொழிக் காவியங்களிலும், பிற நாட்டுக் காவியங்களிலும் இத்தகைய கவிதைச் செல்வங்கள் நிறைந்துள்ளன என்பதை அவ்வம்மொழிப் புலவரும் பிறரும் போற்றிப் புகழ்கின்றனரன்றோ?

இனி, இக்கவிதையை வேறு வகையில் கூறுபடுத்திக் காணும் வகையினையும் காண்போம். புறப்பொருள் வெண்பா மாலை என்றோர் இலக்கண நூல் தமிழில் உண்டு. அதில் இன்னின்ன சமயத்தில் பாடும் பாடல்கள், பொருள் வகையில் இன்னின்ன பெயர்களைப் பெறும் என்பது விளக்கப்

பெற்றுள்ளது. புறம் பற்றிய துறைகளை வகுத்து, அவற்றின் பெயர்களைப் படல வரிசைப்படுத்தி விளக்குகின்றது அந்நூல். ஒரு பாடலைக்கொண்டு அது பாடும் பொருள் இன்னது என்பதைக் கண்டு, அதற்கு ஏற்ப அப்பாடற்குப் பெயரிட்டிருக் கின்றனர் புலவர். அரசனது சிறப்பைப் பாடுவதும், அவன் வாளையும் குடையையும் போற்றுவதும், அவன் பிறந்தநாள் விழாவைப் போற்றுவதும், அவன் வெற்றியைப் பாடுவதும். அவன் கழிவை நினைத்து இரங்குவதும் ஒவ்வொரு வகையால் ஒவ்வொரு பெயரால் வழங்கப்படுகின்றன. அரசனைப் பற்றி மட்டுமின்றி, அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய அனைத்தை யும் பற்றிய பல பாடல்களும் அவ்வாறே வழங்கப்படுகின்றன. வேய், புலனறி சிறப்பு, தழிஞ்சி, பூக்கோள் நிலை, குதிரை மறம், மண்ணு மங்கலம், நூழில் முதலியன அவ்வகையில் பொருள் பற்றிய பாடல்களின் துறைப் பெயர்களே. இவை போன்ற பாடல்கள் பிற மொழிகளிலும் உள்ளன என அறிகின்றோம் 'Sonnets, Elegy, Prelude' போன்ற பல்வகைப்பட்ட ஆங்கிலப் பாடல்களைப் பயின்றோர் அறிவர். மறைந்ததை எண்ணி இரங்கும் பாடலும், வெற்றியைச் சிறப்பிக்கும் பாடலும் ஆங்கிலத்திலும் உண்டு. எனவே, இப்பகுப்புமுறை தமிழில் மட்டும் அமைந்த ஒன்றன்று. எனினும், இத்தமிழ் மொழியில் உள்ள அத்துணைப் பிரிவுகள் ஆங்கிலத்தில் இல்லை என்பது அறிஞர் கண்ட முடிவு.

'புறப்பொருளை விளக்கும் பகுதி தொல்காப்பியத்தில் 'புறத்திணையியல்' என்னும் பகுதியாய் விளங்குகின்றது. அதில் பல்வேறு வகைப்பட்ட துறைகள் பேசப்படினும், புறப்பொருள் வெண்பா மாலையில் பேசப்படுவன போன்று அத்துணைப் பெயர்களால் அவை வழங்கப்படவில்லை, வெண்பா மாலை, காலத்தால் மிகப் பிந்திய நூல். எனவே, அத்துணை இடையிட்ட காலவேறுபாட்டில் அவை தனித்தனியாகப் பெயர் பெற்று, சமயத்திற்கு ஏற்ற வகையில் பாடுமாறு அமைந்தன என்று கொள்ளுதல் சாலப் பொருத்தமாம். அவற்றுள் இரண்டொன்று கண்டு மேலே செல்லலாம்.

மாற்ருர்மேல் படையெடுத்துச் செல்கின்ருன் மன்னன். அவ்வாறு படைகொண்டு மாற்ருரைச் சாடப் புறப்படும் நிலையினை, 'வஞ்சி' என்று விளக்குகின்ருர் ஆசிரியர்; அதை ஒரு படலமாக்கிப் பல துறைகளை அதில் புகுத்துகின்ருர். அத்துறை ஒவ்வொன்றிற்கும் தனித்தனிப் பெயர் உண்டு. அவ்வப் பெயரால் அக்கருத்தமைந்த பாடல்களை அமைத்துப் பாடுவர் புலவர் என அறிகின்ருேம். ஒன்றை உதாரணமாகக் காண்போம். போர்க்களத்து மன்னன் வாள் ஓச்சிய சிறப்பை ஒரு புலவன் பாடுகின்ருன் என்று கொண்டால், அப் பாட்டிற்குக் 'கொற்ற வஞ்சி' என்னும் பெயர் உரித்தாகும்.

> "வையகம் வணங்க வாள்ஓச் சினன்எனச்
> செய்கழல் வேந்தன் சீர்மிகுத் தன்று"

என்பது அத்துறையின் இலக்கணம். எனவே, தமிழ் இலக்கியத்தில் இந்தக் கருத்தமைந்த பாடல் எங்கு வரினும், அதன் துறை 'கொற்ற வஞ்சி' என்று கொள்ளவேண்டும் என்பர்.

இன்னும் இரண்டொன்று காணல் நலம் பயப்பதாகும். காஞ்சி' என்பது நிலையாமையைக் குறிக்கும் தொடர். வெண்பா மாலையில் 'எதிர் ஊன்றல் காஞ்சி' என்றபடி, பகைவரை மதிலிடத்து எதிர்த்து நின்று போரிடும் திறனை விளக்கும் பகுதியாய் இக் காஞ்சி அமைகின்றது. அந்த எதிர்ப்புப் பணியில் வீரர் பலர் கலந்து தொண்டாற்றியிருப்பர்; பலர் பட்டிருப்பர். ஒரு வீரன் மனைவி, போரில் வீழ்ந்த தன் கணவனைத் தேடிக்கொண்டு வந்து, அவனுடன் கற்புக்கடம் பூண்டு கனைஎரி மூழ்க முன்னிற்பாள். அவள் கற்பு நிலையை வழியிடைச் செல்வோர் காணக்கூடும். கண்டவர் வாய்மூடி மௌனியராய்ச் செல்வரோ? அவர் அந்நிலைபற்றி ஏதேனும் சொல்லியிருப்பர். அவ்வாறு சொல்லும் நிலையை, 'ஆஞ்சிக் காஞ்சி' என்ற பெயரால் வழங்குகின்ருர் புலவர். அதன் விளக்கம்,

> "காதற் கணவனொடு கனையெரி மூழ்கும்
> மாதர் மெல்லியல் மலிபுரைத் தன்று"

என்று பேசப்படுகிறது. இவ்வாறு பல்பல பெயர்களில் பலப்பல பாடல்கள் அமைந்துள்ளமையை நம் தமிழ்க் கவிதைகள் விளக்கிக்கொண்டே செல்வதைக் காணலாம்.

'பாடாண் படலம்' என்றொரு பகுதி இந்நூலில் உண்டு. அதில் புலவர் பலவற்றை அரசரோடு சார்த்திப் பேசும் பகுதிகள் விளக்கப்படுகின்றன. அரசன் வாழ்வையும் வளத்தையும் புலவர்தம் கவிதைகள் பல்வேறு வகைகளில் போற்றியிருக்க வேண்டும். அவற்றையெல்லாம் ஒவ்வொரு பெயரால் தனித்தனியே பாகுபடுத்திக் காட்டியுள்ளார் ஆசிரியர். மன்னன் மணத்தைப் பாடுவது 'மண மங்கலம்' என்னும் பெயரை உடையது. மன்னனிடம் செல்லுமாறு பாணனுக்கு வழிகாட்டுவது 'பாணாற்றுப்படை' ஆகின்றது. மன்னனுக்கு அறிவுறுத்தும் பகுதி 'செவியறிவுறூஉ' ஆகின்றது. மன்னவன் நாடு செழிக்க மழை வளம் உண்டாகும் எனப் பாடுவது 'வெள்ளி நிலை'யாய் விளங்குகிறது. இப்படி எத்தனை எத்தனையோ வகைகளில் கவிதைகள் பொருள் நோக்கிப் பிரிக்கப்படுகின்றன. இப்பிரிவுகள் தொல்காப்பியப் புறத்திணையியலில் ஒருவாறு குறிக்கப்பட்டனவே எனினும், வெண்பா மாலை தனித்தனியாகக் கொண்டு அமைத்து, உதாரணப் பாட்டையும் காட்டி விளக்கும் வகையில் இலக்கணத்தையும் இலக்கியத்தையும் இயைத்துச் செல்லுகிறது.

புறப்பொருள்பற்றி மட்டுந்தான் இந்தப் பெயர்கள் என்று எண்ண வேண்டா. அகப்பொருள் பற்றிய பாடல்களிலும் இத்தகைய பிரிவுகள் உள்ளன. அகமும் புறமும் ஒன்றை ஒன்று பாடல் வகைகளில் ஒத்தே செல்கின்றன. திணையும் துறையும் இருவகைப் பாடல்களுக்கும் உள்ளன. தொல்காப்பியத்தே அகத்திணையியலிலும், களவியலிலும், கற்பியலிலும் இப்பிரிவுகள் பேசப்படுகின்றன. பிற்காலத்து எழுந்த 'கோவை' என்னும் பிரபந்தமே இத்துறைகள் அடிப்படையில் அமைந்த நூல்தானே? பாண்டிக்கோவையும், சிற்றம்பலக்கோவையும், பிற கோவைகளும் நாட்டில் நல்ல இலக்கியங்களாகப் போற்றப்படுகின்றன. அவை ஒரு

துறைக்கு ஒரு பாட்டு என அமைத்து, நானூற்றுக்கு மேற்பட்ட பாடல்களைப் பாடிக் கோவையாகக் கோத்து உருவாக்கப் பட்டனவல்லவோ? எனவே, இப்படி அகத்திலும் புறத்திலும் பாட்டின் பொருள்நிலை கருதி, அவற்றின் பெயர்களும் பலவாகப் பெருகிக் கொண்டே சென்றுள்ளன.

தொல்காப்பியர் காலத்துக்குப்பின் நாட்டில் பல்வேறு காவியங்கள் எழுந்தன. அவற்றையெல்லாம் உள்ளடக்கி அவற்றின் பிரிவுகளையெல்லாம் வரிசைப்படுத்தித்தான் போலும், புறப்பொருள் வெண்பா மாலை, அகப்பொருள் விளக்கம், இறையனார் அகப்பொருள் போன்ற நூல்கள் எழுந்தன என்று எண்ணமுண்டு. 'அவை இருக்கட்டும். அத் துறைப் பெயர்கள் அமைப்புக்கும் நம் கவிதையின் வகை நிலைக்கும் என்ன தொடர்பு?' என்று சிலர் கேட்கக் கூடும்: எண்ணின், தொடர்பு நன்கு விளங்காமற் போகாது. அதையும் காண்போம்.

தமிழ்நாட்டு இலக்கியங்களில் மிகத் தொன்மை வாய்ந்தவை சங்க இலக்கியங்களே. அவை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்ற இருவகையுள்ளே அடங்குவன. அப் பாடல்களைப் பயில்வார் அவற்றுள் காட்டப்பெறும் பொருள்களை நன்கு உணர்வர். அவை அகமும் புறமும் அமைந்த பொருள்களைக் காட்டும் பாடல்களேயாம். ஒன்று அகப்பொருள்பற்றி விளக்கும்; அன்றிப் புறப்பொருள் நலம் காட்டும். உலகப் பொருள்கள் அனைத்துமே தமிழன் அளவின்படி இவ்விரண்டில் அடங்கித்தானே ஆகவேண்டும்? எனவே தான், எல்லாக் கவிதைகளும் இவ்விரு பொருள்களைப்பற்றியே எழுகின்றன என்ற முடிவு காட்டப்படுகிறது.

சங்க இலக்கியங்களுள் சிறப்பாகப் பேசப்பெறும் எட்டுத்தொகை நூல்கள், புலவர் பற்பலரால் பல்வேறு காலங்களில் பாடப்பட்டனவாகும். காலத்தாலும், இடத்தாலும், பண்பாலும், வாழ்க்கை முறையாலும், பிறவற்றாலும் வேறுபட்ட பல நூறு புலவர்தம் பாடல்களே இத்தொகை

நூல்களாக அமைக்கப்பெற்றுள்ளன. எனினும், அத்துணை வேறுபாடுகளுக்கு இடையிலே அவை தழுவிச்செல்லும் அகம், புறம் என்ற இருவகைப் பொருள்களாலே பிணையப்பெற்றுப் பெருநூல்களாக அமைக்கப் பெற்றன. எட்டுத்தொகையில் புறநானூறும், பதிற்றுப்பத்தும் புறப்பொருள் பற்றிப் பேசுவன. மற்றைய ஆறு நூல்களாகிய நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு என்பன அகம் பற்றிப் பாடுவன. இவ்வாறு பிரித்தபின் அந்த நூல்கள் வழிச்சென்று பார்ப்பின், ஒவ்வொன்றிற்கும் திணையும் துறையும் குறித்திருக்கும். இன்னுரை இன்னர் பாடினர் என்றும், அப்பாட்டு இன்ன திணையில் இன்ன துறையில் பொருளை விளக்கும் பாட்டு என்றும், ஒவ்வொரு பாடல் இறுதியிலும் காண்கிறோம். ஒரு நூலின் பாடலில் இசையும் குறிப்பிடப் பெற்றுள்ளது. மற்றொன்றில், அப் பாடலின் சிறந்த தொடரால் அதன் பெயரைக் குறிப்பிட்டுள்ளதைக் காண்கின்றோம். எனவே, ஒவ்வொரு பாட்டும், திணையும் துறையும் பெற்றவை. இத்திணையும் துறையும் நாம் மேலே கண்டவைதாம். ஆகவே, இத்திணையும் துறையுமே தமிழ் இலக்கியத்தை வகைப்படுத்தி நமக்கு அளிக்கின்றன. அவ்விலக்கியங்களையும் அவற்றின் பொருள்களையும் இவ்விரண்டின் வழியே துய்த்து அனுபவிக்கின்றோம். ஆகவே. அவை இன்றேல், இலக்கிய இன்பமெங்கே? அவ்விலக்கியங்கள் நம்மை வாழ்விக்கும் வளமார்ந்த வாழ்க்கைக் கவிதைகள் தாமே!

யாபபிலக்கணம் பற்றி அமையும் கவிதைப் பிரிவுகளைக் கண்ட நாம், அணி இலக்கணம் பற்றி அவை பிரிக்கப் படுதலையும் ஓர் அளவு காணல் வேண்டும். அணி இலக்கணம் கவிதையைச் சிறப்பிக்கப் பயன்படும் ஒன்றாகும். கவிதையோடு கலந்து யாப்பிலக்கணம் போல வருவதன்றிக் கவிதையை வளம்படுத்தப் பயன்படுவதே அணியாகும். அணி என்ற சொல்லுக்கே 'அழகு' என்ற பொருள் உள்ளதை அறிவோம்! அவ்வணியிலக்கணம் காலத்தால் பல்கிப் பலவாக விரிவடைந்த

போதிலும், தொல்காப்பியத்திலே, 'உவம இயல்' என்ற ஒன்றில் உவம அணியைப் பற்றிய சிறப்பினை மாத்திரம் எடுத்துக் காட்டியுள்ளனர் அதன் ஆசிரியர். காலப்போக்கில் அழகுக் கழகு செய்யவும், அழகற்றவற்றை அழகுற்றன போன்று காட்டவும் பற்பல அணிகள் தோன்றலாயின. தண்டி அலங்காரமும், மாறன் அலங்காரமும் அவற்றை வரையறுத்து வைக்கும் இலக்கண நூல்களாய் அமைந்தன. எத்துணைப் பிரிவுகளாக இப் பிற்கால நூல்கள் அணியைப் பெருக்கிக் காட்டினும், அறிவுடையார் தொல்காப்பியர் கண்ட அந்த உவமை அணி ஒன்றிலே அனைத்தும் அடங்கியுள்ளதை நன்கு அறிவர். அவ் வுவமை அணியின் நலம் பற்றிப் பின்னர் ஓர் இடத்தில் காண இருக்கின்றமையின், அதை விடுத்து, அவ்வணி வகையின்பாற் பட்டு விரித்துரைக்கப்பட்ட சித்திர கவிகளை மட்டும் இங்கு நோக்குவோம்.

சித்திர கவிகள் என்னும் போது, நாட்டில் வழக்கத்திலுள்ள நால்வகைக் கவிஞருமே நம்முன் வந்து நிற்பர். ஆசு கவி எனவும், மதுர கவி எனவும், சித்திர கவி எனவும், வித்தார கவி எனவும் கவி வகையினையும், அவற்றின் மூலம் அக்கவிகளைப் பாடும் புலவர்களையும் பாகுபடுத்தியுள்ளனர் இடைக்காலப் புலவர். எனவே, கவிதை பொருளாலும், அளவாலும், அமைப்பாலும் வேறுபடுவதன்றி, பாட்டின் நடை முதலியவற் றாலும் இவ்வாறு நான்கு வகைப்படும் என்பதையும் அறிந்தால் தான், கவிதையின் வேறுபாடுகளை அறிந்தவர்களாக முடியும். முதலில் இங்குக் கண்ட சித்திரகவியின் பிரிவுகளையும் முறை களையும் கண்டு, மேல் பிறவற்றைக் காணலாம்.

அணி இலக்கணமாகிய தண்டியலங்காரத்திலும், மாற னலங்காரத்திலும் 'சொல்லணி இயல்' என்ற பிரிவு ஒன்று உண்டு. அதில் பாக்களில் வரும் சொற்களைக்கொண்டு அழகு நலத்தை விளக்கியுள்ளார்கள். அப் பாடல்களைப் பாம்பு, மத்தளம், முரசம், தாமரை, சக்கரம் ஆகிய அமைப்புகளுக்குள் அமைத்து, அடியும் பொருளும் கெடாதவகையிலே அழகாகப் பாடி விடுவார்கள். இவையே சித்திர கவி எனப் பெயர்

பெறும். சித்திரங்களின் உள்ளே எழுத்துக்களையும் சொற்களையும் அமைத்து, அவற்றின் வழியே பாட்டை உருவாக்கினமையின், அவை சித்திரகவி என்ப் பெயர் பெற்றன போலும்! அவை நாகபந்தம், முரசபந்தம், சக்கரபந்தம் முதலிய பல வகைப் பெயர்களைப் பெற்றுள்ளன. பாம்பின் வடிவில் அடைபடும் பாட்டு நாகபந்தம். முரசில் அடைபடும் பாட்டு முரசபந்தம். சக்கரத்தில் அடைபடும் பாட்டுச் சக்கரபந்தம். இவ்வாறு இன்னும் எத்தனையோ வகையில் சித்திர கவிகள் இடைக்காலத்தில் வளர்ந்துள்ளன. தொல்காப்பியர் காலத்திலோ, அதை ஒட்டிய சங்க காலங்களிலோ, இத்தகைய சித்திர கவிகள் இல்லை. அக் காலப் புலவர்கள் வெறுஞ் சொற்குள் அடங்கும் வெற்றுக் கோட்டைகளாகக் கவி புனையாது, பொருளாகிய உயிரைப் பெய்து உயிரோவியம் தீட்டினர்கள். எனவே, அவர்களது பொருள் நலத்தில் இத்தகைய சொற்களை வைத்தாலும் சித்திர கவிகள் இடம் பெறவில்லை. ஆனல், பிற்காலத்தில் சொல்லாடலே கவி என்னும் அளவுக்கு ஒரு கவிதைப் பண்பாடு நாட்டில் வளர்ந்து விட்டது. அக்காலத்தில் வந்தனவே இந்தச் சித்திரகவிகளும் இவற்றை ஒட்டிய பிற கவிதைகளும். ஆகையினலேதான் இவைபற்றிய விளக்கம் தொல்காப்பியத்தில் இல்லையாயினும், பின்னல் வந்த தண்டி அலங்காரம், மாறன் அலங்காரம் போன்றவை, இவற்றிற்கும் இலக்கணம் வகுக்கத் தொடங்கின. பொருளற்றவை நிலைபெற மாட்டா என்பது, இன்றைய உலகில் அவை விளக்கம் பெறுதிருப்பதிலிருந்தே நன்கு புலப்படும். எனினும், தமிழ்க்கவிதை வகையில் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் கவிகளும் நிலைத்த இடம் பெற்று விட்டமையால், அவற்றைப்பற்றி ஓரளவாவது நாம் அறிய வேண்டும் என்ற கடமைவழியே நம் கருத்திருத்தி மேலே செல்வோம்.

சித்திர கவியைப்பற்றி ஓரளவு அறிந்து கொண்டோம். இனி ஆசு, மதுர, வித்தார கவிகளைப் பற்றியும் அறிதல் அவசியம். ஆசுகவி யென்புான், பெரும்பாலும் வரகவி என

வும் பெயர் பெறுவான். ஏனெனில், அவன் வரம் பெற்றவன் போல, எந்தப் பொருளைப்பற்றி, எந்தக் காலத்தில் பாடச் சொன்னாலும், எந்த வகைப் பாட்டானாலும், தங்கு தடையின்றி, எடுத்துத் தொடுத்து முடிக்கும் ஆற்றல் பெற்றவன் ஆவன். அவன் தங்கு தடையின்றிப் 'பாடுவதைக் கேட்போர் அதிசயித்து, 'இவன் கவி பாடவே வரம் பெற்று வந்தானோ!' என்று எண்ணுவர். அவ்வாறு தமிழ் நாட்டில் புலவர் பலர் வாழ்ந்துள்ளனர். அவர்களுள் சிறப்பாகக் கவி காளமேகத்தை ஆசு கவி என்று தமிழ் நாட்டினர் புகழ்ந்துள்ளனர். 'ஆசு கவியால் அகில உலகமெல்லாம் வீசு புகழ்க் காளமேகமே!' என்று, அவரை ஒரு புலவர் புகழ்ந்ததாகப் பாடல் உண்டு. அவர் அப்படித்தான் 'இம்மென்னு முன்னே இருநூறும் முந்நூறும், அம்மென்றால் ஆயிரம் பாட்டும் பாடும் இயல்புடையவர்' என்று தம்மைத்தானே கூறிக் கொள்ளுகின்றார். அவர் தம் ஆசு கவித் திறனுக்கு எத்தனையோ பாட்டுக்களை எடுத்துக் காட்டுவார்கள். அப் பாடல்கள் சுவையும் சிலேடையும் நிறைந்துள்ளனவாக இருக்கும். ஒன்று கண்டு மேலே செல்லலாம்.

ஒருகால் காளமேகம் திருவண்ணாமலைக்குச் சென்றாராம். அங்கு வாழ்ந்த சம்பந்தாண்டார் என்பார் சற்றுத் தற்பெருமை கொண்டவர் போலும்! காளமேகத்தின் ஆசுகவித் திறனைக் கேட்டு, தம்மைப்பற்றியும் ஒருபாடல் பாடச் செய்யவேண்டும் என்று அவர் நினைத்தார். அவர் தெருவழியே காளமேகப் புலவர் சென்றாராம். அப்போது அச் சம்பந்தாண்டாருக்கு அம்பட்டர் சௌளம் செய்து கொண்டிருந்தாராம். சம்பந்தாண்டார் காளமேகத்தைக் கண்டதும், அவரை அழைத்துத் தாம் சௌளம் செய்து கொள்வதைப்பற்றிப் பாடச் சொன்னாராம். 'மன்' என்று தொடங்கி; 'மனுக்கு' என்று அந்த வெண்பா முடிய வேண்டும் என்பது நிபந்தனை. காளமேகப் புலவர் அதைச் சட்டை செய்யாது சென்று இருக்கலாம். அவ்வாறு சென்றால், அது அவர் பாட முடியாத தன்மையைக் காட்டுகிறது என யாரும் எண்ணிக்கொள்ள மாட்டார். எனினும், கர்வம் பிடித்த சம்பந்தாண்டாருக்குப்

பாடம் கற்பிக்க வேண்டியும், தமது ஆசு கவித்திறனை அறிய வாய்ப்பளித்தும், அவர் சொன்ன முதலும் ஈறும் மாறாத வகையில், கொண்ட பொருளும் பொருந்தும் முறையில் வெண்பாவினைப் பாடினார்.

'மன்னும் அருணகிரி வாழ்சம்பந் தாண்டாற்குப்
பன்னு தலைச்சௌளம் பண்ணுவதேன்?—மின்னின்
இளைத்தஇடை மாதர் இவன்குடுமி பற்றி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு."

என்ற பாடலே அது. இப்பாடல் 'மன்' என்று தொடங்கி 'மலுக்கு' என முடிகின்றது. அவருடைய செயலையும் இதில் காணலாம். எனினும், பாட்டிலே அவர் கர்வம் அடங்கும் வகையில், அவர் சிகை நீக்கப் பெறுவது, மகளிர் அவர் தலை மயிரைப் பற்றி இழுத்துக் குட்டாமலிருப்பதற்கே என்று கூறி யிருப்பது அவரை வெட்கப்படச் செய்திருக்குமன்றோ! எப்படியோ அவர் கர்வத்தை அடக்கினதோடு, காளமேகம் தாம் ஆசு கவி என்பதையும் நிலைநாட்டிக் கொண்டார். இது போன்று எத்தனையோ இடங்களில் காளமேகத்தின் ஆசு கவித் தன்மை புலப்பட்டிருக்கின்றது.

காளமேகம் மட்டுமன்றி, இன்னும் எத்தனையோ புலவர்கள் அன்றுதொட்டு இன்று வரையில் தமிழ் நாட்டில் ஆசு கவிகளாக வாழ்ந்திருக்கின்றார்கள். அவர்கள் தங்கள் கவி நலத்தை யெல்லாம் விழலுக்கிறைத்த நீராக்கி, பயன் பெறாதபடி செய்து விட்டார்கள் எனலாம். அவர்கள் தங்கள் திறனைப் பற்றித் தருக்கி, சொல்லுவார் சொல்லுகிறபடியெல்லாம் தனிப் பாடல் களைப் பாடி, தமிழ் நாட்டுக்கு என்றென்றும் பயன்படக்கூடிய இலக்கியத் துறையில் கருத்து வையாது, ஏதோ வேடிக்கை யாகக் காலம் கழித்துவிட்டார்கள் என்பதுதான் பொருந்தும். கவி பாடுவது மேலே நாம் கண்டது போன்று பெரிதும் இயல் பாக அமையும் பண்புதான். அப் பண்பு சிறக்கும் காலத்து, இது போன்று ஆசு கவிகள் பாட அவர்களுக்கு வாய்ப்பு வரலாம். பாவம்! அந்த வாய்ப்பினை நல்ல முறையில் வாழ்வுக்

கவிதைகளைப் பாடப் பயன்படுத்தாமல், வெற்றுப் பாடல்கள் பாடி வீணே மறைந்தனர் புலவர் பலர். அவர்கள் பாடிய தனிப் பாடல்கள் சில இக் காலத்திலும் தமிழ் நாட்டில் ஓரளவு வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. எனினும், கவிதைப் பண்பாட்டு நிலையில் அவை அத்துணைச் சிறந்தனவாய் நின்று அறிஞர் பெருமக்களால் போற்றப்படாது ஒதுக்கப்பட்டன என்றுதான் கூறவேண்டும். எப்படியாயினும், நால்வகைக் கவிகளுள் முதலிடம் பெறும் இவ்வாசுகவிகள் தமிழ்க் கவிதைச் சோலையில் காப்பாற்றப்பட வேண்டிய மரங்களேயாம்!

இனி, மதுர கவி என்பான், இனிமை நலம் தோன்றப் பாடுபவன் என்பர். மதுரம் என்ற சொல்லுக்கே இனிமை என்ற பொருள் உண்டு. அது கொண்டே இனிமையாகப் பாடுபவன் எனக் கொள்ளலாம். எனினும், 'கவிகளென்றாலே இனிமை பொருந்தியனவாகத்தானே இருக்க வேண்டும்? மதுரகவி என்று தனியாகப் பிரிந்தமையினாலே, மற்றைய ஆசு சித்திர, வித்தார கவிகள் இனிமையற்றனவாகவும் இருக்க லாமோ!' என்ற ஐயம் எழுதல் இயல்பே! ஆயினும், ஆய்ந்து பார்ப்பின், அந்த முடிவு கொள்ள இயலாது. இனிமை அற்றன கவிதை என்னும் பெயருக்கே தகுதியற்றுக் கழிந்து ஒழிந்து மறைந்தவையல்லவோ!

வைணவ சமயத்திலே சிறந்த அடியவர்களாகிய பன்னிரு ஆழ்வாருள்ளே மதுரகவி ஆழ்வாரும் ஒருவர். அவர் மதுரகவி ஆழ்வார் என்றால், மற்றப் பதினோர் ஆழ்வாரும் மதுரமற்ற வெற்றுப் பாடல்களையா இறைவனை நோக்கிப் பாடினார்கள்? அவர்தம் வெற்றுப் பாடலுக்கா அவ்விறைவனும் இரங்கி அருள் புரிந்தான்? மற்றவர் ஒருவேளை அறியாது ஆமென்று சொல்லலாம். ஆனால், வைணவர்கள் அவ்வாறு சொல்வார் களோ? உண்மையில் அனைவர் கவிதைகளும் அழகும் மதுரமும் பொருந்தியவைதாமே? 'கோதை தமிழ்' என்றே சிறப்புப் பெயர் பெறும் ஆண்டாள் பாடல்கள், மதுரப் பாடல்கள் அல்லவோ? புளியமரத்தின் கீழ் இருந்து, அருள் ஞானம் பெற்ற நம்மாழ் வாரின் திருவாய் மொழிகள் மதுரம் கனிந்தன அல்லவோ?

இல்லையென்று யாரால் சொல்ல முடியும்? கவிகள் அனைத்துமே மதுரம் பொருந்தியவையாகத்தான் இருக்க வேண்டும். எனினும், பிற கவிதைகளுக்கும், இம்மதுர கவிகளின் கவிதைகளுக்கும் என்னதான் வேறுபாடு? மற்றவர் பாடல்கள் அளவில் குறுகியோ விரிந்தோ எடுத்த பொருளை விளக்கிச் செல்லும் முகத்தான் அமைந்து, வேடிக்கையும் சிலேடையும் பிற அணிகளும் இடையிடை விரவியனவாக இருக்கும் போலும்! அவை காட்ட விரும்பிய பொருள்களையே கருத்துட் கொண்டு, கவிதையாகச் செல்லும். மதுர கவிகளோ, இனிமைப் பொருளை மட்டும் காட்டும் ஒன்றாக மட்டும் அமைந்து இருக்கலாமோ என எண்ண இடம் உண்டு. வேடிக்கையும் விநோதமும் பொருந்திய பல பாடல்களை இன்றும் நாம் காண்கின்றோம். பொருள் செறிவு ஒன்றுமின்றி, சொல்லழகும் செறிந்து நிற்காவிட்டாலும், சில பாடல்கள் கல்லாதார் உள்ளத்தையும் பிணிப்பதைக் காண்கின்றோம். படக் காட்சியில் வரும் எத்தனையோ பாடல்கள், 'இவையும் பாடலா?' என்று அருவருக்கத் தக்க வகையில் அமைகின்றன. எனினும், அவற்றுள் ஒருசில, கேட்கும் மக்கள் அனைவர் உள்ளத்திலும் பதிந்து, அவர்களை எப்போதும் தம்மையே முணுமுணுக்கச் செய்துவிடுகின்றன. 'டடடா டடடா' என்ற சினிமாப் பாட்டும், 'நாடகமே உலகம்' என்ற இன்னிசைப் பாட்டும் இன்னும் எத்தனையோ தோன்றிய அவ்வக்காலங்களில் தமிழ் நாட்டு உதடுகளை வென்று, அவற்றின்மேல் ஆணை செலுத்திய திறனை அறியாதார் யார்? ஆனாலும், அவற்றைப் பாட்டுக்கள் என்றோ கவிதை என்றோ கற்றோர் கொள்ளமாட்டார். இவ்வாறு பலருக்கு இனிமை பயப்பது போன்று அமையும் பாடல்களை மதுரகவி எனக் கொள்ளலாமா? 'கொள்ளலாம்' என்பர் பலர். என்றாலும், இவ்வாறான பாடல்களைக் கவிதை வகையுள் சேர்த்து, நாற்பெருங் கவிகளுள் ஒரு வகையாகக் கொள்ளப் புலவர் உலகம் எவ்வாறு ஏற்றுக்கொள்ளும்? இதன் நிலை அறிஞர் ஆராயவேண்டுவது ஒன்றேயாகும்.

நாம் மேலே கவிதை என்னும் பெயருக்கு ஏற்ற இலக்கணம் கண்ட வகையில் இவைகளும் ஒரு கவிதை இனத்தையே சாரும்.

ஆங்கிலத்திலே ஒரு பேரறிஞர் 'அறிவற்ற கவிதைகள்' என்றே ஒரு நூல் எழுதியிருக்கிறார். அதில் இக் கவிதைத் தொகுதியைப்பற்றி அவர் நன்கு விளக்குகின்றார். உயர்ந்த கவிதைகளாகிய பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் பரவி வாழும் இந் நாட்டிலும், அவர் அந்த நாட்டில் காணும் பல பயனற்ற கவிதைகள் என்று காட்டி வகைப்படுத்தும் கவிதைகளும் வாழ்ந்துதான் வந்துள்ளன. அக் கவிதை வரிசையில் அவர் நாம் மேலே கண்ட சினிமாப் பாடல்கள் போன்றவற்றையும், நாடோடிப் பாடல்களையும் சேர்த்துள்ளார். இன்னும் நிந்தைப் பாடல்களாகவும், பழிப்பது போலப் புகழ்தலும், புகழ்வது போலப் பழித்தலும் முதலாய பாடல்களும் இத் தொகுதியில் சேர்க்கப்படவேண்டுவனவே எனக் காட்டுகின்றார். பூதக் கதைகள், விலங்குக் கதைகள் பற்றிய பாடல்களும் இவ்வகையினவே. இன்னும் நம் நாட்டில் வழங்கும் தேசிங்குராஜன் கதை, அல்லி அரசாணி மாலை போன்ற பாடல்களும் இந்தப் பிரிவில் அடங்கும் போலும்!

கிராமியப் பாடல்களும் கிழவிப் பாடல்களும், ஜாதகக் கதைகளைப் பற்றிய பாடல்களும், குழந்தைப் பாடல்களும், பொருளே அறிய முடியாத வெற்றொலிப் பாடல்களும், பிறவும் இவ் வினத்தில் சேர்ந்தனவே எனக் காட்டுகின்றார் அவர். இப் பாடல்களையெல்லாம், கவிஞர் உலகம் ஒருவேளை பாடல்கள் அல்ல என்று தள்ளிவிடலாம். எனினும், உலக மக்களுள் பெரும்பாலார், இவற்றைத் தம்மை மறந்து பாடும் கருத்தென்ன்? சினிமாப் பாடல்களுள், இவ்வாறு வரையறையற்ற கவிதைப் பண்புக்கு அப்பாற்பட்டதாகக் கொள்ளப்படும் பாடல் ஒன்றுக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொகை கொடுத்துப் பாடவைத்துத் தம் படத்தில் சேர்க்க முதலாளிகள் முன் வருவானேன்? ஆம்! அடிப்படை ஒன்றேதான். இக் கவிதைகள் இலக்கண வரம்பின் எல்லையில் இல்லையாயினும், இவை மக்கள் உள்ளங்களைத் தொடுவன. அவை தாமே உண்மைக் கவிதைகளாக முடியும் என்று மேலே கண்டோம்? எனவே, இவ்வாறு வேடிக்கை கலந்த, ஆனால் மதுரம் செறிந்த

பாடல்களை மதுரகவி என்று கொண்டார்களோ என எண்ணவும் கூடும்.

இத்தகைய வேடிக்கைப் பாடல் பாடுவதற்கும் அறிவு தேவை. அதை யார் வேண்டுமானாலும் பாடிவிடலாம் என்று நினைப்பதும் தவறு என்று ஆசிரியர் எமிலி(Emlie) தம் நூலில் சுட்டிக்காட்டியிருக்கிறார். தம் சொல்லோ, கருத்தோ, பாட்டோ, பிறவோ மற்றவர் விரும்பி ஏற்க வேண்டுமாயின், அவ்விருப்பத்தைத் தூண்டக்கூடிய ஆற்றல் ஒருவரிடம் அமைவது எளிதன்று. அதிலும், பொது மக்களின் பாடல் என்று சொல்லத்தக்க வகையில். கேட்போர் உள்ளத்தையும் உதட்டையும் பிணிக்கும் வகையில், பாடுவது எளிதன்றே! தந்தனப் பாட்டு' என்று சாதாரணமாக அப்பாடல்களை அறிவுடையார் பேசினாலும், அவை பலரைத் தம் வசப்படுத்து வானேன்? அறிஞர்கள் இதுபோன்ற கவிதைகளைக் கள்ளுக்கு ஒப்பாகக் கூறுவார்கள். கள்ளானது உண்ட நிலையில் சிறிது போது போதை தந்து, உண்டவனைத் தன்னை மறந்த நிலையில் வைத்திருப்பது போன்று, இத்தகைய கவிதைகளும் கேட்பவரைத் தம் வசப்படுத்திச் சில காலமாவது தம்மைப் பற்றி முணுமுணுக்க வைக்கவில்லையா! ஆம். அதனால் பெறும் இன்பம், சிறிதளவே அமைந்ததாயினும், அதுவும் இன்பந் தானே? அந்த இன்பத்தை வாரி வழங்கும் பாடலைக் கவிதை என்னாதிருக்க முடியுங்கொல்?

இவ்வாறு பொருள்நலம் நோக்காது, இனிமை ஒன்றையே நோக்கி நிற்கும் கவிதைகளையோ, அன்றிக் கவிதைக்குரிய நாம் மேலே கண்ட அத்துணை இலக்கண வரம்பினையும் கொள்ளாது, இனிமை பயக்கும் வகையிலே அமைந்த பாடல்களையோதான் மதுரகவி என்று கொண்டார்கள் எனக்கொள்வர் ஒரு சாரார். எத்தனையோ நல்ல புலவர்தம் பாடல்கள் 'இலக்கண வரம்பற்றன; ஆகவே, இவை கவிதைகள் ஆகா,' என்று கற்றறி புலவர்களால் ஒதுக்கப்பட்டதை அறிவோம். அண்மையில் வாழ்ந்து கவிதைப் பெருக்கிலேயே தோய்ந்து திளைத்துக் கவிச்சக்கரவர்த்தி எனவும் போற்றப்பட்ட

பாரதியாரின் பாடல்களை 'வழுவுடையன; ஏற்றுக்கொள்ளத் தக்கன அல்ல' என்று பேசிய மக்கள் இன்றும் வாழ்ந்துதான் வருகின்றார்கள். ஆனால், இன்று அப் பாரதியார் சாகாவரம் பெற்ற அமரகவியாகி விட்டார். அவர் பாடலில் இலக்கண வரம்புகள் சில இல்லாமலும் இருக்கலாம். எனினும், அவர் பாடல்கள் கவிதை உலகிலே சிறந்த இடம் பெற்றுள்ளதை மறுப்பார் யார்?

இத்தகைய நாட்டுப் பாடல்களையும், கிராமியப் பாடல்களையும் ஒதுக்கலாகாது என்று அன்றுமுதல் பலர் அறிவுறுத்தியுள்ளனர். இடைக்காலத்தில் கவிச்சக்கரவர்த்தியாராய் வாழ்ந்த கம்பர் இவ்வாறு ஒரு கிராமத்தானிடம் அகப்பட்டு அவன் பாட்டின் நிலையறியாது நின்ற கதை நாட்டுக்குப் புதியதன்றே? 'ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப்பாட்டு உண்டோ?' என்று இன்று உலக அரங்கேறியுள்ள அழகிய இராமாயணத்தைப் பாடிய அக் கம்பரே வியந்த பாடல் எந்த வரிசையில் வைத்து எண்ணத்தக்கது? 'மூங்கில் இலை மேலே' என்ற ஏற்றப்பாட்டின் முடிவு காணாது திகைத்துப் பின் அந்த ஏற்றக்காரனே, 'தூங்கும் பனி நீரே' என்று முடித்த பிறகுதான், அப்பாடலும் கவிதை என்ற உணர்வு அவர் உள்ளத்தே பிறந்தது. ஆகவே, சாதாரணப் பாடல்களாயினும், மக்கள் உள்ளம் கொள்ளும் வகையில் அமைந்தனவெல்லாம் மதுரப்பாடல்களே. அந்த வகையிலேதான் இந்த மதுரகவி என்ற பிரிவு அமைந்தது என்று திட்டமாக நான் கூற முன் வரவில்லை. அதுபற்றி அறிஞர் முடிவு கூறட்டும். எப்படியாயினும், இனிமையான கவிதைகளை 'மதுரகவி' என ஒரு பிரிவாகப் பிரித்து, இடைக்காலத்தில் தமிழ்க் கவிதைகளை நான்கு பெரும் பிரிவுகளாக்கியுள்ளனர் என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாகும்.

மதுர கவியைப் பற்றிய ஆய்வை இந்த அளவோடு நிறுத்தி, அடுத்ததற்கு வருவோம். அடுத்துள்ள சித்திர கவி பற்றி முன்னமே பார்த்துவிட்டோம். எனவே, இன்னும் அறிய வேண்டிய கவி வித்தாரம் ஒன்றே. வித்தாரம் என்பது, வடமொழியாம் 'விஸ்தாரம்' என்பதன் திரிபேயாகும்.

விஸ்தாரம் என்ற சொல் விளக்கமாக அல்லது விரிவாக அமைவதைக் குறிக்கும். 'விஸ்தரித்துப் பேசு' என்றால், 'நான் விளங்குமாறு பலவாக எடுத்துக் காட்டு'' என்பதுதானே பொருள்?' எனவே, இவ் வித்தார கவிகளும் மற்றவரைக் காட்டிலும் விளக்கமாகப் பாடப்படுவன என்பது புலனு கின்றது. ஆசுகவி, அவசரத்தில் எடுத்த பொருள்பற்றி ஒரு வெண்பாவோ வேறோ பாடி முடித்து விடுவான். மதுரகவி, இனிய நல்ல உளம் தொடும் பாடல்களையே பாடுவான் போலும்! சித்திர கவியும் ஒரு சித்திரத்துக்குள் அடங்கும் வகையிலே, ஒரு பாட்டைப் பாடி முடிப்பவன் தானே? ஆனால், வித்தாரகவியோ, எடுத்த பொருளை விளக்கும் வகையில் எத்தனை பாட்டுக்கள் வேண்டுமானாலும் பாடுவான். புலவன் உள்ளமும் கைக்கொண்ட கோலுமே அவன் பாட்டின் எல்லையை வரையறுக்கத் தக்கவாறு அமைவனவாகும். 'கடல் மடை திறந்தால் ஒத்த' என்று ஓர் உவமை சொல்வதுண்டு. அவ்வுமையைப் போன்று எல்லையில்லாது ஆயிரக் கணக்கிலே பாடல் பாடுபவன் வித்தார கவியாவன். இந்த இலக்கணப்படி நம் நாட்டில் காவியம் இயற்றியுள்ள அத்தனை பேரும் வித்தார கவிகளே அவர்தம் காவியங்கள் அத்தனையும் வித்தார கவிதை களேயாம்.

இந்த வித்தார கவிதையைத் தமிழில் 'அகலக்கவி என்றும் சொல்லுவர். அகலம் என்பதும் விரிந்து பரந்த ஒரு பொருளைத்தானே தருகின்றது? எனவே, பரந்த காவியங்கள் வித்தார கவிகளாகும். பாட்டியல் என்னும் நூலானது இவ்வித்தார கவிக்கு இலக்கணம் கூறுகின்றது. இதன்படி இவ்வித்தார கவி இரண்டு வகைப்படுகின்றது. ஒன்று, ஒரு வகைப் பாவே தொடர்ச்சியாக அமைய ஏதாவது ஒரு பொருள் பற்றியோ வரலாறு' பற்றியோ பலப்பல அடிகள் பாடிக் காவியத்தை முடிப்பது; மற்றொன்று, பல வகைப் பாடல்கள் சேர்ந்து, பொருள் பற்றியோ, வேறுவகையிலோ பலப்பல பாடல்களால்' ஆக்கிக் காவியத்தை முடிப்பது. முன்னதற்குச் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியன 'சான்றாகும்.

ஆசிரியப்பா என்ற ஒரே செய்யுளிலே எடுத்த காவியத்தைப் பலவாறு பெருக்கிக்கொண்டு சென்று முடித்துள்ளார்கள் ஆசிரியர்கள். பின்னதற்குச் சங்ககாலப் பாட்டும், பிற்காலக் காவியங்களாகிய சிந்தாமணி, கம்பராமாயணம் ஆகியவையும் உதாரணங்களாக அமையும். இவை பொருள் பற்றியும் வரலாறு பற்றியும் பல்வேறு வகைப்பட்ட பாடல்களைக் கொண்டு முடியும் கவிதைத் தொகுதிகள் தாமே? எனவே, இவ்வாறு விரிந்த நிலையில் விளக்க வரும் பொருளையோ கதையையோ காட்டும் கவிதைகளைப் பாடுவோர் வித்தார கவிகளாவர். அக் கவிதைத் தொகுதிகளே வித்தார கவிகளாம்.

கவிதையை எத்தனையோ கோணங்களிலிருந்து பாகு படுத்திப் பார்த்தோம். அதன் விரிவு எல்லையற்று வளர்ந்து கொண்டேதான் செல்கின்றது. நாம் மேலே கண்டபடி, சங்க காலத்தில் இருந்த நிலையைக் காட்டிலும் பிற்காலத்தில் கவிதை விரிவடைந்து விட்டது. கவிதை விரிவடைய விரி வடையக் காப்பியங்களும் நாட்டில் பெருகலாயின. எனவே அக் காப்பியங்களுக்கும் இலக்கணம் கண்டாக வேண்டிய ஒரு நிலை இலக்கணப் புலவர்களுக்கு ஏற்பட்டது. தண்டி யலங்காரத்திலே ஆசிரியர் காப்பியத்துக்கே இலக்கணம் கற்பித்து விட்டார். அவர்மேல் தவறில்லை. இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயல்புதல்தானே மரபும் முறையும்? அந்த வகையில் அக்காலத்தில் நாட்டில் நடமாடிய இலக்கியங்களை—காப்பியங்களை—கவிதைத் தொகுதிகளை வைத்துக்கொண்டு காப்பியங்களுக்கு இலக்கணம் வரைந்தது வரலாற்றுக்கு ஏற்ற ஒன்றே யாகும்.

காப்பியத்தைப் பெருங்காப்பியம், காப்பியம் என இரண் டாகப் பிரித்தார் ஆசிரியர்; 'பெருங்காப்பிய நிலை பேசுங்காலை' என்று ஒரு பெரிய சூத்திரத்தையே பீடிகையுடன் பெருங் காப்பியத்துக்கு இலக்கண வரம்பாக அமைத்து விட்டார். அதிலே என்னென்ன வகையான பொருள்கள் இடம்பெற வேண்டும்? அவை எந்தெந்த வகையில் பாடப்பெற வேண்டும்? அக் காப்பியத்தைப் படிப்பதால் உண்டாகும் பயன் என்ன?

அவற்றில் அமையும் சிறப்பு உறுப்புக்கள் யாவை? அவற்றின் அமைப்பு யாது? இவற்றையெல்லாம் தொகுத்து விளக்கி இன்ன வகையில் அமைவதே பெருங்காப்பியம் என்றார்கள். நம் நாட்டில் உள்ள சிந்தாமணி, கம்பராமாயணம் போன்றவை களைத்தான் அவர்கள் மேல்வரிச் சட்டமாக வைத்துக் கொண்டிருக்க வேண்டும். ஏனெனில், அவை செல்லும் போக்கையும் வகையையும் ஒட்டித்தான் இலக்கண வரம்பு அமைந்துள்ளது. அமைந்த அந்த இலக்கண வரம்பின்வழிப் பின்னுளில் பலர் பல காப்பியங்களைப் பாடி இருக்கலாம். அவற்றுள் பெரும்பாலன நாட்டில் நடமாடாத இலக்கியங் களாகவே சென்றன என்னலாம். இந்தப் பெருங்காப்பியத்தின் இலக்கணம் கண்ட ஆசிரியர், இதற்குரிய இலக்கணங்கள் சில குறைபட்டு வருவனவற்றைக் காப்பியம் எனக்கொண்டனர். இவ்வாறு பிற்காலத்து இந்த வகையில் இலக்கணங்களெல்லாம் பெருகிவிட்டன.

கவிதைகளை இத்துணை வகைகளாகக் காண்பதன்றி, இன்னும் எத்தனையோ பிரிவுகளில் பர்குபடுத்தி விட்டார்கள். பாடுவோர் உள்ள எழுச்சிக்கு ஏற்பக் கவிதை பல்வேறு பெயர்களோடு பல்வேறு வகையில் உருப் பெற்றுள்ளது. பாட்டியல் என்ற ஒரு நூலைப்பற்றி மேலே கண்டோம். அது ஒருவாறு தமிழ் நாட்டில் உள்ள கவிதைத் தொகுதிகளை யெல்லாம் வரையறுக்கின்றது எனலாம். ஆனல், இந்தக் காலத்தில் வரையறுக்க ஒரு பாட்டியல் யாராவது எழுதுவா ராயின், அது பழையதினும் பன்மடங்கு விரிவடையும் என்பது திண்ணம். ஆம்! விரிவடையட்டும். மொழி வளர்ச்சி அதில் தானே அமைந்துள்ளது? ஆனல் விரிவடையும் அத்துணை வகைக் கவிதைகளும் உயிர் வாழ்க்கைக்கு எந்த வகையில் உதவுகின்றன என்பதை எண்ணும்போதுதான், "ஏன் இத்தனை பிரிவு?" என்று சிந்தை தடுமாறுகின்றது: அது பற்றிப் பின்னர் ஓரிடத்தில் காண்போம். எனவே, இங்கு அதைப்பற்றி ஆய்வதை விட்டுவிட்டு மேலே செல்லலாம்.

தமிழ் நாட்டில் சங்க காலத்துக்குப் பிறகு எத்தனையோ படையெடுப்புக்கள் நடந்துள்ளன. சங்க காலத்துக்கு முன்னரே வடமொழியாளரும் பிறரும் தமிழ் நாட்டில் கலந்து வாழ்வாராயினர். பின்னர், எத்தனை எத்தனையோ வகையான இனத்தாரும், மொழி பேசுவாரும், வாழ்க்கை நெறி வகுப்பாரும் இந்நாட்டில் இடம் பெறலாயினர். அவரவர் கூட்டுறவு காரணமாக அவர்தம் மொழியும், கலையும், கலாசாரமும் கலக்க ஆரம்பித்ததில் வியப்பில்லையன்றோ! கலைத்துறையில் பிறமொழிகளைக் காட்டிலும் வடமொழியே தமிழுடன் அதிகமாக உறவு கொள்ள ஆரம்பித்தது. அந்த உறவின் வழியே, பல வடமொழிக் காப்பியங்களும், கவிதைகளும், வரலாறுகளும் தமிழில் இடம் பெறலாயின. அதை ஒட்டிப் பல பிரபந்தங்கள் தமிழில் எழலாயின. தமிழில் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் உண்டு என வரையறுக்கிறது பாட்டியல். அவற்றுள் பெரும்பாலான காலத்தாற் பிந்தியனவே. ஆற்றுப்படையும், அறிவுறுத்தலும் சங்க காலத்தில் காண்கிறோம். ஆனால், கோவையும், அந்தாதியும், கலம்பகமும், பிள்ளைத்தமிழும், இரட்டை மணி மாலையும், மும்மணிக் கோவையும், இவைபோன்ற இன்னும் பலவும் இடைக் காலத்தில் நாட்டில் எழுந்தன. இவ்வாறு நாட்டில் வளர்ந்த இடைக்கால இலக்கியங்கள் பெரும்பாலும் சமயங்கள் பற்றியே எழுந்தன எனலாம்.

தமிழ்நாட்டு வரலாற்றின் இடைக்காலத்தே எத்தனையோ சமயப் போர்கள் தமிழ்நாட்டில் நடைபெற்றுள்ளன. சங்க காலச் சமயநெறியை வெல்லச் சமணமும் பௌத்தமும் போட்டியிட்டன. பௌத்தத்தை வென்று சமணம் வாழ்ந்தது. பின் சைவமும் வைணவமும் தழைத்தன. இப்படி ஒன்றை ஒன்று வென்று தத்தம் கொள்கையை நிலைநாட்டிக் கொள்ளச் சமயங்கள் பாடுபட்டன. அக்காலங்களிலெல்லாம் பொது மக்கள் மனநிலையை அறிந்து அவர்கள் மனங்களைத் தத்தம் பக்கல் இழுக்கப் பலப்பல பாடல்கள் தேவையாய் இருந்தன போலும்! இன்று நம் அரசாங்கத்தார் தம் ஆட்சி திறனை

விளக்கும் வகையில் நல்ல பாடல்களும், கதைகளும்; நாடகங்களும் வரவேண்டுமென்று முயல்வதை நாம் பார்த்திருக்கின்றோமே! அதைப் போன்றே அன்றும் பாடல் வழி மக்கள் மனத்தைத் தம் பக்கல் ஈர்க்க எண்ணினர் சமய வாதியர். சமணன் ஒரு பிள்ளைத்தமிழ் இயற்றினால், சைவன் நான்கு பிள்ளைத்தமிழ் இயற்றினான்; அவன் ஒரு கலம்பகம் செய்தால், இவன் மேலும் மூன்று கலம்பகங்கள் செய்தான். இப்படியே எண்ணற்ற சிற்றிலக்கியங்களாகிய கவிதைத் தொகுதிகள் நாட்டில் உலவலாயின. கவிதை வளர்ச்சிநிலை கண்டு ஓரளவு மனத்தில் மகிழ்ச்சி பிறந்தபோதிலும், அவை சமயக் காழ்ப்பை நாட்டில் விளைவிக்க வழியாய் இருந்தமையின் வருந்தவும் நேர்கின்றது.

சமய வேறுபாடுகளாலே பல சிற்றிலக்கியங்கள் தோன்றுகின்றன என்றாலுங்கூட, அத்துணை இலக்கியங்களும் சமயப் பூசல் நடைபெற்ற அந்த இடைக்காலத்திலேதான் உண்டாயின என்று சொல்வதற்கில்லை. பதினான்காம் நூற்றாண்டிற்குப் பிறகும், சென்ற நூற்றாண்டிலுங்கூடப் பலப்பல சிற்றிலக்கியங்கள் தோன்றியுள்ளன. ஆகவே, சமயப் பூசல் ஓரளவு காரணமாயினும், பெரும்பான்மையான காப்பியங்கள் உண்டானதற்குக் கால மாறுபாடே காரணம் என்று கொள்வது பொருத்தமானதாகும். இன்று சைவ வைணவ, பௌத்த சமணக் காப்பியங்களோடு மகமதிய கிறித்தவக் காப்பியங்களும் தமிழ் நாட்டில் உள்ளன. இன்று தமிழ் இலக்கியங்கள் என்று கொள்ளக் கூடியவற்றைக் கணக்கிட்டுப் பார்த்தால் அவற்றுள் பெரும்பாலான சமயச் சார்புடையனவாகவே அமைதல் கூடும்.

இத்தகைய காப்பியங்களைத் தவிர, கவிதைத் தொகுதி வேறு வகையாலும் விரிவடைகின்றது. அதுவே அறநூற்றொகுதி. அறமுரைத்த வள்ளுவர் வாய்மொழியாம் தெள்ளிய குறள் தொடங்கி, இன்றைய பாரதியாரின் ஆத்திசூடி வரையில், எத்தனை எத்தனையோ அறம் விளக்கும் கவிதைகள் நாட்டில் உள்ளன! குறளொடு இணைந்த

நூல்களைப் பதினெண் கீழ்க்கணக்கு என்றனர் புலவர். அவற்றின் விரிவையெல்லாம் பின்னே காணலாம்.

தமிழ்க் கவிதைகளின் தோற்றத்தின் காலத்தை இன்னதென அறிய முடியாவிடினும், இன்று அது கடலினும் பரந்து நிற்பதைக் காண்கின்றோம். தமிழன் தொன்மையைக் கடந்தது தமிழ்க் கவிதை. அந்தப் பழமைக்குப் பழமையாய் உள்ள தமிழ்க் கவிதை இன்றும் புதுமைக்குப் புதுமையாகவும் அமைந்து தமிழர் வாழ்வை உலகுக்குக் காட்டிக்கொண்டிருக்கின்றது. தமிழ்நாட்டில் மட்டுமன்றி, திருந்திய மொழிகளுள்ள நாடுகளிலெல்லாங்கூட, அவ்வந்நாட்டுக் கவிதைகள் நாட்டின் அச்சாணியாகி அமைவதை அறிஞர் அறிந்துள்ளனரன்றோ! கடல்போலப் பரந்த கவிதைப் பிரிவில் நாம் கண்டன சில; காணுதன பல. பிற்காலத்தே தோன்றிய சந்தக் கவிதைகளும் அவற்றின் பிரிவுகளும் பலவாகும். இவ்வாறு இன்னும் எத்தனையோ கவிதை வகைகள் உண்டு. சமயம் நேருங்கால் பின்னர் அவற்றைப் பற்றியெல்லாம் ஆங்காங்கே கண்டு கொண்டே செல்லலாம்.

இதுகாறும் கூறியவற்றால், கவிதைக்கு உள்ள வேறு தமிழ்ப்பெயர்கள் யாவை என்பதும், அவை எவ்வாறு பொருந்துவன என்பதும், அச்செய்யுள்கள் யாப்பு முதலிய செய்யுள் இலக்கணப்படி எத்தனை எத்தனை வகையாகப் பிரிக்கப் படுகின்றன என்பதும், கவிதைகள் இலக்கண முறையின்றி வேறு எவ்வெவ்வகையில் எவ்வெவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளன என்பதும், இப்பாடல் பழங்காலந்தொட்டு இன்றுவரை என்னென்ன வகையில் மாற்றம் பெற்று வந்துள்ளதென்பதும், இடைக்காலத்தில் பிரிக்கப்பட்ட ஆசு, மதுர, சித்திர, வித்தார கவிகள் யாவை என்பதும், இன்று நாட்டிலே பிறந்த பாட்டியல் வழியாக எழுந்த இலக்கியங்கள் இவையென்பதும், இவை அனைத்தும் ஒரோ வழியில் கவிதைத் தொகுதியில் அடங்குவனவே என்பதும் கண்டோம். மேல் இக்கவிதை ஊற்றுக்கு முதலிடமான கவிஞரைக் காண்போம்.

4. கவிஞர் வெற்றி

'கவிதைப் புலமையில் வெற்றி கண்டாளுே அன்றி வீழ்ச்சி அடைந்தாளுே, ஆனுல் கவிஞன் வாழ்வில் வீழ்ச்சி அடைந்தவனே,' என்று சிலர் கூறுகின்றனர். அவ்வாறு எண்ணுவது அவ்வளவு சரியன்று. கவிஞன் வாழ்வின் வெற்றியைக் கண்டவனேயாவன். உண்மைக் கவிஞன் எவனும் வாழ்வில் தோற்ருன் என்று கூறுவதற்கில்லை. அவன் தோல்வியைப் பல கோணங்களிலிருந்து பலர் பலவகையாகக் காண முயல்கின்றனர். சாதாரணமாக நாட்டிலே வழங்கும் ஒரு பழமொழி உண்டு. கல்வியும் செல்வமும் ஓரிடத்திலே சேர்ந்திரா என்பது அதன் கருத்து. கலைநலமெல்லாம் பெற்ற கலைஞன், செல்வமற்று வாழ்க்கையில் வாடத்தான் வேண்டும் என்பது அதன் முடிவு போலும்! அதைப் போன்றே செல்வம் உள்ளவிடத்துக் கல்வியே சேராது எனவும் கூறுகின்றனர். அக் கருத்துக்கள் பற்றிய பாடல்களுங்கூட வெளிவந்துள்ளன. 'பூவின் கிழத்தி பொலிதலாற் சேராளே, நாவின் கிழத்தி நயந்து,' என்ற செய்யுள் அடிகள் தமிழ் இலக்கியத்தில் உள்ளவைதாம். இவற்ருல் கலைஞன் அல்லது கவிஞன் என்றும் ஏழ்மையிலேயே உழன்ருன் என்று கொள்ளுவர் ஒரு சிலர். ஆனுல், ஆராய்ந்து பார்ப்பின், நிலை வேறு என்பது நன்கு புலனுகும்.

இவர்தம் கொள்கைக்கு ஏற்பத்தான் நாட்டில் கலைஞனை யும் கவிஞனையும் ஏழையாகவே காட்டுகின்றனர். கவிஞன் என்ருல், ஏதோ கிழிந்த உடை, வறண்ட தலை, வற்றிய வயிறு, பலநாள் பட்டினி, மெலிந்த தோற்றம்—இவையே பலர்முன்,

தோன்றக்கூடும். கதைகளிலும், படங்களிலும் கவிஞர்களை இந்த வகையிலேதான் காண்கின்றோம். கதாசிரியர்களும் இவர்களை அத்தகைய ஏழ்மை நிலையிலேதான் சித்திரிக்கின்றார் கள். 'கலையை வாழ்க்கைக்காக அர்ப்பணிக்க மாட்டோம்!' என்ற விடாப்பிடியோடு வாழ்வில் வழுக்கி விழுந்து மாய்ந்த கவிஞர் கதைகள் நாட்டில் அளவிறந்தன. அவற்றுடன் வாழ்க்கையில் உண்ண உணவுக்கும், உடுக்க உடைக்குங்கூட வழி இழந்த கவிஞர் பலர், கதைகளின்வழி நம்முன் காட்சி தருகின்றனர். சங்ககாலம் தொடங்கி இன்று வரையிலும் சிறந்த கவிஞர் எனப்பட்டவரெல்லாரும் அவ்வாறே அல்லல் உற்றார் என்பதுதான், பலருடைய முடிபாய் உள்ளது. தம் முடிவுக்கு ஏற்ற வகையில் அண்மையில் வாழ்ந்த பாரதியாரின் வாழ்க்கையையும், வேறு பல இலக்கியச் சான்றுகளையும் எடுத்துக் காட்டுவர். வாழும் காலத்தில் பாரதியார் வறுமையில் வாடினார் என்பர். வறுமை அவரிடம் இருந்தது மெய்தான். ஆனால், வறுமையினால் அவர் வாடினார் என்பது பேதைமை! இதைப்போன்றே எத்தனையோ சங்க இலக்கியங் களும் புலவர்தம் வறுமையைப் பலவகையில் எடுத்துக் காட்டு கின்றன என்றாலும், தமிழ்ப் புலவர்கள் அந்த வறுமையில் வாடி வதங்காது, வாழ்வில் வெற்றி கண்டவர்கள் என்றே கூற வேண்டும்.

தமிழ்நாட்டில் மட்டுமன்றி, உலக மொழிகளிலெல்லாம் சிறந்த கவிதையின் வளம் பெருக்கிய நல்ல கவிஞர்கள் தம் வாழ்க்கையை அவ்வளவு திறம்பட அமைத்துக் கொள்ளவில்லை என்றே எழுதுகின்றனர். ஆங்கிலநாட்டிலே பெருங்கவிஞராய் இருந்தவர் எல்லாரும் தம் வாழ்வுக்காலத்தில் அவ்வளவாகச் சிறக்கவில்லை என்பதை ஓரளவு ஒத்துக்கொள்ளலாம். பிற்காலத்தில் உலகம் போற்றும் உயர்ந்த கவிஞர்களாய் உள்ளவர்களெல்லாம் தத்தம் வாழ்வுக் காலத்தில் அத்துணை உயர்ந்த வாழ்வில் திளைக்கவில்லை என்று அறிந்தோர் கூறுவர். ஆனால், அதன் மூலம் அவர் தம் வாழ்வில் கண்டது தோல்வியே என்று முடிவுகட்ட முடியுமா?

ஆங்கில நாட்டுப் பாராளுமன்றத்திலே 'இளைய பிட்டு' (*Pitt the younger*)' ஆண்ட காலத்திலே நடந்த ஒரு நிகழ்ச்சி, அந்நாட்டில் இலக்கியப் புலவர்களுக்கு' இருந்த ஏற்றத்தைக் காட்டப் போதுமானதாகும். நாட்டின் வரவு செலவுக் கணக்கை அறுதியிடும் காலத்து இலக்கியத்துக்கும் ஓர் அளவு ஒதுக்க வேண்டும் என்று ஓர் உறுப்பினர் வேண்டியிருப்பார் போலும். அதற்குத் தலைவர் 'இலக்கியம் தன்னைத்தான் காத்துக்கொள்ளும். நாம் கவலைப்பட வேண்டா,' என்று கூறினாராம். ஆனால், அதற்குப் பதிலாக, 'ஆம்; அது தன்னை யும் காத்துக்கொள்ளும், உன்னையும் கவனித்துக்கொள்ளும்'[1] என்ற தொடர் புறப்பட்டதாம். அதிலேதான் எவ்வளவு உண்மை பொதிந்துள்ளது! அலட்சியமாக, இலக்கியம், கவிதை, கலை ஆகியவற்றை மக்களும், நாடாளுபவரும் ஒரு வேளை ஒதுக்க நினைத்தாலும், உண்மையில் அவ்வாறு செய்வது அவ்வளவு எளிதன்று என்பது புரிகின்றதன்றோ! அரசர் முடி சாய்ந்த போதிலுங்கூட, அவர் காலத்தில் தோன்றிய கவிதை களும் கலைகளும் என்றென்றும் வாழ்ந்து, அவ்வரசர் பெயரை உலகில் நிலைநாட்டிக்கொண்டிருப்பதை அறியாதார் யார்? மேலை நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர் கூறியதுபோன்று, கவிஞர் விரும்பினால், தாம் வாழ்வதோடல்லாது, தம் நாட்டையும் உலகையுமே வாழ்விக்கக் கூடுமே! தம் காலத்து வாழும் மன்னர்களையெல்லாம் மாநிலம் உள்ளவரை பெருமையோடு நிலைபெறச் செய்யலாமே! சங்க காலத்தில் வாழ்ந்த எத்தனை புலவர் இன்றுவரை கணக்கற்ற மன்னர்களை வாழச் செய்துள்ளனர்? வீறு பெற்றுச் செல்வம் மிக்குச் சிறந்து வாழ்ந்த மன்னரைப்பற்றியெல்லாம் நாம் இன்று அறிய முடியாதே! ஆயினும், எளிய மன்னனாயினும், அவன் புலவர் தம் வாய்மொழியிற் படுவானாயின், அவன் என்றென்றும் சிரஞ்சீவி யாக நிற்கும் அமரத்துவம் எய்தி விட்டவனல்லவோ! எத்தனைக் குறுநில மன்னர் இன்று நம்மிடையே புறநானூற்றி லும் பிற இலக்கியங்களிலும் காட்சி யளிக்கின்றனர்! எத்துணைச்

---

1. 'Literature will take care of itself and you too.'

சிறப்புக்கள் அவர்களைப்பற்றிப் புலவர்கள் பாடிக் கவிதைகள் புனைந்துள்ளனர்? இதனாலன்றோ மணிமுடி தரித்த பாண்டிய மன்னன்—பகைவர்களுக்குப் புறமுதுகிடாத புரவலன்—யாருக்கும் பின்னடையாத வெற்றி வீரன்—பாண்டியன் நெடுஞ்செழியன்—ஒன்றிற்கு மட்டும் அஞ்சி நின்றான்? ஆம்! அவன் புலவர் பழிச்சொல்லுக்கு அஞ்சினான். புலவர் பழிப்பாராயின், அவனும் அவன் ஊரும் நாடும் உலக முள்ளளவும் இகழ்ச்சியை ஏற்று அல்லவோ வாழ வேண்டி வரும்? 'புலவர் பாடும் புகழுக்கு' ஏங்கி இருந்த மன்னர் எத்தனை பேர்! 'புலவர் பாடும் புகழைப் பெற்றவர், இம்மையில் மட்டுமன்றி, மறுமையிலும் நல்ல வகையில் வீடெய்துவார்கள்' என்றும் கூறியுள்ளனரே!

'புலவர் பாடும் புகழோர் விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி
எய்துப என்பதம் செய்வினை முடித்து'

என்ற புறநானூற்றுச் செய்யுள் அவ்வுண்மையைத் தெள்ளத் தெளியக் காட்டுகின்றதே! மேலே கண்ட பாண்டியன்—தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்—புலவர் பாடாத ஒன்றையே பழியாகக் கருதினான் என்பதை அவன் வாய்ப்பாட்டே நமக்கு நினைவூட்டுகின்றதே!

மாற்றாரைப் போரில் வென்று வெற்றிகொண்டு, நாட்டில் நலிவு உண்டாகாமல் காக்கவேண்டுவது மன்னவன் பொறுப்பு. நெடுஞ்செழியன் 'வயதில் இளையவன் என்று' மாற்றார் பலரும் திரண்டு வந்தனர் போலும்! அதை அறிந்த வீரன் நெடுஞ் செழியன் பின்னடையவில்லை. எதிர்த்தவர் அனைவரையும் ஒருசேரத் தோற்கடிக்கப் புறப்படுகிறான்; அப்போது வஞ்சினங் கூறுகின்றான். அவ்வஞ்சினத்தின் இடையிலேதான் அவன், புலவர் தம் கவிதைப் பொன்மொழிக்குத் தந்துள்ள ஏற்றமும் புலப்படுகின்றது. 'மாற்றாரை ஒருங்கு அகப்படுத்தி வெற்றி கொள்ளவில்லையானால், என்னை இன்னின்ன பழி சேரட்டும்' என்ற வஞ்சினம் அவன் வாய் வழி வெடித்து வெளி வருகின்றது.

அப்பழிகளில் ஒன்று—மிகுந்தது—புலவர் பாடாத பழி. அவன் காலத்தே சிறக்க விளக்கிய புலவர் மாங்குடி மருதனுர். 'அவரைத் தலைவராக உள்ளிட்ட எல்லாப் புலவர்களும் என்னைப் பாடாத பழிக்கு நான் ஆளாவேன்!'' என்கின்றுன்.

"சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்ககப் படேஎ னுயின்.........
....
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னுக
உலகமொடு நிலை இய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை!" (புறம். 72)

என்பன அவன் கூறிய சொற்களே. இப் புறநானூற்றுப் பாடல் அவன் புலவர் மாட்டுக் கொண்டிருந்த அன்பையும் சிறப்பையும் விளக்கும் அருங் கருவியாகவன்றே அமைகின்றது! உலகம் உள்ளளவும் அவர்தம் வாய்மொழியால் உற்று வரும் புகழ் நிலைக்கும் என்றல்லவா அவனே கூறுகின்றுன்! ஆம்; அத்தகைய மன்னர் மன்னரெல்லாம் தம் வாய்மொழிக்கு ஏங்கும்படி பாட்டிசைக்கும்—கவிதை பாடும்—புலவர்களை வாழ்வில் தோற்றவர் என்று யாராவது கூறின், அது எவ்வளவு பொருந்தாத ஒன்று என்று சொல்லவேண்டும்?

கவிதைகள் மட்டுமன்றிக் கலைகள் அனைத்துமே மன்னவரை என்றென்றும் வாழ வைப்பனவாம். மாமல்லபுரத்தை அறியாத தமிழர் இருக்கமாட்டார்கள். தமிழர் மட்டுமென்ன! இந்திய நாட்டிலேயும் பலர் அதைக் காண ஓடி வருகின்றனர். உலக யாத்திரிகர்களில் சென்னைக்கு வருவோர் எல்லோரும் அந்த மாமல்லபுரச் சிற்பங்களைப் பாராது செல்ல மாட்டார் என்பது கண்கூடு. ஆம். அத்தகைய அழகிய சிற்பங்களைச் செதுக்கியவர் யாரோ! அவர் கைக்கொண்ட கல்லுளியும் பிற பொருள்களும் எங்குள்ளனவோ! யாமறியோம்! ஆயினும், அக்கலைக் கோயில் உருவான காலத்தில் வாழ்ந்த அந்தப்

பல்லவப் பெருமான் நரசிங்கனை, மாமல்லபுரத்தைப் பற்றி நினைக்குந்தோறும், நாம் நினைக்கத்தானே வேண்டும்? மாமல்ல புரம் என்ற ஊர்ப்பெயரே அவனை நினைவூட்டுகின்றதே! 'மாமல்லன்' என்பது ஏழாம் நூற்றாண்டில் காஞ்சியைத் தலை நகராகக் கொண்டு ஆண்ட நரசிங்கன் விருதுப்பெயர்களுள் ஒன்று. அவன் காலத்தில், அவனது உதவியால் ஆக்கப்பெற்ற அச் சித்திரச் சிற்பபுரிக்குத் தன் விருதுப் பெயர்களில் ஒன்றையே பெயராக அமைத்ததில் வியப்பில்லையன்றோ! ஆம்! அம் மாமல்லபுரக் கற்கோயில்கள் என்றென்றும் நரசிங்கன் பெருமையையும், அவன்வழிப் பல்லவர் பெருமையையும், அதன்வழித் தமிழர்தம் கலைத் திறனையும் உலகுக்குக் காட்டிக் கொண்டே இருக்குமல்லவா! இவ்வாறு தன்னைப்பற்றிக் கவலை கொள்ளாது, தன் வாழ்வையே தியாகம் செய்து, தன் நாட்டுக்கும், மன்னனுக்கும், கலைக்கும் அழியாப் புகழைத் தேடித் தந்த கலைஞனை வாழ்வில் வீழ்ந்தவன் என்று கூற முன் வருவார்களா!

இத்தகைய சிறப்புக்களையெல்லாம் எண்ணிய குமர குருபரர், இக் கவிகளுக்குப் பெரும் பெருமையைத் தேடித்தர விரும்புகின்றார். உலகையெல்லாம் நான்முகனாகிய பிரமன் உண்டாக்குகின்றான் என்பது புராண வரலாறு. அவ் வரலாற்றை உள்ளடக்கிப் 'பல உலகங்களை உண்டாக்கும் பிரமனும், கவிகளைப் படைக்கும் புலவருக்கு ஒப்பாக மாட்டான்' என்று பாடுகின்றார். 'அப் பிரமன் படைக்கும் உடலும் உலகும், மாறியும் அழிந்தும் சிதைந்தும் விரைவில் கெட்டொழிகின்றன. ஆனால், இக் கவிஞர் செய்யும் கவிதை யாகிய உடம்புகளோ, என்றென்றும் வாழ்கின்றன' என்று கூறி, இதனால் கவிஞர்கள், படைப்புக் கடவுளினும் மேம்பட் டவர் என்று காட்டுகின்றார். ஆனால், கலைஞரிடம் குடிகொண்ட கலைமகள் அப் பிரமனிடமே இடையறாது இயங்குகின்றாள் என்பதையும் குறித்து இருவரையும் ஒப்பு நோக்குகின்றார். இருவரும் கலைச் செல்வியாகிய கலைமகள் வழிப் பணியாற்று கின்றாரேனும், அழியும் உடம்பையும் உலகையும் படைக்கும்

மலரவனிலும், அழியாக் கவிதை படைக்கும் புலவரே மேலானவர் என்ற கருத்தை அமைத்து,

'கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்தமிழோர்க்கு ஒவ்வான்;—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றவர் செய்யும் உடம்பு.' (நீதிநெறி. 7)

என்கிறார். இப் புலவர்களை வாழ்வில் வெற்றி காணாதவர் எனக் கூற முடியுமா?

எனினும், இப் புலவர்கள் வாழ வகையறியாது, செல்வ நிலையில்—வாழ்க்கை வழியில்—தோல்வியே பெற்றார்கள் என்று சிலர் வாதிக்கக் கூடும். அதற்குச் சான்றாக இப் புலவர்தம் பாடல்களையே எடுத்துக் காட்டக்கூடும். சங்க இலக்கியங்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் புலவர் வறுமையைப் பற்றிப் பலப்பல பாடல்கள் உள்ளன. ஆற்றுப்படை நூல்களிலே புலவன் அரசரைக் காண்பதன்முன் இருந்த அவல நிலையும், பின்னர் அரசன் அளித்த அரும்பெரும் பொருள் பெற்று வாழ்ந்த பெருநிலையும் பேசப்படுகின்றன. குமணனைப் பாடிய பெருஞ்சித்திரனார் போன்றோர் தம் பாடல்களிலேயும் வறுமையின் வெறியாட்டம் தெரிகின்றது. அவற்றைக் கொண்டு புலவர்கள் வாழ்வில் தோல்வியுற்றவர்களே என்பர் சிலர். அவர் கூறும் ஆதாரங்களுள் சிலவற்றைக் காண்போம்:

சங்க இலக்கியமாகிய பத்துப் பாட்டில் மன்னரைப் பாடிய நான்கு ஆற்றுப்படைகள் உள்ளன; இறைவனைப் பாடிய திருமுருகாற்றுப் படையை நீக்கி முதலில் மூன்றையும், பின்வரும் கூத்தர் ஆற்றுப்படையாகிய மலைபடுகடாம் என்ற நூலையும் கொள்ளுவர். இவற்றுளெல்லாம் பாடுகின்ற புலவர் பொருநரையும் பாணரையும் கூத்தரையும் முன்னிருத்தி, அவர்கள் வாடிய வறுமை நிலையை விளக்கிப் பின் இன்னின்ன அரசரைக் கண்டமையின் இன்னின்ன வகையான சிறப்புப் பெற்றார்கள் எனக் குறிக்கின்றனர். அவற்றின் மூலம் புலவர் தம் வறுமை நிலை ஒருவாறு புலனாகின்றதென்பர்.

ஒரு புலவர் ஓய்மா நாட்டு நல்லியக் கோடனைப் பாடு கின்றார்; அவன் கொடைத் தன்மையைக் குறித்துப் பாராட்டு கின்றார்; இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் என்பது அவர் பெயர். அவர் பாடல் சிறுபாணாற்றுப்படையாகும். பரிசில் பெற்ற பாணன் மற்றொரு பாணனை நல்லியக் கோடனிடம் செல்ல ஆற்றுப்படுத்தும் நூல் அது. அதில் அப் பாணன் வள்ளல் கோடனைச் சென்று அடையுமுன் இருந்த நிலையைக் காட்டுகின்றார் புலவர்; அவ்வளவு எளிய நிலையில் பாணன் வாழ்ந்தான் என்கிறார். அப் பாணன் நிலை மூலம் புலவர் தம் வறுமையையே காட்டினார் என்பர் சிலர். எப்படி யாயினும், அவ்வடிகள் கண்டு மேலே செல்லல் அமைவுடைத்து.

பாணன் வீட்டில் அடுப்பு மூட்டிப் பல நாள்கள் ஆகி விட்டனவாம். பாவம்! அப் பாணன் மனைவி வீட்டில் உண வில்லை என்பது அறிந்து வாளாவிருக்க முடியுமோ? குழந் தைகள் 'உணவு உணவு' என்று அழத்தொடங்கியிருக்கும். பாவம்! புலவர் மனைவி புறக்கடைக் குப்பை மேட்டில் முளைத்த வேளைக் கீரையைப் பறித்து வந்தாளாம். அதற்கு இட உப்பு வாங்கவும் பணம் இல்லை போலும்! அதை வேகவைத்துத் தன் சுற்றத்துடன், உண்டாளாம். ஆயினும், அந்த ஏழ்மை நிலையை மற்றவர் காண்பது இழிவு என்று நாணிக் கதவடைத்து உண்டார்களாம். அத்தகைய அழிபசி அவர்தம் வீட்டில் ஆதிக்கம் செலுத்தியது போலும்! அவர்களை மட்டு மன்றி, அவர்தம் வீட்டில் வாழ்ந்த நாயின் மேலும் அந்த அழி பசியின் ஆதிக்கம் இருந்தது போலும்! இக் காட்சியைப் புலவர் வாக்கிலேயே காணலாம்.

'திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பால்முலை கவர்தல் நோனுது
புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்
காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த
பூழி பூத்த புழற்கா ளாம்பி
ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்

வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து
இரும்பே ரொக்கலொடு ஒருங்குடன் மிசையும்
அழிபசி வருத்தம்' (130—140)

என்று அழகாகப் புலவர் அந்த அழிபசியின் கொடுமையை விளக்குகின்றார். இவ்வாறே பிற ஆற்றுப்படைகளிலும் புலவர் தம் வறுமைநிலை ஒருவாறு காட்டப்படுகின்றது. ஆற்றுப் படைகள் மட்டுமன்றித் தனியாகப் புலவர்கள் பாடிய பாடல் களிலும் இந்த வறுமை நிலை இல்லாமல் இல்லை.

பெருஞ்சித்திரனார் ஒரு சிறந்த புலவர்; குமணனைப் பாடிப் பரிசில் பெற்றவர். அவர் தம் வீட்டு வாழ்க்கையைச் சில பாடல்களில் சித்திரித்துக் காட்டுகின்றார். அவற்றின் மூலம் புலவர் வறுமை ஓரளவு விளங்கத்தான் செய்கின்றது. ஒரு பாட்டில் அவர் மனைக்கிழத்தி வீட்டில் உணவற்ற காரணத்தால் வாடி உழக்கும் அல்லலையும், அவளிடைப் பால் உண்ண விரும்பியும் பால் கிடைக்கப் பெறாத காரணத்தால் வருந்தி அழும் குழந்தையின் நிலையையும், குப்பைக் கீரையைக் கொய்து வந்து உப்பின்றி அவித்து உண்ணும் நிலையையும், மாசடைந்த் கிழிந்த ஆடையின் அவலத்தையும் கூறி, அந்தத் துன்பங்களைக் காணச் சகியாது தாம் குமணனைக் கண்டு பொருள்தேட வந்த தாகக் கூறுகின்றார் அவர். மற்றொரு பாட்டிலே வீட்டில் உணவற்றமையின், பாலன் வறுமுலை சுவைத்த கொடுமையை யும், உணவுண்ண உள்ளே சென்று பாத்திரங்களைத் திறக்க அவற்றுளெல்லாம் ஒன்றும் இன்மையால் வருந்திய நிலையை யும், அக்குழந்தையின் பசிக் கொடுமையை மாற்றத் தாயானவள் சந்திரனைக் காட்டிச் சிரிக்க வைத்தும், அதனைப் 'புலி புலி' என்று காட்டி அச்சுறுத்தியும், நொந்து வாடும் வாழ்க்கையினையும் காட்டுகின்றார். அவர் வாய்மொழிப்படி, கண்டு செல்லல் நலம்;

'இல்லுணாத் துறத்தலின் இல்மறந்து உறையும்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் பன்மாண்
பாலில் வறுமுலை சுவைத்தனன் பெறாஅன்
கூழும் சோறும் கடைஇ ஊழின்
உள்ளில் வறுங்கலம் திறந்தழக் கண்டு
மறப்புலி உரைத்தும் மதியம் காட்டியும்
நொந்தன ளாகி' (புறம். 160)

தாம் வந்த வரலாற்றைக் கூறுகின்றார் பெருஞ்சித்திரனார்' இதைப் போன்ற பாடல்கள் பல தமிழ் இலக்கியங்களில் உள்ளன. புலவர்கள் மன்னரைப் பாடிப் பரிசில் கேட்ப தற்கும் பெறுவதற்குமாகப் பரிசில் நிலை போன்ற பல துறை களும் புறப்பொருள் இலக்கணத்தில் இருக்கின்றன. இவைகளை யெல்லாம் வைத்துக்கொண்டுதான் புலவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறவில்லை என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், அவர்கள் அவ்வாறு வறுமையில் வாடக் காரணம் என்ன? அந்த வறுமையை வறுமை என எந்த இலக்கியமாவது காட்டு கின்றதா? எண்ணிப் பார்த்தால் உண்மை விளங்கும்.

வாழ்க்கையின் வெற்றி, பொருள் ஒன்றினாலேதான் நிறைவுறும் என்று பலர் நினைக்கின்றனர். அந்த அடிப்படை எண்ணமே முதலில் தவறாக முடிவதாகும். அது உண்மை யானால், எத்தனையோ செல்வர்கள் வாழ்வில் அல்லலும் அவதியும் உறுவானேன்? 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று வேறொன்றைச் செல்வமென்று குறிப் பானேன்? வள்ளுவர் பலவிடங்களில் பலவற்றைச் செல்வ மென்பானேன்? 'கேடில் விழுச்செல்வம் கல்வி', 'செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்,' 'அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்' என்பன போன்ற தொடர்கள் நமக்கு எதை விளக்குகின்றன? 'செல்வம் என்பது வெறும் பணத்தால் கணக்கிடுவது மட்டுமன்று, அதனினும் மேம்பட்ட ஒன்று,' என்பது புலனாக வில்லையா? மேலும், ஆண்டவனைப் பாடுகின்ற **இராமலிங்கர்** போன்ற அடியவர்கள், 'நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்' என வேண்டுகின்றார்களே யன்றி, 'பெருஞ்

செல்வத்தில் புரள வேண்டும்' என இறைவனை வேண்டிக் கொள்ளவில்லையே! எனவே, 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே' என்ற பழமொழிப்படி அமையும் ஒன்றே. அத்தகைய நிலைத்த செல்வங்களை நாடிச்செல்லும் புலவர் உள்ளங்கள் வெறும் பொருட்செல்வத்தை மட்டும் பொதிந்து வைக்க விரும்பவில்லை. செல்வம் தனக்கெனச் சேர்த்து வைக்கப்படுவ தன்று; எல்லோரிடத்தும் சென்று பயன்படத் தக்கது. இவ் வுண்மையினை வறுமையைப் பற்றி வருந்திப் பாடிய பெருஞ் சித்திரனாரே விளக்குகின்றார்.

நாட்டில் புலவர்களை ஆதரிக்க நல்ல புரவலர்கள் அக் காலத்தில் வாழ்ந்து வந்தார்கள். புலவர்தம் பாடலுக்கு ஏங்கும் பாராளும் மன்னர்கள் இருந்தார்கள் என்பதை நெடுஞ்செழியன் பாட்டால் அறிந்தோம். இவ்வாறு கேட்ட போது கேட்டதைத் தரும் மன்னர்கள் இருக்கும் காலத்தில் புலவர்கள் தங்களுக்கெனச் செல்வத்தை ஏன் சேர்த்துச் சேர்த்து வைத்துக் கொள்ளல் வேண்டும்? இவ்வுண்மை, பொருளாதா ரத்தைப் பற்றி அதிகமாகப் பேசும் இன்றைய உலகுக்கு நன்கு தெரிந்த ஒன்றேயாகும். வங்கியில் (Bank) தம் தேவைக் கெல்லாம் வேண்டிய பணத்தை வேண்டியாங்குப் பெற் (Over draft) வசதி உள்ளவர் தம்முடைய ஒரு சிறு தொகையை கொண்டே, பேரளவில் —கோடிக் கணக்கில்கூடத் தம் வாணிபத்தைப் பெருக்கிக் கொள்ளவில்லையா? அதைக் கண்டு இவ்வுலகமும் அவர்தம் வங்கிக்கணக்கினை மறந்து அவரைப் பெருவணிகர் என்றும், பெருஞ்செல்வர் என்றும் புகழ்கின்றதே! அதே நிலையில் வறுமையில் வாடிய மேலே கண்ட பெருஞ் சித்திரனார், குமணன் நல்கிய வளனைப் பெற்ற பிறகு, பெற்றது கொண்டு செய்த பெருஞ்செயலை நோக்கின், புலவர் வாழ்வில் வெற்றி கண்டவரா, அன்றித் தோல்வியுற்றவரா என்பது விளங்கும்.

தன்னை வந்து பாடிய பெருஞ்சித்திரனாருக்குப் பொன்னும் மணியும் பிற பொருள்களும் வாரி வழங்கினான் வள்ளல் குமணன். அவற்றை எல்லாம் எடுத்துக் கொண்டு தம் வீடு

சேர்ந்தார் புலவர்; செல்வத்தை மனைவி கையில் கொடுத்தார். அந்த மனைவியைப்பற்றியும், அவள் வறுமையில் வாடிய விதத்தைப் பற்றியும் குமணனிடம் நாம் மேலே கண்டவாறு நெஞ்சுருக நைந்துரைத்தார். அவன் அக்குறையினைக் கேட்டுக் கொடுத்த பொருளைத்தான் இப்போது மனைவியிடம் ஒப்படைத்தார் புலவர். வாடிய பயிருக்கு மழையென வந்த அந்தப் பெருஞ் செல்வத்தைக் கண்டு அவள் மகிழ்ச்சி அடைந்திருக்கக் கூடும்; தன் வீட்டு வறுமை நீங்க அதனால் ஆவன செய்திருப்பாள். குமணன் தந்த செல்வம் அவர்கள் குடும்பத்துக்குத் தலைமுறை தலைமுறைக்கும் உதவக் கூடியதுதான். எனினும், அவர்கள் அத்துணைச் செல்வத்தையும் தாங்களே சேர்த்து வைத்துக்கொள்ள விரும்பவில்லை. அது முறையற்றதுங் கூட. எனவே, பெற்ற செல்வத்தைச் சுற்றத்தாருக்கும் மற்றவருக்கும் வாரி வழங்கச் சொல்லுகின்றார் புலவர். தம் வறுமை நீங்கியதோடன்றி, வையத்து வறுமையை நீக்க வேண்டுமென்பது அவர் உள்ளக்கிடக்கை. உண்மையில் கவிஞன் எவனுயினும், அதைத்தானே எண்ணுவான்? அவர் தம் மனைவியை நோக்கி, குமணன் தந்த வளனைத் தாமே 'வல்லாங்கு வாழ' வைத்துக்கொள்ளக் கூடாது என்றும், எல்லோர்க்கும் வாரி வழங்கவேண்டுமென்றும் வற்புறுத்துகிறார்.

'நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பின்நின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க்கு என்னது என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னது நீயும்
எல்லார்க்கும் கொடுமதி மனைகிழ வோயே!
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே.'

(புறம். 163)

என்ற அப்பெருஞ்சித்திரனார் வாக்கு, அவர் தம் வாழ்வில் வெற்றி பெற்றதைத்தானே காட்டுகிறது! பகைவர் நாட்டின்மேல்

படையெடுத்து வென்று வாகை சூடிய போர் மன்னன், அப்பகைவர் நாட்டிலிருந்து கொண்டு வந்த பொன்னையும் மணியையும் தன் நாட்டுப் புலவருக்கும் மற்றையோருக்கும் வாரிவழங்கும் பெருநிலை இங்கே பெருஞ்சித்திரனாரிடமும் காணப்படுகின்றதன்றோ! சொல்ல முடியாத வறுமையில் வாடிய இக்கவிஞர், செல்வம் பெற்றதும் ஏன் தமக்காக அப் பெருஞ்செல்வத்தைப் போற்றி வைத்துக் கொள்ளவில்லை? அதிலேதான் வாழ்வின் வெற்றி அமைந்து கிடக்கின்றது. மற்றவர் வாடத் தாம் மட்டும் வாழக் காணாத கவியுள்ளம், பெற்றதைக் கொண்டு தாம் மட்டும் வாழ எப்படி நினைக்க முடியும்? மேலும், குமணனைப் போன்று நாட்டில் பாடிவந்த புலவர்களுக்கு வாரி வழங்கும் வள்ளல்கள் இருக்கும்போது, பெருஞ்சித்திரனார் போன்ற கவிஞர் வாழ்வைப்பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? எனவே, இக்காலத்துச் செல்வர்கள் தம் பணத்தை 'வங்கி'களில் (Banks) வைத்துவிட்டு, மனநிறைவு கொண்டு, வேண்டும்போது பெறும் அந்த நிலையிலேதான் அக்காலப் புலவர்கள் இருந்தார்கள் என்பது உண்மை. இந்த வங்கிகளில் பணம் போட்டால்தான் எடுக்க முடியும். அந்த அரச வங்கிகளோ, புலவர்களைப் பொறுத்தவரையில் என்றும் வற்றா வளம் சுரக்கும் நிதிகளாய் அமைந்திருந்தன. ஆகவே அந்தப் புலவர்கள் தங்கள் வாழ்வில் வெற்றியன்றித் தோல்வியைக் கண்டவர்களாக முடியுமா?

சங்கக்காலப் புலவர்கள் மட்டுமின்றி, இடைக்காலத்திலும் புலவர் பலர் அவ்வாறே பெற்றதைத் தங்களுக்கெனச் சேர்த்து வைக்காமல், மற்றவருக்கு வாரி வழங்கினார்கள் என்பதைக் காண்கின்றோம். இறைவனைப் பாடிய அடியவர்களுள் சுந்தரர் ஒருவர். அவர் காலத்தே பாடிய புலவருக்கு நாடும் நகரமும் செல்வமும் வாரி வழங்கும் வள்ளல்கள் இல்லை போலும்! எனவே, அவர் ஆண்டவனைப் பாடியே தமக்கு வேண்டியதைப் பெற்றதாக வரலாறும், அவர்தம் பாடல்களும் குறிக்கின்றன. அவர் ஒருமுறை பரமனைப் பாடிப் பெருநெற் பொதிகளைப் பரவையார் மனையில் கொண்டு வந்து சேர்த்தார். அவர்தம்

மனையறத்துக்கு ஏற்றதாகத்தான் அந்நெல் மலை அமைந் திருக்கும். எனினும், அதைப் பெற்ற பரவையார் தமக்காகவே அதை வைத்துக்கொள்ள விரும்பவில்லை. அந்த ஊரில் உள்ள வரை யெல்லாம் 'வருக' என்று அழைத்தார்; அவரவர் தம் தேவைக்கும் விருப்பத்துக்கும் ஏற்ற வகையில் நெல்லைத் தத்தமது இல்லத்திற்குக் கொண்டு செல்லப் பணித்தார். தமக்கென வந்ததைப் பொதிந்து மூடி வையாது, வல்லாங்கு வாழ்தும் என்னுது, எல்லோர்க்கும் வழங்கும் பரவையாரின் பண்பை,

"வன்றெண்டர் தமக்களித்த நெற்கொண்டு மகிழ்சிறப்பார்
'இன்றுங்கள் மனைஎல்லைக் குட்படுநெற் குன்றெல்லாம்
பொன்றங்கு மாளிகையில் புகப்பெய்து கொள்க.' என
வென்றிமுர சறைவித்தார் மிக்கபுகழ்ப் பரவையார்."

(ஏயர்கோன், 28)

என்று சேக்கிழார் அழகாகப் பாராட்டுகின்றார். ஆம். பரவையார் வெற்றி முரசு ஆர்த்தார்! அவர் வாழ்வு வெற்றி பெற்றதென்பதில் ஐயமுண்டோ? இவையெல்லாம் கதைகள் போலக் காணப்படினும், பாடும் கவிஞர் உள்ளத்தைக் காட்டு வனவாக அமைகின்றன அல்லவா! இவ்வாறு வாழ்வில் வெற்றி யும் வீறும் பெற்ற புலவர் பலர். அவர்களை வாழ்வில் தோற்ற வராகவும், வறுமையில் வாடியவர்களாகவும் காட்டுதல் பொருத்தமற்றதாகும். உண்மையிலே வறுமையில் வாடிய காலத்திலும் வெற்றிச் சிகரத்தின் உச்சியிலிருந்து வழுவாத பல கவிஞர்களும் நமக்குச் சங்க இலக்கியத்தில் காட்சி தருகின்றார்கள்.

உண்டுடுத்து வாழும் வாழ்க்கை ஒன்றையே கவிஞர்கள் தங்கள் குறிக்கோளாகக் கொண்டு வாழவில்லை. அப்படி வாழ்ந்திருப்பார்களாயின், ஒரு வேளை அவர்கள் தோல்வி யுற்றிருக்கவும் கூடும். அவர்கள் கவிப்பண்பும் அதற்கு அவர்கள் தந்த ஏற்றமுமே அவர்கள் வாழ்வினும் மேலானவை யாய் விளங்கின. பொருள் மட்டும் கருதி அவர்கள் கவி புனைந்திருப்பார்களாயின், ஏதோ அரசர்கள் கண்டும்

காணுமலும் தந்தவற்றைப் பெற்றுக்கொண்டு சென்று காலம் கழித்திருப்பார்கள். ஆனல், தங்கள் கவிப் புலமையைக் கண்டு நாடாளும் மன்னர் போற்றவேண்டு மென்பதே அவர்கள் விருப்பம். மேற்கண்ட பெருஞ்சித்திரனரே இந்த நிலை வாழ்வுக்கும் இலக்காகி நிற்கின்றர்.

பெருஞ்சித்திரனர் ஒருகால் அதிகமானைக் காணச் சென்றர், அதிகமான் புலவர்களை ஆதரிக்கும் சிறந்த பண்பாளன்தான். ஆயினும், அப் புலவர் சென்ற காலத்து வேறு ஏதோ அவசரப்பணியில் அவன் ஈடுபட்டிருந்தான் போலும்! எனவே அவரைக் காணுது, 'அவர் ஏதாவது பரிசில் பெறத்தான் வந்திருப்பார்', என்று கருதித் தன்னிடம் வந்து அவர் வருகையைச் சொன்னவர் மூலமே பரிசில் கொடுத்தனுப் பினும். ஆனல், புலவர் அந்தப் பரிசிலை ஏற்க மறுத்து விட்டார்; தாம் வெறும் பொருளுக்காக அவனைக் காண வரவில்லை என்பதை விளக்கினர். மேலும், 'ஏதோ பாட்டுப் பாடி, அதற்குப் பதிலாகப் பணம் பெற்றுச் செல்லும் வாணிகப் புலவன் யான் அல்லேன்,' என்றும் எடுத்து விளக்கினர்.

"குன்றும் மலையும் பலபின் ஒழிய
வந்தனன் பரிசில் கொண்டனன் செலற்கென
நின்ற என்னயந் தருளி ஈதுகொண்டு
ஈங்கனஞ் செல்க தான்என என்னை
யாங்கறிந் தனனே தாங்கருங் காவலன்?
காணு தீத்த இப்பொருட்கு யான்ஓர்
வாணிகப் பரிசிலன் அல்லேன்; பேணித்
தினையனைத் தாயினும் இனிதுஅவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே." (புறம். 208)

என்ற பாடல் அவர் வெற்றி முரசாய் எழுந்தது. அதைக் கேட்டு அதிகமான் பின்னர் வந்து, நேரிலே கண்டு அழைத்துச் சென்று, அருஞ்சிறப்புக்கள் செய்து போற்றியிருப்பான் என்பது கூறவும் வேண்டுமோ? இதைப்போன்றே அப் புலவர், இளவெளிமான் புலமை அறியாது சிறிது கொடுப்பக் கொள்ளாது நீங்கிய வரலாறும் புறநானூற்றில் உள்ளது.

'முற்றிய திருவின் மூவராயினும், பெட்பு இன்றி ஈதல் யாம் வேண்டலம்!' என்று வீறு தோன்றக்கூடிய பெருந்தலைச் சாத்தனார் போன்ற புலவர்தம் வாழ்வில் வெற்றி கண்டதைச் சங்க இலக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றனவே! இவற்றை யெல்லாம் கொண்டு புலவர் வாழ்வில் வெற்றி பெற்றவர் என்று சொல்வதல்லாது வேறு என்ன சொல்ல முடியும்?

இவ்வாறு பொருள்பெறு வாழ்வுதவிர, மற்றவற்றிலுமே கவிஞர் வெற்றி கொண்டவர்தாம். அமைதியான இன்ப வாழ்வு அவர்களுடையது. அரசியலும் பிறவும் அவருக்குப் பழக்கமானவைதாம். எனினும், அவற்றுள் மூழ்கி அல்லலுற்று அமைதியை இழக்கும் வெறிபிடித்த வாழ்வு அவர்களுடையதன்று. ஆங்கில நாட்டுப் பெருங் கவிஞர் கோல்டுஸ்மித்து (Goldsmith) என்பார் தம் வாழ்வின் வெற்றியைப்பற்றி எக்காளமிட்டுப் பாடியதை அறியாதார் யார்? 'நான் காண்பவற்றுக்கெல்லாம் நானே தலைவன்'[1] என்று அவர் உலகனைத்தையும் தம் அடிமைக் கீழ் அமைத்துக்கொண்ட பெருமிதம், கவிஞர் கண்ட வெற்றிப் பெருமிதமல்லவோ!

இந்த வெற்றிக்குக் கடல் கடந்த ஆங்கில நாடுவரை செல்ல வேண்டா. நம் நாட்டிலேயே இத்தகைய வெற்றியைக் கொண்ட வீரக்கவிஞர் இல்லையா? ஏன் இல்லை? கம்பரைப்பற்றி வழங்கும் ஒரு கதை அவர் வீறு பெற்ற சிறப்பை நமக்கு நினைப்பூட்டும் என்று நினைக்கிறேன். ஒரு சமயம் சோழப் பேரரசனோடு கம்பர் தனிமையில் தங்கியிருந்தார். சோழன் தன் பரந்த பெருநாட்டைக் கண்டு இறுமாப்பு எய்தினானோ, அன்றிப் பெருமகிழ் வெய்தினானோ நாமறியோம்! தனது நாட்டைப்பற்றி எண்ணிய அவன், கம்பரை நோக்கி, 'கவிஞர் பெருமானீர்! இப்பரந்த நாடும், இந்நாட்டில் உள்ள உயிர்ப் பொருள்களும், பிறவுமாகிய அனைத்தும் எனக்கு அடிமைப் பட்டிருப்பது எவ்வளவு பெருமையாய் இருக்கின்றது பார்த்தீர்களா?' என்று கூறினான். அதைக் கேட்ட கம்பர் என்ன எண்ணினாரோ? உண்மையில், 'அரசன் இவ்வாறு

1. 'I am the monarch of all I survey'

தருக்குவது தகாது. இதற்கு முடிவு கட்ட வேண்டும்,' என்று கருதியோ, அன்றி மன்னவர் எத்துணைப் பெரியராயினும் கவிஞருக்கு அடக்கந்தான் என்பதை எடுத்துரைக்கவோ, அன்றி வேறு எண்ணியோ, அதற்கு ஒரு பதில் சொல்லி விட்டார். அவர் கூறியது இதுதான்: 'ஆம், அரசரே! மன்னர் மன்னரே! இப்பரந்த சோழப் பெருநாடு உங்களுக்கு அடிமை என்பதும், நீங்கள் எனக்கு அடிமை என்பதும், ஐயத்துக்கு இடமின்றி நன்கு விளங்குபவைதாமே!' என்றார். பின்னர்க் கதை செல்கின்றது. அது கேட்ட மன்னன் சினந்து, ஒரு பெண்ணின்வழிக் கம்பரை அவமானப்படுத்த முயன்றதும், அதிலும் கம்பர் வெற்றி கண்டு, வேற்று நாடு சென்று, மற்றோர் அரசனைத் தம் பணியாளனாகக் கொண்டு வந்ததும் கதையாய் வளர்கின்றன. கம்பர் அரசனைத் தமக்கு அடிமை என்று கூறும் அந்த அளவு வாழ்வில் வெற்றி பெற்ற புலவர் என்பதை எண்ணின், மகிழ்ச்சி தோன்றுகின்றதன்றோ! இறுதியில் சோழன் கம்பரின்றித் தனித்துயரெய்தி, எங்கிருந்தாலும் அவரைக் கொண்டுவரப் பணித்து, உண்மையில் அவருக்கு அடிமை போலவே வாழ்ந்தான் என்றுதானே கதை முடிகின்றது?

சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார் போன்ற கவிஞர்களும் தத்தம் கவிதைத் துறையினால்தானே மன்னவரும் மதிக்கும் வகையில் வெற்றி மாலை சூடி வாழ்ந்தனர்? ஔவையார், வாழ்வில் எப்படி வாழ்ந்தார் என்று காண இயலாவிட்டாலும், அதிகன் தனக்கென வைத்திருந்த அந்த நெல்லிக்கனியை அவருக்குக் கொடுத்ததன் மூலம் அவர் வெற்றி வாழ்வை மேற்கொண்டிருந்தார் என்பது புலனாகின்றதே! நெடு நாள் நினைத்திருந்து பெற்ற, பல்வகைச் சிறப்புக்கள் பொருந்திய, உண்டால் நெடுங்காலம் வாழவைக்க வல்ல, அந்தச் சிறியிலை நெல்லித் தீங்கனியைத் தான் உண்ணாது அதிகன், ஔவையார் என்னும் கவிஞருக்குக் கொடுத்தான் என்றால், அது ஔவையாரின் வெற்றியையன்றோ குறிக்கின்றது! ஆனால், அவர் கொண்ட கவி நலன், அவ்வெற்றியில் தம்மை மறவாது கொடுத்த அதிகனைப் பாட வைக்கின்றது.

அவர் பாடிய பாட்டு வழியே அவர் பெற்ற நெல்லிக் கனியின் சிறப்பையும் காணலாம்:

'பால் புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணிமிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே! தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கு ஈந்தனையே!'' (புறம். 91)

என்று பாடி, நெடுங்காலம் தம்மை வாழ வைக்க நெல்லிக் கனியீந்த அதிகனை, 'விடமுண்டும் என்றென்றும் கெடாது வாழ்கின்ற இறைவனைப் போல வாழ்க!' என வாழ்த்துகின்றார். இவ்வாறே எத்தனையோ புலவர்கள் சிறக்க வாழ்ந்துள்ள வரலாறுகள் பல.

தமது வாழ்வில் மட்டுமன்றிக் கவிஞர்கள் பொது வாழ்விலும் தாங்கள் மேற்கொண்ட செயலை முடித்து வெற்றி பெற்று வாழ்ந்தவர்களாகத்தான் காண்கின்றோம். நாட்டில் நடைபெற்ற போர்களுக்கிடையில் நின்று சந்து செய்து சமாதானம் நிலைநாட்டிய கவிஞர்களும், நடைபெற இருந்த போரினையே தடுத்து நிறுத்திய கவிஞர்களும், போர்க்களிப்பில் தன்னில் மகிழ்ந்து தருக்கும் மன்னனுக்கு அறிவு கொளுத்திய கவிஞர்களும் பொது வாழ்வில் வெற்றி பெற்றவர்களாவார்கள். அவர்கள் வெற்றி கவிதையின் வெற்றியாகவன்றோ அமைகின்றது! கோவூர்கிழார் என்ற புலவர், போர் நிறுத்திப் புகழ் பெற்றவர் என்பதைத் தமிழ்நாடு நன்கு அறியும்.

சோழ நாட்டுப் பங்காளிகளாகிய நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும், தம்முள் மாறுபட்டுப் போரிட்டுத் தம் நாட்டையே சுடுகாடாக்கிக் கொண்டிருந்தார்கள். அந்த நிலையில் மக்கள் உள்ளம் எவ்வளவு இடர்ப்பட்டிருக்கும் என்று யார் எண்ணிப் பார்த்தார்கள்? ஆம்; கோவூர் கிழார்தாம் எண்ணிப் பார்த்தார். 'பாவம்! பங்காளிகள் இருவர் தம் சண்டையினாலே சோழநாடே பாழ்பட்டுப் போகின்றதே' என்று

எண்ணியிருப்பார்; உடனே அவ்விருவரும் போர் தொடங்க இருக்கும் நிலையில் அவர்கள் இடையில் சென்று நின்றார்; நின்று, இருவரையும் அருகழைத்து, ஓர் உண்மையை அறிவுறுத்தினர்: 'போரில் இருவரும் வெற்றி அடைதல் என்பது இயலாது, ஒருவர் தோற்பினும் தோற்றது சோழர் குடி என்ற அவச்சொல்லே வந்து சேரும். அந்த அவச்சொல்லைப் பிறந்த குடிக்கு உண்டாக்குவது அவ்வளவு நல்லதன்று,' என்று சொல்லிப் போரையே நிறுத்தி விட்டார், புலவர் கோவூர் கிழார்.

'ஒருவீர் தோற்பினும் தோற்பதும் குடியே;
இருவீர் வேறல் இயற்கையு மன்றே; அதனால்,
குடிப்பொருள் அன்றுநும் செய்தி; கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யும்இவ் விகலே.' (புறம். 45)

என்ற பாட்டு அவருடைய பாட்டுத்தான். பின்பு போர் நீங்கிற்று. சோழ நாடும் அமைதியுற்றது. இப்படி ஒரு நாட்டு வரலாற்றிலேயே அமைதியைத் தேடித் தந்து, வாழ்வில் மேற்கொண்டதை முடித்து வெற்றி கண்ட கவிஞரும் வாழ்ந்துள்ளனர்.

மற்றொரு புலவராகிய ஔவையார் தொடங்கும் போரை முளையிலேயே கிள்ளி எறிந்து, நாட்டில் அமைதியை நிலைநாட்டினர். அதிகமானும், தொண்டைமானும் தம்முள் மாறுபட்டுப் போர் தொடங்கத் திட்டமிட்டனர். அதிகமானைக் காண வந்த ஔவையார் அதைக் கேட்டறிந்தார். போரினால் உண்டாகும் விளைவுகளை அவர் மனம், எண்ணிப் பார்த்தது. எத்தனை உயிர்கள் நாசமாகிக் கெடும்! எவ்வளவு பொருள்கள் சேதமாகும்! அனைத்தையும் எண்ணிப் பார்த்து, எப்படியும் போரை நிறுத்தித்தான் ஆகவேண்டும் என்று அவர் கவி உள்ளம் எண்ணியிருக்கும். அவ் வெண்ணத்தால் அவர் அதிகமானிடம் பேசினர்; போர் தொடங்குமுன் தாம் ஒரு முறை தொண்டைமானிடம் தூது செல்ல வேண்டும் என்று கூறினர். அவர் விழைவினை மறுக்காத அதிகன், அவரைத் தொண்டை

மானிடம் தூதனுப்பினன். அவரும் காடும் நாடும் கடந்து வந்து, காஞ்சி நகர் சார்ந்து, தொண்டைமானைக் கண்டார். பின்பு சிறிது சிறிதாக அவனை மனம் மாறச் செய்திருப்பார். கடைசியில் தொண்டைமானைக் காட்டிலும் அதிகமான் பெரும் படை வைத்திருப்பவன் என்றும், அவன் போர்த்திறன் மிக்கவன் என்றும், அவனை வெல்வது எளிதன்று என்றும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் எடுத்துக் காட்டிப் போரை நிறுத்தி விட்டார். சிலர் கருதுவது போன்று, 'இவ்வே, பீலி அணிந்து' என்ற ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் அதிகமானைச் சிறப்பித்து, தொண்டைமானைத் தாழ்த்து முகத்தானே இழிவு படுத்தியது என்றும், அதிகமானிடம் தாம் கொண்ட அளவற்ற அன்பே ஔவையாரை அவ்வாறு பாட வைத்தது என்றும் கொண்டாலும், அதனாலும் ஔவையாரின் குறிக்கோள் நல்லதாய் அமைந்து, பொதுவாழ்வில் வெற்றியைத் தேடித் தந்தது என்பதை மறுக்க முடியாது. போர் நடந்து இருவருள் ஒருவர் வெற்றி பெற்றாலும் இரண்டு நாடுகளும் எவ்வளவு அல்லலுற்று இருக்க வேண்டும்! அந்த அவல நிலையை நாட்டில் இல்லையாக்கி அமைதியை நிலைநாட்டிய ஔவையார், பொது வாழ்வில் வெற்றி கண்ட புலவரல்லரோ!

வெண்ணிக் குயத்தியார் என்ற மற்றொரு பெண்பாற் புலவரைக் காண்போம். சோழன் கரிகாற் பெருவளத்தான் சேரமானோடு வெருவரு வெண்ணிப் பறந்தலையிலே போரிட்டான் சேரமான் சிறக்கப்போரிட்டு வெற்றி வாயிலிலே நின்றான் எனினும், அந்த நிலையில் ஓரம்பு அவன் மார்பிற் பட்டு, முதுகு வழிப் புறம் போயிற்று. அதனால், முதுகில் உண்டான புண்ணை, முதுகிலேயே அம்பு பட்டதால் உண்டான புறப்புண் எனக் கருதி விட்டான். வீரனுக்கு அதனினும் கொடிய அவமானம் உண்டோ! முதுகில் அம்பு பட்டுப் பெறும் புண்ணே அவமானத்தின் சின்னம் எனக் கருதி வடக்கிருப்பர் தமிழ் மன்னர். சேரலாதனும் அவ்வாறே வடக்கிருக்கத் துணிந்தான். அவன் நிலை கண்டு நைந்து, அவன் படைகள் பின்னடைந்திருக்கும். இச்சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு வெற்றிகண்டு அதனால்

சிறப்படைந்தான் கரிகாலன். வெற்றியோடு அப்படியே தலைநகருக்குத் திரும்பியிருக்கலாம். ஆயினும், அந்த இடத்திலேயே வெற்றி விழாக் கொண்டாட நினைத்தான் போலும்! இது அருவருக்கத்தக்க செயலன்றோ! மாற்றான் புறப்புண் நாணி வடக்கிருந்த சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு, வெற்றிவிழாக் கொண்டாடுவது சிறப்பல்லவே! ஆமாம்! ஆனால், அதை யார் அரசனுக்குச் சொல்லுவர்? அவன் நாட்டில் அதன் விழாவை எதிர்த்துப் பேச யாரால் முடியும்? முடிந்தது ஒரு கவிஞரால்; அதுவும் பெண்பாற் கவிஞரால்! அவ்வூரில் வாழ்ந்த குயத்தியார்தாம் அவர். அவர் இயற்பெயர் எதுவோ அறியோம்! அவர் குலம் ஒரு வேளை குயவர் குலமோ என ஐயப்பட இடமுண்டு. அதுபற்றி நாம் கவலையுற வேண்டா. அவ் வெண்ணிக் குயத்தியார் கரிகாலன் முன்வந்து, அவன் விழாக் கொண்டாடுவது தகுதியற்றதென் பதையும், அவனினும் புறப்புண் நாணி வடக்கிருந்த சேரன் நல்லவன் என்பதையும் எடுத்துக்கூறிக் காட்டிவிட்டார். அவர் பாடல் இதுதான்:

'நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!
களியியல் யானைக் கரிகால் வளவ!
சென்றமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற
வென்றோய்; நின்னினும் நல்லன் அன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே!" **(புறம். 66)**

இப்பாட்டில் 'நின் ஆற்றல் தோன்ற வென்றோய்!' என்று சுட்டி, அவ்வாறு வெல்லவில்லை; சேரன் வடக்கிருந்ததாலேயே வென்றான்,' என்பதைக் குறித்து, கரிகாலனினும் சேரனை மேம்பட்டவனாக்கி, போர்க் களிப்பில் மறந்து விழாக் கொண்டாடிய கரிகாலனை உணர்வுபெறச் செய்த சிறப்பு விளங்குகிறதன்றோ! இக்கவிஞர் வெற்றி கரிகாலன் வெற்றி யினும் மேம்பட்ட ஒன்று என்பதை மறுப்பார் யார்?

இக்குயத்தியார் இவ்வாறு அறிவுறுத்தாது இருந்திருப்பாரே யானால், வெற்றியில் களிப்புற்றிருந்த வீரர்கள் சுற்றியிருக்கும் ஊர்களில் என்னென்ன கொடுமைகள் செய்திருப்பார்களோ! அன்றி வேறு எந்த நாடுகளின்மீது படையெடுத்திருப் பார்களோ! இவர்தம் கவியால் அக்கொடுமைகள் அனைத்தும் அகன்றனவன்றோ!

அக்காலத்தில் மட்டுமன்றி, இவ்வாறு அறிவுறுத்தும் கவிஞர்கள் இந்தக் காலத்திலும் வாழ்ந்துள்ளார்கள். கடந்த போர் கழிந்து, ஜெர்மனியும் ஜப்பானும் வீழ்ச்சியுற்றபிறகு, ஆங்கிலேயரும் அமெரிக்கரும் அவ்வெற்றியைத் திக்கெட்டும் முழங்கக் கொண்டாடியதை நாம் அறிவோம். ஏன்? நாமுங்கூட ஆங்கிலேயன் காட்டிய ஆணை வழியே அவ்விழாவினைக் கொண்டாடினோம். ஆனால், அன்று வாழ்ந்த கவிஞன், அவ்வெற்றியினை வெற்றியாகக் கொண்டானா? அன்று சோழன் கரிகாலன் நாட்டிலேயே பிறந்து, அவனுக்கே வெற்றி விழாக் கொண்டாடல் தக்கதன்று என்று அறிவுறுத்திய வெண்ணிக் குயத்தியாரைப் போன்றே, அந்த ஆங்கில நாட்டிலேயே பிறந்து, அந்த ஆங்கில நாட்டு மக்களது வெற்றி விழாவை எள்ளி நகையாடியதோடு, அவ்விழாக் கொண்டாடிய வர்களை அறிவற்றவர் என்றும் சொன்ன ஒரு கவிஞனை நாம் மறந்துவிட முடியுமா? ஆம். அவன்தான் அறிஞன் 'பெர்னார்ட்ஷா'. நாடெங்கும் வெற்றிக் கொடி நாட்டி, விழா எடுத்துச் சிறப்புச் செய்த அந்நாளில் அவன், 'ஜெர்மனிமேல் வெற்றி கொண்டதை விழாவாக அறிவிலிகள் கொண்டாடு கிறார்கள்,'[1] என்று கூசாமல் சொன்னானே! அக்கவிஞன் உள்ளத்து எத்துணைத் திடம் இருந்திருக்க வேண்டும்! அவன் கூற்றுக்குக் காரணமும் காட்டினானே! 'பரந்து கிடக்கும் உலக சமுதாயத்தின் ஒரு பகுதியாகிய ஜெர்மனியை அழித்ததற்காக மற்றொரு பகுதியா விழாக் கொண்டாடுவது? உடலில் ஓர் உறுப்பு அழிந்தது என்றால் மற்றோர் உறுப்புக்குக்

---

1. 'The fools are celebrating the victory over Germany'

கொண்டாட்டமா? உலக நாகரிகத்தில் ஒருவகைப்பட்ட நாகரிகம் நலிவுற்றதென மற்றவை மகிழ்வதா?" இவ்வாறே அக்கவிஞன் அஞ்சாது அடுக்கிக்கொண்டே செல்கின்றன் கேள்விகளை. இத்தகைய வீர உள்ளத்தோடு வாழ்ந்த கவிஞர்கள், அன்றுமுதல் இன்றுவரையில் வெற்றிவீரராக வாழ்வதைக் கண்ணுரக் காண்கின்றேமே! இவற்றின் மூலம் கவிஞர் வாழ்வு—தனி வாழ்வாயினும் சரி, பொது வாழ்வாயினும் சரி—வெற்றி பெற்றது என்றுதானே கொள்ள வேண்டும்? அவர்தம் வெற்றி அவர் பாடிய கவியின் வெற்றியேயாகும். அவர்தம் கவிகள் வெற்றித்திருவென அமைவதற்கு அவை நலம்பல நிரம்பப் பெற்றனவாக இருக்கவேண்டும். அக்கவிகளின் நலத்தைத் தொடர்ந்து காணலாம்.

இதுகாறும் கூறியவற்றுல், கவிஞர் வாழ்க்கை எப்படி அமைந்ததென்பதும், அவர் தனிவாழ்வில் செல்வமற்று வறுமையில் வாடியபோதிலும் அவ் வறுமையைப் போக்க நாட்டில் பல மன்னர்கள் முன் நின்றதால் அவற்றுல் கவலையுருது வாழ்ந்தனர் என்பதும், அவ் வறுமையும் அவராகவே தேடிக் கொண்டதே தவிர இயற்கையாக அமைந்ததன்று என்பதும், வறுமையிலும் மாமன்னர் கொடுக்கும் பொருள்களை மற்றவருக்கு வாரிக்கொடுத்து ஈத்துவக்கும் இன்பத்தில் தமது வாழ்வின் வெற்றியைக் கண்டனர் என்பதும், அவர்தம் வாழ்க்கையைக் குறியாகக் கொள்ளின் யார் எதைக் கொடுத்தாலும் ஏற்பர்; ஆனல், அவ்வாறு செய்யாது தம் கவிநலம் கண்டு போற்றுவாரையே புகழ்ந்ததால் அவர்தம் வாழ்வையே குறிக்கோளாகக் கொண்டவர் அல்லர் என்பதும், முடி சார்ந்த மன்னரும் மற்றவரும் அப் புலவர் வாய்மொழிக்கு ஏங்கித் தவித்தனர் என்பதும், தனிவாழ்வில் மட்டுமன்றிப் பொது வாழ்விலும் கவிஞர்கள் பங்கு கொண்டு, நாடும் உலகமும் வாழப் பாடுபட்டு அத்துறையிலும் வெற்றிக் கண்டார்கள் என்பதும், போர் உண்டாகாமலும், போலி வெற்றியில் வெறி கொள்ளாமலும், மன்னரையும் மற்றவரையும் தடுத்துச் சிறந்தார்கள் என்பதும், எனவே, கவிஞர் என்றென்றும் வெற்றியிலேயே வாழ்ந்தவர்கள் என்பதும் நன்கு புலனுகும்.

5. கவிதை நலன்

கவிதைக்கும் கவிஞருக்கும் உள்ள தொடர்பையும், கவிதை கலையாவதெதென்பதெப்படி என்பதையும் மேலே கண்டோம். அக்கவிதை, கலைஞர் உண்டாக்கிய ஒன்று. 'கவிஞர் நல் உள்ளத்தால் தீட்டிய உயிரோவியம் கவிதை எனினும், கவிதை கவிஞருக்கு அடிமையா, அன்றி உடைமையா?' என்ற கேள்விக்கு விடை காணுவது அவ்வளவு எளிதன்று. 'கவிதை, தன்னைப் படைப்பவன்மேல் ஆதிக்கம் செலுத்துகின்றதா? அல்லது அவன் வழியேதான் தலை சாய்த்து நடக்கின்றதா?' என்பது ஆராய வேண்டிய ஒன்றுதான். சாதாரணமாகக் கவிஞன் கவிகளை இயற்றுவதனால், அவன், அவற்றை அடக்கியாளும் திறமையில் வல்லவன் என்றுதான் கொள்ளத்தோன்றும். 'மோட்டார் வண்டியைச் செய்தவன் ஒருவன், அதன் தலைவனாய் இருந்து, அதைச் செலுத்துகின்றவனாகி, அதைத் தனது விருப்பம் போலவெல்லாம் செலுத்த முடியும். அதுபோன்றே கவிஞனும் தன் விருப்பம் போலெல்லாம் கவிதையை ஈர்த்துச் செல்லமுடியும்,' என்று சிலர் நினைக்கக்கூடும். ஆயினும் கவிதை அத்துணை எளிமையில் அமைந்துவிடும் பொருளாக இல்லை. மேலை நாட்டு ஆராய்ச்சியாளர்கள், 'கவிதை, கலைஞனுக்கு மேற்பட்டது; அவனை அடக்கியாள்வது; அவனை அடிபணிய வைப்பது,' என்றுதான் கூறிச் செல்கின்றார்கள். பிராட்லி என்ற ஆங்கில ஆய்வாளர், 'கவிதை நம் பணியாளன்று; அது நம் தலைவன்,' என்கிறார்.[1] மற்றொரு புலவராகிய கிளட்டன் புரூக் என்பவர், 'கலை நம் நீதிபதி' என்கிறார்.[2] எனவே, கவிதை மனிதனால் ஆக்கப்

1. Poetry for Poetry sake, by A C. Bradly, M. A.,LLD.
2. Essays, Literature and Life, by A Clutton-Brook.

பட்டது என்ருலும், அது அவன் மேலும் ஆதிக்கம் செலுத்தும் ஒன்று என்பது புலஞகும். ஒரு நல்ல கவியை அதனை இயற்றிய நல்லாசிரியனே திருப்பிப் படிப்பாஞயின், அதில் தான் எழுதும் காலத்தில் கொண்ட கருத்தினும் மற்ருெரு புதுக் கருத்தும் அமைந்திருப்பதைக் காண்பான். தான் ஒரு பொருளைக் கருத்திற்கொண்டு இயற்றிய அந்தக் கவிதை, இப்படி பல்வேறு வகையில் பரந்து பொருள் பெற்று விளங்குகின்றதென்பதை நோக்க, அவனே வியப்படையவும் கூடும். அவன் இயற்றிய அந்தக் கவிதையே அவனைப் பலப்பல இடங்களுக்குப் பற்றி ஈர்த்துச் செல்லும் திறன் சிறந்த ஒன்றல்லவா? அது மட்டுமன்று; மேலை நாட்டுப் புலவர் கூறியவாறு அது கவிஞனை அளவிட்டு உலகுக்குக் காட்டுகின்ற ஒரு நீதிபதியாகவும் இருக்கிறது. ஒரு புலவனது கவிதையைக் கொண்டு, அவன் காலத்தில் வாழ்கின்றவர்கள் மட்டுமன்றி, அக்கவிதை உலகில் வாழும் வரையில், அக்கவிஞனைப் பற்றிய செயல்களையெல்லாம் அளவிட்டுரைக்க முடியும். அந்த நிலையில் அவன் உடலால் இறந்தவன்தான் என்ருலும், உலகில் சிரஞ்சீவியாக வாழ்கின்றவனே. திருவள்ளுவரின் திருக்குறளைப் பயிலும் காலத்தும், எடுத்துப் பாராட்டும் காலத்தும், 'என்று திருவள்ளுவர் கூறுகின்ருர்' என நிகழ்காலத்திலேதான் கூறுகின்ருேம். இந்த முறை எந்நாட்டுக் கவிஞருக்கும் பொருந்தும் ஒரு பொது நீதியே. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்வாழ்ந்து மறைந்தவரை அவர் நூல் பற்றிக் குறிப்பிடும்போது 'கூறுகிருர்' என்று நிகழ்காலத்தால் அவரே நேரில் கூறுவதுபோலக் கூறவைத்தது கவிதானே? ஆம்; கவியே கவிஞனை அமரஞக்கியது; ஆகவே, அது அவன் தலைவன் தானே?

மற்றும் ஒருவன் கவிதையைக் கொண்டே அவனையும் அளவிட முடியும். மேலை நாட்டில் எத்தனையோ ஆய்வு நூல்கள் ஒவ்வொரு கவிஞனைப் பற்றியும் வெளி வந்துகொண்டிருக்கின்றன. அவனுக்குப் பின்னல் வரும் அத்தனை ஆய்வாளர்களும், அவனைக் கவிதை மூலமே ஆராய்ந்து, அவனைப்

பற்றிய விமரிசனங்களை எழுதுகின்றார்கள். இப்போது நம் நாட்டிலேயும் ஒரு நூலைக்கொண்டே அதன் ஆசிரியனைப்பற்றி அறிய ஓரளவு முற்படுகின்றனர். அதன்மூலம் அக் கவிஞனை, நல்லவன் என்றோ தீயவன் என்றோ அறிந்துகொள்கின்றோம். எனவேதான் கவி, அவனைப்பற்றி அறியும் நீதிபதியாகின்றது. இது நிற்க.

ஆராய்ச்சியைப்பற்றி எண்ணும்போது நம் தமிழ் நாட்டின் நிலை நமக்குத் தெரியாமல் இல்லை. மேலை நாட்டுக் கவிதைகளைப் பற்றிய ஆராய்ச்சி நூல்கள் ஆயிரக்கணக்கில் வந்து கொண்டிருக்கின்றன. அவர் நாட்டு உயர்ந்த கவிஞர்களாகிய ஷேக்ஸ்பியரைப் போன்ற பலருடைய கவிதைகள், ஆயிரக்கணக்கானவர்களால் ஆராயப்படுகின்றன. ஆனாலும் நம் நாட்டில் அத்தகைய ஆராய்ச்சி இல்லை. 'திறன் ஆய்வு' என்ற துறை இன்னும் நேரிய முறையில் தமிழ் நாட்டில் தோன்றவில்லை என்றே சொல்லலாம். 'திறன் ஆயும்' திறம் உடையவர்கள், நாட்டில் இல்லாத குறையன்று, நாட்டில் திறன் ஆய்வு நூல் உண்டாகாமைக்குக் காரணம். ஆனால், தமிழ் நூல்களை ஆராயக்கூடாது என்ற ஒரு மனப்பான்மை நாட்டில் வளர்ந்துவிட்டது. அப்படியும் ஒரு சிலர் ஆராய முற்பட்டாராலும், அவரும் காய்தல் உவத்தல் அகற்றி ஆயும் நெறியினை மேற்கொண்டு செல்லவில்லை என்று கூறும்படி ஆராய்ச்சி நடத்துகின்றனர். மேலைநாட்டு ஆய்வாளர் கவிதையின் கண்ணே தம் கண்ணாகக் கொண்டு, கவிதைகளை ஆராய்ந்து, அவற்றில் உள்ள நலங்கேடுகளை எழுதத் தொடங்கி, உள்ளதை உள்ளவாறு எடுத்துரைக்கின்றனர். அவர் கூறுவது உண்மையில் குற்றமாயின், அந்நூலைத் தலைமேற்கொண்டு போற்றும் உயர்ந்தவர்களுங்கூட அந்த ஆய்வினை மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள். ஆய்வாளரும் தாம் முன்னரே வரையறுத்த ஒரு முடிவின்படி, அதை ஆராயத் தொடங்க மாட்டார். ஆனால், இங்குத் தமிழ்நாட்டின் நிலையே வேறாய் இருக்கின்றது. நாட்டில் நல்ல இலக்கியங்களுக்குக் குறைவில்லை; சங்ககால இலக்கியங்கள் தொடங்கி, இந்த நூற்றாண்டின் கவிதைகள் வரையில் தமிழ்க்

கவிதை பரந்த கடலெனக் காட்சி அளிக்கின்றது. எனினும், இடைக்காலத்தில் உண்டான பல கவிதைகள் சமயம்பற்றி அமைந்தனவாய் வெளி வந்துள்ளன. மற்றும், ஒவ்வொரு புலவரும் தாம் கொண்ட கருத்தை வலியுறுத்திப் பாடும் வகையில் சில பாடல்கள் அமைந்துள்ளன. சங்க கால இலக்கியங்களும் காவியங்களும் பலராலும் விரும்பி ஏற்கப்படுகின்றன. எனினும், ஆய்வாளர் ஒரு சிலர் தம் கருத்துப்படி அக் காவியங்கள் அமையவில்லையாயின், அவற்றை ஏற்க மறுப்பதோடு, ஒதுக்கித் 'தமிழ் இலக்கியங்கள் வரிசையில் வைக்கத் தகாதவை', என்று கூறும் அளவுக்குச் செல்கின்றனர். தவிர, இந் நாளில் மட்டுமன்றி இடைக்காலத்திலும் சமயப் போராட்டமும் பிற மாறுபாடுகளும் நாட்டில் நிகழ்ந்துகொண்டே இருந்தமையின், இலக்கியங்களும் அப் போராட்டங்களுக்கு இலக்காயின. இன்றுங்கூடச் சைவ வைணவர்களிடையில் அப் போராட்டம் இல்லை என்று சொல்ல முடியாது. பெரிய புராணத்தைத் தொட விரும்பாத வைணவரும், கம்ப ராமாயணத்தைப் படிக்க விரும்பாத சைவரும் இன்றைக்கும் நாட்டில் இல்லாமல் இல்லை. இரண்டும் ஒவ்வொரு சமயம் பற்றி எழுந்த நூல்களேயாயினும், அவற்றில் அமைந்த கவிதைப் பண்புகளை அறியவேண்டும் என்ற நல்லெண்ணம் சில சமயங்களில் நல்ல அறிஞர்களுக்குக்கூட உண்டாகாமற் போவதுதான் வியப்பாக உள்ளது! சைவ சமயத்தில் உள்ள நல்ல ஆய்வாளன் கம்பர் காவியத்தில் புகுந்து திறனாய்ந்து தேர்வானாயின், பல நல்ல உண்மைகள் புலப்படும். அதே போன்று, வைணவத்திறன் ஆய்வாளன் பெரியபுராணத்துள் புகுவானாயின், பல புதையல்களைக் கொண்டு வரக்கூடும். எனினும், அந்த நிலை இன்னும் நாட்டில் அமையவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

தமிழ் நாட்டில் அன்றும் இன்றும் திறனாய்வாளர்கள் குறைவு என்பது உறுதி. அதற்குக் காரணம். பெரியோர்கள் பாடிய கவிதைகளின் நலக்கேடுகளை ஆராயக்கூடாது என்ற ஒரு கண்மூடி வழக்கமே இந் நாட்டில் இருந்து வந்ததாகும். திருவாசகத்தை எடுத்து ஆராய்ந்து, அதுபற்றிய நலக்கேடு

பிரித்து, எடுத்துரைத்தால், சில சைவர்கள் அடிக்கவே வந்து விடுவார்கள். சில இலக்கியங்களைப் பதம் பிரித்து அச்சிடுவது கூடத் தவறு என்று கூறுவார் சிலர். 'பெரியோர்கள் எழுதி வைத்த பாடல்களைப் பற்றிப் பேச இவன் யார்?" எனச் சிலர் வாதிட ஆரம்பிப்பர். எழுத்தெழுத்தாகப் பிரித்து, தொடர் தொடராக ஆராய்ச்சி நடத்திப் பல கவிதைகளைப் பாராட்டிய எடுத்துக் காட்டும் மேலைநாட்டுத் திறனாய்வாளர்கள் இந்நிலை கண்டால் நம்மை எள்ளி நகையாட மாட்டார்களா?

ஆனால், நம் நாட்டில் உள்ள திறன் ஆய்வாளருள் ஒரு சிலரைப்பற்றியும் எண்ணத்தான் வேண்டும். ஒரு நூலை எடுத்து ஆராயத் தொடங்குமுன்பே, அந்நூலைப்பற்றி ஒரு விதமான எண்ணத்தைத் தம்உள்ளத்தே உருவாக்கிக் கொள்ளு கின்றனர், அவர் தம் எண்ணப்படியே எடுத்த நூலைப்பற்றி ஆராய்ந்து விடுகின்றனர். தமக்கும் தம் கொள்கைக்கும் ஏற்காத நூல்களைத் துருவித் துருவி ஆராய்ந்து, அவற்றில் எங்கே குற்றங் குறைகள் உண்டு என்று கண்டு, அவற்றை மட்டும் எடுத்துக் காட்டி, 'ஆகா! இந்த நூலில் இத்தனைக் குறைபாடுகள் உள்ளனவே!' என்று பழித்துரைக்கத் தொடங்கி விடுகின்றனர். பழித்துரைப்பதோடு, அந்நூல் நாட்டில் இருக்கவே கூடாது என்ற அளவு பிரசாரமும் செய்துவிடு கின்றனர். ஆனால், அதே வேளையில் அந்நூலில் உள்ள நற்கருத்துக்களை எடுத்துக்காட்ட விரும்புவதில்லை. அவர்கள் மனம், இதே முறையில் அந்நூலைப்பற்றி முன்னமே நன்முடிவு கொண்ட ஒருவர் அதில் குற்றமே இல்லை எனவும், தெய்வ நூலில் குறை காணுவது தவறு எனவும் கூறி, அவரைக் கண்டிக்க முற்படுவர். இருவர்தம் செயலும் பொருத்தமுடைய தாகாது. எதையும் ஆராய்ந்து, நலங்கேடுகளை அறிந்து, உள்ளதை உள்ளபடி உலகுக்கு உணர்த்தி, சீர்தூக்கி நிற்பதே திறனாய்வாகும். அச்செயலைச் செய்பவனே சிறந்த அறிஞனவன்.

மேலைநாட்டுத் திறனாய்வாளர்களைப் பற்றிக் கூறும் விளக்கம், சற்றுப் பயன் உடைத்தாகும் எனக் கருதுகின்றேன். திறன் ஆய்வாளன் என்பான் நீதி மன்றத்து நடுவணர்

போன்றவன்;[1] நல்லதன் நலனும், தீயதன் தீமையும் ஆராய்ந் தறிந்து நேர்மை வழுவா நிலையில் முடிவு சொல்லத் தக்கவன். கைதிக் கூண்டில் நிற்கும் ஒருவன் உயிர், அந்த நீதிபதியின் கையில் இருக்கிறது. அந்த வழக்கைப்பற்றி நன்கு ஆராயாது, ஒரு வேளை அவன் குற்றம் செய்யாதவனுயிருந்தும், அவனுக்கு மரண தண்டனை விதிப்பின் என்னுவது? அக்கூண்டுக் குற்றவாளி மரணமடைவது ஒருபுறமிருக்க, அந்த நீதிபதியின் பண்பாடும், நீதிமன்றத்தின் நேர்மையும் கெட்டொழியு மன்றோ? ஆம்! இதனாலன்றோ, தான் ஆராயாது கொடுமை இழைத்துக் கோவலனைக் கொலை செய்த பாண்டியன் நெடுஞ்செழியன், அச்செயல் தன்னைப் போன்ற மன்னர் செவிப்படுமுன், "தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலனாய்" அரசு கட்டிலில் உயிர் துறந்தான். அந்த நிலையிலேதான் திறனாய்வும் அமைகின்றது. நல்ல இலக்கியங்களைத் திறனாய்ந்து அவற்றின் நலன் காண விரும்புவோர் வழுக்கி விழலாகாது. தம் கொள்கையை அதில் புகுத்திப் பொருள்காண முயல லாகாது. தமக்கு விருப்ப மிருப்பினும், இல்லையாயினும், எடுத்துக்கொண்ட கவிதையில் உள்ள நலங்கேடுகளை அப்படி அப்படியே காட்டல் வேண்டும். ஒன்றைக் காட்டி ஒன்றை மறைப்பதோ, தம் கருத்து அதில் காணவில்லையானால், அந் நூல் நாட்டுக்கே ஏற்றதன்று என்று கூறுவதோ திறனாய்வாள னுக்குப் பொருந்திய செயலாகாது.

இந்த நிலை நம் நாட்டில் உண்டாகக் காரணம் ஒன்று தான்: கலையை, இலக்கியத்தை, கவிதையை அரசியலோடு இந்நாட்டில் இன்று பிணைத்துப் பார்க்கின்றார்கள். அதுவே உண்மைக் கவிதை நலனை உணர முடியாது இடர்ப்படும் வழியாகின்றது. அரசியல் சதுரங்கத்தில் கால் வைத்து விளையாட நினைக்கின்றவர்கள், கவிதை இயற்றட்டும்; கற்பனையில் திளைக்கட்டும். ஆனால், முன்னர் இயற்றிய

1. The Oxford English Dictionary, Vol. II Critic—one who pronounces judgement on anything or person.

கவிதைகளை ஆராய்ந்து, அவற்றில் தத்தம் அரசியல் கொள்கைகளைப் புகுத்த முற்படுவது சற்றும் பொருந்தாததாகும். அரசியல் வேறு, கவிதை வேறு. அரசியல் நாளைக்கு ஒரு விதமாக மாறலாம். ஆனால். கவிதையின் அடிப்படையான பண்பாடு என்றும் மாறாது. எனவே, இரண்டையும் பின்னிப் பிணைப்பது எவ்வாறு பொருந்தும்? இது நிற்க.

ஒரு நூலை ஆராய வேண்டுமாயின், அதை முற்றும் பல முறை பயின்று, ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றும் கருத்துக்களை வரிசைப்படுத்தி, அவற்றின் நலங்கேடுகளை ஆராய வேண்டும். அவ்வாறன்றி, இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில பாடல்களைப் படித்து, அவற்றின் அளவிலே நூலைக் கண்டு விட்டதாகச் சொல்லுதல் முடியுமா? 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம்' என்பதை, எதற்குப் பொருந்துமோ, அதற்குப் பொருத்த வேண்டும். கவிதை உலகில் ஒன்றைப் பதம் பார்த்து அனைத்தையும் முடிவு கட்டுதல் எவ்வாறு இயலும்? ஒரே கவிஞன் இயற்றும் ஒரே காவியத்திலேயே பல ஏற்றத் தாழ்வுகள் இருக்கத்தான் செய்யும். ஏற்றத்தை மட்டும் கொண்டு அக்காவியமே அவ்வாறு ஓங்கியது என்றோ, அன்றித் தாழ்வைக் கொண்டு அவ்வாறே தாழ்ந்தது என்றோ கொள்ளுதல் அறிவுடையதாகுமோ? நூல் முழுவதையும் நுணுகி ஆராய்ந்து அவ்வாராய்ச்சியை உலகுக்குப் பயன்பட வைப்பதே திறனாய்வாகும். மேலை நாட்டுக் கவிதைகள் பலவும் அவ்வாறே ஆராயப்பெறுகின்றன. இங்கோ, அந்த நிலை இல்லை.

நம் நாட்டு ஆய்வு முறையில் மற்றொரு குறையும் நேர்கின்றது. தமிழ் நாட்டு இலக்கியங்களில் பல, இப்போது தேவைப்படாதவை எனச் சிலர் பேசுவதைக் காண்கின்றோம். பிற நாட்டார் கலப்பால் நாட்டில் சில இலக்கியங்கள் வளர்ந்துள்ளன. அவற்றை அடியோடு வேண்டா என ஒதுக்க விழைகின்றனர் சிலர். அவற்றை இலக்கியங்களாக—கவிதைக் கோவைகளாக—கொள்ளின் வரும் இழுக்கென்னையோ? பெரிய புராணமும் கம்பராமாயணமும் எரிக்கப்பட வேண்டிய நூல்கள் எனப் பேசும் அளவுக்குத் தமிழர் ஆராய்ச்சி செல்கிறது.

அவற்றின் இலக்கியத் திறன்ஆய்வு காண இயலாமையே அக் குறைபாட்டிற்குக் காரணம். கம்பராமாயணத்தில் தொடங்கிய ஒன்று, இன்று சங்க இலக்கியம் வரை சென்றுள்ளது. சிலப்பதிகாரம் வேண்டா எனச் சிலரும், பதிற்றுப்பத்துப் போன்ற இலக்கியங்கள், சங்க இலக்கியங்களே அல்ல எனச் சிலரும் பேசுகின்றனர். இவ்வாறே தம்கொள்கைக்கு ஒவ்வாதன வென்று சங்க இலக்கியங்களும் திருக்குறள் போன்றவையும் பிறவும் ஒதுக்கப்பட்டு நிற்பின், இறுதியில் இவர்கள் தமிழ் இலக்கியம் என்று எதை வைத்துக்கொண்டு தங்கள் கலையும் பண்பாடும் உயர்ந்தன என்று பேசுவார்களோ? யாமறியோம்!

ஆராய்பவன் மட்டுமன்றிக் கவிதை ஆக்கும் புலவனும் அவ்வாறே நடுவுநிலை பிறழாதவனாய் இருக்கவேண்டும். மனிதனுக்கென்று கொள்கைகளும் பிறவும் இருப்பதில் தவறில்லை. அக்கொள்கையை உலக மக்களுக்குப் பொதுவாகப் பயன்படுத்தும் வகையில் கவிதை இயற்றும்வழிச் செலுத்தினால், அக் கவிதைகள் சிறந்தவையாக மாட்டா. நாம் மேலே கண்ட நீதிபதியின் உவமை, ஆய்வாளனுக்கு மட்டுமன்றிக் கவிஞனுக்கும் பொருந்துவதாகும். கவிஞர்கள் காட்டிய வழியிலேதான் இன்றும் உலக மக்களில் பெரும்பாலார் செல்கின்றனர். எனவே, அவர்களை நடத்திச் செல்லும் பெரும் பொறுப்பை ஏற்ற கவிஞன், தன் மனம்போனபடி கவிதையை எழுதுவானாயின், 'கவிதை' அப் பெயர் பெறத் தகுதியற்று மாய்வது திண்ணம். அதுமட்டும் மாய்ந்தால், நமக்குக் கவலையில்லை. எவ்வகையாலோ அவனைப் பின்பற்றிச் செல்லும் பற்பலர் வாழ்விழந்து வருந்துவரே என்பதை எண்ணும்போது வருந்தாதிருக்க முடியுமோ? மேலை நாட்டுப் புலவருள் ஒருவரான 'ரிட்லி' என்பவர் கொள்கைக்கு அடிமையாகாத கவிஞனே சிறந்தவன் என்றும், அவனே காலங்கடந்த கவியாக வாழ முடியுமென்றும், மற்றவரெல்லாரும் வெறி கொண்டு, துளும்பும் கால எல்லையில் கட்டுண்டு மடிவர் என்றும் திட்டமாக எழுதிச் சென்றுள்ளார்.[1]

---

1. Poetry and the ordinary reader, by M. R. RIDLEY

மற்ருெரு மேலை நாட்டுப் புலவர் கவிதையைப்பற்றிக் கூறும் பண்பாட்டினையும் ஆய்வாளர் நோக்கவேண்டும். உலகில் எத்தனையோ மொழிகள் பேசப்படுகின்றன. அவற்றுள் தொன்மை வாய்ந்தவை சில; தோன்றிய காலம் கணக்கிட முடியாத வகையில் அம்மொழிகள் வாழ்கின்றன. அவற்றுள் சிறந்ததாகிய நம் தமிழ் மொழியும் ஒன்று—ஏன்—உயர்ந்தது என்றும் கூறிக்கொள்ளப் பெருமையாகத்தான் இருக்கிறது! அந்த மொழிகளைப்பற்றி ஆராய்கின்ருர் புலவர். 'மொழி முதற் காரணமாம் அணுத்திரள் ஒலி எழுத்து,' என்று எழுத்துக்கு இலக்கணம் கூறினுர் பவணந்தியார். ஒலி அணுக்கள் ஒன்று சேர்ந்தே எழுத்தென்னும் உருப்பெற்றன. அவ்வெழுத்தின் வரி வடிவம் தோன்ற நெடுங்காலத்துக்கு முன்பே ஒலி வடிவம் உண்டாகியிருக்க வேண்டும். ஒலியால் உள்ளத்தை அறிந்து, அவ்வொலியைச் செம்மைப்படுத்தி எழுத்தாக்கி, உதட்டசைவால் அதன் பொருளை விளக்கிப் பின் வடிவாக்கி எழுத்தினை உண்டாக்க எத்தனை எத்தனை ஆயிரம் ஆண்டுகளோ கழிந்திருக்கவேண்டும்! அவ்வாறு உண்டான ஒலி அமைப்புக்களும், வரி அமைப்புக்களும் நாட்டுக்கு நாடு மாறியே வந்துள்ளன. மொழிநூல் ஆராய்ச்சியாளர்கள் உலகில் எத்தனையோ மொழிகளைக் கணக்கிட்டுள்ளார்கள். அவற்றுள் சில இன்று வழக்கிழந்தன; சில வாழ்கின்றன; சில செழிக்கின்றன. இத்தகைய மொழிகளின் வளர்ச்சியை எண்ணின், இவற்ருல் யாருக்குப் பயன்? இதையும் எண்ணிப் பார்க்க வேண்டுமன்ருே?

மனிதன் தன் உள்ளக் கருத்தை வெளிகாட்டிப் பயன்பட உதவுவதே மொழி. விலங்குகளும் பிறவும், கத்தியும், கதறியும் வேறுவகையாகவும் தம் கருத்தை உணர்த்த, அறிவறிந்த மனிதன், தன் கருத்தை மற்றவர் உணர்ந்துகொள்ள 'மொழி' என்னும் சாதனத்தைக் கண்டு பிடித்துக்கொண்டான். ஆஞல், அதற்காக அவன் நெடுநாள் உழைத்திருப்பான் என்ருலும், அம்மொழி தனக்காக ஏதாவது நன்மையைத் தேடிக் கொள்ளுகின்றதா என்ருல், இல்லையென்றுதானே கூறமுடியும்?

மொழியால் அதற்கு என்ன நன்மை? தமிழால் தமிழுக்கே நன்மை உண்டா? தமிழன் என்னும் மனிதன் வேண்டுமாயின் அம்மொழியால் தான் எவ்வெவ்வாறு உயர்ந்துள்ளான் என்பதை எண்ணிப் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடும். ஆனால், அதனால் மொழிக்கென்ன பயன்? தனக்கென ஒரு பயனையும் எதிர்பாராமலே மொழி மக்களுக்குத் தொண்டு செய்கிறது. கலையின் நிலையும் இத்தகையதே என்க் காட்டுகின்றார், மேனாட்டுப் புலவர் ஒருவர்.[1] மொழி பிறவற்றை விளக்கு வதற்காகவே வாழ்வது போன்றுதான், கலையும் கலைஞனும் வாழக் காண்கிறோம். கலை தனக்கென்ன ஒன்றையும் தேடி வைத்துக்கொள்ளவில்லை. தான் பெருமைப்பட வேண்டும் என்று தருக்குக் கொள்ளவுமில்லை. கலைஞனும் அத்தகைய வனே. மேலே கலைஞர் வெற்றியிலே கண்ட பல காட்சிகள் அவ் வுண்மையை வலியுறுத்தும். கலைஞர்கள் தமக்கென வாழ வேண்டும் என்று திட்டமிட்டிருப்பார்களாயின், எவ்வளவோ செல்வமும் சீரும் பெற்று உலக வாழ்வில் ஓங்கியிருக்கக்கூடும். ஆனால், அந்த வாழ்க்கையில் அவர்தம் கவிக்கு வெற்றி யுண்டாகுமா என்று ஐயந்தான் உண்டாகும்.

இனி, கவிதையின் நலனைக் காண முயலின், அதில் முழு வெற்றிபெற முடியுமா என ஐயம் தோன்றலாம். நல்ல கவிதைகளைக் கண்டு, அவற்றில் எங்குச் சுவையுள்ளது என ஆராய்தல் முடியாதுதான். கவிதையின் திறன் ஆயும் ஒருவன், அதன் ஒவ்வொரு பகுதியையும் உற்று அறிந்தால்தான் தன் மனமறிய முழுத்தொண்டு செய்தவனாவான். கவியின் இனிமையோ, அதன் நலமோ, கவிதையின் ஓர் இடத்தில் மட்டும் நின்று மின்னல்போல மறைந்துவிடக் கூடியதன்று. சூடேறிய வெந்நீரில் அந்தவெப்பம் எவ்விடத்தும் பரவியுள்ளது போன்று, கவிதையிலும் அடிமுதல் முடிவரையும் அதன் நலன் நிரம்பி இருத்தல் அவசியமாகும். அப்படி நிரம்பி இருக்கின்ற

1. Tta idea of a Great Poetry, by LASCELLES ABERCROMBIE

கவிதையிலே திறன் ஆய்ந்து செம்மை காண விரும்புவோர் எப்படி இரண்டோர் இடத்தை மட்டும் கண்டுகொண்டு முடிவு செய்ய முடியும்? அவர்களும் கவிதை முழுவதிலும் தோய்ந்து, தாமே அக்கவிதையாக மாறி, அனைத்திலும் ஆழ்ந்து ஆய்வை மேற்கொண்டால்தான், கவிதைநலம் சிறந்து விளங்கக் காண முடியும். இவையெல்லாம் நல்ல உள்ளம் வாய்ந்த மெய்க் கவிஞர்தம் கவிதைகளுக்குப் பொருத்தமான ஆய்வைப் பற்றியன. கவிதையே அல்லாதவற்றைக் கவிதை என எடுத்து வைத்து ஆய்பவரைப்பற்றி நாம் ஒன்றும் கூறவேண்டா. அவர்தம் ஆய்வுகளையும், அவ்வாய்வுக்குக் காரணமான அந்தக் கவிதைகளையும், அவற்றைச் சார்ந்த பிறவற்றையும் காலத் தேவன் தன்போக்கில் தரை மட்டமாக்கிக் கொண்டே போவான் என்பது உறுதி. பலவற்றை அந்த நிலையிலும் பார்த்திருக்கின்றோமே! பின் வாய்ப்பு வரும்போது அக் கவிகளைப் பற்றியும் அவற்றின் நலங்கேடுகள் பற்றியும் விளக்க மாக எடுத்து ஆராய்வோம்.

இவ்வாறு கவிதையின் நலனை ஆராய்பவர் தமிழ் நாட்டில் இருப்பதை மறந்து, அக் கவிதையின் நலன் பற்றியும், அந் நலனைச் சிறக்கச் செய்யும் பிற பற்றியும் காண்போம். கவிதை, சொல்லும் பொருளும் கலந்த ஒன்று என்பதும், சொல்லும் பொருளும் உடலும் உயிரும் போன்றவை என்பதும் மேலே கண்டவை. இரண்டும் கவிதைக்கு இன்றியமை யாதனவே. கவிஞன் கைப்பட்ட எப்பொருளும் ஏற்றமுற்று விளங்கும் என்பதையும் மேலே கண்டோம். கவிதை, வாழ்வில் பெறமுடியாத மேம்பட்ட ஒன்று என்று கொள்வதற்குக் கவிஞன் நல்லுள்ளமும், எடுத்த பொருளும், சொல்லும் இன்றியமையாதன என்றாலும், அவற்றுடன் இன்னும் சிலவும் சேர்ந்தே அக்கவிதையைச் சிறக்கச் செய்கின்றன என்பதையும் காணல் வேண்டும். கவிதை, ஒரு நல்ல சொல்ஓவியம் எனக் கண்டோம். சொல்லும் பொருளும் கலந்து சிறத்தல் நற் கவிதைப் பண்பு. அச்சொற்கள் அமைப்பைப்பற்றி ஒன்று கூறல் வேண்டும்.

தமிழில் எடுத்ததை விளக்கப் புலவர் ஆற்றலுக்கு உறுதுணையாகத் தமிழின் எழுத்துக்களும் சொற்களும் அமைந்துள்ளன. ஒரு பொருளைப்பற்றியோ, மனிதனைப்பற்றியோ பாடும் கவிதையில் அப்பொருளின், அன்றி மனிதனின் நற்பண்பு வெளிப்படவேண்டும். மனிதனின் பண்பு கவிதையில் வெளிப்படுவ தெவ்வாறு? மனிதனுக்கு இயல்பாகப் பல குண நலன்கள் அமைந்துள்ளன! அவை கவிதை நலமாக மாற வேண்டும். மனிதன் உள்ளத்துணர்வை வெளிப்படையாக எவ்வாறு அறிவது? அவ்வாறான அவன் உணர்வை அவனது உடலே காட்டிவிடும். ஆதலினாலேதான் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியல் என்ற ஒன்றைச் செய்யுள் இயலின் முன் வைத்துள்ளார். தமிழ்த் துறையில் விளங்கும் அகமும் புறமும் கலந்தது பொருள். அப்பொருள் சிறக்கவேண்டிய இடம், மக்கள் வாழ்க்கை. அவ்வாழ்க்கையை வெளியில் காட்டுவது அவர்தம் மெய்ப்பாடே யாகும். அப்பொருளையும் மெய்ப் பாட்டையும் உவமத்தின் உறுதுணையாகக்கொண்டு செய்யுள் வழியில் விளக்கவருவதே கவிதையாகும். அக் கவிதையும் மரபு நலம் கெடாதிருக்க வேண்டும். இந்த உண்மையையே தொல்காப்பியப் பொருளதிகாரம் நமக்கு விளக்குகிறது. உவமத்தையும் மரபையும் பற்றிப் பின்னர்ப் பார்க்கலாம்.

மெய்ப்பாட்டை வெளிக்காட்டுவதே கவிதை; அதுதான் வாழ்க்கையுங்கூட. ஒருவன் உள்ளம் செம்மையுற்றுச் சிறக்கிறது என்பதை அவன் மெய்ப்படு செயலால் அறியமுடியும்; அவனது வாழ்வு அந்நிலையை விளக்கிக் காட்டும். தொல்காப்பியர் அம் மெய்ப்பாட்டை எட்டுவகையாகப் பிரித்துக் காட்டுகின்றார்; நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன அவை. இவற்றை இன்னும் பலவாறு பிரிக்கின்றவரும் உள்ளனர். அதைப்பற்றிய ஆராய்ச்சி நமக்கு வேண்டா. இந்த மெய்ப்பாட்டைக் கவிஞன் தன் கவியிடைக் காட்டும் கவிதை நலனையே நாம் காணல் வேண்டும். ஆம்! வெறும் புறத்தோற்றங்களை மட்டும் புனைந்துரை வகையாற் பாடுவதல்லது, உணர்தற்கரிய மக்கள்

உள்ளத்தையும் அளந்து அவர்தம் மெய்ப்பாட்டின் வழி வாழ்வையும் உலகுக்கு உணர்த்துவதிலேதான் கவிதை, நலன் நிறைந்ததாகின்றது. தமிழில் இத் துறையில் கவிஞனுக்கு எழுத்துக்களும் சொற்களும் பயன்படுகின்றன. தமிழில் எழுத்துக்களை இனவாரியாகப் பிரித்துள்ளார்கள். வல்லினமும் மெல்லினமும், இடையினமும் மெய்யெழுத்துக்களாகின்றன. 'இவ்வாறு மூவகைப்பட்ட இனங்கள் எழுத்தில் எதற்கு? மக்களுக்குள் இனப்போராட்டம் மிகுந்து நாடுகளைப் பொசுக்கும் பொல்லாத இந்தக் காலத்தில் எழுத்துக்களுக்குள்ளும் இனமா?' என்ற கேள்விகள் எழுதல் இயல்பே. ஆனால், இந்த எழுத்துக்கள் தம்முள் வர்க்கப் போராட்டத்துக்கு வரிந்து கட்டி நிற்கவில்லை. இவை அனைத்தும் மனிதனுக்குப் பயன்படும் கவிதை அமைப்புக்காகவே அமைந்துள்ளன. மற்றவர்களுக்காகவே இவ்வெழுத்தும், மொழியும், கலையும் வாழ்கின்றனவேயன்றி, மனிதனைப் போன்று மற்றவரை அடக்கித் தாம்மட்டும் வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் இவை வாழவில்லை. இவ்வெழுத்துக்கள் அவ்வாறு அமைந்துள்ளமை மெய்ப்பாட்டை விளக்கும் கவிக்குக் கவிஞன் வேலையை எளிமையாக்குகின்றன. எவ்வாறு?

மனிதன் உள்ளத்து வெகுளி உருவாகின்றது. உள்ளத்துண்டாகும் உணர்ச்சி மெய்வழி வெளிப்பட்டுத்தான் ஆக வேண்டும். அவ்வாறு வெளிப்படும்போது அது சொற்களாகவும் வெடிக்கும். கோபத்தால் முகம் சிவந்து, சொற்களும் இடி என முழங்கி வெளிவருதல் இயற்கை. இந்த நிலைக்கு வல்லின எழுத்துக்கள் மிகுதியும் பயன்படுகின்றன என்பர் ஆராய்ச்சியாளர்; அதற்கெனக் கம்பராமாயணத்திலும் சிலப்பதிகாரத்திலும் சிற்சில சான்றுகளையும் காட்டுவர். நாமும் அவற்றுள் இரண்டொன்று கண்டு மேலே செல்வோம்.

சிலப்பதிகாரத்தில், கண்ணகியின் வாக்கிலே இவ் வல்லெழுத்துக்களை அமைத்து அவள் சீற்றம் வெடிப்பதைக் காட்டுகின்றார் இளங்கோவடிகள். வாழ வந்த மதுரை மாநகரிலே தன் கணவன் கோவலன் கொல்லப்பட்ட செய்தி கண்ணகியின் காதுக்கு எட்டிய உடனே அவள் உள்ளம்

சீற்றத்தால் பொங்குகிறது. அந்த வெகுளி உள்ளத்தின்வழி உதட்டில் சொற்கள் உருவாகின்றன. கண்ணகி அச்சொற்களை எவ்வாறு உதிர்த்தாளோ, நாமறியோம்! ஆனால் இளங்கோவடிகள் அவள் கூற்றை இவ் வல்லின எழுத்தின் துணைகொண்டு அழகாக அவளது உள்ளும் புறமும் ஒருசேரப் பயில்வார்க்குப் புலனாகும்படி தம் கவிதையில் வடித்துள்ளார்.

'மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்;
பட்டாங் கியானுமோர் பத்தினியே யாமாயின்,
ஒட்டேன் அரசோடு, ஒழிப்பேன் மதுரையை!'

என வஞ்சினம் கூறியதாகக் காட்டுகின்றார். இவ்வடிகளுள் வல்லெழுத்து மிக்கிருத்தலே அவள் கோபக்குறியைப் புலப் படுத்தக் காரணமாயின என்பர். இதைப் போன்றே இராமாயணத்தில் பல இடங்களிலும், வேறு பல காவியங் களிலும், சீற்றத்தைக் காட்ட வல்லின எழுத்துக்கள் பெரிதும் பயன்பட்டன என்பதை அறிஞர் எடுத்துக் காட்டுவர்.

மெல்லின எழுத்துக்களின் அமைப்பையும் அசைவையும் அவற்றின் வழிக்காட்டும் மெல்லியற் பொருள்களையும் பல பாடல்கள் மூலம் விளக்குவர் ஆய்வாளர்:

'பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.'

என்பதும் அவற்றுள் ஒன்று. இது கம்பர் கைத்திறன். மங்கை ஒருத்தி கொம்பின் ஒசிந்து மெல்ல வரும் காட்சியைக் காட்டும் பாடல் இது. இதில் மெல்லெழுத்துக்கள் மிக அதிகமாய் விரவி, அம்மங்கையின் செயலை நமக்குக் காட்டுகின்றன அல்லவா?

அமைதியான இன்ப வாழ்வைக் குறிக்கும் பகுதிகளுக்கு இடை எழுத்துக்கள் பெரிதும் துணையாய் அமைவன போலும்! அதற்குச் சிலப்பதிகாரத்திலே கோவலன் கண்ணகியோடு புகாரில் சில்காலம் அமைதியாய் வாழ்ந்த நிலையினைக் காட்டும் கவிதையிலே இளங்கோவடிகள்,

'குழலும் யாழும் அமிழ்தும் குழைத்தநின்
மழலைச் செவ்வாய்க்கு மென் கிளி வருந்தியும்'

என்ற இடையெழுத்துக்களின் செயலை அழகுபடக் காட்டுவர். பிற இலக்கியங்களிலும் இவ்வாறு காட்டவும் கூடும். இந்த வகையில் தமிழ் எழுத்துக்களையும் அவற்றால் ஆய சொற்களையும் கொண்டே மக்கள் உள்ளத்துத் தோன்றும் மெய்ப்பாடுகளை உணர்த்தும் கவிதை நலன் சிறந்தது என்பதே நாம் இங்குச் சிந்திக்க வேண்டுவது. இம்முறை எல்லா இடத்துக்கும் பொருந்திய ஒன்று என்று கொள்ள இயலாவிட்டாலும், எழுத்துக்களின் அமைப்பு, மெய்ப்பாடுகளை விளக்க உதவுகின்றது என்பதை மறுக்க முடியுமா? எனவே, கவிதை நலன் இவ்வெழுத்துக்களைக் கொண்டு மேலும் சிறக்கின்றது என்று சொல்வது உண்மையன்றோ!

எழுத்து என்று சொல்லும்போது மற்றொன்று நினைவுக்கு வருகிறது. கலைகளைப்பற்றிக் கூற எழுந்த ஒரு பழமொழி நாட்டில் உண்டு. கைதேர்ந்த சிற்பி ஒருவன் தன் கைவண்ணத் திறனையெல்லாம் காட்டி, கல்லில் ஓர் அழகிய நாயின் உருவத்தைச் செய்து முடித்தான். அந்த நாயினைப் பலர் கண்டனர். கலை நலத்தில் தோய்ந்து கருத்திழந்த ஒருவன், அந்த நாயினைக் கண்டு, அதன் வயமே யாகி, அந்த நாயைப் பற்றிப் போற்றத் தொடங்கி விட்டான். ஆனால், அங்கே இருந்த அந்தப் பழைய கல்லைக் கண்டிருந்த கலைநலமறியா மற்றொருவன், 'இது ஒரு கல்லே' என்று பேசினான். இருவர் கூற்றும் அவரவர் மனப்போக்கின்படியே சரிதான். இதனாலே தான் நாட்டிலே 'நாயைக் கண்டால் கல்லைக் காணோம் கல்லைக் கண்டால் நாயைக் காணோம்' என்ற பழமொழி எழலாயிற்றுப் போலும்! கலை உள்ளம் பெறாத ஒருவனுக்கு அது கல்லாகிறது; கலையில் படிந்த ஒருவனுக்கு அங்கே கல் இல்லை; நாய்தான் காட்சி தருகின்றது. இந்தக் கருத்து, கவிதைக்கு முற்றும் பொருந்துவதாகும். கவிதை நலத்தைத் துய்ப்பார் நாட்டில் மிகக்குறைவே. அவர்கள் இவ்வெழுத்தோவியங்களில் தம்மைப் பறிகொடுத்து, தாம் கலையேயாகி, எழுத்துக்களை வெற்று வல்லின எழுத்துக்களாகக்

காணுமல், அவற்றை, அவற்ருல் ஆகிய கவிதையை, அக்கவிதையால் விளங்கும் கவினைப் போற்றிப் புகழ்கின்ருர்கள். மற்றவர்களோ, அவை வெற்றெழுத்துக்கள் என்று பேசி வாளா கழிக்கின்ருர்கள்.

இனி, இவ்வெழுத்து வழியே கவிதையில் சிறக்கும் மற்ருெரு நலத்தையும் காணலாம்; 'ஓசை உடைமை' என்பது கவிக்குரிய பத்தழகுகளுள் ஒன்று. தமிழ்நாட்டில் சங்க காலத்திலே சந்தப் பாடல்கள் இல்லை என்பர். அக் காலத்தில் நாம் முன்னமே கண்டபடி வெண்பாவும் அகவலுமே அதிகமாக வழக்கத்தில் இருந்தன என அறிகின்ருேம். ஆயினும், நாட்டில் காலப்போக்கில் பல்வகைப் பாடல்கள் தோன்றின. அவற்றின் இலக்கணங்களையும் ஓரளவு மேலே கண்டோம். எப்படியோ காலப்போக்கில் அவை வளர்ந்துவிட்டன. அவற்றிற்கு ஏற்ப இலக்கணங்களும் தோன்றிவிட்டன. நன்னூலார், அந்தக் கவிதைகளை மனத்தில் வைத்து, நூல் பற்றிக் கூறும்போது 'ஓசை உடைமை' என ஒன்றையும் அழகாகக் குறிக்கின்ருர். ஓசை இனிமை உடையதுதான்; ஓசையின்றேல் உலகமே இல்லை எனலாம். ஒலி வடிவந்தானே வரி வடிவத்திற்கு முதல் இடம். ஆகவே, கவிதைக்கு ஓசை இல்லையாளுல், சிறவாதுதான். ஆனுல், பிற்காலக் கவிஞருள் சிலர் இவ்வோசை ஒன்றையே தம் குறிக்கோளாகக் கொண்டு, பொருளையும் பிற பண்புகளையும் மறந்து விட்டதை நினைக்கும்போதுதான் வருத்தமேற்படுகின்றது.

நல்ல சந்தப் பாடல்களில் ஓசை உடைமை நடமாடும் என்பதறிந்தோம். சங்கப் பாடல்களுள் சந்தப் பாடல்கள் இல்லை. ஆனுல், அவற்றையும் இசையொடு பொருத்திப் பாட முடியாதா? சிலர் நினைப்பது போன்று சங்கப்பாடல்கள் இசையோடு பொருந்தாப் பாடல்கள் என்று எண்ண முடியாது. வெண்பாவும் ஆசிரியமும் இசைக்குட்பட்டனவே. அச்சங்க காலத்து இயற்றமிழாகிய கவிதையிலிருந்துதான் இசையும் நாடகமும் தோன்றலாயின. சங்கத்தைத் தழுவ எழுந்த சிலப்பதிகாரத்தே இசையொடு கலந்த கானல் வரி, வேனில்

வரி முதலியன சிறந்துள்ளமையைக் காணலாம். பின்னர்க் கடவுள் நெறி சிறக்க வளர்ந்த காலத்தில்—தோத்திரப் பாடல்கள் சிறக்க வளர்ந்த காலத்தில்—பல்வேறு வகைப் பாடல்கள் உருப்பெற்றன. இன்னம் காலம் செல்லச் செல்ல, சந்தப் பாடல்கள் பாடுவதே பெருமை என்று மதிக்கக்கூடிய அளவில் கவிஞர் பெருமை பெறலாயினர். சிலர் அச்சந்தங்களை நாம் மேலே கண்ட மெய்ப்பாடுகளைக் குறிக்கப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். சிலர் வெறுஞ் சந்தமாகவே பாடிப் பயனற்றுக் கழிந்துவிட்டனர்.

சந்தப் பாடல்களால் சிறந்த காவியம் வில்லிபுத்தூரார் இயற்றிய பாரதம் என்பர். திருப்புகழிலே அதினும் அதிக மான சந்தங்கள் இருப்பதாகக் கூறுவர். கம்பரும் சந்தப் பாடல்களால் தம் கருத்தை ஆங்காங்குக் குறித்துள்ளார். அனைவருக்கும் முற்பட்ட விருத்தப் பாவால் காவியம் செய்த திருத்தக்க தேவர், சந்தப் பாடல்களால் கவிதையின் ஓட்டத் தையே காட்டுகின்றார்.

இராசமாபுரத்துப் பெருமாளிகையிலே மன்னவர் திருவும் தங்கள் வளநகர் சிறப்பும் பொங்கப் பிறக்க வேண்டிய சீவகன், அந்த ஊர்ப் புறத்திலேயே பலரையும் சுட்டெரிக்கின்ற சுடுகாட்டிலே பிறந்தான் என்பதை எண்ண யார் உள்ளந்தான் வருந்தாது!. புலவர் உள்ளமும் வருந்திற்று. அந்த வருத்தத் தைக் காட்டப் பாத்திரமாக அமைந்தாள் விசையை. தன் முன்னைய வாழ்வையும் அன்றைய தாழ்வையும் அவள் உள்ளம் எண்ணிற்று.

"வெவ்வாய் ஓரி முழவாக
விளிந்தார் ஈமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட் டுயர் அரங்கின்
நிழல்போல் நுடங்கிப் பேயாட
எவ்வாய் மருங்கும் இருந்து இரங்கிக்
கூகை குழறிப் பாராட்ட
இவ்வா றுகப் பிறப்பதோ
இதுவோ மன்னர்க்கு இயல்வேந்தே!" (309)

என்று அன்று பிறந்த குழந்தையை நோக்கும் உள்ளத்தைத் திறந்து காட்டுகின்றார் அவர். அதில் அச் சந்தந்தான் அவலச் சுவையை எவ்வளவு அழகாக விளக்குகிறது! அடுத்து வீரம் காட்ட விரும்பிய மற்றோரிடத்தில் அவர், வேடர்கள் அம்பு சென்ற விரைவையும், அதை ஏற்ற ஆயர் உடைந்த தோற்றத்தையும்,

'பாய மாரிபோல் பகழி சிந்தினர்;
ஆயர் மத்தெறி தயிரின் ஆயினர்; (421)

என்று சந்தம் பொருந்த விளக்கியுள்ளார். இவ்வாறே இராமாயணத்தும் பிற இலக்கியங்களிலும் பலப்பல சந்தப் பாடல்களைக் காணலாம். இப்பாடல்களால் சாதாரண மக்களுக்குக் கருத்து நன்கு விளங்கு முன்பே, இச் சந்தங்கள் ஓரளவு ஆசிரியர் காட்ட வந்த பொருளை உணர்ந்துகொள்ள உதவுகின்றன. இவ்வாறு எழுத்துக்களையும் சொற்களையும் அமைத்துப் பாடுவது அனைவருக்கும் எளிதான காரியமன்று. எப்படி எளிய பொருளும் கவிஞன் கைப்படின் சிறந்த பொருளாகக் காட்சி அளிக்கின்றதோ, அப்படியே சொற்கள் அமைப்பும் கவிஞனுடைய திறமையினாலேயே சிறப்படையும் என்பது திண்ணம்.

சொற்களால் ஆக்கப்படும் கவிதையின் நலனில் ஒன்று அவசியமாகக் காணவேண்டியுள்ளது. சொற்கள் கலந்ததே கவி என்றாலும், அச்சொற்களை அளவறிந்து பெய்து பாடுகின்ற கவிஞர் ஒரு சிலரே! கவிபுனைவதில் மட்டுமின்றிப் பேச்சிலுங் கூடச் சொல்லை அளந்து, அச்சொல்லைப் பிறர் மறுக்கா வகையில் அமைத்து, ஆராய்ந்து சொல்ல வேண்டும் என்பது தான் அறிந்தோர் முடிவு. வெறுஞ்சொற்களும் கவிதைகளில் அமையும்போது நன்கு சிறப்படைகின்றன என்ற உண்மையை 'லையான்' என்ற ஆங்கில நாட்டு ஆய்வாளர் நன்கு விளக்கியுள்ளார்.[1] கவிஞன் கவிதைகளில் சொற்கள் விளையாட்டுப் பொருள்கள் என்கிறார். ஆனால், அவ்விளையாட்டுப் பொருள்களை

1. The Discovery of Poetry, by P. H. B. LYON

அரிதில் முயன்று தேடுபவன் கவியாக மாட்டான். எல்லாச் சொற்களும், 'என்னை அழைப்பானே! என்னை அழைப்பானே!' என்று அவன் முன் மண்டியிட்டு வணங்கிக் காத்துக் கிடக்க வேண்டும். அவ்வாறு சொல்லுக்கும் பொருளுக்கும் முட்டுப்படாது, செல்வன் தன் கையால் செல்வத்தை வாரி வழங்குவது போன்று கவிஞன் கவிதைச் செல்வத்தை 'வையம் பெறுக' என வாரி வழங்குவதே நல்ல கவிதையின் நலனாகும். இவ்வாறு சொற்களால் ஆயவை கவிதை என்றாலும், எல்லாச் சொல்லும் எதிரே மண்டியிட்டு நின்று காத்துக் கிடந்தாலும், சொற்களை அமைப்பின்றி அழகின்றி அளவின்றிப் பெய்தலும் கவிதை நலத்தைக் கெடுக்கக்கூடும்.

சார்லஸ் வில்லியம்ஸ் என்ற ஆங்கில நாட்டு ஆய்வாளர், 'கவிதையில் சொற்கள் பல நிறைந்திருந்தாலும் ஒன்றும் பயனற்றதாக இருத்தல் கூடாது.' என்கிறார்; 'எத்தனை சொற்கள் இருப்பினும், அத்தனைக்கும் பொருளும் பொருத்தமும் அழகும் அமைவும் இருக்க வேண்டும்' என்கிறார். 'அக்கவிதையிலிருந்து ஒரு சொல்லை எடுத்துவிட்டாலும் அக்கவிதையின் பொருளைக்காணமுடியாத வகையில் அமைவதே மெய்க்கவிதை' என்பது அவர் கருத்து.[1] ஆம்; நம் நாட்டுச் சங்க இலக்கியங்கள் அந்த வகையில் சிறந்து நிற்பன அல்லவோ! திருக்குறளின் பெருமைக்கே அதனிடம் அசைச்சொல் அருகியுள்ளமையே காரணமன்றோ? நிலைத்த பாடல்கள் பல் வேடிக்கையாக அமைந்தன போலத் தோன்றும். ஆயிரக் கணக்கான பாடல்களால் ஆக்கப்பெற்ற ஒரு காவியத்தைப் படித்தாலும் இறுதியில் அதில் புரிந்து கொள்வது ஒன்றும் இராது. ஒரு பாடலில் எத்தனை அசைச் சொற்கள் வந்துள்ளன! பொருளற்ற சொற்களைத்தானே அசைச்சொல் என்கின்றோம்? எனவே, நல்ல கவிதையில் பொருளற்ற சொற்கள் இடம் பெறலாமா? ஒரு சொல்லிலே 'ஆ'வும் 'ஓ' வும் அசைகள் என்று

1. Reason and beauty in the Poetic mind,
by CHARLES WILLIAMS.

எழுத்துக்களைப் பிரிக்கின்றோம். சில பாடல்களில் சொற்களின் பின் சொற்கள் பொருள் தாரா அசைகளாய் இருக்கின்றன. இவையெல்லாம் நல்ல பாடல்களுக்கு இலக்கணமாகா.

கவிஞன் தன் கருத்தைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் வேண்டும். பின்னர்த் தோன்றிய நன்னூலில், நூலுக்கு இலக்கணம் கூறும்போது இதைத்தான் பத்து அழகில் முதலாவதாக வைத்திருக்கின்றார். ஆகவே, எடுத்த பொருளை, இடர்ப்பாடின்றி, வெற்றுரைகள் இன்றி, சுருக்கமாக, எளிய வகையில் விளங்க வைப்பவனே மெய்க்கவிஞனாவன். அத்தகைய இயற்கை நலன் பொருந்தியதே, கவிதை நலன் வாய்ந்ததுமாகும். நம் நாட்டில் இத்துறையில் திருவள்ளுவர் முதல்வராக எண்ணப்படுவர். அவர் தம் குறளை ஆராய்ந்து பார்த்த பெரியவர்கள், 'கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்' என்றும், 'அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்,' என்றும் கூறியுள்ளார்கள். 'அணுவையும் கடுகையும் குடைந்து ஏழ் கடலையும் எவ்வாறு புகட்ட வியலும்!' என்று வியப்பும் தோன்றும். ஆனால், வள்ளுவர் அதனினும் சிறந்த ஒரு செயலைத்தான் செய்துள்ளார். அவர் குறளில் பயனற்ற வெற்றுச் சொற்களைக் காணல் இயலுமோ?

குறட்பா, சில் சொற்களால், இரண்டு அடிகளால் ஆகிய ஒன்று. அவ்வாறு அமையும் குறட்பாக்களில் அசைச்சொற்களுக்கு இடம் எங்கே? ஒரு சிலர் இரண்டொரு சொற்களை அசைச் சொற்களென்று கருதினும், ஆழ்ந்து நோக்கின், அவற்றிற்கும் பொருள் கொள்ளல் இயலுவதாகும். அக்குறளைப் போன்று சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் பொருட்செறிவுடைய எல்லாப் பாடல்களும் கவிதை நலன் நிறைந்த பாடல்களேயாகும்.

இக்கருத்தை நன்னூலாசிரியர் பவணந்தி முனிவர் நன்கு விளக்குகின்றார். சூத்திரம் என்பது இதுதான் எனத் திட்டவட்டமாக அவர் பாயிரத்தில் வரையறுக்கின்றார்; 'சில வகை

எழுத்துக்களைக் கொண்டு பல வகையான பொருள்களை விளக்குவதே சூத்திரம்,' என்கிறார். மேலும், அது திட்பமாக நின்று, நுட்பமான பொருளையும் விளக்கும் திறன் வாய்ந்ததாகவும் இருக்கவேண்டும் என்பது அவர் கூற்று. அவர் இச் சூத்திரத்திற்குக் காட்டும் உவமை சாலச் சிறந்தது. செம்மையான கண்ணாடியை இச் செம்மையான கவிதை நலன் நிறைந்த சூத்திரத்துக்கு உவமையாகக் காட்டுகின்றார். அழகிய கண்ணாடி தன்னிடத்தே கொண்ட பொருளை எவ்வாறு திட்டமாகவும் திறம்படவும் விளக்கிக் காட்டுகிறதோ, அவ்வாறமைவதே சூத்திரம் என்பது அவர் காட்டும் சிறப்பு.

இயங்கும் படக்காட்சியைக் காணாத மக்கள் இன்றைய உலகில் இருக்க மாட்டார்கள். பார்க்குமிடமெங்கும் படக் காட்சிக் கொட்டகைகள் பரந்து நிறைந்துள்ளன. எத்தனையோ படங்கள் புற்றீசல்களெனத் தோன்றி மறைகின்றன. அப் படக்காட்சிகளில் காண்பதுதான் என்ன? வெள்ளித் திரையில் வெற்று நிழல்களே விழுகின்றன. ஆனால், நிழல்களின் உருவங்களை நேரில் காண்பது போன்று அத்துணைத் தெளிவாகவும் பெரியனவாகவும் காட்டுவது எது? படச்சுருளோ, மிகச் சிறியது; கைப்பிடியில் அடங்கக் கூடியது. ஆனால், அதே படந்தான் வெள்ளித் திரையில் அவ்வளவு பெரிதாகத் தெள்ளத் தெளிய விளங்குகின்றது; அசைகின்றது; ஆடுகின்றது; பாடுகின்றது! சாதாரண மனிதன் போலவே அனைத்தும் செய்கின்றது. அவற்றையெல்லாம் அச்சிறு படச்சுருளிலிருந்து நமக்கு உருவாக்கித் தருவது இடையிலுள்ள சிறு கண்ணாடிதானே? அந்தக் கண்ணாடி (Lens) எத்துணைச் சிறிய பொருளையும் பெருக்கிக் காட்டுகின்றது என்பதை அறியாதார் யார்? இப்போது பவணந்தியின் உவமையைப் பொருத்திப் பாருங்கள். எவ்வளவு பொருத்தமாக அமைகின்றது அது! எங்கோ பாமரர் கண்ணுக்குத் தெரியாத படச்சுருளில் உள்ள அனைத்தையும், வெள்ளித் திரையில் அத்துணைத் தெளிவாகத் திட்பநுட்பமாகத் தெரியும் வகையில் எடுத்துக் காட்டுவது அக் கண்ணாடி. அதைப்போன்று, நல்ல

கவி—நலன் நிறைந்த கவிதை—காணும் பொருளையும் அல்லாப் பொருளையும் விளக்கமாக்கி, அந்தப் பொருளையுங் கூடத் தன்னுள் அடக்கி, தன்னைப் பயில்வார் அப்பொருளை நன்கு புரிந்துகொள்ளும் வகையில் தெளிவாக விளங்க வைக்க வேண்டும். அவ்வாறு கற்றாரும் கல்லாரும் அறியாப் பொருளையும் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில், தான் காட்ட விரும்பும் பொருளை விளக்குவதே நலம் நிறைந்த கவிதையாகும். பவணந்தியாரின் வாக்கை அப்படியே தந்து மேலே செல்லலாம்.

> 'சில்வகை எழுத்திற் பல்வகைப் பொருளைச்
> செவ்வன் ஆடியில் செறித்து இனிது விளக்கித்
> திட்பம் நுட்பம் சிறந்தன சூத்திரம். (18)

என்பது நன்னூல்.

கவிதைக்குக் கண்ணாடி உவமையாய் அமைந்த நலம் கண்டோம். இனி அந்த உவமையே கவிதையின் நலத்துக்குச் சிறந்த காரணமாய் அமைகின்றது என்பதையும் காணல் வேண்டும். உவமை என்பது என்ன? அது எப்படிக் கவிதைக்கு அங்கமாகின்றது? அதனால் கவிதை சிறப்பது எங்ஙனம்? செய்யுளுக்கே உவமை சிறந்த அணியாய் அமைகின்றது. நாம் மேலே அணி இலக்கணம் பற்றி ஓரளவு கண்டோம். தொல்காப்பியர் காலத்தில் உவமைஅணி ஒன்றாகவே இருந்து அது, காலப்போக்கில் நூற்றுக்கும் அதிகமாக மாறி நின்றதைக் கண்டோம். தொல்காப்பியம், பொருளுக்கு இன்றியமையாத செய்யுளைக் கூறி அதன் இன்றி அமையாத உவமையை மட்டுந் தான் காட்டுகிறது. உவமை என்பது என்ன? அது, இரண்டு பொருள்களை ஒப்புமைப்படுத்தி, 'இது போல்வது ஒன்று' என்று ஒரு பொருளால் மற்றொன்றை விளங்க வைத்தல். விளங்காத பொருள்களை உவமை நன்கு விளக்கிக் காட்டும். காணாத பொருள்களை அறிவிக்க, கண்ட ஒன்றைக் காட்டி, 'இது போன்றது அது.' என்பதற்கு இந்த உவமை பயன்படும். ஆனால், காணாத ஒன்றைக் காட்டுவதற்கு மட்டுந்தான் உவமை

பயன்படும் என்று யாராவது முடிவு கட்டுவார்களாயின், அது தவறுகவே முடியும். உவமம் அதற்குப் பயன்படுவதோடு கவிதை நலத்தை உயர்த்தவும் பயன்படுகின்றது. கவிஞன் கற்பனைத் திறனைக் காட்டவும் உவமை பயன்படுகின்றது. மேலை நாட்டுப் புலவர் ஒருவர், 'உவமையற்ற கவிதை கவிதையே ஆகாது' என்று சொல்லுகின்ருர். அக் கவிதை, 'புனையாத புகை யுண்ட ஓவியம் போன்றது' என்பது அவர் கருத்து. எனவே, உவமை என்பது கவிதைக்கு இன்றியமையாத ஒரு பொருளாய் அமைவதோடு, அக் கவிதையின் ஏற்றத்தையும், அதைப் பாடிய கவிஞனின் கற்பனைத் திறனையும் விளக்க வரும் ஒன்று என்பது நன்கு புலனாகும். உவமை என்பது இரண்டு சிறந்த பொருளை இணைக்கும் ஒப்பற்ற பாலம் என்கின்ருர் 'லையான்' என்ற அம்மேனுட்டு ஆய்வாளர்.[1] இரு பேருர்களைப் பிரிக்கும் ஆறுகளுக்குப் பாலம் இடுவதைக் காண்கிறேம். அப் பாலத்தால் ஆற்றின் இருபக்கத்து நலன்களையும் ஒரு சேர அல்லலின்றி அனுபவிக்க முடிகின்றது. அது போன்று இரண்டு பொருள் களை நமக்குப் புலனுக்கி மகிழ்வளிக்கும் பாலமே உவமை என்பது அவர் கருத்து. மேலும், இவ்வுவமை நலம் பற்றி அவர் நன்கு விளக்கியுள்ளார்.

இரண்டு பொருள்களை ஒப்பு நோக்கிக் கண்டு, அவற்றின் தன்மை முதலியவைகளை விளக்குவது உவமைதான். என்றாலும், உலகில் எந்த இரண்டு பொருள்கள் ஒத்திருக்கின்றன? தோற்றத்தாலோ, பண்பாலோ, பிற வகைகளாலோ ஒத்திருக்கின்ற இரு மனிதரை எடுத்துக்காட்ட முடியுமா? எப்படி முடியும்? அதைப் போன்றே உலகில் வாழும் எல்லாப் பொருள்களிலும், இரண்டு ஒரே வகையில் இருப்பதைக் காண முடியாதே! எனவே. எப்படி இரண்டினைப் பாலத்தால் பிணித்து ஒற்றுமைப்படுத்திக் காட்டுவது? ஆம்; ஓரளவு இயலாத ஒரு பெரும் புதிர்தான் அது. அனைவரும் அத்துறையில் வல்லவராகி விடுவர் என்று கூற முடியாது. எத்தனையோ

1. The Discovery of Poetry, by P. H. B. LYON.

உவமைகள் கேட்க விரும்பத்தகாத வகையில் அமைகின்றன. பொருந்தா வகையில் சிலர் இரு பொருள்களைப் பொருத்த வழி ஆராய்வர். ஆனால், அவர் செயல் தோல்வியிலேதான் முடியும். எப்படிக் கவிதைப் பண்பும் அதன் நலனும் எல்லாராலும் எடுத்துக்காட்ட இயலாதனவோ, அப்படியே உவமை நலத்தை எடுத்துக் காட்டுவதுமாம். எனவே, உவமை எல்லாராலும் எளிமையாகக் கையாள முடியாத ஒன்றுதான். ஆயினும், கவியுள்ளம் படைத்து, கவிதை நலனே தன் வாழ்வின் நலன் என்று கருதி வாழும் மெய்ம்மைக் கவிஞனுக்கு இவ்வுவமை ஊற்றுப் பெருக்கென ஓடிவந்து உதவி செய்யும். அவன் கற்பனைக்கு இவ்வுவமைகள் மெருகு கொடுத்து மேன்மைப் படுத்தும். எனவே, உவமையைக் கவிஞனது ஒருசிறந்த கைவண்ணத் திறன் என்று கூறுவது பொருந்தும்.

உவமை காணாத பொருளைக் காட்டுவதற்குத்தான் உரியது எனச் சிலர் நினைப்பர் என்பதை மேலே கண்டோம். அது ஓரளவு உண்மைதான். ஆனாலும், அந்தக் காணாததைக் காட்டுவதற்கும் திறன் வேண்டாவா? எங்கேயோ வெளிநாட்டில் நடக்கும் ஒரு நிகழ்ச்சியையோ, வெளி நாட்டில் உள்ள ஒரு பொருளையோ நம் நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சியைக் காட்டியும், நாட்டில் உள்ள பொருள்களைக் காட்டியும் ஓரளவு விளக்க முடியும். வகுப்பறையில் மாணவர் முன் ஆசிரியர் உலகப் பொருள்களைப் பல்வேறு உபகரணங்களின் துணை கொண்டே, 'இது இவ்வாறு இருக்கும்,' 'இவ்வாறு சுற்றும்' என்றெல்லாம் எடுத்துக்காட்டி, காணாத—காண முடியாத—பொருள்களை விளக்குவதும் இந்த உவமையின்பாற் படுவ தொன்றாகும். ஆனால், காணாததை விளக்குவது மட்டுமன்றி, வேறு பலவற்றையும் விளக்க உவமை பயன்படுகின்றது.

எத்தனையோ உவமத் தொடர்கள் நாட்டில் சாதாரண வழக்கத்தில் இருப்பதை நாம் அறிவோம். வேகமாகப் பாயும் ஒருவனைச் செயலால் 'புலிபோலப் பாய்ந்தான்' என்கின்றோம் ஆனால், புலியின் பாய்ச்சலை நேரில் கண்டவர் எத்தனை பேர்? மற்றும் காணாததைக் கண்டதைக் கொண்டுதான் விளக்குவது

என்றால்; 'புலி போலப் பாய்தல்' கண்டதன்றே! ஆயினும், 'புலி போலப் பாய்ந்தான்' என்றால், விரைந்து பாய்ந்தான் என்பதை அனைவரும்—புலியைக் காணாதவருங்கூட—நன்கு அறிந்து கொள்வர் அன்றோ! ஆகவே, உவமை, காணாததைக் காட்ட மட்டும் வருவதன்று.

கவிஞன் உள்ளத்தில் எத்தனையோ வகையான உணர்ச்சி அலைகள் தொடர்ந்து உருப்பெற்றுக் கொண்டேதான் இருக்கும். இவை இன்ன வகையானவை என்று அறுதியிட முடியாதன. அவ்வுணர்வின் வழிப் பலப்பல பொருள்கள் உருப்பெற்றுக்கொண்டே வரும். அவ்வாறு உருப்பெற்ற பொருளாகிய கவிதைகள் சிறக்கும் வழிக்கு இந்த உவமை துணை செய்வதாகும் என்பது அறிஞர் முடிவு. அவர்தம் முடிவின் வழி, கவிதை எப்படி, எண்ணி எண்ணித்தான் பாட வேண்டும் என்ற நியதியில்லாது வெள்ளம்போலப் புறப்பட்டு வருகின்றதோ, அப்படியே உவமையும் ஒன்றையொன்று பற்றிக்கொண்டு கவிஞன் உள்ளத்திலே உதித்தோடும் பேராறு போன்றதென்பதை அறிதல் வேண்டும்.

இத்தகைய உவமை பல பாடல்களாலேதான் ஆக்கப்பட வேண்டும் என்ற நியதி இல்லை. ஒரு சொல்லிலேயும் உவமை காணலாம்; ஒரு தொடரிலேயும் உவமை காணலாம்; ஒரு பாட்டிலேயும் உவமை காணலாம். கவிதைக்குச் சொன்ன அத்தனையும் உவமைக்கும் பொருந்தும். ஒரு பொருளை முற்றிய கவிஞன் பாராட்டும் முறை மற்றவர்களுடையதை நோக்க எவ்வாறு மாறுபட்டிருக்குமோ, அவ்வாறே ஓர் உவமை மற்றவர்தம் கற்பனையைக் காட்டிலும் முற்றிய கவிஞன் வழிச் சிறப்புடையதாய் விளங்கும். பயனற்ற பொருள்கள்கூடப் புலவர் நாவில் பொதுளும் கவிதைகளால் பெருமை அடைவது போன்று, ஒன்று மற்றவைகூட, கவிஞர்தம் உவமை நலத்தால் உயர்வுறும். தீயுப் பொருள்களுங்கூட உவமை நலத்தால் உயர்த்தப் பெறும். அம்மட்டோ! சாதாரணப் பொருள்கள் கூட உவமை வழி உயர்ந்து மனிதனுக்குப் பல உண்மைகளை உயர்த்தும். கவிஞர் உவமை வழி உயர்வைத் தாழ்வாக்குவர்;

தாழ்வை உயர்வர்க்குவர். கோபுரம் குப்பை மேடாகும்; குப்பை கோபுரம் ஆகும். இத்தகைய பெருந்திறன் கவிஞர் மாட்டு மிகுதியும் உண்டு. ஒன்றை மட்டும் இங்கே காண்லாம்.

செல்வமும் வறுமையும் நாட்டில் நடமாடும் இருவகை வேறுபாடுகள். சிலர் செல்வம் பெற்றுச் சிறக்கின்றனர். சிலர், வறுமையுற்று வாடுகின்றனர். செல்வம் நலம் தருவதென்றும், வறுமை துன்பம் பயப்பதென்றும் நாம் நன்கு அறிவோம். செல்வத்தால் சிறக்க வாழ்வதும், வறுமையால் வாழ்விழந்து வாடுவதும் நாம் நாள்தோறும் காணுகின்ற காட்சிகள். செல்வம் என்பது இனிமை பயப்பது, வறுமை என்பது இன்னல் பயப்பது என்பது உலகில் மாற்றமுடியாத மேல்வரிச் சட்டம். ஆனல், புலவர் நாவில்—அவர் காட்டும் உவமையில்—செல்வம் துன்பம் தருவதாகின்றது, வறுமை இன்பம் தருவதாகின்றது; இத்தகைய பொன் செய்யும் மருந்தைப் புலவன் எங்குப் பெற்ருன்? ஆம். இந்த உவமை வழியிலேதான் அம் மருந்து கிடைத்தது.

செல்வம் இன்பம் தருவதுதான். ஆனல், அது கல்லாத வனிடம் சேரின் அதனல் அவனுக்கும் மற்றவருக்கும் விளையும் பயன் ஒன்றும் இல்லை. ஆனல் அதனல் துன்பமும் இல்லையோ? இதை ஒருபுறம் எண்ணிக்கொண்டிருக்க, மற்ருெருபுறமும் நமக் குத் தெரிகின்றது. அதுதான் நல்லவர் பெற்ற நல்குரவு. வறுமை பொல்லாதவனிடம் சேர்ந்தால், அவன் அவ்வறுமை காரண மாகப் பல கொடுமைகள் இழைப்பான். ஆனல் அது நல்ல வனிடம் சேருமாயின். அவன் அமைதி பெற்று வாழ்வான்; மற்றவர்மேல் சீற்றம் கொண்டு சிறு தொழில் புரியான். அதனல் யாருக்கும் நன்மையோ தீமையோ இல்லை. இதைத் தான் நாம் அறுதியிட்டு முடிவு செய்கிறேம். ஆனல் கவிஞன் அதனினும் மேலே ஒரு படி செல்கின்றன். அக் கவிஞன் கலையுள்ளத்துக்கு அத்தகைச் செல்வத்தின் தீமை, நல்லவன் நல்குரவினும் கொடுமை பயப்பது என்ற உண்மை புலனு கின்றது. அது உண்மைதானே! செல்வம் கல்லாராகிய அற்ப ரிடம் சேருமாயின், அதனல் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும்

நன்மை உண்டாகாது போவது ஒரு புறம் இருக்க, தீமையே பெரும்பாலும் உண்டாவதைக் காண்கின்றோம். இன்றைய உலகத்தில் நடக்கும் அத்தனைக் கொடுமைகளுக்கும் கல்லார்கண் செல்வம் சேர்ந்ததுதானே காரணம். செல்வம் என்பது வெறும் பணத்தை மட்டும் உள்ளடக்கிக் கொண்டதன்று. எல்லாச் செல்வத்தையும் அது குறிக்கும். நாட்டில் போர் விளைக்கும் வல்லரசுகள் தம் செல்வ பலத்தால் தானே கொடுமைகள் இழைக்கின்றன? ஊர்களில் கல்லார் செல்வம் பெறின், அச்செல்வத்தால் சிலர் தாமே உயர்ந்தவர் என்று தருக்கி மற்றவருக்குத் தீங்கிழைக்கும் காட்சியும் நம் நாட்டுக்குப் புதியதன்றே! இவ்வாறு செல்வம் கல்லார்கண் சேரின் யாருக்கும் நன்மை உண்டாகாமற் போவதுடன், மற்றவருக்குத் தீமை உண்டாக்குவதில் சிறந்தும் நிற்கின்றது. இதைக் கண்டார் கவிஞர். இதுவும் நல்லார் வறுமையும் அனைவரும் அறிந்தனவே எனினும், அவற்றிற்குப் பாலமிட்டு இணைத்துப் பார்க்கவில்லை நாம். இரண்டையும் கவிஞர் சீர்தூக்கிப் பார்த்தார். செல்வம் நலம் பயக்கும் ஒன்று என்ற எண்ணத்தையும், வறுமை துன்பம் தரும் என்ற நிலையையும் அடியோடு மாற்றிவிட்டார் தம் உவமை கலந்த கவிதை நலத்தினால். அப் புலவர் யார் என்று நினைக்கிறீர்கள்? உலகக் கவிஞர் வள்ளுவரைத் தவிர வேறு யாரால் அவ்வாறு சிறந்த, மனத்தில் நீங்காது நிலைத்து நிற்கக்கூடிய மெய்ப்பாலம் அமைக்க முடியும்? அவர் வாக்கு இதுதான்:

'நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கட் பட்ட திரு.'

என்னும் குறள் எண்ணிப் பார்க்க வேண்டுவது ஒன்றன்றோ! இக்குறளுக்கு உரையாசிரியர் சிலர் உவமை வழியிலேதான் உரை காண்கின்றனர். வேறு வகையில் காண்பாரும் உண்டு. ஆயினும், அவை சிறவா. 'திருவினை இன்னாது' என்று நாம் சொன்னால், நம்மைப் பயித்தியக்காரர் என்று பரிகசிப்பர் உலகத்தார். 'பொருள் இலார்க்கு இவ்வுலகம் இல்லை' என்ற வள்ளுவர், அப்பொருள் இன்னாது என்று கூறும்போது எவ்வளவு

உண்மையாகின்றது! ஆனல், அந்த உண்மை எதனல் சிறந்து விளங்குகிறது! 'கல்லார் கட்பட்ட திரு இன்னது' என்றால், அவ்வளவு சிறப்பு உண்டாகாது. அதைச் சொல்லியிருந்தால் வள்ளுவரையும் நாம் போற்ற வேண்டுவதில்லை. ஆனல், அதை அதற்கு நேர் மாறான வறுமையோடு பிணைக்கும் பாலமாகிய உவமையையிட்டு 'நல்லார்கட் பட்ட வறுமையின்' என்று கூறி விளக்கும் குறளே அவரை வாழவைத்தது. அவர் வழி உவமை நலமும், அவ்வுவமை நலத்தின் வழிக் கவிதை நலமும் சிறக்க வாழ்கின்றன. அவ்வுவமையின் நலத்தையும் தொடர்ந்து காண்போம்:

தொல்காப்பியர் பொருளதிகாரத்திலே அகமும் புறமும் அவை பற்றிய பொருளும், அவற்றின் வழி நிகழும் மெய்ப்பாடும் கூறி, அவற்றையெல்லாம் விளக்கும் செய்யுள் இயலுக்குச் செல்லுமுன் எல்லாவற்றிற்கும் இன்றியமையாத 'உவம இயலை'க் கூறுகின்றார். எப்பொருளும் இவ்வுவமம் இல்வழிச் சிறவாது. அகத்திலும் புறத்திலும் பலப்பல பொருள்கள் உவமை வாயிலாகவே விளக்கப் பெறுகின்றன. எனவே, பொருள்களை விளக்க வரும் கவிதைகளின் இலக்கணமாகிய செய்யுள் இயலைக் குறிக்குமுன் அதற்கு இன்றியமையாது வேண்டப்படும் இவ்வுவம இயலைப் பெய்துவைத்துக் காட்டுகின்றார். நாம் மேலே கண்டபடி பிற்காலத்தில் அணி இலக்கணத்தே எத்தனையோ அலங்காரங்கள் தோன்றின போதிலும், அவை அனைத்தும் தொல்காப்பியர் கண்ட உவமம் ஒன்றிலேயே அடங்கும். அதனலேயே அவர் உவம இயல் ஒன்றை மட்டும் கூறி அமைகின்றார்.

உவமையைப்பற்றி எண்ணும்போது ஆசிரியருக்கு உயர்ந்த எண்ணம் உருவாகின்றது. காணுத பொருளைக் காட்டுவதோ, கற்பனைக் கடலில் மிதப்பதோ, எப்படிப்பட்ட வகையிலே உவமம் அமைந்தாலும், அவ்வுவமம் 'உயர்ந்ததன் மேற்'றாகவே அமைய வேண்டும் என்கின்றார் அவர். 'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை' என்பது அவர் வாக்கு. இதற்குப் பேராசிரியர், 'உவமையெனப் பட்டது உயர்ந்த பொருள் ஆகல் வேண்டும்'

என்கிறார்; தொடர்ந்து, "எனவே, உவமிக்கப்படும் பொருள் இழிந்து வரல் வேண்டுமென்பது" என்கிறார். உரையாசிரியர் கூற்றும் உண்மையாயினும், உவமிக்கப்படும் பொருள் இழிந்து வரவேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்தாகாது என எண்ணுகின்றேன். பொருள் இழிந்து வருவதாயின், அதை ஏன் கவிஞன் பாடவேண்டும்? அவர் உதாரணமாகப் 'பொன்மேனி' என்ற ஒரு தொடரைக் குறிக்கின்றார். இதில் உவமிக்கப் படுவது மேனி; உவமப் பொருள் பொன். பொன் உயர்ந்தது தான். ஆனால், மேனி தாழ்ந்த ஒன்றா? புலவர் தாம் எடுத்துக் கொண்ட பொருளின் ஏற்றத்தையும் தோற்றத்தையும் பாட நினைக்கின்றவர். அவர் விருப்பத்துக்குத் துணையாக உதவு வதே உவமை. அந்த உவமையில் தன் பொருளைத் தாழ்த்திக் கொள்ள எந்தக் கவிஞன்தான் எண்ணுவான்? தன் கைச்சரக்கு எவ்வளவு மட்டமானதாயினும், அதைக் குறைத்துக் கூறும் கடைக்காரனை நாம் எங்கும் காணமுடியாதே! அப்படி யிருப்பானாயின், ஒன்று அவன் பயித்தியக்காரனாய் இருக்க வேண்டும்; அன்றேல், அவன் வாணிபம் விரைவில் மூடப்பட வேண்டியதாயிருக்கும். எனவே, எவனும் தான் காட்ட விரும்பிய பொருளைத் தாழ்த்திக் காட்ட எண்ணமாட்டான். பேராசிரியரும் இந்த வகையில் கருத்திருத்தி அவ்வாறு எழுதி யிருக்க மாட்டார் என நினைக்கின்றேன். பொன்மேனி என்ற அந்த உதாரணத்தையே எடுத்துக்கொள்வோம். மாம்பழம் விற் கின்ற ஒருவனை நிறுத்திக் கூடையில் உள்ள மாம்பழத்தைப் பற்றி விசாரிப்போம். அவன் என்ன சொல்லுவான்? 'ஆகா! இது தங்கமான மாம்பழம்! இதன் நிறத்தையே பாருங்கள்! அப்படியே கண்ணில் ஒற்றிக்கொள்ளக் கூடிய வகையில் பொன்னிறமாய் நன்கு கனிந்து இருக்கிறது! தேவையா?' என்று தான் கேட்பான். இதனால் அவன் பொருளாகிய மாம்பழமோ, அதன் நல்ல நிறமோ, பொன்னில் குறைந்ததாகாது. மேலும், பொன் உயர்ந்ததுதான்; எனினும் மாம்பழத்தைத் தின்ன விரும்பிய ஒருவனுக்குப் பொன் எவ்வளவுதான் கிடைத்தாலும் அதனால் என்ன பயன்? அவனுக்கு வேண்டுவதெல்லாம் அழகிய நல்ல மாம்பழந்தான்; ஆகவே, 'பொன் போன்ற பழம்'

என்னும்போது உவமிக்கப்படும் பழம் இழிந்து வரல் வேண்டும் என்ற நியதியில்லை. அது இயல்பாகவே நல்ல உயர்ந்த பழந்தான்; இந்த உவமையால் அப் பழம் இன்னும் சிறக்கிறது என்றுதான் கொள்ள வேண்டும். பின்பு ஏன் தொல்காப்பியர் 'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை' என்றார்?

ஒரு பொருளைப்பற்றிப் பாட விரும்பும் கவிஞன் அதன் உயர்வுகளைப்பற்றித்தானே பேசவேண்டும்? அதை ஒத்து நோக்கிக் கருதும்போதும் உயர்ந்த வகையில்தானே அவ்வுவமையையும் பொருத்த வேண்டும்? "உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்' என வள்ளுவர் கூறியது அது கருதியன்றோ? இந்த நிலையில் தான் எடுத்துக்கொண்ட பொருளை மேலும் மேலும் சிறக்கப் பாடுபவனே உண்மைக் கவிஞனாக முடியும். தனக்கு வேண்டாத பொருளாயினும், அதைப்பற்றிக் கவிஞன் பாடுவானாயின், அதை உயர்த்தித்தான் பாடவேண்டும். அன்றித் தாழ்த்தியோ பழித்தோ பாடுவானாயின், அவனும் அவன் கவிதையும் மக்களால் பெரிதும் விரும்பப்படா நிலை தோன்றும். நாம் மேலே காளமேகப் புலவர் மற்றவரைப் பழித்துப் பாடிய காரணமேதான் அவரும், அவர் கவிதைகளும் இன்று சமுதாயத்தில் போற்றப்படாத நிலையை உண்டாக்கி விட்டது என்பதைக் கண்டோம். 'பகைவனுக் கருள்வாய்' என்ற பண்பட்ட உள்ளந்தானே கவிதையுள்ளம்? பிறர் குறை காண்டலிற் குருடனாகி, பிறர் குறை பேசலில் ஊமனாகி வாழ வேண்டுமென்றுதானே இன்றைய கவிஞர்கள்கூட விரும்புகின்றார்கள்? எனவே, மற்றவர்களிடத்தோ, மற்றைய பொருளிடத்தோ உள்ள குற்றங்குறைகளை நீக்கிக் குணத்தைப் புகழ வேண்டுவதே கவிஞன் பண்பு. அந்த நிலையில் கவிஞன், தான் உவமிக்க எடுத்துக்கொண்ட பொருளை இழிவுபடுத்த மாட்டான். அவ்வாறு படுத்தவேண்டும் என்பது தொல்காப்பியருக்கோ, பேராசிரியருக்கோ கருத்தன்று. எனினும், உரையாசிரியர் உரையால் ஒரு சிலர் அவ்வாறு பொருள் கொள்ளுகின்றார்கள் என்பதை அறியவே இத்துணை எழுத நேர்ந்தது. அவர் தம் கருத்துதான் என்ன? எடுத்து விளக்க

வேண்டிய பொருள் எப்படிப்பட்டதாயினும், அதனினும் மேம்பட்ட ஒன்றைக் காட்டி விளக்கினல், அது 'பொன்மலர் நாற்ற முடைத்து' என்பதுபோலப் பின்னும் சிறக்கும் என்பது தான். உவமை, ஆளும் கவிஞர்களுக்கு ஒரு வழிகாட்டி போன்று, அதற்கு முன் வாழ்ந்த மெய்ப் புலவர்கள் கையாண்ட ஒரு பண்பு கலந்த பாட்டு நடையை நமக்கு அறிவிப்பதாக அமைந்து நிற்பது என்பதே இதன் பொருள். எவ்வளவு உயர்ந்ததாயினும், அதற்கு உவமை காணும்போது, அதனினும் உயர்ந்த ஒன்றையே காட்டி, அதன்வழி அப்பொருள் நலத்தை மேலும் சிறக்க வைக்க வேண்டுவதே கவிஞன் கடனாகும். அதுவே கவிதையின் நலமுமாம்.

இனி, இவ்வுவமை நலத்தை ஆசிரியர் தொல்காப்பியனுர் எவ்வெவ்வாறு விளக்குகின்றுர் என அறிதலும் அமைவுடைத் தாகும். ஒன்றுக்கொன்றை ஒப்புப்படுத்துவதுதான் உவமை யென அறிந்தபின், எந்தெந்த வகையில் அவ்வொப்புமை அமையவேண்டும் என்பதைத் தொல்காப்பியர் முதலில் விளக்கிய பின்பே மேலே செல்கின்றுர்.

> 'வினை பயன் மெய் உரு என்ற நான்கே
> வகைபெற வந்த உவமத் தோற்றம்'

என்பது உவம இயலின் முதற் சூத்திரமாகும். தொழிலும், பயனும், வடிவும், வண்ணமும் என்னும் நான்கு வகைப்பட வருவதே உவமம் என்பது அவர் கருத்து. இவ்வாறு நான்கை யும் முறைப்படுத்திக் கூறுவதற்கெல்லாம் பேராசிரியர் காரணங் களை நன்கு ஆராய்ந்து கூறுகின்றுர். தொழிலால் உவமிக்கப் படுவது வினை அல்லது தொழில் உவமமாம். 'புலி பாயுமாறே பாயும் மறவன்', என்னும் உவமை அதற்கு உதாரணமாகும். புலி பாய்தலாகிய தொழில் மறவன் தொழிலுக்கு உவமிக்கப் படுகின்றது. 'மாரியன்ன வண் கை' என்னும்போது 'மாரி போல, வேண்டாதவராயினும் கொடை நலம் ஆற்றும் கை' எனப் பொருள் தந்து அது பயன் உவமமாகின்றது. இதில் தொழில் முதலிய எதனுலும் உவமை பெறமுடியாது. மழை

யினுல்; உண்டாகும் பயனும், கொடையால் உண்டாகும் பயனும் 'பிறரை மகிழ்வித்தல்' என்ற அளவில் செல்லுதலின், இது பயன் உவமமாயிற்று. தோற்றத்தை உவமைப்படுத்துவது உரு உவமமாகும். இது 'பொன் போன்ற மேனி' என உடலின் தோற்றத்தைப் பொன்னுக்கு ஒப்ப ஆக்குவதாய் நிற்கும். இது உரு வுவமமாயிற்று. ஆனுல், இதற்கு முன்வரும் மெய் உவமம், 'துடியிடை' என்பதைக் காட்டாகப் பெற்றது. இது 'துடி போன்ற இடை' என விரிகின்றது. மெய்யின் தன்மைக்கு உவமப்படுத்தலின் இது மெய் உவமமாயிற்று. இவற்றுள் மெய்யும் உருவும் அத்துணை வேறுபாடுடையனவாகத் தோன்ற. ஆனுல், பேராசிரியர் இரண்டையும் நன்கு வேறுபடுத்துகின்றார்; 'கண்ணுக்குப் புலனுகும் பண்பினையும், உற்று உணரும் பண்பினையும் வேருக நோக்கி, இவ்வாறு தொல்காப்பியர் இரண் டாக்கினுர்', என்று கூறுகின்றார். துடியிடை, இரவிலும் கண்ணில் தோன்றும். ஆனுல், பொன் மேனி இருளில் புலப் படுவதெங்கே? இவ்வகை வேற்றுமையே உருவும் மெய்யும் வேறுகொள வைத்தது. உருவுவமத்தைப் பிற்காலத்தார் பண்பு உவமை என்பர். இவற்றின் விரிவையெல்லாம் நாம் இங்கு ஆராயவேண்டா. இங்கு ஆய்வு தேவையுமில்லை. கவிதை நலனுக்கு அணியாகிய இந்த உவமை நான்கு வகை யாகும் என்பது மட்டும் நாம் அறிந்துகொள்ளுதல் போதும். அதனுடன் இவை தனித்து வருவதோடு, ஒன்றேடொன்று கலந்து ஒரு பொருளுக்கே ஒன்றுக்கு மேற்பட்ட உவமை நலன்கள் பொருந்தி வருவதும் உண்டு.

இவ்வுவமை நலன்பற்றி ஆசிரியர் தொல்காப்பியனுர் பல சூத்திரங்களில் விளக்கிச் செல்கின்றார். அவற்றுள் இவ்வுவமை யின் பிரிவுகளும், உவம உருபுகளும், அவற்றுள் நால்வகை உவமங்களுக்கான தனித்தனி உருபுகளும் கொள்ளக் கிடக் கின்றன. மேலும், உவமப் பொருளை உணரும் வகையையும் அகப்பொருளில் உவமை உதவும் நெறியினையும் குறிக்கின்றார். முன்னர் 'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை' என்று கூறிய போதிலும், 'உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்' (8)

என்று தொல்காப்பியனாரே கூறுகின்றார். இக் கூற்று நாம் மேற்கண்ட ஒப்பு நிலையின் தன்மைக்குச் சிறந்த ஆதாரமாகும்.

தொல்காப்பிய உவம இயலை விடுத்து, இலக்கியத்தில் வழங்கப்பெறும் உவமங்களிற் சில காணலாம். ஆனால் அதற்கும் தொல்காப்பியத்தைத் தொட்டே நாம் சொல்ல வேண்டியுள்ளது. உவமத்தை ஆசிரியர் தொல்காப்பியனார் உள்ளுறை உவமம், வெளிப்படை உவமம் என இரண்டாகப் பிரிக்கின்றார்; அதை உவம இயலுள் கூறாது அகத்திணை இயலுள், உள்ளுறை உவமம் மிகச் சிறந்து நிற்கும் அகப்பொருள்பற்றிய கூற்றுக்கள் நிகழும் இடத்தில் குறிக்கின்றார். வெளிப்படை உவமம் என்பது யாவருக்கும் எளிதில் விளங்குமாறு உவம உருபுடனோ, அது இன்றியோ கூறுவது. ஆனால், உள்ளுறை உவமம் அத்தகையதன்று.

கவிஞன் பலவற்றைப்பற்றிப் பாட்டிசைக்கின்றவன்; சிலவற்றைப்பற்றி வெளிப்படையாகப் பாடுவான்; சில வற்றைப் பற்றிக் குறிப்பாகவே கூறவேண்டியிருக்கும்; அதுவும் உள்ளத்திலேயே உற்றுணரும் அக வாழ்வில் பலவிடங்களில் பாங்கன், பாங்கி, தோழி, தலைவி முதலியவர் வாயிலாகக் கவிஞன் பலவற்றை வெளிப்படையாகக் கூறாது மறைத்துக் கூறவேண்டியிருக்கும். கூற வேண்டியவற்றைக் கூறாது விடுதலும் இயலாது; கூறவும் வேண்டும். அறியவேண்டுபவர் தவிர, மற்றவருக்கு அதன் பொருளும் புலப்படலாகாது. இத்தகைய இக்கட்டான நிலையில் என்ன செய்வது? இதற்குத் தான் கவிஞன் இந்த உள்ளுறை உவமத்தைக் கையாண்டான். இதில் சொல்ல வேண்டிய பொருளுக்கு ஏற்ற உவமையை மட்டும் வேறு செயலாக விளக்கி, அதன் மூலம் தான் கூற வேண்டியதைக் கவிஞன் விளக்கும் திறன் அறிந்து இன்புறத் தக்க தொன்றாகும். இவ்வாறு பொருள் புறத்ததாக நின்று காட்டும் மற்றொரு வகை விளக்கத்துக்கு இறைச்சிப் பொருள் என்பது பெயர். இதனைத் தொல்காப்பியனார் பொருளியலிற் கூறுகின்றார். அங்கும் இது அகப்பொருள் பற்றியே வருகின்றது. ஆனால், இதனை உள்ளுறை உவமத்திடையிருந்து வேறு

படுத்திக் காட்டுகின்றார். இவ்வுள்ளுறை உவமமும், இறைச்சியு மாகிய இரண்டும், கவிதையின் நலனை மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்வனவாகும். சாதாரணமாக உவமை கவிதையை எவ்வாறு சிறப்பிக்கின்றது என்பதைக் கண்டோம். ஆயின், இவ்விரண்டும் கூற வேண்டுவதை வெளிப்படையாகக் கூறாது, ஆனால் கூற வேண்டுவன அனைத்தையும் விடாது கவிதை வகையான் விளக்கிக் கூறும் சிறப்பினைப் பெற்றமையின், இவ்விரண்டின் வழிக் கவிதை நலன் மிகமிக உயர்ந்து போற்றப் படும். எனினும், இவ்விரண்டும், சாதாரண உவமைபோல அனைவராலும் பயின்று உடன் துய்த்து மகிழும் வகையில் அமைவன அல்ல. கவிதை நலனில் தோய்ந்து தோய்ந்து, அவை காட்டும் பொருள் நலன்களையெல்லாம் கண்டு கண்டு, கருத்தால் துய்த்த ஒரு சிலரே இவற்றின் உள்ளுறைப் பொருள்களை நன்கு உணர முடியும். சங்ககாலப் புலவர் நன்றாய்ந்த கவிதைப் பண்பாளர்களானமையின், இவற்றைத் தம் காதற் கவிதைகளில் நன்கு பெய்து காட்டியிருக்கின்றனர்.

உள்ளுறை உவமம், இறைச்சி என்ற இரண்டிலும் பின்னதை உற்றறிதல் மிகவும் கடினமாகும். இதைத் தொல்காப்பியனாரே சொல்லுகின்றார். உள்ளுறை உவமத் தைக் கூறும்போது, அகத்திணை இயலுள்,

> 'உள்ளுறுத்து இதனொடு ஒத்துப்பொருள் முடிகென
> உள்ளுறுத்து உரைப்பது உள்ளுறை உவமம்' (51)

என்கிறார்.

இதற்கு உரை கூற வந்த நச்சினார்க்கினியர், 'தான் புலப்படக் கூறுகின்ற இவ்வுமத்தோடே புலப்படக் கூறாத உவமிக்கப்படும் பொருள் ஒத்து முடிவதாகவென்று புலவன் தன் உள்ளத்தே கருதி, தான் அங்ஙனம் கருதும் மாத்திரையே யன்றியும், கேட்போர் மனத்தின் கண்ணும் அவ்வாறே நிகழ்வித்து, அங்ஙனம் உணர்த்துதற்கு உறுப்பாகிய சொல்லெல்லாம் நிறையக் கொண்டு முடிவது உள்ளுறை என்றவாறு.' என விளக்குகின்றார். அதாவது, கவிஞன் தான்

காட்ட வந்ததை வேருகக் காட்டாது, வேற்று உவமவாயிலான் உவமானப் பொருளை மட்டும் கூறி, அதன் வழித் தான் உவமிக்க நினைத்த பொருளைக் கேட்போன் அறிந்துகொள்ளும் வகையில் கவிதை இசைப்பதாகும். ஆகவே, ஒருவகையில் கேட்பவருக்கு இவ்வுள்ளுறை உவமம் புலனுகும். ஆனுல், இறைச்சியோ அத்தகையதன்று, அப்பொருளையே விளக்க உவமமுகத்தான் வருவதாயினும் இறைச்சிப் பொருள் கூற வேண்டிய பொருளின் புறத்தே நின்று அந்தப் பொருளை விளக்க நிற்பதாகும். உள்ளுறை உவமத்தை உணர்ந்து கொள்கின்ற அந்த அளவு கவிதையில் வரும் இறைச்சியை அனைவராலும் எளிதில் உணர்ந்துகொள்ள இயலாது. இதைத்தான் தொல்காப்பியர்,

> ‘இறைச்சியில் பிறக்கும் பொருளுமா ருளவே
> திறத்தியல் மருங்கின் தெரியு மோர்க்கே.’ (பொ. 35)

என்கிருர். ‘திணை நிலத்துக்கு உரிய கருப்பொருள்கள் மேற் கண்ட உள்ளுறை உவமத்தாலும் வெளிப்படை உவமத்தாலும் கண்ட பொருளை விளக்குவதேயன்றி, அக் கருப்பொருள்கள் தம்முள்ளே தனித்து நின்று விளக்கும் பொருள்களும் உளவாம்; அப் பொருள்களே இறைச்சிப் பொருள்களாம். அவை தோன்றும்போது உள்ளுறை உவமம் போன்று இருக்கும். ஆனுல், ஆராய்ந்து நோக்குவாருக்கு அவை உள்ளுறையன்று; இறைச்சியே என்பது புலனுகும்,’ என்று விளக்குகின்ருர் நச்சினுர்க்கினியர். ஆம்! இறைச்சி, உள்ளுறை போன்று இருப்பினும், அதற்குள்ளேயே உரிய பொருளைக் கொண்டு காட்டும் தன்மையது. இரண்டையும் அவர் காட்டிய மேற்கோள்கள் மூலமாகவே நன்கு விளக்கலாம் என எண்ணு கின்றேன். பின்தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்ருக உவமம், உள்ளுறை உவமம், இறைச்சி என்ற மூன்றனையும் காண்போம். இவ்வாறு கவிதை நலம் சிறப்புற்று ஓங்குவதற்கு உவமை வெளிப்படையாகவும், உள்ளுறையாகவும் வந்து உதவுவதோடு, கருப்பொருளே பொருளாயமைந்த இறைச்சியாகவும் நின்று, ஒரு சிறந்த கவிதையின் சாதனமாய் இருக்கிறதென்பதைச்

சங்ககாலம் தொடங்கி இன்றளவும் தோன்றி வாழ்கின்ற இலக்கியங்கள்—கவிதைகள்—கற்பனைக் கோவில்கள் விளக்கிக் காட்டுகின்றன.

கவிதைக்குச் சிறந்த அணிகலனாகிய இந்த உவமையைப் பிற்காலத்தோர் சிதைக்கத் தொடங்கி விட்டனர். அந்தச் சிதைவுதான் நாம் மேலே கண்ட அணி இலக்கணமாக உருப்பெற்றுள்ளது. ஆனால், ஆய்ந்து நோக்கின், அவை அனைத்தும் உவமையுள் அடங்கும். உவமையை ஒட்டி உண்டான அதன் முதற் சிதைவுதான் 'உருவகம்' என்பது. உருவகம் உவமையிலிருந்து தோன்றிய ஒன்றானாலும், தொல்காப்பியத்தில் கூறப்படாத ஒன்றானாலும், அதுவும் இன்று கவிதை உலகில் ஆட்சி செலுத்துகின்றது. அதுவும் கவிதையை அழகுபடுத்தும் ஒரு பூணாகிவிட்டது. தமிழ்க் கவிதை உலகில் மட்டுமன்றி ஆங்கிலம் முதலிய பல்வேறு மொழிக் கவிதைகளிலும் அவ்வுருவகம் நிலைத்த இடம் பெற்றுவிட்டது. அதன் அழகும் ஒரு தனிப்பட்ட வகையில் அமைந்துள்ளது. உவமையைப்போன்று நிறைந்த ஆதிக்கத்தைக் கவிதை உலகில் அது செலுத்தவில்லை என்றாலும், இன்று நம் கண்முன் காணும் கவிதை உலகில் உவமைக்கு அடுத்த நிலையில் உருவகத்தின் ஆதிக்கமும் உண்டு என்பதை மறுப்பார் யார்? ஆம்! அந்த உருவகம் என்பது என்ன? உவமையை உணர்வார்க்கு உருவகம் புதிதன்று என்பது காணலாம். உருவகம் என்பதும் ஒரு வகையில் உவமையேயாகும். உருவகத்தைப் பற்றிக் கூற வருகின்ற தண்டி அலங்காரம்,

> 'உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து
> ஒன்றென மாட்டின் அஃது உருவக மாகும்.'

என்கின்றது. உவமையில் வரும் இரண்டு பொருள்களும் தம்முள் வேறுபாடு இன்றி நிற்பனவே என்பது அவர் கருத்து. அங்கு உவமையில் இரு பொருளுக்கும் இடையில் பாலம் அமைத்தார்கள்; ஆனால், இங்கோ, இரண்டையுமே பின்னிப் பிணைக்கின்றார்கள். எவ்வாறு பிணைப்பது? உவமை அணிக்குப் 'போல' முதலிய உருபுகள் இடையில் வருகின்றன. ஒரு

பொருளை எடுத்து விளக்கும்போது, 'அது இதைப் போன்று இருக்கும்,' என்று வேறொரு பொருளால் விளக்குவது உவமை. உருவகத்தில் அந்தப் பொருள் தானே ஆகிவிடுகின்றது. மகளிர் முகத்திற்குத் தாமரையை உவமையாகச் சொல்வது மரபு. மதி போன்ற முகம், மதி யன்ன முகம் என்ற தொடர்கள் உவமை பற்றியன. இங்கே மதி வேறு, முகம் வேறு. இரண்டிலும் போன்ற, அன்ன என்னும் உவம உருபுகள் முதற்பொருளுக்குச் சிறப்புத் தருகின்றன. மதி போன்ற முகம் என்னும்போது அதனால் சிறப்படைவது முகமேயன்றி, மதியன்று. உருவகத்தும் அதே நிலைதான்; சிறப்படைவது எடுத்துக் கொண்ட முகம் என்னும் பொருளேயாம். ஆனால், இங்கே உவம உருபுகள் இல்லை; மதிவேறு, முகம் வேறு என்ற பிரிவும் இல்லை. இரண்டையும் ஒன்று சேர்த்து 'முகமதி' என்று கூறுவார்கள். 'இது எப்படிப் பொருந்தும்? உவமையாவது ஓர் அளவு ஒப்புமைப்படுத்திக் கூறும்போது சரியாகின்றது. இங்கே முகத்தையே மதியாக்குவது சற்றும் பொருத்தமல்லவே!' என்று கூறத் தோன்றும். அதனாலேதான் தொல்காப்பியர் இதுபற்றிக் கூறாது விட்டனரோ என எண்ண வேண்டியுள்ளது. எனினும், உவமையைப் போன்று இந்த உருவகமும் ஓர் அளவுக்குக் கவிதை நலனுக்கு உறு துணையாகின்றது. 'மதி போன்ற முகம்' என்பதிலும் 'முக மதி' என்பது இலக்கியத்தில் ஓர் ஏற்றம் பெற்றதாகத்தான் உள்ளது என்பர். முகத்தையே சந்திரனாக உருவகம் செய்தால், சந்திரனிடத்துள்ள தண்ணளி, நிறைமதியின் வட்டநிலை, பிற நல்லியல்புகள் அனைத்தும் முகத்துக்கும் பொருந்து மன்றோ? ஆகவே, முகம் தன் நிலையினின்று சற்று உயர்ந்து காணப்படுகிறது. உவமை யேற்கும் பொருளைக்காட்டிலும் உவமை எப்போதும் சற்று உயர்ந்த பொருளாகவே இருக்கும் என அறிகின்றமையின், அவ்வுயர்ந்த பொருளின் பண்புகள் சில, உவமையின் மூலம் அப்பொருளுக்கும் வரலாம். ஆனால், தானே அதுவாக மாறும் உருவகமாயின், அவ்வுயர் பொருள் நலம் அனைத்துமே இதற்கும் பொருந்துவனவாகாவோ! அதனால், அவ்வுருவகம் இலக்கிய

உலகில் பொருள்களை உயர்த்தும் நெறியில் தொண்டாற்றுகிற தென்பர். அதனாலேயே இஃது உவமையை ஒத்துப் போற்றப் படுகின்றது போலும்!

இனி, இவ்வுவமை எப்படி இலக்கியத்திற்கு—கவிதைக்கு—சிறப்பு நல்குகிற தென்பதைக் கண்டு மேலே செல்லலாம். முதலாவதாகச் சாதாரண உவமையைக் காண் போம். ஒரு பொருளை நேரடியாக எடுத்துச் சொல்வதிலும் அதையே ஓர் உவமை வாயிலாக விளக்கின், அப்பொருள் பற்றிய கருத்து நன்கு விளங்கும். வள்ளுவர் முதலிய புலவர் பலரும் இக்கவிதை நலத்தைக் கையாண்டிருக்கின்றனர்.

செல்வம் யாரிடம் சிறக்க விளங்கும் என்பதை வள்ளுவர் விளக்க வந்தார். முன்னமே அச்செல்வத்தைப் பற்றிய உவமைத் தன்மையைக் கண்டோம். செல்வம் அற்பரிடம் சேரின் கொடுமையை விளைக்கும் என்பது அது. அதே செல்வம் நல்லவரிடம் சேரின் என்னாகும் என்பதையும் எண்ணிப் பார்க் கின்றார் வள்ளுவர். செல்வம் நல்லவரிடம் சேர்ந்தால், அவர்கள் அதைத் தமக்கென வைத்துக் கொள்ளாது மற்ற வருக்கு வழங்குவர். இந்த உண்மையை இப்படியே நேரடியாகச் சொல்லிவிடலாம். ஆனால், அதைக் காட்டிலும் உவமை முகத்தான் சொல்லின், கல்லார்க்கும் கற்றவர்க்கும் எல்லார்க்கும் எளிமையில் விளங்கும் என்று எண்ணிற்று அவர் கவிதை உள்ளம். அவர் ஒரு நல்ல உவமையை எடுத்துக் காட்டுகின்றார்.

நல்ல மாமரம்—இனிய பழங்களைத் தரும் மரம். அது பூத்துக் குலுங்கிக் காய்த்துப் பழுத்துப் பயன் விளைக்கும் காலம் தொடங்கிவிட்டது. ஆனால் அந்த மரம் எங்கேயோ—காட்டிலோ அன்றி அடைய முடியா நெடு வழியிலோ—பழுக்கவில்லை. மக்கள் வாழும் ஊரில், அவர்களுக்குப் பக்கலில், அனைவரும் கொள்ளத்தக்க வழியில், பொது மன்றத்தில் அம் மரம் நிற்கின்றது. பொது மன்றத்தில் பழுப்பது அனைவருக்கும் உரியதுதானே? அப் பழங்களும் அனைவருக்கும் உரியனவாகின்றன. 'உண்ண வாரும்.' என்று யாரும் அழைக்க வேண்டுவது மில்லை. அனைவரும் கூடி உண்ணும்

நிலையில் அது உள்ளது. சாதாரண ஆலமரம் பழுத்தால், அதில் வந்து கூடும் பறவைகள் நிலையை ஒரு புலவர் உவமையாகக் கூறுவதும் நினைவுக்கு வருகின்றது.

'ஆலிலை பூவும் காயும் அளிதரு பழமும் உண்டேல்
சாலவே பட்சி எல்லாம் தங்குடி என்றே வாழும்.'

என்ற உவமையே அது. இது போன்று செல்வம் உண்டான காலத்துப் பலர் வந்து சேர்வர் என்ற பொருளைப் புலப்படுத்துகிறார் அப் புலவர்.

'வாலிபர் வந்து தேடி வந்திப்பார் கோடி கோடி
ஆலிலை யாதி போனால் அங்குவந்து இருப்பார் உண்டோ?'

என்று தாம் கூற விரும்பும் பொருளையும் இவ்வடிகளில் அவர் காட்டிவிட்டார். வள்ளுவர் மக்கள் பயன்படுத்தும் நல்ல பழமரத்தையே உவமையாகக் காட்டுகின்றார். அதிலும் உவமை நன்கு திறம்படப் பொருந்துகின்றது. அனைவரும் சென்று பற்றலாம் என்ற காரணத்தால் வழியல்லா வழியில் பழுக்குமுன் காய் கனிகளைப் பறிப்பின் அதனால் பயன் விளையாது, அவலமே நேரும் என்பதைக் கருத்தில் வைத்து, 'மரம் பழுத்தால் ஒத்து' என உவமையை விளக்குகின்றார். அதுபோன்றே செல்வம் நல்லானிடத்தில் சேர்ந்துள்ளமையின் எப்படியும் பெறலாம் என்று வழியல்லா வழியில் செல்லின், நலமன்றித் தீங்கே விளையும் என்பதும் அவர் கருத்து. மற்றும் வேண்டுவார்க்கு மட்டுமன்றி, அல்லார்க்கும் அது பயன்படும் என்பதும் அவர் கொள்கை. அவர் குறள் இதுதான் :

'பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கட் படின்.' (216)

மற்றவரை வாழ்த்துவது சிறந்ததுதான். ஆயினும், ஒரு சிலர் தம்மை உயர்ந்தவரெனக் கருதி, மற்றவரை மதியாது வாழ்வாராயின், அவர்களைப் பழிக்காதிருக்க முடியுமா? அவர்களைப்பற்றி வள்ளுவர் போன்ற அறநெறி வகுத்த நல்லவர்கள் ஒன்றும் கூறாது விடின், உலகில் சிலராவது அவர்களைப் பின்பற்றி வாழ விரும்ப மாட்டாரா? அவ்வகையில் அறநெறிக்கே இழுக்கு நேருமன்றோ! ஆயினும், தீயார் இயல்பை உள்ளது உள்ளபடியே எப்படி எடுத்துக் காட்டுவது? எடுத்துக்

காட்டுவதில் தவறில்லை என்றாலும், அவ்வாறு 'பச்சை'யாகக் காட்டுவது நாகரிகமாகுமா? அது பண்பாடு மல்லவே! தவறு செய்பவர்தம் குற்றத்தையும் உலகுக்குக் காட்ட வேண்டும்; ஆனால், அவர்தம் கொடுமையும் நேருக்குநேர் தெரியாமல், நாகரிகமாகவும் இருக்க வேண்டும். இவற்றை யெல்லாம் எண்ணிய திருவள்ளுவர் உவமை முகத்தான் தாம் கொண்ட கருத்தை விளக்குகிறார். ஒன்று கண்டு மேலே செல்வோம்:

தேவரைப் பற்றியும் அவர் உலகம் பற்றியும் இலக்கியங் களும் இலக்கணங்களும் நெடுங்காலமாகப் பாடியுள்ளன. தேவர் உலகம் நம்முடையதிலும் மேம்பட்ட ஓர் உலகம் என்று சாதாரண மக்கள் கருதினபோதிலும், அறிவறிந்த மக்கள் அதை இழிவாகவே கருதுகின்றார்கள். ஆண்டவனைப் பாடும் அடியவர்களுங்கூட அந்த வாழ்வை வெறுத்துத்தான் ஒதுக்கி யுள்ளார்கள். 'இந்திர லோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்!' என்று அந்த உலகத் தலைமைப் பதவியை வேண்டாவென ஓர் ஆழ்வார் ஒதுக்கியுள்ளார். தேவர் உலகம் போன்றவற்றை மறந்தும் நினைக்கவேண்டாவென்று கம்பர், 'துறக்கமே முதலவாய தூயன யாவையேனும் மறக்குமா நினையல்' என்று காட்டி, அவை அழியக் கூடியன என்கின்றார். தேவருலகம் உண்டா இல்லையா என்ற ஆராய்ச்சி நமக்கு வேண்டா. உண்டாயின், அது நம் உலகினும் உயர்ந்ததா அன்றித் தாழ்ந்ததா என்பதே நமக்குத் தெரிய வேண்டும். அறிஞர் பலருடைய கருத்து அவ்வுலகு இம்மனித உலகத்திற்குத் தாழ்ந்ததுதான் என்பது. இலக்கண நூலில் உயர்திணை கூற வந்த இடத்தில், இதனாலேயே மக்களை முதலில் வைத்து, 'மக்கள் தேவர் நரகர் உயர்திணை,' என்று கூறிய தாகக் கொள்ளுவர். சாதாரணப் புலவர்களுக்கே இக்கொள்கை உடன்பாடாயின், இதை வள்ளுவர் ஒதுக்கிவிடுவரோ! ஏதோ தேவர் உலகம் நம்முடையதினும் பெரியது என்றும், அதை நாடவேண்டும் என்றும் பலர் அக் காலத்திலும் அவர் காதில் விழும்படி பேசி யிருந்திருப்பர்; அவர் அக் கொடுமையைக் கேட்டிருப்பார்; தேவர் உலகம் நம்முடையதினும் மட்ட மானது என்று கூற விரும்பியிருப்பார். அப்படியே நேரிடை

யாகக் கூறின், அது வள்ளுவர் பண்பாட்டிற்பட்ட நாகரிக மாகாது. ஆகவே, அவ்வுலகம் பற்றிக் கூறவிரும்பியதை உவமை மூலமே காட்டுகின்றார். அதில் அவர் கவிதை நலன் சிறந்திருப்பதைக் காணுதல் வேண்டும். இதைப் போன்றே கயவர் பற்றிய கொடுமையையும் அவர் உள்ளம் எண்ணி யிருக்கும். அவரால் நேரும் கொடுமையைக் கூறல் நாகரிக மாகாது என அவர்தம் கவிதையுள்ளம் கருதியிருக்கும். எனவே, அதையும் ஒரே உவமையில் அமைத்து அதிகார முறையிலேயும் பொருத்தி, நன்கு விளக்கிவிடுகின்றார். ஆம், அவர் கயவர், தேவர் இவர்தம் நிலையை ஒருசேர உவமையால் விளக்கும் திறம் உயர்ந்ததாகும்.

கயமை என்னும் அதிகாரம் குறளில் ஒரு பகுதி. அதில் கயவரைப்பற்றிப் பேசுகின்றார் வள்ளுவர். அப்போதுதான் தேவரைப் பற்றியும் கூறவேண்டும் என்ற உணர்வு பிறக்கின்றது. நாகரிக முறையில்,

'தேவ ரனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்.' (1078)

என்று காட்டிவிட்டார். இக்குறளுக்குப் பலர் உரை எழுதி யுள்ளனர். பரிதியார் உரை தவிர, மற்ற அனைத்தும் ஒத்திருக் திருக்கின்றன. அவரனைவரும், 'தேவர்கள், மேல் கேட்பாரும் தடுப்பாரும் இன்மையின், அவரவர் விருப்பின்படியே செயல் களைச் செய்வர்; அதுபோன்று இங்குக் கயவரும் செயலாற் றுவர்,' என்று நாகரிக முறையில் தேவர் செயலைக் காட்டி விட்டனர். கயவரைப்பற்றி ஓரளவு தெரியும். அவர்கள் யார் சொல்லுக்கும் கட்டுப்படாமல் தம் மனம்போன போக்கில் போவார்கள் என்பது அறிந்ததே. இதை ஓர் உவமையால் விளக்கவேண்டும் என்னும் நியதியும் இல்லை. எனினும், வள்ளுவர் இங்குத் தேவர் நிலையைக் காட்டி, அவரைப்பற்றி உலகம் உணர்ந்துகொள்ள வேண்டுமென்பதற்காகவே இவ்வுவமையை அமைத்தார் என்று கொள்ள வேண்டி யுள்ளது. தேவரைப் பற்றித் தனிப்பாட்டோ, அதிகாரமோ அமைத்து அவரைப் பழித்துரைத்தல் சிறந்ததாகாது. எனவே

தான் இவ்வுவமையில் அவர் இத்துணை நல்ல முறையில் உவமை நலம் பெய்து தேவர்தம் இழிநிலையையும் விளக்குகின்றார். மனம் போன போக்கெல்லாம் போகும் மனிதனை யாராவது விரும்புவரோ? விரும்பார். எனவே, தேவர் வாழ்வையும் அவர் நாட்டையும் நல்லவர் யாரும் நாடார் என்பதை, வள்ளுவரைத் தவிர வேறு யார் இவ்வளவு திட்டமாகவும், அதே வேளையில் நாகரிகமாகவும் காட்ட முடியும்? இவர் அடியொற்றி இவர் பாடல்களை அப்படியே எடுத்தாளும் சாத்தனார், தம் மணிமேகலையில் இவ்வடியை வைத்துக்கொண்டு, ஆபுத்திரன் வாயிலாக, இந்திரனைச் சற்று நாகரிகமற்ற முறையிலேயே கண்டித்திருப்பதை அறிவோம். அதுபற்றிப் பின்னர் வாய்ப் புளதேல் காண்போம்.

வள்ளுவர், தமது கவிதை நலம் பெற்று நிற்க, இத்தகைய நல்ல உவமைகளின் மூலம் பல உண்மைகளை எடுத்துக் காட்டு கின்றார். இன்னும்,

> ‘பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
> சால மிகுத்துப் பெயின்,’ (475)

என்றும்,

> ‘நுனிக்கொம்பர் ஏறினார் அஃது இறந்து ஊக்கின்
> உயிர்க்கிறுதி யாகி விடும்.’ (476)

என்றும் உவமையைப் பல்வேறு வகையில் ஆங்காங்கு எடுத்தாண்டு, தம் கவிதை மூலம் நல்ல பொருள்களையெல்லாம் விளக்குகின்றார். அவற்றையெல்லாம் பின்னர்க் காண்பதற் குரிய இடங்களில் கண்டு ஆராய்வோம்.

வள்ளுவர் மட்டுமன்றி, இவ்வுவமையை மேற்கொள்ளாத சாதாரணப் புலவரும் இல்லை. தமிழ் இலக்கியத்தில் மட்டு மன்றி, உலக மொழிகளில் வாழும் எந்தக் கவிஞனும் இந்த உவமையை விட்டிருக்க முடியாது. உவமை இன்றேல், கவிதை நிறைவு பெற்றதாகாது. உயிரும் உடலும் சொல்லும் பொருளுமாகக் கவிதைக்கு அமையுமாயினும், அந்த உயிரோடு கூடிய மெய் உலவத்தக்க ஆற்றலைத்தருவது இந்த உவமையே

என்பது பொருந்தும். இந்த நிலை தமிழ்க் கவிதைக்கு மட்டும் பொருந்துவதன்று; ஆங்கிலப் பேராசிரியர் 'கோல்டுஸ்மித்து' என்பவர் இந்த உவமையை எடுத்தாண்ட விதத்தைக் காணல் நலம் தருவதாகும்.[1] அவர் மலையையும் மாண்புடையார் நிலையையும் ஒன்றுபடுத்துகின்றார். மலையின் உச்சி மாண்புடையார் நிலையை ஒத்தது என்கின்றார். அறிவறிந்து ஆன்றவிந்தடங்கிய சான்றோர் உலகிடை வாழினும் அவர் உள்ளமெல்லாம் உயர்ந்த எண்ணத்தே பொருந்தி, உலகை வாழ்விக்கும் நெறியிலே திளைக்கும் என்பது அவர் கூறவிரும்பிய பொருள். அதற்கு உவமையாக மலை முன்னின்றது. மலையின் இடையில் மேகமும் பிறவும் தழுவி நின்று உச்சியைக் காணா வகையில் மறைக்கும். ஆயினும், அதன் உச்சி அவற்றால் மறைக்க முடியாத ஒன்று. அந்த உச்சியில் இந்த மாசுகள் செல்லா. அவ்வளவு உயர்ந்தது அதன் உச்சி. அந்த உச்சியில் என்றென்றும் மங்கா ஒளி விளங்கிக் கொண்டே இருக்கும். அதுவே ஆன்றோர் எதற்கும் அசையா உள்ளத்திற்கு உவமை யாகக் கூறப்பட்டுப் போற்றப்படுகின்றது. ஆங்கிலக் கவிதை களைப் பயின்று நலம் காணுவோர் இந்த உவமையைப் போற்றா திரார் என்பது திண்ணம். நம் பவணந்தியாரும் சிறந்த ஆசிரியருக்கு மலையை உவமையாகக் கூறியிருப்பதும் நாம் ஈண்டு நினைவுகூர்தற் பாலது.

சாதாரண உவமைகளைக் கண்டோம். இனி உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் இரண்டனையும் கண்டு இப்பகுதியை முடிப்போம். இரண்டிற்கும் வேறு மேற்கோள் களைக் கொள்வதைக் காட்டிலும் தொல்காப்பியத்தில் நச்சினார்க்கினியர் கொண்டவற்றையே கொண்டு, நாமும் செல்லுதல் நல்லது என நினைக்கிறேன்.

1. 'As some tall cliff, that lifts its awful form
Swells from the vale, and midway leaves the storm
Tho' round is breast the rolling clouds are spread
Eternal sun shine settles on its head'—Goldsmith

உள்ளுறை என்பதன் விளக்கத்தை மேலே கண்டோம். அதனைச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதி. ஆங்கிலத்தில் நன்கு எடுத்துக் காட்டியுள்ளது.[1]

'உள்ளுறுத்து இதனொடு ஒத்துப்பொருள் முடிகஎன
உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்' (அகத்.-51)

இவ்வுள்ளுறை உவமத்திற்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியர் கலித்தொகைப் பாடல் ஒன்றை உதாரணமாக எடுத்துத் தருகின்றார். 'வீங்குநீர் அவிழ் நீலம்' என்ற அறுபத்தாறும் கலி, எவ்வாறு உள்ளுறையாய் அமைகின்றது என்பதையும் அவர் எடுத்துக் காட்டுகின்றார். இதற்குமுன் உள்ளுறையோடு ஏனை உவமம் கலந்து வந்து, கருப்பொருள் நலமுற்றிய அந்த ஏனைய சாதாரண உவமையும் உள்ளுறை உவமத்துக்கு எவ்வாறு சிறப்புச் செய்கின்றதென்பதை 'விரிகதிர் மண்டிலம்' என்ற கலிப்பாட்டால் நன்கு விளக்குகின்றார். 'இனிதமர் காதலன் இறைஞ்சித்தன் அடிசேர்பு, நனிவிரைந் தளித்தலின் நகுபவள் முகம் போல' என்ற வெளிப்படை உவமமும் வந்து, அதற்குமுன் அமைந்த உள்ளுறை உவமத்திற்கு அணி செய்கின்றது. அதன் நலத்தை உரையாசிரியர் நச்சினார்க்கினியர், "துனி மிகுதலாலே பெருக்கு மாறுது வீழ்கின்ற கண்ணீர், காமத்தீயில் சுவறி அறுதலை யுடைத்தாய் ஒழுக, அவ் வருத்தத்தைக் கண்டு விரைந்து கணவன் அருளுதலின், சிறிது மகிழ்பவள் முகம் போல' என்ற ஏனை உவமம், 'தாமரை மலர் பணி வாரத் தலைவிடும்' என்ற உள்ளுறை உவமத்தைத் தரும் கருப் பொருட்குச் சிறப்புக் கொடுத்து நின்றது," என எடுத்துக் காட்டுகின்றார். இவற்றிலெல்லாம் ஆசிரியர் காட்ட விரும்பிய பொருள்கள் யாவை? நாம் மேலே வள்ளுவர் காட்டிய உவமையில் கண்ட நிலைதான் இங்கும். இந்த

1. Indirect suggestion by which an author who does not propose to explicitly state his idea, endeavours, however, to present it through the skilful employment of such telling comparisons as would help people to infer therefrom what he actually intended to convey'—Lexicon, Vol. I, p. 474.

உள்ளுறை உவமமும் இறைச்சியும் பெரும்பாலும் அகப் பொருளுக்கே உரியனவாகும். அகப்பொருளில் தலைவன், தலைவி, பாங்கி முதலானோர் பேசுகின்றனர். அவர்கள் ஒருவரை ஒருவர் போற்றும் இடமும் உண்டு; பழிக்கும் இடமும் உண்டு. போற்றுவதைத் தாராளமாக நேருக்கு நேர் நின்று செய்ய லாம். ஆனால், தூற்றுதலை அவ்வாறு செய்ய முடியாதே! யாரையுமே அவ்வாறு வெளிப்படையாகத் தூற்றி அறியாத தமிழ்க் கவிஞர் சமுதாயம், தவறிழைத்த தலைவனை எவ்வாறு அவன் மனைவி வாயிலாகவும் தோழி வாயிலாகவும் தூற்ற முற்படும்? அகப்பொருட் பகுதியே பெரும்பாலும் புலவர் நாட்டிய வழக்கானமையின், அதில் வருகின்ற பல பாத்திரங் களும் அவர் தம் கையிடைப்பட்டு, அவர் கூற்று வழிச் செயலாற்ற வேண்டுவனவே. அவர்கள் உள்ளுறையையும் இறைச்சியையும், தலைவனுக்கு முன் அவன் தவறை இடித் துரைத்து, அவன் வழி தவறு என்பதை விளக்கி, அவனை நேர்மை வழியில் திருத்தும் வகையிலே பயன்படுத்துகின்றனர். 'தலைவனைத் திருத்த இவர்கள் யார்?' என்று கேட்கலாம். வாழ்வில் பிரியாத வகையில் ஓம்படை கூறி உறுதியளித்து நின்ற தலைவன், தன்நிலை கெடுவானாயின், அவனைத் திருத்த அவனுடன் இருக்கும் இவ்விருவரைத் தவிர வேறு யார் உதவக் கூடும்? அவன் வாழ்வே அவள் வாழ்வு என்பதை நன்கறிந்த தோழி, தவறுகளைத் திருத்தாது விட்டு, நிலைமை நீட்டிக்கின், தலைவி மெலிந்து இறந்துபடவும் கூடுமே! அத்தகைய கொடுமையைத் தலைவன் செய்வானா? ஆம். செய்கின்றான். வேண்டுமென்றே அன்று; சூழ்நிலை காரணமாக. அச் செயலை விளக்கித்தடுத்து நிறுத்த இந்த உள்ளுறையும் இறைச்சியும் பயன்படுகின்றன.

கண்ணனைய காதலியுடன் பிரியா வாழ்வில் திளைக்க வேண்டிய காதலன், அவளை விட்டுப் பரத்தையரை நாடிச் செல்கின்றான். பரத்தையர் என்பார், விலை மகளிராகி ஆடவரை மயக்கும் இயல்பு பெற்று, காசுக்காக அவரோடு கூடும் பண்பினர் என்பதை அறிகின்றோம். தலைவன் தன் வாழ்வுக்காகவே வாழும் தலைவியை விடுத்து, இத்தகைய காசு

வழிக் கருத்திருத்தும் பரத்தையை நாடிச் செல்வனுயின், அவன் செல்வமும் புகழும்—ஏன் வாழ்க்கையும்கூட—ஒரு சேரப் பாழ்பட்டு அழியாவோ? அந்த அவலநிலையில் அனைத்தையும் காண்கின்ற தோழி, வாளாவிருக்க இயலுமோ? அவனுக்கு அறிவூட்டித் தெருட்டுகின்றாள். அப்போதுதான் இவ்வுள்ளுறையும் இறைச்சியும் உதவுகின்றன. தலைவனை நேர் நிறுத்தி, 'நீ இவ்வாறு பரத்தையர் வீட்டுக்குச் செல்லுதல் தக்கதன்று. இங்கேயே இரு.' என்று அவளால் கூற முடியுமா? கூறுவதுதான் நாகரிகமாகுமா? அதற்காகவே அவன் நாட்டில் உள்ளன வாகிய கருப்பொருள்களின் செய்கைகளைக் கூறி, அத்தகைய நாட்டுத் தலைவனே என விளித்து, மேல் வேறு பேசுகின்றாள் தோழி; அவனது நாட்டுப் பொருள் நிகழ்ச்சியில் தலைவன் செயலை உள்ளுறையாக அமைத்து, அப்பொருளை அவனுக்குப் புலப்படுத்துகின்றாள். நச்சினார்க்கினியர் காட்டிய உவமையை நாம் காண்போம்:

வீங்குநீர் அவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட
ஞாங்கர் மலர்சூழ்ந்தந் தூர்புகுந்த வரிவண்டு
ஓங்குய ரெழில்யானைக் கனைகடாம் கமழ்நாற்றம்
ஆங்கவை விருந்தாற்றப் பகலல்கிக் கங்குலான்
வீங்கிறை வடுக்கொள வீழுநர்ப் புணர்ந்தவர்
தேங்கமழ் கதுப்பினுள் அரும்பவிழ் நறுமுல்லை
பாய்ந்தூதிப் படர்தீர்ந்து பண்டுதா மரீஇய
பூம்பொய்கை மறந்துள்ளாப் புனலணி நல்லூர!"

(கலித்தொகை, 66)

இதில் உள்ளுறை உவமம் தோன்றுவதை நச்சினார்க்கினியர், "இதனுள் 'வீங்கு நீர்' பரத்தையர் சேரியாகவும், அதன்கண் அவிழ்ந்த நீலப்பூக் காமர் செவ்வி நிகழும் பரத்தையராகவும், பகர்பவர் பரத்தையரைத் தேரேற்றிக் கொண்டுவரும் பாணன் முதலிய வாயில்களாகவும், அம் மலரைச் சூழ்ந்த வண்டு தலைவனாகவும், யானையின் கடாத்தை ஆண்டுறைந்த வண்டுகள் வந்த வண்டுக்கு விருந்தாற்றுதல் பகற்பொழுது புணர்கின்ற சேரிப் பரத்தையர், தமது நலத்தை அத் தலைவனை நுகர்வித்தலாகவும், கங்குலின் வண்டு முல்லையை ஊதுதல் இற்பரத்தையருடன் இரவு துயிலுதலாகவும், பண்டு மருவிய பொய்கையை மறத்தல்

தலைவியை மறத்தலாகவும் பொருள் தந்து, ஆண்டுப் புலப்படக் கூறிய கருப்பொருள்கள் புலப்படக் கூறாத மருதத்திணைப் பொருட்கு உவமமாய்க் கேட்டோன் உள்ளத்தே விளங்கி நின்ற வாறு காண்க', என்று நன்கு விளக்கம் தந்துள்ளார் : (தொல். அகத்திணையியல் உரை). இதற்குமேல் நம் விளக்கம் ஏனோ!

இனி, இறைச்சிப்பொருள் பற்றிக் காண்போம். இதற்குப் புல்கலைக்கழக அகராதி, 'கருப்பொருளின் உள்ளே கொள்ளும் பொருள்' எனப் பொருள் கூறுகின்றது.[1]

> "இறைச்சியில் பிறக்கும் பொருளுமா ருளவே
> திறத்தியன் மருங்கில் தெரியு மோர்க்கே.'
>
> (தொல், பொருள். 35)

என்ற சூத்திரத்து உரையில், நச்சினார்க்கினியர் குறுந்தொகைப் பாட்டொன்றை உதாரணமாகத் தருகின்றார்.

> 'கன்றுதன் பயமுலை மாந்த முன்றில்
> தினைபிடி உண்ணும் பெருங்கல் நாட!
> கெட்டிடத்து உவந்த உதவி கட்டில்
> வீறுபெற்று மறந்த மன்னன் போல,
> நன்றிமறந் தமையா யாயின் மென்சீர்க்
> கலிமயிற் கலாவத் தன்ன இவள்
> ஒலிமென் கூந்தல் உரியவால் நினக்கே' (குறுந், 225)

என்ற பாடலே அது. இதிலும் முன் உள்ளுறை உவமத்தைப் போன்ற ஒரு வெளிப்படை உவமமும் கலந்துள்ளது. எனினும் அதில் விளங்குமாறு, இது நேரிய வழியில் செல்லாது, 'திறத் தியல் மருங்கின் தெரியு மோர்க்கே,' என்றபடி, ஆய்ந்து பொருள் கொள்ளும் வகையில் அமைகின்றது. அதை நச்சினார்க் கினியர், இதனுள், "தான் கெட்டவிடத்து உதவின உதவியை அரசு உரிமையெய்திய மன்னன் மறந்தாற்போல, நீ இரந்து துயருற்ற காலத்து யான் தலைவியை நின்னோடு கூட்டிய செய்ந் நன்றியை மறவாது இன்று நீ வரைந்து கொள்வாயாயின், இவள் கூந்தல் நினக்குரிய,' என்ற வழி, உவமையும் பொருளும்

1. Suggestive meaning conveyed indirectly by reference to the distinctive feature of the tracts of land. (Lex- Vol I, p. 386)

ஒத்து முடிந்தமையின், முன்னின்ற 'நாட' என்பது உள்ளுறை உவமம் அன்றாய் இறைச்சியாம். என்னை? தன் கன்றிற்குப் பயன்பட்டுப் பிறர்க்கு உயிரைக் கொடுக்கின்ற தினையைத் தான் உண்டு அழிவு செய்கின்றாற்போல, நீ நின் கருமம் சிதையாமல் பார்த்து எமக்கு உயிராகிய இவளைத் துயருறுத்தி எம்மை இறந்துபடுவித்தல் ஆகாதென்ற உவமை. எய்திற்றேனும், பின்னர் நின்ற பொருளோடு இயையாது, இவ்வுவமை உள்ளுறையுற்றுப் பொருள் பயவாது, இறைச்சியாகிய 'நாடன்' என்பதனுள்ளே வேறோர் பொருள் தோற்றுவித்து நின்றதேயா மாதலின். 'மூலை மாந்த' என்றது, தன் கருமம் சிதையாமல் பார்த்தென்னும் துணையன்றி உள்ளுறை உவமப்பொருளை முற்ற உணர்த்தாமை உணர்க," என்று நன்கு விளக்குகின்றார். இதை விளக்குவது அவ்வளவு எளிதன்றுதான். அதனாலேதான் தொல்காப்பியனாரே, 'திறத்தியல் மருங்கின் தெரியுமோர்க்கே' என்று, நன்கு ஆராய்ந்தறிந்துகொள்ளும் நல்ல திறன் வாய்ந்தோர்க்கன்றி இவ்விறைச்சிப் பொருள் விளங்காது என்கிறார். பார்த்தால் உள்ளுறை உவமம் ஒத்திருக்கின்றது. என்றாலும், முற்றும் உள்ளுறையாகவும் இல்லை. வெளிப்படை உவமம், உள்ளுறை உவமத்தைச் சார்ந்து நின்றது போன்று இங்கும் நின்றதாகக் காணினும், அதன் பொருளின் அமைப்பு முறையிலே வேறுபடுகின்றது. அங்குக் காணும் ஊரனைப் பற்றி விளக்கவருகின்ற அத்துணைத் தொடர் பொருளும் இங்குக் காணும் 'நாடனை' உள்ளுறை உணரவைக்கும் நிலையில் இல்லை. 'நாட'னிடத்திலேயே அப்பொருள் அறியக் கிடக்கின்றது. இவற்றிற்கெல்லாம் நச்சினார்க்கினியர் விளக்கத்தையே நல் விளக்கமாகக் கொண்டு நாம் மேலே செல்வோம்.

கவிதை நலனில் இன்னும் எத்துணையோ காணவேண்டியுள்ளன. இந்த உவமை மட்டுமன்றி, உருவகம் என்ற ஒன்று உள்ளதையும் குறித்தோம். அது உவமிக்கப்படும் பொருளையும் உவமையையும் வேறாகப் பிரியாது, ஒன்றியே பின்னுவதென்பதையும் கண்டோம். 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர்' என்ற வள்ளுவர் வாக்கு இவ்வுருவகத்தை விளக்கப் போதுமானது என நினைக்கின்றேன். பிறவி எல்லையற்றது. கடல்

போலக் கங்கு கரை இன்றித் தொடர்ந்து வரும் ஒன்று. 'கடல் போன்ற பிறவி' என்பது உவமை. 'பிறவியாகிய கடல்' என்பது உருவகம். இது சற்றுச் சிறந்ததுபோலக் காணப்படுகின்றது. ஆய்ந்து பார்ப்பின், பொருள் ஒன்றே. பிறவியாகிய கடல் என்று கவிதையின் நலன் தோன்றப் பாட இந்த உருவக அணி உதவுகின்றது என்ற இந்த அளவோடு இதை நிறுத்தி, வாய்ப் புள்ளதேல், பின்னர்ப் பார்த்துக் கொள்ளலாம். பிற அணிகள் அனைத்தும் இவற்றை ஒட்டியே தோன்றியும், பிறழ்ந்தும், உறழ்ந்தும், திரிந்தும் வருகின்றமையின், கவிதையின் நலத்திற்கு இவை அணி செய்வன போன்று, மற்றவை அத்துணை சிறந்தவை அல்ல என்று ஒதுக்குதல் ஈண்டைக்கு ஏற்புடைத்தாகும்.

இவ்வாறு கவிதை நலன் பல வகையில் சிறக்கின்றது. தமிழ்க் கவிதை மட்டுமன்றி, இங்குக் கூறிய அனைத்தும் எம்மொழிக் கவிதைக்கும் ஏற்றனவெனவே கொள்ளல் வேண்டும். இதுவரை கூறியவற்றான், கவிதை நலன் இன்னின்ன வகையால் சிறக்கின்றதென்பதும், சொல்லழகும் பொருளழகும் கவிதைக்கு உயிரும் உடலும் போன்று ஒன்றி நிற்பன என்பதும், அவற்றுள் ஒன்றின் நல்லமைப்புக் கெடினும் கவிதை நலன் கெடும் என்பதும், சங்க காலத்துக் கவிஞர் கவிதை நலன் கெடாத வகையில் பாதுகாத்தனர் என்பதும், பிற்காலப் புலவர்கள் கவிதை நலனைக் கருக்க முற்படாது ஏதோ பாடி வைத்தார்கள் என்பதும், கவிதை நலத்துக்குச் சொல்லும் பொருளும் போன்று, உவமையும் சிறந்த ஒன்று என்பதும், அவ்வுவமை வெளிப்படை, உள்ளுறை, இறைச்சி எனப் பலவாகும் என்பதும், அவற்றுள் ஒவ்வொன்றும் இன்னின்ன வகையில் கவிதைக்கு நலன் தருகின்றது என்பதும், அவற்றின் அடி ஒற்றியே உருவகமும் கவிதை நலனுக்கு ஓரளவு உதவு கின்றதென்பதும் அறிந்தோம். கவிதையின் அமைப்பு, பண்பு, கலை நலன், அக் கவிதை செய்தவனாகிய கவிஞனின் பண்பு, நிலை முதலியவற்றைப் பற்றிக் காண்பதை இந்த அளவோடு நிறுத்தி, இனி வாழ்க்கையைப் பற்றி ஓரளவு ஆராய்ந்து, பின்பு அவை இரண்டும் ஒன்றை யொன்று எவ்வாறு பின்னிப் பிணைந்து வளர்ந்துள்ளன என்பதனையும் காண்போம்.

வாழ்க்கை

1. மண்ணும் விண்ணும்

உலகில் பிறந்தவை அனைத்தும் வாழ்கின்றன; வாழ நினைக்கின்றன. நூறு வயதான தொண்டு கிழவனும் 'உலகில் இன்னும் நெடிது வாழ வழி உண்டா?' என்று சிந்தித்துக் கொண்டேதான் இருப்பான். 'நெடுநாள் இருந்தபேரும் நிலையாகவே இனும் காயகற்பம் தேடி நெஞ்சு புண்ணுவர்' என்று தாயுமானவர் இந்த நிலையை மிக அழகாக எடுத்துக் காட்டியுள்ளார். ஆகவே, எப்படிப்பட்டவரும் நெடிதுவாழ விரும்புவர். மனிதன் மட்டுமன்றி உலகில் உயிர் வாழும் அனைத்தும் வாழவேண்டும் என்ற எண்ணத்திலே தான் இருக்கின்றன. அந்த எண்ணத்தில் தாம் செய்வதை ஆய்ந் தோய்ந்து பாராமலே, எப்படியாவது தாம் வாழ்ந்தால் போதும் என்ற நினைப்பில், தம் குழவிகளையே தின்று வாழ்கின்றன சில உயிர்கள். கடலில் பெருமீன்கள் சிறு மீன்களைத் தின்று உயிர் வாழ்கின்றன என்பர். தவிர, தம் உயிர் வாழ்க்கையை எண்ணி, எப்படியாவது மற்றையவற்றை வருத்தியும் வாட்டியுங்கூட நிலைபெற வழிதேடுகின்றன. புல் பூண்டு, புழுப் பூச்சி முதலியனவுங்கூட அவற்றிற்கு விலக்காக மாட்டா. எப்படியும் அனைத்தும் நெடுங்காலம் உலகில் வாழ்வே விரும்புகின்றன என்பது அனைவரும் அறிந்த ஒன்று தான்.

ஆம்! வாழத்தான் வேண்டும். ஏன் வாழவேண்டும்? வாழ்க்கை என்பதுதான் என்ன? அவ் வாழ்க்கை என்று தோன்றிற்று? இத்தகைய கேள்விகளுக்கு ஒருவாறு விடை கூற இயலுமாயின், வாழ்க்கை வரலாற்றை ஒரு வகையில் அறிந்து கொள்ள முடியும். இன்று, இந்த இருபதாம் நூற்றாண்டின் இடையில், மனிதன் அனைத்தையும் கட்டியாள நினைக்கின்றான்; ஓரளவு கட்டியும் ஆள்கின்றான். மண்ணும் விண்ணும், நீரும் நெருப்பும், ஓரளவு அவன் வழி ஏவல் கேட்கின்றன. தனக்குக் கீழ்ப்பட்ட விலங்கினங்களும் பிறவும் மனிதனுக்கு அடங்கி நிற்பதைக் கண்டு அவன் பெருமகிழ் வெய்துகின்றான். தன் அறிவின் எல்லையில் அகப்படுகின்ற அனைத்தையும் கட்டி ஆள வேண்டுவதே தன் வாழ்க்கையின் குறிக்கோள் என்று திட்டமிட்டுக் கொண்டே மனிதன் தன் வேலையில் கண்ணும் கருத்துமாயிருக்கின்றான். அப்படித் தன் அறிவினைக்கொண்டு ஆராயும் போது, அவன் தன் ஆதிவாழ்க்கையைப் பற்றியும் ஓரளவு அறிந்து கொள்ளுகின்றான். அந்த ஆதி வாழ்க்கை எப்படி அமைந்தது என்பதையும் காண முடிகின்றது. அவ்வாறு காணும் காலத்தில் கழிந்த நெடுங் காலத்தையும், ஒழிந்த உயிர்த்தோற்ற வகைகளையும் எண்ண நேரிடுகின்றது. அந்த எண்ணத்தின் இடையில் ஒரு பெருமூச்சு உருப்பெற்று எழும் என்பது உறுதி.

அறியா மனிதர்கள். 'ஏதோ பிறந்தோம், வாழ்கின்றோம்!' என்ற அந்த அளவில் காலத்தைக் கழித்துக் 'கண்டதே காட்சி; கொண்டதே கோலம்,' என்றபடி எப்படியோ வாழ்ந்து கழிந்து விடுவதைக் காண்கின்றோம். ஆனால், முன்னும் பின்னும், நோக்கி, உயிரினத்தின் வாழ்க்கை வரலாற்றை எண்ணும் ஒருவன், தன் வாழ்நாள் எத்துணை நொடியளவில் உள்ளது என்பதையும், தன் பரந்த உலகமே அணுவினுள் அணுவான ஒன்று என்பதையும் நன்கு உணர்ந்து கொள்வான். அனைத்தையும் ஆராய வேண்டும் என்ற உள்ளத்தோடு, ஆய்வுக்களத்தில் அமர்ந்து அல்லும் பகலும் உழைக்கும் ஒருவன், இவ்வாறு இன்று விஞ்ஞான வழியில் கண்ட உண்மையை நம் கவிஞர்கள்

சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே கண்டு காட்டியிருக் கின்றார்கள். எப்படிக் கண்டார்கள் என்பதைத் திட்டமாக அறிய இயலாவிட்டாலும், அவர்கள் கண்ட அத்தனை முடிவு களும் இன்று உண்மையென விஞ்ஞான வழியில் விளக்கப்படு வதைக் காண, அவர்தம் ஆய்வுத் திறன் ஓரளவு விளங்குகிற தன்றோ! இவ்வாறு, நாம் நமது வாழ்வை ஆராய்வதன் முன் இந்த வாழ்வு வாழ நிலைக்களனாய் இருக்கும் உலகைப்பற்றியும் இவ்வுலக முதற்காரணம் பற்றியும் அறிய வேண்டுவது அவசியம். பின்பு இந் நிலவுலகம் தோன்றி இன்றுவரையும் மனிதன் எவ்வாறு படிப்படியாய் வளர்ந்துள்ளான் என்பதை யும் காணல் வேண்டும். இத்துறையில் இன்று நம் நாட்ட வர்கள் கவனம் செலுத்துவதில்லை என்பது உண்மைதான். எனினும், மேலை நாட்டு அறிஞர்கள் எல்லாத் துறைகளிலும் கருத்திருத்துவது போன்று, இத்துறையிலும் கருத்திருத்தி ஆராய்ந்து வருகின்றார்கள். நிலம் பற்றியும், அதில் தோன்றும் உயிரினங்கள் பற்றியும், அவற்றின் வளர்ச்சி பற்றியும் பலப்பல நூல்களை எழுதிக்கொண்டே யிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் ஆராய்ச்சியின் பெருமுயற்சியால் அறிந்து காட்டுகின்ற முடிவுகள் அனைத்தையும் நம் இலக்கியங்கள் எடுத்துக்காட்ட இயலாவிட்டாலும், அவர்கள் கூறுவனவற்றுள் சில, பழங் காலத்திலே நம் தமிழ் இலக்கியங்களிலும் கூறப்பட்டிருப்பதை அறிய நாம் மகிழாதிருக்க முடியுங்கொல்! உலகத் தோற்றத்தை யும் உயிர் வளர்ச்சியையும் பற்றி அவர்கள் கூறுமாற்றைக் கண்டு, மேலே வாழ்க்கை முறையைக் காணலாம்.

உலகத் தோற்றத்தையும் அதன் வரலாற்றையும் கூறு கின்ற நூல்கள் நம்மிடை இன்று ஏராளமாய் உள்ளன. வரலாறு என்னும்போது நம் மனக்கண்முன் வரலாற்று ஆசிரியர்கள் எழுதிவைத்த சரித்திர நூல்கள் தெரியும். வரலாறு என்றால், ஒரு நாட்டின் அரசரைப் பற்றியும், அவர் தம் குடும்பம் பற்றியும், அவர்தம் வாழ்க்கையைப் பற்றியும் குறித்து எழுதுவதுதான் எனப் பலர் நம்பி அவ்வாறே எழுதி யும் வைத்துள்ளார்கள். ஆனால், உண்மையில் வரலாறு

என்பது அரசரைப்பற்றியது மட்டுமாகாது. 'அரசரே உலகுக்கு ஆணி' என்ற மனப்பான்மை இடைக்காலத்தில், நாட்டில்—உலகில்—சிறந்தோங்கியிருந்தது. நம் தமிழ் நாட்டிலுங்கூட அத்தகைய எண்ணம் ஒரு காலத்தில் இருந்தது என்னலாம். எனினும், அந்தக் காலத்திற்கூட, அரசன் நாட்டு மக்களை மதித்தே நடந்து வந்தான் என்பதைக் காண்கின்றோம். எனவே, வரலாறு நாட்டு மக்களின்—உலக உயிர்களின்—அடிப்படையிலிருந்து எழுதப் பெறவேண்டும்.

உலக அரங்கங்களில் நடக்கும் போர்களே முக்கியமாக, வரலாற்றுக்கு உட்பட்ட காலம் என்றும், வரலாற்றுக்கு முந்திய காலமென்றும் காலத்தை வரலாற்று ஆசிரியர்கள் வரையறுத்துக்கொண்டு, தத்தம் நூல்களை எழுதியுள்ளார்கள். வரலாற்றுக் காலம் என்று அவர்கள் சொல்லும் எல்லை ஒரு சில ஆயிரம் ஆண்டுகளையே தன்னுள் அடக்கியுள்ளது. ஆனால், ஆராய்ந்து பார்ப்பின், அது வரலாற்று எல்லையை வரையறுக்க முடியாத ஒன்று. உயிர்த் தோற்றமும் உலகத் தோற்றமும் உண்டான காலத்திலிருந்தே வரலாறு எழுதப் பெறல் வேண்டும். அப்போது வரலாற்று நிலையே வேறுவகையில் அமையும். இந்த உணர்ச்சி இக்கால உலகில் தோன்றி வளர்ந்து வருகின்றது. நம் நாட்டுப் பள்ளிகளில் சில ஆண்டுகளுக்கு முன் மாணவர்கள் படித்த வரலாற்று நூல்களுக்கும், இன்றைய நூல்களுக்கும் எத்தனையோ வேறுபாடுகள் உள்ளன. அரச பரம்பரைகளைப் பற்றியும், அவர்களது வாழ்க்கை, போர் முறை, பிறசெயல்கள் பற்றியும் எழுதப்பெற்ற வரலாற்றுநூல்கள் இன்று நாட்டில் இடம் பெறவில்லை. அதற்குப் பதில் மக்கள் சமுதாய வாழ்வையே அடிப்படையாகக் கொண்டு, அவர்தம் சமூகத்தை வரலாற்றுவழி ஆய்ந்து எழுதும் சமூக நூல்களாகிய வரலாற்று நூல்களே இடம் பெற்றமையை நாம் அறியலாம். இந்த நிலை இன்னும் சற்றே விரிவடைய வேண்டுமென்பதே நம் நோக்கம்.

வரலாறு பற்றியும் நிலம் பற்றியும் ஆய்வு நூல்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. பரந்த அண்ட கோளத்தின்

அமைப்பும், அதிலே நிலைத்து நிற்கும் சூரியன் தன்மையும் அதைச் சுற்றி வட்டமிடும் உலகம் போன்ற கோளங்களின் நிலையும் அமைப்பும், அவை எவ்வெவ்வாறு வளர்ந்து இன்றைய நிலையில் இருக்கின்றன என்பதன் ஆய்வும், அவற்றில் உயிர்த் தோற்றம் உண்டான வழியும், அவ்வுயிர்த் தோற்றத்தின் வாழ்க்கை முறையும் வளர்ச்சியும் ஆகியவற்றை உள்ளடக்கியதே உண்மை வரலாறு ஆகமுடியும். இந்த உண்மையை இன்றைய உலகத்தார் உணர்ந்துள்ளனர் என்பதற்கான அறிகுறிகள் உள்ளன. அவர்வழி அண்டகோள வரலாறு தொடங்கி, தனி மனிதன் வரலாறு முடிய அமையும் வாழ்க்கை வரலாற்று நூல்கள் வெளிவரும் என்ற நம்பிக்கை தழைக்கின்றது. அந்த வழியில் இன்று மேலைநாட்டில் பல ஆய்வாளர் தம் கருத்தைச் செலுத்தி, நூல்களை வெளியிட்டுக் கொண்டேயிருக்கின்றனர். நம் தமிழ் நாட்டிலும் இத்தகைய வரலாற்றுக் கருத்துக்கள் பழங்காலக் கவிதைகளில் காணப் பெறுகின்றன. அவற்றின் வழி ஒருவாறு நாம் வாழும் உலகம் பற்றி உணர்ந்து கொள்ள வழி உண்டு.

இன்று நாம் வாழும் உலகத்தின் பரப்பை அளந்து கணக்கிட்டிருக்கிறார்கள்; இவ்வுலகம் இரண்டாயிரத்து ஐந்நூறு (2500) கல் சுற்றளவுடையது என்று கூறுவர். இது சுழன்று கொண்டேயிருக்கின்றது; சூரியனையும் சுற்றிவருகின்றது. அவ்வாறு தன்னிற் சுழல்வது ஒரு நாள், சூரியனைச் சுற்றுவது ஓர் ஆண்டு என்றெல்லாம் கணக்கிட்டிருக்கிறார்கள். இந்த உலகத்தைச் சுற்றிச் சந்திரன் வட்டமிடுகிறான் என்றும், அவ்வாறு ஒருமுறை வட்டமிட ஆகும் நாள்களே திங்களாக எண்ணப்படுகின்றனவென்றும் கூறுவார்கள். இவ்வாறே சூரியனையும் பூமியையும் பலப்பல பொருள்கள் வட்டமிடுகின்றன என்பார்கள். அவை அனைத்தும் உருண்டைகளே என்பதும் அவர்தம் ஆராய்ச்சியின் முடிவு. உலகம் உருண்டை, சூரியன் உருண்டை, வான வெளியில் காணப்படும் அனைத்துமே உருண்டை வடிவிலே உள்ளன என்பதைத் தம் ஆய்வுக் களத்தில் இருந்து கண்டுபிடித்துள்ளார்கள் அறிஞர்கள்

இப்படி உருண்டை உருண்டைகளாக எத்தனை உள்ளன என்று அவர்கள் ஆய்ந்து கொண்டேயிருக்கின்றார்கள். ஒரு சில புதிய கோளங்கள் அவர்கள் கண்ணுக்குப் புலப்படுகின்றன. எனினும், இந்த அண்ட கோளத்தின் எல்லையை அவர்கள் சென்று கண்டார்கள் என்று கூற முடியாது. இதுபற்றிய நூல்களெல்லாம் அவர்தம் ஆராய்ச்சிகள் பெருகிக்கொண்டே யிருப்பதைத்தான் குறிக்கின்றனவேயன்றி, முடிந்த நிலையைக் காட்டவில்லை—ஏன்?—என்றும் காட்டவும் இயலாது. அத்துணை விரிவுடையது அண்டகோளம்.

ஆராய்ச்சி வளர்ந்துகொண்டே போகிறது. அதன் எல்லையை இன்ன அளவிற்று என்று அறுதியிட்டுக் கூற முடியாது. ஆராய்ச்சியாளர் அவர்தம் ஆய்வுக்களத்தில் இரவும் பகலும் இருந்துகொண்டே புதிது புதிதாகக் கண்டு பிடித்த தொலை நாடி முதலிய சாதனங்களின் உதவியைக் கொண்டு ஆராய்ந்து கொண்டே யிருக்கின்றனர். 'அறிதோ றறியாமை கண்டற்றால்' என்று திருவள்ளுவர் கூறியபடி, அவர்கள் ஆய்வுக்களத்தில் அண்டகோளத்தின் அகலத்தைக் காணக் காண, அதுவோ மேலும் மேலும் விரிந்துகொண்டே போகின்றது. அந்த அண்டகோளத்தில் எண்ணற்ற உருண்டைகள் தொங்கிக்கொண்டே யிருக்கின்றன. அவற்றிற் கிடையிலுள்ள தூரத்தையும் அவர்கள் அளவிட்டுக் காண முயல்கின்றார்கள். அவ்வாறு முயன்று காணும்போது எத்தனையோ கோடிக்கணக்கான மைல்கள் கொண்ட இடை வெளி காணப்படுகின்றது, 'சூரியன் இன்றேல், வாழ்வில்லை,' என்று எண்ணும் நம் உலகுக்கும் சூரியனுக்கும் இடையிலே எட்டுக் கோடிக் கல் இடைவெளியிருக்கின்றது என்று கணக் கிட்டிருக்கிறார்கள். சந்திரனுக்கும் நமக்கும் பல இலட்சக் கணக்கான கல் இடைவெளியிருக்கின்றதாம். சாதாரணமாக வாழும் நமக்கு இவையெல்லாம் வியப்பாக இருக்கும். ஆனால், ஆய்வுக்களத்தில் தம் வாழ்வையே இத்தகைய ஆய்வுகளுக்கு என அர்ப்பணித்த அந்தப் பேரறிஞர்கள்—நல்ல ஆய்வாளர் கள்—ஆய்ந்து, அளவு தவறாமல், இவற்றைக் கண்டுபிடித்

துள்ளார்கள். இத்தகைய ஆய்வாளர்தம் உதவியினாலேதான் நாம் இன்று பல உண்மைகளை உணர்ந்துகொள்ள முடிகின்றது.

வானவெளியாகிய இந்த அண்டகோளத்தில் நம் சூரியன் போன்று எத்தனையோ சூரியர்கள் உண்டாம். நம் நாட்டுப் புராணங்கள் துவாதச ஆதித்தர்களை—பன்னிரு சூரியர்களைக் குறிப்பதை நாம் கட்டுக்கதையென்று தள்ளிவிட்டோம். ஆனால் ஆய்வுக்களத்தில் இவர்கள் அமர்ந்து கண்ட உண்மையை நம்மால் அவ்வளவு எளிதில் தள்ளிவிடமுடியாது. பல கோடி மைல்களுக்கு அப்பால் இருக்கின்ற சூரியன் வரையறுத்த வாழ்விலே இவ்வுலக மக்களாகிய நம் வாழ்வு அமைகின்றது என்று எண்ணும்போது, இவ் வாழ்க்கை அத்தனை கோடி மைல்களைப் பின்னிப் பிணிக்கின்ற பெருவாழ்வாக அமைகின்றது என்பதைக் கணக்கெடுத்து வைத்தவராகின்றோம். நம் உலகமே சூரியன் சுழற்சியிலேயிருந்து சிதறின ஒரு பொறியாகும் என்றும், இதுவும் அக்காலத்து ஒரு நெருப்புத் துளியாகவே இருந்ததென்றும், சுற்றுச் சார்புகட்கு ஏற்பச் சிறிதுசிறிதாகக் குளிர்ச்சி அடைந்து வருகின்றதென்றும், அந்த நெருப்பு நிலை இன்னும் நிலத்தில் உள்ளமை தான் தோண்டத்தோண்ட உள்ளே சூடு அதிகமாக இருப்பதற்குக் காரணம் என்றும் கூறுவர் ஆய்வாளர். எனவே இவ்வுலகம் சூரியனது ஒரு திவலை. இந்த உலகம் இப்படியே பலகோடி ஆண்டுகள் செல்லச் செல்ல, வெப்ப நிலை மாறி, குளிர்ந்து, உயிர்ப்பொருள்கள் வாழ்வதற்கே வகையற்றதாகி விடும் என்றும் ஆய்வாளர்கள் குறித்துள்ளார்கள். சந்திரன் அவ்வாறு குளிர்ந்த ஒரு கோளமே என்றும், அதனாலேதான் அதனிடத்திலிருந்து வரும் ஒளிக்கதிர்கள் தண்மை வாய்ந்துள்ளன என்றும் ஆராய்ந்துள்ளனர். மேலும் விண்ணில் தெரிகின்ற பல்வேறு நட்சத்திரங்களாகிய விண்மீன்களுட் பல, தோற்றத்தில் பெரியவையென்றும், சூரியனைவிட மிகப்பெரிய நெருப்புக் கோளங்களெல்லாம் உள்ளன என்றும், ஒவ்வொரு கோளத்தைச் சுற்றியும் பலப்பல உலக மண்டலங்கள் வட்ட

மிடுகின்றன் என்றும் கூறுவர். இன்று தோற்றத்தில் காணும் விண்மீன்களுக்குள்ளே மிகப் பெரியதும் நெடுந்தொலைவில் உள்ளதுமான ஒன்று 'திருவாதிரை' என்பது என்று ஆய்வாளர் கூறியிருக்கின்றனர். சிலர் துருவ நட்சத்திரத்தி லிருந்து உலகம் ஐம்பது ஒளியாண்டுகள் தூரத்தே உள்ளது எனக் கண்டிருக்கின்றனர். ஒரு சூரியனுக்கும் மற்றொரு சூரிய னுக்கும் உள்ள இடைவெளி எத்தனையோ கோடிக்கணக்கான கல் தூரம் என்பர். இப்படியே மண்ணையும் விண்ணையும் பற்றிய ஆராய்ச்சிகள் விரிந்து கொண்டே செல்கின்றன.

இவ்வாறு 'எண்ணற்ற உருண்டைகள் எப்படி விண்ணிடை வாழ்கின்றன?' என்று கேட்கலாம். சில காலத்துக்குமுன் மேனாட்டார் உட்பட அனைவரும் உலகம் தட்டை என்றுதான் எண்ணி வந்தனர். உலகத்தைப் பாய்போலச் சுருட்டலாம் என்பர் புராணக்காரர். விஞ்ஞான அறிவு வளர்ந்து இத்தகைய உண்மைகளையெல்லாம் ஆராயுமுன் உலகம் தட்டையானதென்றும், சூரியன் உலகைச் சுற்றி வருகின்றான் என்றும் கூறி வந்தனர். ஆனால், இன்று அவையெல்லாம் பொய்யாகி விட்டன. இந்த உலகமும், சூரியனும், பிறவும் உருண்டை வடிவாகவே உள்ளன என்பதைக் கண்கூடாகக் காண முடிகின்றது. உலகைச் சுற்றி வருவது எளிதாகி விட்டது. இந்த உலகம் உருண்டையாயின், அந்தரத்தில் தொங்குவதெப்படி? அதைத்தான் ஒரு மேலைநாட்டு விஞ்ஞானி கண்டு பிடித்தான். வானவெளியில் வட்டமிடும் கோளங்கள் தம் பற்றுக்கோட்டின் சத்தி வழியே நெடுந்தொலைவில் இடம் விட்டுத் தாம் வாழினும், ஒன்றையொன்று பற்றிக்கொண்டே வாழ்கின்றன என்பதைக் கண்டுபிடித்தான். அதன் வழித் தொங்குவன எத்தனையோ உருண்டைகள்; கண்டன சில; காணாதன மிகப் பல.

இன்றைய உலகம் விஞ்ஞானத்தில் வேகமாக வளர்ந்து கொண்டே செல்கின்றது. ஆயினும், இவ்வளர்ச்சியால் அண்டகோளத்தை அளக்க முடியவில்லை. அளக்க முடியாது போலும்! இதைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நம் நாட்டில்

வாழ்ந்த பெரியவர்கள் விளக்கிச் சென்றுள்ளார்கள். இன்று உலகம் உருண்டையென்று மேனாட்டு விஞ்ஞானம் கண்ட உண்மையை அன்றே தமிழ் நாட்டவர் கண்டு கூறினர். விஞ்ஞானக் கண்ணுக்கு அப்பாற்பட்டு வரம்பற்ற உலகங்கள் உண்டு என்பதையும் அவர்கள் உணர்ந்து கூறினார்கள். அவ்வாறு கூறியவர்களுள் தலைசிறந்தவர் மாணிக்கவாசகர்.

தமிழ்நாட்டுக் கவிதை உலகில் நுழைந்து பார்ப்போமாயின், பல உண்மைகள் புலனாகும். இயற்கையைப் பாடினும், அன்றி இறைவனைப் பாடினும், அதிலெல்லாம் உலகம் பற்றியும் அதிலுள்ள உயிர்களின் வாழ்வுபற்றியும் பல குறிப்புக்கள் அமைந்துள்ளன என்பது கவிதை வழிச் செல்வார்க்குப் புலனாகும். ஆண்டவனைப் பாட வந்த அடிகள் மாணிக்கவாசகர்; 'திரு அண்டப் பகுதி' என்ற ஒன்றை அமைத்து, அதில் உலக அமைப்பு, வான முகட்டின் நிலை ஆகியவற்றை விளக்குகின்றார். 'அண்டப் பகுதி' என்பதன் பொருள், 'வான முகட்டை விளக்கும் பகுதி' என்பதே.

> 'அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
> அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
> ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின்
> நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
> இல்நுழை கதிரின் துன்அணுப் புரையச்
> சிறிய வாக'

அமைகின்றன என்று, அவர் இவ் வான முகட்டைப்பற்றிக் கூறும்போது வியவாதிருக்க முடியுங்கொல்! இன்றைய மேலைநாட்டு ஆய்வுக்களங்கள் அத்தனையும் ஆய்ந்து ஆய்ந்து கண்டும் காண முடியாது நிற்கின்ற இத்தன்மைகளையெல்லாம் அவர் இந்த அடிகளில் கூறுகின்றார். 'இவ்வுண்மைகளை அவர் எப்படி அறிந்தார்? எந்த ஆய்வுக்களம் அவருக்குத் துணையாயிற்று?' என்பனவெல்லாம் ஈண்டு நமக்குத் தேவையில்லை. மண்ணும் விண்ணும் கலந்த இந்த நிலையைப்பற்றி மேலைநாட்டு ஆய்வாளர்களெல்லாம் காண்பதன் முன்னமே

தமிழ்நாட்டில் அதுப்பற்றி அறிந்திருந்தார்கள் என்று கொள்ளு தல் சாலும். அவர் கூறுவது என்ன?

வானவெளியாகிய அந்த அடக்க முடியாத வெட்ட வெளியிலே உருண்டைகள் பலப்பலவாய் அமைந்துள்ளன. அவற்றின் தன்மை, தோற்றம், அமைப்பு முதலியவற்றை அளக்க முடியுமோ என்றால், அது இயலாத ஒன்றாகும். எனினும், அது ஆராய ஆராய வளர்ந்துகொண்டே செல்லும் ஒரு பெருங்காட்சியாகப் பெருகிக் கொண்டே இருக்கும். ஒன்றுடன் ஒன்றைச் சேர்த்தோ, ஒப்பு நோக்கியோ எண்ணி முடிவு காண முயலுவோமாயின், அதுவும் இயலாது. நூறு கோடிக்கும் மேற்பட்டுச் செல்லும் பேரெண்ணாலும் அவற்றின் எண்ணிக்கையையும் பிற தன்மைகளையும் அறுதியிட முடியாது என்கின்றார். அவற்றின் பெருக்கத்தையும் அண்ட முகட்டில் அவை பெற்ற இடத்தையும் அவர் கூறுவது—அதுவும் ஒரு சிறந்த உவமையால் விளக்கிக்காட்டுவது—ஒப்புயர்வற்ற ஒன்றாகும். 'இல் நுழை கதிரின் துன் அணுப் புரையச் சிறியவாக' ஒவ்வோர் உலகும் அண்டகோளத்தில் அமை கின்றது என்பது அவர் காட்டும் உவமை.

வீட்டில் வாழும் நமக்கு அவர் காட்டும் உவமை எளிமை யில் விளங்கக்கூடியதே. வானவெளியில் பல கோடிக் கற்களுக்கு அப்பாலிருந்து ஒளிக்கதிர்களை உலகுக்கு அனுப்பு கின்றான் சூரியன். அக்கதிர்கள் எப்பொருள் மேலும் படுகின்றன. வீட்டின் மேலும் அவை படுகின்றன. வீட்டில் எங்கேனும் ஒரு சிறு துவாரம் இருப்பின், அது வழியாக அக்கதிர் வீட்டினுள்ளும் புகுகின்றது. புகுந்து, அக் கதிர்ஒளி வீட்டில் செல்லுங்கால், அந்த ஒளியில் பலப்பல தூசுகள் பறப்பதைக் காண்கின்றோம். அவைகளை அணு என்று சொல்வார்கள். அந்த அணுவைத்தான் இந்த உலகுக்கு உவமையாகக் கொள்ளுகின்றார் மணிவாசகர். பரந்து விரிந்த எல்லையில்லாத இந்த அண்ட முகட்டில் உள்ள சூரியன் நான்கு பக்கங்களிலும் தன் ஒளியைப் பரப்புகின்றான். அவ்வொளிக் கதிர்கள் அந்நாற் புறங்களிலும் எத்தனையோ கோடி கோடிக்

கற்கள் ஓடிப் பரவி ஒளி வீசுகின்றன. அந்தப் பரந்துள்ள ஒளி அண்டத்தில் நம் உலகம் ஒரு சிறிய உருண்டை—மிகச்சிறிய உருண்டை. அவ்வுருண்டையில் நம் நாடு எங்கோ ஒரு மூலை. அந்த மூலையில் ஓர் ஒதுக்கிடம் நம் வீடு. அந்த வீட்டில் நுழையும் கதிர்கள் பல. அவற்றுள் ஒரு கதிரில் எத்தனையோ கோடிக்கணக்கான அணுக்கள் நமக்குப் புலனாகின்றன. சூரியன் ஒளி யின்றேல், அதுவும் புலனாவதில்லை. அந்தப் பல கோடி அணுக்களுள் ஓர் அணுவைப் பரந்த சூரிய மண்டலத்தோடு ஒப்பிடின், அதன் அமைப்பும் அளவும் எத்துணைச் சிறியனவாக அமையுமோ, அந்த அளவுதான் இந்த அண்ட முகட்டில் நம்உலகமும் மற்றைய எந்த உலகமும் பெறுகின்ற இடம் என்கின்றார் மாணிக்கவாசகர். இந்த உண்மையைத்தானே இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் எல்லாம் ஒரு முகமாகக் கூறுகின்றார்கள்? அவர்கள் கண்டன சில; காண வேண்டுவனவோ கணக்கில.

இத்துணை ஆராய்ச்சி இங்கு நமக்குத் தேவை இல்லை தான். எனினும், நம் வாழ்வைப்பற்றி அறிந்துகொள்ளு முன், இவ்வாழ்வின் தொடக்கத்தையும், வாழும் நிலத்தின் எல்லையையும், அதுபற்றிய பிறவற்றையும் ஓர் அளவு அறிந்து கொள்ளின், நம் வாழ்வின் நிலை ஒருவாறு புலனாகுமென்றே இத்துணைத்தூரம் சென்று வந்தோம். தூரத்தின் எல்லையைக் கண்ட அந்தக் கணக்கு வழியே காலத்தின் எல்லையையும் காண இயலும். அதன் எல்லையும் இவ்வாறே பல்கிப் பெருகிப் பல் கோடி கோடி ஆண்டுகளாகச் சென்றுகொண்டேயிருக்கும்.

இவ்வுலகம் சூரியனிலிருந்து பிரிந்து வந்து எத்தனையோ கோடி ஆண்டுகள் ஆயின என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். இவ்வுலகமும், இதுபோன்றே பிற உலகங்களும் தோன்றிய காலங்களைப் பலவாக வகுத்துக் கூறுகின்றார்கள். இவ்வுலகில் உயிர் தோன்றியே பல கோடி ஆண்டுகள் கழிந்துவிட்டனவாம். எல்லாவற்றிற்கும் இறுதியாக மனிதன் பிறந்தே பன்னெடுங் காலம் கடந்திருக்க வேண்டும் என்பது ஆய்வாளரின் அசைக்க

முடியாத நம்பிக்கை. இந்தச் சூரியனும், இதைச் சுற்றிய உலகங்களுமே தோன்றிப் பல கோடி ஆண்டுகள் ஆயின என்றால், இவற்றிற்கு முதற்காரணமாய் உள்ள இந்த அண்ட முகடு எப்போது தோன்றிற்று என்பது கூற முடியுமோ? இந்த நிலத்தில் இருக்கும் மண்ணையும் கல்லையும் தோண்டி, இந்த உலகத்தின் வயதை ஒருவாறு கணக்கிடுகின்றார்கள் நிலநூல் ஆராய்ச்சியாளர்கள். அதைப் போன்றே, இந்நிலத்து மண்ணுள் மறைந்து கிடக்கும் எலும்புகளையெல்லாம் எடுத்தெடுத்து ஆராய்ந்து. அவற்றின்மூலம் உயிர்த்தோற்றத்தையும் வளர்ச்சியையும் எண்ணிக் கணக்கிடுகின்றனர் உயிர்நூல் ஆராய்ச்சியாளர். இவை இரண்டையும் சேர்த்து உயிர்களும் உலகமும் என்றென்று தோன்றின என்பதை ஆராய்ந்து ஆராய்ந்து அவர்கள் அலுத்து விட்டார்கள் என்றே சொல்லலாம். என்றாலும், அவர்கள் கணக்கின் வழிப்படி இவையெல்லாம் தோன்றப் பலப்பல கோடி ஆண்டுகள் கழிந்திருக்க வேண்டும் என்றே முடிவு செய்துள்ளார்கள். ஒவ்வொரு துறையையும் ஒவ்வொருவகையில் மேலை நாட்டினர் பெருக்கி, அவற்றின் வழியே தாம் தாம் காணவிரும்பும் உண்மைகளைத் தம்மை மறந்து தேடிக்கொண்டே யிருக்கின்றனர். முடிவில் இதுவரை அவர்கள் காண்பதெல்லாம், தோற்ற நாளைக் காண முடியாது என்பதே. ஓரளவு கண்டார்கள் என்று கொள்ளினும், அவ்வாண்டின் எண்ணிக்கை நம் கணக்கின் எண்ணிக்கையில் அடங்கா வகையில் அப்பால் சென்று முடியும் ஒன்றாகவே உள்ளது. எனவே, நாம் வாழும் இவ்வுலகம் அண்டப் பரப்பில் ஓர் அணுவென்பது ஒருபக்கம் இருக்க, இந்த அண்ட கோளத்தின் ஆயுளில் நம் வாழ்நாள் ஒரு நொடி என்றே கொள்ளவேண்டும். இவ்வாறு இடத்தாலும் காலத்தாலும் மிகக் குறுகிய நிலையில் உள்ள நாம், இந்த உலகத்தில் நம் வாழ்க்கையை நடத்திக் கொண்டே செல்கின்றோம். இந்த உலகும் அண்டகோளமும் அமையுமுன் என்னென்ன மாற்றங்கள் எவ்வெவ்வாறான கால எல்லையில் அமைந்துள்ளன என்பதைக் கண்டு, பிறகு நம் உயிர்த்தோற்ற நாளுக்கு வருவோம்.

நாம் வாழும் மண்ணில் விண்ணைக் காண்கின்றோம். கடல் நீரும் பிறநீரும் நம்மைச் சூழ்ந்துள்ளன. காற்று வீசுகின்றது. நெருப்பும் சுற்றியுள்ளது. இப்படிப் பல பொருள்கள்—ஏன்—திட்டமாகவே ஐந்து பொருள்கள் நம்மிடையே காணப் படுவன. இவற்றுள் வானாகிய விண் தோற்றமற்றது. காற்று, தோற்றமற்ற ஒன்றாயினும், உற்றறியத் தகும் தன்மை யுடையது. உடல்மேல் படும் மென்மையும் இனிமையும் கொண்டு நாம் காற்றின் உண்மையை அறிகின்றோம். இனி நெருப்பையும், நீரையும், நிலத்தையும் நாம் கண்ணாலேயே காண்கின்றோம். இவ்வைந்தும் கலந்ததுதான் நம் வாழ்க்கை, நம் உடல்—நம் செல்வம்—நம் உலகம்—ஏன்—அண்டமுகடுங் கூட—இவ்வைந்தால் ஆக்கப்பட்டனவே!

'நிலம்நீர் தீவளி விசும்பொ டைந்தும்
கலந்த மயக்கம்இவ் வுலகம்.' (தொல், மரபு. 86)

என்ற தொல்காப்பியம் இவ்வுண்மையை நமக்கு உணர்த்து கின்றது. எனவே, இவ்வைந்துமே அனைத்துக்கும் அடிப்படை யாகின்றன. விண்ணிலிருந்து மண் வருகின்றது. அவற்றிற் கிடையில் மூன்று பிற பொருள்கள் வருகின்றன. இவ்வைந் தையும் வட நூலார் பஞ்ச பூதம் என்பர். உலகமே இவ் வைம்பூதச் சேர்க்கைதான்.

மேலை நாடுகளில் இதுபற்றிய ஆராய்ச்சியும் நடந்து கொண்டேதான் இருக்கின்றது. பெரும்பாலும் மிகு பழங்கால இலக்கியங்களை ஒட்டியேதான் அவர்தம் ஆராய்ச்சிகளும் தத்தம் முடிவைத் தருகின்றன. மேல் கண்டபடி ஆய்வுக் களங்கள் தம் ஆராய்ச்சியின் முடிவினை இன்னும் எட்டவில்லை. எட்டுமா என்பது திட்டமாகக் கூறவும் முடியாது. எப்படிக் காலமும் எல்லையும் அவர் கருத்தில் திட்டமாக வரையறுக்கப் படாது வளர்ந்து கொண்டே போகின்றனவோ, அப்படியே தோற்ற முறையும் சென்று கொண்டேதான் இருக்கின்றது. எனினும், ஓரளவில் அவர்கள் உண்மையையும் கண்டு உலகுக்கு உணர்த்திக் கொண்டேதான் இருக்கின்றார்கள். சாதாரண மான ஒன்றைக் காணலாம்.

நீரைப் பற்றிய ஆராய்ச்சி அனைவரும் அறிந்த ஒன்று; சாதாரண உயர் நிலைப்பள்ளி மாணவனுங்கூட அதன் உண்மையை அறிவான். ஒரு பாத்திரத்தில் உள்ள நீர் இருவேறு ஆவிகளாக—காற்றோடு கலந்தனவாக—பிரிக்கப் படும் ஒரு காட்சி பள்ளிக்கூட ஆய்வுக்களங்களின் அன்றாடக் காட்சியேயாகும். கண்ணுக்குப் புலனாகிப் பெருகி ஓடும் அந்த நீரைப் பிரித்துக் காற்றாக்கி அதன் தோற்றம் இல்லையாகச் செய்ய முடியும். பிராணவாயுவும் நீர் வாயுவும் கலந்த ஒன்றே நீர் என்பதை வெகு எளிதாக எல்லாரும் உணரும்படி செய்து விட்டார்கள் விஞ்ஞானிகள். எனவே, காற்றிலிருந்து நீர் பிறந்தது என்ற உண்மை புலனாகின்றது. காற்றில் விண்ணாகிய ஆகாயமும் கலந்துள்ளது. விண் என்பது ஒன்று மற்ற வெட்டவெளி என்பர். மேலை நாட்டு ஆய்வாளர், அவ்வெட்டவெளியாகிய விண்ணைச் சூனியம் ('Vacuum') என்பர். 'ஒன்றுமற்ற வெட்டவெளியால் பயன் உண்டோ?' என்று கேட்கலாம். ஆய்ந்து பார்ப்பின், அவ் வெட்ட வெளியிலேதான் எல்லாத் தோற்றங்களும் அடங்குகின்றன என்பது தேற்றம்.

ஏன்? அவ் வெட்டவெளியால் உண்டாகும் பயன்தான் அளவிடப்போமா! ஒன்றுமில்லாதது எவ்வெவ்வாறு உதவு கின்றது. உண்ணும் பானத்தைச் சூடாகவோ அன்றித் தண்மை யாகவோ வைத்திருக்கும் 'தெர்மாஸ் பிளாஸ்க்' இவ்வெட்ட வெளியின் ஆக்கந்தானே? அது மட்டுமோ! ஓடுகின்ற பெரும் புகை வண்டியையும் உடனடியாக நிறுத்துவது இந்த வெட்ட வெளியின் கூட்டுச் சேர்க்கைதானே? (Vacuum Brake). பாரமானியின் பாதரசத்துக்கு மேல் நின்று அதன் பணியைச் செய்ய உதவுவது அவ்வெட்ட வெளிதானே? இப்படி இன்னும் எத்தனையோ வகையில் அவ்வெட்டவெளி உதவுவதை அறியாதார் யார்!

இன்றைய விஞ்ஞானம் இன்னும் அந்த வெட்டவெளியின் செயல் அளவு முதலியவற்றைப் பற்றிய தன் ஆய்வைத்

1. Oxygen and Hydrogen

திறம்பட முடிக்கவில்லை யாயினும், அத்திசையை நோக்கித் தான் அது சென்று கொண்டிருக்கிறதென்பது மட்டும் புலனு கின்றது. வெட்ட வெளியாகிய விண் இல்லாத இடமேயில்லை. இதைச் சமயத் தலைவர்கள் வெட்ட வெளி, பாழிடம், கேவல நிலை என்றெல்லாம் அவரவர் நெறிக்கேற்பச் சொல்லுவார்கள். அவர்கள் கருத்தெல்லாம் முடிவில் உலகும், உயிரும், பிறவும் அவ்வெட்ட வெளியைச் சார வேண்டும் என்பதே. சமயக் கருத்து இங்கு நமக்கு வேண்டா. விஞ்ஞானத்தின் விளைவும் அக் கருத்தையேதான் பெரும்பாலும் சார்ந்து செல்கின்றது. மேலே நீர் காற்ருகப் பிரிக்கப்படுவதை கண்டோம். மற்ருென்று காண்போம்.

இவ்வுலக உருண்டை சூரியனிடமிருந்து சிதறிய ஒரு பொறி என்று விஞ்ஞானிகள் கூறியதை மேலே கண்டோம். அப்படியே நோக்கின், இவ்வுலகம் நெருப்பு உருண்டையாகத் தானே இருக்க வேண்டும்? ஆம்; இருக்கிறது. அந்த நெருப்பு இன்னும் அவிந்துவிடவில்லை. ஆழம் தோண்டத் தோண்ட, அது வாழ்வதைக் காண்கின்ருேம். ஆனல், அந்த நெருப் புருண்டையிலிருந்து பரந்த கடல் நீரும், விரிந்த நிலபரப்பும் எப்படி வந்தன? அதைத்தான் விஞ்ஞானிகள் ஆய்கின்ருர்கள்; ஓரளவு முடிவும் கண்டுள்ளார்கள். நம் நாட்டுக் கவிதை பாடிய புலவர்கள் ஆயிரமாயிரமாண்டுகளுக்கு முன்னமே கண்ட முடிவுதான் அது. அப்படி என்ன முடிவு கண்டு விட்டார்கள் அப் பழம்பெருங் கவிஞர்கள்?

முதலில் விண் எங்கும் பரந்திருந்தது. அதை ஒட்டி நெடுங்காலம் சென்று அதனுள்ளிருந்து. காற்றுத் தோன்றிற்று —பிறகு நெருப்பு; பிறகு நீர்; இறுதியில் நிலம். இந்த ஐம்பூதங் களும் இவ்வாறு பிறந்தன என்பர். எனவே விண்ணில் அவ் விண்ணுகிய பொருள் மட்டும் இருந்தது. அதனுள் பிறந்த காற்றிலே விண், காற்று என்ற இரு பொருள்களும் அடங்கி யிருக்கின்றன; நெருப்பில் விண்ணும், காற்றும் நெருப்பும் அடங்கும். நீரில் அப்படியே நான்கு பொருள்களும், நிலத்தில் ஐந்து பொருள்களும் அடங்குகின்றன. இதை இன்றைய

விஞ்ஞானிகள் ஆராய்ந்து கண்டு ஓரளவு ஒத்துக் கொள்ளுகின்றார்கள். விண் ஒன்றினைத் தவிர்த்து. மற்றவற்றின் நிலையை அவர்கள் இவ்வாறு அறுதியிடுகிறார்கள் எனலாம். அவர்தம் ஆய்வு மேலும் செல்லின், இம்முடிவுக்குத்தான் வர வேண்டியிருக்கும். இந்தப் பேருண்மையைத்தான் மாணிக்கவாசகர்,

"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி!
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி!
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி!
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி!
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி!"

என்று இறைவன்மேல் ஏற்றிக் கூறுகின்றார். கடவுள் தன்மை பற்றி அவர் காட்டுவதாயினும், அதில் எத்துணை விஞ்ஞானக் கருத்துக்கள் அமைந்துள்ளன என்பதையே நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

இவ் வைந்தின் தொடர்பும் தோற்றமும் விஞ்ஞானிகளது முடிவில் இன்னும் திட்டமாக வரையறுக்கப்படா விடினும், அவர் கண்ட ஒரு சில முடிவுகள் வழியே மற்றவையும் சரியெனக் கொண்டு மேலே செல்லலாம். 'ஐம்பூதச் சேர்க்கையே உலகம் என்றால் அவை என்று சேர்ந்தன? ஏன் சேர்ந்தன?' இவற்றிற்கெல்லாம் நம்மால் பதில் கூற முடியாது. விஞ்ஞானிகளின் ஆய்வுக்களங்கள் ஓரளவு பதில் கூறும் என்பது உண்மை. அவை பற்றி நாம் இங்கே பதில்களைத் தேடிக் கொண்டிருக்கத் தேவை இல்லை. நம் வாழ்வுக்கமைந்த இவ்வுலகத் தோற்றத்தை ஒருவாறு அறிந்து கொள்வதே நம் நோக்கமாகும்.

இவ்வுலகத் தோற்றத்துக்கும் முதல் ஊழியாகிய விண்ணின் தோற்றத்துக்கும் இடையே எத்தனை எத்தனை கோடி ஆண்டுகளோ கழிந்திருக்க வேண்டும்; எத்தனை எத்தனை ஊழிகளோ நடைபெற்றிருக்கும். அவற்றின் தொலை ஆண்டுகளையும் விஞ்ஞானிகள் ஆராய இருக்கின்றார்கள். நம் நாட்டில் பழங்காலத்து வாழ்ந்த புலவர் ஒருவர், இக்காலத்தின் இடைப்பட்ட எல்லையை ஆராய முற்பட்டிருக்கிறார். என்றாலும்,

அவரால் முடியாது, ஏதோ ஒரு வரம்பு கட்டியதோடு நின்றிருக்கின்றார். ஆனால், அவர் ஆய்வும் கடவுளைப்பற்றியே செல்கின்றது. நாட்டில் பலர் கடவுள் வழியே தம் கவிதைகளை ஆக்க முன்னின்றதால், அனைத்தையும் அக் கடவுளைப்பற்றியன வாகவே பாராட்டியுள்ளனர். இவ்வுண்மை மேலே கண்ட தொல்காப்பியத்தும் கூறப்பட்டுள்ளது. இவர் மண்ணில் 'நிலம் நீர் தீ வளி விசும்பு' ஐந்தும் கலந்துள்ளதென்கின்றார். ஆனால், அவை கலந்த நாளை அறுதியிட முடியவில்லை. இன்றைய ஆய்வாளர் நிலையும் அதுவே. ஆயினும், சங்க காலத்தை ஒட்டி வாழ்ந்த கீரந்தையார் என்னும் புலவர், ஒருவாறு விண்ணி லிருந்து இம்மண் வந்த வரலாற்றைத் தொகுத்துக் கூறுகின்றார். அவர் கூற்றே பரிபாடலில் இரண்டாம் பாடலாய் அமைந் துள்ளது. அதில் அவர் பேசும் கருத்தை முன்னே காண்போம்.

பழமையான இயற்கை நியதியின் கட்டளைக்கு உட்பட்டு நம் கண்முன் காட்சியளிக்கும் தோற்றங்கள் மாறி மாறி வருவன. எத்தனையோ உலகங்கள்—எத்தனையோ சூரியர்கள்—எத்தனையோ சந்திரர்கள்—மாறி மாறித் தோன்றியும் பிறழ்ந்தும் மறைந்து கொண்டேயிருக்கின்றனர். இயற்கை ஒரே நிலையில் அமைதியாய் இருப்பதில்லை. தோற்றமும் மாற்றமும் மறைவும் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. ஆனால், மறைவு என்பது அழிதலாகாது. ஒன்று மற்றொன்றாக மாறுவதே அது. விசும்பில் விளைந்த மண்ணும் மதியும் ஞாயிறும் பிறவும் மறுபடியும் விசும்பாவதுதான் மறைவென்னும் மாற்றம். இப்படிப்பட்ட மாற்றங்கள் எத்தனையோ முறை எத்தனையோ வகையில் நடந்துகொண்டே யிருக்கின்றன. அப்படி நிலை கெட்டபின் முதலாவதாக அமைவது விசும்பு என்னும் விண்ணாகிய வெட்டவெளியின் நிலையே. இந்த விசும்பு நிலை எத்தனையோ கோடி யாண்டுகள் அப்படியே கிடக்கும். பிறகு இந்த விசும்பு, முறையே காற்று முதலிய பூதங்கள் தோற்றுவதற்காக வானமென்று நம் கட்புலனாகியும் காணாத ஒன்றான ஓர் ஊழியை உண்டாக்குகின்றது. பின்பு அந்த வான ஊழி கழிந்த நெடுநாளுக்குப் பிறகு அவ்வானிலிருந்து வளி

என்னும் காற்றின் ஊழி பிறக்கிறது. ஊழி என்பது எல்லை அறுக்கப்படாத ஒரு நெடுங்காலத்தைக் குறிக்கும் ஒரு சொல். பின்பு அக் காற்று ஊழியிலிருந்து கனல் பிறக்கின்றது. அவ்வூழியில் நெடுங்காலம் கழிந்தபின் பனியும் மழையும் வெள்ளமும் கலந்து நின்ற நீர் ஊழி பிறக்கின்றது. எல்லாவற்றிற்கும் இறுதியிலே—நெடுங்காலம் கடந்தபின்—முன் கூறிய எல்லாவற்றையும் தன் உள்ளேயே அடக்குகின்ற—விண்; காற்று, தீ, நீர் அனைத்தையும் உட்கொண்ட—இந்நிலமாகிய ஒரு பேரூழி பிறக்கின்றது. இப்பிறந்த நில ஊழிக் காலத்து நெடுவாழ் நாளில் நம் நாள் ஒரு நொடி. இவ்வாறு ஊழி தோறூழி கழிய உண்டான காலமோ, இன்ன அளவிற்று என்று கணக்கிட்டு வரையறுக்க முடியாதது! ஆம்! குவளை, சங்கம், கமலம் போன்று சிந்தையால் கணிக்கமுடியாத பல பேரெண் கூட்டங்களின் எண்ணிக்கையைக் கடந்து நிற்பதாகும். 'இதுவே உலகம் தோன்றிய வழிமுறை,' என்பது அக் கீரந்தையார் கருத்து. இனி இதனை அவர் வாக்கிலேயே காண்போம்.

"தொன்முறை இயற்கையின் மதியொ.....
......................................மரபிற்றாக
பசும்பொன் உலகமும் மண்ணும் பாழ்பட
விசும்பில் ஊழி ஊழ்ஊழ் செல்லக்
கருவளர் வானத் திசையில் தோன்றி
உருவறி வாரா ஒன்றன் ஊழியும்;
முந்துவளி கிளர்ந்த ஊழுழ் ஊழியும்;
செந்தீச் சுடரிய ஊழியும்; பனியொடு
தண்பெயல் தலைஇய ஊழியும்; அவையிற்று
உள்முறை வெள்ள மூழ்கி ஆர்தருபு
மீண்டும் பீடுஉயர்பு ஈண்டி அவற்றிற்கும்
உள்ளீ டாகிய இருநிலத் தூழியும்;
நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்
மையில் கமலமும் வெள்ளமும் நுதலிய
செய்குறி மீட்டம் கழிப்பிய வழிமுறை"

(2-ஆம் பாட்டு, அடி, 1—15)

என்று கீர்ந்தையார் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இவ்வுலகத் தோற்றத்தைப் பற்றி இவ்வாறு பாடியிருப்பாராயின், இதைப் பாராட்டாதிருக்க முடியுங்கொல்! இவ்வாறு நாம் நமது வாழ்க்கையைப்பற்றி ஆராய்வதன்முன் நாம் வாழும் உலகத்தைப் பற்றியும், இவ்வுலகம் தோன்றிய வரலாற்றைப் பற்றியும், ஓரளவு அறிந்துகொள்ளுதல் இயல்புடைத்தே என, இவ்வளவையும் காட்ட விரும்பினேன். இவற்றுள் பல இன்றைய விஞ்ஞானிகளால் ஏற்றுக்கொள்ளப் படுவதையும் கண்டோம். காணாது குறைபட நிற்பனவும், இறுதியில் நிறைவுற்று இத்தகைய முடிவுக்குத்தான் வந்தாக வேண்டும்.

எவ்வாறாயினும், நாம் வாழும் உலகம் பரந்த அண்டகோளத்தில் மிகமிகச் சிறியதாயிருக்கும் ஒரு சிறு திவலையென்ற உண்மையும், அந்த உலகில் நாம் வாழும் வாணாள், அண்டகோள ஆயுட்காலத்தில் மிகமிகக் குறுகிய எல்லையாகிய ஒரு சிறு நொடியென்பதும் மறுக்கமுடியாத உண்மைகளேயாகும். இவ்வுண்மைகளையெல்லாம் உய்த்து உணர்தல் அவ்வளவு எளிதன்று. விஞ்ஞானத்தின் வழியே கண்டாலல்லது இவற்றை இன்றைய உலகத்தார் உண்மையெனக் கொள்ள மாட்டார். அறிஞர்களும் இவற்றுள் பலவற்றை ஆராய்ந்து கொண்டே வருகிறார்கள். நாம், இனி அவர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு, நம் உலகத்துக்கு வருவோம்.

வாழ்க்கைக்கு இருப்பிடமாகிய உலகைக் காண அவ்வளவு நெடுந்தூரம் முன்னே செல்ல வேண்டியிருந்தது. இவ்வுலகம் இப்படி எங்கிருந்தோ தோன்றிய ஒன்று என்றாலும், இதில் இன்றைக்கு இருநூறு கோடி மக்களுக்குமேல் வாழ்கின்றார்கள்; பல கோடி உயிர்கள் வாழ்கின்றன. இனி, அவற்றின் தோற்ற வளர்ச்சிகளையும், அவை வாழும் முறை வழிகளையும் தொடர்ந்து காணின், வாழ்க்கையைப் பற்றி ஒருவாறு உணர்ந்தவராவோம். தொடர்ந்து இந் நில உலகத்தில் உயிர் தோன்றி வளர்ந்த வரலாற்றைக் காண்போம்:

இதுவரை கூறியவற்றால், உலகில் பிறந்த அனைத்தும் வாழ நினைக்கின்றன என்பதும், மனிதன் அறிவறிந்து தன் ஆராய்ச்சியின்மூலம் தன் வாழ்வின் மூலத்தையும் அதன்வழி உலகத் தோற்றத்தையும் காண விழைகின்றான் என்பதும், அவற்றைக் காட்டும் முறையில் வரலாற்று ஆசிரியர்கள் சிறிது வழுக்கிவிட்டார்கள் என்பதும், இன்றைய உலகம் எவ்வாறு உண்டாயிற்று என்பதும், இவ்வுலகம் எதனால் ஆக்கப்பட்ட தென்பதும், அவ்வாறு ஆக்க உதவிய பஞ்சபூதங்கள் எவை எவை என்பதும், அவையெல்லாம் அண்ட கோளமாகிய பெரும் பரப்பில் எவ்வெவ்வாறு அமைந்துள்ளன என்பதும், அவை ஒன்றை ஒன்று எவ்வெவ்வாறு பற்றிச் செல்கின்றன என்பதும், உருண்டை வடிவான உலகங்கள் வானவெளியில் எவ்வாறு ஒன்றை ஒன்று பற்றி வட்டமிடுகின்றன என்பதும், பஞ்ச பூதங்கள் பண்டுதொட்டு இன்றுவரை எவ்வெவ்வாறு பற்றி வருகின்றன என்பதும், இவற்றையெல்லாம் இன்றைய விஞ்ஞானமும், பழங்காலத் தமிழ்க் கவிதைகளும் எவ்வெவ் வாறு பொருந்தும் முறையில் காட்டுகின்றன என்பதும் நன்கு விளங்குகின்றன. மேலே, இவ்வுலகில் உயிர்கள் எவ்வெவ்வாறு தோன்றி வளர்ந்து, இன்றைய நிலையை எய்தின என்பதைக் காண்போம்.

2. உயிர்த்தோற்ற வளர்ச்சி

அணுவைப் பிரிக்க முடியாது என்று எண்ணியிருந்த அந்தக் காலத்திலும், அணுவைப் பிளந்து அதனால் அனைத்தையும் அழிக்க முடியும் என்றுகண்ட இந்தக் காலத்திலும், மேலைநாட்டு அறிஞர்கள் இவ்வுலகில் உயிர் உண்டான நாளையும், அவை ஒன்றை ஒன்று பற்றி நின்று வளர்ந்த வகையையும் ஆய்ந்துகொண்டே யிருக்கின்றார்கள். விஞ்ஞானம் வளர்ச்சி அடையாத சில நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்து இன்றுவரை ஆராய்ச்சி சென்றுகொண்டே யிருக்கிறது. உயிர்களின் தோற்ற வளர்ச்சியைப் பற்றிப் பலப்பல நூல்கள் வளர்ந்துகொண்டே செல்கின்றன. இவ்வுலகில் உயிர்கள் எவ்வாறு தோன்றின? எப்படி வளர்ச்சியுற்றன? என்பனவற்றையெல்லாம் அவை ஓரளவு வரையறை செய்து காட்டியிருக்கின்றன. உலகத் தோற்றத்தின் அளவும் அமைப்பும் போன்றே, உயிர்த் தோற்றத்தின் அமைப்பும் வளர்ச்சியும் அமைகின்றன என்று சொல்லலாம்.

நிலம் தோன்றி, மண் திண்ணிதான காலத்து உயிர்த் தோற்றம் உண்டாகியிருக்கலாம் என்பர் ஆராய்ச்சியாளர். உயிர்த்தோற்ற வளர்ச்சியின் இன்றைய இறுதிப் படியே மனிதன். ஆனால், இதுதான் முடிந்த முடிபு என்று கொள்ள

முடியாது. எத்தனையோ கோடி ஆண்டுகளாக, அமைதியாக, ஆனால் புரட்சிகரமாக வளர்ச்சியடைந்து வந்துகொண்டிருக்கும் இவ்வுயிரின் வளர்ச்சி, இந்த மனிதநிலையில் அமைந்து முடிவு பெற்றுவிடும் என்று யாரும் சொல்ல முடியாது. உலக அரங்கில் நடைபெறும் பல்வேறு மாறுதல்களும், இந்த விதிக்கு உட்பட்டனவே. அரசியலாயினும், பொருளியலாயினும், பிற எந்த வகையாயினும், வளர்ச்சி இருந்துகொண்டே யிருக்குமே யன்றி 'இதுதான் முடிந்த முடிவு' என்று திட்டமாக முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் எதுவும் நிற்பதில்லை. உயிர் வளர்ச்சியும் இத்தகையதே. தோன்றிப் பலகோடி ஆண்டு களாக, அது சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்துகொண்டே தான் வந்திருக்கின்றது. அதன் இன்றைய தோற்றம் மனிதன். இங்கேயே அது நிலைத்து நின்றுவிடும் என்று யாரால் அறுதியிட முடியும்? அதன் மாற்றம் வேகமாக நடைபெறவில்லையாதலால், அப்படியே நிற்பதுபோன்று நம் கண்ணுக்குத் தெரிகிறது. எனினும், நிமிடத்துக்கு நிமிடம் மாற்றம் நிகழ்ந்து கொண்டே தான் இருக்கும். நம் தோட்டத்திலுள்ள வாழையின் வளர்ச்சி ஒரு நாளில் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆனால், ஓர் ஆண்டில் அது குலை ஈன்று சாயத் தயாராக நிற்பதைக் காண் கின்றோம். மனித வாழ்நாள்கள் ஒரு நொடி போன்ற இந்த அகண்ட முகட்டுக்கும் உயிர் வளர்ச்சிக்கும் இடையில் கோடி கோடி ஆண்டுகள் கழிந்துவிட்டன. ஆகவே, மாற்றம் அத் துணை எளிமையாக நம் கண்முன் தெரிவதில்லை. எனினும் மாற்றம் நடந்து கொண்டேதான் இருக்கிறது.

உயிர் நூல் ஆராய்ச்சியாளர்கள் இவ்வுயிரையும் உடலையும் பற்றி முதலில் தவறான கருத்தினைக் கொண்டிருந்தார்கள் என்பதை ஹால்டேன்[1] என்னும் ஆய்வாளர் கூறியுள்ளார். உடலில் உயிர் தங்குவது இயற்கையே. ஆனால், ஓர் உயிர் இருந்து மறைந்தபின், வீழ்ந்த அவ்வுடலில் மற்றோர் உயிர் சென்று

1. Man and Nature—The origin of life, by J. B. S. HALDANE.

தங்கலாம் என முதலில் ஆய்ந்த சில ஆராய்ச்சியாளர்கள் எண்ணிக் கொண்டிருந்தனர் போலும்! நம் நாட்டிலுங்கூட அந்த அடிப்படையிலேதான் கூடுவிட்டுக் கூடுபாயும் கதைகளும் பிறவும் வழக்கத்தில் இருந்தன. இறந்த ஓர் உடலில், மற்றோர் உடலில் உள்ள உயிர் புகுந்துகொள்ளும் வழக்கத்தைக் கதைகளில் படிக்கின்றோம். அவ்வாறு இறந்த ஓர் உடலில் உயிர் புகுவதே உயிர்த்தோற்றம் என்று முதல் முதல் இத்துறையில் ஆராய்ச்சி செய்த உயிர்நூற் புலவர்கள் கருதியிருந்திருப்பார்கள். ஆயினும், அது தவறு என்பது பின்னர் விளக்கப்பட்டது. உயிர் ஒரு புத்துடலில் சேர்ந்தே வளர்ச்சி பெறுகின்றது என்பதே ஆய்ந்து முடிவு செய்யப் பட்டது. ஆனால் அந்த உயிர்த்தோற்றம் எவ்வாறு அமைந்தது?

தமிழ்நாட்டில் இவ்வுயிர்த்தோற்ற வளர்ச்சியை நன்கு அறிந்துள்ளார்கள் அறிஞர்கள். நிலத்தோற்றத்தையும் அமைப்பையும் மேல்நாட்டு மக்களெல்லாம் ஆராயத் தொடங்கப் பல நூற்றாண்டுகட்கு முன்பே, இங்குள்ள இலக்கியங்கள் எடுத்துக்காட்டுவது போன்று, உயிரின் தோற்ற வளர்ச்சியையும் ஒருவாறு அவை காட்டத் தவறவில்லை. மாணிக்கவாசகர் திருவாசகத்தில் தம் உயிர்மேல் சார்த்திக் கூறும் அவ்வுயிர்த் தன்மையைப் பொதுவான உயிர் வளர்ச்சியைக் காட்டுவதாகக் கொள்வர் அறிஞர். உயிர் எப்படி வளர்ந்தது என்பதை,

> 'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
> பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
> கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
> வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
> செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
> எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்.'

என்று அவர் சொல்லும்போது, உயிர், இத்துணைப் பிறவி களிலும் புகுந்து புகுந்து வளர்ந்தது என்று எண்ணுதல் இயற்கை. மாணிக்கவாசகர் தம் ஒரே உயிர் இத்துணை மாற்றங் கள் பெற்று வந்ததைக் கூறுகிறார் என்பர் சிலர், எனினும்,

ஆழ்ந்து நோக்குவார்க்கு, அவர் உயிரின் தோற்ற வளர்ச்சியைத் தான் தம் உயிர்மேல் சார்த்திக் கூறினரேயன்றி, தனிப்பட்டதும் உயிரை மட்டும் கூறினர் அல்லர் என்பது புலனாகும். அருள் உணர்வு பெற்ற நல்லவர்கள் உலகத்தையே தம்முடன் அழைத்துச் செல்லும் நல்ல பண்பாளர்கள் என்பதை உலகம் நன்கு அறியுமே!

இந்தத் தோற்ற வளர்ச்சி அமைப்பில் மணிமொழியார் வளர்ச்சியை வகைப்படுத்திக் கூறினர்; அறிந்தபடியே, ஒருவாறு உயிர் வளர்ச்சியைப்பற்றித் தொகுத்துக் கூறினர் என்று கொள்ளுவதுதான் பொருத்தமானதாகும். எனினும் அதுவும் இன்றைய ஆய்வுக்குப் பொருந்துகின்றது. தமிழ் மக்கள் நெடுங்காலத்துக்கு முன்பே உயிர் அனைத்தும் ஒரு தன்மையன எனக் கண்டார்கள். எவ்வுயிராயினும் ஒன்றே என்பதுதான் அவர்தம் கொள்கை. இந்த உண்மையைத் திருவள்ளுவனர்,

> 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்.'

என்ற குறள்வழி விளக்கிச் சென்றார். மக்கட் பிறவியிலேயே பல்வேறு வேறுபாடுகளைக் கற்பித்துக்கொண்டு, 'நான் உயர்ந்தவன்; அவன் தாழ்ந்தவன்.' என்ற மனப் பான்மையிலேயே வாழும் மக்களுக்கு, வள்ளுவர் அறிவுறுத்திய ஓர் உண்மை இது என்று கூறுவார்கள் சீர்திருத்த வாதிகள். அது ஓரளவு உண்மைதான் என்றாலும், அதற்கு மேலாக வள்ளுவர் உயிர்களின் ஏற்றத்தாழ்வற்ற உண்மையை இதில் கூறுகின்றார் என்பது பொருத்தமாகும். இன்றைய மேலைநாட்டு அறிஞர்கள், உயிர் அமைப்பைப் பல கோணங்களில் ஆராய்கின்றார்கள். எனினும், மரத்துக்கும் உயிர் உண்டு என்பதை நம் இந்திய நாட்டு விஞ்ஞானியாரே விளக்கிக் காட்டினர். இந்த உண்மையை எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழ்மக்கள் நன்கு அறிந்திருந்தார்கள். அறிந்திருந்ததோடு மட்டுமன்றி, உயிர் அமைப்பில் அவற்றுள் வேறுபாடு இல்லை என்றும், அவை சேரும் உடலை ஒட்டியே அவற்றின் தன்மைகள் மாறுபடுகின்றன என்றும், அவர்கள் அறிந்து எழுதிவைத்தார்

கள். திருவள்ளுவர் இதைத்தான் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்றார். 'எல்லா மனிதருக்கும்' என்றோ வேறு வகையாகவோ கூறியிருந்தால், அதில் நாம் வியத்தற்கு ஒன்றுமே இராது. உயிர்த் தத்துவத்தை அவர் கூறியுள்ள ஒன்றே நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. இதைப்போன்றே மணிவாசகனார் தம் உயிர்மேல் வைத்து உயிர்த்தோற்ற வளர்ச்சியின் தத்துவத்தைக் கூறியிருப்பதும் வியத்தற்குரிய தாகும். இக் கருத்தைத்தான் ஆசிரியர் தொல்காப்பியனாரும் பொருளியலில் குறிக்கின்றார்.

'எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வருஉம் மேவற் றாகும்.' (28)

என்பது தொல்காப்பியம், அச்சூத்திரத்திற்கு உரை கூறவந்த ஆசிரியர் நச்சினார்க்கினியர், 'அறமும் பொருளும் ஒழிய இன்ப மென்று கூறப்படுவதுதான், மக்களும் தேவரும் நரகரும் மாவும் புள்ளும் முதலிய எல்லா உயிர்களுக்கும் மனத்தின்கண்ணே பொருந்தித் தொழிற்பட வருமாயினும், ஆணும் பெண்ணும் என அடுக்கிக் கூறலுடைத்தாய் நுகர்ச்சி நிகழும்' என்றும், " 'மேவற்றாகும்' என்றார், என்பது ஆணும் பெண்ணுமாய்ப் போக நுகர்ந்து வருதலின், ஒருவனும் ஒருத்தியுமே இன்ப நுகர்ந்தா ரெனப்படாது. அவ்வின்பம் எல்லா வுயிர்க்கும் பொது என்பதூஉம், அவை இருபாலாய்ப் புணர்ச்சி நிகழ்த்து மென்பதூஉம் கூறியவாறாயிற்று," என்றும் எழுதி வைத்துள்ளார். இச் சூத்திரத்தாலும் இதன் உரையாலும் பல உண்மைகள் வெளிப்படுகின்றன. மாவும் புள்ளும் முதலிய எல்லா உயிர்களும் என்றமையான், மரம் முதலியனவும் அடங்கு கின்றன. 'ஆகிய' என்று வரையறுக்காது, 'முதலிய' என்று கூறிய மாத்திரையானே, எல்லா உயிர்களும் அடங்காவோ. எனவே, புல் முதல் மனிதன் வரையில், வாழும் அத்தனையும் உயிர் பெற்றவை என்பதும், அவற்றுக்கும் இன்பத்தைத் துய்த்து அறியும் ஆற்றலும் தன்மையும் உண்டு என்பதும், அவற்றுள் ஆண் பெண் என்ற வேறுபாடுகளும் உண்டு என்பதும் நன்கு விளங்குகின்றன. புல்லிலும் மரத்திலுங்கூட

ஆண் பெண் வேறுபாடுகளைக் கண்டவர்கள் தமிழர்கள். இவ்வுயிர்களின் அமைப்பைப் பற்றித் தொல்காப்பியனார் மற்றோரிடத்தில் விளக்கமாகக் கூறுவது நோக்கத் தக்கதாகும்.

உயிர் வளர்ச்சி அடைய அடைய, அதன் அறிவும் வளர்ச்சி அடைகின்றதென்பது அறிவுடையோர் கொள்கை. உயிர் நிலத்தில் தோன்றுமுன் நீரில் தோன்றியிருக்க வேண்டு மென்பதும் அவர் துணிபு. நிலம், நீர் தோன்றி நெடுங்காலத் துக்குப் பிறகே ஆனமையின், அவர் கூற்றும் பொருந்துவதாகும். உயிர் அணுக்கள் எப்போது தோன்றின என்பதைத் திட்டமாக வரையறுத்துக் காட்ட இயலாவிட்டாலும், திண்ணிய உட்லோடு உயிர் இயையும் முன்னமே உயிர் அணுக்கள் உலகெங்கணும் நிறைந்து நின்றிருக்கவேண்டும் என்பர் ஆராய்ச்சியாளர். இந்த உண்மையைச் சமய நூலும் ஓரளவு ஒத்துக்கொள்ளுகிறது. அனைத்தையும் உண்டாக்கிக் காக்கும் ஆண்டவனாக ஒருவனை நிறுத்தி, அவன் முதலும் ஈறும் அற்றவன் என்று கூறும் சமயங்கள், அச் சமயத்துறையிலே இறைவன் என்று உள்ளானோ அன்றே அடிமையாகிய உயிரும் உண்டு என்று கூறும். 'என்று நீ அன்று நான்' எனத் தாயுமானவர் இறைவனிடம் பேசியதாக வரும் அடி, இதுபற்றி எழுந்த ஒன்றேயாகும். தமிழ் நாட்டில். வாழும் சைவ சித்தாந்தக் கொள்கையும் இவ்வுண்மையையே வலியுறுத்து கின்றது. உலகம், உயிர், கடவுள் என்ற மூன்றும் அழியா நிலையினவே என்பது முப்பொருள் உண்மை என்பதாகிய அச் சித்தாந்தம். அழிவில்லை என்றால், மாற்றமில்லை என்பது பொருளன்று. பொருள் மாறும்; ஒன்று மற்றொன்றாகும்; ஆனால், அது அழிவதில்லை. இரசாயன சாத்திரத்தில் இந்த உண்மையை ஆய்வுக்களத்தின்மூலம் நன்கு விளக்குகின்றார்கள் இன்றைய விஞ்ஞானிகள். விலை கொடுத்து வாங்கி வந்து வைத்த ஒரு மெழுகுவர்த்தி பற்றி எரிகின்றது. அனைத்தும் தீர்ந்துவிடுகின்றது. பணம் கொடுத்து வாங்கிய பாமரன் அதன் விலையாகிய இரண்டணாவோ ஓர் அணாவோ கெட்டு விட்டது என்று கூறுவான். ஆனால், இரசாயன ஆராய்ச்சி

யாளனோ, 'அதனால் ஒன்றும் நஷ்டம் இல்லை.' என்பான் இரண்டில் எது சரி? 'மெழுகுவர்த்தி கண்ணுக்குப் புலனாக வில்லை; ஆகவே, அது நஷ்டம்,' என்கிறான் வாங்கினவன். உண்மையில், அதன் விலை அவனுக்கு நஷ்டந்தான். ஆனால், அந்த மெழுகுவர்த்தி எவற்றால் ஆக்கப்பட்டதோ, அப் பொருள்கள் கெடுவதில்லையே! அவை அந்த வர்த்தியாய் இல்லை; வேறுவகையில் மாறி உள்ளன. அவை அழியவில்லை. ஆனால், சாதாரணக் கண்களுக்குப் புலனாகாது, காற்று வகைகளாய்ப் பிரிந்து விட்டன. எனவே, அந்த மெழுகு வர்த்தியின் மூலப்பொருள்கள் அழிவற்றவைதாமே? இது ஆய்வாளன் முடிவு; உண்மையும் இதுவே.

தண்ணீரைப் பற்றிய உண்மை இதை நன்கு வெளியாக்கும். சூட்டின் ஓர் அளவிலே ஓடும் தண்ணீரைப் பார்க்கின்றோம். ஆனால், அதை நிறுத்த முடிவதில்லை. ஆனால், சூட்டின் அளவு குறைந்து அத் தண்ணீரே உறைந்து பனிக்கட்டியாகி விடுமானால், அது கடினப் பொருளாகி, போட்ட இடத்தில் அப்படியே கிடக்கின்றது. சூடு இன்னும் அதிகமானால், ஓடும் நீரே தன் நிலை கெட்டு ஆவியாக மாறிவிடுகின்றது. தண்ணீர் ஆவியாக மாறி மறைந்துவிட்டதாலேயே அது அழிந்துவிட்ட ஒன்று என்று சொல்லிவிட முடியுமா? முடியாதே. பனிக்கட்டி யானதாலே தண்ணீர் செத்தது எனக் கூற முடியுமா? முடியாதே. எனவேதான், உலகத்துள்ள இயற்கைப் பொருள் களும், உயிரும், கடவுளை ஒத்து, என்றும் அழியாத நிலையில் வாழ்கின்றன என்கின்றனர் சைவ சித்தாந்திகள். மெழுகு வர்த்தியும் தண்ணீரும் மாறுபட்ட வகைதான் உயிருக்கும் உலகுக்கும். சமய வாதிகள், கடவுளையும் மற்ற இரு பொருள்களையும் பிரித்துக் காட்டுவார்கள். மூன்றும் அழிவற்றன, எனினும், கடவுள் நிலை கெடாது, தன்மை மாறாது எக்காலத்தும் ஒரே வகையில் இருப்பவர். ஆனால், உயிரும் உலகமும் என்றும் அழியாதவையானாலும், தம் நிலையும் தன்மையும் கெட்டும், மாறியும் உறழ்ந்தும் பிறழ்ந்தும் வேறு பலவகையாகவும் நிலவுகின்றன என்பர்.

சமய நெறியில் கண்ட இந்த உண்மை, விஞ்ஞான வழியில் இன்று மெய்ப்பிக்கப் படுகின்றது. உலகமும் உயிரும் நிலை கெடுவன், என்று தோன்றின என அறிய முடியாதன. "இந்த உலகம் அழியினும் ஐம்பூதப் பொருள்களாக வேறு வழியில் மாறிவிடும்,' 'என்பது உண்மை. அதைப்போன்றே உயிரும் அழிவற்றது. அது புல்லாயினும், விலங்காயினும், வேறு எதுவாயினும், அன்றி மனிதனே யாயினும், அவ்வுயிர் உடம்பை விட்டு நீங்கின் அழிந்ததாக வைக்காது, நிலை மாறிற்று என்றே கொள்ளல் வேண்டும். அதனாலேதான் உயிர் வளர்ச்சி எக்காலத்தும் தங்குதடையின்றி வளர்ந்து கொண்டே செல்கிறது என்ற முடிவுக்கு ஆய்வாளர் வருகின்றனர்.

தோன்றிய நாள் இன்னதெனத் திட்டமாக அறிய முடியா விடினும், அந்தத் தோன்றிய நாள் தொட்டே வளர்ந்து வரும் உயிரினத்துக்கு அறிவு உண்டா என்று கேட்கத் தோன்றும், அறிவென்பது மனிதனுக்கு மட்டும் அமைந்த ஒன்றென்றும், மற்றவை எல்லாம் அறிவற்றவை என்றும் கூறுவர். ஆனால், தொல்காப்பியர் ஒவ்வோர் உயிரும் அறிவு பெற்றதே என்றும், அவ்வறிவு மனிதனிடம் ஆறாகவும், சிலவற்றிடம் ஐந்தாகவும், இன்னும் சிலவற்றிடம் நான்கு, மூன்று, இரண்டு, ஒன்றாகவும் அமைகின்றன என்பர். தமிழ் இலக்கணத்தில் இந்த அறிவை ஒட்டியே, திணை வகுத்தார்களோ என்னுமாறு உயர்திணை அஃறிணை என்ற இரண்டையும் பகுத்துள்ளார்கள்.

> 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே;
> அஃறிணை என்மனார் அவரல பிறவே.'

எனத் தொல்காப்பியர் சொல்லதிகாரத்திலே இவற்றைப் பிரித்துக் காட்டுகின்றார். மனிதனைச் சுட்டி வருவனவெல்லாம் உயர்திணை எனவும், மற்றவை யெல்லாம் அஃறிணை எனவும் கொள்ளக்கிடப்பன என்பது தெளிவு. மனிதனை உயர்திணை யாக்கியதற்கும் அத் தொல்காப்பியமே காரணம் காட்டுகின்றது ஆறாவது அறிவைப் பெற்றவரே மக்களாவர் என விதந்து ஓதுகின்றது அது.

அறிவை ஆறாகப் பகுத்தார்கள். உயிர்கள், உலகில் காணும் அல்லது நிலவும் பொருள்களைத் துய்த்தற்கே இங்கே பிறக்கின்றன எனக் கூறலாம். இவ்வுலகிற்கும் உயிருக்கும் உள்ள தொடர்பை அவ்வாறு விளக்க இயலும். இவ்வுலகில் உள்ள பொருள்களையெல்லாம் துய்த்து இன்பம் பெறுதல் எல்லா உயிருக்கும் இயற்கை என்பதை மேலே கண்டோம். எனவே, இவ்வுலகைத் தமக்காகப் பயன்படுத்துவதே இதில் வந்து பிறந்த உயிர்களின் நோக்கம் என்பது புலப்படும். அதுவே வாழ்க்கையாக அமைகின்றது. அப்படித் துய்ப்பதற்கு ஐம்புல நுகர்ச்சி என்பது பெயர். 'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும்' ஐம்புலன்களின் அறிவையே உயிர்கள் பெறுகின்றன என்பர். கண்ணால் காண்பதும், காதால் கேட்பதும், வாயால் உண்பதும், மூக்கால் முகர்வதும், உடலால் உற்று அறிவதும் உயிர்கட்கு இயற்கை. இவை ஐந்தும் படிப்படியாக உயிர்வளர்ச்சியிலே ஒன்றையொன்று பற்றிப் படர்ந்துகொண்டே வருகின்றன. ஆனால், ஆறாவதாகிய மனிதன் பெற்ற அறிவு தனிப்பட்டது போலும்! அந்த ஆறாவது அறிவைத் தொல்காப்பியர் 'மனம்' எனக் குறிக்கின்றார். மனம் என்ற அறிவு, மற்ற உயிர்களுக்கு இல்லாத ஒன்று; மனிதனிடத்தில் இருக்கிறது. 'மனம் அறியச் சொல்' என்று சாதாரணமாகக் கேட்பதை அறிவோம். ''தன் நெஞ்சு அறிவது பொய்யற்க' என்பார் திருவள்ளுவர். இம் மனஅறிவு யாவற்றினும் சிறந்த ஒன்று. நல்லதன் நலனையும் அல்லதன் தீமையையும் ஆராய்ந்து அறிந்து, மக்களை நேரிய வழியில் செலுத்தப் பயன்படுவதே மன அறிவாகும். இவ்வறிவு மற்ற உயிர்களிடத்து இன்மையின், அவற்றினும் வேறாக மனிதனைப் பிரித்து, அவனை உயர்திணை யாக்கினர். இம்மன அறிவின் வழியேதான் மனிதன் இன்று தன்னைப் பற்றியும், உலகைப் பற்றியும், பிறவற்றைப் பற்றியும் ஆராய்கின்றான். மற்றவை அவ்வாறு ஆராய்ச்சி செய்ய இயலாது. ஆயினும், இம் மனஅறிவு பெற்ற மனிதப் பிறவியைப் பெறுமுன் மனித நிலை பெற்ற இந்த உயிர், எத்தனை எத்தனை கோடி ஆண்டுகள்

என்னென்ன வகையில் வளர்ச்சியுற்று வந்துள்ளது என்பதைக் காணின், ஓரளவு உயிர்த்தோற்ற வளர்ச்சி புலனாகும்.

தாவரங்களுக்கு உயிர் உண்டா இல்லையா என்ற ஆராய்ச்சி நெடுங்காலமாகவே உலகில் நடைபெற்று வந்தது. அந்த ஐயத்தைப் போக்கியவர் ஓர் இந்தியரேயாவர். வங்க நாட்டில் பிறந்த **ஜகதீஸ் சந்திரபோஸ்** அவர்களே நன்கு ஆராய்ந்து மரஞ் செடி கொடிகளுக்கும் உயிர் உண்டு என்பதை நிறுவினார்கள். ஆனால், அந்த உயிரின் அறிவுக் கூறுபாடுகளை அறுதியிடவில்லை என்றே சொல்லலாம். இன்று அத்துறையில் பல ஆய்வாளர்கள் பணியாற்றி மேலும் மேலும் உண்மைகளைக் கண்டுகொண்டே யிருக்கின்றார்கள். தொல்காப்பியர் இந்த நுண்மையை எப்படி அறிந்தாரோ நமக்குத் தெரியாது. எனினும், அவர் திட்டவட்டமாக இன்னின்னவற்றிற்கு இன்னின்ன வகையில், அறிவுக் கூறுபாடுகள் உள்ளன என வரையறுக்கின்றார்; அவற்றோடு புல்லுக்கும் மரத்துக்கும் உள்ள வேறுபாடுகளையும் காட்டுகின்றார். வானோங்கிய தென்னையும் மூங்கிலும் மரமா புல்லா என்ற ஐயம் இன்றும் பலருக்கு உண்டு. ஆனால், தொல்காப்பியர் ஒரு நல்ல சட்டத்தின்மூலம் புல் இனம் இவை, மர இனம் இவை என்றே திட்டமாக வரையறை செய்துவிட்டார்.

'புறக்கா ழனவே புல்லென மொழிப (மரபு : 81)

'அகக்கா ழனவே மரமென மொழிப.' (ஷ. 82)

என்ற இரண்டு சூத்திரங்களும் அவற்றின் வேறுபாட்டை நன்கு விளக்குவனவே. வெளிப்புறம் கடினமாய் இருந்து உட்புறம் மென்மையாயுள்ள அடிப்பாகத்தைக் கொண்ட அனைத்தும் புல் இனத்தைச் சேர்ந்தனவாகும். இதன்படி வெளிப் புறத்தே திண்மை உடைய தெங்கும், மூங்கிலும் புல்லினத்தைச் சேர்ந்தவைதாமே? மரத்துக்கு இலக்கணம் அதன் உட்புறம் திண்மை பெற்றிருக்கும் என்பதே. இப்படி ஓரறிவுடைய உயிரினத்தில் இத்துணை வேறுபாட்டைக் காட்டுகின்றார் தொல்காப்பியர். இன்னும் அடுத்த சில சூத்திரங்களில்

அவற்றின் கிளைப்பெயரும் பிறவும் மரபு பற்றி எவ்வெவ்வாறு வழங்குகின்றன என்பதைக் காட்டுகின்றார். இத்துணை நுண்ணி தாக எடுத்துக்காட்டும் இயல்பு வாய்ந்த ஆசிரியர் தொல் காப்பியனார், உயிர் பற்றிய நுணுக்கங்களையும் ஆராய்ந்து வெளியிடுகின்றார். அறிவு எவை எவை என்பதை,

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே;
இரண்டறி வதுவே அதனொடு நாவே;
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே;
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே;
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே;
ஆறறி வதுவே அவற்றொடு மனனே;
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே."

(மரபு: 27)

என்று காட்டுவது நோக்கத்தக்கது. எனவே, அறிவுகள் ஆறும் ஒன்றை ஒன்று எவ்வாறு பற்றிக்கொண்டு வளர்ச்சி அடை கின்றன என்பது தெரிகின்றது. உடலால் உற்றறிவதே முதலறி வென்பதும், அதனொடு பொருந்தும் நாவின் அறிவே இரண்டாவ தறிவென்பதும், பின்பு மூக்கறிவும், கண் அறிவும், செவி அறிவும், இறுதியாக மன அறிவும் ஒன்றோடொன்று பொருந்தியே உயிர் வளர்ச்சி ஊற்றம்பெற்று உயர உதவு கின்றன என்பதும் நன்கு புலனாகின்றன. முதல் ஐயறிவுகளைக் கொண்டு அவற்றின் வழியாகப் பெறுகின்ற இன்பத்தைத் துய்ப்பவனே உலகில் வாழும் தன்மையன் என்பது ஆன்றோர் கருத்து. அவற்றில் செல்லும் அந்த நெறியைச் செம்மைப் படுத்த உதவுவதுதான் மன அறிவாகும். இவ்வாறு ஐம்புலனும் பெறும் இன்பத்தைப் பெயரிட்டு வழங்கியிருக்கின்றனர். 'சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்' என்ற ஐந்துவகை உணர்வுகளே இவ்வாறு அறிவுகளாலே பெறுவன. அவற்றை வகைப்படுத்தி அறிவது எளிதன்று. வகைப்படுத்தி அறிந்து, பின்பு அவற்றின் வழியே இவ்வுலக வாழ்வை ஒருவன் துய்க்கப் பெறுவானாயின், அவன் வழி உலகும் இயங்கும் என்பர். அவனே மன அறிவு பெற்ற மனிதன் ஆவான். இக் கருத்தைத்தான் திருவள்ளுவர்,

"சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என் றைந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு."

என்று சுருக்கிக் கூறுகின்றார். இக் குறளுக்கு உரை எழுதிய ஆசிரியர் பரிமேலழகர், இவ் வைந்தின் கூறுபாட்டை அறிதலே —இவற்றின் வகையை உற்று உணர்தலே—அனைத்துக்கும் முதலாகிய ஒன்றினையும் அதன் வழியே பூதங்கள் ஐந்தினையும் பிறவற்றையும் அறிந்துகொள்ளுதல் என்கின்றார். அவர் காணும் விளக்கம் நமக்கு இங்குத் தேவையில்லை. எனினும், அவற்றின் இன்றியமையாமையே உலக வாழ்வு என்பதை மட்டும் நாம் மறவாமல் மனத்தில் கொள்ளவேண்டும், இவ்வைந்து சுவைகளை நல்கும் புலன்வழி பெறும் அறிவுகளே தொல்காப்பியர் அறுதியிட்ட அறிவுகளாகும்.

இனி, அவ்வறிவினைப் பெற்ற உயிர்கள் எவ்வெவ்வாறு வளர்ச்சியடைந்து வாழ்கின்றன என்பதையும் காண்போம். ஒவ்வோர் அறிவினையும் பிரித்து, அவ்வறிவின் வழி வாழ்க்கை நடத்தும் உயிர்களை வகுத்துக் காட்டுகின்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்:

'புல்லும் மரமும் ஓரறி வினவே;
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.'

'நந்தும் முரளும் ஈரறி வினவே;
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.'

'சிதலும் எறும்பும் மூவறி வினவே;
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே;

'நண்டும் தும்பியும் நான்கறி வினவே;
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.'

'மாவும் மாக்களும் ஐயறி வினவே;
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.'

'மக்கள் தாமே ஆறறி வுயிரே;
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.' (மரபு. 18—33)

என ஓரறிவுடைய உயிர் தொடங்கி ஆறறிவுடைய மனிதன் வரை, அவ்வவ்வினத்தைச் சேர்ந்தவற்றை விளக்கியுள்ளார். மேலே கண்ட 'ஒன்றறி வதுவே' என்னும் சூத்திரத்தில், 'நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினர்,' என்றார். இவ்வாறு ஒன்றுமுதல் ஆறுவரை அமைந்திருந்த காரணத்தை அவருக்கு முன்னரே ஆய்ந்தமைந்த நல்லோர் அறிவுவழி நின்று ஆராய்ந்து, நெறிப்படுத்திக் காட்டினார்கள் என்பதேயாகும். அவர்கள் அவ்வாறு கூறியதற்குக் காரணம் நம்மால் நன்கு விளங்கிக்கொள்ள முடியாது போயினும், அவை ஒன்றை ஒன்று பற்றி வளர்ந்து வளர்வதைக் கண்கூடாகக் காணும் நாம்—ஒவ்வோர் அறிவும் வளர வளர, அவ்வுயிர்ப்பொருள்கள் மனிதனை நெருங்கி வருவதைக் காணும் நாம்—அவற்றின் பொருத்தத்தை உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். மேலும் விளக்கம் வேண்டின், பேராசிரியர் இச்சூத்திர உரையில் கூறியவாறு 'வல்லார் வாய்க் கேட்டுணர்க' என்று நாமும் முடிக்கத்தான் வேண்டும். இவற்றின் விரிவு பெருகும். விவிலிய நூலில் கூறும் தோற்றக் கூறுபாடுகளும் சில வகையில் இவற்றை ஒத்திருத்தல் காணலாம்.[1]

இனி, இந்த அறுவகை உயிர்த்தோற்றத்தை ஆராய்வோம். புல்லையும் மரத்தையும் ஓரறிவுடைய உயிராகக் குறிக்கின்றார்: அவற்றோடு கூடிய கிளைப்பிறப்பும் அத்தகையனவே எனவும் காட்டுகின்றார். இதற்கு உரை எழுதிய பேராசிரியர், 'கிளைப் பிறப்பு என்பது கிளையும் பிறப்பும் என்றவாறு. கிளையென்பன, புறக்காழும் அகக்காழும் இன்றிப் புதலும்கொடியும் போல்வன. பிறப்பென்பன, மக்களானும் விலங்கானும் ஈன்ற குழவி ஓரறிவினவாகிய பருவமும், எஞ்ஞான்றும் ஓரறிவினவேயாகிய என்பில் புழுவும் இவை. இவை வேறு பிறப்பெனக் கொள்க,' எனக் குறிக்கின்றார். எனவே, கிளையிலும் பிறப்பிலும் பலவற்றை உள்ளடக்குகின்றார் அவர். விளக்கம் போற்றற் குரியதுதான். புதலும்—முட்புதரும்—கொடி வகையும் தாவர இனந்தான்; அவற்றை அப்பிறவியோடு சார்த்தல் இயல்பு.

1. GENESIS. Chapter—1

ஆனால், குழவியையும், கன்றையும், புழுவையும் சேர்த்தல் எப்படி என்று கேட்கலாம் அன்றோ! அதையும் உரையாசிரியர் விளக்குகின்றாரே! புழு மர இனத்தைச் சேர்ந்தது அன்றாயினும், அதுவும் உற்று அறியும் ஓரறிவுடைய உயிரன்றி வேறன்றே? ஆகவே, அதுவும் இவ்வினத்தில் சேர்க்கப்பட வேண்டுவது தானே? மற்றைய குழவியும் குட்டியும் குஞ்சும் எப்படி இவ்வின மாகலாம்? குழந்தை மனிதப்பிறவிதான். அது பிறந்ததும் ஆறறிவையும் பெற்றது என்று யாராவது கூறுவார்களா? அது அழைத்தால் கேட்டுப் பதில் உரைக்குமா? வாய் திறந்து பேசிச் சுவைக்குமா? மணப்பொருளை நுகர்ந்து மகிழுமா! மகிழா தன்றே? ஆகவே, அதுவும் அறிவு குறைந்த ஒன்றுதான். குழந்தையைப் 'பச்சை மண்' என்று இன்றும் வீட்டில் கிழவிகள் பேசிக் கொள்வதை அறியாமோ? ஆகவே, மண்ணைப் போன்று ஒன்றும் அறியாத குழந்தை என்பதைத்தான் இவர் ஓரறிவுடைய பிறவியில் அடக்கிப் பேசுகின்றார். பிற விலங்கின் குட்டிகளும் பறவையின் குஞ்சுகளும் இவ்வாறே எண்ணப்படு கின்றன. இவ்வளவு நுணுக்கமாக உயிர்த்தோற்ற வளர்ச்சி பற்றி இன்றைய மேனாட்டு ஆய்வாளர் இன்னும் காணவில்லை, எனலாம்.

இப்படியே இரண்டறிவு தொடங்கி, ஆறறிவுவரை உள்ள பிற உயிர்களையும் காணலாம். இவ்வறிவு ஒன்றோடொன்று சேரும்போது, சேரும் அனைத்தும் நீங்காது சென்றிருந்தால் தான், அப்பிறவி சிறப்படைந்ததாக மிளிரும். பின்னது சேரும் போது முன்னது நீங்கின் பயனில்லை. அதனாலேதான் ஒவ்வோர் அறிவையும் குறிக்கும்போது, 'முன்னையவற்றோடு' என்று மறவாது தொல்காப்பியர் குறிக்கின்றார். மனிதன் ஆறறிவும் பெற்றவன். ஆறாவது அறிவாகிய மனன் வழிப்பெற்ற அறிவினை அடைந்தபோதிலும், அவன் பிற செவி அல்லது நா அறிவு குறைந்திருப்பானாயின், முற்றிய அறிவுடையவன் ஆக மாட்டானே! எனவே, ஒன்றைப் பெறும்போது மற்றொன்று குறையின், அது அறிவுபெற்ற உயிர்வளர்ச்சியாக மாட்டாது. இவ்வாறே ஒவ்வோர் இன உயிரைப்பற்றியும் அவற்றைச்

சேர்ந்த கிளை பிறப்பு முதலியன பற்றியும் பேராசிரியர் ஒவ்வொரு சூத்திரத்தும் விளக்கிக் காட்டிக் கொண்டே செல்லல், அறிந்து இன்புறற்பாலதாகும். அவர் மக்களைப் பற்றிக் கூறும் ஒன்று இங்கு நோக்கற்பாலது.

விலங்குகளோடு மாக்கள் என்ற ஒரு பிரிவை ஐயறிவுடைய உயிராகக் குறிக்கின்றார். எனவே, மனிதரிலும் ஐயறிவுடையவர் உள்ளனர் என்பது நன்கு தெரிகின்றது. மாக்கள் எனப்படுவார் மன உணர்ச்சி இல்லாதவர் என்பர் உரையாசிரியர். பின்பு மக்கள் என்ற பகுப்பில், பிறவும் என்ற தொகுதியில், பிறப்பால் ஒன்று சேர்க்கப்படுவனவற்றுள் 'குரங்கு முதலாகிய விலங்கினுள் அறிவுடையன எனப்படும் மன உணர்வுடையன உளவாயின், அவையும் ஈண்டு ஆறறிவுயிராய் அடங்கும் என்பது,' என்று காட்டுகின்றார் உரையாசிரியர். எனவே, இவற்றின் வழி வெறுந் தோற்றத்தால் மட்டுமன்றி, மன உணர்வாலேயே, கடைசி அறிவாகக் கூறிய ஆறறிவுடைமையை உற்று நோக்க வேண்டுமென்பது பெறப்படும். இக்கருத்தை எண்ணித்தான் போலும் ஆசிரியர் திருவள்ளுவரும்,

> 'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
> கற்றாரோடு ஏனையவர்'

என்று கற்றவரை மக்களாகவும், மற்றவரை விலங்காகவும் பிரித்துள்ளார்! எனவே, தோற்றத்தால் மட்டும் மனிதனுக வாழ முடியாது என்பதும், மன உணர்வாகிய உள்ளுணர்வும் பொருந்தியதே ஆறறிவுடைய மக்கட்கு அழகாகும் என்பதும் தேற்றம். அப்படியே விலங்கினத்தில் குரங்கு மனிதத்தன்மையைப் பெறக்கூடும் என ஆசிரியர் காட்டுகின்றார். தோற்றத்தால் மனிதத் தன்மையில் மாறுபட்டிருப்பினும், உற்று அறிதலானும், உணர்வானும் மனன் உணர்வு பெற்ற அந்த விலங்காகிய குரங்கும் மனித இனத்தில் அடங்கும் என்பதை அன்றே உரையாசிரியர் காட்டியுள்ளார். இன்று நம் நாட்டில் குரங்குகளைக் கொண்டு மனிதனிலும் மேலாகச் செயலாற்றும் திறங்

களைப் பார்க்கும் நமக்கு, இது எவ்வளவு உண்மை என்பது புலனாகின்றது. மேலும் இந்த அடிப்படையிலேதான் போலும் மேலை நாட்டு உயிர்நூற் புலவனாகிய 'டார்வின்' என்பான், மனிதன் குரங்கிலிருந்து தோன்றியவன் என எழுதிச் சென்றான் என்று நினைக்க வேண்டியுள்ளது.

குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்பது இறுதியாக அவர்கள் கண்ட முடிவு. அதற்குமுன் உயிர்த்தோற்றம் எப்படி உண்டாயிற்று என்று ஆராய்கின்றவர் பலர். எட்வர் கிளாட் என்பார் தம் 'உயிர்த் தோற்றம்' என்னும் நூலில்[1] உயிர் எவ்வாறு தோன்றி வளர்ச்சியுற்றது என்பதைக் காட்டியுள்ளார். இவர் நூல் 1888இல் வெளியிடப் பெற்றதாகும். ஆனால், அதற்குப்பிறகு ஏறக்குறைய முக்கால் நூற்றாண்டாக[2] அறிஞர்கள் அவ்வுயிர்த்தோற்றம் பற்றி ஆராய்ந்து கொண்டே தானிருக்கின்றார்கள். ஓரளவு அவர்கள் ஒருவகையான முடிவினைப் பெற்றிருக்கின்றார்கள் என்றாலும், திட்டமாக அவர்கள் வரையறுத்து முடிவுகட்டவில்லை என்றே சொல்லலாம். உலகத் தோற்றத்துக்குக் கூறிய அனைத்தும் உயிர்த்தோற்றத்துக்கும் பொருந்தியனவாகும்.

உலகம் சூரியனிலிருந்து பிரிந்து வீழ்ந்த பொறிதான் என்றால், அந்தக் கொடிய நெருப்பில் அந்த ஆதிகாலத்தில் யார்தான் வாழ்ந்திருக்கக்கூடும்? நிலம் மிக வெம்மையாய் இருந்த அந்த நாளில் எந்த அறிவுடைய உயிரும் இருந்திருக்க முடியாது. அனைத்தும் நெருப்பில் உற்று ஒழியும் என்பது கண்கூடு. எனவே, உலகம் உதிர்ந்து நெடுங்காலத்துக்குப் பின்னரே, நிலம் வாழ்வுக்கு ஏற்றது என்ற நிலையில் குளிர்ந்த பிறகுதான், உயிர்கள் ஒவ்வொன்றாகத் தோன்றியிருக்க வேண்டும். இன்று உயிர் வாழ்வுக்கு ஏற்றதாய் இல்லாமல் மிகக் கொடிய குளிர்ப்பிரதேசமாய் உள்ள வடதென் துருவங்களில் ஒரு காலம் வெம்மை ஒளி கான்றுகொண்டிருக்குமன்றோ? அச்சூடு தணிந்து, இன்றைய நில நடுக்கோடு பெறும் வெம்

1. Story of creation, by EDWARD CLODD.
2. இந்நூல் முதல் பதிப்பு வந்தபோது.

மையை அந்தத் துருவங்கள் பெற்றிருந்த நாள் ஒன்று இருக்கத் தானே வேண்டும்? ஆகவே, அந்நிலையில் முதல் முதல்—நெடுங் காலத்துக்கு முன், அங்கே உயிரினங்கள் தோன்றி வாழ்ந் துள்ளன என்கின்றனர் ஆய்வாளர். இரு துருவங்களிலும் வடதுருவத்திலேதான் உயிர் தோன்றியிருக்க வேண்டும் என்பர். எனினும், அதற்குக் காரணம் காட்ட இயலவில்லை. அந்த வடதுருவத்தில் தோன்றிய உயிரினம். நாள் செல்லச் செல்ல நிலத்தின் பிறபகுதிகள் குளிர்ச்சி அடைய அடைய, அந்த இடங்களில் பரவி வளர்ச்சியடைந்திருக்கக்கூடும். ஒருவேளை தென்துருவத்துள்ளும் உயிர்த்தோற்றம் இருந்து, அருகே பெரு நிலப்பரப்பு ஒன்றும் இன்மையினாலும், அகன் ருழ்ந்த கடல்களைக் கடக்க முடியாமையாலும், தோன்றிய உயிர்கள் வெம்மைமாறிக் குளிர் மிகமிக அப்படியே அங்கேயே அழிந்துவிட்டனவோ என்று எண்ணவும் இயலும். எப்படி யாயினும், நிலம் தோன்றி நெடுங்காலத்திற்குப் பிறகே, அதன் வெம்மை மாறி மாறித் தண்மை உண்டாக உண்டாக உயிர்த்தோற்றமும் சிறிது சிறிதாக உண்டாயிற்று என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளுகின்றனர்.

அத் தோற்ற நாளிலே உயிர்கள் எப்படி இருந்தன என்பதைப் பலர் பலவகையாக ஆராய்கின்றனர். உயிர் அணுக்கள், அப்படியே இங்கும் அங்கும் காற்றும் நெருப்பும் அலைக்க, அலைந்துகொண்டே நெடுங்காலம் இருந்து, பின்னர்த் தான் அசைவுபெறத் தொடங்கின என்பர். அப்போது அந்த உயிர்களுக்கு ஒரு வேளை முதல் அறிவு தோன்றியிருக்கக் கூடும். 'அமீபா'[1] என்று அதை ஆங்கில ஆராய்ச்சியாளர்கள் வழங்கி யுள்ளார்கள். உயிர்த்தோற்றத்திற்கு முன் எத்தனையோ ஊழிகளும் மாற்றங்களும் நடைபெற்றிருக்கக் கூடும். ஆனால், அவற்றினாலெல்லாம் உயிர்களுக்கு எவ்வித மாற்றமும் கெடுதியும் இல்லை. என்றாலும், உயிர் தோன்றிய நாளிலிருந்து நிலத்தில் நேரும் மாற்றம் ஒவ்வொன்றும் ஓரளவு உயிர்த்

1. Amoeba

தன்மைகளையும் மாற்றிக் கொண்டே வந்தது என்பது உண்மை.

இவ்வாறு தோன்றிய உயிர், முதலில் பிறந்தது நீரிலா நிலத்திலா என்ற ஆராய்ச்சி ஒருவாறு முடிவு பெற்றுவிட்டது. நிலத்துக்கு முன்னர்த் தோன்றியது நீரானமையானும், நிலத்தினும் நீர் விரைவில் தண்மை அடையும் தன்மைத்தாத லானும், உயிர்ப்பொருள்கள் நீரிலேயே முதலில் தோன்றி யிருக்க வேண்டும். இவ்வுயிர்த் தோற்றங்கள் அனைத்தும் நிலத்தன்மையிலோ அன்றி நீர்த்தன்மையிலோ சூரியனது ஒளிக் கதிர்கள் பொருந்தும் வகையிலேதான் அமைகின்றன என்பர். இன்றும் அது உண்மையாகக் காண்கின்றது. சூரிய ஒளியில் உள்ள செடிகள் அவ்வொளி பரவா இடத்தில் இருப்பன வற்றைக் காட்டிலும் நன்கு செழித்து வளர்வதைக் காண் கின்றோம். ஒளி, உலகப்பரப்பில் உள்ள உயிர்அணுக்களின் சேர்க்கை மூலமே தன் தோற்றத்தை உலகுக்கு அளிக்கின்றது. மூல உயிர் அணுக்கள்[1] எத்துணைக் காலம் உலகில் வடிவும் தன்மையும் பெறாமல் உலவிக்கொண்டிருந்தன என்பதை இன்னும் கணக்கிடவில்லை எனலாம். அந்த உயிர் அணுக்கள் செறிந்தும் கூடியும், வளர்ந்தும் பிரிந்தும், பல வேறு வகையில் பல காலம் உலகில் உலவியிருக்கக் கூடும். அந்த உயிர் அணுவின் அசைவுக்கும் அமைப்புக்கும் நிலத்தைக் காட்டிலும் நீரே ஏற்றதாயும் அமைந்திருக்கும். அந்த உயிரணுக்கள் தத்தம் பிரிவாலும் சேர்க்கையாலும், பிற இயல்களாலும் ஒன்றை யொன்று பற்றிக்கொண்டு முதல் முதலாக உயிர்த்தோற்றத்தை உலகுக்குப் புலப்படுத்தியிருக்க வேண்டும். அந்த உயிர் அணுக்கள் அன்றுதொட்டு இன்றுவரை உயிர் வாழும் எல்லாப் பொருள்களிலும் நிறைந்துள்ளதை ஆய்வாளர்கள் விளக்கிக் காட்டியுள்ளார்கள். ஒரு துளி இரத்தத்தில் இத்தகைய உயி ரணுக்கள் பலப்பல நிறைந்துள்ளன. ஆனால், அந்த முதல் அணுக்கள் இருந்த நிலையிலேதான் இவையும் இருக்கின்றன என்று கூற முடியாது. இந்தக் கோடி கோடியாகிய ஆண்டு

1. Cells

களுக்குள் உயிர்த்தோற்றம் எத்தனை எத்தனையோ வகைகளில் மாறுபாடுற்று வளர்ந்தமை போன்றே, அவ்வுயிர் அணுக்களும் மாற்றமும் பிறவும் பெற்றிருக்க வேண்டும். எப்படியோ, அசையும் பொருள்களாய் இருந்த உயிர் அணுக்களே, இன்று அவற்றின் தன்மையையும், தோற்றத்தையும், வளர்ச்சியையும் ஆராயும் மனிதனாக மாறி—பல கோடி ஆண்டுகளுக்குப்பின்—இவ்வுருவம் பெற்றிருக்கிறது என்பது தெளிவாகின்றது.

இந்த உயிர் வளர்ச்சி, காலத்தால் சிறப்புறுகின்றதென்றே சொல்லலாம். அறிவாலும் இது சிறப்புறுகின்ற தென்பர். மற்றும், அறிவு குறைந்த உயிர்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் உள்ள கால வேறுபாடு மிக அதிகம். ஆனால், அறிவு வளர்ச்சி பெற்றவற்றுள் அத்துணை வேறுபாடு காண இயலாது. காலத்தால் மட்டுமின்றி, இன்றைய காட்சியிலும் இவ்வேறுபாடு காண இயலும். முதல் உயிர்கள் என்று காட்டும் மரம் முதலிய தாவர இனமும், மீன் முதலிய நீர் வாழ்வனவும் தம் இனப் பெருக்கத்தை அமைத்துக்கொள்ளும் வழியைக் காணல் வேண்டும். ஒரு மரத்தில் உள்ளவை எத்தனையோ மலர்கள், காய்கள், கனிகள். அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மரமாக மாறவேண்டும்! அங்ஙனம் மாறுபாடு நடைபெறுகிறதா? இன்னும் ஆல் அரசு போன்றுள்ள பல வற்றில் ஒரு பழத்துள் எத்தனை ஆயிரம் ஆயிரம் விதைகள் அடங்கியுள்ளன! அத்தனையும் தம் அன்னை மரத்தின் அடி ஒற்றி வளர்ந்து வருகின்றனவா? இல்லையே! அவற்றுள் பெரும்பாலன அழிவு பெற, எங்கோ ஒருசில தானே வேரூன்றி மரமாக வளர்கின்றன? அதைப் போன்றே நீரில் வாழும் மீன் இனமும் அமைகின்றது. ஒவ்வொரு முறையிலும் மீன் எத்தனையோ இலட்சக்கணக்கான முட்டைகளை இடுகின்றது. ஆனால், அவற்றுள் ஆயிரத்துள் ஒன்றுகூட உருவுற்று வளர்வதில்லையே! என்வே, முதல் உயிர்களெல்லாம் தம் இனத்தை வளர்க்கப் பெருவாரியாகத் திட்டம் தீட்டியது போன்று கருவுயிர்த்தன என்றும், எனினும் காலம் அதை அப்படி வளரவொட்டாது தடுத்து நிறுத்தி, ஓர் அளவிலேயே அவற்றின் வளர்ச்சியை அமைத்ததென்றும் அறிய இடமுண்டன்றோ! இவ்வாறு

வளர்ந்த மரமும் மீனும் பின்னும் காலப் போக்கில்—உயிர் வளர்ச்சி நிலையில், பலப்பல உயிர்களாக—உயிர்ப் பொருள் களாக—உருப் பெறலாயின.

பின்வரும் சிதலும் எறும்பும் தும்பியும் வண்டும் மீனைப்போன்றும், ஆலம்பழத்தைப் போன்றும், அத்துணைப் பேரளவில் இனப்பெருக்கம் செய்ய முயலாவிடினும், அவற்றின் அடுத்தபடியாக அமைகின்றன. எனினும், அவற்றுள்ளும் பெரும்பான்மை அழிந்தொழிய, சில சிலவே நிற்கின்றன. அந்த எல்லையைத் தாண்டி விலங்கினத்திற்கு வருவோமாயின், அவை ஒரு சிலவற்றை ஈனுகின்றன. பன்றியும், நாயும், பூனையும், பிறவும் ஒன்றுக்கு மேற்பட்ட பல குட்டிகளை ஈனுவதை நாம் அறிவோம். ஆனாலும், அவற்றின் எண்ணிக்கை மீன் முட்டையின் எண்ணிக்கையிலோ, பழ விதையின் எண்ணிக் கையிலோ ஆயிரத்தில் அன்றி இலட்சத்தில் ஒரு பகுதிகூட இராது என்பது உண்மைதானே? ஆகவே, வரையறுக்கப்பட்ட ஓர் எல்லையிலேதான் அவை இனப்பெருக்கம் செய்கின்றன. எனவே, அவற்றுள் அழிவு அதிகமாக ஏற்படுவதில்லை. எங்கோ இரண்டொன்று கெட்டொழியப் பெரும்பாலன உயிர்பெற்றே வாழ்கின்றன.

இறுதியாக யானை, மாடு முதலிய விலங்குகளைப் போன்று அவற்றை ஒட்டி உணர்வு பெற்று ஓங்கிய மனிதரும் முறைக்கு ஒரு கருவைத்தான் பெற்றெடுக்கின்றனர். ஒரு பெண்ணுக்கு இரு குழந்தைகள் பிறந்தால், அதை உலகம் அதிசய நோக் கோடு காண்கின்றது. அந்த அளவில், ஒரு கருவில் ஓர் உயிர் என்ற தத்துவத்தில் மனிதர் அமைந்துவிட்டனர். ஆகவே, மனிதத் தோற்றத்தில் அழிவு என்பது மிகக் குறைவு. பிறந்து உலக வாழ்க்கையில் அமைந்து, பயன் பெற்று முற்றிய பின்னர்த்தான், மனிதர் இயற்கை முடிவு எய்துகின்றனர் என்பது நாம் அறிந்த ஒன்று. இவற்றையெல்லாம் நோக்க, தொல்காப்பியர் வகைப்படுத்திக் கூறிய அந்த உயிர்த்தோற் றத்தின், வளர்ச்சி முறை முற்றும் பொருத்தமாகத்தான் இருக்க வேண்டும் என்பது தேற்றம்,

முதலில் நீரிலேதான் உயிர்த்தோற்றம் உண்டாயிருக்க வேண்டும் என்பதைக் கண்டோம். அதன் காரணத்தை இன்றைய விஞ்ஞானிகள் நன்கு கண்டு தெளிந்து காட்டியுள்ளார்கள். நீரோ, நீர் வாயு பிராண வாயு என்ற இரண்டின் சேர்க்கையால் அமைவதென்பதை மேலே கண்டோம். உயிர் வாழ்க்கைக்குப் பிராணவாயு இன்றியமையாது வேண்டப்படுவதாகும். அது நீரோடு கலந்து நீக்கமற நிறைந்து நிற்கின்ற காரணத்தினாலேதான் அங்கே உயிர்த்தோற்றம் எளிதாயிற்று என்பர். 'நிலத்தில் உயிர்க்காற்றாகிய பிராணவாயு இல்லையோ?' எனின், உண்டு என்றுதான் கூற முடியும். எனினும், அதன் அழுத்தம் மிக அதிகமாகும். முதலில் தோன்றிய உயிர் அணுக்களும் (Cells) அவற்றை ஒட்டிய சிற்றுயிர்களும் அந்த அழுத்தம் மிகுந்த பிராணவாயுவைத் தாங்கும் ஆற்றல் பெற்றிருக்கவில்லை. எனவே, அவை நீரோடு எளிமையில் கலந்துள்ள அந்தப் பிராணவாயுவினால் ஆரம்ப நாளில் அந்நீரிலேயே தோன்றி வளர்ந்து வரலாயின.

தோன்றிய அந்த உயிரணு நீர் வாழ் பொருளாய் அமைந்திருந்தது. நீர்வாழ் மீனும் நிலத்தில் வாழ் தாவரமும் ஒரே காலத்தில் தோன்றினவா, அன்றி முன்பின் தோன்றினவா என்பதைத் திட்டமாக வரையறுத்துக்கூற இன்றும் விஞ்ஞான ஆராய்ச்சியாளர் முயல்கின்றனர். அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்து வரும் விஞ்ஞான இதழ்களில் இவை பற்றிய கட்டுரைகள், எப்போதாவது வெளிவருகின்றன. இரண்டும் எவ்வாறு தோன்றின என்பதும், எது முன் எது பின் என்பதும் திட்டமாகக் கூறப்படாவிடினும், இரண்டும் ஒரே மூலப்பொருளிலிருந்துதான் தோன்றின என்பார்கள் விஞ்ஞானிகள். 'ஹைட்ரா'[1] என்று அப்பொருளைக் குறிப்பர். இவற்றின் துணை கொண்டு நம் தொல்காப்பியனார் கருத்தை நாடின், ஒருவாறு உண்மை புலனாகும். அவர் அதில் புல்லையே முதல் தோன்றிய

1. HYDRA—Common origin for plant and animal Life.

உதாகக் காட்டுகின்றனர். அறிவு வளர்ச்சியின் கணக்குப்படி முதலாவது ஓரறிவுடைய உயிர்களே தோன்றப் பின்னர் இரண்டறிவுடைய கடல்வாழ் உயிர்கள் தோன்றியிருக்க வேண்டும். ஒருவேளை விஞ்ஞானிகள் அந்த முடிவுக்கு விரைவில் வரக்கூடும்.

புல்லும் மரமும் மற்றுமுள்ள தாவரங்களுங்கூட அனைத்தும் ஒரே காலத்தில் தோன்றின என்று கூறிவிட முடியாது. சிறு புல்பூண்டுகள் முதலில் தோன்றி நாளடைவில் பெரும் மரங்களாய் வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். அந்தத் தாவர ஊழியின் இறுதியிலே ஒரு பெருங்கடற் கொந்தளிப்பு உண்டாகியிருக்கும். பெரும்பான்மையான தாவரங்கள் நிலத்தால் மூடப்பட்டதாகிய அந்தக் காலத்திலேதான், நீர்வாழ் உயிர்கள் பெருகியிருக்கக் கூடும். அவ்வாறு பேரூழியால் நிலத்தில் புதைக்கப்பட்ட தாவர வகைகளே இன்று நிலக்கரியாய் மாறி இன்றைய உலகுக்குப் பலவகையில் பயன்படுகின்றன என்பர் சிலர். எது எப்படியாயினும், தாவர வாழ்வும் நீர்உயிர் வாழ்வும் உலகில் நெடுங்காலம் நிகழ்ந்த பின்பே, பிற உயிர் வாழ்க்கை முறைகள் தோன்றியிருக்க வேண்டும் என்பது மறுக்கமுடியாத உண்மை. விஞ்ஞானிகள் மீனினத்துக்குப் பிறகு ஊர்வன தோன்றியிருக்க வேண்டும் என்பதைக் கண்டுள்ளார்கள். நீரிலும் நிலத்திலும் கலந்து வாழும் அந்த உயிர்ப்பிராணிகள் இன்றும் வாழ்கின்றன. பாம்பு, ஆமை, சங்கு, நத்தை முதலியன அந்த இனத்தைச் சேர்ந்தவைதாமே? இவை நீரிலும் வாழ்கின்றன; நிலத்திலும் ஊர்கின்றன. தொல்காப்பியனார் இந்த இனத்தைத்தான் 'நந்தும் முரளும்' எனக் குறிக்கின்றார் போலும்! மீனும் நீரில் வாழும் உயிராயினும், அது காலத்தால் பிந்திய ஒரு வளர்ச்சியாய் இருக்கலாம். நந்தும் இப்பியும் தோன்றுமுன் இருந்த கடல்வாழ் உயிர்களுக்கும் இன்றைய கடல் வாழ் உயிர்களுக்கும் எத்தனையோ வேறுபாடுகள் இருந்திருக்கக்கூடும். மீனினை நந்து இப்பிக்கு முன் கூற முடியாதன்றோ? அவை கண்ணறிவு பெற்றனவாயும் உள்ளனவே! எனவேதான்

மரத்தை அடுத்து, நத்தையையும் இப்பியையும் தொல்காப்பியர் கூறுகின்றார். மீன் இனம் பின்வரும் பிற இனங்களின் கிளையிலேயும் பிறப்பிலேயும் அடங்கும் போலும்!

தரையில் ஊர்ந்தும், நீரில் நெளிந்தும் செல்லும் அத்தகைய பாம்பு, நத்தை முதலிய உயிரினங்கள் நெடுங்காலம் வாழ்ந்தபின், பறப்பனவும், நடப்பனவுமாகிய பிற பறவைகளும் விலங்கினங்களும் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றியிருக்க வேண்டும். ஒவ்வொரு தோற்றத்திற்கும் மாற்றத்திற்கும் இடையே ஊழிகள் பலப்பல கழிந்திருக்க வேண்டும். விலங்குகள் ஒன்றன்பின் ஒன்றாக வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இவற்றின் தோற்ற வளர்ச்சிகளையெல்லாம் பலப்பல ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து நன்கு எழுதிப் பல்வேறு நூல்களில் வெளியிட்டிருக்கின்றார்கள். அவற்றையெல்லாம் ஆழ்ந்து ஆராய முற்படுவோமாயின், நாம் எடுத்த பொருளைப்பற்றி எழுதுவது தடைப்பட்டு நிற்கும் என்பது திண்ணம். அவைபற்றியெல்லாம் இன்னும் தமிழில் எழுதப் படவில்லை என்பது உண்மைதான். உயிர்த்தோற்றங்களைப் பற்றிய குறிப்புகள் இங்கொன்றும் அங்கொன்றுமாக மேலே கண்டபடி நூல்களில் வருவதைத் தவிர்த்து, தனியாக உயிர்த்தோற்ற நிலைகளையும், அதன் வளர்ச்சியையும் வளர்ச்சியில் நேரும் பல்வேறு மாறுதல்களையும் விளக்கிக் காட்டும் நூல்கள் தமிழில் இல்லாமை ஒரு பெருங் குறைதான். எனினும், அவ்வகை நூல்கள் ஆங்கிலத்தில் நாள்தோறும் பெருகிக்கொண்டே வருவதை யாவரும் அறிவர். ஆங்கில அறிவும், அருந்தமிழ் ஆர்வமும், பணியில் விருப்பமும் கொண்ட நல்ல அறிஞர்கள், இத்துறையில் கருத்திருத்தி, இவைபற்றிய நூல்களைத் தமிழில் கொண்டு வருவார்களாயின், அவர்களுக்கும் நாட்டுக்கும் ஒருசேரப் பயன் உண்டு என்பது தெளிவு. நாம் இத்துறையை இந்த அளவோடு நிறுத்திக்கொண்டு, இனி மனிதனின் தோற்றத்தையும், அவன் வளர்ந்து வாழ்வை வளப்படுத்தும் விதத்தையும் காணல் வேண்டும்.

விலங்கின் அமைப்பின் எல்லையில் தோன்றியவன் மனிதன். மேலை நாட்டு ஆராய்ச்சியாளரான 'டார்வின்'[1] கொள்கைப்படி, மனிதன் குரங்கிலிருந்து தோன்றினன் என்பர். பலர் இத்துறையில் தம் கருத்தைச் செலுத்தி நல்ல ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டுள்ளனர். நம் தொல்காப்பியரும், 'மாவும் மக்களும்' பிணைக்கத் தக்கன என்னும் அளவில் குறித்துச் செல்கின்றார். ஆகவே, இதுபற்றி யாருக்கும் ஐயம் எழ இடமே இல்லை. 'மனித வளர்ச்சி'[2] என்ற ஆங்கில நூலில் அதன் ஆசிரியர் மனிதனது ஒவ்வோர் உறுப்பும் எப்படி விலங்கினத்தி லிருந்து வேறுபட்டு வளர்ச்சி அடைந்தது என்பதைக் காட்டு கின்றார். உறுப்புக்களில் மட்டும் மாற்றம் காண்பதோடு உணர்வு பிறக்கும் மனத் தோற்றத்தையும் மனிதப் பண் பாட்டின் மாற்றமெனத் தொல்காப்பியர் குறித்துள்ளார்; 'ஆறறி வதுவே அவற்றொடு மனனே,' என்று காட்டி, அந்த மன் அறிவே மனிதனை மற்றவற்றிலிருந்து பிரித்துக் காட்டு கிறது என்பதையும் விளக்கிவிட்டார். 'உறுப்பு ஒத்தல் மக்களொப் பன்றால்,' என்ற வள்ளுவர் வாக்கும் அது பற்றி எழுந்ததாய் இருக்கலாம். எனவே, மனிதன் பிற உயிரினத்தைப் போன்று உறுப்புக்களைப் பெற்றதோடு மனமும் பெற்றவனா கின்றான். நீரில் நீந்தியும் நெளிந்தும் வாழ்ந்து, தரையிடைத் தவழ்ந்தும் ஊர்ந்தும் வளர்ந்து, எட்டுக்கும் எட்டுக்கு மேற் பட்டும் கால்களைப் பெற்றுக் குறு நடையிட்டு, பின் நான்கு கால்களால் விலங்காகி நடந்து, இன்று இறுதியில் இரு கால்களால் நடக்கும் மனிதன், மற்றவற்றினும், தான் வேறு பட்டவன் என்பதைத் தன் மன அறிவு மூலமே எடுத்துக் காட்டுகின்றான். அவனது வளர்ச்சியையும் வாழ்க்கையையுமே நாம் அறிதல் வேண்டும்.

இதுகாறும் கூறியவற்றால் நீரிலும் நிலத்திலும் உயிர்கள் எவ்வெவ்வாறு தோன்றின என்பதும், அவற்றின் தோற்றக் காலங்கள் எவ்வெவ்வாறு அமைந்தன என்பதும், அவ்வுயிர்த்

1. Darwin 2. The Evolution of Man

தோற்றங்களைத் தமிழ் இலக்கியங்களும் தொல்காப்பியமும் எவ்வெவ்வாறு வரையறுத்து விளக்குகின்றன என்பதும், எல்லா உயிர்க்கும் இன்பம் பெறும் இயல்பு உண்டு என்பதும், உயிர் வளர்ச்சி அடைய அடைய, அதன் அறிவும் வளர்ச்சி யடைகின்றதென்பதும், உயிர்த்தோற்ற நாள்களை இவ்வளவு என வரையறுக்க முடியாவிடினும், உயிர்கள் எப்படிக் கால எல்லையில் ஒன்றையொன்று பற்றிப் பெருகின என்பதும், அறுவகை அறிவு எவை எவை என்பதும், அவற்றைப் பெற்ற உயிர்கள் எவை எவை என்பதும், அவை அவ்வவ்வறிவுகள் மூலம் எவ்வாறு ஒன்றை ஒன்று தொடர்ந்து வருகின்றன என்பதும், அவற்றின் இறுதியிலே விலங்காகிய குரங்கிலிருந்தே மனிதன் தோன்றினன் என்பதும், அம்மனிதன் அந்தப் பிற உயிரினங்களை உறுப்புக்களால் ஒத்தவனாயினும், மன அறிவால் அவற்றினும் வேறுபட்டவன் ஆகின்றான் என்பதும், அதனாலேயே மனிதன் அனைத்தினும் மேலானவனாய் விளங்கு கின்றான் என்பதும் நன்கு புலனாகின்றன. இனி அம்மனிதனின் வளர்ச்சியையும் வாழ்வையும் காண்போம்.

3. மனித வாழ்க்கை

ஆதி மனிதன் விலங்குகளிலிருந்து வேறுபட்டுத் தனித் தன்மையெய்திப் பிறந்து விட்டானாயினும், விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சிக்காக அவனை விலங்கினத்தில் சேர்த்தே தான் வைத்துள்ளார்கள். அவன் பூனை, நாய், குதிரை, ஆடு, மாடுகள் போன்றே பிறந்து தாய் முலைப்பாலுண்டு வளர்ந்து வருகிறான். அவ்வினத்தின் வழிச் சார்த்தி அவன் 'மம்மல்'[1] என்றே வழங்கப்பெறுகின்றான். அவ்விலங்கினத்தில் அவன் பெரும்பாலும் குரங்கைச் சார்ந்தவன் என்பது அனைவரும் ஏற்றுக்கொண்ட கருத்து. தோற்றத்தாலும், பிறந்து பாலுண்டு வளர்வதாலும் மட்டுமன்றி, இரத்தத்தாலுங்கூட மனிதன் வளர்ச்சிபெற்ற குரங்கினத்தைச் சேர்ந்தவன் என்பதே ஆய்வாளர் முடிவாய் உள்ளது. ஆப்பிரிக்கா நாட்டு வாலில்லாக் குரங்குகளைக்[2] கொண்டு அவர்கள் செய்த சோதனையின் முடிவே இது.

இம் மனிதனை விலங்கு என்றே கூறுவார்களெனினும், அவற்றினின்று பிரித்துச் சமூகமாக வாழும் மனித விலங்கு[3]

---

1. Mammal 2. Chimpanzee
3. Man is a social animal,

என்று இவனை வழங்குவார்கள். உயிரினங்களை ஆராய்ச்சி செய்யும் அறிஞர்கள் மனிதனையும் மற்ற உயிரினங்களோடு—சிறப்பாக விலங்கினங்களோடு—அவற்றினும் சிறப்பாகக் குரங்கினங்களோடு ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்கின்றார்கள். அவர்கள் அவ்வாராய்ச்சிமூலம் பெரு வேறுபாடுகளைக் கண்டார்கள் என்று சொல்ல இயலாது. மனிதனது அறிவுநிலைக்கேற்ற மூளை என்னும் தன்மை மற்றவற்றினும் வேறுபட்டிருக்கக் காணலாம். இவ்வாறு மனிதனைப் பற்றி ஆராய்கின்ற ஆய்வாளர்கள், பலவகையில் அவன் தோற்றத்தையும், வளர்ச்சியையும், வாழ்க்கை முறைகளையும் ஆராய்ச்சி செய்கின்றார்கள். அவற்றுள் அறிஞர் மூன்றினை முக்கியமாகக் கொள்வர். முதலாவது, மனிதனின் உடற்கூறுகளையும், அமைப்புக்களையும், அவ்வுடல் பற்றிய பிறவற்றையும் பற்றிய ஆராய்ச்சிகளைக் காண்பது. இரண்டாவது, மனிதன் தோன்றிய நாள்முதல் இன்றுவரை வளர்ந்துள்ள வளர்ச்சியைக் காண்பது. மூன்றாவது, மனிதனுக்கே உரிய, தொல்காப்பியர் வகுத்துக் கூறிய மனஅறிவை ஆராய்ந்தறிவது. இம் மூன்று வகையாலும் மனிதனை ஆராய்ந்தே அவனைப் பற்றிய ஆய்வாளர்களெல்லாம் பலப்பல நூல்களை எழுதியுள்ளார்கள். அவ்வாறு ஆராய்ந்த முடிவிலேதான், அவர்கள் படிப்படியாக மனிதன், மற்றவற்றின் சம்பந்தத்தால் வளர்ச்சியடைந்து, இறுதியில், தன் மனஅறிவால் உயர்ந்து, தன்னைப் பற்றியும் மற்றவற்றைப் பற்றியும் அறியும் நுண்ணிய ஆற்றல் பெற்று விட்டான் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

மனிதனைப் பற்றி அறியும்போது பல உண்மைகள் வெளியாகின்றன. அவன் உடலும் உள்ளமும் எவ்வாறு உருப்பெற்றன என்பதைக் காண்கின்றோம். அப்படிக் கண்டறியும் போது, மனிதன் தன்னை அறிந்தவனாகின்றான். தன்னை அறியும் அதே நிலையிலே, இத்தரணியில் வாழும் வாழ்க்கையைப் பற்றியும், அதன் தோற்றக் கேடுகள் பற்றியும், பிறவற்றைப் பற்றியும் பெரிதும் அறிந்து கொள்கின்றான். இயற்கையான இன்றைய வளர்ச்சியின் எல்லையில் நிற்கும் இவ்வுலகை அறிவ

தால், இவ்வண்ட கோளத்தின் தோற்ற அமைப்புக்களையும் கூறுபாடுகளையும், பிற இயல்புகளையும் அறிவது போன்றே, இன்றைய உயிரினத்தின் உச்சியில் சிறந்துள்ள மனிதன், தன்னை அறிவதன்மூலம், தனக்கு மூலகாரணமான உடற் கூறுகளையும், அவற்றை உருவாக்கிய பிற உயிர்த்தன்மைகளையும், அவற்றின் தோற்ற வளர்ச்சியையும், பிறவற்றையும் அறிந்துகொள்கின்றான். எனவே, மனிதன் தன்னை அறிவதன்மூலம் தரணியை அறிந்து கொள்கின்றான்.

ஒரு சீடன் ஞானம் கைவரப் பெறுவதற்கு அரும்பாடு பட்டானும். நாடும் காடும் சுற்றி நல்ல ஞானசிரியனைத் தேடித் தனக்கு வழிகாட்டுவார் இல்லையா என ஏங்கினானும். இறுதியில், ஒரு ஞானசிரியர் அவன்முன் தோன்றினாராம். அவன், தானும், தன் நிலையும் கெடாதிருப்பதற்காக, அல்லது மோட்சம் அடைவதற்காக ஒரு வழியைச் சொல்லுமாறு அக்குருவை வேண்டினானும். அவர் அதற்கு அதிகமாக ஒன்றும் பேசாமல், 'உன்னை நீ அறிந்தாயாகில் உனக்கொரு கேடு மில்லை; என்னை நீ கேட்கையாலே, ஈது உபதேசித்தேனே,' என்று கூறினாராம்; அதாவது, 'என்னை நீ கேட்பதால், நான் ஒன்றும் உனக்கு அதிகமாகச் சொல்லவேண்டுவதில்லை; உன்னை நீ அறிந்து கொள்வாயானால், அதுவே உனக்கு நன்மையாகும்,' என்றாராம். உடனே அவன் கோபங்கொண்டு, 'என்னைத்தான் சடமாய் உள்ளத்து எண்ணியோ சொன்னீர் ஐயா; தன்னைத் தான் அறியா மாந்தர் தரணியில் ஒருவர் உண்டோ?' என்று வினவினானும். தன்னை, அவர் இறந்த ஒரு பிண்டமாகக் கருதி அவ்வாறு பேசினார், என அவன் நினைத்துவிட்டான். மேலும், உலகில் தம்மைத்தான் அறிந்து கொள்ளாதவர் ஒருவரும் இல்லை என்பதும் அவன் முடிவு. பாவம்! அந்த வேகத்தில் —அறியாமையால்—அவன் அவ்வாறு பேசினான். பிறகு அவர் அவன் தோற்றத்தையும், கனவிலும் நனவிலும் வந்து செல்லும் வடிவையும், பிற வேறுபாடுகளையும் விளக்கிக் கூறி, உலகில் உண்மையில் தம்மைத்தாம் அறிந்தவர் ஒருவருமே இல்லை என்றாராம். பிறகு அவன் அறிவு வரப்பெற்றுத் தன்னை

ஆராயத் தொடங்கினுனும். இது கதையாய் இருந்தாலும், வேதாந்திகள் இக் கருத்தைத்தான் அதிகமாக ஆராய்கின்றூர்கள். வேதாந்த நூலாகிய கைவல்லிய நவனீதத்திலே இக்கருத்துக்கள் வருகின்றன. இதுபற்றியேதான், 'உன்னேயே நீ எண்ணிப்பாரு; இந்த உலகத்தில் எது சொந்தம்? யோசித்துக் கூறு,' என்ற நாடோடிச் சித்தர் பாடலும் எழுந்தது. இவையெல்லாம் சமயம் பற்றி எழுந்த கருத்துக்கள் என்றுலும், இவை அத்தனேயும் இன்று விஞ்ஞான உலகில் உண்மையாகி உள்ளதை நாம் காண்கின்றோம். வேதாந்தி இவற்றைச் சொல்லிவிட்டு அனைத்தையும் பொய்யென்று காலத்தைக் கழிக்கின்றுன். ஆனுல், விஞ்ஞானி அனேத்தையும் மெய்யென்று அவற்றின் தோற்றக் கூறுபாடுகளே ஆராய்ச்சி செய்கிறுன். இதுவே இருவருக்கும் வேறுபாடு. விஞ்ஞானத்திஞல் மனிதன் தன்னேப்பற்றி அறியத் தொடங்கினுன். மனிதன் எங்கிருந்து வந்தான்? அவன் யார்? அவன் யாரோடு சம்பந்தப்பட்டான்? அவன் அடிப்படை எங்கே? அவன் எதனுல் ஆக்கப்பட்டான்? இப்படி ஒன்றன்பின் ஒன்றுகக் கேள்வியை அடுக்கிக்கொண்டே சென்றுன் விஞ்ஞானி; கேள்வியை அடுக்கியதோடமையாது தனது ஆய்வுக் களத்தில் அமர்ந்து, அல்லும்பகலும் பாடுபட்டு, அவற்றிற்கு விடைகளேயும் காண முற்பட்டான். அதில் அவன் முழுக்க முழுக்க வெற்றி பெற்றுவிட்டான் என்று கூற முடியாவிட்டாலும், தன்னேப் பற்றியும், தன் வரலாற்றைப் பற்றியும், தன் முன்னேடிகளாகிய உயிரினங்களேப் பற்றியும் ஒருவாறு உணர்ந்து கொண்டான். இன்னும் முற்றும் ஆராய்ந்து, முடிவில் குறையற்ற வகையில் தன்னே அவன் உணர்ந்து கொள்வானுயினுன். ஒருவேளே அவ் வேதாந்தி கூறியபடி தனக்கு ஒரு கெடுதலும் இன்றி என்றும் நிலேத்திருக்கக் கற்றுக் கொள்வானே என்று எண்ண வேண்டியுள்ளது. எப்படியாயினும், விஞ்ஞானக் கண்கொண்டு உலகத் தோற்ற முதல் இன்றைய மனித வாழ்வுவரை ஓரளவு வரையறுத்துக் காட்டக்கூடிய நல்ல அறிவுடைய மக்கள் இடையில் நாம் வாழ்வது ஒரு பேறேயாகும்.

இனி, அம்மனித வாழ்வு உலகில் தோன்றி வளர்ச்சி அடைவதைப் பற்றிக் காண்போம். இப் பரந்த உலகத்தில், மனிதன் எந்த ஒரு குறிப்பிட்ட இடத்தில் தோன்றினான் என்பது திட்டமாகக் குறிக்க முடியவில்லை. சிலர் 'எகிப்தின்' நைல் நதி தீரத்திலும், சிலர் திராவிட நாட்டுப் பகுதியிலும், சிலர் வேறு சில இடங்களிலும் மனிதர்கள் தோன்றினார்கள் எனக் கூறுகின்றனர். நிலத்தைத் தோண்டி ஆராய்ச்சி செய்யும் நிபுணர்கள், பலப்பல நாடுகளிலே பலப்பலவகையான மண்டையோடுகளைக் கண்டெடுத்து, அவற்றின் மூலம் அங்கு மனிதன் இத்தனை ஆண்டுகளுக்குமுன் இவ்வகையில் வாழ்ந்தான் என்று வரையறுத்துக் கூறுகின்றார்கள். ஒரே இடத்தில் அவன் தோன்றியிருப்பான் என்பதும், ஒரே சமயத்தில் உலகின் பல பாகங்களில் அவன் தோன்றியிருக்கக்கூடும் என்பதும், அவர்கள் பல்வேறு ஆராய்ச்சிகளால், புலனாகின்றது போலும்! எப்படியாயினும், மனிதன் இவ்வுலகத்தில் தோன்றிப் பலப்பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கழிந்திருக்க வேண்டுமென்பது உண்மை.

விலங்கினத்திலிருந்து மனிதன் தோன்றினான் என்பது உண்மையானமையின், அந்த மாற்றம் மெதுவாகத்தான் நடந்திருக்க வேண்டும் என்று கொள்ளல் வேண்டும். திடீரென ஒரு நாள், விலங்காய் இருந்த ஒன்று, மறுநாட்காலையில் மனிதனாக மாறிவிட்டது என்று யாரும் கூறமாட்டார்கள். அப்படி மனிதன் மாறிய அந்தக் காலத்தில் அவன் மன உணர்வு உடனே தோன்றியிராது; மிருக உணர்வே மனித உணர்வினும் மேம்பட்டிருக்கும். அவன் உண்ணும் உணவும் மிருக உணவினைப் போன்றே அமைந்திருக்கும். அந்த ஆதி மனிதனுக்கு ஆடையும், அறு சுவையும் அறியாப் பொருள்கள்; வீடும் வாசலும் விளக்க முடியாதவைகள். எங்கோ, காட்டிலும் மலையிலும் கண்டபடி விலங்கெனவே அவன் வாழ்ந்திருக்க வேண்டும். கண்டதைத் தின்று காட்டு விலங்கோடு விலங்காகவே அவன் வாழ்ந்திருக்க வேண்டும். அவன் தனக்கெனப் பிற சுற்றமும் மற்றைய சார்புகளும் அக்காலத்தில்

அமைத்துக் கொண்டிருக்க இடமில்லை. கூடி வாழ வேண்டும் என்ற மனப்பான்மையே அவனுக்கு அப்போது தோன்றி யிராது. இன்று, அவன் ஒரு சமுதாயச் சார்பான விலங்காய் இருந்தாலும், அந்த ஆதி நாளில், அவன் சமுதாயம் என்பதையே அறியாதிருந்தான். ஆடையால் தன்னை மறைக்க வேண்டும் என்ற உணர்வோ, அறிவால் தன்னைத் துலக்க வேண்டும் என்ற நிலையோ, அந்த நாளில் அவனுக்கு இல்லை. எப்படியோ விலங்கினத்திலிருந்து தான் வேறுபட்டவன் என்ற உணர்வு சிறுகச்சிறுக அவனுக்கு உண்டாயிருக்கும். அந்த உணர்வு அரும்பிப் பூத்துக் காய்த்துக் கனியான காலம் எத்தனை எத்தனை ஆயிரம் ஆண்டுகளோ! யாமறியோம்! பகலெல்லாம் எங்கோ சுற்றித் திரிந்து, இரவெல்லாம் மிருகங்களைப் போன்று எங்கோ குகையிடை முடங்கிக் கிடந்திருப்பான் அந்த ஆதி மனிதன். அப்போது அவனுக்குத் தான் உயிரினத்தின் உச்சத்தில் இருப்பவன் என்பதும், தானே மற்ற உயிர்களை யெல்லாம் அடக்கியாள முடியுமென்பதும், தன் வாழ்வே சமுதாய வாழ்வாக அமையும் என்பதும் எப்படித் தெரியும்? பாவம்! அவன் விலங்கோடு விலங்காய், ஆனல் ஏதோ புது உணர்வு தோன்றிய ஒருவனுய், வாழ்ந்திருக்கவேண்டும்.

காலம் பல கழிந்து அவன் மனம் அவனுக்கு ஒன்றன்பின் ஒன்ருகப் பல உண்மைகளை உணர்த்தியிருக்கும். மனித வரலாற்றுக் காலத்தை, வரலாற்று ஆசிரியர்கள் பலப்பல வகையாகப் பிரித்திருக்கிருர்கள். கற் காலம், இரும்புக் காலம், செம்புக் காலம் என்று, அவன் வாழ்ந்த காலத்தை யெல்லாம் கணக்கிட்டிருக்கிருர்கள். எனினும், அக்காலங்களுக்கு முன் எல்லாம் அவன் வாழ்ந்துதான் இருக்கிருன் என்பதையும் உணரவேண்டும். உணர்ந்த வரலாற்று ஆசிரியர்கள், 'வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட மனிதன்' என்று அவனைப் பற்றிக் கூறியுள்ளார்கள். எனவே, வரலாற்று எல்லையைக் கடந்தும் அவன் வாழ்ந்தான் என்பது தெளிவு.

உடலால் வேறுபட்டது போன்று, உள்ளத்தாலும் வேறு பட்ட மனிதன், அந்த உள்ள உணர்ச்சிவழி சிந்திக்கத்

தொடங்கியிருப்பான். காட்டிலும், சோலையிலும், மலையிலும் விலங்குகளோடு விலங்காய் வாழ்ந்த அவன், ஒரு மூலையில் உட்கார்ந்து எண்ணியிருப்பான். அவன் எண்ணத்தின்வழி தன்னைப்பற்றிய உணர்வு பிறந்திருக்கும். அந்த உணர்வு அவனுக்கு, தான் உயர்ந்தவன் என்ற எண்ணத்தைத் தோற்று வித்திருக்கும். ஆகையால், அவன் பிற விலங்கினின்றும் வேறு பிரிந்து வாழ எண்ணியிருப்பான்; அதற்கெனத் தனிக் குகை களை நாடி வாழ்ந்திருப்பான்; பின்னர் அந்தக் குகைகளைப் போன்றே குடிசைகளைக் கட்டக் கற்றுக் கொண்டிருப்பான். அக் குடிசை வாழ்வே முதலாவதாக அவனை விலங்கினின்றும் வேறு பிரித்து வைத்திருக்கும்.

உணவு வகையிலேயும் அவன் உள்ளம் சிந்தனை செய்திருக் கும். எப்படியோ சுற்றித் திரிந்து, எதையோ தேடி அந்த வேளைக்கு உண்டநிலை போக, கிடைத்ததைக் கொண்டுவந்து தான் அமைத்த குடிசையில் வைத்துக்கொண்டு, பசி எடுத்த போது உண்ணப் பழகியிருப்பான் அவன். அந்தப் பழக்கத் தினாலேயும் அவன் விலங்கினத்திலிருந்து நெடுந்தூரம் வந்து விட்டிருப்பான். எறும்பு போன்ற சில உயிர்ப் பொருள்கள் தம் உணவுப் பொருளைச் சேர்த்து வைப்பது என்பது உண்மை தான். எனினும், விலங்கினம் அப்படி என்றும் தனது நாளை வாழ்வைப் பற்றி எண்ணி அதற்கென ஆயத்தம் செய்யும் வழக்கம் இல்லையே! ஆம்! மனித வாழ்வின் விடி வெள்ளியாய் 'நாளை வாழ்வு' என்ற உணர்வு பிறந்தது. 'நாம் இன்று மட்டு மன்றி, நாளையும் வாழப் போகின்றோம். எனவே, நாளைக் கென்று நாம் சேர்த்து வைக்கத்தான் வேண்டும்,' என்ற எண்ணம் மனிதனை விலங்கினத்திலிருந்து இன்னும் நெடுந்தூரம் கொண்டுவந்து விட்டது எனலாம்.

இவ்வாறு தனித்து வாழ விரும்பிய மனிதன், தன்னை மற்றவற்றினிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள விரும்பி யிருப்பான் அல்லனோ! தன்னைப் பற்றியும், நாளையைப் பற்றி யும் நினைக்கும் அளவிற்கு வளர்ந்துவிட்ட மனிதன், வாழும் பொருட்டுத் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள நினைத்திருப்பான்.

கொதிக்கும் வெயிலுக்கும், கொட்டும் மழைக்கும் அஞ்சித் தனித்துக் குடிசை அமைத்துக்கொள்ள அவன் மனம் அறிவுறுத்தியிருக்கும். கண்டதைக் கொல்லும் காட்டு விலங்குகளிலிருந்து அவன் தனியே வாழவும் விரும்பியிருக்கக் கூடும். ஆம்; எப்போது, 'தான்' என்ற உணர்வும், 'நானே, தனது' என்ற எண்ணங்களும் தோன்றிற்றோ, அப்போதே தனித்து வாழவேண்டும் என்ற உணர்வு பிறந்திருக்க வேண்டும். அந்தத் தனித்த வாழ்வின், உணர்வின் பயனே இன்று மாட மாளிகைகளாகவும், நாடு நகரங்களாகவும், நமக்குக் காட்சியளிக்கின்றன. அன்றைய சிறு குடிசைகளின் தொடக்கமே இப் பெரிய அரண்மனைகளுக்குக் கால்கோட் கட்டடங்களாய் அமைந்தன எனலாம். தனியே உட்கார்ந்த மனிதனுக்கு மேலும் சிந்தனை செய்வது இயல்புதானே!

குடிசை அமைத்து, பிற விலங்குகளால் கொடுமை நேராதபடி அதற்கு வாயில் அமைத்து, அதை மூடவும் கற்றுக் கொண்ட மனிதன், மேன்மேலும் சிந்திக்கத் தொடங்கினான். வெளியே செல்லும் காலத்து வெறுங் கையோடு சென்றால், பிற மிருகங்கள் தனக்குத் தீங்கிழைக்கும் என்பதை அவன் உணர்ந்தான். அந்தக் கொடுமையிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள நினைத்த எண்ணத்தில், தனக்கு ஆயுதங்கள் தேவை என்ற நினைப்புப் பிறந்திருக்கும். அந்த நினைவின் வழியே, தன் கையில் அகப்பட்ட கல்லையும் முள்ளையும் தனக்கு ஆயுதங்களாகப் பயன்படுத்தியிருப்பான். கூரிய கற்களையும், மிருகங்களின் கூரிய எலும்புகளையும், பிற முட்களையும், அவன் தனக்கு ஆயுதங்களாக அந்தக் காலத்தில் உபயோகித்திருப்பான். பிறகு அந்தக் கல்லையும் முள்ளையும் கூர்மையாகத் தீட்டிக் கொள்ளக் கற்றுக் கொண்டான் அவன். அதன் மூலமே ஆயுதங்கள் உலகில் உண்டாயின என்று கொள்ளவேண்டும்.

ஆயுதங்களுக்காக மட்டுமன்றி, உணவு முதலியன சேமித்து வைப்பதற்கும் கற்பாத்திரங்களை அவன் பயன்படுத்தியிருக்கக்கூடும். குழிந்த சுனைகளிலும், கற்பாறைகளிலும் மழை பெய்யும் காலத்தில் தண்ணீர் தேங்கியிருப்பதைக் கண்ட

அவன் உள்ளம், அதுபோன்ற சிறு கற்பாறையுள் தன் குடிசையில் நீரைத் தேக்கி வைத்துத் தன் தேவைக்குப் பயன் படுத்தச் செய்தது. அதைப் போன்றே, தன் உணவுப் பொருள்களையும் சேர்த்து வைக்கச் செம்மைப் படுத்தப்படாத பாத்திரங்களை அவன் உபயோகப்படுத்திக் கொண்டான். அந்தக் கல் ஆயுதங்களையும், கற்பாத்திரங்களையும் அவை போன்ற பிறவற்றையும் கொண்டே வரலாற்று ஆசிரியர்கள் அவன் வாழ்ந்த அந்தக் காலத்தைத் தம் வரலாற்றில் 'கற்காலம்' என்று குறித்துக் கொண்டார்கள். அக் கற்காலத் திலும் 'முதலாம் கற்காலம்', 'இரண்டாம் கற்காலம்' என்று சில கற்காலங்களைச் சிலர் குறிக்கின்றனர். எப்படியோ அந்த ஆதி மனிதன், தான் வாழவேண்டும் என்ற தன் உணர்வு பிறந்த அந்தத் தொடக்க நாளில், கற்களையே தன் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களாவும், தன்னைப் பாதுகாத்துக்கொள்ளப் பயன்படும் ஆயுதங்களாகவும் கொண்டான் என்பது தேற்றம்.

அந்த ஆதி காலத்தில் மனிதன் தனியாக வாழ்ந்தானு அன்றி மனைவியோடு வாழ்ந்தானு என்ற கேள்வி எழவே இடமில்லை. தனியாக வாழ்ந்திருப்பானுயின், அவன் செத்த அன்றைக்கே மனித இனமும் கட்டாயம் மறைந்திருக்கும். சாதாரண ஓரறிவுடைய உயிர் தொடங்கி ஆண் பெண் கலப்பின்பம் உண்டென்பதை மேலே கண்டோம். அந்த நிலையில் ஆதிமனிதன் மட்டும் அதற்கு எப்படி விலக்காக முடியும்? விவிலிய நூலில் கூறிய 'ஆதாமும் ஏவாளும்' என்ற கதை ஆதி மனிதன் தன் காதலியோடு எவ்வாறு வாழ்ந்தான் என்பதைக் காட்டுகிறது. அதைக் கொண்டாலும், விட்டாலும், எப்படியும் மனிதன் மனைவி மக்களோடு வாழ்ந் திருந்தான் என்பதை மட்டும் மறுக்கமுடியாது. முதலில் தோன்றியவர் பெண்ணு, ஆணு என்றெல்லாம் இங்கு நாம் ஆராய வேண்டா? எப்படியோ விலங்கினத்தினின்று மன உணர்வு பெற்ற மனிதன், தான் தனித்து வாழாது, பெண்ணி னத்தைத் தழுவி, தன் மனித இனத்தைப் பெருக்கிக் கொண்டே, அதே வேளையில் தனக்கு முதற்காரணமாயிருந்த

விலங்குகளை விட்டுச் சிறுக சிறுக வேறு பிரிந்து சென்று கொண்டே, துன்ப மற்று வாழக் குடிசை அமைத்தும், தற்காத்து வாழப் படை தேடிக்கொண்டும் வாழ்ந்து வந்தான் என்பது தேற்றம். அப்படிக் கற்காலத்து மனிதன் எத்தனை எத்தனை ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தானோ? வரலாறு அதை இன்னும் திட்டமாக முடிவு செய்யவில்லை.

கற்காலத்துக்குப் பின்பு இரும்புக் காலமும், செம்புக் காலமும், பிற காலங்களும் ஒன்றன்பின் ஒன்ருக வந்து கொண்டேயிருந்தன. அவற்றிலெல்லாம் மனிதன் வளர்ச்சி அடைந்துகொண்டே வந்தான் என்பது பொருந்தும். இன்று, இந்த இருபதாம் நூற்ருண்டில் வாழ்கின்ற மனிதனுக்கும் அந்த ஆதி மனிதனுக்கும் எத்தனையோ வேறுபாடுகள் இருந்திருக்க வேண்டும். இந்த இரண்டு கோடிகளுக்கு மிடையே மனிதன் எத்தனையோ மாறுதல்களைப் பெற்றிருக்க வேண்டும். அவை பற்றியெல்லாம், வரலாற்று ஆசிரியர்களும், உயிர்ப் பொருள் ஆராய்ச்சியாளர்களும், பிறரும் ஆராய்ந்து கொண்டேதான் இருக்கிருர்கள். எங்கெங்கோ கிடக்கும் எலும்புகளையும் மண்டை ஓடுகளையும் கண்டு, அவ்வவற்றிற்கு உரிய மனிதன் இன்னின்ன காலத்தில் வாழ்ந்திருக்க வேண்டும் என்று கணக்கிட்டுச் சொல்லுகிருர்கள். எது எப்படியாயினும், தோன்றிய அந்த நாள் தொட்டு, மனிதன் சிறுகச் சிறுக, மாறி மாறி வளர்ந்துகொண்டேதான் இருக்கிருன் என்பது உண்மை.

முதல் மனிதன், பெற்ற உணவினை அப்படி அப்படியே தின்று வந்தான் எனக் கொள்ளவேண்டும். அக்காலத்தில் அவனுக்கு நெருப்பு உபயோகிக்கத் தெரியாது. நெருப்பு இருந்த போதிலும், அது காடுகளை அழிப்பதை அவன் கண்டிருப்பான்; மக்களை அல்லது விலங்குகளை அடியோடு ஒரு சேரப் பொசுக்கி அழித்ததை அவன் பார்த்திருப்பான். ஆனல், அந்தப் பொல்லாத பெரு நெருப்பு, உணவுப் பொருள் களைத் தன் நாக்குக்கு உருசியாக ஆக்கித் தரக்கூடிய ஒன்று என்பதை அவன் உணர்ந்திருக்க நியாயமில்லை. மேலை நாட்டு

அறிஞரான 'லாம்பு'[1] என்பவர் சீன மக்களின்மேல் வைத்து எப்படி மனிதன் முதல் முதல் நெருப்பில் மாமிசத்தைப் பொசுக்கிச் சுவை பார்க்கக் கற்றுக்கொண்டான் என்பதைக் காட்டுகின்றார். ஏதோ எதிர்பாராத விதமாக, வாழ்ந்த குடிசை பற்றிக்கொள்ள, அதில் அகப்பட்ட பன்றிக்குட்டிகள் இறந்தனவாம். அவை அப் பெருநெருப்பில் நன்கு வெந்தன போலும்! அவற்றை எடுக்கப் பையன் அவற்றைத் தொட்டான். உடனே சூடு அவன் விரலைச் சுவை பார்த்தது; அச் சூட்டைப் பொறுஞய் விரலை வாயில் வைத்தான். அந்தப் பன்றியின் இறைச்சி விரலில் பட்டிருக்க வேண்டும். அது வாயில் பட்டவுடனே மிகவும் உருசியாக இருக்க அப்படியே அதை முழுதும் சுவைத்துத் தின்றுனும். பின்னர் அது அவன் அப்பனுக்கு, ஊராருக்கு, நீதிபதிக்கு, பின்னர் நாட்டிற்குப் பரவிற்றும். 'லாம்பு' இதைக் கதையை வேடிக்கையாகக் கூறின போதிலும், இது அப்படியே நடந்த ஒன்று அன்று என்றாலும், மனிதன் நெருப்பினைத் தன் உணவுப் பொருளுக்குப் பயன் படுத்தியது திடீரென ஒரு வகையிலேதான் அமைந்திருக்க வேண்டும் என்பதை விளக்க வரும் ஒரு சான்று யமைகின்ற தன்றோ? ஆய்ந்தோய்ந்து அமைந்த பின்னரே அதை அவன் பயின்றான் என்று கொள்ளுதல் இயலாது. எப்படியோ நெருப்பினை உண்ணும் உணவு சமைக்கப் பயன்படுத்திக் கொண்டான் மனிதன். ஆனல், நெருப்பு அவனுக்கு அதற்கு முன்னும் பயன்பட்டிருக்க வேண்டும். அவன் வாழும் குகையிலோ, குடிசையிலோ அவன் கண்உறங்கும் இராக்காலத்து வேற்று மனிதரும் விலங்கும் வாராதிருக்க, வாயிலும் கதவும் அமைக்கக் கற்றுக் கொள்ளாத முன், இந்நெருப்பினைத் தடையாக மூட்டித் தன்னைப் பாதுகாத்துக் கொண்டிருக்கலாம். எப்படியோ நெருப்பு அவன் வாழ்வில் நெடுங்காலத்துக்கு முன்பே இன்றியமையாத பொருளாகிவிட்டது. கற்காலத்தைப் போன்றே அவன் வாழ்க்கை வரலாற்றில் நெருப்புக்காலம் என்ற ஒன்று இருந்திருக்க வேண்டும். நிலமும், நீரும்,

1. Lamb

காற்றும் அதற்கு முன்பே அவன் வாழ்வில் பின்னிப் பிணைந்தன.

காட்டிலும் குகையிலும் தனித்தனியாய் வாழ்ந்த மனிதர்கள் ஒருவரை ஒருவர் கண்டிருப்பார்கள். உருவத் தாலும் பிற அமைப்புக்களாலும் அவர்கள் தம்முள் ஒத்தவர் என்ற உணர்வு பிறந்திருக்கும். எனவே, ஒருவரோடொருவர் கலந்திருக்க வேண்டும். அப்படிக் கலக்கும்போது, அவர்கள் எந்த மொழியைப் பேசினார்கள் என்பதை நாம் அறியோம். நல்ல காலமாக அவர்கள் காலத்தில், இன்றைய நாகரிக உலகத்தில் காணும் மொழி வெறியும், காழ்ப்பும், பொருமையும், வஞ்சகமும் நிச்சயம் இருந்திரா. எடுத்த எடுப்பிலேயே அவர்கள் ஏதாவது திருந்திய ஒரு மொழியைப் பேசினார்கள் என்று கூறிவிட முடியாது. அவர்கள் பேச்சு வெற்று ஆரவாரமாகத்தான் இருந்திருக்கும். விலங்குகளும் பறவைகளும் கத்துவதையும் கீச்சிடுவதையும் அவர்கள் கேட்டும் கண்டும் இருப்பார்களல்லரோ? அவற்றைப் போன்று தாமும் தத்தம் கருத்துக்களை வெளியிட ஓசைக் குறியீடுகளை வைத்துக்கொண்டு மிகு நெடுங்காலம் வாழ்ந்திருக்கவேண்டும். ஓசையும் ஒலியும் அவர்தம் வாழ்வில் பிற பொருள்களைப் போன்று இன்றியமையாதனவாகிவிட்டன. ஒரு காலத்தில், எப்படியோ ஒருவரை ஒருவர் கலந்து அறிந்து கொண்டபின், அந்த ஓசைக்கும் ஒலிக்கும் உருவம் கொடுத்திருப்பார்கள். பின்பு அவர்கள் கலந்து பிரிந்து உலகின் பல பாகங்களிலும் சென்று சேர்ந்தபோது, அவர்தம் மொழிகள் பலப்பலவாகப் பெருக ஆரம்பித்திருக்க வேண்டும். அவற்றைப் பற்றிப் பின்னே காண்போம்.

தனித்து வாழ்ந்த மனிதன் சேர்ந்து வாழவேண்டும் என்று கருதியிருப்பான். அதற்கேற்ற இடங்களை நாடியிருப்பான். கொடிய காட்டு விலங்குகளோடு விலங்காகக் காட்டில் வாழ்வ திலும், சற்றுப் பரந்துள்ள சமவெளிகளின் மேட்டு நிலங்களில் வீடுகள் கட்டிக்கொண்டு வாழ அம்மனிதன் மற்றவரோடு திட்டமிட்டிருப்பான். நல்ல குடிநீரும், பிற வசதிகளும்

பெருகியுள்ள நதிக்கரைகளைத் தனக்கு வாழ்க்கையிடமாக அவன் அமைத்துக் கொண்டிருப்பான். அதனாலேதான் உலகத்தின் நாகரிக வளர்ச்சியை ஆராயும் ஆராய்ச்சி யாளர்கள், 'நாகரிகங்கள் நதிக்கரைகளில் வளர்ச்சி அடைந்தன,' என்று கூறுகின்றார்கள். எகிப்திய நாகரிகம் நைல் நதியைச் சுற்றிய சமவெளியில் உருவாகிய ஒன்றன்றோ? சிந்து சமவெளி நாகரிகமும், காவிரிக் கரை நாகரிகமும், மெசபடோமிய நாகரிகமும், சுமேரிய நாகரிகமும், சீன நாகரிகமும் அனைத்தும் ஆற்றை அடுத்து வளர்ந்த நாகரிகங்கள் தாமே! அவ்வந் நிலப்பரப்பில் அன்று ஓடி வளம்பெருக்கிய பேராறுகள் இன்றும் வற்றாது வளஞ்சுரக்கின்றனவன்றோ? இன்றைய உலக நாகரிகங்கள் அனைத்தும் அவ்வாறே ஆற்று வழி அமைந்தன என்பர் ஆய்வாளர்.

காட்டிலும் மலையிலும் வாழ்ந்த மனிதன் ஆற்றங்கரைக்கு வாழ வந்தான். அங்கேதான் அவன் வாழ்க்கை செம்மைப் பட்டது என்று கூறலாம். கண்டதைத் தின்றவன், அந்த உணவுப் பொருளை நெருப்பிலிட்டுப் பொசுக்கி உண்ணக் கற்றுக்கொண்டதோடு அமைந்து நின்றிருக்க மாட்டான். ஆற்றங்கரையில் வந்து அமர்ந்ததும் அவன் அறிவு வேலை செய்யத் தொடங்கியிருக்கும். கரை புரண்டு ஓடும் வெள்ளம், பக்கத்தில் பரந்து கிடக்கும் சமவெளி, அவ்வெளியில் பரந்து வளர்ந்து கிடக்கும் பசும்புல், அவற்றை மேயவரும் ஆடு மாடுகள், இவை அனைத்தும் அவன் சிந்தனையைக் கிளறி விட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. அந்தப் பொருள்களை யெல்லாம் எண்ணி எண்ணி, ஆராய்ந்த உள்ளத்தின் வழியே தான் அவன் உழவுத் தொழிலை அறிந்திருக்க வேண்டும். பரந்த வயல் வெளிகளும், பாய்ந்து வரும் வெள்ளமும், உழப் பயன் படும் மாடும் பிறவும், அவனுக்கு ஊக்கம் அளித்திருக்க வேண்டும். அவற்றின் வழியே அவன் நிலத்தை உழுது பயிர் செய்யக் கற்றுக்கொண்டான். அதனால் பெறும் தானியங் களைத் தனக்கு உணவுப் பொருளாகச் சேமித்து வைத்துக் கொண்டான். சில நாள் வருந்திப் பாடுபட்ட போதிலும், சில

நாள் அமைதியாக இருக்கும் வாழ்வு அவனுக்கு அதன்மூலம் கிட்டிற்று. அவனுக்கென்று மாடும் செல்வமும் வயலும் வளனும் சொந்தமாயின. முதலில் ஒரு சிலரே இத் துறையில் ஆற்றங்கரைகளில் குடியேறிப் பாடுபட்டுப் பயனடைந்திருப்பர். பின்னர், காலம் செல்லச் செல்ல, பல்லோர் அந்த இடங்களைத் தேடிப் பிடித்து, உழைத்து, அமைதியான வாழ்வில் தமக்கும் பங்கு உண்டு என்பதை நிலை நாட்டி, நாடுகளையும் நகரங்களையும் உண்டாக்கி யிருப்பர். அவர்தம் அரும்பெரு முயற்சிகளையும், செயல்களையும் நாடு நகரங்களையும் அவ்வப்போது பெரு வெள்ளங்கள் சீற்றம் மிகுந்து, அளவு கடந்து அழித்து, நிலை குலையச் செய்து விட்டபோதிலும், அவை—மறைந்தவையும் எஞ்சி வாழ்பவையும்—இன்றும் மனிதனது நாகரிக வளர்ச்சியைக் காட்டிக் கொண்டிருக்கின்றன. காவிரிப்பூம்பட்டினம் கடலால் கொள்ளப்பட்ட போதிலும், அதன் நாகரிகத்தையும் பிற நலத்தையும் நாடு மறக்கவில்லை. சிந்துவெளி நாகரிகத்தின் சின்னமாக மொகஞ்சதாரோ ஆரப்பா போன்ற நகரங்கள் மீண்டும் நிலமிசை அகழ்ந்தெடுக்கப்பட்டு வரலாற்றை விளக்குகின்றன. இப்படியே பிற நாட்டு ஆற்றங்கரை நாகரிகங்களும் இன்றளவும் வாழ்கின்றன.

காடும் மலையும் ஆற்றங்கரையும் மட்டுமன்றிக் கடற்கரைகளும் மக்கள் வாழ்விடங்களாய் அமைந்தன. பல பெரிய பட்டினங்கள் கடற்கரையில் அமைந்திருந்தன. இன்றும் உலகில் சிறந்தோங்கும் பட்டினங்களில் பலவும் கடற்கரையை ஒட்டியே அமைந்துள்ளன. நில வளத்தையும், காட்டின் இயற்கை வளத்தையும், மலை வளத்தையும் பெற்ற மக்கள், கடல் வளத்தையும் தமக்கு உரிமையாக்கிக்கொள்ளத் தயங்கவில்லை. அக் கடலில் உள்ள மீன்களையும் மணிகளையும் அவர்கள் கட்டு மரங்கள் மூலம் கடலில் சென்று, சேர்க்கத் தலைப்பட்டார்கள்; சேர்த்து நிலத்துக்குக் கொண்டு வந்து மாற்றுப் பண்டங்களாக விற்பனை செய்தார்கள். விற்பனை என்பது மனித வளர்ச்சியில் நெடுங்காலத்திற்குப் பின்னர் ஏற்பட்ட ஒன்று. தன் முயற்சியாலும் உழைப்பாலும் பெற்ற பொருளைக்

கொண்டு வாழ்ந்த முன்னைய மனிதன், அப்பொருள் தன்னிடம் தன் தேவைக்கு மேலே இருந்திருக்குமாயின், அதை மற்றவர் களுக்கு வாரி வழங்கியிருப்பான். பின் ஒரு காலத்தில் அப் பொருளை மற்றொருவரிடம் கொடுத்து, அதற்கு மாறாக அவரிடம் உள்ள தனக்குத் தேவையான வேறொரு பொருளைப் பெற்றிருப்பான் அவன். அதுவரையில் அவனுக்குத் தன் தேவைக்குமேல் சேர்க்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாகா திருந்திருக்கும். ஆயினும், காலமும் கருத்தும் வளரவளரத் தனக்கும் தன் குடும்பத்துக்கும் ஏதாவது சேர்த்து வைக்க வேண்டும் என்ற எண்ணத்திலே, தன் தேவைக்கு அதிகமான பொருளை ஏதாவது ஒரு விலைக்கு விற்க முனைந்திருப்பான். தன்னலம் என்ற உணர்ச்சி உருவான காலத்திலே அந்த விற்பனையும் உருவாகியிருக்கவேண்டும். 'மனிதன் தோன்றிய நாளிலே தன்னலம் இல்லையா?' என்ற கேள்வி எழும். அக் காலத்தில் அவனுக்குத் தன்னலம் என்ற உணர்வு ஒரு வழியில் அமைந்தது என்றாலும், அத் தன்னலம் மற்றவரிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற அந்த அளவுக் குத்தான் இருந்திருக்கும். பாம்பு முதலியனவும் பிற விலங்கு களும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கே—தற்காப்புக் காகவே—விஷம், நகம், பல் முதலியவற்றைப் பெற்றிருக் கின்றன என்பார்கள். அதுபோலவே, ஆதிமனிதன் மற்ற வற்றிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற அந்த அளவுக்குத் தன்னலக்காரனாயிருந்திருப்பான்; ஆனால், நாளாக ஆக, மற்றவரை மறந்து தானே வாழவேண்டும் என்ற தன்னலம் எப்படியோ அரும்பிவிட்டது. அப்போதுதான் தேவைக்குமேல் சேர்க்கவேண்டுமென்ற மனப்பான்மையும், பொருளாதார ஏற்றத் தாழ்வும், பிற வேறுபாடுகளும் மனிதன் வாழ்வில் தோன்றிவிட்டன. அவை என்று தோன்றினவோ அன்றுதொட்டு இன்றுவரை, மனிதன் பேய்போல அலைந்து கொண்டே இருக்கிறான். இது நிற்க.

மனிதன் தன் உணர்வு பெற்றபின் நிலத்தின் பல பாகங் களிலும் பிரிந்து சென்று வாழக் கற்றுக்கொண்டான்

என்றல்லவா குறித்தோம்? அவ்வாறு பிரிந்து வாழ்ந்தவர்கள் அங்கங்கேயே தங்கிவிட்டார்கள். அவரவர் சுற்றுச் சார்புகளும் பிற பண்பாடுகளும் அவரவர்களை வெவ்வேறு வழியில் இழுத்துச் சென்றுவிட்டன எனலாம். மலையில் வாழ்ந்தவன் அம் மலையின் சார்புக்கு ஏற்பத் தன் உணவு, உடை, வாழ்க்கை முறை முதலியவற்றை அமைத்துக்கொண்டான். காட்டில் வாழ்பவனோ, தன் சுற்றுச் சார்புக்கு ஏற்பக் கொடிய விலங்குகளை வேட்டையாடியும், வேறு வகையான சார்புகளுக்கு ஏற்பவும் வாழப் பழகிவிட்டான். ஆற்றங்கரையில் வாழ வந்தவனோ, அதன் சுற்றுச் சார்புகளுக்கு ஏற்ப, வயலில் உழுது வளம் பெருக்கி, மாட்டுச் செல்வத்தையும் பிற செல்வங்களையும் வளர்த்து, நாடு நகரங்களையும் அமைத்து, நலம் பெருக்கிக் கொண்டான். அதைப் போன்றே கடற்கரையில் வாழ்ந்த அந்த மனிதனும் கொந்தளிப்புக்கும் கொடுஞ் சூறாவளிக்கும் அஞ்சாது, கடலில் பாய்ந்தும் பிறவாறும் தன் வாழ்வை வரையறுத்துக்கொண்டான். இப்படித்தான் மக்கள் வாழ்க்கை உலகில் மலர்ந்திருக்க வேண்டும். இந்த வாழ்க்கையைத்தான் தமிழ்க் கவிதைகள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று நான்கு வகையாகப் பாகுபடுத்திப் பாராட்டி அவற்றில் மக்கள் வாழ்ந்த வாழ்வையெல்லாம் காட்டுகின்றன. அவற்றின் விரிவையெல்லாம் பின்னர் விளக்கமாகக் காண்போம்.

உலகின் பல பாகங்களிலும் பிரிந்து நின்று வாழ்வை அமைத்துக்கொண்ட மக்கள், தத்தம் கருத்தை உணர்த்தப் பேசிய மொழி எது? எல்லோரும் ஒரே ஆதி மனிதனிடத்திலிருந்துதான் தோன்றினார்களென்றால், அந்த ஆதி மனிதன் பேசிய மொழியைத்தானே இவர்களெல்லாரும் பேசியிருக்க வேண்டும்? ‘ஆம்’ என்று சுருக்கமாகப் பதில் சொல்லிவிடலாம். ஆனால், இன்றைய உலகில் ஒரே மொழியா பேசப்படுகின்றது? இப் பாரத நாட்டில் மட்டும் பல்வேறு மொழிகள் - சில திருந்தியனவாயும், பல திருந்தாதனவாயும்—எத்தனையோ மொழிகள் பேசப்படுகின்றனவே! உலக முழுவதிலும் நூற்றுக்கு மேற்பட்ட மொழிகள் உள்ளனவே! மொழிகள் மட்டுந்தானா!

அவற்றின் அடிப்படையிலே இருக்கவேண்டிய அமைதிக்கு மாருக ஆரவாரமும் வெறியுமல்லவா நாடுதோறும் நிறைந்திருக்கக் காண்கின்ருேம்? மொழி காரணமாகவே நாட்டில் கிளர்ச்சியும், கொந்தளிப்பும், கொலேகளும் நடக்கக் கூடிய அத்தகைய நாகரிக நாளில்—நாகரிக நாட்டில்—நாம் வாழ்கின்ருேமே! ஆயின், மொழி எப்படித்தான் வளர்ந்தது? இம்மொழிகளே ஆராய எத்தனேயோ கலேக்கழகங்கள் உள்ளன. மொழி வரலாற்றையும், வளர்ச்சியையும், அமைப்பையும் பற்றிப் பலப்பல நூல்கள் நாடுதோறும் வெளி வந்துகொண்டே யிருக்கின்றன. அவைகளேக் குடும்பம் குடும்பமாகப் பிரித்துள் ளார்கள். திராவிடக் குடும்பம், துரானியக் குடும்பம், இந்தோ-ஐரோப்பியக் குடும்பம் என்று மொழிகளுக்குள் எத்தனேயோ வகைவகையான குடும்பங்கள் தோன்றி வளர்ந்துவிட்டன. நம் தமிழ்மொழிதான் எவ்வெவ்வாறு பகுக்கப்பட்டது. கொடுந்தமிழ் வழங்கிய மலேயாள நாட்டில், இன்று தமிழொடு வேறு பட்டது என்று கொள்ளத்தக்க வகையில் மலேயாளம் வளர்ச்சி பெற்றிருக்கவில்லேயா? ஆம்; இத்தனை வேறுபாடுகள் எப்படித் தோன்றின? ஆதி மனிதன் இவ்வாறு மொழிவெறிச் சண்டையை வளர்க்கவா எண்ணியிருப்பான்? இல்லே—நிச்சய மாக எண்ணியிருக்க மாட்டான்.

ஆதி மனிதன் பேசிஞன் என்றுகூடச் சொல்ல முடியாது. அவன் தன் உள்ளக் கருத்தை உறுப்புக்களின் அசைவு மூலம் புலப்படுத்தியிருப்பான்; கையைக் காட்டியும், தலேயை ஆட்டியும் கருத்தை அறிவித்திருப்பான்; பிறகு, எப்படியாவது ஒலியை எழுப்பி, உள்ள உணர்ச்சியை புலப்படுத்தியிருப்பான் ஆதி மனிதன் தோன்றி நெடுங்காலத்துக்குப் பின்னரே பேச்சுப் பிறந்திருக்கும். அப் பேச்சும் எழுதாக் கிளவியாய் எத்தனே எத்தனே ஆயிரம் ஆண்டுகள் இருந்ததோ, அறியோம்! இன்றும் நாட்டில் எத்தனேயோ சிறு சிறு மொழிகள் எழுத்துக்கள் அற்றவையாயினும், ஆயிரக்கணக்கான மக்களால் பேசப்படுவதை நாம் அறிவோம். ஆகவே, அந்த முதல் மக்கள் கூட்டம் பேசிய மொழி திருந்தா மொழியாகத்

தான் இருந்திருக்கவேண்டும். எப்படியோ வருந்தி வருந்திச் சொற்களை ஒன்றன்பின் ஒன்ருக வரவழைத்துப் பேசி, மக்கள், தங்கள் கருத்தை மற்றவர்களுக்கு விளக்கியிருப்பார்கள். அன்று பேசிய அவர்தம் மொழிக்கு எழுத்தும் சொல்லும், யாப்பும் அணியும் இருந்திரா. இலக்கியங்களும் இலக்கண நூல்களும் அவர்கள் அறியாதனவே. எப்படியோ காலப்போக்கில் உதட்டில் உருவான மொழி—உள்ளத்தை உணர்த்தும் மொழி—சிறிதுசிறிதாக வளர்ச்சியுற்றது என்று கூறலாம். அந்த ஆதி மொழி எப்படிப் பல்கிப் பெருகிற்று?

மக்கள் ஒரே இடத்தில் தங்காமல், நெடுங்காலம் இடம் விட்டு இடம் சுற்றிக்கொண்டுதான் இருந்தார்கள். காடும் மலையும், வயலும் கடலும் அவர்கள் வாழ்வை அமைத்துக் கொள்ள வழி காட்டின என்பதைக் கண்டோம். அவ்வாறு பிரிந்து சென்ற மக்கள், அவரவர் தங்கிய சூழ்நிலைக்கு ஏற்ப, நாட்டு நிலைக்கு ஏற்ப, கால நிலைக்கு ஏற்பத் தத்தம் மொழிகளை வகுத்துக் கொண்டார்கள் என்று நினைக்க வேண்டும். மனிதன் எப்படிக் காலநிலையில் கட்டுப்பாடின்றி வளர்ந்துகொண்டே வருகின்ருனே, அப்படியே மொழியும் அவன் கட்டுப்பாட்டுக்கு உட்படாது, இயற்கைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப வளர்ந்து கொண்டேதான் வருகின்றது. இந்த இயற்கை நியதியினுலே தான் சில மொழிகள் தோன்றிச் சில காலமாயினும் விரைவில் வளர்ந்துகொண்டே வர, சில தோன்றி நெடுங்காலமாயினும், ஒரு நிலையில் நிற்பது போன்று அமைந்துள்ளன. இன்னும் சிலமொழிகள், தம் வளனும் வாழ்வும் பேச்சு வழக்கும் அற்று வீழ்ந்தும் விடுகின்றன. எத்தனையோ உயிரினங்கள் தோன்றி நிலைகெட்டும், மாறியும் வாழ்ந்தும் உள்ள அந்த நிலை, மொழிக்கும் பொருந்துவதாகும்.

பல்வேறு நாடுகளில் பல்வேறு சூழல்களுக்கு இடையில் மனிதன் வளர்த்த மொழிகளுள் சில நன்கு ஓங்கின; சில அழிந்து பட்டன; சில பேச்சு வழக்கில் உள்ளன; ஒரு சில, எழுத்து வழக்கில் உள்ளன. நெடுங் காலமாகியும் பேச்சு, எழுத்து என்ற இரண்டு வழக்கிலும் அழியாது வளர்ந்து

கொண்டே வரும் மொழிகள் ஒரு சிலவே. அவற்றுளெல்லாம். தமிழ் மொழி தலை சிறந்து விளங்குகின்றது என்று கூறினால், அது தற்பெருமையாகாது. உண்மை இது என்பதை மொழி நூற்புலவர்கள் நன்கு உணர்வார்கள். அத்தகைய மொழிகள் வளர எத்தனையோ ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் கழிந்திருக்க வேண்டும். மனிதன் மிருகமாகத் தனித்தனி வாழாது, சமுதாயமாகச் சேர்ந்து வாழ வழிசெய்த ஒன்று நம் மொழி தான். தங்களுக்குள் அமைந்த கருத்தைப் பரிமாறிக்கொள்ள உதவிய இந்த மொழியின் வளர்ச்சி, மனித இனத்தின் வளர்ச்சியை விட்டுப் பிரிக்க முடியாத ஒன்று. மொழிகள் இன்று ஒருசேர அழிந்தன என்னும் நிலை எதிர்பாராது உண்டாயின், அப்போதே மனித இனம்—மனித சமுதாயம்— இல்லை என்றுதான் கொள்ளவேண்டும். எனவேதான், மனித வாழ்க்கையில் மொழியும் இடம் பெறுகின்றது. எத்தனையோ காலம் பேச்சுவழக்கில் இருந்த மொழிகள், காலப் போக்கில் எழுத்தில் வரலாயின. ஒரே மொழியில் எழுத்துக்கள் காலப் போக்கில் மாறியுள்ளன. எழுத்துக்கள் உண்டானபின் எத்தனையோ ஆண்டுகள் கழித்தே, இலக்கியம் தோன்றியிருக்க வேண்டும். இவற்றை யெல்லாம் வைத்து நோக்கும்போது சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன் தொல்காப்பியம் காட்டியபடி திருந்திய இலக்கியமும் இலக்கணமும் நாட்டில் தோன்றிச் சிறந்திருந்தனவென்றால், அதற்கு முன் எத்தனை எத்தனை ஆண்டுகளாகத் தமிழ் மொழி தோன்றி வளர்ந்து சிறந்திருக்க வேண்டும் என்பது புலனாகும். இதுபோன்றே உலகில் தோன்றிய பிற மொழிகளுள் சிலவும், கால எல்லையைக் கடந்து மனித இனத்தோடு வளர்ந்துகொண்டே வருகின்றன. இன்று அம் மனித இன வாழ்வை அறிந்துகொள்ள வேறு பல பொருள்கள் உதவுகின்றன என்றாலும், அம் மொழிகளின் வழி எழுந்த இலக்கியங்களே பெரும்பாலும் உதவுகின்றன எனலாம். சிறப்பாக, நம் தமிழ் நாட்டில் வாழும் இலக்கியங்களே இன்று நம்முன் பண்டைத் தமிழர்தம் வாழ்வு, கலை, செல்வம், நாகரிகம் முதலிய அனைத்தையும் கொண்டுவந்து நிறுத்து கின்றன. அத்தகைய மொழிகள்—மனித வரலாற்றில் பின்னிக்

கிடக்கும் மொழிகள்—மேலும் சிறக்க என வாழ்த்து வோம்!

மொழியைப் போன்றே மனித வாழ்வில் கலந்துள்ளது நாகரிகம் என்பது. நாகரிகம் என்பது வெறுந் தோற்றத்தால் மட்டும் பெறப்படுவதன்று. மனித வாழ்வோடு பொருந்திய அந்த ஆதி நாள்தொட்டு வளர்ந்து வருவது அது. நாகரிகம், பண்பாடு, கலை முதலியன மனித வாழ்வில் நீக்க முடியாத இடம் பெற்றுள்ளன. ஆதி மனிதன் பெற்றிருந்த நாகரிகமும், பண்பாடும், கலை நலமும் நாம் திட்டமாக அறிந்துகொள்ள முடியாதன. அப்படி அறிய முடியாத காரணத்தினலேதான் அவனை வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட மனிதன் என்று கூறிவிட்டார்கள். ஆனல், அவன் வரலாற்று எல்லைக்கு உட்பட்டு வந்தபிறகு, அவனைப் பல்வேறு கோணங்களில் ஆராயத் தொடங்கி விட்டார்கள். மொழிக் குடும்பத்தை பல்வேறு வகையில் பிரித்த வகையிலேயே நாகரிகத்தையும் பல் வேறு வகைகளாகப் பிரித்தார்கள். எகிப்திய நாகரிகம், திராவிட நாகரிகம், சிந்து வெளி நாகரிகம், மத்திய ஆசியா நாகரிகம் என்று எத்தனையோ வகையாக நாகரிகங்களையும் பகுத்துப் பகுத்து ஆராய்ந்தார்கள். அந்தந்த நாகரிகங்களில் மனிதன் தனித்தனியாகச் சிறந்துதான் வாழ்ந்துள்ளான். நாகரிகம் என்பது மனிதனது பண்பாட்டை அடிப்படையாகக் கொள்வது. இன்று நாம், நாகரித்துக்குப் பல வகையில் பொருள் காண்கின்றோம். ஒரு சிலர் நகரங்களில் வாழ்வதை நாகரிகம் என்கிறனர். ஆனல், பண்டைத் தமிழ் நாட்டில் 'நஞ்சுண்டமைவர் நனி நாகரிகர்,' என்றும்,

> 'பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர்.' (குறள். 580)

என்றும் நாகரிகத்தைப் பண்பாட்டில் வைத்துப் பாராட்டிப் பேசுகின்றனர். இவற்றின் விரிவையெல்லாம் பின்னல் நாம் காண இருக்கின்றேமாதலின் இந்த அளவோடு இவற்றைப் பற்றி நிறுத்திக் கொள்வோம். இவ்வாறு மனித வாழ்க்கை

யில், மொழியும் நாகரிகமும் மட்டுமன்றிக் கலை முதலிய பிறவும் பங்கு கொள்ளுகின்றன. இக்காலத்தில் அவ்வந்நாட்டுக் கலை நலத்தையும் பிற பண்பாடுகளையும் ஆழ்ந்து அறிந்துகண்டு உலகுக்கு உணர்த்த ஒவ்வொரு நாடும் முன்னிற்கின்றது. அவ்வாறு மனிதனைப் பின்னிப் பிணைத்து வாழும் கலைச்செல்வங்களும் நம் நாட்டில் பல உண்டு. கலையே வாழ்க்கை என்னும் அளவுக்குச் சில சமுதாயங்கள் வாழ்ந்து வந்துள்ளன. இந்த மனித வாழ்க்கை முறையில் இன்னும் எத்தனையோ நற்பண்புகள் இடம் பெற்றுள்ளன. அவை யெல்லாம் விரிப்பின் பெருகும்.

இறுதியாக ஒன்றைமட்டும் கண்டு மேலே செல்வோம். ஆதி மனிதன் தோன்றி வளர்ந்த வரலாற்றைக் கண்டோம். அவன் வாழ்வோடு பின்னியவற்றையும் ஒருவாறு அறிந்தோம். எனினும், அவன் உள்ளத்தே தோன்றி வளர்ந்த மற்றொரு வாழ்வையும் காணல் வேண்டும். உயிர்த்தோற்றத்தின் உச்ச நிலையில் சென்று நின்ற மனிதன், தான் நினைத்தபடி பல காரியங்களைச் செய்திருப்பான்; விலங்கோடு விலங்காக வாழாமல் வேறுபட்டு, தான் உயர்ந்தவன் என்ற நிலையிலே மற்றவற்றை அடக்கியாள நினைத்து, அத்துறையில் கருத்திருத்தியிருப்பான்; பலவற்றைத் தான் நினைத்தபடியே நடத்தத் திட்டம் தீட்டியிருப்பான். காற்றையும் மழையை யும், கனலையும் புனலையும் அவன் கட்டியாளக் கருத்திருத்தி யிருப்பான். இன்றைய மனித சமுதாயம் அத்துறையில் கருத்திருத்தியிருப்பதை அறியாதார் யார்? தான் பிற உயிரினும் மேம்பட்டவன் என்ற எண்ணத்திலே ஆதி மனிதனும், அவனை ஒட்டிப் பின் வந்தவர்களும் பலப்பல செயல்களைச் செய்யத் துணிந்திருப்பார்கள். அச் செயல்கள் பல வற்றிலும் அவர்கள் வெற்றியும் பெற்றிருக்கலாம். என்றாலும், சிலவற்றில் அவர்தம் எண்ணம் கைகூடி யிராது. அக்காலத் தில் அவர் சிந்தனை சிறிது நீண்டிருக்கும். தான் எல்லா உயிரினும் மேலானவன் என்ற எண்ணத்தில் ஆற்றும் செயல் அனைத்தும் வெற்றி தருவதை விடுத்து, சிலவற்றில் தோல்வி

உண்டாவது அம்மனிதன் உள்ளத்து ஒரு விதப் புத்துணர்ச்சியைத் தோற்றுவித்திருக்கும். தான் எல்லா உயிரினும் மேம்பட்டவன் என்ருல், பின்பு ஏன் தான் தொடங்கும் எல்லாக் காரியத்திலும் வெற்றிபெற முடியவில்லை என்று சிந்தித்திருப்பான். தன் செயலைத் தடுக்கத் தன்னிலும் மேலான ஒன்று இருக்கத்தான் வேண்டும் என்ற உணர்வு பிறந்திருக்கும். அவ்வுணர்ச்சி பெருகப் பெருக, தனக்கு அறிய முடியாததாய்த் தன்னினும் மேம்பட்டதாய் ஒரு பொருள் இருக்கவேண்டும் என்ற உணர்வு அவன் உள்ளத்தில் பிறந்திருக்கும். ஆறுவது அறிவான மனத்தின் துணைகொண்டு, அவன் அந்த நெறியே நெடுந்தூரம் சென்றிருப்பான். அந்தச் சிந்தனையின் விளைவே, மனிதனுடைய, தனக்கு மேலும் ஒரு கடவுள் உண்டு என்ற உணர்வாகும்.

தனக்கு மேலும் தன்னுல் அறிய முடியாத ஒரு பொருள், தான் நினைத்ததை யெல்லாம் பெற முடியாமல் தடுக்கும் என்று உணர்ந்தபின் அவனுக்கு அதனிடம் அச்சம் ஏற்பட்டிருக்கும். அனைத்தினும் மேலான தன்னைக் கண்டு, விலங்கும் பறவையும் பயந்து செல்வது போன்று, தானும் அப்பொருளுக்கு அஞ்சி வாழவேண்டும் என்று கற்பனை செய்து கொண்டான். அதனுலேதான் சமயத்தின் தொடக்ககாலத்தில் அச்சத்தின் அடிப்படையில் அது வளர்ந்தது என அறிகின்ருேம். மிகு பழங்கால மனிதரின் சமயநெறி பெரும்பாலும் அச்சத்தின் அடிப்படையில் முளைத்ததுவேயாம். இறைவனுக்கு அடியவர் அஞ்சியும் அன்புபட்டும் தொண்டாற்றுகின்ருர்கள் என்பதை அப்பர் 'அஞ்சி யாகிலும் அன்புபட்டாகிலும், நெஞ்சம் வாழி நினை,' என்று நெஞ்சினுக்கு இறைவழிபாட்டின் நெறியினைக் காட்டுகின்ருர். இவ்விரண்டுள் அச்சம் வழியாக எழுந்த வழிபாடே முன்னையது. உலக சமய வரலாறுகள் அனைத்தும் இந்த உண்மையை வலியுறுத்தும் என்பது உறுதி. பழங்காலத் தேவதைகளின் வரலாறும், அந்தச் சிலைகளின் தோற்றமும் நம் நாட்டில் இன்னும் நிலைபெற்றுள்ளனவே. கிறித்தவ விவிலிய நூலின் பழைய ஏற்பாட்டில் நெருப்பு மழையைப்

பெய்வித்தல் முதலியவற்ருல் கடவுள் மக்களை அச்சத்தின் வழி திருத்த நினைத்தார் என்று கூறப்படுவன வெல்லாம் இந்நெறி யின் பாற்பட்டனவே. ஆதிமனிதனுக்குத் திருந்திய பண்பட்ட அன்பு இல்லாமையினுலேயே தனக்கு அவன் ஏற்ற வகையில் தனது கடவுள் நெறியையும் அமைத்துக்கொண்டான் என்பர் ஆராய்ச்சியாளர்.

இவ்வாறு அச்சங் காரணமாகத் தோன்றிய சமயம், நாளடைவில்—மனித உள்ளம் வளர வளர—அன்புச் சமயமாக மாறியிருக்கவேண்டும். எனினும், உலகில் மொழி விரிந் துள்ளது போன்றே சமயமும் விரிந்துள்ளதைக் காண்கின்ருேம். 'கடவுள் ஒருவரே' என்ற உணர்வு அன்றும் இன்றும் மாருமலே தான் போற்றப்படுகின்றது. ஆனுல், உலகில் இத்தனை வேறு பாட்டுச் சமயங்கள் இருப்பானேன்? இருப்பதோடு மட்டுமா? எத்தனை சமயப்போர்கள் வரலாற்றில் இடம் பெற்றுள்ளன! எத்தனை ஆயிரக்கணக்கான மக்கள் சமயப் போரால் நடை பெற்ற சண்டைகளில் செத்து மடிந்திருப்பார்கள்! ஏன்? நம் நாடு சமயத்தின் அடிப்படையிலே—அதனுல் விளைந்த கலகத் திலே—அதனுல் செத்த பல்லாயிரக் கணக்கான மக்களின் இரத்தத் தியாகத்திலே—இரண்டாக்கப்பட்டதே! ஒன்றிய சமய உணர்ச்சியெல்லாம் மாறி இப்படி உலகில் சமய வெறி கால் கொள்ளுவானேன்? நமக்கு இங்கு அந்த ஆராய்ச்சிகளெல்லாம் தேவையில்லையானமையின், அவற்றை விடுத்து, பொதுவாக மனிதனது பண்படாத தீ நெறி பொருந்திய மனந்தான் இந்தக் கொடுமைக்கெல்லாம் காரணம் என்பதை மட்டும் சுட்டிக் காட்டி மேலே செல்வோம்.

தனக்கு மேல் ஒருவன் உண்டு என்று அறிவதே சமய வாழ்வு என்று கண்டதும், அப்படிக் கண்டதில் மனிதன் மற்ருெரு நன்மையையும் தேட நினைத்தான். தனக்கு மேல் ஒருவன் இருந்து, தான் செய்யும் நன்மை தீமைகளைக் கண்டு, அவற்றுக்கு ஏற்ற பரிசோ தண்டனையோ தருவான் என்ற உணர்விருப்பின், தான் தவறி மற்றவருக்குத் தீங்கிழைக்க முடியாது என்ற உணர்வினில் உலகில் நல்லவனுக வாழவும்,

சமயம் வழி வகுக்கும் என்றே, அவன் சமய வாழ்க்கையை வளர்த்துக் கொண்டிருக்க வேண்டும். அதன் வழியே, மற்றவருக்குத் தீங்கிழைத்தால் இறைவன் தண்டிப்பான் என்ற உணர்விலேயே, நரகம் முதலியவற்றையும் கற்பனை செய்து கொண்டான். எனினும், அவன் சமய வாழ்வின் அடிப்படையினின்று நெடுந்தூரம் சென்றுவிட்டான் என்பது உண்மை. ஆயினும், இன்றும் அம் மனித வாழ்வில் பிற அனைத்தும் பின்னிக் கிடப்பன போன்று, இச் சமயவாழ்வும், அவன் வேண்டினும் வேண்டாவிடினும், விடாமல் பின்னித்தான் கிடக்கின்றது. எனவே, மனித வாழ்க்கையை ஆராயின் அவனது சமயத்தை விட்டுவிட்டு ஆராய்தல் என்பது இயலாது. இவ்வாறு தோன்றிய நாளிலேயிருந்து மனிதன் பல்வேறு வகையில், உள்ளத்தாலும் பிறவற்றாலும் மாறியும், திருந்தியும், வளர்ந்தும் இன்றைய நிலைக்கு வந்துள்ளான் என்பது தேற்றம்.

இவ்வாறு அணுவினும் சிறியதாகிய பொருளிலிருந்து, தோன்றிய நாள் தெரியாத அந்த நெடுங்காலந்தொட்டு, சிறிது சிறிதாக இன்றைய நிலையில் மனிதன் வளர்ச்சியடைந்துள்ளான். இன்றைய மேலைநாட்டு விஞ்ஞானிகள் இம் மனிதனை இடையில் வைத்துச் சென்ற காலத்தின் அருமையையும், இனி வருங்காலத்தின் திறத்தையும் ஆராய்கின்றார்கள். பரந்த அண்டகோளத்தின் எல்லையையும், அவற்றில் தோன்றும் விண்மீன்களின் அளவையும், அனைத்தினும் சிறிதாகிய அணுவுக்கணுவாகிய பொருளின் நிலையையும் கலந்து கணக்கிடுகின்றார்கள் இன்றைய விஞ்ஞானிகள். மனிதனது வாழ்க்கையும், வாழ்வுக்காலமும் எப்படி அமையினும், அவன் தோற்றத்தின் அளவு அண்டகோளத்தின் இடைப்பட்ட அளவு என்பது அவர்தம் முடிவு. இதையே முடிந்த முடிபு என்று கொள்ளாவிட்டாலும், இன்றைய விஞ்ஞான வளர்ச்சி அந்த அளவிலேதான் அவன் அறிவிடை நிற்கின்றது என்று கொள்ளலாம்.[1] காலப்போக்கில் மேலும் ஆய்வு நடக்க நடக்க இந்த அளவு மாறினும் மாறலாம். அவர்கள் இன்று கண்ட அளவுதான் என்ன?

எடிங்டன் என்ற ஆய்வாளர் தமது, 'விண்மீனும் அணுவும்'[1] என்னும் எழுத்தில், இந்த அளவினை ஒருவாறு காட்டியிருக்கிறார். மனிதன் அணுவுக்கும், வானில் தோன்றும் ஒரு சாதாரண அளவுள்ள விண்மீனுக்கும் இடையில் நிற்கின்றான் என்கிறார். அணுவின் நிலையைப்போல பத்தின் இருபத்தேழு பெருக்கு (10^{27}) பரிமாணம் இன்றைய மனிதன் நிலை. அதைப் போன்றே மனிதன் தோற்ற நிலையைப்போன்று பத்தின் இருபத்தெட்டுப் பெருக்குப் (10^{28}) பரிமாணம் ஒரு விண்மீனின் அளவு என்றும் அவர் குறிக்கின்றார். இதைப் போன்றே, ஐன்ஸ்டைன்[2] கொள்கையின் அடிப்படையில் சூரியன் ஓர் இடைப்பட்ட இலக்காக நிற்கின்றான் என்கின்றார் ஹக்ஸ்லி[3] என்பார். எப்படி மனிதன் அணுவுக்கும் விண்மீனுக்கும் இடையில் ஓர் அளவுகோலாக அமைகின்றானோ, அப்படியே சூரியன் பரந்த அண்டகோளத்துக்கும், நாம் காணும் பருமரத்துக்கும் இடையில் ஓர் அளவுகோலாக நிற்கின்றான் என்கின்றார். அஃதாவது, சூரியன் மரத்தைப் போன்று 10^{24} மடங்கு விரிந்ததாகின்றது. இன்னம் மற்றொரு வகையில் அணுவுக்கணுவாகிய எலெக்டிரானுக்கும்[4] அண்டகோளத்து இடையில் உலகில் காணும் மனித சமுதாயத்தின் தோற்ற அளவையே வைக்கின்றார். தனி மனிதனுடைய அளவு எவ்வாறு அணுவுக்கும் விண்மீனுக்கும் இடையில் நிற்கின்றதோ, அவ்வாறே உலகில் வாழும் பலகோடி மக்கள் அனைவரின் பருவுடல் அளவு அனைத்தும் ஒன்று சேரின், அது அத்துகளுக்கும் அண்டகோள எல்லைக்கும் இடையில் நிற்கின்றது. அஃதாவது, உலகில் வாழும் எல்லா மக்களின் பருவுடல் சேர்க்கையில் மொத்த அளவு) அணுத்துகளிலும் எத்தனை மடங்கு பெரியதோ அதே அளவு பெரியது எல்லா மனித உடல் சேர்க்கையின்

1. EDDINGTON—Stars and Atoms
2. EINSTEIN
3. JULIAN HUXLEY—Man in the modern world (p. 80)
4. ELECTRON

அளவினைக் காட்டிலும் இந்த அண்ட கோளத்தின் அளவு எல்லை என்பதாகும். இவற்றின் விரிவையெல்லாம் விஞ்ஞானிகள் பற்பலர் நாள்தோறும் ஆராய்ந்துகொண்டே இராப்பகலற்று, ஓய்வு ஒழிவு அற்று, பல உண்மைகளை உலகுக்கு உணர்த்திக்கொண்டே இருக்கின்றார்கள். ஒப்புமைப் படுத்தப்பெறும் இந்த எண்ணிக்கையின் அளவு, நம் சிந்தைக்கு எட்டாத ஒன்றாகும். நாம் முன்கண்ட பரிபாடல் என்னும் பழம்பாட்டில் கால எல்லைக்கு அப்புலவன் குறித்த ஏதோ ஒரு பேரெண் என்ற அளவிலேதான் எண்ணி அமையவேண்டியுள்ளது. 10^{27} பங்கு என்ற கணக்கு, பார்ப்பதற்குச் சில எண்களால் ஆகியதுபோன்று தெரிகின்றது. ஆனால், அதை விரிவு படுத்திக் காணின், எழுதிக் காணின், கோடி கோடி கோடி கோடி எண்ணுக்கும் அப்பால் செல்லுவது புலப்படும். அதை எந்த எண்ணால் சொல்வது? இதைத்தான் அந்தப் பரிபாடற் புலவன், மனிதனது எண்ணிக்கையின் குறியீட்டில் அடங்காது என்று 'செய்குறியீட்டம் கழிப்பிய வழி முறை' என்று குறித்துச் சென்றான். இவ்வாறு அணுவின் சிறு துகள் தொடங்கி அண்டகோளத்தில் அகன்ற பரப்பெல்லை வரையிலே உள்ள இடை எல்லைக்கு ஓர் எல்லையாக இன்றைய மனிதன் அமைகின்றான் என்ற ஆராய்ச்சி காணும் இக்காலத்தில், நாம் வாழ்வது ஒரு பேறுதான். ஆம், இந்த மனிதனே இவற்றையெல்லாம் கண்டு கணக்கிடுகின்றான். மேலைநாட்டு விஞ்ஞானிகளது திறனெல்லாம் அழிவு வேலைக்கன்றி, ஆக்கவேலைக்குப் பயன்படுமாயின், இன்னும் எத்தனையோ உண்மைகளை வெகு விரைவில் நாம் உணர்ந்துகொள்ள முடியும். உலகம் அவ்வழியில் கருத்திருத்தின் நலமுண்டு. நாம் இதுபற்றிய கருத்தை இந்த அளவோடு நிறுத்தி, அந்த மனிதனுடைய வாழ்வு நெறி, எவ்வாறு அமைகிறதென்பதை இனிக் காண்போம்.

இதுவரை கூறியவற்றால், மனிதன் விலங்கிலிருந்து பிரிந்தும் அவன் சமூக விலங்காக வாழ்ந்தான் என்பதும், அவன் வெற்று உடலால் மட்டும் வளர்ச்சியடையாது உள்ளத்

தாலும் வளர்ச்சியடைந்தான் என்பதும், தோன்றிய ஆதி மனிதனிலிருந்து மனித சமுதாயம் மெதுவாக வளர்ந்து உலகில் பல பாகங்களிலும் சென்று வாழ்ந்ததென்பதும், தானே உயர்ந்தவன் என்ற எண்ணத்தில் மனிதன் தனது வாழ்க்கையை விலங்கின் வாழ்க்கையிலிருந்து வேற்று வகைக்கு மாற்றிவிடும் நாடும் பிற நலங்களும் தேடிக் கொண்டான் என்பதும், தன்னையும் தன்னைச் சேர்ந்தோர்களையும் காக்க, ஆயுதம் முதலியவற்றை ஆக்கிக்கொண்டான் என்பதும், அவை காலந்தோறும் வளர்ச்சி அடைந்தன என்பதும், அவன் வாழ்வு வளம்பெற வளம்பெற உலகில் நால்வகை நிலங்களிலும் அவன் சிறந்திருந்தான் என்பதும் அவனது சமூக வளர்ச்சியில் மொழியும் கலையும், நாகரிகமும் பண்பாடும், சமயமும் பிற நல்லியல்புகளும் வளர்ச்சியடைந்தன என்பதும், அவற்றொடு கலந்து இன்றைய மனிதன் வாழ்கின்றான் என்பதும், அம் மனிதனே அணுத்துகளுக்கும் அண்ட கோள எல்லைக்கும் இடையில் நடு எல்லையில் அமைகின்றான் என்பதும், அறிந்து கொண்டோம். தமிழர்கள் இத்துணை வாழ்க்கை வகைகளையும் நன்கு துய்த்து ஆராய்ந்து அறிந்து அவ்வாழ்வை இரண்டு வகை யாக பிரித்து வாழ்வு நடத்தினார்கள் என்பது நாடறிந்ததே. அவ் வாழ்க்கைப் பிரிவுகளே அகம் புறம் என்பன. அடுத்து அவைபற்றிக் காண்போம்.

4. அகமும் புறமும்

நிலப்பரப்பிலே மக்களினம் தோன்றி வளர்ந்த அதே வகையில் இங்கும் தமிழ்நாட்டில் மனிதஇனம் வளர்ந்து வந்தது. தமிழ் நாட்டில் மக்களினம் தோன்றிய காலத்தைத் திட்டமாக வரையறுக்கக் கூடவில்லை. தமிழ்நாட்டில் உள்ள திராவிட நாகரிகம் மிகுதொன்மை வாய்ந்ததென்று வரலாற்று ஆசிரியர் அனைவரும் ஒருசேரக் கூறுகின்றனர். சிலர் மனித இனமே இங்கேதான் முதன் முதல் தோன்றியிருக்க வேண்டும் என்றும் கூறுவர். எப்படியாயினும், நம் தமிழ்நாட்டில் மக்க ளினம் வரலாற்று எல்லைக்கு உட்படாத நெடுங்காலத்துக்கு முன்பே தோன்றியிருக்க வேண்டும் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஓர் இனம் தோன்றி வளர்ந்துள்ள வரலாற்றை அது வாழும் நாட்டுக் காவியங்களும், கலைகளும் விளக்கிக்காட்டும் என்பர். அவ்வாறாயின், தமிழில் உள்ள இலக்கியங்களும், தமிழ்நாட்டில் உள்ள கலைகளும் இந்நாட்டு மக்களினத்தின் தொன்மையைக் காட்டப் போதிய சான்றுகளாகும். ஒரு நாட்டில் திருந்திய இலக்கியங்கள் உள்ளன எனின், அவ் விலக்கியம் தோன்றும் காலத்துக்கு முன் அது எத்தனையோ வகையில் மாறுபட்டிருக்க வேண்டும். அத்தனை மாற்றங்

களுக்கு முன் எழுத்தும் சொல்லும் தோன்றியிருக்க வேண்டும். அவற்றையெல்லாம் தொகுத்துச் செம்மையான முறையில் அமைக்கப்பட்ட ஓர் இலக்கண நூல், ஒரு நாட்டில் இருக்கு மாயின், அந் நாட்டுப் பழமையை அதுவே பறை சாற்றும். எனவே, சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றிய தொல்காப்பியத்தின் நிலையைக் கொண்டே தமிழின் தொன்மையையும் தமிழரின் வரலாற்றையும் வரையறுக் கலாமன்றோ?

மொழிக்கு இலக்கணம் வகுத்த பிற நாட்டாரெல்லாம் எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் கண்டார்கள், மொழி அவற்றால் ஆக்கப்படுகின்றமையின். அதன்பின் அம் மொழிக்கு அழகு செய்யும் யாப்பும் அணியும் அவற்றோடு சேர்க்கப்பட்டன. ஆனால், அம் மொழியால் விளக்கமுறும் பொருளுக்கு இலக் கணம் கண்டார் எம்மொழியிலும் இலர். தொல்காப்பியரோ பொருளுக்கெனப் பேரிலக்கணம் வகுத்துவிட்டார். அதுவும் வெற்று இலக்கணம் என்ற வகையில் அமையாது, தமிழர்தம் வாழ்வை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது போன்று அமைந்துவிட்டது. தொல்காப்பியம் தமிழர் வாழ்வைத் தனித்தனிப் பலவகையில் அலசி ஆராய்ந்து விளக்கமாக நமக்கு எடுத்துத் தந்துவிட்டது. எனவே, தமிழர் தம் வாழ்க்கை முறையை அறிவதில் கடினமான நிலை ஒன்றுமில்லை. அவர்தம் நாட்டு வாழ்க்கையினையும் வீட்டு வாழ்க்கையினையும் தனித் தனியாகப் பிரித்து, அவற்றின் வேறுபாடுகளையும் கூறுபாடு களையும் அலசி ஆராய்ந்து, 'இஃது இன்ன தன்மைத்து' என்று ஒவ்வொன்றையும் தொல்காப்பியர் எடுத்துக்காட்டும் நிலை, அறிந்து இன்புறத்தக்க ஒன்றாகும்.

தொல்காப்பியம் இலக்கண நூல். தொல்காப்பியரே தம் நூலில் பலவிடங்களில் கூறியது போன்று, அவருக்கு முன் பெரியார் பலர் இவ் வாழ்க்கையைப் பற்றியும், பிறவற்றைப் பற்றியும் எழுதிவைத்துச் சென்றிருப்பர். அவர்தம் ஆசிரியர் அகத்தியர் காட்டியவாறு, இலக்கணம் இலக்கியத்தினின்று

ஏற்படுவதாகும். எனவே, தொல்காப்பியம் போன்ற திருத்திய ஓர் இலக்கண நூல் தமிழில் உண்டாயிருக்க வேண்டுமாயின், அதற்குமுன் எவ்வளவு இலக்கிய நூல்கள் உண்டாயிருக்க வேண்டும்? ஆம்; பல இருந்திருக்கும். ஆயினும் அவற்றை யெல்லாம் இன்று நாம் பெறவில்லை. அவை ஊழிகளால் கொள்ளை கொள்ளப்பட்டிருக்கும். எனினும், கால வெள்ளத்தைக் கடந்து நிற்கும் தொல்காப்பியமும் அதை ஒட்டி எழுந்த சங்க இலக்கியங்களும் நமக்குத் தமிழர் வாழ்வை இன்றும் எடுத்துக் காட்டிக்கொண்டுதான் இருக்கின்றன.

தொல்காப்பியர் மக்கள் வாழ்க்கையைப் பின்னர்ப் பொருளதிகாரத்தில் பிரிப்பதன் முன்பே, தமிழ் மொழியின் இலக்கணத்தையே மனிதவாழ்வை ஒட்டி அமைத்துள்ளார் எனலாம். அவர்தாம் அவ்வாறு அமைத்தாரா, அன்றி அவ்வாறிருந்த மொழியின் இலக்கணத்தைத்தான் அழகுபடப் புனைந்தாரா என்பதை நாம் ஆராய வேண்டா. வாழ்வினைத் துய்க்கும் உயிர்த்தோற்றத்தை எழுத்துக்களின் மேல் வைத்து எழுதியிருக்கும் சூத்திரங்கள் எண்ணற்பாலன. உயிரும் மெய்யும் கூடிய வழிதான், மனிதனும் பிற விலங்குகளும் தோன்றுகின்றன. அவற்றின் வாழ்வும் பிறவும் இவ்விரண்டும் இயைந்திருத்தலாலே அமைகின்றன. மெய் வேறு உயிர் வேறாக இருப்பின், உடலைப் பிணம் என்போம். உயிரையோ, காண இயலாது. இரண்டும் வெவ்வேறான பொருள்களாயினும், அவை சேர்ந்தாலன்றி உலகில் வாழ்க்கையில்லை. இவற்றை யெல்லாம் எழுத்துக்களின் அமைப்பின்மேல் வைத்து ஆசிரியர் தொல்காப்பியர் கூறும் திறன் சிறந்தது. இக் காலத்தில் தமிழ் நலம் பேணும் ஆராய்ச்சியாளர் பலர் தமிழ் மொழி, மனிதன் வாழ்வை ஒட்டி அமைந்த மொழியென்றும், எழுத்துக்களும் அவ் வாழ்வை ஒட்டியே அமைக்கப்பட்டுள்ளனவென்றும், அவற்றை ஒரு சிறிதும் மாற்றலாகாது என்றும் வாதிப்பதைக் காண்கின்றோம். ஆயினும், அதுபற்றிய ஆராய்ச்சியை இங்கு நாம் கொள்ளாது, தொல்காப்பியர் எழுத்துக்களின் வழியே உயிர்த்தோற்றத்தின் வாழ்வைக் காட்டுவதைக் காண்போம்.

உயிர் தனித்து இயங்கும் ஆற்றல் இல்லாதது. அது போன்றதே உடலும். உயிர் உள்ளது என்பதை நாம் வெட்ட வெளியில் காண இயலாது. அது உண்மையையும் இன்மையை யும், அவ்வுயிர் உடலோடு கலக்கும் காலத்தும், நீங்கும் காலத்துந்தான் அறிகின்றோம். ஆகவே, தனித்து உயிரைக் காண இயலாவிடினும் அதை மெய்யோடு கலக்கும் காலத்தில் உணர்கின்றோம். இந்த உண்மையினை உயிர்மெய் எழுத்தின் இலக்கணம் கூற வருங்காலத்தில் தொல்காப்பியர் குறிக் கின்றார்.

'மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே'

என்பது சூத்திரம். இது இலக்கணச் சூத்திரம் என்பதை மறந்து, நாம் மேலே கண்ட உயிர்த்தோற்ற அமைப்போடு ஒத்து நோக்கின், உண்மை நன்கு புலப்படும். உயிர் தானே தனித்து எங்கும் தோன்றுவது இல்லை. அது எந்த ஓர் உடம்பிலாவது ஒன்றித்தான் தோன்றும். 'செல்' அல்லது 'அமீபா'[1] தொடங்கி, இன்றைய மனிதன்வரை இது உண்மையன்றோ? உடல் எத்தனையோ வகையில் மாறி மாறி வந்துள்ளது. ஆனால், அந்த உடல்களிலெல்லாம் பொருந்தித் தோன்றும் உயிரைப்பற்றி நாமொன்று மறியோம்—உயிர் ஒரு மெய்யைப் பற்றித்தான் தோன்றுகிறது என்ற ஒன்றைத் தவிர. இந்த உண்மையை அச்சூத்திரம் 'ஏ' காரம் கொடுத்துத் திட்ட மாக எடுத்துக் காட்டுகின்றது.

இனி, இவ்வாறு பல்வேறு மெய்களோடு பொருந்திவரும் உயிரின் நிலைதான் என்ன? உடம்பு அழிகின்றது. உயிர் அழிகிறதா? இல்லை என்பதே அனைவருடைய உடன்பாடும் ஆகும். எல்லாச் சமயங்களும் உயிர் அழியாத ஒன்று என்று தான் கூறுகின்றன. 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்.' என்ற திருமூலர் வாக்கினைக் காட்டிச் சிலர், 'அவர் உயிர் அழிவினையும் கூறியுள்ளாரே?' எனலாம். ஆனால், அந்த அடியினையும், அதை ஒட்டி வருகின்ற அடிகளையும், உயிர்

1. Cell or Amoeba

பற்றிய அவர்தம் பாடல்களையும் நோக்குவோமாயின், அவர் அழிவு என்ற சொல்லுக்கு நிலைகெடுதல் என்ற பொருளே கொள்ளுதல் விளங்கும். இன்றும் வாழ்வில் மிகவும் கெட்டுச் சீரழிந்த ஒருவனை 'அவன் அழிந்தான்' என்று கூறுவதைக் கேட்கவில்லையா? அந்த நிலையில் அழிதல் நிலைகெடுதலைக் குறிப்பதாகுமே அன்றி, அடியோடு கெட்டதாக முடியாதே!

உயிர் நிலைகெடாத ஒன்று என்பதை மேலே கண்டோம். சிலர் மெய்யோடு சேர்ந்த வழி உயிரும் தன் இயல்பு கெடுகின்றது என்பர். சமயவாதிகள் உயிரும் மெய்யும் கலக்கும் காலத்து ஆற்றும் வினைக்கேற்ப, உடல் அழிந்தபின் உயிர் அவ்வினையை அனுபவிப்பதையே அழிதல் என்பர். எந்த நிலையாயினும், உயிரின் தோற்றநிலை திரிவது இல்லை. இவற்றை யெல்லாம் மேலே கண்டோம். உயிர் எந்த உடம்பில் சேர்ந்து தோற்றமும் வளர்ச்சியும் பெறினும் தன்னிலை கெடாததாய், என்றும் உள்ள ஒன்று. இதை உயிர்மெய் எழுத்தின் அளவின் நிலை கூற வந்த விடத்திலே தொல்காப்பியனார் 'மெய்யொடு இயையினும் உயிர் இயல் திரியாது,' (9) என்று நன்கு எடுத்துக் காட்டுகின்றார். முன் சூத்திரத்தை நாம் நினைத்தபடி இதுவும் இலக்கணச் சூத்திரம் என்பதை மறந்து, உயிர்நூற் புலவர் கண்ட ஓர் உண்மைச் சூத்திரம் என்று கொள்வோமாயின், இன்றைய உயிர்நூற் புலவர்தம் ஆராய்ச்சிகள் பல இதில் அடங்கியிருப்பதைக் காண்போம். இவ்வாறு பிறப்புப் பற்றியும், மெய்ப்பாடு, மரபு முதலிய இயல்புபற்றியும் பலப்பல உண்மைகளை—உயிர் பற்றிய வாழ்க்கை முறைகளை—தொல்காப்பியர் காட்டிக்கொண்டே செல்கின்றார். அவற்றை யெல்லாம் வாய்ப்பு நேருமேல் பின்னர்க் காண்போம்.

தமிழர் வாழ்க்கையைப் பொருளதிகாரத்தில் கூறவந்த தொல்காப்பியனார், அவ்வாழ்க்கையையே இரண்டாகப் பிரிக்கின்றார். இன்பம் என்பது எல்லா உயிர்க்கும் பொது என்று அவர் குறித்திருப்பதை மேலே கண்டோம். அந்த இன்பத்தை மக்கள் துய்க்கும் வழிவகைகளை யெல்லாம், அவர் நன்கு ஆராய்ந்து காட்டுகின்றார்; நாட்டிலேயும் ஏட்டிலேயும் தம்

காலத்தில் நிலவிய வாழ்க்கை முறைகளையெல்லாம் நூலில் தொகுத்துத் தருகின்றார். மனிதன் எவ்வாறு காட்டிலேயும் மலையிலேயும் தனித்தும் கூடியும் வாழ்ந்து, பின்னர்க் கடற் கரையிலும் ஆற்றங் கரையிலும் அமைந்து வாழ்ந்தான் என்பதைக் கண்டோம். அந்த நால்வகை நிலத்தில் வாழ்கின்ற மக்கள்தம் வாழ்வினை யெல்லாம் இவர் தனித்தனியாக எடுத்துக் காட்டுகின்றார். வீட்டில் காதன்மனையாளும் காதலனுங் கலந்து வாழும் இன்ப வாழ்வையும், நாட்டில் அனைவரும் கலந்து செயலாற்றும் பிற வாழ்வையும் பாகுபடுத்திக் காட்டுகின்றார். மனிதன் இவ்வுலகில் தன் வாழ்வுக்கு இன்றியமையாதன வெனக் கொண்டவை மூன்று. அவை, 'அறம், பொருள், இன்பம்' என்பன. சிலர் பின்னர் உயிர் செல்வதாகிய 'வீடு' என்ற ஒன்றையும் குறிப்பர். அது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின், இவ்வுலகில் பெறும் இம் மூன்றைப் பற்றியே தொல்காப்பியர் விளக்கமாகக் கூறுகின்றார். இவ்வுலகில் அறத்தாற்றின் பொருள் பெருக்கி, இன்பம் துய்த்து, தானும் வாழ்ந்து, உலகையும் வாழவைக்கும் வகைகளை யெல்லாம் விளக்குகின்றார்; அந்த வாழ்வில் வழிவழியாக வந்த பொருள்களையும் சொற்களையும் மரபு பிறழா வகையில் வகைப் படுத்தியும் அடுக்கியும் காட்டுகிறார். இப்படி எல்லாவற்றையும், எல்லாப் பொருளையும் வாழ்வொடு பொருத்திப் பொருத்திக் காட்டி, அவ்வாழ்வையே இரு கூறாகப் பிரிக்கின்றார். அவையே அகம், புறம் என்பன. இந்த இரண்டு பொருளும் ஏதோ ஒரு காலத்தில் இருக்கும்; மற்றொரு காலத்தில் இல்லாது கழியும் என்று கருதவேண்டாவென்றும், இவையே வாழ்க்கையாதலின், இவை எக்காலத்தும், உலகமும் உயிரும் வாழும் வரையிலும் நிலைபெற்று உள்ளன என்றும், இவ்வுலகமன்றி சமயத்தார் கூறும் வேறு உலகம் செல்லினும், அங்கும் இவை வழக்காறே என்றும் குறித்து, **'இமையோர் தேஎத்தும் ஏழ்கடல் வரைப்பினும் அவையில் காலம் இன்மையான'** என்றும் திட்டமாக வரை யறுத்துக் கூறுகின்றார் அவர்.

இனி, அவர் காட்டிய அகமும் புறமும் எவை என்று காண்பதே வாழ்க்கைக் கூறுபாடுகளை அறிவதாகும் எனக்

கொள்ளவேண்டும். முதலில் அகம் எத்தகையது என்பதைக் கண்டு மேலே செல்வோம். அகம் என்ற சொல்லுக்கு உள்ளிடம் என்பது பொருள். பிறருக்குப் புலப்படாததாய் உள்ளே நிற்பது மனிதனது ஆறுவது அறிவாகிய மனமன்றோ! அகம் என்றும், உள் என்றும் நாம் வாழும் வீட்டினைக் கூறுகின்றோம். தமக்கு அயலாராகிய பிறரை நோக்க, அவர்களுக்கு மறை விடமாகப் புலனுகாம விருப்பதாலேயே உள் வீட்டை அகமென்றும், அந்தப்புர மெனவும் வழங்குகின்றனர் போலும்! ஆனால், இந்த உள்ளம் யாராலும் அணுகிக் காண முடியாத ஒன்று. காதலர் இருவருள் ஒருவருக்கு ஒருவர் அங்கே இடம் தரலாம். 'இருவரும் மாறிப்புக்கு இதய மெய்தினர்' என்ற காதலர் நிலையை விளக்கும் கட்டம் சிறந்ததாகும். உண்மைக் காதல் வாழ்வில் உள்ளம் பரிமாறிக் கொள்ளுதல்தான் முதல் இடம். அந்த உள்ளத்தில் தன் காதலியோ, காதலனோ அமர்ந்துவிடுவானு யின், அந்த உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளும். அந்த இன்பத்தைத்தான் 'அகம்' என்றனர் ஆன்றோர். நினைத்தால் மகிழ்ச்சி பிறக்குமா? இந்தக் கேள்விக்கு வள்ளுவர் அழகாக விடை கூறுகின்றார்:

> 'உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
> கள்ளுக் கில்; காமத்துக்கு உண்டு; (குறள், 181)

என்கின்றார். தம் காதலரையும், அவரொடு பெற்ற இன்பத்தையும் எண்ணி மகிழ்தலும், ஒருவரை ஒருவர் கண்டு மகிழ்தலும் காதல் வாழ்வின் சிறந்த பண்புகள். வள்ளுவர் இங்கே அந்த இன்பத்தைக் 'காமம்' எனக் குறிக்கின்றார். காமம் என்பது பிற்காலத்தில் இழிந்த பொருளில் வழங்கி வந்த போதிலும், அது பண்டைநாளில் உள்ள மகிழ்தலாகிய உயர்ந்த பொருளிலேயேதான் வழங்கி வந்தது. வள்ளுவர் தம் இன்பத்துப் 'பாலுக்கே 'காமத்துப் பால்' என்றுதான் பெயர் வழங்கக் காண்கின்றோம். 'உயிர் தவச் சிறிது; காமமோ பெரிதே!' என்று காமத்தின் சிறப்பை யெல்லாம் பாராட்டும் சங்கப் பாடல்கள் எத்தனையோ! எனவே, காமம் என்பது

இழிபொருளைத் தருவதன்று. காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்ட, அந்த இன்பந்தான் காமம். அக்காம நுகர்வு இத்தகையது என உரையாசிரியர் நச்சினார்கினியர் தம் தொல் காப்பிய அகத்திணை இயல் முதல் சூத்திரத்திலேயே அழகாகச் சொல்லுகின்றார்.

"ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ் விருவரும் ஒருவருக்கொருவர் தமக்குப் புலனாக இவ்வாறிருந்த தெனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்து உணர்வே நுகர்ந்து இன்ப முறுவதோர் பொருளாதலின், அதனை அகம் என்றார். எனவே, "அகத்து நிகழ்கின்ற இன்பத்துக்கு 'அகம்' என்பது ஓர் ஆகுபெயராம்!" என்கின்றார் நச்சினார்க்கினியர். மனிதன் தன் வளர்ச்சியின் எல்லையிலே பெற்ற ஆறாவது அறிவின் முழுப்பயனையும் துய்க்கும் ஒரு வற்றாத இன்ப நிலைக்களனே அகம் என்பது. உலகில் உயிர்த் தோற்றங்கள் அத்தனையும், ஆணும் பெண்ணுமாகவே இலங்குவதைக் காண் கின்றோம். தோன்றிய நாள் தொட்டு இன்றுவரை, ஓரறிவுடைய உயிர் தொடங்கி ஆறறிவுடைய மனிதன் வரை யில், ஆண் பெண் கூறுபாடுகளைக் கண்டுதான் வருகின்றோம். அந்தக் கூறுபாட்டின் தோற்ற அமைப்பே, அவை கூடி வாழ்வதிலேதான் பிறந்தது என்பதை நமக்கு உணர்த்த வில்லையோ? இந்த உண்மையை அறியாத சிலர், அனைத்தும் பொய்யெனவும், அக் காதல் இன்பம் வேண்டத்தகாதது எனவும் ஒதுக்குவர். தமக்கு வேண்டாததை இல்லை என்று கூறும் நாத்திக வாதத்தை ஒத்து, வள்ளுவர் காமத்துப்பாலைப் பாடவே இல்லை என்று பேசுகின்றவரும் நாட்டில் உண்டு. ஆனால், ஆய்ந்து சிந்திப்பின், உலகமே ஆண்பெண் கலந்த ஒன்று என்பது நன்கு புலனாகும். தமிழர்கள், இந்த அக வாழ்வை நன்கு அறிந்து துய்த்தவர்கள் என்பது அவர்தம் கவிதைகளால் நன்கு விளங்குகின்றது. சங்ககாலப் பாடல் களாகத் தொகுக்கப் பட்டவற்றுள் முக்காற்பகுதிக்கு மேலாக அகம் பற்றியே பாடுகின்றன. இரண்டொன்று புறம் பற்றி

யனவாம். எட்டுத்தொகையுள் புறமும் பதிற்றுப்பத்தும் நீங்கிய மற்ற அனைத்தும் அகப்பொருள் பற்றினதாமே?

அகவாழ்வில் சிறந்து வாழ்வதைத்தான் வாழ்வின் குறிக் கோளாகத் தமிழர் கருதினர். ஆனால், அதே வேளையில் புறவாழ்வாகிய துறவறத்தை அவர்கள் பழிக்கவுமில்லை. திருவள்ளுவனார், 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை,' என்றார். அவ்வாறு திட்டவட்டமாக 'ஏ'காரம் கொடுத்து அகவாழ்வைச் சிறப்பித்த அவர், புறவாழ்வை—துறவறத்தைப் பழிக்கவில்லை. அதற்கும் தம் நூலில் இடம் கொடுத்துள்ளார். நாட்டில் அகமும் புறமும் ஒன்றி வாழ்ந்தன; வாழ்கின்றன; வாழும்.

புறத்திணையில் காஞ்சி என்ற திணையை அமைத்து, 'நில்லா உலகம் புல்லிய நெறித்தே,' என்று உலக நிலையாமையைக் கூறி, அதனால் துறவறத்தை வற்புறுத்துகின்றனர் ஆசிரியர் என்பர். ஆனால், அந்தத் துறவும் எப்போது சிறக்கும் என்பதை ஆசிரியர் தொல்காப்பியனார்,

'காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.' **(கற்பு, 51)**

என்று காட்டுகின்றார். அங்கும் அகவாழ்வின் அடிப்படையில் இணை பிரியாதிருந்த காதன் மனையாளும் காதலனும் இருக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்துகின்றார். ஆனால், காதல் வாழ்வு நடத்த அன்று; சிறந்த செயலாற்றி மற்றவருக்குத் தொண்டு செய்ய. வடமொழிக் காவியங்களில் வரும் பல ரிஷிகளும் இவ்வாறே தத்தம் பத்தினிமாரோடு காட்டிடை வாழ்ந்ததாக அறிகின்றோம். எனவே, மக்கள் வாழ்வின் அடிப்படையே காதல் வாழ்விலேதான் அரும்புகின்றது. இக் காதல் இன்பத்தைத் **'தானே அவளே தமியர் காணக் காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்.'** என்று இறையனார் அகப்பொருள் காட்டுகின்றது. எனவே, ஒத்த பண்புடையார் இருவர்—

தலைவன் தலைவி எனப்பட்டார்—தம்முள் தனியாகக் 'கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலனால்' பெறுகின்ற இன்ப நிலையினை—எடுத்துக்காட்ட முடியாத அந்த அன்பு உள்ள நெகிழ்ச்சியையே—தமிழர்கள் அகம் எனக் கண்டு வாழ்ந்தார்கள் என்பது தெளிவு.

மற்றோர்க்கு இவ்வாறு இருந்தது என்று எடுத்துக் காட்ட முடியாத ஒன்றுக்கு எப்படி இத்தனை இலக்கியங்கள் தோன்றின என்பது அதிசயமல்லவா! வாய்விட்டுச் சொல்ல முடியாத ஒன்றை எப்படிக் கவிஞன் வரி வடிவில் தீட்டினான்? அது அதிசயந்தான் என்றாலும், சொல்ல இயலாத அந்தப் புலன் உணர்வால் பெறும் இன்பத்தை எடுத்துக் காட்ட எவரும் முன் வரவில்லை. அந்த இன்பத்தினை எடுத்துக் காட்டவும் இயலாது. அப்படிக் காட்ட முடியுமாயின், அதை அவ்வாறு 'அகம்' என்று தான் கூற முடியும்? ஆகவே, அந்த இன்பம் தோன்றும் நெறியையும், அதற்குத் துணையாயவரையும், மேலும் அதற்கு அமைந்த சுற்றுச் சார்புகளையும், அதற்கு முன்னும் பின்னும் பெறும் உள்ள நெகிழ்ச்சி நிலையினையும், அதன் வழித் தோன்றும் உடலின் மெய்ப்பாடுகளையும்; இன்ன பிறவற்றையும் விளக்குவனவே இவ்வகம் பற்றிய பாடல்கள் அத்துணையும். அவற்றின் விரிவையெல்லாம் ஆங்காங்கே கண்டுகொண்டே செல்லலாம்.

அகவாழ்வுக்கு அடிப்படையாக 'ஐந்திணை'யைப் பகுத்துக் கொண்டார்கள். அப்படியென்றால், இலக்கண ஆசிரியர் ஏற்படுத்திக் கொண்ட வரையறை என்பது பொருளன்று. இயல்பான வாழ்வே அவ்வாறு அமைந்தது. அதை அவர்கள் இலக்கணப்படுத்திக் காட்டினார்கள். மனித இனம் தோன்றி வளர்ச்சி அடைந்த காலத்தில்,இயல்பாகவே அவ்வினம் பெருகப் பெருக, அறிவு வளர வளர, உள்ளம் சிறக்கச் சிறக்க, மலை, காடு, நாடு, கடல் என்ற நால்வகை நிலத்திலும் மனிதர் தம் வாழ்வினை அமைத்து வாழ்ந்த வரலாற்றைக் கண்டோம். அந்த அடிப்படையிலேதான் அவர் தம்காதல் வாழ்வு அமைந்தது. ஆம். காதல் என்பது எங்கோ தான் வாழும் இடத்தை விட்டுச் சென்று நாடகக் காட்சி போலப் பற்றிப் பிடித்து, பின்னர்

விட்டுவரும் ஒன்றல்லவே! வாழ்கின்ற இடத்திலேயே இக்காதல் வாழ்வு சிறக்க வேண்டுவதுதானே இயல்பு? அந்த வகையில் இந்த நால்வகை நிலத்திலும்—மனிதன் வாழத்தக்க இந்த உலகில், இந்த நால்வகைப் பரப்பிலும்—காதல் வாழ்வு நடைபெற்றது. நால்வகை நிலங்கள் உள்ளமையாலேயே இந்த உலகிற்கு 'நானிலம்' என்ற பெயர் வந்ததாகக் கூறுகின்றார்கள். இந்த நால்வகை நிலத்தொடு 'பாலை' என்ற மற்றொரு நிலமும் பேசப்படுகின்றது. அது காலத்தால் பிந்தியது போலும்! தொல்காப்பியத்தில்,

> 'நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்
> படுதிரை வையம் பாத்திய பண்பே.' (அகத்திணை: 2)

என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பொருள், 'ஒழுக்க இடைப்பட்ட அந்த ஐந்து திணையுள் இடையில் உள்ள பாலையை உலகம் பெறாதே நிற்கும்படி செய்தார்,' என்று எழுதப்பட்டுள்ளது. மேலும், பாலைத்திணையே பிரிவு பற்றிய ஒன்றன்றோ! உளத்தால் ஒத்த தலைவன் தலைவியாயினும் அவர்கள் பிரியும் நிலை கூடிவாழும் வாழ்வில் போற்றத்தக்க தாகுமோ? தொல்காப்பியர் பாலையின் உரிப்பொருளை,

> 'ஓதல் பகையே தூதில் பிரிவே.' (அகத்திணை: 27)

என்று கூறுகின்றார். எனவே, பாலை அவ்வளவு சிறப்பாகச் சொல்லப்படவில்லை. எனினும், பிற்காலச் சங்க இலக்கியங்களிலும், பின்னர் வந்த அகம் பற்றிய இலக்கண நூல்களிலும், பாலை பிற திணைகளைப் போன்றே வைத்துப் பேசப்படுகின்றது.

'திணை' என்ற சொல் நிலத்தை மட்டும் குறிப்பதன்று. உதட்டால் அன்றி உள்ளத்தால் பழகி வாழ்ந்த மனிதன், மண்ணையும் கல்லையும் மட்டும் கண்டு அவற்றை அறுதியிட்டிருப்பானோ! அதிலும், உள்ளத்தாலே உற்றறியும் இன்ப ஒழுக்கத்துக்கு, அதன் அடிப்படையில்தானே பாகுபாடு கண்டிருப்பான்? ஆகவே, 'திணை' என்ற சொல்லுக்கு 'ஒழுக்கம்' என்பதே பொருள். மனித ஒழுக்கத்தின் அடிப்படையிலேதான் இந்த பாகுபாடு அமைகின்றது. ஒழுக்கம் என்ற

பண்பாடு உயிரினும் மேம்பட்டது என்பது தமிழர் கண்ட முடிபு. இதைக் குறித்துத்தான் வள்ளுவர், 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்,' என்று பாராட்டுகின்றார். அந்த ஒழுக்கத்தையே திணை என்று குறித்தார் முன்னையோர். இப்படித் திருந்திய ஒழுக்கம் மனித சமுதாயத்தில் உருப்பெற்றிருக்க வேண்டுமாயின், அதற்குமுன் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் அம் மனித சமுதாயத்தின் வாழ்வெல்லையில் கழிந்திருக்க வேண்டும். எனவே, தொல்காப்பியர் இவ்வொழுக்கமாகிய திணை நிலையைக் கூறும்போது, தமிழராகிய மக்கள் இனம் உயர்ந்த பண்பாட்டில் வாழ்ந்திருக்க வேண்டுமன்றோ!

ஒழுக்கம் என்பது என்ன? மக்கள் தங்கள் வாழ்வில் அதை எவ்வாறு மேற்கொண்டார்கள்? ஒவ்வொரு நிலத்திலும் வாழும் மக்கள் தங்கள் வாழ்வினை ஒவ்வொரு வகையாக அமைத்துக் கொண்டார்கள். அவ்வாழ்வில் அவரிடை அமைந்த காதல் ஒழுக்கத்தையே, இங்கே திணை அல்லது ஒழுக்கம் எனக் குறிக்கின்றார் ஆசிரியர். மலையைக் குறிஞ்சி என்றும், காட்டை முல்லை என்றும், கடலை நெய்தல் என்றும், வயலை மருதம் என்றும் திணைப்பெயர் கொடுத்துப் பிரித்துள்ளார்கள். அவ்வத் திணைக்கு ஏற்பப் புணர்தலையும் இருத்தலையும் இரங்கலையும் ஊடலையும் ஒழுக்கப் பொருளாக அமைத்தார்கள். இவ்வாறு தனித்தனியாக அமைத்தமையின், ஒன்றின் செயலோ, நிலையோ மற்றவற்றிற்கு அடியோடு இல்லை என்பது பொருளாகாது. அப்படியிருப்பின், எல்லா நிலத்திலும் இன்பம் இயையாதன்றோ! இன்பமாகிய அந்த அக ஒழுக்கத்திற்கு வரையறை செய்யப்பட்ட ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிலத்திலும் சிறந்திருக்கும் என்பதே பொருள். இவற்றின் விரிவையெல்லாம் தொல்காப்பியத்திலும் அதன் உரையிலும் காண்பது நலம் தருவதாகும்.

இனி, பாலையைத் தனி நிலமாக்காததற்கும் காரணம் உரையாசிரியர் காட்டுவர். பாலை தனி நிலமன்று; சிலப்பதிகாரத்தின் வழி, அது இரு நிலங்கள் சேரும் இடத்தில் அமைவது என்பது புலனாகின்றது.

> 'முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
> நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்
> பாலை என்பதோர் படிவம் கொள்ளும்.'

என்று இளங்கோவடிகள் பாலையை மற்றவற்றினின்றும் பிரித்துக் காட்டுகின்றார். எனவே, 'பாலை' என்பது திரிபால் அமைவது. எனவே, அதன் ஒழுக்கமும் அவ்வாறே அமைகின்றது. அதன் ஒழுக்கம் 'பிரிவு' என்பது. இப்பிரிவு ஒரு நிலத்துக்கு உரியதாகுமா? நால்வகை நிலத்தில் மக்கள் கொள்ளும் அக் காதல் வாழ்வில் எல்லாம் பிரிவு இன்றி யமையாது இலங்குவதுதானே? பிரிவின்றேல், பிரிதற் றுன்பமும், பின் புணர்தல் இன்பமும், இடைவழித் தோன்றும் இரங்கலும், ஊடலும், இல்லிருத்தலும் எங்ஙனம் நிகழும்? எனவே, பிரிவாகிய பாலை ஒழுக்கமும், தான் வழங்கும் நிலம் மற்ற நிலங்களுக்குப் பொதுவாமாறு போலவே, தானும் பிற ஒழுக்கங்களுக் கெல்லாம் பொதுவாய் அமைகின்றது. அதனாலேயே பாடற்றொகுதிகளில் பாலை பற்றியன அதிகம் உள்ளன. இவ்வாறு ஐந்திணையும் அவற்றின் அடிப்படையில் வரும் ஐந்து ஒழுக்கமுமே 'அன்பின் ஐந்திணை' என்று தொல்காப்பியர் தொடங்கி இன்றுவரை சிறந்த முறையில் போற்றப்பட்டு வந்துள்ளன. அவற்றின் விரிவெல்லாம் ஈண்டு விரிப்பின் பெருகும்.

இனி, இந்த அகப்பொருளாகிய உள்ளத்து உணரும் நிகழ்ச்சிகளைப் புலவர்கள் எப்படித்தான் பாடினார்கள் என்பதை அறிதல் வேண்டும். மேலே கவிதையில் கண்ட இறைச்சி, உள்ளுறை, உவமம் போன்றவையும், அவற்றின் அடிப்படை களாகிய அவ்வந்நிலத்துப் பொருள்களும் பிறவும் புலவர் களுக்குப் பெரும் பயன் தந்தன. ஒவ்வொரு நிலத்தைப் பற்றிப் பாடும்போதும், அவ்வந்நிலத்துக்குரிய முதல், கரு, உரி, எனும் பொருள்களையே கவிதைகளில் காண இயலும். அக இன்பத் துக்கு உரிய தலைவன் தலைவியரைப் பற்றிய குறிப்பினும், இந்த மும்பொருள்களே அகப்பாடல்களில் அதிகமாகப் பயின்று

வருவன. அதனாலேதான் தொல்காப்பியரும் அகப்பொருட் பாடலைப் பற்றிக் குறிக்கும்போது,

'முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலும் காலை முறை சிறந்தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை'

என்கின்றார். இந்த முப்பொருளும் இல்லையாயின், தலைவியும் தலைவனும் அவரைச் சார்ந்தோரும் இருப்பினும், அகப்பொருள் சிறவாதென்பது இதன் கருத்தன்றோ! எப்படிச் சிறக்க முடியும்? தலைவனும் தலைவியும் காணும் சோலையும், ஆடும் புனலும், பிற இயற்கைப் பொருள்களும், அவற்றிற்கு முதலாகிய நிலமும் பொழுதும், அவ்வந்நிலத்துக்கே உரியனவாகிய ஒழுக்கப் பொருள்களும் இன்றேல், அகப்பொருள் சிறக்க வழியேது? இப்படிக் காதலருடன் பிற பொருள்களையும் பின்னிப் பிணைத்துப் பேசும்போதுதான் கவிஞன் சில சமயம் கற்பனைக் கடலுள் மிதக்க நேரிடும்; அப்போதுதான் உவமையும் உருவகமும் அவன் உள்ளத்தில் உதித்தோங்கும். அவற்றுடன் கவிஞன் உலகியலோடு சில புனைந்துரைகளையும் புகுத்துவான். இவற்றையெல்லாம் கலந்தே அகப்பாடல் சிறக்கும் என்பதை நம்பி அகப்பொருள் ஆசிரியர்,

'அதுவே,
புனைந்துரை உலகியல் எனும்திறன் இரண்டினும்
தொல்லியல் வழாமல் சொல்லவும் படுமே;

என்று காட்டினார். தொல்காப்பியரும்,

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்.' (அகத்: 56)

என்று கூறுகின்றார். எனவே, அகப்பொருள் பற்றிய கவிதைகளுள் ஓரளவு நாடகவழக்கும் புனைந்துரையும் இடம் பெறும் என்பதும் அறியக் கிடக்கின்றது. ஆயினும், அப் புனைந்துரை எல்லையற்றுச் செல்லின் இனிமை பயவாது கழிவதோடு, எடுத்த பொருளை விளக்கவும் முடியாத நிலை உண்டாகுமாதலின்,

அதற்கு எல்லை அமைப்பான் 'தொல்லியல் வழாமல் சொல்லவும் படும்' என அறுதியிடுகின்றார். எத்தனையோ புனைந்துரை நூல்கள் கேட்பாரற்று மங்கி மறைந்தன. எனவே, புனைந்துரை மிகுமாயின் அது வாழ்விலக்கியமாக முடியாது. வாழ்விலக்கிய மல்லாதன எல்லாம் என்றாவது ஒரு நாள்—ஏன்—விரைவிலேயே வழக்காற்றற்று விழவேண்டுபவைதாமே? இதைக் கருத்தில் எண்ணித்தான் போலும், புனைந்துரைக்கு எல்லை வகுத்து விட்டனர்! ஆடை அணிகலன் உடலுக்கு அழகு செய்வது போன்று, புனைந்துரை ஓரளவுக்குத் தேவைதான். ஆனால், அந்த ஆடை அணிகலன்களே இயற்கை அழகை மாசு படுத்தும் அளவுக்கு மிகுமாயின், அதனால் தீமை விளையுமன்றோ! புனைந்துரை தேவையேனும், அதை அளவறிந்து உபயோகிக்க வேண்டும்.

இனி, இவ்வகையான அகப் பாடலுக்குத் தேவையான முதல் கரு உரி என்ற மூன்று பொருள்களைப் பற்றி ஓரளவு காணல் வேண்டும். முதற் பொருளாவன நிலமும் பொழுதும் ஆகும். உண்மைதானே? நிகழும் இடமும் அதற்குரிய காலமும் இல்லையானால், பின் நிகழ்ச்சி நடைபெறுவதுதான் எங்கே? இந்த நிலத்தையும் காலத்தையும் பாகுபடுத்தி, மேற்கண்ட ஐவகையாக நிலத்தைப் பிரித்துப் பொழுதைப் பெரும் பொழுது ஆறு, சிறு பொழுது ஆறு எனப் பன்னிரண்டாக் குவர். பின்பு ஒவ்வொரு நிலத்துக்கும் உரிய பொழுதுகள் இவை இவை என வரையறுத்து விடுகின்றனர். எல்லாப் பொழுதும் எல்லா நிலத்துமே நிகழ்கின்றனவேனும், அவற்றுள் ஒவ்வொரு பொழுது ஒவ்வொரு நிலத்தில்தானே சிறப் படையும்? இந்த உண்மை அன்று மட்டுமின்றி, இன்றும் உண்மையாகத்தானே உள்ளது? நிலத்துக்கு நிலம் பொழுதும் காலமும் மாறுபட்டுச் சிறப்பதை அறியாதார் யார்? எனவே, அவற்றின் அடிப்படையிலேதான் அந்தக் களவும் கற்பும் கலந்த அக ஒழுக்கம் நடைபெற்றதென்பதில் ஐயமுண்டோ!

இனி, உரிப்பொருள் என்பன அவ்வந் நிலத்துக்கே உரிமை யாகிச் சிறக்கின்ற பொருள்கள் என்பார்கள். புணர்தலும்,

பிரிதலும், இருத்தலும், இரங்கலும், ஊடலும் அவ்வற்றின் நிமித்தங்களுமே ஒவ்வொரு நிலத்துக்கும் முறையே உரிமையாகி நிற்கின்றன; பொருளாகின்றன. கருப்பொருள் என்பன, அந்தந்த நிலத்திலும் நிலத்து மக்கள் உள்ளத்திலும் கருவாகி உருப்பெற்று நிலத்தோடு நிலமாக நிற்கும் பொருள்கள் ஆகின்றன. ஒவ்வொரு நிலத்தும், ஆண்டே பிரிக்க முடியா வகையில் பெறப்பட்டமையின் அவை கருப்பொருளாயின போலும்! அவை இன்னின்ன என்பதைத் தொல்காப்பியர்,

'தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருஎன மொழிப.' (அகத்: 20)

என்று சிலவற்றைக் கூறி, அவற்றைச் சார்ந்த பிற பொருள்களையும் கருவில் அடக்கி முடிக்கின்றார். பின்னர் வந்தவர்கள் சற்று விரிவாக்கி, கருப்பொருள்களைப் பதினான்கு என்று அறுதியிடுவார்கள். இன்னும் விரிப்பினும் விரிக்கலாம். இக் கருப்பொருள்களே கவிஞர்தம் கருத்துக்கு விருந்தாக அமைகின்றன. இவற்றின் அடிப்படையிலேதான், காதலர் சொல்ல முடியாத கருத்துக்களையெல்லாம் கவிஞர்கள் காட்டி விடுகின்றார்கள். எனவே, அகப்பொருட் பாடல்களுக்கெல்லாம் இம் முப்பொருள்களே நிலைக்கலன்களாய் அமைகின்றன. இவை எவ்வெவ்வாறு மனித வாழ்வை விளக்கும் கண்ணாடிகளென விளங்குகின்றன என்பதைப் பின்னர் ஆங்காங்கே கண்டுகொண்டே செல்லலாம்.

இனி, 'இவ்வகப்பொருளில் வரும் மக்கள் யாவர்?' என்ற வினா எழுமன்றோ? இன்பம் எல்லார்க்கும் பொது என்று தொல்காப்பியர் வகுத்துள்ளதை மேலே கண்டோம். எனவே, உள்ளத்தால் பெறும் இன்பத்தை அனைவரும் பெறுவர். அதில் தடை ஒன்றுமில்லை. எனினும், உலகியலோடு நாடக வழக்கும் கலந்து காவியம் செல்லும் நெறியில் இதற்கெனத் தலைவன், தலைவி, பாங்கன், பாங்கி, செவிலி, நற்றாய் போன்ற பலப்பல பாத்திரங்களைக் கவிஞன் துணைக்குக் கொண்டுள்ளான். எத்துணைப் பொதுவாக அமைந்த பொருளாயினும், அப்பொருளை எடுத்து விளக்கும்போது, அதை ஒருவர்மேல் சார்த்

தித்தானே விளக்க முடியும்? அந்த முறையில் இந்த அகப் பொருள் நாடகங்களுள் வரும் பாத்திரங்களுள், கவிஞர் தம்மையே தலைவனாகவும், தலைவியாகவும், தோழியாகவும், செவிலியாகவும் கற்பனை செய்துகொண்டு பாடிய பாடல்கள் பலப்பல. அப்படித் தாமே அவையானல்தபன், கவிஞர் கவி பாட முடியும். அந்த வகையில் அகப்பொருட்கு உரியார் சிலர் பேசப்படுகின்றனர். அவருள் முக்கியமானவர் தலைவன், தலைவி, தோழி, பாங்கன், செவிலி, நற்றாய் என்பவர். அவர்கள் வாயி லாகத்தான் தமிழில் உள்ள பல அகத்துறைப் பாடல்கள் தோன்றி வாழ்கின்றன. தொல்காப்பியத்தில் அவர்களைப் பற்றிய இலக்கணங்களையும் அவர்கள் பேசும் இடங்களையும், பிற இயல்புகளையும் ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார்.

தலைவன் தலைவியரைப் பயில்வோர் முன்னிறுத்தி, அவர்தம் பண்பின் வழி உலகில் வாழ விரும்பும் மக்கள் மேற்கொள்ள வேண்டிய பண்பாடு, வாழ்க்கை முறை, பிற செயல் முதலிய வற்றைக் காட்டுவர் புலவர்.

'பெருமையும் உரனும் ஆடூஉ மேன' (களவியல்: 7)

என்றும்,

'அச்சமும் நாணும் மடனுமுந் துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப' (களவு: 8)

என்றும், தலைவனுக்கும் தலைவிக்கும் சிறந்திருக்க வேண்டிய குணங்களைத் தொல்காப்பியர் காட்டுகின்றார். அவரவர்களுக்கு அமைய வேண்டிய குண நலன்களையும், பலபடியாகப் பொருளியலிலும் களவு கற்பென்னும் இயல்களிலும், பிறவிடங் களிலும் விளக்கிக் காட்டுகின்றார் தொல்காப்பியர். ஒவ்வொரு வருக்கும் உரிய மரபையும், அம்மரபினை வழுவாமற் காக்க வேண்டிய கடமையையும் அவர் விளக்கத் தவறவில்லை. அவர் யார் யாரிடம் எவ்வெவ்வாறு பேசவேண்டும் என்பதையும் வரையறுத்து விடுகின்றார். தொல்காப்பியம் ஓர் இலக்கண நூலானமையின், ஒவ்வொன்றின் இலக்கணத்தையும் ஒப்ப நாடி ஆராய்ந்து, அவற்றின் நிலை கெடாதபடி காட்டிச் செல்

கின்றார். அகப்பொருள், வாழ்வுக்கு இன்றியமையாததென்பதைத்தான் தம் பொருளதிகாரத்தின் பெரும்பகுதியில் விளக்கிக் கொண்டு செல்கின்றார். தலைவனும் தலைவியும் உள்ளத் துணர்வாலேயே உற்றுப் பெறும் இன்பம் அகப் பொருள்தான் என்றாலும், அவ்வின்பம் சிறத்தற்கு அவர்களைச் சுற்றி இன்னார் இருக்கவேண்டும் என்றும், இன்னின்ன பொருள்கள் தேவையானவை என்றும், காலமும் பொழுதும் வாலிதின் நோக்க வேண்டும் என்றும், அனைத்தினும் மரபு நெறி கெடாத வாழ்க்கையே செம்மை நலம் சேர்ந்ததென்றும் காட்டுவர் தொல்காப்பியர். இவ் வகம் பற்றிய இலக்கணம் ஒரு நாடகம் போன்று அமையினும், தமிழர் பெரும்பாலும் மேற்கொண்டு வாழ்ந்த வாழ்க்கையே இது என்பதில் ஐயமில்லை.

இந்த அக வாழ்வைக் களவு, கற்பு என இருவகையாகப் பிரிப்பர் புலவர். இவ்வக வாழ்வு ஆய்ந்து காணின், தலைவனும் தலைவியும் கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றித் தாமே தமியராய் ஒருவரை ஒருவர் கண்டு, கருத்தழிந்து, தம்முட்கூடி, பின் களவு வெளிப்பட்ட வழி மணந்து வாழ்க்கை நடத்துவதில் முடிகின்றது. அப்படி ஒருவருக்கும் புலனாகாமல் இருவரும் கூடி மகிழும் இன்பத்தைத்தான் 'அகம்' என்று அனைவரும் பாராட்டுகின்றனர். களவின் வெளிப்படை கற்பாக மாறுகின்றது. அக்கற்பு வாழ்க்கை மற்றவர் மாட்டும் பற்றிச் செல்லலின், அகவாழ்வு அத்துணைச் சிறப்பாக அமையவில்லை என்பது தெளிவு. அந்தக் களவு வாழ்வை அகப்பொருளாசிரியர்கள் நெடுங்காலம் நீட்டிக்க விடவில்லை. 'திங்கள் இரண்டின் அகமென மொழிப' என்று அந்தக் களவு வாழ்வை வரையறுத்து விட்டார்கள். அவ்விரண்டு திங்களில் தலைவன் தலைவி இருவரும் பலமுறை கூடுகின்றனர். யாருக்கும் புலனாகாது என்றாலும், சில நாள்களில் தலைவனின் உயிர்ப்பாங்கனுக்கும் தலைவியின் உயிர்த்தோழிக்கும் அது புலனாகித் தோன்றி நிற்கும். அவர்கள் அறிந்த வழியும் அது களவாகவே இருக்கும், ஏனெனில், இருவரும் தலைவன் தலைவியரது உயிர் போன்று வாழ்ந்து, அவர்க்கு வரும் துன்பத்தைத் தம்மதாகக் கண்டு

கருத்தழிவாராதலின். எனவே வெளிப்படுவ தென்பதை, அவர்களது எல்லை தாண்டி மற்றவர்கள் அறிவது என்றுதான் ஆசிரியர்கள் கூறுவார்கள், இது நிற்க.

இப்படிக் கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றித் தாமே தமியராய் நின்று, ஒருவரை ஒருவர் காதல்கொண்டு கலந்து, பின் ஒரு வேளை பிரிந்துவிடுவராயின் என்னுவது என்ற ஐயம் நிகழுமன்றே! அந்த ஐயம் நிகழா வழியிலேதான் தலைவன், தலைவி என்ற இருவர்தம் பண்புகளையும் தெள்ளத்தெளிய எடுத்துக் காட்டுகின்றார்கள் புலவர்கள். வாய்மையும் மரபும் காத்த வளமார்ந்த மரபு அவர்கள் இருவருடைய மரபுகளும். அவர்கள் கொண்ட அன்பும் எக்காலத்தும் நீக்க முடியாத அன்பு. எக்காலத்தும் என்றால் இப்பிறவியில் மட்டுமன்றி, எந்தப் பிறவியிலேயும் நீங்காது பின்னிப் பிணைந்து செல்லும் அன்பாகும். இந்த உண்மையை ஆசிரியர் திருவள்ளுவனார்.

"இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்" (குறள்: 1315)

என்று அழகாகக் காட்டுகின்றார். தலைவன், 'இந்தப் பிறப்பில் உன்னை விட்டுப் பிரியேன்,' என்கிறான், அதைக்கேட்டு மகிழ வேண்டிய தலைவி வருந்திக் கண்ணீர் உகுக்கின்றாள். காரணம் என்ன? அப்போது மறுமையிலும் அடுத்து வருகின்ற பிறவி களிலும் தன்னைத் தலைவன் மறந்துவிடுவானோ என்ற அச்சம் எழுகின்றது அவள் உள்ளத்தில். அவ்வச்சத்தின் ஆற்றாமையால் கண்ணீர் பெருகுகின்றது. இவ்வாறு அவர்தம் காதல் வாழ்வு எக்காலத்தும் எதனாலும் பிரிக்க முடியாதது. இவற்றை யெல்லாம் கருத்தில் இருத்தித்தான் இந்த நூற்றாண்டின் கவிஞர் பாரதியார், காதல் வாழ்வை,

"நேற்றுமுன் னாளில் வந்த உறவன்றடி—மிக
நெடும்பண்டைக் காலமுதல் நேர்ந்துவந்ததாம்."

என்று 'கண்ணம்மா—என் காதலி' என்னும் பகுதியில் எளிமையில் எடுத்துக் காட்டுகின்றார்,

எனினும், எக்காலத்திலும் நன்மைக்கு மாறான தீமை இருப்பது இயல்புதானே? அதுபோன்றே காதல் வாழ்விலும் சொல் தவறுதலும், கைவிடுதலும் நேர்ந்திருக்கும் போலும்! தாமே எதிர்ப்பட்டு, உடன்பட்டுக் களவிலும் கற்பிலும் பிரியாது வாழ்ந்த காதன் மக்கள் தமிழ்நாட்டில் மிகு பழங் காலந் தொட்டு வாழ்ந்துவந்த அந்த நெறியிலே, சிற்சில பொய்யும் வழுக்கலும் தோன்றின என்று எண்ண இடமுண்டு. கொடுப்போர் இன்றியும் அடுப்போர் இன்றியும் தலைவனும் தலைவியும் களவில் கைப்பிடித்து, பின் காதல் வாழ்வு வாழ்ந்த காலத்திலும் சில சடங்குகள் கற்பொழுக்கத்தில் தலை காட்ட ஆரம்பித்தன. அச் சடங்குகளும் கொடுப்போர் அடுப்போர் இல்லாமலே நடைபெற்றிருக்கலாம். இன்று பதிவு மணம் நடைபெறும் வழியில் யாரேனும் இருவர் தக்கார் முன்னிலையில் தம் வாழ்க்கை ஒப்பந்தத்தை அவர்கள் வரையறுத்துக் கொண்டிருக்கலாம். அன்றிப் பெற்றோர் கொடுப்பக் கொள்வதும் உண்டு போலும்! நாட்டில் பலரும் அறிய, மணமுரசொலித்து, உயர்ந்தோர் பலர் சடங் காற்ற, பெண்ணின் பெற்றோர் மகளைக் காளையாம் மைந்தனுக்குக் கொடுக்கின்ற சடங்குகளும், அக்காலத்திலே வளர்ந்து வந்திருக்கவேண்டும். அதற்கு ஆசிரியர் காட்டும் காரணம் நோக்கத்தக்கது.

காதல் மணத்தில்—அக வாழ்வில்—பொய்யும் வழுவும் புக்கன இல்லை என்றால், யாதொரு சடங்கும் தேவையில்லை. ஆனல், அப்பொய்—வழு—புகுந்து, நம்பிய நங்கையைத் தலைவன் கைவிட நேரின் என்னுவது? அவள் நைந்து இறப்பதன்றி, வேறு செய்வது என்? எனவேதான் கைவிடலாகாத வகையில் பலர் முன்னிலையில் அறிஞர்கள் பல சடங்குகளை உண்டாக்கி வைத்தார்கள்.

> "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
> ஐயர் யாத்தனர் கரணம் என்ப." (தொல் பொருள்: 143)

என்கிறார் தொல்காப்பியர். கரணங்கள் முன்னரே நாட்டில் வாழ்ந்தன அல்ல. அவை பின்னால் காரண காரியங்களுடன்

வரையறுத்து ஆக்கப்பட்டன என்கின்றார். இந்தச் சட்டங்கள் எப்படிப்பட்டன என்பதை அகநானூறு முதலிய பாடல்கள் நமக்கு விளக்குகின்றன. அவற்றின் விளக்கங்களைப் பின்னர்ப் பார்ப்போம்.

இவ்வாறு காதல் மனையாளோடு கலந்து வாழ்கின்ற தலைவன் கடமை மறந்தவனோ என எண்ண வேண்டா. களவுக் காலத்திலும், கற்புக் காலத்திலும் தலைவன் தலைவியை இடையிடை விட்டுக் கடமைவழிக் கருத்திருத்துகின்றான். அப்படிப் பிரியும் காலத்துத் தலைவி ஆற்றியிருக்க ஒண்ணாது அலமருவாள். அக்காலத்திலெல்லாம் தோழி அவள் அருகிலிருந்து ஆறுதல் கூறுவாள். தலைவன் அவ்வாறு தன் காதல் வாழ்விலேயே மூழ்கிக் கடமையை மறந்து சுய நலத்தில் வாழ்வானாயின் அவன் பொருவில் தலைவனாக எப்படி இருக்க முடியும்? கட்டிப் பிணித்த காதல் வாழ்வு விட்டு நீக்க முடியாத ஒன்றேனும்; அதனால் தன் கடமையை மறந்து கெடுபவன், நாட்டையும் மற்றவரையுங்கூடக் கேட்டுக்கு வழி காட்டியாக நின்று அழைத்துச் செல்பவனாவான். சிந்தாமணியின் கதாநாயகனாகிய சீவகனின் தந்தை சச்சந்தன் இவ்வாறு காதல் வாழ்வில் தன்னை மறந்து, அரசாளும் கடமையைக் கைவிட்டு, சுயநலத்தில் வாழ்ந்ததாலேதான் நாடு, கவினழிந்து கட்டியங்காரன் வசமாயிற்று. அந்த நிலையில் எல்லாம் பொருவிறந்த தலைவன் இருக்கலாகாது என்று தொல்காப்பியரும் பிறரும் சொல்லியுள்ளனர். தலைவன் தலைவியருடைய பண்புகளையெல்லாம் பின் மெய்ப்பாட்டியலில் தொகுத்துக் கூறும் தொல்காப்பியர்,

> 'பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
> உருவு நிறுத்த காம வாயில்
> நிறையே அருளே உணர்வொடு திருவென
> முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே' (மெய்ப்: 25)

என்று கூறுகின்றார். இத்தகைய பண்பு நலம் வாய்ந்த தலைவன் தன் கடமையைத் தவற விடுவானோ? மேலும், தலைவனுடைய நெஞ்சு தடுமாறும் நிலையில் அவன் எப்படி நடந்துகொள்ள

வேண்டும் என்பதைக் கூறுகின்றார். தான் கொண்ட செயலில் திளைத்துக் கடமை உணர்ச்சியில் தலைநின்று, செயலாற்றுங் காலத்துத் தலைவன் அவளைப் பற்றியும், அவள் நிலை பற்றியும் நினைத்து இரங்கலாகாது என்றும், செயலின் இறுதியில்—தான் எடுத்த செயல் வெற்றியுற்று முடியும் தறுவாயில்—வேண்டுமாயின் நினைக்கலாம் என்றும் கூறுகின்றார்.

> 'கிழவி நிலையே வினையிடத்து உரையார்
> வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்; (மெய்ப்: 45)

என்ற சூத்திரம் இதைக் காட்டுகின்றது. எனவே, தமிழர் காதல் வாழ்விலேயே திளைத்து அதன்வழி கடமையாற்றாது கருத்தழிந்து நின்றவரோ என்பார்க்கு, அவ்வாறு எண்ணுவது தகாது என்பதும், அவர்கள் காதல் வாழ்வைக் கண்ணினும் இனிமையாகக் கருத்த காலத்தும், கடமை மறந்து சுயநலத்தின் உழலாதவர் என்பதும் இவற்றால் நன்கு விளங்கும். இவற்றின் விரிவெல்லாம் பின்னர்க் காண்போம். இனி, இக்கடமை வழி அம்மக்கள் ஆற்றிய புறவாழ்வைப் பற்றியும் அறிந்து கொள்ளல் வேண்டுமன்றோ!

மனித வாழ்வில் இன்பம் பற்றி வாராதனவெல்லாம் புறம் என்பதை மேலே கண்டோம். அவை அறமும் பொருளும் ஆம். அவற்றுடன் சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகிய வீட்டினையும் சேர்ப்பர். எனவே, அறம், பொருள், வீடு என்ற மூன்றையும் குறிக்க வருவன வெல்லாம் புறத்திலே சார்த்திப் பேசப்பெறும். இப்புறத்தில் கடவுள் நெறி முதலாக, அறமாற்றல், பொருள் பெருக்கல், அவற்றில் வரும் சிக்கல்கள், அவற்றைத் தீர்க்கும் முறைகள், வாயில்கள் இன்ன பிறவெல்லாம் விளக்கமாகப் பேசப் பெறுவன. அகப்பொருளைப் பார்க்கும்போது, நடுவண் ஐந்திணை என்பனவற்றைக் கண்டோம். அவையே அகத்திற்குச் சிறப்பானமையின், அவற்றை மட்டும் கண்டு மேலே வந்துவிட்டோம். எனினும், அவற்றோடு தொடர்புடைய கைக்கிளை, பெருந்திணை என்னும் இரண்டும் உள்ளன. ஆயினும், இவை ஒரு புறக் காமமும்,

பொருந்தாக் காமமுமாய் அமைகின்றமையின், இவை அகப் பொருளுக்கு அத்துணைச் சிறப்பினவாக அமையா. புறம் பற்றிப் பேசுகின்றவர்கள், இந்த ஏழு அகத்திணைகளையும் கருதிப் புறத்திணையையும், ஏழாக அமைத்தார்கள். அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் எனப் பகுக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியப் புறத்திணையியலில் இவ்வேழைப் பற்றியும் விளக்கங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் அகப்பொருட்டிணையின் இன்னின்னவற்றிற்குப் புறன் எனவும், அவை அவ்வாறு எப்படிப் புறனாய் அமைந்தன எனவும் உரை யாசிரியர் நன்கு விளக்கியுள்ளார். ஒவ்வொரு புறத்திணையின் செயலும், ஒழுக்கங்களும் அவ்வவ் வகத்துறையினுக்கு அமைந்த செயலும் ஒழுக்கமும் ஒத்து அமைந்து செல்கின்றன வாயினமை யின், அவை அவற்றின் புறமாயின என்று காட்டுவர் அவர். அவ்வாறு அவற்றைப் பகுத்து அறிந்துகொள்ளுதல் அனைவருக் கும் எளிதன்று. அன்னைப் பற்றி 'அகத்திணை மருங்கின் அரில் தப உணர்ந்தோர்' என்று நூலாசிரியர் கூறியதையும் காட்டு கின்றார். எனவே, ஆய்ந்து அமைந்து நின்றாலன்றி, இவற்றின் பொருத்தம் விளங்கித் தோன்றாது என்பது அறிந்தோம். இவற்றின் பொருத்தத்தை உரையாசிரியர் கூறியபடி அறியின் அகம், புறம் இரண்டின் பொருத்தம் பற்றியும் நன்கு அறிந்து கொள்ள இயலுமாதலின், அவ்வுரைகளை அப்படியே தருகின்றேன்.

'களவொழுக்கமும், கங்குல் காலமும், காவலர் கடுகினும் தான் கருதிய பொருளை இரவின்கண் முடித்து மீடலும் போல்வன ஒத்தலின், வெட்சி குறிஞ்சிக்குப் புறன் என்றார். வெட்சித் திணையாவது களவின்கண் நிரை கொள்ளும் ஒழுக்கம். இதற்கு அப்பூச் சூடுதலும் உரித்தெனக் கொள்க.

'முதல் எனப்பட்ட காடுறை உலகமும், கார் காலமும், அந்நிலத்திற்கேற்ற கருப்பொருளும், அரசன் பாசறைக்கண் தலைவியைப் பிரிந்து இருத்தலும், அவன் தலைவி அவனைப் பிரிந்து மனைவயின் இருத்தலும் ஆகிய உரிப் பொருளும் ஒப்புச் சேறலின், வஞ்சி முல்லைக்குப் புறனாயிற்று. வெஞ்சுடர்

வெப்பம் நீங்கத் தண்பெயல் பெய்து நீரும் நிழலும் உணவும் பிறவும் உளவாகிய காட்டகத்துக் களிறு முதலியவற்றோடு சென்றிருத்தல் வேண்டுதலின் வஞ்சிக்கும் அம்முதற் கரு உரியும் வந்தனவாம்!

'இரு பெரு வேந்தர் தம்முள் மாறு கொண்டவழி எதிர் செலற்கு ஆற்றாது போய் மதிலகத்திருந்த வேந்தன், மதில் பெரும்பாலும் மருதத்திடத் தாதலானும் அம்மதில் முற்று வோனும் அந்நிலத்திருத்தலானும், ஒருவன் வாயில் வேண்டாது திறவாது அடைத்திருந்த ஒப்புமையானும் உள்ளிருந்தவனும் புறப்பட விரும்புதலானும், மருதம் போல இதற்கும் பெரும் பொழுது வரைவின்மையானும், சிறு பொழுதினும் விடியற்காலமே போர்செய்தற்குக் காலமாத லானும் உழிஞை மருதத்திற்குப் புறனாயிற்று.

'நெய்தற்குரிய பெருமணல் உலகம் போலக் காடும் மலையும் கழனியும் அல்லாத களரும் மணலும் பொருகளமாக வேண்டுதலானும், பெரும்பொழுது வரைவின்மையானும், எற்பாடு போர்த்தொழில் முடியும் காலமாதலானும், இரக்க மும்; தலைமகட்கே பெரும்பாலும் உளதாயாவறு போலக் கணவனை இழந்தார்க்கன்றி வீரர்க்கு இரக்க மின்மையானும், அவ்வீரக் குறிப்பின் அருள் பற்றி ஒருவர் ஒருவரை நோக்கிப் போரின்கண் இரங்குபவராகலானும், பிற காரணங்களானும் நெய்தற்குத் தும்பைப் புறனாயிற்று.

'பாலை தனக்கென ஓர் நிலமின்றி நால்வகை நிலத்தும் நிகழுமாறுபோல முற்கூறிய புறத்திணை நான்கும் இடமாக வாகைத்திணை நிகழ்தலின், தனக்கு நிலமின்றாயிற்று. நாளும் நாளும் ஆள்வினை அழுங்க—இல்லிருந்து மகிழ்வோர்க்கு இல்லையாற் புகழ்' என ஆள்வினைச் சிறப்புக் கூறி பிரியுமாறு போல இதற்குத் துறக்கமெய்தும் ஆள்வினைச் சிறப்புக் கூறலும் கொள்க. பாலை பெருவரவிற்றாய்த் தொகைகளுள் வருமாறு போல வாகையும் பெருவரவிற்றாய் வரலும் கொள்க!

'எண்வகை மணத்திலும் நான்கு மணம் பெற்ற பெருந்திணைபோல இக்காஞ்சியும் அறமுதலாகிய மும்முதற்

பொருளும் அவற்றது நிலையின்மையுமாகிய ஆறனுள்ளும் நிலையின்மை மூன்றற்கும் உரித்தாய் எல்லாத் திணைகட்கும் ஒத்த மரபிற்றாகலானும், 'பின்னர் நான்கும் பெருந்திணை பெறும்,' (105) என்ற நான்கும் சான்றோர் இகழ்ந்தாற்போல அறம் முதலியவற்றது நிலையின்மை உணர்ந்து அவற்றை அவர் இகழ்தலானும், ஏறிய மடற்றிறம்' (51), முதலிய நான்கும் தீய காமமாயினவாறு போல உலகியல் நோக்கி நிலையாமையும் நற்பொருளாகலானும், உரிப்பொருள் இடை மயங்கி வருதலின்றித் தனக்கு நிலமில்லாத பெருந்திணைபோல அறம் பொருள் இன்பம் பற்றி யன்றி வேறு நிலையாமையென்பதோர் பொருளின்றாதல் ஒப்புமையானும், பெருந்திணைக்குக் காஞ்சி புறனாயிற்று.

'ஒரு தலைவன் பரவலும் புகழ்ச்சியும் வேண்ட, ஒரு புலவன் வீடுபேறு முதலிய பரிசில் வேண்டலின், அவை தம்மின் வேறாகித் ஒருதலைக்காமமாகிய கைக்கிளையோடு ஒத்தலின், பாடாண் திணை கைக்கிளைப் புறனாயிற்று.'

இவ்வாறு அகப்பொருளுக்குரிய ஏழு திணைகளையும் புறப்பொருளுக்கு உரிய ஏழு திணைகளையும் பொருத்திக் காணும் போது பலப்பல வாழ்க்கை உண்மைகள் நமக்குப் புலனா கின்றன. சிலர் தமிழ் இலக்கணத்தே அகப்பொருளுக்கு வகுத்த முதல் கரு உரி முதலியவற்றையும் அவற்றின் கூறுபாடு களையும் ,புறப்பொருளுக்கு வகுக்காமையின், அவர்கள் புறத்தை அத்துணையாகப் போற்றவில்லை என்று குறைப்பட்டுக் கொள்வர். என்றாலும், நச்சினார்க்கினியரின் இந்த உரை விளக்கங்களை ஊன்றிப் பார்ப்பாராயின், அவ்வாறு கூறாமைக்குக் காரணம் புலப்படும். அகத்துப் புறன் என்று கூறிய அமைதியாலேயே அகத்திற்கு உரிய அத்தனையும் புறத்திணைகளுக்கும் பொதுவாகத்தானே கொள்ளவேண்டும்? அவ்வாறு கொள்ளும் நெறியும், கொள்ளுவது எவ்வெவ்வாறு பொருந்தியுள்ளதென்ற தன்மையும், அவை பின் விரவும் வழியும், நச்சினார்க்கினியர் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார். இவ்வாறு உணர்தலைத்தான் போலும் தொல்காப்பியர்,

புறத்திணை இயல் முதல் சூத்திரத்திலேயே 'அரில் தப உணர்ந்தோர்' என்று காட்டுகின்றார்! இவ்வாறு காணாது புறத்துக்கும் அத்துணை முதல் கரு உரிப் பொருள்களையும் கூறிக்கொண்டே செல்லின், அது கூறியது கூறலென்னும் குற்றத்தின்பாற் படாதோ? மேற்காட்டிய ஏழு விளக்கங் களையும் நன்கு நோக்கின், அவற்றின் பொருத்தம் விளங்கித் தோன்றும் என்பது உறுதி.

இனி, இப்புறப் பொருளில் இன்னின்ன பொருள்கள் விளக்கப் பெறுகின்றன என ஓரளவு காணின், தமிழர் வாழ்க்கை நெறியை ஒருவாறு கண்டவராவோம். காதல் வாழ்வில் மட்டுமன்றிக் கடமை வாழ்விலும் அவர்கள் திளைத் திருந்தார்கள் என்பதைப் புறம் பற்றிய இலக்கியங்களும் இலக்கணங்களும் எடுத்துக் காட்டுகின்றன. 'இப்புறத்தில் போர் செய்தல்தானே பெரும்பாலும் பேசப்படுகின்றது? அது பெருவேந்தருக்கு உரிய தொழிலன்றோ! அதைச் சிறப்பித்துப் பேசுதல் எப்படி மக்கள் வாழ்க்கையைப் பேசுவதாக முடியும்?' என்ற வினா எழும். எனினும், நூலாக்கும் நல்லோர், மேல்வரிச் சட்டமாக வாழ்வில் உயர்ந்தோரை வைத்துக் கொண்டேதான் பொதுவாழ்வை வரையறுப்பார்கள் என்பது எந்த நாட்டிலும் கைக்கொள்ளும் வழக்கந்தானே? வெற்று அரச வாழ்வை மட்டும் குறிப்பதாயின், நாமே முன் காட்டிய வரலாற்று ஆசிரியர் இழைத்த தவற்று வழி, இதுவும் தவறாகும். ஆனால், இங்குப் புறத்தில் அவ்வாறு அரசர் வாழ்வு மட்டும் பேசப்பட வில்லை. அவர்தம் கடமையை அறிவுறுத்துவதன் மூலம், அவர் நாட்டுக்கு ஆற்றவேண்டிய கடமையையும் அவர் வழி மக்கள் மேற்கொள்ளவேண்டிய வாழ்வையும், பிறவற்றையும் விளக்கு கின்றனர் புலவர். அதுமட்டுமன்றி, வாகையும், காஞ்சியும், பாடாண் திணையும் வெற்று அரச வாழ்வை மட்டுமின்றிப் பெரும்பாலும் பொதுமக்கள் வாழ்க்கையைப் பற்றியும் பாராட்டுகின்றனவே! எனவே, புற வாழ்வு, அனைத்தையும் உள்ளடக்கிய ஒன்றே என்பதும், அதன்வழித் தமிழர் வாழ்க்கை பல்வகையில் சிறந்திருந்தது என்பதும் தேற்றம்.

தமிழர் புறவாழ்வில் என்னென்ன பொருள்கள் பேசப்படுகின்றன என்பதைத் தொகுத்துக் கண்டோம். அவற்றுள் ஒரு சிலவற்றை விளக்கமாகக் காணல் வேண்டும். போர் மட்டும் குறிப்பது புறமாகாது. புறத்திணையினுள் கடவுள் நெறியும், அற வாழ்வும் பொருளின் தேவையும் பேசப்படுகின்றன. பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லையாதலால், அப்பொருளைப் பற்றிய விளக்கமே அதிகமாய் உள்ளது. பொருள் காரணமாகவும், பொருள் சார்ந்த நிலம் நாடு பிற காரணமாகவுமே, நாட்டிலும் உலகிலும் பல போர்கள் நடப்பதைக் காண்கின்றோம். இதே நிலைதான் தமிழ் நாட்டிலும். மன்னர்களும் குறுநில வேந்தர்களும் தத்தம் வாழ்வையும் வளத்தையும் பெருக்க வேண்டுமென்று நினைப்பார்கள்; அதன்வழிச் செயலாற்றவும் தொடங்குவார்கள்; அதற்கு வழியாகப் பகைவர்தம் ஊர்ப்புறத்துள்ள பசுக்களை மடக்குவார்கள். அதையே வெட்சி என்றார்கள். பிறகு போர் தொடங்கும். அப்போது பகைவர்தம் நாட்டைக் கைக்கொள்ள வழி வகை ஏற்படும் நிலையையே வஞ்சி என்றார்கள். அவ்வாறு மாற்றாரை ஆற்றல் அழிக்குமுன் அவர்தம் மதிலைக் கடந்தாக வேண்டும். அம்மதிலைப் பற்றி நடக்கும் போரே உழிஞையாயிற்று. பின்பு போர்க்களத்திலே ஒருவரோடொருவர் எதிர் நின்று செய்யும் போரே தும்பையாகச் சிறந்தது. இவைகளே போர்க்கு முக்கியமான நான்கு திணைகள்; அகப்பொருளுக்கு முக்கியமான நால்வகைத் திணைகளுக்குப் புறமான நான்கு திணைகள். இவை தவிர மற்றவையெல்லாம், இவற்றைச் சார்ந்தும், அறம், வீடு ஆகிய பிறவற்றைப் பற்றியும் விளக்கிக்கொண்டே செல்லுகின்றன.

போரைப் பற்றி இத்துணை விளக்கம் வேண்டுமா? புறத்திணைகள் ஏழனுள் நான்கு இதற்கு ஒதுக்கப் பெறுவானேன்? போர் பொருள் பற்றித் தோன்றுவதொன்று என்பதை நாம் மேலே கண்டோம். அப்பொருளே இவ்வுலக வாழ்வின் அச்சாணி என்பதை மறுப்பார் யார்?

'பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்' (குறள். 751)

என்ற வள்ளுவர் வாய்மொழிப்படி, அனைத்தும் உலகில் பொருளால் ஆக்கம் பெறும். பொருள் இருந்தால்தான் அறமாற்ற முடியும்; அவாவிய இன்பம் துய்க்க வழி ஏற்படும்; பின் வாழ்வாங்கு வாழ்ந்து வான் உறையும் தெய்வத்துச் சேர்க்கப் பெறுதலும் கூடும். எனவே, பொருள் பற்றியும் அப் பொருள்பற்றி எழும் போர் பற்றியும், புறத்தில் அதிக மாகக் கூறுதல் தவறன்று. வள்ளுவர் அறத்துப்பாலும் காமத்துப்பாலும் அளவிற் சிறியனவாக, பொருட்பாலை நூலின் பாதி அளவுக்கு மேலாக்கிய காரணமும் இதுவே. பொருள் வழிப் பிறக்கும் போரின் அறத்தைக் குறிக்கும் நூலாகிய 'பகவற் கீதை'தானே இன்று பாரதத்தில் நன்கு போற்றப் படுகின்றது? ஆகவே, போர்பற்றி இத்துணை விரிவு தேவையே. அதிலும், வெறும்போர் விளக்கமோ, அன்றிப் போர்வெறியோ பற்றிக் கூறாது, அப்போராற்றும் நல்ல வழித்துறைகளையும், அவற்றை அறத்தாற்றில் ஆற்றவேண்டிய அமைதியினையும், போராற்றுங்கால் புவி மன்னரும் அவர் படையும் காக்க வேண்டிய நல்ல அற நெறிகளையும், மாற்று வேந்தன் அறத்தாறு வழுவி அவலம் புரிந்த வழி ஆற்றவேண்டிய செயல்களையும், விளக்கமாகப் புறம் எடுத்துக் காட்டுகிறது; இன்னும் மக்கள் வாழ்வில் புரியும் நலங்கேடுகளையும் பிறவற்றையும் விளக்கிக் காட்டுகின்றது. அவற்றை யெல்லாம் பின் இலக்கியங்கள் வழிக் காணலாம் என்ற அமைவில், இங்கு இந்த அளவோடு நிறுத்திக் கொள்ளலாம்.

பொருளும் போருமன்றிப் புறத்தில் அறம் பற்றியும் கடவுள் நெறி பற்றியும் அவற்றின் வழி வீடுபெறும் நலம் பற்றியுங்கூடக் கூறப்பட்டுள்ளன. அகப்பொருளில் கருப்பொருள்களைப் பற்றிக் கூறும்போது, ஆசிரியர் அவ்வத் திணை நிலங்கட்குத் தெய்வமாக **மாயோன், சேயோன், வேந்தன், வருணன்** என்ற நால்வரைக் குறிக்கின்றார். ஆயினும், புறத்திலே 'கடவுள் வாழ்த்து' என்ற ஒன்று நாட்டில் நிலை பெற்றிருப்பதைக் காட்டி, அது வரும் வழியையும் காட்டுகின்றார்.

'கொடி நிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே. (புறம். 27)

என்கின்றார். இதற்கு உரை தந்த நச்சினார்க்கினியர் 'கீழ்த் திசைக்கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம், ஒரு பற்றுக்கோடுமின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள், தண்கதிர் மண்டிலம் என்று சொல்லப்பட்ட குற்றந் தீர்ந்த சிறப்பினையுடைய முற் கூறப்பட்ட மூன்று தெய்வமும், முற்கூறிய அமரரோடே கருதுமாற்றால் தோன்றும்,' என்கின்றார். இதனானே கடவுள் வாழ்த்தும் அவ்விறைவனைப் போற்றும் முறையும் நாட்டின் புற ஒழுக்கமாக அமைந்துள்ளனவென அறிகின்றோம். சூரிய சந்திரராகிய கொடிநிலையும் வள்ளியும் போற்றப்படுகின்றன. அவற்றின் மேலாகக் கட்டற்ற அருவாகி அப்பாலுக்கப்பாலாய் நிற்கும் ஆண்டவன் தன்மையையும் தொல்காப்பியர் சுட்டிக் காட்டுகின்றார். இக்காலத்துப் பரந்துள்ள பல்வேறு வகைப்பட்ட உருவ வழிபாடுகளும் பிறவும் இலவேனும், இறைவன் மக்கள் மன அறிவைக் கடந்து அமைந்துள்ள ஒரு பொருளானவன் என்பதை அன்றைய தமிழர்கள் உணர்திருந் தார்கள் என்பதற்கு இது சிறந்த சான்றாகுமன்றோ!

மற்றும் கடவுள் உணர்வோடு உலகம் நிலையாது யென்ற துறவு உணர்வும் இங்கு நிலைபெற்றிருந்ததாக அறிகின்றோம். காஞ்சித் திணையை விளக்க வந்த தொல்காப்பியர்,

'பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே' (புறம். 18)

என்று விளக்குகின்றார். பின்பு அக்காஞ்சித் திணையின் துறைகளை விளக்கும் காலத்து, அந்த நிலையாமையை எந்த வழியில் காட்டுகின்றார் என்பது விளங்குகின்றது. முன் பல திணைகளில் பல்வேறு வகைப்பட்ட போர்நிலைகளைக் கண்டவர், கருத்தழிந்து, உலக நிலையாமை உணர்ந்து, போரை நிறுத்த வேண்டு மென்பதே, இந்நிலையாமை விளக்கத்தின் குறிக்கோளாய் இருக்கின்றது. 'உலகம் பொய்! பிற அனைத்தும் பொய்,' என்று நில்லா நிலைமையை எடுத்து விளக்காது, ஆசிரியர் முன்னர்க் காட்டிய போர்களைப் பற்றி யெல்லாம்

எண்ணி, அவற்றில் இறந்தவரைப் பற்றியெல்லாம் அவர்தம் சுற்றமும் பிறரும் வருந்தும் நிலையை எண்ணி, அந்த நிலையில் மேலும் போராற்ற வேண்டும் என்ற பேராவலைத் தணிக்கத் தான், இத்தகைய நிலையாமையை வற்புறுத்துகின்றாரோ என்று ஐயுறுமாறு காஞ்சியின் பிரிவு பேசப்படுகிறது.

தொல்காப்பியனாரே போராடும் வெறியை ஒப்புகிறார் என்று, ஒருவன் கடமை மறந்து, உலக நெறி மறந்து, தன் வலியின் நிலை ஒன்றையே கருதி, என்றும் போரே செய்து வாழத் திட்டமிட்டுச் சென்றுகொண்டே யிருப்பானாயின், அவனை அறவேலியிட்டுத் தடுக்க வேண்டுவதுதானே அறிஞன் கடன்! அந்த நிலையிலேதான் தொல்காப்பியர் காஞ்சியை இடையில் வைத்து, போர்க் கடைமையின் எல்லையை வகுத்து, அது அளவு மீறினால் வரும் தொல்லையை விளக்கி, போர்க் களத்தில் மகனை இழந்த தாயையும், கணவனை இழந்த மனைவியையும், பிற நிலைமையையும் எதிரே காட்டி, இந்த நிலையில் உலகம் செல்வது தக்கதன்று, எதற்கும் எல்லையுண்டு,' என்று விளக்கி, அமைதியை நிலைநாட்டவே ஆய்ந்துணர்ந்து இக்காஞ்சித் திணையைப் புகுத்தியுள்ளனர். நாடெலாம் வெற்றி கொண்டு, நாட்டிலே பத்தினி தேவிக்கு விழா எடுக்க வந்த செங்குட்டுவன், மீண்டும் தமிழ் மன்னர்மேல் சீற்றங்கொண்டு படையெடுக்க நினைக்குங்கால், அங்கிருந்த அறிஞனாகிய மாடல மறையோன் இளமையும் யாக்கையும் செல்வமும் நிலையாதன என அவன் முன்னே எடுத்துக்காட்டி,

'ஐயைந் திரட்டி சென்றதன் பின்னும்
அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்,
மறக்கள வேள்வி செய்வோய் ஆயினை' (சிலப். 23: 130-32)

என்று அவன் சினத்தை அவித்து, அவனைச் சீர்திருத்திய ஒரு காட்சி, இத்தொல்காப்பியத்துக்கு இலக்கியமாக அமைகின்ற தன்றோ? வஞ்சிக் காண்டமே வடநாட்டுப் படை எடுப்பாகிய போர்விளக்கும் புறப்பாட்டாய் இருக்க, அதன் இறுதியில் இக் காஞ்சித் திணையைக் காட்டியிருப்பது எவ்வளவு சிறந்துள்ளது!

இவ்வாறு காஞ்சித் திணையைக் காட்டிய காரணத்தாலே, அரசனோ அல்லது செல்வனோ, அனைத்து வாழ்வையும் துறந்து ஆண்டியாகிவிட வேண்டுமென்று யாரும் கூறவில்லை.

வரலாறும் அப்படிச் சென்றவரைக் காட்டாது என் நினைக்கின்றேன். பின் இந் நிலையாமைப் பேச்சுத்தான் எதற்கோ எனில், அளவுக்குமீறிய போரின் நிறுத்தத்தை மட்டுமன்றி, பிற உண்மைகளையும் இதனால் கூற விழைகின்றார். பொருளைப் போர் மூலமும், வீட்டைக் கடவுள் வாழ்த்து, நிலையாமை வழியும் காட்டும் புறவாழ்வு, அறத்தைப்பற்றிக் கூறவில்லை என எண்ணுவோர்க்குப் பதிலையே இந்தக் காஞ்சித் திணை தருகின்றது. காஞ்சியின் கருத்து, பாடாண் திணையின் புற வாழ்வு பற்றிய இலக்கணத்தே இடம் பெற்றுள்ளது. இவ்வாறு நிலையாமையை உணர்ந்த ஒருவன், உலகை நோக்கி, வாழும் நெறியும் வாழும் முறையும் கண்டு, தன்னைப்போலப் பிறரை ஒத்து நோக்கி, எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கும் மெய் வழியை ஆராய்ந்து, அதன் வழி அறமாற்றுதலே காஞ்சித் திணை வழியில் எழுந்த பாடாண் திணை யாகும். அரசனைப் பாடிச் செல்லும் கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் தாம் தாம் அவ் வரசனிடம் பெற்ற பெருஞ் செல்வத்தைப் பாராட்டுவது பாடாண் திணையாம். இவற்றின் மூலம் அரசன் ஆற்றும் அறநிலையும், அரசனால் விளையும் பயனும் அறிந்து கொள்ளுகின்றோம். இன்னும் அரசன் பிறந்தநாள் மங்கலம், மண்ணு மங்கலம், வாள் மங்கலம் முதலாகிய சிறந்த நாள்களில், அவன் மற்றவர்களுக்கு வாரி வழங்கும் கொடைநல மெல்லாம் பேசப்படுகின்றன. இவ்வாறு காஞ்சியாகிய நிலையாமையை உணர்ந்த நல்மக்கள், தாம் எத்துணை சேர்த்து வைப்பினும் பலன் இல்லை என்பதை உணர்ந்து, பெற்றவற்றை மற்றவருக்கும் பகிர்ந்து கொடுத்து, எல்லோரும் இன்புற்றிருக்கச் செய்ய வழிகாட்டலே பாடாண் திணையாகும். இவ்வாறு அறம், பொருள், வீடு என்ற மூன்று பொருள்களையும் மக்கள் வாழ்க்கையோடு பிணைத்துச் செல்லுகின்றது புறம்.

எனவே, தமிழ் மக்கள் சிறக்க வாழ்ந்தார்கள் என்பதும், அவர்தம் அகவாழ்வு போலவே புறவாழ்வும் விளக்கமுற்றுச் சிறந்து நின்றதென்பதும் அறிகின்றோம். தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழவேண்டுமென எந்நாட்டவரும் எம் மதத்தவரும் அன்று தொட்டு இன்றுவரை வரையறுத்துக்

கூறும் அறத்தின் அடிப்படையில் அமைந்த மனித வாழ்வே—பண்பாடும் ஒழுக்கமும் அமைந்த மனித நல்வாழ்வே—தமிழர் வாழ்வு என்பது. இந்த அகவாழ்வாலும் புற வாழ்வாலும் நன்கு புலனுகிறது.

இதுவரை கூறியவற்ருல், மக்கள் வாழ்வு எத்தகைய தென்பதும், அவருள்ளும் தமிழர் அவ்வாழ்வை எவ்வாறு பிரித்து வாழ்ந்தனர் என்பதும், அவ்வாழ்க்கை பற்றிய வரலாறுகள் மிகு பழங்காலத் தொட்டே இலக்கிய இலக்கணங்களில் பேசப்படுகின்றன என்பதும், அவர்தம் மொழி அமைப்பே அவர்தம் வாழ்க்கையைக் காட்டுகின்றதென்பதும், அத் தமிழர் வாழ்க்கை அகம், புறம் என இரண்டாகப் பகுக்கப்பட்டதென்பதும், அகவாழ்வு தலைவனும் தலைவியும் உள்ளத்தால் பெற்றுத் துய்க்கும் இன்பத்தின் அடிப்படையில் அமைந்தது என்பதும், அவ்வாழ்வு எப்படி மக்களிடையில் சிறப்புப் பெற்றிருந்த தென்பதும், அவ்வாழ்வில் இன்றியமையாது அவருடன் நின்ருர் யாவர் என்பதும், அவர்தம் அகவாழ்வுக்கு அடிப்படையான முதல், கரு, உரி என்ற முப்பொருள்களும் யாவை என்பதும், அவ்வக வாழ்வைப் புலவர்கள் எவ்வாறு காட்டியுள்ளார்கள் என்பதும், அவ்வக வாழ்வைப் பாடவந்த புலவர் அதன் வழி உலகுக்கு உணர்த்தியன யாவை என்பதும், அவ்வகவாழ்வு எவ்வெவ்வாறு அமையின் சிறப்புடைத்தாகுமென்பதும், காதல் வாழ்விலும் அவர்கள் கடமையை மறக்கவில்லை என்பதும், இதுபோன்றே புறவாழ்வின் நிலை எத்தகையதென்பதும், அப் புற வாழ்வின் ஒவ்வொரு நிலையும் எவ்வெவ்வாறு அகவாழ்வுக்குப் புறனய் அமைகின்றது என்பதும், இப்புறப் பொருளில் காணப்பெறுவன யாவை என்பதும், அவை மனித வாழ்வோடு எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளன என்பதும், அப்புற வாழ்வு மனிதருக்கு அறிவுறுத்துவன யாவை என்பதும், அகம் புறம் என்ற இரண்டுமே மனித வாழ்வின் அமைப்பில் பிரிக்க முடியாது பிணைந்து நின்று, அவனைச் சிறந்து வாழச் செய்கின்றன என்பதும் அறிந்துகொண்டோம். இனி இவ்வாழ்வோடு மேலே கண்ட கவிதை எவ்வெவ்வாறு பிணைந்துள்ளதென்பதைச் சற்று விரிவாகக் காண்போம்.

1. வாழ்வொடு பிணைந்த கவிதை

கவிதையைப் பற்றியும் வாழ்க்கையைப் பற்றியும் தனித் தனியாக ஆராய்ந்தோம். இனி, அவற்றின் இணைப்பைப் பற்றியும், அவை ஒன்றோடொன்று எவ்வாறு பின்னிப் பிணைந் துள்ளன என்பது பற்றியும், 'கவிதை யின்றேல் வாழ்க்கை யில்லை, வாழ்க்கை யின்றேல் கவிதை இல்லை,' என்பது பற்றியும் காணுதல் வேண்டும். கவிதை வாழ்வின் ஊற்றிலே மிதப்பது என்பதை மேலே கண்டோம். உலகில் எத்தனையோ கவிதைகள் உண்டாகின்றன. மனிதன் பாடத்தொடங்கிய அந்த நாள் முதல் இன்றுவரை எழுதப்பட்ட கவிதைகளின் எண்ணிக் கையை வரையறுக்க இயலாது. ஆனால், அவற்றுள் வாழ்வன மிகச் சிலவே. இந்த நாளிலுங்கூட, எத்தனையோபேர் கவிதை பாடுகின்றார்கள். அவற்றுள் மிகப்பல தோன்றிய அன்றே மாய்கின்றன. சில அவ்வாறு சாகாக் கவியாக நிலைபெற்று வாழ்வதற்கும், பல அன்றே மாய்ந்து அற்ப ஆயுளில் முடிவ தற்கும் அமைந்த காரணங்கள்தாம் யாவை? அவற்றைக் காணில், உண்மைக் கவிதைப் பண்பும், அது வாழ்வோடு பிணைந்த தொடர்பும் நன்கு விளங்கும்.

'உளங்குளிர்ந்த போதெலாம் உவந்துவந்து பாடுவன்;

என்றார் ஓர் அடியார்.

'உள்ளத்தில் உண்மைஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளிஉண் டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவும்.'

என்கின்றார் பாரதியார். இவற்றின் மூலம், உள்ளம் குளிர்ந்து ஒளி சிறக்கும் நல்ல அமைதி கலந்த வாழ்க்கையிலேதான் உயர்ந்த கவி பிறக்கும் என்ற உண்மை புலனாகின்றதன்றோ? இதனால், கவி செல்வத்தில் புரளவேண்டும் என்பதன்று கருத்து. எதனால் இரண்டு ஆசிரியர்களும் உள்ளத்தைக் குறிக்கின்றார்கள்? 'உள்ளுவ தெல்லாம் உயர் வுள்ளும்' நல்ல உள்ளம் வறுமையைக் கண்டு வாடாது; செல்வத்தைக் கொண்டு செம்மாந்து சீரழியாது. அந்த உள்ளத்தின் பண்பு அமைதி காண்பதே. அந்த அமைதிதான் வாழ்வில் வேண்டுவது. 'ஆசைக்கோர் அளவில்லை,' என்ற தாயுமானவர் பாட்டின்படி, எதைக் கட்டி யாளினும், 'மேலும் எங்கே செல்வது?' என்ற ஆசையோடு, மேலும் மேலும் தாவிச்செல்லும் மனப்பாங்கு மனித உணர்வுக்கு மாறுபட்ட ஒன்றாகும். அந்த மனப் போக்கில், கவிதையும் கற்பனையும் விளையுமா? கருமமே கண்ணாக, தன் வாழ்வையும் பொருட்படுத்தாது, பொருளோ, அதிகாரமோ, அன்றிப் பதவியோ என்று வெறி பிடித்தாடும் உள்ளம் எப்படி ஒளிபெற்ற உள்ளமாகும்? அதே வேளையில் வறுமையுறினும் வழுக்கி விழாது, வாழ்வில் மனநிறைவு பெற்று, மாசற்று வாழும் நல்ல மனித உள்ளத்திலேதான் எத்தனைக் குளிர்ச்சியும் நல்லொளியும் நிறைந்து நிற்கும்! அந்த உள்ளங்களில் பாட்டுப் பெருக்கெடுத்து ஓடி வாராது நிற்குமா? அவர்தம் உள்ளங்கள் பாடிய பாடல்களே வாழும் பாடல்களாகும். அவை மட்டும் ஏன் வாழவேண்டும்?

பாடல்கள் அல்லது கவிதைகள் வாழ்வோடு பிணைந்தனவாய் இருப்பின், அவை என்றென்றும் வாழும் என்பது உறுதி. சங்க காலத்திலே எத்தனையோ நூற்றுக்கணக்கான பாடல்கள் தோன்றின. அவற்றுள் பெரும்பாலன இன்றளவும், இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்தும், வாழ்கின்றன. அவை அவ்வாறு வாழக் காரணம் என்ன? அவை தம்மொடு தமிழர் வாழ்வை, தமிழ் நாட்டு வாழ்வை, தமிழின் வாழ்வைப் பின்னிக்கொண்டு போதலேயாகும். அவ்வாறு வாழ்வின் அடிப்படையில் அமைந்த கவிதைகள் சாகா வரம் பெற்றவை

யல்லவோ? அந்தக் கவிதைகளைப் பாடிய புலவருட் பலர், வறுமையில் வாடி வதங்கியவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் பாடல்களே அவர்களை ஆட்கொண்ட வறுமைக் கொடுமையை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. எனினும், அவர்கள் உள்ளங்கள் அந்த வறுமையால் வாடவில்லை. உடல் நிலை வாடியிருக்கும்; ஆனால், உள்ளம் மலர்ந்திருக்கும். அந்த மலர்ந்த நிலையில், அவர்கள் தங்கள் வாழ்வையே பாட்டாகப் பாடும் பண்பு பெற்றுவிட்டார்கள். அதனாலேதான் அவர்கள் வாழ்வின் வறுமையும் பாட்டின்வழிச் சிறப்புற்றுக் காண்கின்றது. அந்த வாழ்வோடு பிணைந்த பிற பண்புகளும், செயல்களும் கவிதைகளின் பொருள்களாய் அமைந்துள்ளன. அவ்வாறு வாழ்வைப் பிணைத்த காரணமேதான் கவிதை இன்றளவும் வாழ்வதற்கு அடிப்படையாய் அமைந்துள்ளது.

கவிதை பாடும் புலவர்கள் எத்தனையோ வகையான பொருள்களைபற்றிப் பாடுகின்றார்கள். சிலர் கண்டதையும், வாழ்வில் தாம் அனுபவிப்பதையும் உணர்ந்துணர்ந்து பாடுகின்றனர். ஆனால், சிலர் காணாத ஒன்றைப்பற்றிப் பலப்பல பாடல்கள் பாடுகின்றனர். காணாத ஒன்றைப்பற்றிக் கேட்பதைக் காட்டிலும், காணும் ஒன்றைப்பற்றிக் கேட்பதே மக்கள் விருப்பமாய் அமைகின்றது. நாளிதழைப் புரட்டிப் பார்க்கும் போது, ஒருவர் தாம் நேரிற்கண்ட ஒரு நிகழ்ச்சியை முதன் முதல் தேடி எடுத்து ஆவலோடு படிப்பதை இன்றும் காண்கின்றோமே! 'நேரில் கண்ட நிகழ்ச்சிதானே! அதை ஏன் படிக்க வேண்டும்?' என்றோ, 'அல்லது 'கடைசியில் படிக்கலாம்,' என்றோ யாரும் விட்டுவிடுவதில்லை. அதுபோன்றே, கவிதைகளும் மனிதன் வாழ்வில் காணும் நிலைகளை விளக்கின், பலராலும் விரும்பிப் படிக்கப்படும். அல்லன எல்லாம் சொல்லாமலே நாட்டிலிருந்து விடுதலை பெற்றுக் கொள்ளும்.

நாட்டில் சில கவிதைகள் வாழவேண்டா என்பர் ஒரு சாரார். அதற்கு அவர்கள் காட்டும் காரணங்கள் பல இருக்கலாம். எனினும், அந்தக் காரணங்களால் அவர்கள் விரும்பும் கவிதைகள் நாட்டில் அழிவு பெறுவதில்லை. அதற்கு மாறாக,

அவை இன்னும் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு, உலகின் பல பாகங்களுக்கும் பரவிச் செல்லுகின்றன. இங்கும் அவை பலப்பல வகையில் ஆராயப்பெற்று, அரசாங்கத்திடமும் மக்களிடமும் நன்மதிப்பைப் பெற்று உயர்கின்றன. காரணம் என்ன? ஒரு சிலர் தீவிரமாக, 'இந்தக் கவிதைகள் நாட்டுக்குத் தீங்கிழைப்பன; இவை தேவை இல்லை;' என்று நாடெங்கும் பறைசாற்றிக் கூறியும், வெறுப்புக் காரணமாக அவற்றை எடுத்துக்காட்டியுங்கூட, அவை மேன்மேலும் வளர்ந்து கொண்டே சென்று, நாட்டுக் காவியம் என்ற பெயரளவிலன்றி உலகக் காவியமாகவே மாறக் காரணம் என்ன? அந்தக் கவிதைகளில் வாழ்க்கை பின்னிக் கிடப்பது ஒன்றுதான் முக்கிய காரணம். உதாரணமாகக் கம்பராமாயணத்தை எடுத்துக் கொள்வோம். அதை நம் நாட்டில் வேண்டா என்று வெறுப்பவர் சிலர் உளர். 'அது வடநாட்டுக் காவியம்; தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது; தமிழர் பண்பாட்டுக்கு ஒவ்வாதது; எனவே அதை நாட்டை விட்டே ஒழித்துவிட வேண்டும்' என்பர் ஒரு சாரார். அவர்கள் வாதப்படி, அது சரியென்றே வைத்துக்கொள்வோம். அப்படி மக்களுக்கு ஒவ்வாத காவியம் ஏன் நாட்டில் வாழ வேண்டும்? அவ்வாறு வாழ்தல் மக்கள் சமுதாயத்துக்குக் கடு செய்வதாகத்தான் முடியும். அதை இல்லை என்று எவர் மறுக்கக்கூடும்? வடநாட்டு வாழ்க்கை முறைக்கும், பண்பாட்டுக்கும், பிற நிலைகளுக்கும் ஏற்ப, வால்மீகி அந்தக் கதை எழுதினர் என்றால், அது அந்த நாட்டுக்கு ஏற்றதாகட்டும். இங்கு ஏன் அது மொழி பெயர்க்கப்பட்டு, பயிலப் பெறல் வேண்டும்? அதுவும் இந்நாட்டுப் பண்பு, கலாசாரம், சமுதாயம் ஆகிய ஒன்றுக்கும் ஒவ்வாத கதை அதுவாயிற்றே? இதை இங்கே வாழவிடலாமா? கேள்விகள் சரியானவைதாம். கதை வடநாட்டுக் கதைதான். வடவர் தம் பழக்க வழக்கங்களும் வேறுதான். ஆனல், அந்தக் கதையைத் தமிழில் மொழி பெயர்த்தவர் என்ன செய்தார் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

இன்று உலகம் சுருங்கிய அளவில் வந்து விட்டது. ஒரே நாளில் நாமும் உலகைச் சுற்றி வந்துவிடும் நாள் அண்மையில்

உள்ளது. இந்தச் சுருங்கிய உலகில் எத்தனையோ நாடுகள் உள்ளன. அவ்வவற்றின் பண்பாடுகளும் கலாசாரமும் பிறவும் வெவ்வேறானவை. அவை பற்றி வெவ்வேறு மொழியில் எழுதப் பட்ட இலக்கியங்களும் அளவில. அவற்றையெல்லாம் உலகில் பல பகுதிகளில் வாழும் மக்கள் தத்தம் மொழியில் பெயர்த் தெழுதிப் பயில ஆரம்பித்து விட்டார்கள். ஆங்கிலத்தில் உள்ள சேக்ஸ்பியரின் நாடகங்கள் பல தமிழிலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. இப்படியே பல மொழிகளிலும் பலப்பல இலக்கியங்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. ஆயினும், அவற்றில் ஆங்கில வாடை அதிகமாக இராது. ஆங்கில நாட்டில் மணமும் மணமுறிவும், மாற்றானோடு கைகோத்து நடனமாடு வதும், குடித்து மயங்கி முறைமாறி நடப்பதும் வாழ்வியல்பு. அதை அந்நாட்டு இலக்கியங்கள் அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றன. அந்த நாடகங்களையோ பிற இலக்கியங்களையோ தமிழில் மொழி பெயர்க்கும்போது, அப்படியே மொழி பெயர்த்துவிட்டால் அவற்றை யார் பயிலுவர்? யார் அந்த மொழிபெயர்ப்புக் காவியங்களுக்கு ஏற்றம் தந்து போற்றுவர்? ஆனால், அந் நாடகங்களை, அவற்றின் அடிப்படைத் தன்மை கெடாத வகையிலே, நம் நாட்டுப் பண்பாட்டுக்கு ஏற்ற முறையில் மாற்றி எழுதின், அவை மக்களால் போற்றப்படும் என்பது உறுதி. ஆங்கில மொழியில் மட்டுமன்றி, இன்றைய உலக மொழிகள் பலவற்றிலிருந்தும் பலப்பல கதைகளும் காவியங்களும் தமிழில் பெயர்க்கப்படுகின்றன. ஆயினும், அவற்றுள் பெரும்பாலன தோன்றிய சில காலத்துக்குள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுகின்றன. ஒரு சில, நம் நாட்டுக் கவிதைகளுக்கு ஒப்ப, நாட்டில் உலவிச் சிறக்க வாழ் கின்றன. காரணம் ஒன்றேதான். அந்த வாழும் கவிதைகளை மொழி பெயர்த்தவர்கள், பிற நாட்டுக் கவிதையாயினும், நம் நாட்டுப் பண்பாட்டுக்கு ஏற்ப அதனை அமைத்து, முதல் நூல் நிலையும் கெடாது ஆக்கியிருக்கிறார்கள் என்பதே. எனவே, அவ்வந்நாட்டு மக்களது வாழ்வோடு பின்னிய காவியங்கள், கவிதைகள், அனைத்தும் வேண்டாவென வெறுத்தாலுங்கூட, அவை வளர்ந்து கொண்டேதான் போகும்.

கவிதைகளுக்கு மட்டுமன்று இந்த நீதி. வாழ்வில் பயன் படும் அனைத்துக்குமே இந்த நீதி பொருந்துவதாகும். இன்று நம் நாட்டில் நடைபெறும் மதுவிலக்கினை எடுத்துக்கொள் வோம். அரசாங்கம் தனது கட்சியின் அடிப்படைக் கொள்கை என்பதற்காக மதுவை நீக்கவேண்டும் என்று முயற்சி செய் கின்றது. முயற்சி நல்லதுதான்; வரவேற்கத் தக்கதுங்கூட. ஆனாலும், அது வெற்றி பெறவில்லை என்பதை யாவரும் அறிவர். அரசாங்கமே அறிந்து பலமுறை அவலக் குரல் எழுப்பியிருக் கிறது; மக்களை 'ஒத்துழைக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, சட்டத்தாலும் கட்டுப்பாடு களாலும், பிரசாரத்தாலும் அது ஒழிக்கப்படாதது. ஏன்? ஆங்கில அரசாங்கத்தார் நாட்டை ஆளும்போது கள்ளுக் கடைகளையும் வைத்துவிட்டு மதுவிலக்குப் பிரசாரத்துக்கு ஓர் இலாக்காவும் அமைந்திருந்தார்கள். அதற்கு அவர்கள் கூறிய காரணம், 'பிரசாரத்தின் மூலம் மதுவின் கொடுமைகளை விளக்கி மக்கள் மனம் மாறச் செய்யின், பிறகு கடைகள் தாமாகவே மூடப்பெறும்,' என்பதுதான். எனினும், அவர்கள் அதையும் சரிவரச் செய்யவில்லை. ஆனால், அவர்கள் காட்டிய காரணம் முழுக்க ஒத்துக்கொள்ளக்கூடிய ஒன்று என்பதை யார் மறுக்கக்கூடும்? எத்தனை சட்ட திட்டங்களும் கட்டுப் பாடுகளும் மக்கள்மீது திணிக்கப்பெற்றாலுங்கூட, அவை, அவர்களைச் சிறிது அடங்கியிருக்கச் செய்யுமே ஒழிய, அவர்கள் வாழ்வினது அடிப்படைகளை வேரறுக்க முடியாது. அவர்கள் உள்ளத்திலே குமுறிக்கொண்டிருக்கும் வாழ்வு பற்றிய கொள்கைகள் ஒரு நாள் வெளிப்பட்டுத்தான் தீரும். அது போன்றே கள் குடிப்பவர்தம் வாழ்க்கை அதனோடு பின்னிக் கிடக்கின்றது. அது சரியா தவறா என்று நாம் இங்கு ஆராய வேண்டா. வரலாற்றையும் இலக்கியங்களையும் ஆராயினும், அதைத் தவறு என்று காட்ட முடியாது. சங்ககால இலக்கியங் களிலே இக் கள் பேசப்படுகிறது. 'தேக்கிலை பெய்த தேறல்' என்று, புலவரால் போற்றப்படுகின்றது. இவற்றை உண்டு வாழ்ந்த மக்கள் இருந்திருக்கிறார்கள். வடமொழிக் காவியங் களிலும் சோமபான மென்றும் பிறவகையிலும் போதைதரும்

இப்பொருள்கள் பேசப்படுகின்றன. உயர்குலத்தார் என்று பேசப் படுவர்கள்கூட இத்தகைய கள்ளையும் கறியையும் உண்டதாக அறிகின்றோம். அந்தணர் குலத்தில் பிறந்த கபிலர் பாடல் களில் இந்த உண்மை பொதிந்திருப்பதை அறிஞர் ஆதாரங் காட்டுவர். இப்படி வடநாட்டிலும் தென்னாட்டிலும் இக் கள் குடித்தல் சிறந்த காப்பியங்களிலும் கவிதைகளிலுங்கூடச் சிறப்பாகப் பேசப்படுகிறது. அது தவறு என்று அறநூல்கள் கண்டித்த போதிலும், மக்கள் வாழ்வில் நீங்கா இடம் பெற்று விட்டது. தன் நிலை மறந்து மறச்செயல் புரியத் தூண்டும் கொடுமை பற்றி அறநூல்கள் அதை நீக்கக் கூறினும், வாழ்வில் அது நிலைத்த இடம் பெற்றுவிட்டது. அதை நினைத்துத்தானோ என்னவோ, இக்காலத்தில் 'பெர்மிட்டு' முறை வழங்குவது போன்று, வள்ளுவரும் 'உணின் உண்க' எனக் கூறிவிட்டார் என்று நினைக்கவேண்டி யிருக்கிறது.

மது அருந்துவது மக்கள் வாழ்க்கையில் ஒன்றியது என அறிந்தும், அரசாங்கம் அதைத் தடுக்க நினைக்கின்றது. அதன் பயன் கள்ளத்தனம் நாட்டில் வளர்ந்துவிட்டது. அரசாங்கம் எத்தனையோ வகையில் அக் கள்ள மதுவைத் தடுக்க முயல் கின்றது. எனினும், பயனில்லை. கள்ள மதுவின் கணக்கு வளர்ந்து கொண்டேதான் போகிறது. அரசாங்கம் எத்தனையோ பேரைச் சிறைசெய்து நாட்டைச் சீராக்க நினைக் கிறது. ஆனால், நாட்டில் அந்தக் கொடுமை வளர்ந்து கொண்டேதான் செல்கிறது. அரசாங்கம் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றது. எனினும், பயன் இல்லை. மக்களுள் பெரும்பாலார் உள்ளத்தில் ஊறிய ஒன்றாகிய அதை, அரசாங்கத்தால் நீக்க முடியாது. இன்று மட்டுமன்றி, எத்தனையோ காலங்களில், எத்தனையோ அரசாங்கங்கள் மதுவை நீக்க நினைந்திருக்கும்; முயற்சி செய்து சட்டமும் தீட்டியிருக்கும்; ஆனால், மக்கள் மனநிலை அவற்றிற்கு இடம் கொடாமையின், மறுபடியும் சட்டத்தை மாற்றியிருக்கும். மக்கள், தங்கள் வாழ்வுக்கு அது தேவை இல்லையென்று தாங்களே கருதி நீக்கும் வரையில் சட்டம் 'பயன் தாராது.'

திறனில்லா ஒரு சிலரைச் சட்டம் சிறை செய்து விடலாம். ஆனல், நாட்டு மூலே முடுக்குகளிலெல்லாம் அக் கலே வீறு கொண்டு வளர்வதை யாரால் தடைசெய்ய முடியும்? சென்ற தேர்தலின்போது, சட்டமன்ற உறுப்பினர் பலர், 'நாட்டில் திரும்பவும் மதுவைக் கொண்டுவரப் பாடு படுகின்றேம்' என்று பகிரங்கமாகக் கூறியே மக்களிடம் ஓட்டுப் பெற்றுள்ளார்கள் என்பதை நாடு அறியும். ஆகவே, மக்கள் வாழ்வோடு பிணைந்த ஒன்று கவிதையாயினும், அன்றிக் கள்ளாயினும், அன்றி வேறு எதுவாயினும், அவற்றை மக்கள் வாழ்விலிருந்து பிரிக்க முடியாது என்பது முற்றிலும் உண்மை. இது நிற்க.

ஒருவேளே ஆணையின் பலத்தாலும், அதிகார முறையாலும், பிரசார வகையாலும் ஒருவாறு மக்கள் உள்ளத்தை மறைக்கும் வகையில், சிலவற்றை—மக்கள் வாழ்வில் பின்னியவற்றை—மறைத்துவிட்டாலும், அவை அழியாது நீறுபூத்த நெருப்புப்போல உள்ளே அடங்கிக்கிடந்து, வாய்ப்பு நேரும் காலத்தில் மறுபடியும் தலேதூக்கியே நிற்கும். அந்தக் கால எல்லேயைக் கணக்கிட முடியாது. ஆயிரம் ஆண்டுகளும் ஆகலாம்; அன்றி அடுத்த ஆண்டிலேயும் வரலாம். அதற்கு மக்கள் மட்டுமன்றி மாநிலமாளும் சட்டசபைகளும் துணே புரியலாம். அவ்வாறு வாழ்வோடு பின்னியவை எவையும் மாயாது மறைந்து, காலம் வரும்போது தலேதூக்கும் என்பதற்கு, இக் காலத்தில் நாம் கொண்டாடும் புத்த ஜயந்தி விழாவே போதிய சான்ருகும்.

புத்தரின் வாழ்வு நெறி மக்கள் வாழ்க்கைக்குப் பொருந்திய ஒன்ருகும். ஏன்? ஒவ்வொரு சமயத்தின் அடிப்படையுமே வாழ்வோடு பொருந்தியதுதான். அதன் விரிவையெல்லாம் பின்னர்க் காண்போம். இன்று சமயங்களிலெல்லாம் மாசு படிந்துள்ளது.. சமயத்தினிடத்தில் பிறப்பால் வேற்றுமையும் பிற வேற்றுமைகளும் வளர்ந்து கொழுந்துவிட்டெரிவதைக் காண்கின்றேம். கடவுள் பெயரால் பல கொடுமைகள் நடைபெறுகின்றன. கடவுள் பெயரால் பல சாதிப் போராட்டங்களும், பிற போராட்டங்களும் நடைபெறுகின்றன. இவற்றை

யெல்லாம் மக்களோடு பிணைந்தவை என்று கூற முடியுமா? மக்கள் வாழ்வு ஒன்றிய வாழ்வு; எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற அடிப்படையே அவர்கள் வாழ்வு. எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றிலும் தவறக்கூடாது என்பதே அவ்வாழ்வின் அடிப்படை. அதைக் கொண்டுதான் புத்த சமயம் ஆக்கப்பெற்றது. சுயநல வாழ்வு நீங்கி, 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்,' என்ற அடிப்படையிலே, மக்களையும் பிற உயிர்களையும் ஒத்து நோக்கித் தீங்கிழையாத் தெய்வ நெறியிலே அமைந்தது மக்கள் வாழ்க்கை. மறு உலகைப்பற்றிய கவலையே கொள்ளாது, உலகில் வாழும் அனைத்தையும் அணைத்துத் தழுவிச் செல்வதே இம்மையில் மறுமை நல்கும் ஏற்றம் வாய்ந்த செயல் என்பதை வாழ்ந்து காட்டுவதே வாழ்க்கை. இவ் வாழ்க்கையை வழங்குவதுதான் புத்த நெறி. எனினும், இந்த நெறி இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாகப் பிற சமயத் தாராலும், கொலையும் புலையும் கொண்டொழுகும் மாற்று ராலும், அவர்தம் ஆளும் திறத்தாலும் மறைக்கப்பட்டிருந்தது. புத்தர் பிறந்த நாட்டில் அந்தச் சமயம் செத்தது என்றே அனைவரும் எண்ணியிருந்தனர். ஆனால், இன்றைய நாட்டு நிலை எதைக் காட்டுகின்றது? அது அழிந்ததையா? இல்லை. அது நீறுபூத்த நெருப்பாயிருந்தது; அது மக்கள் வாழ்வோடு பின்னி நின்ற காரணத்தால், மறைந்தொழியாது, நீறுபூத்த நெருப்பாகி, காலம் வந்ததும் களிநடம் புரிகின்றது. இன்றைய அரசாங்கக் கொடியில் அந்தச் சமயத்தின் அறவாழி; அச்சமய பீடமாகிய சாஞ்சியில் சின்னம்; அவர் பிறந்த நாளுக்கு என்று மில்லாத கொண்டாட்டம்; எந்த வேறுபாடுமின்றி எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒரே மேடையில் கலந்து பேசும் உணர்வு; அரசாங்க விடுமுறை; இத்தனைக்கும் இடையிலே இந்திய நாட் டிலே இதுவரை செத்ததோ என்று கருதிய ஒரு சமயத்துக்கு, வாழும் எந்தச் சமயத்துக்கும் இல்லாத ஒரு பெருஞ்சிறப்பு எதனால் ஏற்பட்டது? அச்சமயம் மக்கள் வாழ்வோடு பின்னி, மக்கள் வாழ்வு வேறு, தான் வேறு என்று பிரிக்க முடியாத நிலையில் ஆக்கப்பட்டிருப்பதனாலேயாம்.

கள்ளுக்கும் சமயத்துக்கும் பொருந்திய உண்மை கவிதைக்குப் பொருந்தாது போகுமா? எண்ணிப் பார்க்க வேண்டும். கவிதைகள் மக்கள் வாழ்வோடு பின்னியவையாகப் பிணைந்து நிற்குமாயின், அவை என்றென்றும், மக்கள் மக்களாக வாழும் வரையில், வாழ்ந்துகொண்டேதான் இருக்கும். ஒரு கவிதைத் தொகுதியில் சிற்சில குறைகள் இல்லாமற் போகா. அதனாலேயே அக் கவிதை அனைத்தும் தவறு என்று தள்ளிவிட முடியுமா? நம் நாட்டுக் கவிதையாயினும், பிற நாட்டுக் கவிதையின் மொழிபெயர்ப்பாயினும், அது நம் நாட்டு மக்கள் வாழ்வோடு பிணைந்ததாயின், வாழ வைப்போம்; நாம் வாழ வைக்காவிடினும், அவை தாமாகவே வாழும். அல்லாத இலக்கியங்களை எத்துணைதான் காக்க விரும்பினாலும், எதிர்ப் போர் ஒருவரும் இன்றியும் தாமே செத்து மடியும்.

முன் கண்ட கம்பராமாயணத்தையே நோக்குவோம். அது வடநாட்டுக் கதைதான்; நம் நாட்டுக்கு ஒவ்வாத சில பழக்க வழக்கங்கள் அதில் பயின்று வந்திருக்கவுங் கூடும். எனினும், அதைத் தமிழில் மொழி பெயர்த்தபொழுது கம்பர் என்ன செய்துள்ளார் என்பதைக் காணல் வேண்டும். தமிழ்நாட்டு வாழ்க்கையில் கற்புத் தலைசிறந்தது. பெரும் பெயர்ப் பெண்டிரின் கற்புநலம் நாட்டில்—மக்கள் வாழ்வில்—நன்கு காக்கப் பட்டு வந்தது—வருகிறது—வரும். இந்தக் கற்பு நெறியின்படி தம் போக்கில் கதையைக் கம்பர் மாற்றி அமைத்துக் கொண்டார். மாற்றான் மனைவியைத் தீண்டுவதும் குற்றம் என்பது தமிழர் கற்பு நெறி. தம் வடநாட்டுக் காவியத்தில் கம்பர் அந்த உயர்ந்த வாழ்வின் குறிக்கோளை அப்படியே பொறித்து முத்திரையிட்டு விட்டார். வால்மீகியாரின் சீதை அல்லது உண்மைச் சீதை எப்படியிருந்தாளோ, அவளைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டுவதில்லை. ஆனால், கம்பர் அவளை ஒரு தமிழ்ப் பெண்ணாக மாற்றி விட்டபின் அது தமிழர் வாழ்வோடு பிணைந்தில்லாது எங்கே போகும்? இராவணன் சீதையைக் கொண்டு செல்வதும், அவன் நாட்டில் வைத்திருப்பதும், பின்பு, அனுமன் சென்று காணும் போதும் அவள் இலக்குவன்

அமைத்த குடிலில் இருப்பதும், கம்பர் சீதையைத் தமிழ் நாட்டுப் பெண்ணாகக் காட்டிய சிறப்பு அல்லவோ? "கற்புடைப் பெண்டிர் பிறர் நெஞ்சு புகார்? என்பதன்றோ தமிழர் வாழ்க்கை நெறி? அதை விட்டு, இராவணன் அவளை அடைய நினைத்த தையே ஏன் தடுக்கவில்லை?" என்று கேட்கலாம். அப்படிக் கதையை மாற்றின், இராமாயணமே இல்லையே! பிறகு போரும் பிறவும் எங்கே? வால்மீகியார் இராவணன் சீதையை இடுப்பில் கைகொடுத்துத் தூக்கிச் சென்றான் என்கின்றார். கம்பரோ, 'மண்ணோடும் கொண்டு போனான்' என்கின்றார்; பின்பு, 'உம்பி, புல்லினால் தொடுத்த தூய சாலையில் இருந்தாள்' என்கின்றார்; இவ்வாறு வாழ்வின் அடிப்படைத் தத்துவத்தின்வழிக் கதையைத் தமிழ்நாட்டு முறைக்கு ஏற்ப மாற்றிக்கொண்டார். அவற்றைப் பற்றி விரிவாகப் பின்னர்க் காண்போம். இவ்வாறு வடநாட்டுக் கதையான போதிலும், கவிஞர் தம் உள்ளத்தால் அளந்து, தாம் வாழும் நாட்டுக்கு ஏற்ப, அதில் வாழும் மக்களுக்கு ஏற்ப, தம் கவிதையை ஆக்கிக் கொண்டமையினாலேதான் அது வாழ்கின்றது. அது வேண்டா என்ற எதிர்ப்புத் தோன்றிய காலத்தில் தேய்வதற்கு மாறாகச் சிறந்து வளர்ந்து, பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பெறுகின்றது. இந்த நிலை, வாழும் எல்லாக் கவிதைகளுக்கும் பொருந்தும். ஆகவே, கவிதையும் வாழ்க்கையும் இரு கண்போன்று ஒரே குறிக்கோள் உடையன எனலாம்.

ஆனால், அதே சமயத்தில் மற்றொன்றையும் எண்ணிப் பார்க்க வேண்டும். நாட்டில் தோன்றிய எத்தனையோ கவிதைகள், இலக்கியங்கள், கற்பனைப் பெட்டகங்கள் வேண்டா என்று பிரசாரம் செய்வார் இன்றியே அழிந்து ஒழிந்து விட்டன என்பதையும் காணல் நன்று. ஆயிரமாயிரம் ஆண்டுகளாயினும், சில கவிதைகள் சாகா வரம் பெற்றுச் சிறக்க, சென்ற நூற்றாண்டிலே தோன்றிய எண்ணற்ற இலக்கியங்கள் இப்படிக் கேட்பாரற்று மாய்ந்தொழிவானேன்? காரணம், மேற்கண்ட ஒன்றேதான். அதுதான் அந்தக் காவியங்களும் கவிதைகளும் வாழ்வோடு தொடர்பு கொள்ளாமை. அந்த

வகையில் எத்தனையோ கவிதைகளை எடுத்துக் காட்டலாம். உதாரணமாக இரண்டொன்று காட்டுவது அமையும் என எண்ணுகின்றேன்.

தமிழ் நாட்டின் வாழ்வை இன்ன வகையானது என்று யார் வரையறுத்தார்களோ, நாமறியோம். அவர்தம் வாழ்க்கையும் வரம்பும் யாரும் தவறு காணாத வகையில் அமைந்து செல்கின்றன. மனத்தினும் மாசு காணா வாழ்வு அவர் வாழ்வு. 'பகைவனுக் கருள்வாய்' என்று பரந்த மனப்பான்மையில் செல்லும் வாழ்வு அவர் வாழ்வு. இந்த நெறியிலே மற்றவனுக்குக் கொடுமை இழைக்க இடமில்லை. தவறிக் கொடுமை இழைத்தால் நெஞ்சறிந்து அஞ்சி அஞ்சி அழுங்கித் தன் தவற்றுக்குக் கழுவாய் தேடவேண்டும் என்பது அவன் வாழ்க்கை நெறி. இந்த நெறிக்கு மாசு உண்டாகும் வகையில் யார் பாட்டிசைத்தாலும்—அது வாழ முடியுமா?

சென்ற நூற்றாண்டில் தமிழ் நாட்டில் எத்தனையோ தலபுராணங்கள் தோன்றின. அவற்றின் கவிதைப் பண்பும் சுவையும் காவிய நடையும் கற்போர்க்கு விருந்தாய் அமைவனதாம். கச்சியப்ப முனிவர் பாடிய காஞ்சிப் புராணம் இலக்கியச் செறிவு வாய்ந்தது என்பர். தணிகைப் புராணமும் புலவரால் ஆய்ந்தாய்ந்து ஆழம் காண முடியாத 'பொக்கிஷம்' என்று பேசப்படுகின்றது. உண்மையே. இவை தவிர, எத்தனையோ தலங்களுக்கு எத்தனையோ புராணங்கள் உள்ளன. எத்தனைச் சிவலிங்கங்கள் உண்டோ, அத்தனைப் புராணம் என்றுகூடச் சுருக்கமாகச் சொல்லிவிடலாம். மதிப்பு வாய்ந்த மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் மட்டும் நூற்றுக்கு மேலான தலபுராணங்களைப் பாடியுள்ளார் என்பர். இன்னம் குட்டிக் கவிஞர்கள் எத்தனை எத்தனையோ குட்டித் தலபுராணங்களை எழுதி வைத்துள்ளார்கள். அவைகளெல்லாம் இன்று எங்கே போயின? ஒரு நூற்றாண்டுக்குள்—பாவம்!—அவை சவக்குழியினைச் சார்ந்துவிட்டனவே? எப்படியோ, யாரையோ பிடித்து ஒரு பதிப்பு, அந்த முதற் காலத்தில் அச்சிட்ட பிரதிகள், சில மூலை முடுக்குகளில் கிடைக்

கலாம். வெளிக்கொணர்ந்த புலவர்தம் அன்பளிப்பாக அவை பிறர்க்கு வழங்கப்பட்டிருக்கலாம். ஆனால், அவை மக்கள் மனத்தில் இடம் பெறவில்லையே! ஏன்? பலர் அவற்றைத் தொட்டுத் திறந்தும் படித்தும் இருக்கமாட்டார். அதற்கென ஒரு இயக்கம் தோன்றி, 'தலபுராணங்கள் நாட்டுக்குத் தேவை யற்றன. அவற்றைச் சுட்டெரிக்க வேண்டும்' என்று பிரசாரம் செய்து எரித்ததாகவும் எங்கும் யாரும் கூறவில்லை. ஒருவரும் அதைத் தொடக்கூடாது என்று அரசாங்கச் சட்டமும் இல்லை. பின்பு ஏன் அத்தனைக் காவியங்களும், ஒரு நூற்றாண்டின் எல்லையைக்கூட வென்று வாழ முடியவில்லை? அவை எங்குத் தான் சென்றன? காவியப் புலவர் சிலர் செய்த வேறு சில நூல்கள்கூட ஓரளவு மூச்சுப்பிடித்து வாழ்ந்து கொண்டிருக்க, இந்தப் புராணங்கள் எப்படிப் போயின? கேள்விக்கும் வியப் புக்கும் பதில் ஒன்றே ஒன்றுதான். அதுதான் இவ்விலக் கியங்கள்—கவிதைகள்—தமிழ் நாட்டு வாழ்வோடு தொடர்பு கொள்ளாதவை என்பது.

தமிழர்தம் தூய வாழ்வு நெறிக்கு மாறுபட்டமை யால்தான் தலபுராணங்கள் வாழவில்லை என்பது கண்டோம். தமிழர் தவறு இழைத்தலாகாது என்பது வாழ்க்கை நெறி. அப்படி அறியாது தவறு இழைப்பின், அதற்குக் கழுவாய் தன்னை ஒறுத்தல் என்பதுதான். பொற்கைப் பாண்டியன் தன் தவறு உணர்ந்து கையைக் குறைத்துக் கொண்டதும், மனுச் சோழன் தன் மகன் தவற்றுக்கு அவன் உயிரை வாங்கியதும் கதைகளாயினும், தமிழர் வாழ்வை விளக்க வருவன. இந்தச் சிறந்த வாழ்க்கை நெறிக்கு மாறாக எந்தக் கவிஞன்தான் தன் கவிதையை வாழவைக்க முடியும்? சிறந்ததாகிய காஞ்சிப் புராணத்தையே எடுத்துக் கொள்வோம். சிவஞான முனிவர் சிறந்த ஐம்புலன் ஒடுங்கிய அரும் பெருந்துறவியார்தாம்; நம் மதிப்புக்கு உரியவர்தாம். ஆனால், அவர் கவிதைக்கெனத் தேடியெடுத்த பொருள்தான் அவரை வாழ வைக்கவில்லை, கற்பனையிலும் கவிதை புனைவதிலும் அவர் சிறந்தவரே. எனினும், அவர் எடுத்துக்கொண்ட பொருள் மக்கள் வாழ்க் கைக்கு மாறுபட்ட பொருள். தவறிழைத்தால் தன்னை

ஒறுத்தலே தண்டம் என்னும் கொடிய விதியை அமைத்து, அதனால் எத்தகைய தவறும் மனிதன் இழைக்காமல் பார்த்துக் கொள்ளும் தமிழ்ச் சமுதாயத்தினிடத்தில், 'தவறு இழைக்கலாம்; எத்தகைய கொடுமையாயினும் தவறில்லை. ஆனால், உடனே அருகில் உள்ள குளத்தில் மூழ்கினாலோ, அல்லது அந்த ஊரில் பிறந்தாலோ, எல்லாத் தவறும் இல்லையாகிவிடும்,' என்று சொன்னால், அச் சமுதாயம் எப்படி இதை ஏற்றுக் கொள்ளும்? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொருளின்மீது விருப்போ, அன்றி அளவு மீறிய ஆசையோ இருக்கலாம். அதைவிட உலகில் உயர்ந்த ஒன்று இல்லை என்றுகூட முடிவு கட்டிவிடலாம். அதனால் அதை மற்றவர்கள் ஒப்புக் கொள்வார்களா? அவர்கள் கூறுவது சரிதானா என்று எண்ண மாட்டார்களா? எண்ணி வாழ்வோடு பொருந்தியதாயின் கொள்ளுவார்கள்; இல்லையானால் தள்ளுவார்கள். 'தீர்த்தம் என்பது சிவகங்கையே. இதில் மூழ்கினால் எல்லாப் பாவங்களும்—கொலைப்பாதகம் உட்படத்தான்—போகும்,' என்று சொன்னால், ஒரு நாட்டு மக்கள் அத்தகைய ஒன்றை நம்பியா வாழ்வார்கள்? அப்படி நம்பினாலோ, அனைவரும் கொலையாளராக மாறிவிடுவார்களே! இது எப்படி ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும்? ஒவ்வொரு தலபுராணத்திலும் இப்படி எத்தனையோ காண முடியும். இந்த நிலையில் அவை வாழாது வீழ்ந்தொழிவதற்குப் பிரசாரம் தேவையோ? இல்லையே! சிறந்த கவிதைகளான காஞ்சிப் புராணம், தணிகைப் புராணம் போன்றவற்றின் நிலையே இதுவாயின், பிற புராணங்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? இப்புராணங்களின் பேரை அறிவார் நாட்டில் எத்தனை பேர்? இதைப் படிக்கும் பலரும், 'இப்படியும் ஒரு புராணம் இருந்ததா?' என்று கேட்பார்களேயன்றி, அது பற்றி முன்னம் அறிந்தவர் ஒரு சிலரே இருப்பர். இவ்விரண்டு புராணங்களையும் இயற்றிய ஆசிரியர், சிலரால் சிறந்தவர் என்று போற்றத் தக்கவராயினும், பெரும்பாலும் அவர்தம் கவிதைக்குத் தேர்ந்தெடுத்த பொருள் காரணமாக வாழ்வைப் பிறந்த நாட்டிலேயே இழந்துவிட்டார். இவ்வாறு கூறுவதால் சமயத் தலைவர் சிலர் மாறுபாட்டுக்கு நான் ஆளாகவேண்டி வரும்.

என் செய்வது? உள்ளதை உள்ளபடி ஆய்ந்து எழுதுவதுதானே ஆய்வு? இவ்வாறே கம்ப ராமாயணத்தைப் பற்றி மேலே காட்டியபோதும் சிலர் தூற்றலுக்கு ஆளாக வேண்டுவதுதான். ஒன்றின் நலங்கேடுகளை ஆராயுங்கால் இவற்றை எதிர்பார்த்தே தான் பணியாற்ற வேண்டும் என்ற நினைவோடு மேலே செல்ல லாம். வாழ்வோடு தொடர்பு கொள்ளாத எந்த இலக்கிய மாயினும், இந்த நிலையினைப் பெறத்தான் வேண்டும். வரலாறு தோன்றிய நாள்தொட்டு, எம் மொழியில் இலக்கியம் தோன்றி னும், அவை வாழ்வோடு பொருந்தின் வாழும்; அன்றேல், இவற்றின் முடிவுதான் எதற்கும். இலக்கியத்திற்கு மட்டு மன்றி, இலக்கணத்துக்கும் இவ்வித நிலை பொருந்துவதாகும்.

தமிழ் நாட்டுப் பழம்பேரிலக்கணம் தொல்காப்பியம். அதன் காலத்தை ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னதெனக் கணிப்பர் ஆய்வாளர். ஆனால், அது இன்று தமிழ் நாட்டில் வாழும் அளவுக்குப் பிற இலக்கணங்கள் வாழ்கின்றனவா? தொல்காப்பியத்துக்கு அடுத்த நிலையில் வாழ்வது பவணந்தி யின் நன்னூல் என்னும் இலக்கணம். இவை இரண்டும் தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் அறியப்படுகின்றன. ஏன் அப்படி? தமிழர்தம் பண்பும் மரபும் காட்டும் இலக்கணம் தொல்காப்பியம் என்பதை, மேல் பலவகையில் கண்டிருக் கின்றோம். ஆகவே, அது வாழ்கின்றது. அதைப் போன்றே அதன் அடி ஒன்றி, நிலை கெடா வகையில் நன்னூல் செல்கின்ற மையின், அதுவும் வாழ்கின்றது. ஆனால், இன்னும் சில இலக்கண நூல்கள் உள்ளன. அவற்றின் பெயர்கள்கூடப் பலருக்குத் தெரியா. தமிழைப் படித்துப் பட்டம் பெற்ற வர்கள்கூட, ‘அப்படி ஒரு நூல் உண்டா?’ என்று கேட்பார்கள். அவை அத்துணை அழிவு பெற்றுவிட்டன. ஆனால், அவை மிகவும் அண்மையிலேதான் தோன்றின; தொல்காப்பியமும் நன்னூலும் தோன்றி நெடுங்காலம் கழிந்த பிறகே தோன்றின. இருந்தும், அவை வாழவில்லை. காரணம், அவை தமிழர் நெறி, முறை, வாழ்க்கை அனைத்தினுக்கும் அப்பாற்பட்டுத் தம் போக்கில் செல்லுவதேயாம். தலபுராணங்களுக்குப் பொருந் திய காரணங்கள் இவற்றிற்கும் பொருந்தும். அந்த விரிவெல்

லாம் இங்கு நம் ஆய்வுக்குத் தேவை இல்லையானமையின், அவற்றின் பெயர்களை மட்டும் சொல்லி மேலே செல்லலாம். 'இலக்கணக் கொத்து', 'இலக்கண விளக்கம்', 'பிரயோக விவேகம்' போன்ற நூல்களே அவை. அவற்றின் ஆசிரியர்களும் கற்றுத் துறைபோகியவர்களே. எனினும், அவர்தம் நூல்கள் வாழாமைக்குக் காரணம், அவர்கள் தமிழர்தம் இலக்கண நெறி தவறி, நெறியில்லா நெறி சென்றமைதான் என்று கூறி அமைவோம். இவற்றினல் வாழ்வொடு பொருந்திய கவிதை என்றென்றும் சிரஞ்சீவியாக வாழும் என்பது தேற்றம்.

இதுகாறும் கூறியவற்ருல், கவிதை வாழ்வொடு தொடர்புபட்டே அமையவேண்டும் என்பதும், அக் கவிதை, ஆசிரியர் உள்ள அமைதியையும் கொண்ட பொருளையும் பற்றி அமைவது என்பதும், அவ்வாறு வாழ்வொடு தொடர்புற்ற கவிதைகள் சாகா வரம் பெற்று என்றென்றும் வாழும் என்பதும், அவற்றைப் போக்க வேண்டுமென்று பலர் நாட்டில் முயன்ருலும், அவை வளர்ச்சி பெற்று ஓங்குமேயன்றித் தாழ்ச்சியுற்றுச் சாகா என்பதும், இன்றைய உலகில் பிற நாட்டுப் பெரு நூல்கள் மொழிபெயர்ப்பு இலக்கியங்களாய் வளர்ந்துள்ளன என்பதும், அவையும் அவ்வந் நாட்டு நிலைக்கேற்ப மொழி பெயர்த்தால்தான் வாழும் என்பதும், கவிதை மட்டுமன்றி மற்ற எப்பொருளும் வாழ்வொடு பொருந்தின் அதை யாராலும் என்றும் அழிக்க முடியாது என்பதும், அதைச் சட்டத்தால் அன்றி வேறு வகையால் அடக்கினுலும், பின்ஒருகால் பிழைத்துத் தழைக்கும் என்பதும், மொழிபெயர்ப்பில் நாட்டுப் பண்புக்கு அமையும் நல்ல நூல்கள் வாழும் என்பதும், அதற்குக் கம்பராமாயணம் சான்று என்பதும், அதே வேளையில் நாட்டுப் பண்புக்கு மாறுபட்ட இலக்கியங்கள் பிரசாரம் இல்லாமலே மாயும் என்பதும், அதற்குத் தலபுராணங்களே சான்று என்பதும், இந்நீதி இலக்கியத்துக்கு மட்டுமன்றி இலக்கணத்துக்கும் பொருந்தும் என்பதும் அறிந்தோம். இனி அவ்வாறு வாழ்வொடு பின்னிய கவிதைகளை ஒன்றன்பின் ஒன்ருக் காண்போம்.

2. பத்துப்பாட்டு

உலக இலக்கியங்களில் வாழ்வொடு பிணைந்த காவியங்கள் பல. வாழ்வொடு இயைந்த கவிதைகள் வாழும் கவிதைகளாகும். அந்த வரிசையில் நம் தமிழ்நாட்டுக் கவிதைகள் எவ்வாறு அமைகின்றன என்பதைக் கண்டு முடிப்போம். இன்றைய தமிழ் உலகில் எத்தனையோ இலக்கியங்கள் உள்ளன. கவிதைகள் பல வாழ்கின்றன. சங்க காலத்துக்குமுன் பலப்பல கவிதைகள் வாழ்ந்தன வென்றும், அவற்றுள் பல கடல் கோளுக்கு உட்பட்டு அழிந்துவிட்டன என்றும் அறிகின்றோம். எனவே, இன்று நம்மிடை வாழும் கவிதைத் தொகுதிகளில் மிகப் பழையன கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்டவையே. கடைச்சங்க காலம் என்பது, இன்றைக்கும் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பர் ஆராய்ச்சியாளர். அக் காலத்தில் பல்வேறு இலக்கியங்கள் நாட்டில் தோன்றின. தோன்றிய அனைத்தும் இன்று வாழ்கின்றன என்று கூற முடியாது. வாழ்வொடு தொடர்பற்ற பல மாய்ந்துவிட்டிருக்கலாம். தொடர்பு கொண்டு என்றும் வாழவேண்டிய இலக்கியங்களில் சிலவும் கடல்கோளாலும், செல், நெருப்பு முதலியவற்றாலும் அழிக்கப்பட்டிருக்கலாம். எப்படியாயினும், நாம் இன்று வாழ்கின்ற இலக்கியங்களைக் கொண்டு—என்றும் வாழ்கின்ற இலக்கியங்களைக் கொண்டே—அவை வாழ்வொடு எவ்வாறு பின்னிப் பிரியாது வாழ்கின்றன என்பதைக் காணலாம்.

சங்ககாலத்திலும் அதை ஒட்டிய காலங்களிலும் தோன்றிய இலக்கியங்களை அறிஞர் சில தொகுதிகளாகப் பிரித்துள்ளனர். அவை, **பத்துப்பாட்டு**, **எட்டுத்தொகை**, **பதினெண்கீழ்க்கணக்கு** என்பன. அவற்றை ஒட்டி எழுந்த

காப்பியங்களை ஐம்பெருங்காப்பியம் என்று வழங்கியுள்ளனர். ஒவ்வொரு பிரிவையும் தனித்தனியாகக் காணலாம். முதலில் பத்துப்பாட்டினைப் பற்றிக் காண்போம்.

பத்துப்பாட்டு என்பது பத்துப் பெரும்பாடல்கள் கொண்ட ஒரு தொகுதியாகும். நாம் மேலே கண்டபடி அவை பெரும் பாலும் அகவற் பாக்களால் ஆகியவையே. அவற்றுள் அகவாழ்வும் பேசப்படுகின்றது; புறவாழ்வும் பேசப்படுகின்றது. அகமும் புறமும் ஒன்ருேடு ஒன்று தொடர்புடையன என்பதை விளக்குகின்ருர்கள். பல நிகழ்ச்சிகளையும், ஆசிரியர்கள் படம் பிடித்துக் காட்டுவது போன்று விளக்குகின்ருர்கள். இந்தப் பத்துப்பாடல்களைப் பாடிய புலவர்கள் கவிதைநலம் தோய்ந்து, வாழ்வின் நெறியறிந்து வாழ்ந்தவர்கள் என்பது அவர்தம் பாடல்களால் நன்கு புலனுகின்றது. நக்கீரர், முடத்தாமக் கண்ணியார், பெருங்கௌசிகனுர், உருத்திரங் கண்ணனுர், கபிலர், நப்பூதனுர், மாங்குடி மருதனுர், நல்லூர் நத்தத்தனுர் ஆகிய எட்டுப் புலவர்கள் இப் பத்துப் பாடல்களையும் பாடியுள்ளார்கள். இந்நூல்களால் பாராட்டப்பெற்ற மன்னர்களோ சீரும் சிறப்பும் வாய்ந்து, பகைவரை வென்று, பாரகத்தே தம் ஒளி பரப்பியதோடு, கொடைநலமும் குணநிறைவும் கொண்டு வாழ்ந்த கொற்றவர்கள். மன்னன் கரிகால் வளவனும், பாண்டியன் நெடுஞ்செழியனும் இவ்விரண்டு பாடல்களால் பாராட்டப் பெறுகின்றனர். ஆரிய அரசன் பிரகத்தன், நல்லியக்கோடன், இளந்திரையன், நன்னன் ஆகிய சிறு மன்னரும், தெய்வமாகிய குமரவேளும் பிற பாடல்களால் பாராட்டப் பெறுகின்றனர். தமிழ்நாட்டு ஐந்திணையைப் பற்றிய விளக்கங்களும், அவற்றில் மக்கள் வாழும் வாழ்க்கை முறையும், அவர்கள் செயல்களும் பிறவும் பேசப்படுகின்றன. இவையன்றிப் பாடிய புலவனும், கேட்ட அரசனும் பற்றிய பொருள்களாகவே இவை அமைந்திருப்பின், இவை இத்தனை நாள் வாழ இடமில்லை. தெய்வத்தைப் பற்றியும், பேரரசர் களைப் பற்றியும் பாடப்பட்டனவாயினும், இவை அன்று வாழ்ந்த எளிய மக்களையும் மற்றவரையும் முன்னிறுத்தி,

அவர்தம் வாழ்க்கையையும் காட்டிய 'காரணத்தினுலேதான் இத்துணை நாள் வாழ்கின்றன. மன்னர்தம் மாளிகை வாழ்வு மட்டும் இந்நூலில் இடம் பெறவில்லை; குன்றக் குறவர்தம் குடிசை வாழ்வும், வேட்டுவர் வாழ்வும், காட்டு வழியும், அந்தணர் இருக்கையும், பாலையின் வெம்மையும், மருத வைப்பும் அனைத்தும் பேசப்படுகின்றன. அவ்வப்பகுதியை நாம் பயிலும்போது, நாமே நம்மை மறந்து அவ்வந் நிலத்து வாழ்கின்றவராகவே அமையும் நிலை பெற்று விடுகின்ருேம். பத்துப் 'பாடல்களையும் ஒவ்வொன்ருகத் தனித்தனியே ஆராய்ந்து இக் காட்சிகளை யெல்லாம் காணப்புகின், அதுவே ஒரு பெரு நூலாய் அமைந்துவிடுமாதலான், அவற்றுள் சிலவற்றை மட்டும் தொகுத்துக் கண்டு, இப்புலவர்கள் தங்கள் கவிதைகளை எவ்வாறு வாழ்வொடு பிணைத்துள்ளார்கள் என்பதை மட்டும் அறிந்து கொள்வோம்.

உண்மைக் கவிஞர்களுக்கு வேறு பொருள்களைக் காட்டிலும் முன்னே நிற்பது உலகந்தான். உலகத்தில் உள்ள மக்களும் பிறவும் நலம் பெற்று வாழ்வதுதான் அவர்தம் குறிக்கோளாய் அமைந்துள்ளது. எந்தப் பொருளைப்பற்றிப் பாடினும், மெய்க் கவிஞர்களின் கண்முன் தெரிவது உலகந்தான். தம் பாடற் குரியார் கடவுளராயினும், அரசராயினும், வேறு யாராயினும், அன்றி வேறு பொருளாயினும், அவர்கள் முதலில் உலகம் வாழ வேண்டும் என்றுதான் வாழ்த்துவார்கள். திருவள்ளுவனுரும் தம் பெருங் குறளை, 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்று தொடங்குவதை நாமறிவோம். அந்த உலகை நினைக்கும் போது, அவர்கட்கு மற்றென்றும் நினைவுக்கு வரும். நாடு செழிக்க வேண்டுமானுல், நல்ல மழை வேண்டுமன்ருே? 'மழை இன்றி மாநிலத்தார்க் கில்லை' என்பதும் ஒரு கவிஞன் சொன்னது தானே? அது என்றும் உண்மையான ஒன்று. இந்த இரண்டையும் பிணைத்துப் பத்துப்பாட்டில் கவிஞர்கள் அழகாகக் காட்டியுள்ளார்கள். மக்கள் வாழ உலகம் சிறக்கவேண்டும். உலகம் ஓங்க மழை பொழியவேண்டும். இக்கருத்தைக் கூறிய ஆசிரியர் தம் பாவின் அடிகளைக் காண்போம்,

கடவுளைப் பாடுகின்ற நக்கீரர், தம் திருமுருகாற்றுப் படையில் முருகனது ஆறுபடை வீடுகளைப் பற்றியும் பாடுகிறார். உலகம் மகிழ அவன் அருள் புரிவான் என்ற கருத்தடக்கி, கண்முன் காட்சியளிக்கும் காலை ஞாயிற்றினை உவமிக்கின்றார். அஞ் ஞாயிற்றின்வழி உலகம் உண்டாயதென்பதையும், அந்த ஞாயிறு இன்றேல் உலக வாழ்வும் இல்லை என்பதையும் விஞ்ஞானிகள் காட்டிய வழியில் கண்டோம். எனவே நக்கீரர் உலகம் உவக்கும் நலம் புரப்பது ஞாயிறு என்பதை உணருகின்றார். ஞாயிற்றின் வழி மழை சுரந்து, இழுமென அருவி தோன்றும்; வெள்ளம் பெருக்கெடுத்தோடும்; அதன்வழி உலகம் வாழும். இத்தகைய நற் கருத்துக்களைக் கொண்டு தமது திருமுருகாற்றுப்படையின் தொடக்கத்தையே,

'உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு' (முரு. 1, 2)

என்று உலகம் மகிழத் தோன்றும் கதிரவனை உவமையாகக் கூறிப் பின்,

'கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்ளுறை சிதறி' (முரு. 7, 8)

என்று மழையின் நிலையைக் காட்டி மேலே செல்கின்றார். இறுதியிலேயும் அம் மழைவழி வெள்ளம் பெருக்கெடுத்தோடி வருவதை,

'சேண்நின்று
இழுமென இழி தரும் அருவி' (முரு. 315, 16)

என்று காட்டி முடிக்கின்றார். இவ்வாறு கடவுளைப் பற்றிய பாட்டில் மட்டுமன்றி, பாண்டியனைப் பாடிய அந்த நெடுநல்வாடையின் தொடக்கத்திலும், புலவர் நக்கீரரே,

'வையகம் பனிப்ப வலன் ஏர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென' (நெடுநல், 1, 2)

என்று தொடங்கி, வானம் வையகத்தை வாழவைக்கப் புதுப் பெயலைத் தருகின்றது என்பதைக் காட்டுகின்றார்.

சிறுபாணாற்றுப்படையில் அதன் ஆசிரியர் நல்லூர் நத்தத்தனார், தம் நல்லுளத்தால் உலகையும் ஆற்று வெள்ளத்தையும் முன்னிட்டே, தம் கவிதையைத் தொடங்குகின்றார்.

'மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை
அணிமுலைத் துயல்வரூஉம் ஆரம் போலச்
செல்புனல் உழந்த சேய்வரற் கான்யாற்றுக்
கொல்கரை நறும்பொழில்' (சிறுபாண், 1-4)

என்று வையகத்து மழை பெய்ய அதன்வழிப் பெருக்கெடுத்தோடி வரும் ஆற்றையும், அதன் கரையின் பொழிலையும் பாராட்டித்தான் மேலே செல்கின்றார். அந்த உவமையில் தமிழ் நாட்டுப் பெண்களுக்கு இயல்பாயமைந்த உடற் பொலிவையும் அவர்தம் அணிகலனையுங்கூட்ச் சுட்டிக்காட்டித் தமிழ் நாட்டுப் பெண்மை நலத்தையும் ஓம்புகின்றார் அவர்.

முல்லைப்பாட்டின் ஆசிரியர் நப்பூதனாருக்கு அவர் பாட்டுக்கேற்ற, திணைக்குரிய, மாரிக் காலமே கைகூடிவிடின், அவர் அதைப் பாராட்டாது விடுவரோ! அம் முல்லைநில நிகழ்ச்சியைத் தொடங்குமுன், நில உலகத்தில் எப்படி மழை பொழிந்தது எனக் காட்டுகின்றார். 'திருமால் போன்று மேகம் தண்ணீரைப் பொழிகின்றது. அதனால் உலகம் சிறக்கின்றது.' என அழகு படக் காட்டுகின்றார்.

'நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மா அல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலன்ஏர்பு
கோடுகொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை' (முல்லை. 1-6)

என்பது அவர் வாக்கு, இவ்வாறே மதுரைக் காஞ்சியின் ஆசிரியராகிய ஓங்குயர் விழுச்சீர் மாங்குடி மருதனார்,

'ஓங்குதிரை வியன்பரப்பின்
ஒலிமுந்நீர் வரம்பாகத்

தேன் தூங்கும் உயர்சிமைய
மலைநாறிய வியன்ஞாலத்து
வலமா திரத்தான் வளிகொட்ப,
வியன்நாண்மீன் நெறிஒழுகப்
பகற்செய்யும் செஞ்ஞாயிறும்,
இரவுச் செய்யும் வெண்டிங்களும்
மைதீர்ந்து கிளர்ந்துவிளங்க,
மழைதொழில் உதவ மாதிரம் கொழுக்கத்
தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய'

(மதுரை. 1-11)

என்று வியன் ஞாலத்தையும், அதிற் பெய்யும் மழையினையும், அதனால் விளையும் பயனையும் கூறி, அவை தாம் உலக வாழ்வின் அடிப்படை என்பதைக் காட்டித்தான், வாழ்வின் நிலைமையை விளக்கும் நீண்ட பாட்டினுள் புகுகின்றார்.

மலைபடு கடாம் என்ற பாடலின் ஆசிரியர் பெருங் கௌசிகனார், தமது நூலை,

'திருமழை தலைஇய இருள்நிற விசும்பின்
விண்ணதிர் இமிழ்இசை கடுப்ப' (மலைபடு. 1-2)

என்றே தொடங்குகின்றார். பட்டினப் பாலையின் ஆசிரியர் இவர்களையெல்லாம் விட்டு மேலேயும் ஒருபடி தாண்டிவிட்டார் என்று சொல்லவேண்டும். மழை பெய்தால்தான் வளஞ் சுரக்கும் என்கின்றார்கள் இவர்களெல்லாம். ஆனால், அவரோ. 'மழை பெய்யா விடினும் காவிரி வற்றாது வளஞ்சுரக்க வேண்டும்,' என விழைகின்றார். இயற்கை மாறுபாடுகளினாலும், மன்னவன்முறை தவறினாலும், வேறு பிற கொடுமைகளாலும் ஒருவேளை வானம் பெய்யாது ஒழியலாம். அந்தக் கொடுங்காலத்தும் வற்றாது வளம் சுரக்கும் வண்தமிழ்க் காவிரி என்று, தம் காவிரிப் பூம்பட்டினத்தைப் பற்றிய பாடலை அவர் மிக அழகாகத் தொடங்குகின்றார்.

'வசையில் புகழ் வயங்கு வெண்மீன்,
திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவில்,

புள்தேம்பப் புயல்மாறி
வான்பொய்ப்பினும் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல் பரந்து பொன்கொழிக்கும்
விளைவுஅரு வியன்கழனி' (பட்டி. 1-8)

என்று அவர்தம் பட்டினப்பாலையானது தொடங்கப் படுகின்றது. இவ்வாறு புலவர்களெல்லாம் தாங்கள் இயற்றும் கவிதையிலே உலக வாழ்வினுக்கே முதலிடம் தந்து போற்று கின்றார்கள். பெயல் இன்றேல், நானிலமும், அவற்றில் வளரும் புல்லும் மரமும், வாழும் பறவையும் விலங்கும், மனித னும் தலை தூக்குவதெங்கே?

'விசும்பின் துளிவீழின் அல்லான்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது.

என்று பொய்யாமொழி வள்ளுவர் புகலவில்லையா? அச் சொல் அன்றும் இன்றும் மட்டுமன்றி, என்றும் நிலைபெற்றோங்கும் மெய்ச்சொல்லன்றோ! எனவேதான் கவிதை பாடும் புலவர்கள், வான் சிறப்பையும் அதன்வழி வையத்தின் வாழ்வையும் முதலில் எண்ணிப் பாடுகின்றார்கள். இவ்வடிகளை யெல்லாம் பொருள் விரித்து விளக்கிக்கொண்டே செல்லின், இந்நூல் இடம் தாராது. அறிஞர் இவற்றின் பொருள்களைத் தெள்ளி தின் உணர்வார்கள். அல்லார் உற்ற நூல்களின் வழிக்கண்டு கொள்ளலாம் எனக்கூறி, மேலே செல்கின்றேன்.

இப் பத்துப்பாட்டுள் ஐந்து ஆற்றுப்படைகளாய் அமை கின்றன. நான்கு, அப்பெயரிலேயே திருமுருகாற்றுப் படை, பொருநராற்றுப்படை என அமைகின்றன. இறுதியிலுள்ள மலைபடுகடாம் பெயரளவில் வேறாகக் காணினும், பொருள் அளவில் கூத்தர் ஆற்றுப்படையாக அமைகின்றது. எனவே, பத்தில் ஐந்து ஆற்றுப் படைகளாம். 'ஆற்றுப்படை' என்பது என்ன? 'ஆற்றுப்படுத்தல்' அதாவது, வழிகாட்டுதல் என்பது அதன் தெளிந்த பொருள். எதற்கு வழிகாட்டுவது? வாழ வழி காட்டுவது. யார் வாழ? வாழவேண்டியவர் வாழ; வருத்

தத்தில் உள்ளவர் வருத்தம் நீங்கி வாழ, அதன்பின் வையகம் வாழ. எனவே, செல்வம் மிக்க ஒருவன் வறியவன் ஒருவனைக் கண்டு, அருகழைத்து, ஆறுதல் கூறி, அவன் வருத்தம் நீங்க வழி காட்டி, வாழ்க்கை நல்லதாக அமையும் வகைகளை விளக்குவதே ஆற்றுப் படையாகும். இந்த வாழ்க்கை, கவிதையில் பின்னிக் கிடக்கவேண்டும் என்பதைத்தானே மேலே கண்டோம்! 'நோயாளிக்கு வைத்தியன் வேண்டும்.' என்ற இயேசுவின் மொழிக்கேற்ப, வாடுபவனுக்கு வாட்டம் தீர்க்க வழி காட்டு வ்து அன்றி வேறு வாழ்க்கை உண்டோ? இந்த ஆற்றுப்படை கள் அத்தகைய வழியைத்தான் காட்டுகின்றன. அவ்வாறு வாழ வழி காட்டும் ஒரே காரணத்தாலேதான், இக் கவிதை களும் சிரஞ்சீவிகளாய் வாழ்கின்றன. வாழட்டும்! அவ்வழியினை நாமு ் காண்போம்.

மக்கள் எப்படி வாழ வேண்டுமென்பதை நமக்கு விளக்க விரும்பினர் நக்கீரர். 'கடவுளை வணங்குகின்றோம்,' என்பவ ரெல்லாம் நல்லவரோ பெரியவரோ ஆகமாட்டார். கடவுளைப் போற்றுதற்கு நல்ல உள்ளமும் உரமும் தேவை. தீதற்ற சினம் நீங்கிய சிந்தையராய் காமமும் கொடுமையும் அற்ற தன்மையராய் உள்ளவரே உண்மையில் கடவுளை வழிபடு தற்கு உரியவர். கடவுள் நெறியும் அத்தகையதுதானே! வெற்று ஆரவாரமும் ஆடம்பரங்களும் அன்பு நெறிக்கு அப்பாற்பட்டவை. அவற்றை நீக்கி நல்ல உள்ளத்தால் வழி படுபவரைக் காட்டி, அவர் மூலம் உலகில் மக்கள் ஒருவரை ஒருவர் தழுவி வாழ வேண்டுமாயின், இவ்வாறு இருக்க வேண்டும் எனக் குறிக்கின்றார். பழநி மலையில் முருகன் முன் நின்று வழிபடும் அடியவரை முன்னிறுத்தி, அவர்வழி மக்கள் உள்ளத்தையே காட்டுகின்றார் புலவர் நக்கீரர்.

'இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர்; யாவது
கற்றோர் அறியா அறிவினர்; கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர்; காமமொடு

> கடுஞ்சினம் கடிந்த காட்சியர்; இடும்பை
> யாவதும் அறியா இயல்பினர்' (முரு. 131—136)

என்று, அவர் நன்மக்கள் நிலையினை எப்படி எடுத்துக் காட்டு கின்றார்! இத்தகைய தூய உள்ளமுடையவர் நாட்டில் வாழின், நாட்டு வாழ்க்கை என்றேனும் நலிவுறுத்தப்படுமோ! இன்னும் நக்கீரர் தமது திருமுருகாற்றுப் படையில் காடும், காவும், ஆறும், குளமும், சதுக்கமும், சந்தியும் ஆகிய பல்வேறு இடந் தோறும் அவ்வக்காலங்களில் கொண்டாடும் விழாக்களையும், பிற சிறப்புக்களையும், அம்மக்கள் வாழக்கையொடு பிணைத்துக் காட்டுகின்றார். முருகனைக் கொண்டாடும் வியன் நகர் நலமெலாம் காணும்போது அது பண்டைத் தமிழ் நாட்டு வாழ்க்கையை நமக்கு நினைவூட்டுகின்றது. அத்துடன் அவ்வந்நிலத்து இயற்கை வளங்களையும், பிற பண்புகளையும் மக்கள் வாழ்வோடு பிணைத்தே சொல்லுகின்றார். அவற்றின் சிறப்புக்களை யெல்லாம் நூல்வழியே காணலாம்.

நக்கீரரே தம் நெடுநல்வாடையைப் பாடும்போது, நம் வாழ்க்கையே வேறுவகையில் விளக்கமுறுகின்றது. வாடை—வாட்டும் வாடை—நல்வாடையாகி, அது நீண்டு விடு கின்றது. இது அவர் வாழ்வில் உள்ளதை உள்ளவாறு எப்படி விளக்குகின்றார் என்பதைக் காட்டுகின்றது. வாட்டும் வாடையை நாம் அறிவோம். அது எப்படி மக்களுக்கும் பறவை முதலியவற்றிற்கும் வருத்தம் செய்கின்றது என்பதைக் காட்டுகின்றார்.

> 'கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
> மாமேயல் மறப்ப மந்தி கூரப்
> பறவை படிவன வீழக் கறவை
> கன்றுகோள் ஒழியக் கடிய வீசிக்
> குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்'
>
> (நெடுநல். 8-12)

என்று அந்த வாடையில் நடுக்கும் இரவுக்காலத்தை அவர் காட்டும் வகை இன்றும் மெய்யாகவன்றோ விளங்குகின்றது.

இனி அவ்வாடையில் நாடும் நகரமும் வாடும் வகையெல்லாவற்றையும் வாழ்வோடு பொருந்துமாறு காட்டி, பின்பு பாண்டிமாதேவியின் அந்தப்புரத்துக்கு நம்மை அழைத்துச் சென்று, நெடுஞ்செழியன் போர்மேற்செல்லத் தனித்துப் புலம்பும் பாண்டிமாதேவியின் பரிபவத்தையெல்லாம் காட்டும் காட்சி நம்மை நாம் மறக்க வைக்கின்றது. வாழ்வின் உள்ளத் துடிப்பை நக்கீரர் உணர்ந்து காட்டுகின்றார். நமக்கு உற்றார் அருகிலில்லாதபோது, அத்தகைய உற்றார் இருவர் நம் எதிரில் செல்வராயின், கூடியிருக்கும் அவரையும் நம்மை விட்டுப் பிரிந்த மற்றவரையும் எண்ணி ஏங்குதல் மரபு. இதற்கு இன்றைய மனிதனும் விலக்கானவனல்லன். இந்த வாழ்க்கையின் உளப்பண்பைப் பாண்டிமாதேவியின் மேலேற்றிக் காட்டுகின்றார் நக்கீரர்.

கணவனைப் பிரிந்து அந்தப்புரத்தே தனிமையில் புலம்புறும் அரசியின் நிலா முற்றத்தே வான வீதியில் சந்திரன் பவனி வருவது தெரிகின்றது. அந்த நாள் உரோகிணி நாள் போலும்! சந்திரன் உரோகிணியைச் சார்ந்து தழுவிச் செல்கின்றான், அந் நீலநிற வானமஞ்சத்திலே. அதைக்கண்ட அரசி தன் கணவனை எண்ணுகிறாள்; தன் தனிமையை நினைத்து மேலும் ஏங்குகிறாள். இதை நக்கீரர்,

> 'விண்ஊர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து
> முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய
> உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயிரா
> மாயிதழ் ஏந்திய மலிந்துவீழ் அரிப்பனி
> செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாப்
> புலம்பொடு வதியும் நலங்கிளர் அரிவை'
>
> (நெடுநல், 161-166)

எனக் காட்டுகின்றார். இதில் ஒரு நற்கருத்தையும் பெய்கின்றார் அவர். உரோகிணியொடு திரியும் சந்திரனை வேறு வகையில் காட்டாது, ஞாயிற்றோடு மாறுபட்ட திங்களஞ் செல்வன் என்கிறார். சந்திரனுக்குப் பல பெயர்களும் பல சிறப்புக்களும் இருக்க, இந்த வகையில் கூறுவானேன்,

சந்திரன் அவர்கள் குல முதல்வன். அக் குல முதல்வனோடு பொருந்திய செயல்கள் ஒன்றில் ஒன்றிய தலைவன் மற்றொன்றில் மாறுபட்டான். சந்திரனுக்கு மாறுபட்டவன் சூரியன். சந்திர குலத்துக்கு மாறுபட்ட குடி, சோழர் குடி. ஒருவேளை பாண்டியன் அதுகாலைச் சோழர்மேற் படையெடுத்திருக்க லாம். மாறுபாட்டில் இருவர் செயலினும் வேறுபாடு இல்லை. ஆனால், சந்திரன் அந்த மாறுபாட்டுக்கிடையிலும் தன் மனைவி உரோகிணியை விட்டுப் பிரியவில்லை. ஆனால், அச் சந்திர வமிசத்துத் தோன்றிய நெடுஞ்செழியனோ, பகல் இரவு வேறுபாடு காணாது, முரண்மிகு போர்க்களத்திலிருந்து, வாட்டும் வாடையிலும்கூடத் தன்னைவிட்டுப் பிரிந்திருக் கின்றான். இது முறையாகுமா? என நைகின்றாள் அரசி. இவ்வாறு வாடையில் மணம் புரிந்த தலைவர் பிரியாதிருத்தல் முறையென்ற வாழ்க்கை நெறியை முன்னிறுத்திக் காட்டும் நக்கீரர் நெறி போற்றத்தக்க தன்றோ?

மற்றும் புலவர் இவ்வாடையில் கணவர் பிரிந்த மகளிர் ஆடை அணிகளால் தம்மைச் சிறப்புச் செய்து கொள்ளாது வாழும் வாழ்வையும் விளக்குகின்றார். பாசறையில் இருக்கும் மன்னன் நிலையைக் கூறி, வினைமேற் சென்றார் தலைவி போன்று நைந்து வாடாது, கடமை மறவாது செயலாற்ற வேண்டு மெனவும் குறிக்கின்றார். இவ்வாறு கடைச்சங்கப் புலவருள் தலைவராய நக்கீரர் இரண்டு பாடல்களில் கடவுள் நெறியையும், கற்பு நெறியையும், வீரர் வாழ்வையும், நன்மக்கள் செயல் களையும், அவை வாழ்வோடு பின்னிய வகையினையும் காட்டி விளக்குவது அறிதற்பாலதாகும்.

இனி, நாம் பிற நான்கு ஆற்றுப்படைகளையும் காணல் வேண்டும். அவை அனைத்தும் மேலே கண்டபடி, பொருள் பெற்றான் ஒருவன் பெறுதானுக்குப் பெறும் வழி காட்டும் வகையில் அமைந்தனவே. அவ்வழிகாட்டு முகத்தான் அவ்வக் கவிஞர் கன்னித் தமிழ்நாட்டு வாழ்க்கைக்கே வழி காட்டு கின்றனர்; தமிழ்நாட்டு நிலப்பிரிவாகிய ஐவகை நிலங்களையும் கூறி, அவ்வந்நிலத்து வாழும் மக்களின் வாழ்க்கை முறை

களையும் கூறுகின்றனர்; பரிசு பெற்ற புலவனது முன்னைய நிலையினையும் பின்னைய நிலையினையும் காட்டி அக்காலத்தில் அரசரையும் வள்ளல்களையும் சார்ந்தார் பெறும் வரிசைகளைக் காட்டுகின்றனர். புலவர் தம் வாட்டும் வறுமையில் கற்பனை இல்லாது, வாழ்வில் உள்ளதை உள்ளபடியே காட்டும் திறன் கண்டு மகிழத்தக்கது. அதனுடன் அவர்கள் செல்லும் வழியின் சிறப்பையும் கொடுமையையும் கூறி, பின்னர் வள்ளல் வழங்கும் கொடைநலத்தின் மூலம், அக்காலத்து மன்னரும் செல்வரும் பெற்றது கொண்டு சுற்றத்தாரையும் மற்றவரையும் உண்பிக்கும் வாழ்க்கை முறையினையும் எடுத்துக் காட்டுகின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் அரசர்தம் வாழ்வைக் காட்டுமுன் ஐவகை நிலமக்கள் வாழ்வைக் காட்டுவதனாலேயே இவை வாழ்விலக்கியமாய் விளங்குகின்றன எனலாம். சிலர்தம் செல்வ வாழ்வை மட்டும் காட்டாது, நாட்டில் சேர்ந்துள்ள வறுமை வாழ்வையும் காட்டுவது வாழ்விலக்கியமாகாதோ!

வறுமையால் வாடும் பொருநன் வாழ்வினை, அவன் அணிந்திருந்த ஆடையை விளக்குமுகத்தான்,

> 'ஈரும் பேனும் இருந்திறை கூடி
> வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
> துன்னற் சிதாஅர்' (பொருநர். 79-81)

என்று கூறிப் புலவர் ஏழ்மை நிலையைக் காட்டுகின்றார். சிறுபாணன் வறுமை நிலையினை,

> 'திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
> கறவாப் பான்முலை கவர்தல் நோனாது
> புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்
> காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த
> பூழி பூத்த புழற்கா ளாம்பி
> ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்
> வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
> குப்பை வேளை உப்பிலி வெந்ததை
> மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து

இரும்பே ரொக்கலொடு ஒருங்குடன் மிசையும்
அழிபசி வருத்தம்' (சிறுபாண். 130—140)

என்று, அவர்கள் வீட்டு நாயும் தன் குட்டிக்குப் பால் கொடுக்க முடியாத வறுமை என்றும், காளான் பூத்த அடுப்பே அவர்கள் அடுப்பென்றும், மனையாட்டி குப்பையில் விளைந்த வேளைக்கீரையைக் கொய்து வந்து உப்பும் இல்லாமல் ஆக்கினள் என்றும், அதை உண்ணும்போது மற்றவர் காணின் நகைக்கிடனுகுமென்று நாணி மறைத்து உண்டார்கள் என்றும், ஆயினும், அந்த வறுமையிலும் 'இரும்பே ரொக்கலாகிய' சுற்றத்தைத் தழுவியே அக்கீரையையும் உண்டார்கள் என்றும் குறிக்கின்றார். இவ்வாறு புலவர்கள் அக்காலத்தில் கலைஞர் களிடம் நிலைத்துள்ள வறுமை நிலையை வாழ்வோடு பொருத்திக் காட்டுகின்றார்கள். வறுமையிலும் சுற்றம் தழுவுதல் வாழ்வின் அடிப்படையன்றோ! வறுமையில் தாம் உண்ணும் உப்புமற்ற சாதாரணக் கஞ்சியை மற்றவர் காணின் எள்ளி நகைப்பர் என்று நாணுவது இன்றும் நம் வாழ்க்கையில் காணும் ஒன்றன்றோ! இவ்வாழ்க்கையின் நுட்பங்களை விளக்கும் புலவர்களைப் போற்றல் வேண்டுமன்றோ!

இனி, வாடும் இக்கலைஞர் தம் வழிகாட்டுமுகத்தான் ஐவகை நிலத்தினையும் அவற்றில் வாழும் மக்கள் நிலைமையை யும் காண இயலும். ஒன்றைக் கண்டு மேலே செல்லலாம். முல்லை நிலத்தில் கோவலர் வாழ்வர். அவர்களிடம் இன்றும் விருந்தாகச் செல்பவர் தயிரும் பாலும் மோரும் பெறுவர் என்பது நம் வாழ்விடைக் காண்பதுதானே! அவர் வாழ்க்கையை உருத்திரங்கண்ணனார் பல அடிகளில் பாராட்டு கிறார். அவர் வீட்டுக்கு விருந்தினர் சென்றால், தாம் கடைக்குச் சென்று விற்பதற்காக வைத்துள்ள நெய்யைக் கொடுத்து அதற்கு வேறு மாடுகளை வாங்கும் அந்த நல்ல குடிப்பெண்டிர், 'பசுந்தினை மூரல் பாலொடும் உண்ணத்' தருவர். அதைக் கடந்து குறிஞ்சி நிலத்துச் சீறூர் செல்லின், ஆங்குள்ளார்,

"நெடுங்குரற் பூளைப் பூவின் அன்ன
குறுந்தாள் வரகின் குறள்அவிழ் சொன்றிப்

புகர்இணர் வேங்கை வீகண் டன்ன
அவரை வான்புழுக்கு அட்டிப் பயில்வுற்று
இன்சுவை மூரல்'' (பெரும். 192—196)

உணவாகத் தருவர்; பின் மருத நிலத்தை நாடிச் சென்றாலோ, அந்நிலத்தில் உழவுத் தொழில் செய்து உலகை வாழ்விக்கும் உத்தம வேளாண்குடியில் தோன்றிய நல்லவர்கள், பசியென்பது இன்னதென்பதை அறியாத நல்ல வீடுகளில் வாழ்பவர்கள்,

''வினைஞர் தந்த வெண்ணல் வல்சி
மனைவாழ் அளகின் வாட்டொடும்''
(பெரும். 255—256)

தருவார்கள். அஃதாவது, தம் கை வருந்தி வயலிடை உழைத்த பயனால் பெற்ற நல்ல வெள்ளிய அரிசிச் சோற்றுடன் பெட்டைக் கோழியின் பொரியலும் வைத்துத் தருவார்களாம். பின்னர் அவர்களைக் கடந்து கொடுமுடி வலைஞர்தம் குடியிட மாகிய நெய்தல்நிலத்தில் சென்றுசேரின், அவர்கள் கொழியலா லாகிய கூழினை வாய் விரிந்த தட்டிலே ஊற்றி ஆற்றி, புற்றின் உட்கிடக்கும் நல்ல முழைகளிலே அதை ஊறவைத்து, இரண்டு பகலும் இரண்டு இரவும் கழிந்து பார்த்து, பின் எடுத்து வார்க்கும் நல்ல கள்ளையும், நல்ல கறியாக்கிய மீனையும் கொடுப்பார்களாம். அதைக் கடந்து வழி நெடுகச் செல்லும்போது இன்னும் பலருடைய பழம்பதிகள் எதிர்ப்படுகின்றன. அவற்றுள் ஒன்று அந்தணர் உறை பதி. அவ்வந்தணரோ,

'பறவைப் பெயர்ப்படு வத்தம்
சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்து
உருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி அளைஇப் பைந்துணர்
நெடுமரக் கொக்கின் நறுவடி விதிர்த்த
தகைமாண் காடியின் வகைபட' (பெரும். 305-310)

தருவார்கள்.

இவ்வாறு நானிலத்திலும், அவற்றைச் சார்ந்த இடங்களிலும் வாழும் மக்கள் விருந்தோம்பும் வாழ்க்கையை விளக்கும் இவை வாழும் கவிதைகள் தாமே! ஒவ்வோர் இடத்தையும் குறிக்கும்போது, அதில் வாழும் அவ்வகைப்பட்ட மக்களையும், அவர்கள் பழக்க வழக்கங்களையும், பண்பாட்டு நலன்களையும் நன்கு விளக்கிக்கொண்டே போகின்றார் ஆசிரியர்.

இவ்வாறே மலைபடுகடாம் என்னும் கூத்தராற்றுப் படையில் வழிநெடுக வாழும் மக்களினம், வந்தார்க்கு வரிசையறிந்து, வகைவகையாக உணவிடும் தன்மையையும், அவர்களை விட்டு நீங்காதிருக்க விரும்பும் நல்ல விழைவினையும் பெருங் கௌசிகனார் பலவாறு பாராட்டுகின்றார். ஆறலைக்கும் கொடுந் தொழில் புரியும் வேடுவர்கூடத் தம் கொள்ளையையும் கொலையையும் மறந்து, வீடு தேடி வந்த விருந்தினரை உபசரிக்கும் சிறப்பும், அவ்விருந்தினர் நெடுவழிச் செல்லின் துன்பம் விளையும் என்று தாமே வழிகூட்டிக் கொடுங்காட்டு எல்லை கடக்கும் வரையில் துணையாக அமையும் காட்சியும் அறிந்தறிந்து இன்புறத்தக்கன. இவ்வாறு எல்லா நிலத்திலும் வாழ்கின்ற மக்கள் வாழ்க்கை வகைகள் அனைத்தும் பின்னிச் செல்லும் காட்சியோடு, இக் கவிதைகள், அவற்றின்மூலம் மக்கள் வாழ்க்கை—எந்நிலத்து எவ்வாறு அமையினும்—அந் நிலத்து அவரவர் நிலைக்கேற்ப மற்றவருக்கு உதவுவதற்காகவே என்பதை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. இதனினும் வாழ்க்கையோடு இயைந்த வளமார் கவிதையும் உண்டோ!

இனி, இவ்வாற்றுப் படைகளுள் இறுதியாகச் செல்வர் வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டுமென்று, அவ்வப் பாட்டுடைத் தலைவரை முன்னிருத்திக் கவிஞர்கள் காட்டுகின்றார்கள். விருந்தினர்தம் எளிமையான தோற்றத்தை முன்னர்க் காட்டி, அவரை ஏற்கும் அரசன்—வள்ளல் ஆகியோர் தோற்றத்தைப் பின்னர்க் காட்டி, இரண்டிற்குமுள்ள வேறுபாட்டுக்கிடையில் நம்மை நிற்க வைத்து, இத்துணை வேறுபாட்டுக்கிடையிலும் நல்லறம் ஆற்றும் பண்பட்ட உள்ளம்

வாய்ந்த செல்வர், மக்கள் வாழ்வில் வேறுபாடு காணுராய், புறத்தோற்றத்தால் முகம் கோணுராய், எதிரேற்று வந்தவர் யாவராயினும் மகிழ்ந்து சிறப்புச் செய்யவேண்டும் என்பதை ஒவ்வொரு கவிதையும் எடுத்துக் காட்டுகிறது. அதனுடன் ஏற்ற அவர்களை, தம்மைப் போலவே செல்வரெனும்படியாக்கித் தேரும், களிறும், பிற நல்ல உணவுகளும் தந்து, பொன்னுடை போர்த்தி, பல நாள் தம்முடன் அவர்கள் வைத்திருப்பார்கள் என்பதையும் காட்டுகிறது. பின்பு அவர்கள் செல்லவேண்டும் என்ற குறிப்பை உணர்த்தினும் முதலில் இணங்காராய், பின் வேறு வழி இன்றி இசைந்து, அவர்க்கு வேண்டுவன கொடுத்து, தேரேற்றிச் 'சென்று வருக!' என்று விடையும் தந்து, நின்ற இடத்தோடு திரும்பாது, அவருடன் 'காலின் ஏழடி' பின் சென்று பிரியும் பெருமிதமற்ற பெருஞ்செல்வ வாழ்வை இக் கவிதைகள் நம் கண்முன் காட்டுகின்றன[1]. இவை காட்டும் வாழ்க்கை நாட்டில் இன்று எங்கே?

இவ்வாறு அரசரும் வள்ளல்களும் ஒருசேர மற்றவர் வாழ்வே தம் வாழ்வாக வாழ்ந்த காரணத்தினுலேதான் போலும் எத்தகைய வறுமையில் புலவர்கள் வாடினுலும் அவர்கள் அதுபற்றிக் கவலையற்று இருந்தார்கள்! இவ்வாறு ஐந்து ஆற்றுப்படைகளிலும் நாட்டு இயற்கைப் பொருள்களின் அமைப்பையும் கூறுபாட்டையும், அவற்றில் வாழும் மக்கள் வாழ்க்கையையும் அவர்தம் விருந்தோம்பும் பண்பாடு முதலிய வற்றையும், செல்வர் வறியரென்ற வேறுபாடிருந்தும், அது தெரியாதவாறு செல்வர் சேர்ந்தோரை ஆதரித்த சிறப்பும், பிற பண்புகளும் கலந்த அந்தநாள் வாழ்க்கை அப்படியே விளக்கப் படுகின்றதன்றே! இவை வாழ்வோடு பிணைந்த நல்ல கவிதை களல்லவோ! இனிப் பிற பாடல்களைக் காண்போம்.

நெடுநல்வாடையை ஒத்ததே முல்லைப் பாட்டு. அங்கே வாடைக்காலம் இடம் பெறுவது போன்று, இங்கு மாரிக்

1. பொருநர். 155—177; பெரும்பாண், 478—490 மலைபடுகடாம், 569—581

காலம் இடம் பெறுகின்றது. முல்லைக்கு மாலையும் கார் காலமுமே 'பொழுதுகள். எனவே, அவை சிறந்தவகையில் இப்பாடலில் காட்டப்படுகின்றன. தலைவனோ, போர்மேற் சென்றுவிட்டான். தலைவியோ வீட்டில் அவன் கூறிய நாள் எண்ணி நலிகின்றாள்; 'கார் கலத்துக்கு முன் வருவேன்', என்று கூறிய தலைவன் வரவில்லையே என ஏங்குகின்றாள். எனினும், அவன் சொற்கடவான் என்ற காரணத்தால் ஆற்ற நினைக் கின்றாள். ஒருநாள் மாலைக்காலம் தொடங்கி, அடுத்த நாள் விடியும் வரையிலுமுள்ள அந்தப் பொழுதே கவிதை முழுவதும் ஆட்சி செலுத்துகிறது. மாலையில் முல்லை மலர, தூறல் தொடங்க, அதைக் கண்டு தலைவி மாழ்க, இயல்பாய் அமைந்த அந்த நிலக் கோவலர் கன்றுகளை நோக்கித் 'தாயர் இன்னே வருகுவர்', என்று கூறியதே விருச்சியாகக் கொண்டு, செவிலியர் தேற்றவும் தேறாளாய் மாலையைக் கடந்து இரவில் வாடு கின்றாள் தலைவி. நெடுநல்வாடைத் தலைவியின் வருத்தம் இங்கும் பேசப்படுகின்றது. அதைப் போன்றே, தலைவன் போர்க் களத்து வினையின் இறுதி நாளிலே நின்று, 'நாளை எப்படி யும் போர் முடித்துத் தலைவியைக் காணவேண்டும்' என்ற கருத்தில் இரவெல்லாம் உறங்காது, சூழ வேண்டியவரோடு சூழ்ந்து, படுத்தும் உறக்கம் கொள்ளாது, ஒரு கை ஊன்றிய நிலையில் அவன் இருக்கப் பொழுது விடிகின்றது. விடிந்த நிலை கண்ட தலைவி, தன் செயலுக்கு நாணித் தலைவன் அன்றே எப்படியும் வருகுவன் என்று ஆற்றியிருக்கின்றாள். இந்த ஓர் இரவின் நிகழ்ச்சியை வைத்து நப்பூதனார் அழகிய கவிதையை யாத்துவிட்டார். இதில் மாலைக்கால இயற்கையின் சிறப்பும், முல்லை நில மக்களின் மாலை வாழ்வும், தனித்தவர் துனியும், இரவின் நிலையும் விளக்கப்படுகின்றன. அவை போன்றே அக் காலப் போர்க்களங்கள் இராக்காலத்தில் எப்படியிருக்கும் என்று அரசனது போர்க்களத்தைக் காட்டுகின்றார் புலவர். அக் குளிரில் சோர்ந்து நிற்பார் நிற்க, வினையாற்றுபவர் அவ் விரவிடையும் உறங்காது காவல் வினையை ஆற்ற, சென்ற நாளையும் வரும் நாளையும் எண்ணி எண்ணி மன்னரும் தலைவர் பிறரும் ஆழ்ந்து சிந்தித்துப் பின்,

'ஒருகை பள்ளி யொற்றி ஒருகை
முடியொடு கடகம் சேர்த்து நெடிதுநினைந்து'
(முல்லை. 75-76)

நிற்கும் பாசறையின் இரவிடைப் போர் வாழ்க்கை சிறப்பதை விளக்குகின்றது இப்பாடல். இப் பத்திலே இதுவே மிகச் சிறிய பாடல் எனினும், நானிலத்தில் ஒரு நிலமாகிய முல்லை நில வாழ்க்கையையும் போர்க்களத்து இரவு வாழ்க்கையையும் காட்டுவதோடு பிரிந்தோர் உள்ள அசைவுகளையும் எண்ண அலைகளையும் இது நன்கு எடுத்துக் காட்டுகின்றமையின், இதுவும் வாழ்விலக்கியங்களோடு வைத்து எண்ணப்பட்டது போலும்! மக்கள் உள்ள நிகழ்ச்சியைத் தெள்ளத்தெளியக் காட்டுபவன் வாழும் கவிஞன் அல்லனோ!

இனி, அடுத்துள்ள குறிஞ்சிப்பாட்டு வாழ்க்கையை விளக்கும் முறை தனிப்பட்டது. அதன் ஆசிரியர் கபிலர், நாடறிந்த நல்லிசைப்புலவர். அவர்தம் பாடல்கள் பலவற்றைப் பின்னர்க் காண இருக்கின்றோம். ஆகவே, இங்கு இந்நூல் பற்றிச் சில அறிந்து மேலே செல்வோம். இந்நூல் தமிழ் அறியா ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழறியத் தூண்டும் வகையில் அமைந்த பாட்டென்பர். அவர் வழி அவன் தமிழறிந் தானோ என்பதை நாமறியோம். எனினும், அவர் இப்பாட்டின் மூலம் அவனுக்குத் தமிழில் பற்று ஏற்படும்படி செய்திருப்பார் என்பது உண்மை. தமிழர் வாழ்வின் அடிப்படையா யமைந்த களவுச் சிறப்பாகிய குறிஞ்சி ஒழுக்கத்தை நிலைக்களனாக அமைத்து இதைப் பாடியுள்ளார் அவர். அவர் 'குறிஞ்சிப் புலவர்' என்றே சிறக்கப் போற்றப் படுகின்றார். அகப்பாட்டில் வரும் குறிஞ்சித்திணைப் பாடல்கள் பலவும் அவர் பாடல்களே யாம். அவர் பிற பாடல்களைக் காட்டிலும் குறிஞ்சிப்பாடலையே அதிகமாகப் பாடியுள்ளார். இப்பாடலில் கபிலர், குறிஞ்சி வாழ்க்கையை அப்படியே எடுத்துக் காட்டுகின்றார். களவுப் புணர்ச்சியினால் தலைவியின் உடலில் மாறுபாடுகள் தோன்ற, அவள் நிலைமை அறியாச் செவிலி வேலனை வினவுதலும், தோழி அந்நிலை விலக்கி, தலைவி களிறுதரு புணர்ச்சியால் கணவனைத்

தேர்ந்த முறையினைக் குறிப்பாகக் கூறலும் அறிந்து இன்புறத் தக்கன. தமிழர் வாழ்விலேயே இக் கள்வாகிய குறிஞ்சு ஒழுக்கந்தான்.பிற ஒழுக்கங்களுக்கு அடிப்படையா யமைவது• மற்றெவற்றினும் உயர்ந்ததாய், அனைத்துப் பொருளையும் அடக்கியதாய், வானுயர் தோற்றம் கொண்டுள்ள குறிஞ்சிநில மலைநலத்துக்கொப்ப அதில் நிகழும் இக்களவு வாழ்க்கையும் தமிழர்தம் பிற வாழ்வுக்கெல்லாம் சிகரமாய்ச் சிறந்து விளங்குகின்றது. அக்களவு வாழ்வின் ஒரு பகுதியாகிய 'களிறு தரு புணர்ச்சி'யே இங்குக் கபிலரால் காட்டப்படுகின்றது.

தனித்து விடப்பட்ட தோழியும் தலைவியும் தினைப்புனங் காத்துத் திரிதருங்கால் ஒரு களிறு அவரைத் துரத்தி வர, அதை விரட்டி வெற்றி கண்ட வீரனைத் தலைவி விரும்பிக் கூடும் நிலையே இது. இதன் வழி அவள் காதல் வாழ்வு தொடங்குகின்றது. அதை அறியாத அன்னையர், தலைவி மாற்றத்திற்கு வேலன் மூலம் வெறியாடி மருந்து நாடுகின்றனர். ஆனால், தோழியோ, உண்மையை உரைத்துத் தலைவனுக்கு அவளைத் தருமாறு வேண்டுகின்றாள். தினைப்புனத்துக்கு அனுப்பியவர் தாயரா தலான், தவறு அவர்பால தென்றும், வாய்மையும் மரபும், பிற பண்புகளுடன் யானையை வெல்லும் வீரமும் உடைய தலைவனையே தலைவி தேர்ந்தெடுத்ததால் அதில் தவறில்லை எனவும் தலைவியின் பக்கம் தோழி நின்று பேசுவது, நூல் வழி அறிந்து இன்புறற் பாலதாகும். மேலும், குறிஞ்சி நில இயற்கைப் பாகுபாடுகளையும், அந்நிலத்து வாழ் மக்கள் வழக்க ஒழுக்கங்களையும் கபிலர் காட்டும் திறன் சிறந்த ஒன்று. இதில் காட்டும் தலைவனது பெருந்தன்மை, தலைவி உள்ளம் அறியா முன் எட்டி நின்று, 'அறிந்தபின் அணைத்து வந்து காட்டிய தண்ணளி முதலியன அறியத் தக்கன. களவு மணத்தில் பிரிய நேர்ந்த தலைவி கலங்க,

'நேரிறை முன்கை பற்றி நுமர்தர
நாடறி நன்மணம் அயர்கம் சின்னாள்
கலங்கல் ஓம்புமின் இலங்கிழையீர்!'

(குறிஞ்சி. 231-33)

எனத் தலைவன் தேற்றிச் செல்லும் காட்சியும் பிற மலர்ச் சோலைக் காட்சிகளும் இப்பாடலுக்கு ஏற்றந் தந்து, தமிழர் வாழ்வை நன்கு விளக்குகின்றன. இப்புலவர் தம் குறிஞ்சிப் பண்பு கலந்த பல பாடல்களைப் பின்னர்க் காண இருக்கின்றோ மாதலின், இந்த அளவோடு இதை நிறுத்தி மேலே செல்வோம்.

பத்துப்பாட்டில் மேலே பார்த்தன போக இருக்கின்ற இரண்டு தமிழ்நாட்டு நகர வாழ்க்கையை நமக்கு எடுத்துக் காட்டுவன. மதுரைக் காஞ்சி பாண்டியர் தலைநகராகிய மதுரையின் வாழ்வையும், பட்டினப்பாலை மறைந்த தலைநக ராகிய காவிரிப்பூம்பட்டினத்தின் வாழ்வையும் காட்டுகின்றன. இன்றும் நாம் வாழும் நகர வாழ்க்கையில் காணும் பலபல முறைகளும் வழிகளும் துறைகளும் அன்றும் இருந்தன. இரண்டுள் ஒன்று உள்நாட்டுத் தலைநகர்; மற்றொன்று, கடற் கரைப்பட்டினம். ‘பட்டினப்பாலை’ என்பது புகார் நகரின் பெருமையையும் அதில் வாழ்ந்த மக்கள் நிலையையும் விளக்குவது. அவ்விளக்கு முறைக்கு ஆசிரியர் உருத்திரங் கண்ணனார் ஆய்ந்த பாத் திறத்தின் இயல்பு அறியத்தக்கது. அகப்பொருள் துறையில், தலைவன் தலைவியை விட்டுப் பிரிய ஆற்றாத நிலையில் அமைந்த பாடல் இது. ‘முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்’ தான் தம் தலைவியை விட்டுப்பிரியாத நிலையில் தலைவன் கூறுவதாக அமைகின்றது இப்பாடல். தான் செல்லும் வினைவழி இத்தகைய பட்டினமே பெற்றாலும் தான் தலைவியைப் பிரிதல் இயலாது என்று கூறி, அப்பட்டினம் எத்தகையது என்பதை விளக்கும் வகையிலேதான் புகார் விளக்கப்படுகின்றது. தமிழர்தம் கடற்கரைப்பட்டின வாழ்க்கையை விளக்க இதனினும் வேறு பாடல் தமிழ் இலக்கியத்தில் காண்டல் அரிது.

புகார் நகரம் காவிரி கடலோடு கலக்குமிடத்து அமைந் துள்ளது. அது மருவூர்ப்பாக்கமெனவும் பட்டினப்பாக்க மெனவும் இரு பிரிவாய் உள்ளது. சோணாட்டின் தலைநகர் அது. அந்நாட்டு மக்கள் பகையறியா அமைதி வாழ்க்கையில் வாழ்பவர்கள். அந்நகரின் பலப்பல பகுதிகளில் பலப்பல

வகையினரான மாந்தர் வாழ்கின்றனர். கடற்கரைப் பட்டின மல்லவா அது! அங்குள்ள வாணிப வளன் பலவாறு நன்கு விளக்கப்படுகின்றது. இதுவரையில் பிற பாடல்களிலெல்லாம் நாட்டு வாழ்க்கையும் காட்டு வாழ்க்கையும் கண்டு வந்த நமக்கு, இந்நகர வாழ்வு ஒரு புதுஉணர்ச்சியை ஊட்டுகின்றது. தனித்து வாழும் திணைநில மக்களினும் வேறுபட்டாராய், வாணிகத்தின் பொருட்டு வந்துள்ள பிற நாட்டு மக்களோடு கலந்து வாழும் தமிழ்மக்களைக் காண்கின்றோம். 'நீரினின்று நிலத்தேற்றவும் நிலத்தினின்று நீர்ப்பரப்பவும், அளந்தறியாப் பலபண்டம்' அங்கு வியாபாரப் பொருள்களாக வருவதைக் காட்டுகின்றார் புலவர்.[1]

இன்னும் அந்நகரத்தே அரசர் இருக்கையும், அமைச்சர் முதலியோர் இருக்கையும், வேளாளர், வணிகர், அந்தணர் போன்றோர் இருக்கையும் நம்முன் தெரிகின்றன. அறவழி வாழ்க்கை நடத்தும் அம்மக்களின் நல்வாழ்க்கை முறைகளும் நூல் முழுவதும் பேசப்படுகின்றன. மேம்பட்ட பண்பாட்டின் வழி ஒழுகும் அவர்தம் வாழ்க்கை இத்தகைய தென்பதைக் காட்டும்போது,

'நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்' *(பட்டின. 206-211)*

என்று நல்லவர் வாழும் பதி அது என்பதை விளக்குகின்றார். பல நாட்டு மக்கள் கலந்துறைவதால் அந்நகரில் பல மொழிகள் பேசப்படுகின்றன. பல்வேறுபட்ட மக்கள் வாழ்கின்றார்கள். சுருக்கமாகச் சொல்லக் கருதினால், இக்காலத்தில் கூறப்படும் 'மெட்ரோபாலிட்டன்[2]' என்ற பலர்

---

1. பட்டின. 185 - 193 2. Metropolitan City

கூட்டுண்டு பயன்பெறு நகர் என அது விளங்கிற்று எனலாம் வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரிக் கரையிலே, பல்வேறு நாட்டு மக்களும் வாணிகத்தின் பொருட்டு வந்து கலந்திருக்க, மருவூர்ப்பாக்கம் பட்டினப்பாக்கம் என்ற இரு பகுதிகளைக் கொண்ட அக்காவிரிப்பூம்பட்டின வாழ்க்கையைக் காட்டி, இதுவே பண்டைத் தமிழர்தம் கடற்கரைப்பட்டின வாழ்க்கை என்பதை நன்கு விளக்கியுள்ளார், உருத்திரங் கண்ணனார் என்ற அந்தப் பெரும் புலவர். துறைமுகத்தே பண்டங்களை இறக்கி ஏற்றும்போது தொழிலாற்றும் சுங்கச் சாவடிகளில், பண்டங்களின் மேல் 'புலி' இலச்சினை இடும் வழக்கம், இன்றைய சுங்கச் சாவடியை[1] நமக்கு நினைப்பூட்டு கின்றதன்றோ! இலங்குநீர் வரைப்பில் கலங்கரை விளக்கம்[2] கப்பல்களைக் கரைக்கு வருமாறு அழைக்கும் இன்றைய விளக்குகளை நம்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றன. இன்னும் எத்தனையோ வகையில் அப்பட்டினம் பேசப்படு கின்றது.

உருத்திரங்கண்ணனார், சோழன் கரிகாலனைப் பாட வந்தவர், பாட்டின் இறுதியிலே அவனையும் பாடுகிறார் எனினும், கவிதை முழுதும் அவனைப்பற்றியே அமைந் திருப்பின், அது என்றோ மறைந்துவிட் டிருக்கும். ஆனால், அவனை முன்னிறுத்தி, அவன் தலைநகரின் நலன் கூறுவதன் வழி, தமிழ்நாட்டுக் கடற்கரைப்பட்டினத்தின் வாழ்க்கை நிலையையே ஒன்றாக திரட்டிக் காட்டுவதாலன்றோ அவர் கவிதை இன்றும் வாழ்கின்றது! ஆகவே, மன்னரைப் பாடினும், அவர் மக்கள் வாழ்க்கையைப் பாடிய புலவரே ஆவர்; எனவே, என்றும் வாழ்பவராவர்.

இறுதியாக மதுரைக் காஞ்சியைக் கண்டு இப்பகுதியை முடிப்போம். 'காஞ்சி' என்ற சொல்லுக்கு 'நிலையாமை' என்னும் பொருள் உள்ளதை மேலே புறம்பற்றி ஆயும் போதே கண்டோம். இங்கு 'மதுரைக்கு நிலையாமை

1. Custom House 2. Light House

வந்துற்றதா' என்ற ஐயம் எழலாம். ஆனால், உண்மை அது வன்று. மதுரை இன்றும் நிலைத்தே வாழ்கின்றது. கரிகாலனை முன்னிறுத்திப் புகார் வாழ்வைக் காட்டினது போன்றே, இங்கும் பாண்டியன் நெடுஞ்செழியனை முன்னிறுத்தியும், அவனுக்கு நிலையாமை உணர்த்தும் நெறியை முன்னிறுத்தியும் மதுரை வாழ்வை விளக்குகின்றார் மாங்குடி மருதனார். மாங்குடி மருதனார் புலவர் வரிசையில் முன்னிறுத்திப் போற்றப் பட்டவர்.

'மாங்குடி மருதன் தலைவ னாகப்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை'

என்று பாண்டியன் நெடுஞ்செழியனாலேயே பாராட்டப் பெற்றவர். அவர்தம் பாடலே இம் மதுரைக் காஞ்சி. இப் பாடற்றொகுதியிலே இதுவே மிக நீளமான பாட்டு; 782 அடிகளைக் கொண்டது. இதில் ஆசிரியர், நெடுஞ்செழியனது சிறப்பையும் வெற்றிகளையும் கூறி, அவனது மதுரைமா நகரின் நலத்தையெல்லாம் விளக்கி, அவன் முன்னோர் வாழ்ந் ததையும் கழிந்து ஒழிந்ததையும் காட்டி, நில்லா உலகத்து நிலைமையை விளக்கி, மேல் அவன் செய்ய வேண்டுவதைச் சொல்லுகின்றார். 'உலகம் பொய்; அனைத்தும் பொய்; ஆகவே, அனைத்தையும் விட்டு நீங்கு,' என்ற பொய்த் துறவைத் தமிழர் கற்பிக்கவில்லை என்பதை மேலே கண்டோம். அதே நிலைதான் இங்கேயும். நெடுஞ்செழியன் முன்னோரது வீரம், கொடை, சிறப்பு, வாழ்க்கை வளன் அனைத்தையும்கூறி, 'அவ்வாறு வாழ்ந்தவர் திரையிடு மணலினும் பலரே காண்' என விளக்கி, அதனால், 'நீ அனைத்தையும் விட்டுத் துறவை மேற்கொள்வாயாக' என மாங்குடி மருதனார் வற்புறுத்தவில்லை. அதற்கு மாறாக, இவ்வாறு 'நில்லா உலகில் நிலைபெறுமளவும், பெற்றது கொண்டு சுற்றம் அருத்தி, உற்றார் உறவினரோடு பொருந்தி, விருப்புறு மனைவியோடு காதல் வாழ்வில் திளைத்து வாழ்க!' எனவே மருதனார் வலியுறுத்துகின்றார். இளமை தொடங்கிப் போர்த் தொழிலையே கொண்டு வாழ்ந்த பாண்டியன் நெடுஞ்செழியனை, அவ்வாறு போர்மேற்

செல்வதைத் தடுத்து நிறுத்தி, நில்லாத வாழ்வியல்பு காட்டி, வாழும் சில நாளில் காதல் வாழ்வில் திளைக்கவேண்டும் என்று தான் தம் காஞ்சியை முடிக்கின்றார். அவர் வாக்கையே காட்டி விடுகின்றேன்:

'பணிகெழு பெருந்திறல் பல்வேல் மன்னர்
கரைபொருது இரங்கும் கனையிரு முந்நீர்த்
திரையிடு மணலினும் பலரே; உரைசெல
மலர்தலை உலகம் ஆண்டுகழிந் தோரே''

(மதுரை. 234-237)

என்று நிலையாமையைக் கூறி, பின்னர்ப் பல்வேறு பொருள் களில் மன்னன் கருத்தை ஈர்த்துக்கொண்டே சென்று, பின்னர் அவன் 'பூத்த சுற்றமொடு பொலிந்து இனிது விளங்கி, மன்னரும் பிறரும் வாய்மொழி கேட்க, புலவரும் பிறரும் புகழ்ந்து சூழ்ந்திருக்க வேண்டும்,' என்கிறார். இறுதியாக.

''இலங்கிழை மகளிர் பொலன்கலத்து ஏந்திய
மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந்தினிது உறைமதி பெரும!
வரைந்துநீ பெற்ற நல்லூ ழியையே!''

(மதுரை. 779-782)

என்று, அவன் பெற்ற அந்த வாழ்நாளில் காதல் மகளிர் தேறல் கொடுப்ப உண்டு, அவரொடு கலந்து வாழ்தலே அவன் வாழ்க்கைப்பேறு என்று முடிக்கின்றார். எனவே, இக்காஞ்சியா னது துறவை வற்புறுத்தாது, நில்லாத உலகியல்பால் நிலைத்து நிற்கும் வரையில் அறமாற்றிப் புகழ் கொண்டு, மறம் கடிந்து, மனைவாழ்வில் ஈடுபடவேண்டும் என்பதையே வற்புறுத்தித் தமிழர்தம் அடிப்படையான வாழ்க்கைநெறி இதுவே என்ப தைக் காட்டுகிறது.

இம் மதுரைக் காஞ்சியில் ஆசிரியர் ஐவகைப்பட்ட நிலங் களில் வாழும் மக்கள் வாழ்க்கையைத் தனித்தனியே காட்டி, விளக்குகின்றார்; தலையாலங்கானத்துச்செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனது திறத்தையெல்லாம் காட்டுகின்றார். நாம்

மேற்கண்டபடி, இந்நூல் அவனை மட்டும் பாடியிருப்பதாயின் அவனோடே மாய்ந்திருக்கும். அவனை முன்னிறுத்தி, அவன் நாட்டு ஐவகை நிலமக்கள் வாழ்வினையும், அவன் தலைநகராகிய மதுரைமாநகரின் மக்கள் வாழ்வினையும் நம்முன் கொண்டு வந்து வைப்பதாலேயே, அதுவும் வாழ்கின்றது. வையைக் கரையில் அம் மதுரைமா நகரின் விரிந்த சிறப்பையெல்லாம் இன்றும் காண்கின்றோம். இவ்வாறு ஏற்றம் பெற்ற 'காவல்' மாநகராக, இராப்பகல் என்ற வேறுபாடற்று விழாச் சிறந்த நகராக, வாணிக வளனும் பிற நலன்களும் பெற்ற பெருநகராக அது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னும் விளங்கியது என்பதைக் காணத் தமிழர் உள்ளம் மகிழாதிருக்குமோ! மதுரைமா நகரம் பகற்காலத்தும் இராக்காலத்தும் யாமந் தொறும் எவ்வெவ்வாறு இருந்தது என்பதை அறிதல் நலம் பயப்பதாகும். மதுரைமா நகரின் ஒரு நாள் வாழ்க்கையை நம்முன் கொண்டுவந்து நிறுத்தி, அன்றைய தமிழ் மக்களின் நகர வாழ்வு இத்தகையது என்பதை மாங்குடி மருதனார் காட்டுகின்றார். தெருத்தொறும் செல்லும் தேரும், குதிரையும், யானையும், பிறவும் அவர்தம் செல்வ வாழ்க்கையை நமக்குக் காட்டுகின்றன. நகர மக்கள் ஆற்றும் பல்வேறு வினைகளைப் பற்றிய பட்டியலையே நம்முன் வைக்கின்றார் கவிஞர். நகரில் ஆடவரும் பெண்டிரும் அணி அணியாகப் பணியாற்றியும், பொழுதுபோக்கியும் தத்தம் வழியே வாழ்ந்து வருவதும் நம் கண்முன் தெரிகின்றது. திருக்கோயில்களின் சிறப்பும் அவற்றுள் மக்கள் வழிபாடாற்றும் முறையும் விளக்கப்படு கின்றன. காலை மாலையில் கடனாற்றும் அந்தணர், அறவோர்தம் செயல்கள் விளக்கம் பெறுகின்றன. இராக்காலத்தில், பேயும் உறங்கும் பேரிருள் யாமத்தும் ஊர்க்காப்பாளர் உறங்காராய்க் கண் இமையாராய்க் காவல் புரியும் செயலும் நம்முன் தெரிகின்றது. விடியல்வேளையில் இயல்பாக நிகழும் இயற்கை நிகழ்ச்சியும் மக்கள் செயலும் காட்டப்படுகின்றன. இவ்வாறு மதுரை மாநகரின் வாழ்க்கை அத்தனையுமே காட்டப் படுதலால் இது ஒரு வாழ்விலக்கியமேயாய் அமைகின்றது தன்றோ!

இவ்வாறு மதுரைக் காஞ்சி, அன்றைய தமிழ் நாட்டிலும், தலை நகரங்களிலும் வாழ்ந்த மக்களது இடையறா இன்பவாழ்வையும், துன்பியல் நிலையுள்ளதேல் அதையும் காட்டி, அவற்றின் வழி அன்றைய தமிழர்தம் வாழ்க்கை முறையை நம்முன் காட்டுகின்றது. எனவே, இப் பத்துப்பாட்டுத் தொகுதி அக்கால வாழ்க்கை முறைகளைக் காட்டும் ஒரு கவிதைத் தொகுதி நூல் என்பது தேற்றம்.

இதுகாறும் கண்டவற்றால், சங்க காலத்தே தோன்றிய நூல்களுள், 'பத்துப்பாட்டு' என்னும் தொகுதி முதலில் வைத்து எண்ணத் தக்கதென்றும், அதில் அமைந்த பத்தும் இவை என்றும், அவை அகமும் புறமும் பொருந்த எவ்வாறு பாடப் படுகின்றனவென்றும், அரசரைப் பாடிய அந்த நூல்கள் மக்கள் வாழ்வைப் பின்னணியாக்கிக் கொண்டே ஆக்கப்பெற்றன வென்றும், தமிழர்தம் நாட்டு வாழ்க்கை, நகர வாழ்க்கை என்ற இரண்டையும், ஐந்திணை நிலவகையில் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறை வழியே எவ்வெவ்வாறு எடுத்துக் காட்டுகின்றன என்றும், அவற்றைக் காட்டுவதன்மூலம், இக் கவிதைகள் வாழ்வொடு பின்னிப் பிணைந்து எக்காலத்தும் வாழும் கவிதைகளாக நிலைபெற்று உள்ளன என்றும் கண்டோம். இனி, எட்டுத்தொகை நூல்களைக் காண்போம்.

3. எட்டுத்தொகை

தமிழ் இலக்கியத்திலேயே—தமிழ்க் கவிதை உலகிலேயே—இந்தத் தொகுதிதான் மிகச்சிறந்ததாகப் போற்றப்படுகின்றது. இத்தொகுதியைக் கொண்டுதான் வரலாற்று ஆசிரியர்கள் தமிழ்நாட்டுப் பண்டைய வரலாற்றை ஆராய்கின்றார்கள். தமிழ் நாட்டில் வாழும் உணர்வுடையாரும் இத்தொகுதி கொண்டேதான் 'தமிழர் பண்பாடு, கலாசாரம்' என்றெல்லாம் பேசிப் பெருமை கொள்ளுகின்றனர். இத்தொகுதியில் உள்ள எட்டுத்தொகை நூல்களைப்பற்றிய ஆராய்ச்சி நூல்களும், உரைநடைகளும், விளக்கங்களும் வெளிவந்து கொண்டேயிருக்கின்றன. இன்னும் பலப்பல புது நூல்களும் வர வழியிருக்கின்றது. இத் தொகை நூல்களுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பேரிலக்கியமாய் விளங்குகின்றது. இவற்றில் அகம் புறம் என்ற இரு பொருளுமே பேசப்படுகின்றன. புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய இரண்டும் புறப்பொருள் பற்றிப் பாடுவன. இவை இரண்டுமே ஓர் அரசனையோ, குறுநில மன்னனையோ, வள்ளலையோ, வீரனையோ பற்றிப் பாடப்பட்டவை. தனிப்பட்ட ஒருவனைப்பற்றிய பாடலாய் இருப்பினும், அப் பாடலுள் தமிழ்நாட்டு அன்றைய மக்கள் நிலை, பழக்க வழக்கம் ஆகியவற்றைக் காண வகை இருக்கின்றது. வாழ்வாங்கு வாழும் அறநெறியும் பிறவும் பேசப்படுகின்றன. இவ்விரண்டைத் தவிர்த்த மற்றைய ஆறு தொகை நூல்களும் அகப்பொருள் பற்றியனவே. 'அகம்' என்ற சொல்லே உள்ளத்தைக் குறிப்பதன்றோ! வாழ்க்கையில் கூடி வாழும் தலைவன் தலைவியரை முன்னிறுத்தி, தமிழ் நாட்டு வாழ்க்கை நுணுக்கங்கள் அத்தனையும் இவற்றுள் காட்டப்படுகின்றன. இவற்றைப் பாடிய புலவர் பல்லோர்.

இவற்றால் பாராட்டப் பெறுவோரும் பல்லோர். அனைத்தும் அன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டை விளக்கு கின்றன. அகப்பாடல்களுள் பெரும்பாலன, தனி மனிதரைக் குறித்துப் பாடப்பட்டன அல்ல. அவை அக ஒழுக்கம்பற்றிய விளக்கங்களாகவே அமைந்துள்ளவை. ஐந்திணை ஒழுக்க வகைகள் தனித்தனியே விளக்கமாகப் பேசப்படுகின்றன. புலவர் சிலர், தம் பெயரையும் விரும்பாராய், நல்ல கவிதைகளை ஆக்கியிருக்கின்றனர். அவர்தம் கவிதையில் அமைந்த அழகிய பொருள் பொதிந்த தொடரைக் குறித்தே அவர் வழங்கப் பெறுகின்றனர். சில பாடல்கள் முற்றும் கிட்டவில்லை. சில பாடல்கள் இடையிடையே சிதைந்துள்ளன. ஒவ்வொரு தொகுதியிலும் நானூறு, ஐந்நூறு என்ற எண்ணிக்கையில் பாடல்கள் உள்ளன. பரிபாடலில் மட்டும் இருபத்திரண்டு பாடல்களே உள்ளன. பதிற்றுப்பத்தில் முதலும் ஈறும் அழிய, எஞ்சியவற்றுள் எண்பது பாடல்கள் உள்ளன. கலித்தொகை நூற்று ஐம்பது பாடல்கள் கொண்டது. ஐங்குறுநூற்றில் ஐந்நூறு பாடல்கள் உள்ளன. மற்றைய நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய நான்கு நூல்களும் தனித்தனி நானூறு பாடல்களைக் கொண்டுள்ளன. இத்தகைய அரிய தொகுப்பு நூல்கள் யாரால் தொகுக்கப்பட்டன என்று கூற முடியாது. பெருந்தேவனார் இவ்வாறு பொருள்பற்றியும் அடிபற்றியும் பிற வகைபற்றியும் பாடல்களைப் பகுத்துப் பெயரிட்டு அவ்வவற்றிற்குக் கடவுள் வாழ்த்தும் எழுதி நூல் களை அமைத்தார் என்பர்; சிலர் இதனை மறுப்பர். எப்படியா யினும், அனைத்தினும் ஆழ்ந்த அறிவும் பற்றும் கொண்ட ஒருவரே இவற்றைத் தொகுத்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

இந் நூல்களுள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக எடுத்துக்கொண்டோ, திணை வகைப் பாகுபாடு செய்தோ, வேறு வகையாகப் பிரித்தோ இவை, வாழ்வோடு தொடர்பு கொண்டதைக் காட்டிக்கொண்டே செல்லின், அது எல்லை யற்றதாக அமையும். மேலும், இத் தொகுதிவழி ஆராய்ந்து

புலவர் பற்பலர் இவை வாழ்வோடு பொருந்தியவற்றை யெல்லாம் காட்டி, எத்தனையோ நூல்களை இயற்றியுள்ளனர். ஆகவே, நாம் இங்கு அதிகமாக அவற்றைக் காணாது, ஒரு சிலவற்றில் வாழ்க்கை பொதிந்துள்ளதைப் பார்த்து, மேலே செல்லலாம். முதலில் அகப்பொருள் பற்றிய நூல்களைத் தொகுத்துக் காண்போம்:

தமிழர் வாழ்க்கை களவில் தொடங்குகின்றது. தனி இடத்தே தலைவனும் தலைவியும் காண்கின்றனர்; கூடுகின்றனர்; மகிழ்கின்றனர். இம்மகிழ்ச்சியை விளக்கும் பாடல்கள் பலப்பல. தலைவன் பகலிலும் இரவிலும் வந்து தலைவியைக் கூடிச்செல்வதும் பிறவும் விளக்கும் பாடல்களே குறிஞ்சிப் பகுதியில் மிக்குள்ளன. அக்காலத்தில் தலைவியின் நிலைகண்டு பெற்றாரும் பிறரும் அவளுக்கு மணம் பேச நினைக்கின்றனர். ஆனால், அவளோ, கற்புடைச் செல்வியாதலின், அங்கு வீட்டில் இருப்பதைக் காட்டிலும் கணவனோடு உடன்போக்கில் செல்ல ஒருப்பட்டு எழுகின்றாள். செல்லும் வழியிலே கொடிய சுரம் உள்ளது. அதைக் கடத்தல் எளிதன்று. எனினும், காதல் வழிக் கட்டுண்ட இருவருக்கும் அக் கொடிய சுரமும் தண்ணென்றாகின்றது. தலைவன் வாயிலாக, வெவ்விய பாலை தலைவியின் நினைவில் தண்ணென்றிருந்த தென்பதனை,

'நெடுங்கழை முளிய வேனில் நீடிக்
கடுங்கதிர் ஞாயிறு கல்பகத் தெறுதலின்
வெய்ய வாயின முன்னே; இனியே,
ஒண்ணுதல் அரிவையை உள்ளுதொறும்
தண்ணிய வாயின சுரத்திடை யாறே'

(ஐங்குறுநூறு. 388)

என்று விளக்குகின்றார் புலவர். முன்னெல்லாம் வெய்ய வாயிருந்த அந்தச் சுரங்கள் அவன் காதலால் கட்டுண்டு காதலியைக் காணச் செல்லும்போது, அவளை நினைத்துக் கொண்டே செல்லுதலான், தண்ணென்றிருந்த தென்கின்றான். இந்த நிலையிலேதான் தலைவியும் உடன்போக்கில் வரும் எந்த

இடரையும், காதலன் கவானில் துஞ்சும் இன்பத்தை எண்ண இல்லையாகும் என உன்னுகின்றாள். அவள் உள்ளத்து நினைப் பினைத் தலைவனுக்குத் தோழி கூறுமாற்றால்,

'நீர்க்கால் யாத்த நிரையிதழ்க் குவளை
கோதை ஒற்றினும் வாடா தாகும்;
கவணை யன்ன பூட்டுப்பொரு தசாவா
உமணர் ஒழுகைத் தோடுநிரைத் தன்ன
முளிசினை பிளக்கு முன்பின் மையின்
யானை கைம்மடித்து உயவும்
கானமும் இனியவாம் நும்மொடு வரினே.' (குறுந்-388)

என்று ஔவையார் அழகுபடக் காட்டுகின்றார். இவ்வாறு தலைவன் தலைவியின் உட்கோளறிந்து தலைவியைத் தன் ஊருக்கு அழைத்துச் சென்றுவிடுகின்றாள். தலைவியை வீட்டில் காணாது அனைவரும் கவல்கின்றனர். பாவம்! அவளை வளர்த்த செவிலித் தாய்க்கு வருத்தம் மிகுகின்றது. அவள் வழிநெடுகத் தேடிச் செல்கின்றாள். தோழி அறத்தொடு நின்ற காரணத்தால், தலைவி சென்ற வழி செவிலிக்குத் தெரிகின்றது. அவள் முன்பு பலமுறை தலைவியின் களவு மணத்தைத் தோழி குறிப்பாக உணர்த்திய காலத்திலெல்லாம் தான் உணர்ந்து செயலாற் றாததை எண்ணிக் கவல்கின்றாள். கவன்று என் செய்வது? வேறு வழியின்றித் தலைவி தலைவனோடு சென்ற வழியறிந்து அவ்வழியே நெடுந்தூரம் தேடிச் செல்கின்றாள். வழியிடைக் காணும் மக்களை மட்டுமன்றி, மரத்தையும், புள்ளையும், விலங் கையுங்கூட விளித்து, அவை தலைவியைக் கண்டிருக்கக்கூடுமோ என வினவுகின்றாள். அவை எப்படி வாய் திறந்து பேசும்? வழியிடைச் சிலர் கண்டதாகப் பேசுகின்றனர். சிலர் அவளைத் தேற்றுகின்றனர். அவையெல்லாம் கேட்டு உள்ளம் அமைதி பெறவில்லை செவிலிக்கு. அவள் மேலும் கலுழ்ந்து கலுழ்ந்து தேடுகின்றாள். ஆனால், அவள் எதிரில் வருவார் சிலர், தலைவி நீங்கியது சரியே எனக் காரணம் காட்டி விளக்குகின்றனர். அவர்கள் காட்டிய உவமைகள் சிறந்தன. அவற்றையும் காண்போம்;

'பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும், மலைக்கவைதாம் என்செய்யும்?
நினையுங்கால் நும்மகள் நுமக்கும்ஆங்கு அனையளே.'

'சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை.
நீருளே பிறப்பினும், நீர்க்கவைதாம் என்செய்யும்?
தேருங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.'

'ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை,
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்?
சூழுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.'

(கலி. பாலை.8)

என்று காட்டும் உவமைகள் அழகியன அல்லவோ! மலையிடைப் பிறந்த சாந்தம் தன் மணத்தாலும் தண்மையாலும் மலையையா மகிழ்விக்கின்றது? தேய்ந்து நிலைகெடினும் எங்கோ தூரத்தே பயன்படுத்துவாருக்கன்றோ உதவுகின்றது? கடலில் பிறக்கும் முத்தம் அவ்வாறே கடலுக்கு உதவாது, அணிபவரை அழகு செய்யத்தானே உதவுகின்றது? யாழுள் பிறக்கும் இன்னிசை கேட்டு யாழா இன்புறுகின்றது? தூரத்தே கேட்பாரன்றோ மகிழ் வெய்துகின்றனர்? இந்த மூன்றையும் சொல்லிய பின்னும், தலைவியின் பிரிவைப்பற்றி விளக்கவும் வேண்டுமோ? எனினும், 'அவர், நும்மகள் நுமக்கும் ஆங்கனையள்' என்று விளக்கு கின்றனர். அவள் வீட்டிலே பிறந்த தலைவி, யாருக்குப் பயன்பட வேண்டுமோ, அவனைச் சென்று அடைந்துவிட்டாள். இவ்வுண் மையைத் தெள்ளத்தெளிய அறிந்த செவிலி, மேலும் வருந்திக் கொண்டு செல்வாளோ? திரும்பி வந்துவிட்டாள்.

பிறகு தலைவன் தலைவியர்தம் திருமணம் நடைபெறு கின்றது. தலைவன் வீட்டிலோ, அன்றித் தலைவியின் பெற்றோர்கள் வேண்டுகோளின்ல் தலைவியின் வீட்டிலோ மணம் நடைபெறும். அம் மணம் அக்காலத்தில் எப்படி நடை பெற்றது என்பதை மற்றொரு நூலாகிய அகநானூறு விளக்கு கின்றது.

'உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப, நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலை;
கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்
கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென,
உச்சிக் குடத்தர், புத்தகல் மண்டையர்,
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வற் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடி,
'கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோர் பெட்கும் பிணையை யாகெ'ன
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க,
வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரிற் கிழத்தி யாகெனத் தமர்தர,
ஓரிற் கூடிய உடன்புணர் கங்குல்' (அகம். 86)

என் மணமுறையை நன்கு விளக்கிக்காட்டும் முறையில் அக்காலத் தமிழர் நாட்டில் கற்பெனும் வாழ்க்கை தொடங்கு முன் களவின் வழியோ, அன்றி வேறு நிலையிலோ நடந்த மணத்தில் இந்தச் சடங்குகள் இருந்தன என அறிகின்றோம். இச் சடங்குகள் பல இக்காலத்தில் உள்ளன போன்றே காண் கின்றன அல்லவா! இவ்வாறு மணம் புரிந்த தலைவன் தலைவியர் தம் வாழ்க்கையை விளக்கும் பாடல்களும் மிகப் பலவாம். அவற்றுள் சில காண்போம் :

காதன் மனையாளும் காதலனும் மாறின்றிக் கலந்து வாழும் வாழ்வே இன்ப வாழ்வு. கற்புநெறி அவ்வாழ்வைத் தான் காட்டுகின்றது. அவ்வாழ்வில் ஊடலும் கூடலும் கலந் துள்ளன. தலைவன் தலைவியரது உள்ள மகிழ்வைக் காட்டும்

காட்சிகள் பல இத்தொகுதிகளில் காண்கின்றன. இன்று உலகில் வாழும் வாழ்க்கையே இதுதானே? 'இல்லற மல்லது நல்லற மன்று' என்றபடி, பெரும்பாலோர் வாழும் வாழ்க்கை இல்லற வாழ்க்கையன்றோ? அவ் வாழ்வில் தலைவனோடு கூடியிருக்கும் தலைவியின் நிலையும், அவனைப் பிரிந்திருக்குங்கால் அவள் தனிமையில் பெறுநிலையும் காணத்தக்கன. அவனொடு கலந்து வாழ்வதில் அவள் கொள்ளும் பெருமிதமும், அவளொடு கூடி வாழ்வதில் அவன் கொள்ளும் உவகைச் சிறப்பும் அனைவராலும் உள்ளத்து உணரற்பாலன எனினும், கவிஞர்தம் கருத்தும் கையும் பிணைந்த வனப்பின் வழி இரண்டொன்றைக் காணல் நலம் தருவதாகும்.

காதலி கணவனுக்கு அன்போடு சமைத்து ஊட்டுகின்றாள். அவள் உணவில் சோறும் கறியும் விரவி வருவதோடு, அவளது அன்பும் தோய்கின்றது. அதை உண்டு கொண்டே கணவன், 'நன்று!' என்று அவள் கைந்நலமும் செய்நலமும் பாராட்டு கின்றான். அதைக் கண்டும் கேட்டும் அகமகிழ்கின்றாள் அத் தலைவி. இக்காட்சியை மக்கள் அனைவரும் தத்தம் வாழ்வில் கண்டிருப்பார்கள். எனினும், இதையே கூடலூர் கிழார் என்னும் புலவர்,

'முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்
தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே!''
(குறுந். 167)

என அழகுபடக் காட்டும்போது, அதன் கவின் மிகச் சிறப்பாக அமைகின்றதன்றோ? ஆம். அத்துணை இன்பம் அவளுக்கு! அவனுக்கு உணவு ஆக்கிப் படைக்கும்வழி தன் நெகிழ்ந்த ஆடையைச் சரி செய்துகொள்ளக்கூட நினைக்கவில்லை அவள். கைப்புணி யிடையில் கண்புகை படிந்தும் கவலையுறவில்லை

அவள். வருந்தி அந்தப் புளிக்குழம்பை வைத்து வார்த்தாள் கணவனுக்கு. அதைச் சுவைத்துண்ணும் கணவனே, 'இனிது! இனிது!' என்று ஏத்திப் புகழ்ந்தான். அவள் மகிழாதிருப் பாளோ! இவ் வாழ்வுக் காட்சியைத். தந்து, அதனால் இன்றும் வாழும் புலவனை நாம் வாழ்த்துவோ மல்லமோ!

இனிக் காதலனோடு கூடி உடனிருக்கும்போதும் அவன் வெளியே சென்றிருக்குங்கால் தனிமையிலே இருக்கும்போதும் அவர்தம் வாழ்வுள்ளத்தை **அணிலாடு முன்றிலார்** அழகு படுத்திக் காட்டுவது நயம் பயப்பதாகும்.

'காதலர் உழைய ராகப் பெரிதுவந்து
சாறுகொள் ஊரின் புகல்வேன் மன்ற;
அத்தம் நண்ணிய அங்குடிச் சீறூர்
மக்கள் போகிய அணிலாடு முன்றில்
புலப்பில் போலப் புல்லென்று
அலப்பென் தோழி! அவர் அகன்ற ஞான்றே.'

(குறுந். 41)

என்ற பாடலில், அவன் இருக்கும் காலத்தோ விழா ஆற்றும் நகர் விளக்கமுறுதல் போலத் தான் விளக்கமுற்றுச் சிறத்தலையும், அவன் நீங்கிய காலத்து, மக்களற்றுப் பாழ்பட்ட அணிலாடும் முற்றம் அழகழிவது போன்று தான் அழகழிந்து நிற்றலையும் தலைவி காட்டுகின்றாள். இதில் வரும் அழகிய 'அணிலாடு முன்றில்' என்ற உவமைத் தொடராலேயே இப் பாடலை இயற்றிய புலவர் வழங்கப்படுகின்றார். அவர் இயற்பெயர் எதுவோ? நாம் அறியோம்! எனினும், அவர் காட்டிய அழகுத் தொடரே அவரை வாழவைப்பது பெருஞ் சிறப்பன்றோ!

இத்தகைய தலைவியை விட்டுத் தலைவன் வாழ்க்கையில் பிரியாதிருக்க முடியுமோ? பொருள் கருதியும் வினை கருதியும் பல காலங்களில் பலப்பல இடங்களுக்குப் பிரிந்து செல்ல வேண்டிய தேவை அவனுக்கு உண்டன்றோ! அப்படிப் பிரியுந் தோறும் பிரியுந்தோறும், அவன் தலைவியைத் தேற்றல்

கடனாகும்; அதனுடன் அவளை விட்டுப் பிரிய நினையாத தன் நெஞ்சையும் ஆற்றித் தேற்றல் வேண்டும். அவ்வாறு தேற்று வனவாகப் பல பாடல்கள் நற்றிணையில் உள்ளன. பொருள் இன்பத்திற்கு இன்றியமையாதது என உணர்த்துகிறது அவன் நெஞ்சம். எனினும், 'இளமையில் காமத்தை நோக்கப் பொருள் பெரிதல்லவே!' என அவன் நினைக்கின்றான். தலைவியைப் பிரிதலஞ்சி, அந் நெஞ்சை முன்னிறுத்தி, அவன்,

'இறந்துசெய் பொருளும் இன்பம் தருமெனின்,
இளமையிற் சிறந்த வளமையும் இல்லை;
இளமை கழிந்த பின்றை வளமை
காமம் தருதலும் இன்றே; அதனால்
நில்லாப் பொருட்பிணிச் சேறி
வல்லே நெஞ்சம்! வாய்க்கநின் வினையே!'
(நற்றிணை. 126)

என்று, 'என் காதலியை விட்டு, இளமைக் காலத்தில் வர மாட்டேன்!' என்று நினைத்து தலைவி முகம் நோக்குகின்றான்; இக்கருத்தைத்தான் பூதனார் என்ற புலவர் வேறொரு வகையில்,

'இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
நன்பகல் அமயமும் இரவும் போல
வேறுவேறு இயல வாகி மாறெதிர்ந்து
உளவென உணர்ந்தனை யாயின் ஒரூஉம்
இன்னா வெஞ்சுரம் நன்னசை துரப்பத்
துன்னலும் தகுமோ துணிவுஇல் நெஞ்சே!
நீசெல வலித்தனை யாயின், யாவதும்
நினைத்தலும் செய்தியோ எம்மே?' (அகம். 327)

என்று காட்டுகின்றார். எனினும், சிலகாலம் தலைவியொடு கூடியிருந்து, பொருள் கருதியும் தலைவன் பிரியத்தானே வேண்டும். இன்றேல், வாழ்க்கைக்குப் பொருள் பெற வழி வேண்டுமே! அவ்வாறு பிரியும் காலத்திலெல்லாம் தலைவி வருந்தி நிற்பாள். செல்லும் வழியெல்லாம்,

'மழைதுளி மறந்த அங்குடிச் சீறூர்ச்
சேக்குவங் கொல்லோ நெஞ்சே! பூப்புனே,
புயலென ஒலிவருந் தாழிருங் கூந்தல்
செறிதொடி முன்கைநங் காதலி
அறிவனுர் நோக்கமும் புலவியும் நினைந்தே? (அகம். 225)

எனக் கூறி நிற்பான். தலைவியோ, அவனைப் பழிக்கும் அளவிற்கு,

'உள்ளின் உள்ளம் வேமே! உள்ளாது
இருப்பின்எம் அளவைத் தன்றே! வருத்தி
வான்ருேய் வற்றே காமம்!
சான்ருே ரல்லர்யாம் மரீஇ யோரே.' (குறுந். 102)

என்று கூறுவாள். இது தன் தலைவனைப் பழித்ததாகக் கொள்ளத் தக்கதன்ருகும். அவ்வாறு கூறின், கற்பு நிலைக்கும் ஏதம் படும். எனவே, தன் துன்ப எல்லையில் அவள் உள்ளத்தின் எல்லையை விளக்க அமைந்த சொற்களன்றி, பழிச்சொற்களல்ல இவை. ஏனெனில், தன் உயிர்த்தோழியிடத்துங்கூடத் தன் கணவனைப்பற்றியும், அவன் நாட்டைப்பற்றியும் சிறப்பாகப் பேசுவதல்லது பழித்துரைத்தல் அவள் மரபன்று. உடன் போக்கில் தலைவன் ஊர் சென்று வந்தவளைத் தோழி, 'உன் தலைவன் ஊரின் நீர் நல்ல தல்லவே? எப்படி நுகர்ந்தாய்?' என்று கேட்டதற்கு,

அன்ருய் வாழிவேண்டு அன்னே! நம் படப்பைத்
தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு
உவலைக் கூவற் கீழ
மானுண்டு எஞ்சிய கலிழி நீரே.' (ஐங்குறு. 203)

என்று பெருமைப்படப் பேசுகின்ருள். இப்படிப்பட்டவள் தலைவனை பழித்துரைப்பாளோ! மேலும், தலைவன் தம்மாட்டு அன்பிலன் என்ற தோழியை நோக்கிக் களவுப் புணர்ச்சிக் காலத்தில் தலைவி,

'கறிவளர் அடுக்கத்து ஆங்கண் முறியருந்து
குரங்குஒருங்கு இருக்கும் பெருங்கல் நாடன்
இனியன்; ஆகலின் இனத்தின் இயன்ற
இன்னு மையினும் இனிதோ
இனிதெனப் படூஉம் புத்தேள் நாடே?' (குறுந். 288)

எனப் 'புத்தேள் நாட்டினும் அவன் நீட்டிக்கும் இன்னுமை இனிமை வாய்ந்ததே,' என்று அவனை உயர்த்திப் பேசும் தலைவி, அவனைப் பழிக்க ஒருப்படுவாளோ! அவன் நட்பினை எண்ணிய களவுக் காலத்திலேயே,

'நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்ததன்று;
நீரினும் ஆரள வின்றே; சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனெடு நட்பே.' (குறுந். 3)

என்று பேசும் அவள் கற்புத்திறம் பெரியதன்றே!

அவள் கணவனேடு கலந்து, இடையருது இன்பம் பெற்ற சிறப்பினைப் பல பாடல்கள் பாராட்டுகின்றன. வைகைப் பெருவிழாவினுள் அவன் தன் கணவனேடு நீராடச் சென்று நின்று, ஆடிய திறனையெல்லாம், ஊடிய வகையையெல்லாம், பரிபாடல் பலபடப் பாடுகின்றது. இன்னும் அகநானூற்றிலும் கலித்தொகையிலும் உள்ளத்தைத் தொடக் கூடியவாகப் பலப்பல பாடல்கள் உள்ளன. அவற்றின் நலன்களையெல்லாம் நாடொறும் நாடொறும் அறிஞர் பற்பலர் புதுப்புது வழியில் ஆராய்ந்து, கற்றுரும் மற்றுரும் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில், அழகழகாக விளக்கிக் கொண்டே வருகின்றனர்! 'பயில்தொறும் நூல் நயம் போலும்' என்று வள்ளுவர் குறித்தாற் போன்று, இப்பாடல்கள் பயிலப் பயிலப் புதுப்புதுப் பொருள்கள் தந்து அகப்பொருளின் நலத்தையே சிறப்பித்து நிற்கின்றன. இவற்றின் விரிவெல்லாம் நம் ஏட்டு எல்லையில் அடங்கா. எனவே, எல்லாவற்றையும் கூறுது, இன்னும் இரண்டொன்று கண்டு புறவாழ்வைக் காணலாம்.

களவு வாழ்விலே உள்ளம் பறிகொடுத்த காதலர் வாழ்வு, எத்தனை நெகிழ்ச்சிக்கும் முன் யோசனைக்கும் இடம் கொடுத்துள்ளது என்பதைக் காணின், மகிழ்ச்சி பிறக்கிறது. தெருவில் சிறு பெண்ணாய் விளையாடிக் கொண்டிருக்கையில் அவளோடு வம்புக்கு வந்தான் அவன். பந்து கொண்டு ஒளித்துப் பூசல் விளைவிப்பான் அவன். அப்படியே நாள் பல சென்றன போலும்! எனினும், ஒருவர் உளத்தே மற்றவர் அந்த இளமையிலே இடம் பெற்றிருக்க வேண்டும். பின்பு ஒருநாள் பருவம் எய்திய தலைமகள் வீட்டிலிருக்க, அவன் முன் வாயிலிற் சென்று நீர் கேட்டான். உள்ளே வேலையாயிருந்த அன்னை, மகளை, 'நீர் கொடுத்து வா' என்றாள். அவளும் வந்தவன் யாரென அறியாள்; நீர் கொண்டு சென்றாள். அவனோ, நீரைவிட்டு அவள் கையையே பற்றிக்கொண்டான். அவளும் அறியாது அலறி 'அன்னாய்!' இவன் ஒருவன் செய்தது காண்!' என்றாள். ஆனால், அதற்குள் அவள் உள்ளம் அவன் உள்ளத்தோடு பேசிற்று. முன்னை விளையாட்டெல்லாம் மீண்டும் நினைவிற்கு வந்தன. அதற்குள் அன்னை அஞ்சி அருகில் வந்தாள். அப் பெண் என்ன கூறியிருக்க வேண்டும்? அவன் கையைப் பிடித்த கொடுமையைத்தானே? அவள் அதைக் கூற மாட்டாள் என்று அவன் உள்ளம் உணர்ந்திருக்க வேண்டும். அதனாலேதான் தைரியமாக அங்கேயே நின்று கொண்டிருந்தான். அவள், 'உண்ணு நீர் விக்கினான்!' என்ற பொய்யை உரைத்தாள்; அவனும் அவ்வாறே நடித்திருப்பான். அன்னை பழிவரும் என்றஞ்சி, அவன் மார்பைத் தடவிக் கொடுத்தாள். அவனோ, அதே வேளையில் கடைக்கண்ணால் கொல்வான்போல நோக்கி நகைத்தான். இது கலித்தொகை 51—ஆம் பாட்டுக் கூறும் கதைதான். கதையாய் இருப்பினும், இதை வாழ்வில் காணமுடிகின்றது. 'அன்று மட்டுமன்றி, இன்றும் இதுபோன்ற காட்சி நடைபெறவில்லை என்று யாரால் கூற முடியும்?

களவுப் புணர்ச்சியிலே யாதொரு சான்றுமற்ற நிலையில் தலைவன் தலைவியைக் கூடுகின்றான். பிறகு பிரிந்து, விரைவில் வருவதாக வாக்கும் தந்து செல்கின்றான். எனினும், குறித்த

நாளில் வரவில்லை. 'கள்ளம் செய்துவிட்டானே!' என்று தலைவியின் பிஞ்சு உள்ளம் பேதைமைப்படுகின்றது. தங்கள் களவுப் புணர்ச்சியை அறியக் காட்ட முடியாது. தங்கள் உள்ளப்பிணைப்பு ஒருவருக்கும் தெரியாது. ஏன்? கள்ளத்தன மாகப் புணர்ந்த மெய்யுறு புணர்ச்சியும் மற்றவர் அறியாததே. ஆயினும், அவன் தன்னைக் கைவிடமாட்டான் என்ற துணிபுடையவள் அவள். அக் களவுமணத்தில் கைதொட்ட அவனைக் 'கள்வன்' என்றே அன்பால் நினைக்கின்றாள். அதே வேளையில் அவள் கணவனோடு களவுப் புணர்ச்சியில் கலந்த ஞான்று, அருகிலிருந்த அருவியில் ஓடும் ஆரல்மீனைப் பார்த் திருந்த குருகின் நினைவு வருகின்றது. ஆனால், அதுவும் தங்கள் செயலைக் காணவில்லை. எனினும், தலைவன் வருவான் என்ற உணர்வில் மகிழ்கின்றாள், இந்த உள்ள நெகிழ்ச்சியை எல்லாம்,

'யாரு மில்லை: தானே கள்வன்;
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ?
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே.' (குறுந். 25)

என்று கபிலர் அழகுபடக் காட்டுகின்றார். இத்தகைய களவொழுக்கத்துக்குப் பின்னரே மேலே நாம் கற்பொழுக்கத் தில் கூறிய அவர்கள், திளைத்தாடிய இன்பநிலை யெல்லாம் வாழ்வில் நடைபெறுகின்றன.

தலைவனைத் தலைவி புல்லி விடாது பிணைத்துத் துயில் கின்றாள். 'அவராத்திரி, யாகாது அன்றிராப் பொழுதெல்லாம் 'சிவராத்திரி' என்னுமாறு கூடிய வாழ்வின் இன்பத்திலே, பலப்பல பேசிக்கொண்டே விடியலில் உறங்கிவிட்டார்கள் போலும்! ஆயினும், சிறிது நேரத்திற்கெல்லாம் கோழி குரல் காட்டத் தொடங்கிவிட்டது. அக்குரல் ஒலி, பாவம் தலைவியை வாட வைத்துவிட்டது! அவள் உள்ளம் 'துண்' என்றதாம். ஆம். கணவனது அன்புப் பிணைப்பை விட்டு நீங்க வேண்டு

மன்றோ!' அதை எண்ணி நைகின்றாள் தலைவி. இக்கருத்தை அழகாக,

"'குக்கூ' என்றது கோழி; அதனெதிர்
துட்கென் றன்றென் றூஉ நெஞ்சம்
தோள்தோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்று லெனவே!'
(குறுந். 157)

என்று அந்நிலையை நன்முல்லையார் அழகாகக் காட்டுகின்றார். அவர், பெயர் நோக்கப் பெண்ணுதல் வேண்டும். அன்றேல் இவ்வாறு துண்ணென்ற நெஞ்சை வேறு யாரால் காட்ட இயலும்? இப்படி இரவிலும் பகலிலும் பிரியாராய் வாழ வேண்டுமென்பதே தமிழர் வாழ்வின் குறிக்கோள். அந்த வாழ்வின் பயனே மக்கட்பேறு.

'மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றதன்
நன்கலன் நன்மக்கட் பேறு.' (குறள். 60)

அன்றோ? அந்த மக்கட் சிறப்பையும் அகநானூறு அழகாகக் காட்டுகின்றது. 'இம்மை மறுமை இன்பங்கள் இரண்டையும் தர வல்லவன் மகனே,' என்பது மக்கள் வாழ்வுணர்ச்சி. அதனாலேதான், அனைவரும் மக்கட்பேற்றை விரும்புகின்றனர். அம் மக்களால் பெறும் இன்பத்தை உணர்ந்து மகிழ்கின்றாள் தலைவி. யாராலும் திருப்ப முடியாது, பரத்தை வீட்டில் இருக்கும் தலைவனைத் திருப்பித் தன் வீடு கொண்டுவந்த மகனை எண்ணி, அவனைப்பற்றித் தோழியிடம் கூறிப் பாராட்டுகின்றாள். அப் பாராட்டின் மூலம் உலக வாழ்விலேயே சிறுவர் என்றும் இன்றியமையாதவர் என்பதைச் செல்லூர் கோசிகன் கண்ணனார் திட்டமாகத் தெரிவிக்கின்றார். இதோ அவர் வாக்கு:

'இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுவின்று எய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்

சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம்
வாயே யாகுதல் வாய்த்தனம் தோழி!' (அகம். 66)

என்று அத்தலைவி கூறும்போதுதான் என்ன பெருமிதம் எய்து கின்றாள்!

பரத்தையிற் பிரிந்தான் தலைமகன் என்று சொன்னோம். 'தமிழர் வாழ்க்கையில் இது என்ன?' என்று கேட்கத் தோன்றும். இது தமிழர்தம் தலைநிமிர்ந்த வாழ்க்கையில் ஒரு மாசு என்பதை யாரும் மறுக்க முடியாது. இப்பரத்தையில் பிரிவுதான் கற்பு வாழ்க்கையில் பெரிதும் இடம் கொள்ளு கிறது. ஊடலுக்குக் காரணமாக அமைவதும் இதுவே. இதை எப்படி வாழ்வில் புகுத்தினார்கள் என்பதை நாம் அறியோம். இன்னும் நம் நாட்டில் இன்றைய அரசாங்கத்தார் சட்டம் முதலியன கொண்டு வந்து தடுத்தபோதிலுங்கூட, இக்கொடு வாழ்க்கை அடியோடு தொலைந்தது என்று கூறமுடியாத வகையில், உள்ளதை நாம் அறிந்திருக்கிறோம். இடைக் காலத்தில் காவியம் பாடிய புலவர் பலர் இவ்வாழ்வையும் அப்பரத்தையர் வாழ் தெருவையும் பாடியுள்ளனர். நாம் இங்கே காணும் சங்க இலக்கியத்திலே இப்பரத்தையர் வாழ்வு பேசப்படுகின்றது. ஏன்? தொல்காப்பியத்திலும் இதற்கு இடமுண்டே! 'இவ்வாழ்க்கை மக்களுக்கு ஏற்றதுதானா? இதுவா தமிழர் வாழ்க்கை?' என்று கேட்கத் தோன்றும். ஆனால், சற்று ஆழ்ந்து நினைப்பின், இது தமிழர் நாட்டில் எப்படியோ வந்துவிட்டது என்பதும், இதை எந்தக் காலத் திலும் யாரும் போற்றவில்லை என்பதும் நன்கு புலனாகும். சங்க இலக்கியங்கள் பரத்தமை வாழ்வைப் புகழ்கின்றன என்று எங்காவது காட்ட முடியுமா? அதற்கு நேர் மாறாகப் பரத்தையுடன் வாழும் தலைவனை நேரடியாகவும், உள்ளுறை, இறைச்சிப் பொருள்கள் வாயிலாகவும் எத்தனை எத்தனை வகையில் இழித்தும் பழித்தும் கவிதைகள் யாத்துள்ளார்கள் புலவர்கள்! அவனை எருமையாக்கியும், வேறு வகையாகத் தாழ்த்தியும் பாடிய பாடல்கள் பல. எனவே இப்பரத்தமை வாழ்க்கை தமிழ் நாட்டில் இருந்த போதிலும், எந்தக்

கவிதையும் அது சிறந்தது எனப் பாடவில்லை என்பது தேற்றம். பாராட்டப் பெறுத வாழ்வின் மாசு காட்டும் இப்பரத்தமை வாழ்வைப்பற்றி நாமும் ஒன்றும் தொடாது மேலே செல்வோம்.

இனி, இவ்வாறு களவுவழி கற்புநலம் பெற்றுக் காதன் மனையாளும் காதலனும் சிறக்க வாழ அவர்கட்கு மகப்பேறு வாய்க்கின்றது. மங்கலமாகிய மனைமாட்சியைச் சார்ந்து தோன்றுவது அதன் நன்கலனாகிய நன் மக்கட்பேறு அன்றோ! பின்னர் அக் காதலர் தம்மைச் சுற்றிய உலகை நோக்கிப் பொருள் ஈட்டி அறமாற்றத் தொடங்குகின்றனர். அந்தப் பொருளும் அறமுமே 'புறம்' என்று பேசப்படுவன. அகப் பொருள்பற்றி ஆராயின், அது நெடிது வளர்ந்து கொண்டே போகுமாதலின், இவ்வளவோடு அதை நிறுத்தி, இனிப் புறம் பற்றியும் சிறிது காண்போம்.

அறமும் பொருளும் பற்றியும், வீடு பற்றியும் விளக்குவன வெல்லாம் புறமென்பதைக் கண்டோம். இந்த எட்டுத்தொகை நூல்களுள்ளே பதிற்றுப்பத்தும் புறநானூறுமே புறம்பற்றிப் பாடுவன. இவற்றுள்ளும் பதிற்றுப்பத்து, சேரர் பரம்பரையைச் சேர்ந்த மன்னர் பதின்மரைப் பத்துப்புலவர்கள் பாடிய பாடல்களே. அவற்றுள்ளே முதற்பத்தும் இறுதிப்பத்தும் கிட்டவில்லை. மிஞ்சிய எண்பது பாடல்களும் எட்டு மன்னரைப் பற்றியன. அவர்தம் வீரத்தைப் பற்றியும், வெற்றி பற்றியும் கொடை பற்றியும், பிற சிறப்புக்கள் பற்றியுமே பேசுகின்றன. பொதுவாக மக்கள் வாழ்க்கையை அது அவ்வளவாக விளக்க வில்லை. அதனாலேதான் போலும், புறநானூறு போன்று, அத்தனை விரிந்த அளவில் அது இன்று மக்களோடு தொடர்பு கொள்ளாமல் இருக்கின்றது; அரசர்க்கு அறம் கூறும் வகையில் சிற்சில அடிகள் பொதுவான கருத்துக்களைக் கொண்ட போதிலும், அவை அத்துணைச் சிறப்பின்மையின், வழக்கத்தில் பயின்று வருதல் இல்லை. மற்றும் அப் பாடல்கள் தோன்றிய நாடு தமிழ் வழங்கும் நாடாய் இல்லை. அப்பாடலைப் பெற்ற அரச பரம்பரையும் இல்லை. எனவே, ஓரளவு அவை போற்றப் படாது விடப்பட்டன போலும்! எனினும்,

'வாரா ராயினும் இரவலர் வேண்டித்
தேரிற் சென்று அவர்க்கு ஆர்பதம் நல்கும்'

நல்ல பண்புடைய அரசர்களைப்பற்றிப் பாடப்பெற்றுள்ளமையின், அவை வாழ்கின்றன. தனிப்பட்ட இவ்வரச வாழ்வை விளக்கும் பாடலை விட்டு, நாமும் புறநானூற்றுள் புகுவோம்.

புறநானூறு நானூறு பாடல்களைக் கொண்டது. மன்னர் பலர் பாராட்டப்படுகின்றனர். பாடிய புலவரும் பல்லோர். அரசர்களைப் பாராட்டுவதன் மூலம் அவர்கள் அக்கால நாட்டு வழக்கங்களையே காட்டிவிடுகின்றார்கள். புலவர்தம் சொந்த வாழ்க்கை முறைகளே பல பாடல்களில் வருகின்றன. அந்த வாழ்க்கை வழியே, அக்கால மன்னரையும் மக்களையும் பற்றிய குறிப்புக்களும் வெளியாகின்றன. புலவர் எளிய வாழ்வில் வாழ்ந்தாலும், வறுமை எவ்வளவு வாட்டினாலும், அதனால் அவர்கள் தங்கள் கொள்கையில் பின்னடையாது தங்களை அவமதிப்பவர் யாவராயினும், அவரைத் தாங்கள் மதியாது சென்று விடுதல் மரபு என்பதையும் நூல்வழிக் காணலாம்.

பெருந்தலைச்சாத்தனார் சிறந்த புலவர். அவர் குமணனிடம் அளவற்ற பரிசில் பெற்று அவனைப் பாராட்டியுள்ளார். அவனிடத்தில் தமது வறுமையை உள்ளவாறே உணர்த்தவும் பின்னடையவில்லை. அதனால், பொதுவாகப் புலவர்தம் வறுமை வாழ்வையே அவர் காட்டிவிடுகின்றார்.

'ஆடுநனி மறந்த கோடு உயர் அடுப்பில்
ஆம்பி பூப்பத் தேம்புபசி உழவாப்
பால்இன் மையின் தோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொறு அழூஉம்தன் மகத்துமுகம் நோக்கி
நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கண்என்
மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண!' (புறம். 164)

என்று தமது வறுமையைக் காட்டிய அவர். அவ் வறுமை காரணமாகத் தம்மை மதியாது அன்பில்லாது சிறிது பரிசு கொடுப்பாரை வெறுத்து, வந்த பரிசிலை வேண்டா என்று ஒதுக்கித் தள்ளியதையும் காணலாம். கடிநெடுவேட்டுவன் என்பான் அவர் வேண்டிய காலத்துப் பரிசில் தாராது நீட்டிக்க, அதை அறிந்த புலவர்,

'முற்றிய திருவின் மூவ ராயினும்
பெட்புஇன்று ஈதல் யாம்வேண் டலமே!' (புறம். 205)

என்று வெறுத்து வந்து விட்டார்.

மற்றொரு புலவராகிய பெருஞ்சித்திரனார், இளவெளிமான் சிறிது கொடுப்ப, அதைக் கொள்ளாது, குமணனைப் பாடி வேண்டியன பெற்றுத் திரும்பும் காலத்துக் குமணன் தந்த யானையை அவ் விளவெளிமான் காவல் மரத்திற்கட்டி, அவனைத் துச்சமாக,

'இரவலர் புரவலன் நீயு மல்லை;
புரவலர் இரவலர்க்கு இல்லையு மல்லர்;
இரவலர் உண்மையும் காணினி; இரவலர்க்கு
ஈவோர் உண்மையும் காணினி; நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்துயாம் பிணித்த
நெடுநல் யானைஎம் பரிசில்;
கடுமான் தோன்றல்! செல்வம் யானே.' (புறம். 162)

என்று வீறு தோன்றக் கூறி வந்துவிட்டார். வறுமையால் பாடிக் குமணனிடம் பெற்று வந்ததைத் தமக்கெனவே சேர்த்து வைத்துக் கொள்ளாது, அதை மனைவியிடம் கொண்டுவந்து கொடுத்து, அவளை நோக்கி,

'இன்னோர்க்கு என்னாது, என்னொடும் சூழாது,
'வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே!'

(புறம். 163)

என்று கூறும்போது புலவர் வாழ்ந்த பெருமிதநிலை நம் கண் முன் புலனாகின்றதன்றோ!

மற்ெருரு புலவராகிய வெள்ளைக்குடி நாகனார், அரசன் கீழுள்ளார் கொடுமை இழைத்து நிலவரிக்காக உள்ளவற்றை யெல்லாம் கொண்டு செல்ல, அதற்காக அஞ்சாது, தாமே அரசனிடம் சென்று, அரசன் தன் காக்கும் நிலைகெடின் என்னாகும் என்பதையும், அவன் செயல் மக்களைக் காத்தலே என்பதையும்,

> 'மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
> இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்
> காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்'
>
> (புறம். 35)

என்பதையும் எடுத்துக்காட்டி, அவன் கீழ் உள்ளார் செய்த கொடுமையை விளக்கி, என்றென்றும் தம் நிலத்துக்கு வரி விதிப்பினை விலக்கிக் கொண்டார். புலவர் சிலர் அரசர் இருவர் பொரும் காலத்து இடை நின்று சந்து செய்து போர் தடுத்தும் உள்ளனர். ஔவையாரும் கோவூர்கிழாரும் அத்துறையில் சிறந்தவராவர் என்பதை மேலே கண்டனம். எனவே, புலவர் தம் வாழ்க்கை முறையை விளக்குவதன் மூலமே அக்காலத் தமிழர் வாழ்வை ஒருவாறு விளக்கினர் எனலாம்.

நாடு அக்காலத்து அரசரால் ஆளப்பெற்றது. அன்று குடியாட்சி இல்லை; எங்கும் முடியாட்சி சிறந்துதான் விளங்கிற்று. முடியாட்சி என்றாலும், மன்னன் தன்னிச்சையாகச் சர்வாதிகாரம் செலுத்தவில்லை; மக்களைத் தழுவியே தன் ஆட்சியை நடத்தினான்; அதிலும், அறிஞர் வாய்மொழிப்படி நாட்டில் நல்லன ஆற்றினான். அவன் தன்னை உயிராகவும் உலகை உடலாகவும் ஓம்பிக் காத்தான். இதைத்தான் மோசிகீரனார் என்னும் புலவர்.

> 'நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;
> மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;
> அதனால், 'யான் உயிர்' என்பது அறிகை
> வேல்மிகு தானை வேந்தர்க்குக் கடனே.' (புறம். 186)

என்று தெளிவுபட எடுத்துக் காட்டுகின்றார். அரசன் மட்டும் இவ்வாறு நல்லவனாக ஆட்சி செலுத்துதல் போதுமா? அதில் வாழும் மக்கள் வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை ஔவையார் நன்கு விளக்குகின்றார். "ஒரு நாட்டில் மேடு பள்ளங்கள் நிறைந்து, காடும் கரம்பும் பற்றியிருக்கின்றதே என்று யாரும் கவலைப்பட வேண்டா. அந்த நாட்டில் வாழும் மக்கள் உள உரமும் உடற் பலமும் பெற்றுப் பாடுபடுவார்களாயின், வறண்ட பாலையும் வளமார் சோலையாகலாம். மேடு பள்ளங்கள் சரி செய்யப்பட்டு வயல்வெளியாகலாம்." என்று கூறுகின்றார். இன்று நம்நாட்டில் இந்நிகழ்ச்சியைக் கண்ணாரக் காண்கின்றோம். சமுதாய நலத் திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம். என்ற பல்வேறு பெயர்களின்கீழே மக்கள் காடு மேடுகளைத் திருத்திச் சாலை அமைத்தும், நீர் வருவாயைப் பெருக்கியும், நிலச்சீர்திருத்தம் செய்தும் செம்மை வாழ்வு வாழப் பழகுகின்றார்கள். இந்தக் கருத்தைத்தான் அன்றே ஔவையார்,

'நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே!' (புறம்.187)

என்று நிலத்தை வாழ்த்துவதன் மூலம் மக்கள் கைவண்ணத் திறன் சிறக்க வேண்டுமெனவும், அப்போதுதான் அவர்தம் வாழ்வு செம்மைப்படும் எனவும் காட்டுகின்றார்.

இவ்வாறு நல்லவர் வாழும் நாட்டை ஆளும் மன்னவன் தன்கீழ் உள்ளாரைப் போற்றிப் புரப்பதோடு, தானும் ஒழுக்க நலம் குன்றா வகையிலும், தன் நாட்டு மக்கள் ஒழுக்கம் குறைபடா வகையிலும் வாழத்தக்க நெறியிலேயும் நிற்க வேண்டும் எனப் புலவர் பலர் பாடியுள்ளனர்; அப்படி ஒரு வேளை அரசன் தவறிழைப்பானாயின், 'மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு' என்ற குறளுக்கு ஏற்ப, இடித்து அறம் உரைக்கவும் தவற மாட்டார்கள். 'மன்னவர் தவறிழைப்பின், பின்பு மக்களைத் திருத்துவது யார்?' என்ற வினா அவர்

உள்ளத்தை வாட்டி வதைக்கும். அந்த வாட்டத்தால் அஞ்சாது அரசரிடம் சென்று, அவர் சொந்த விஷயமென்று பேசினாலும், அதிலும் தவறு எடுத்துக் காட்டித் திருத்துவர். ஒன்று காணலாம்:

பேகன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன். உயிர் அனைத்தும் ஒன்று என்ற உணர்வில் மனித இனத்தைக் கடந்து மயிலினத்துக்கும் உதவியவன். குளிரில் மயில் மேகம் கண்டு தோகை விரித்தாடி மகிழ, அது குளிரால் நடுங்குகிறதென்று தன் பொற்போர்வையை அதற்கு அளித்தவன். அப்படிப் பட்ட வள்ளல் எப்படியோ ஒழுக்க நெறியிற் தவறிவிட்டான்; கொண்ட மனையாளை விட்டுப் பரத்தை மையலிலே தாழ்ந்து விட்டான். அம்மன்னனுக்கு அவ்வொழுக்கக் கேட்டை யாரே காட்டி விலக்க முடியும்? அனைவரும் அஞ்சினர். ஆனால், பரணர் என்னும் பெரும்புலவர், அஞ்சாது அவனிருக்கு மிடம் சென்று, அவன் குற்றம் காட்டித் திருத்தி, அவன் மனைவி யாகிய கண்ணகியோடு அவனை வாழவைத்தனர்.

'மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக!
பசித்தும் வாரேம், பாரமும் இலமே;
களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்
நயம்புரிந் துறையுநர் நடுங்கப் பண்ணி
அறஞ்செய் தீமோ அருள்வெய் யோய்!' என
இஃதுயாம் இரந்த பரிசில்; அஃது இருளின்
இனமணி நெடுந்தேர் ஏறி
இன்னாது உறைவி அரும்படர் களைமே.' (புறம். 145)

என்று, தாம் அவனிடம் பரிசில் ஒன்றையும் எதிர்பார்த்து வரவில்லை எனக்கூறி, அவன் மனைவி தனிமையில், வாடும் வருத்தத்தைப் போக்கல் வேண்டும் என வற்புறுத்தி, அவனை அவன் மனைவிடம் சேர்த்தனர். ஆம்! இவ்வாறு,

'அறத்துக்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்துக்கும் அஃதே துணை,'

என்றபடி கவிதை அறவாழ்வுக்குத் துணையாவதோடு, மறவாழ்வில் புகுவோரை மடித்துத் திருத்தும் வகைக்கும் துணையாக உதவுகின்றதன்றோ!

மயிலுக்குப் போர்வை கொடுத்த பேகனுடன் பாரியையும் எண்ணிப் பார்க்கவேண்டும். அவன் முல்லைக்குத் தேர் கொடுத்தவன். அவனைப் பாடினார் கபிலர்; அவனை மட்டுமன்றி மேலே கண்ட பரத்தைமை பட்டுப் பிரிந்த பேகனையும்,

> 'நின்னும்நின் மலையும் பாட இன்னாது
> இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
> முலையகம் நனைப்ப விம்மிக்
> குழலினை வதுபோல் அழுதனள் பெரிதே!' (புறம். 143)

என்று பாடி, அவனை அவளுடன் சேர்ப்பித்த அப்புலவர் கபிலர். அந்தப் பாரியை,

> 'பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
> நாத்தழும் பிருப்பப் பாடாதாயினும்,
> 'கறங்குமணி நெடுந்தேர் கொள்க'எனக் கொடுத்த
> பரந்தோங்கு சிறப்பிற் பாரி' (புறம். 200)

என்று பாராட்டினர். அவன் பாடா முல்லை வாடாதிருக்கத் தன் பொற்றேர் ஈந்தான். இவையெல்லாம் மேலே கண்ட தொல்காப்பிய இலக்கணத்துக்கு இலக்கியங்களாய் அமைகின்றனவன்றோ? மயிலும் முல்லையுகூட இன்பம் பெறுவன என உணர்ந்து அவற்றின் குறைநீக்க நின்ற அம்மன்னர் செயல் தொல்காப்பியர் காட்டிய உயிர் இலக்கணத்தின் வழியே நமக்கு இலக்கியமாய் அமைகின்றன என்பதை மறுப்பார் யார்?

இனி, இவ்வுலக வாழ்வைப் பொதுப்பட நோக்கி, எத்தகைய மக்களால் இவ்வுலக வாழ்க்கை சீர்பெற்று என்றென்றும் ஓங்கும் என அக்காலப் புலவர்கள் எண்ணிப் பார்க்கின்றார்கள். புலவர் என்பவர் வறுமையில் வாடியவரே என்று கருதுதல் தவறு என்பதை மேலே கண்டோம். பாராளும் மன்னருள்ளும், அவர்தம் மகளிருள்ளும் புலவர்கள் இருந்திருக்கிறார்கள், பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய வஞ்சினப்

பாட்டும், பூதப்பாண்டியன் தேவியார் தீக்குளித்த பாட்டும், ஆதிமந்தியார் போன்ற செல்வியர் பாடலும் நமக்கு அரசர் பரம்பரையிலும் புலவர் உள்ளனர் என்பதைக் காட்டுகின்றன. அப்புலவருள் ஒருவர் இளம்பெரு வழுதியார். அவர் உலகம் வாழ வழி காண்கின்றார். இன்றும் அவரைப் போலக் காண விழைபவர் உள்ளனர். 'தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரே' உலகை வாழ வைப்பவர் என்ற உண்மையை இன்றும் நம்மிடம் வாழ்பவர்கள் காட்டவில்லையா! அக்கருத்தை அவ் விளம்பெரு வழுதியார் அன்றே காட்டியுள்ளனர். அவர் காட்டும் திறனை அவர் வாக்கிலேயே காணலாம். இதோ அவர் வாக்கு.

'உண்டால் அம்மஇவ் வுலகம்! இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும், இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்
துஞ்சலும் இலர், பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்!
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.' (புறம். 182)

இவ்வரசப் புலவரைக் காணுங்கால் பாண்டியன் நெடுஞ் செழியன் அனைத்துக்கும் அடிப்படையாகும் கல்வியைப்பற்றிக் கூறியதும் காணவேண்டுவதாகும். கல்வி அனைவரையும் உயர்த்தும் என்பதை அவன் உணர்ந்தவன். 'மூத்தோன் வருக என்னாது, அறிவுடையோனாறு அரசும் செல்லும்', என்பதை வாழ்விடைக் கண்டவன். எனவே, (கல்வியின்றேல் வாழ்க்கை யில்லை', என்பதை,

'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே (புறம். 183)

என வற்புறுத்துகின்றான். பொருள் உள்ளவன் கொடுத்தும், இல்லாதவன் உழைத்தும் எப்படியும் கற்கவேண்டும் என்பது அவன் கருத்து.

உலகம் இன்ப துன்பம் நிறைந்த வாழ்வை உடையது. அனைத்திலும் இனிமையைக் கண்டுகொண்டே வாழ்வதுதான் அறிவுடைமை; துன்பத்தில் மாழ்குதல் சிறந்ததன்று. துன்பத்திலும் இன்பம் காண்பதே அறிவுடைமை என்ற மிகப்பெரிய உண்மையைப் பக்குடுக்கை நன்கணியார் என்ற புலவர்,

'ஓரில் நெய்தல் கறங்க; ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார் புறைப்பப்
படைத்தோன் மன்றஅப் பண்பிலாளன்!
இன்னா தம்மஇவ் வுலகம்;
இனிய காண்கிதன் இயல்புணர்ந் தோரே.'

(புறம். 194)

என்று கூறுகிறார்.

இவ்வாறு உலகத்தின் நிலையைக் காஞ்சியாலும் பிறவற்றாலும் விளக்கி, அதனால் துறந்து வாழாது சுகித்து வாழ்தலே கடன் எனப் புலவர் பலர் உணர்த்துகின்றனர். மேலே மதுரைக் காஞ்சியில் மாங்குடி மருதனார் உணர்த்திய வாழ்வைக் கண்டோம். அதே வகையில் அவரே இங்குப் புறநானூற்றுப் பாட்டில்,

'வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த
இரவல் மாக்கள் ஈகை நுவல
ஒண்தொடி மகளிர் பொலன்கலத் தேந்திய
தண்கமழ் தேறல் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகுமதி பெரும!' (புறம். 24)

என்று போற்றுவது காணத் தக்கதாகும். இவ்வாறே பலவகை உலக இயல்புகளையும் அதில் வாழவேண்டிய வகைகளையும் பாடிய புலவர் பல்லோர்.

'ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை.' (புறம். 76)

என்றொரு புலவர் உலகில் போர் நிலை பெற்ற ஒன்று எனக் காட்டுகின்றார். ஆயினும், அந்தப் போரிலேயும்,

> 'எம்மம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்என
> அறத்தாறு நுவலும்' (புறம். 9)

போர் முறையும் உண்டு என்பதை மற்றொரு புலவர் காட்டுகின்றார். இவ்வாறு போரும் பிறவும் இன்பமும் துன்பமும் கலந்துள்ள உலகத்தில் மக்கள் ஆற்றவேண்டிய அறநெறிகளைப் புலவர் சிலர் கவிதைவழி வற்புறுத்துகின்றனர்.

அறம் ஆற்றவேண்டும்; இதை மறுப்பார் யாருமில்லை. ஆனாலும், அவ்வறம் எத்தகையதாய் அமையவேண்டும்? பண்டமாற்றுப் போன்று அமையாது, மறுமை நோக்காது, அறமாற்றலே கடமை என்ற உணர்விலே அவ்வறம் அமையவேண்டும். இதையே உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், ஆய் என்னும் வள்ளல்மேல் ஏற்றி,

> 'இம்மைச் செய்தது மறுமைக் காம்எனும்
> அறவிலை வணிகன் ஆஅய் அலன் பிறரும்
> சான்றோர் சென்ற நெறியென
> ஆங்குப் பட்டன் றவன்கை வண்மையே,
> (புறம். 134)

எனக் காட்டுகின்றார். அவ்வறமாற்றும் நிலையினை உறையூர் முதுகண்ணன் சாத்தனார் சோழன் நலங்கிள்ளியை முன்னிறுத்திப் பொருந்துமாறு காட்டுகின்றார். யாதொரு வேறுபாடு மற்ற மக்கட் பிறவியில் பிறந்தவருள் புகழொடு வாழ்வார் சிலர் என்பதை,

> 'வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து
> வீற்றிருந் தோரை எண்ணுங் காலை
> உரையும் பாட்டும் உடையோர் சிலரே;
> மரையிலை போல மாய்ந்திசினோர் பலரே.'
> (புறம். 27)

என்று காட்டி, மாய்தலும் பிறத்தலும் மாறுவதும் நிறைந்த இவ்வுலகத்தில்,

'வல்லா ராயினும் வல்லுந ராயினும்
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
அருள வல்லை யாகுமதி.' (புறம். 37)

என்று அறம் உரைக்கின்றார்.

மேலும், அடுத்த பாட்டிலேயே அந் நலங்கிள்ளியையே நோக்கிக் கூறுமுகத்தான் நாட்டுக்கு அறிவுறுத்தும் உண்மை சிறந்ததாகும். உலகில் ஒவ்வொருவரும் பெறும் இன்ப துன்பங் களும், வாழ்வும் தாழ்வும், பிற அனைத்தும் அவரவர் செயலால் வருகின்றன. அவ்வுண்மையறிந்து அறம், பொருள், இன்பம், மூன்றையும் ஆற்றும் வழியில் ஆற்றிப் பெறவேண்டும் என் கின்றார்; அவ்வாறு 'அறமறிந்து பொருள்பெருக்கி இன்பம் துய்த்தலே வாழ்வின் அடிப்படை என்கின்றார்.

'அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்
ஆற்ற மைநிற் போற்ற மையே.' (புறம். 28)

என்பது அவர் வாக்கு.

இன்னொரு புலவர் இவர்களுக்கெல்லாம் மேலே செல் கின்றார். அவர் நல்லது செய்ய வேண்டுமென்றுதான் அறிவுறுத்துகின்றார். ஆனால், 'அந்த நல்லதைச் செய்ய விருப்ப மின்றேனும், கெட்டதையாவது செய்யாவகையில் விட்டு விடுங்கள்', என அறிவுறுத்துகின்றார். உலக வாழ்வில் நன்மை இன்றேனும், தீமையாவது இல்லாதிருக்கட்டும் என்பது அவர் கருத்து. நரி வெரூஉத்தலையார் என்ற அப்புலவர்,

'பல்சான் றீரே! பல்சான் றீரே!
கயன்முள் அன்ன நரைமுதிர் திரைகவுள்
பயனில் மூப்பில் பல்சான் றீரே!
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்
பிணிக்குங் காலை இரங்குவிர் மாதோ!
நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்

எல்லாரும் உவப்ப தன்றியும்,
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே.' (புறம். 195)

என்று எடுத்துக்காட்டி, 'மனித சமுதாயத்துக்கே நன்மை யின்றேனும், தீமையாவது இல்லாது நீங்கட்டும்,' என்ற தம் ஆசையைக் காட்டுகின்றார். இந்த வேண்டுகோள் இன்றைய உலகத்துக்கு எத்துணைப் பொருத்தமாக அமை கின்றது! உலக வல்லரசுகளெல்லாம், விஞ்ஞான வளர்ச்சி யாலும் பிற வளர்ச்சிகளாலும் உலகுக்கு நன்மை ஆற்ற வேண்டியிருக்க, அவற்றைக் கொண்டு அணுக்குண்டும் பிற குண்டுகளும் செய்து உலகைச் சுடுகாடாக்கத் திட்டமிடுவதைக் காண, இத்தகைய வாழ்க்கை உபதேசம் எத்துணைப் பயனுடையதாகின்றது! அன்று நரி வெரூஉத்தலையார் கூறிய அதே கூற்றைத்தான், இன்று நம் நாட்டுத் தலைவர்களும் பிறரும் கூறுகின்றார்கள்! 'நல்லது இன்றேனும், பொல்லாத இந்தக் குண்டுகள் வேண்டா. இவற்றைப் பொசுக்குங்கள்' என்று வேண்டுகின்றார்கள். அவர்கள் வேண்டுகோள் ஏற்கப் பெறுமா? இது நிற்க.

'அறம், பொருள், வீடு என்ற மூன்றில் பொருளையும் அறத்தையும் பற்றித்தானே இதுவரையில் புறத்தில் பேசினோம்? வீடு பற்றிய பேச்சே இல்லையே!' என்று சிலர் நினைக்கக்கூடும். 'வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து,' என்று பரிமேலழகர் காட்டியது போன்று, அது விளக்க முடியா ஒன்று என்பதும், இவ்வுலகில் வாழும் நெறிகொண்டே உயிர் அவ் வீட்டின்பத்தைப் பெறும் நெறியையும் காணமுடியும் என்றும் கொள்ள வேண்டும். மறுமை பற்றியும், புகழ் பற்றியும், வானவூர்தி பற்றியும், கணிச்சிக்கூர்ம் படையோன் பற்றியும் நாம் மேலே கண்ட பாடல்களில் வருவனவெல்லாம் வீட்டினைக் குறிப்பாக உணர்த்த வருவனவேயாம் என்று கூறி அந்த அளவில் அமைவோம்.

இதுவரை கூறியவற்றான், சங்க இலக்கியங்களாகிய எட்டுத்தொகை எவையெவை என்பதும், அவற்றுள் அகம்

பற்றியும் புறம் பற்றியும் பாடுவன யாவை என்பதும், அவற்றுள் அகவாழ்வை எவை எவை எவ்வெவ்வாறு காட்டுகின்றன என்பதும், புற வாழ்வைப் புறம் எவ்வாறு விளக்குகின்றது என்பதும் ஒருவாறு அறிந்தோம். பரந்து கிடக்கும் சங்க இலக்கியமாகிய கவிதைக் கடலுள் இரண்டொன்றே இங்கு எடுத்துக் காட்டினேம். இங்குச் சிலவற்றைக் காட்டிய காரணம், மற்றவை அவ்வளவு சிறப்புடையன அல்ல என்பதன்று. சங்க இலக்கியங்களுள் ஒவ்வொன்றும் சிறந்த பாடலேதான். ஒவ்வொன்றைப் பற்றியும் தனித்தனிப் பெரு நூல்கள் எழுதலாம். நல்லறிஞர் பலர் அந்த வழியில் இன்று நாட்டிலே பணியாற்றி வருகின்றனர். நான் இங்கே அவை வாழ்வோடு எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளன என்பதைக் காட்ட ஒரு சிலவற்றையே எடுத்து விளக்கினேன். ஒவ்வொன்றைப் பற்றியும் அறிய விரும்புவோர், அவ்வந் நூல்வழிப் பயின்று, பயன் பெறுக என வேண்டி மேலே செல்கிறேன்.

அடுத்து, இச்சங்ககால வாழ்வை ஒட்டி, என்றும் நிலை கெடாது நிலவும் உலகக் கவிஞராய் இன்று போற்றப் படும் வள்ளுவரது குறள் காட்டும் வாழ்க்கை நெறிபற்றிக் காண்போம்.

4. குறள்

தமிழ்க் கவிதை உலகிலேயே தலை சிறந்தது குறள் என்பர். நாம் இதுவரையில், மேலே எத்தனையோ குறட்பாக்களை எடுத்து ஆண்டிருக்கின்றோம். மூன்றெழுத்துக்களாலான தனது பெயர் போன்றே நூலும், மிகக் குறைந்த அளவினைக் கொண்டுள்ள பாடல்களால் ஆயது; குறுகிய அடிகளைப் பெற்றமையினாலே பாடல் குறட்பாவாயிற்று, நூலும் குறளாயிற்று. இந்நூல் சங்க நூல் என்று பேசப்படாவிடினும், சங்கச் சான்றோர் களெல்லாம் இந்நூற் கருத்துக்களையும், சொற்றொடர்களையும் தங்கள் நூல்களில் ஆண்டிருக்கிறார்கள். இந் நூலாசிரியரைப் 'பொய்யில் புலவர்' என்றும், இந்நூலை 'அறம்' என்றும் கூறும் சங்கப் புலவர்தம் பாடல்கள் உள்ளன. இந்நூலின் காலம் இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னது என்பர். இந் நூலின் பெருமையைப் பலர் பலவகையாகப் புகழ்ந்து கொண்டே யிருக்கின்றனர். இந் நூலைப்பற்றி ஆராய்ச்சி உரைகளும் விளக்க உரைகளும் வெளிவந்து கொண்டேயிருக் கின்றன. இந்நூலை உலகில் பிற மொழிகளில் பலர் மொழி பெயர்த்துள்ளனர். இந்நூலில் இல்லாத பொருள் ஒன்றும் இல்லை என்பது உலகறிந்த உண்மை. எனவே, இந்நூல் வாழ்க்கைக்கு எத்துணை இன்றியமையாதது என்பது கூறவும் வேண்டுமோ! திருக்குறளையே வாழ்க்கை நூலாக ஆராய்ந்து எழுதிய நூல்களும் பலப்பல வந்துள்ளன. குறள் வாழ்வோடு பின்னிக்கிடக்கும் வகையினைப் பள்ளியிற் பயிலும் பிள்ளை முதல் அனைவரும் அறிந்துள்ளனர். ஆகவே, நாம் அதுபற்றி அதிகம் ஆராய வேண்டா. எனினும், எடுத்த பொருளுக்கு ஏற்ப ஓர் அளவு ஆராய்ந்து தொடர்ந்து செல்லலாம்.

குறளை மூன்று பாலாகப் பிரித்துள்ளனர். வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப்படுவன அறம், பொருள், இன்பம். இவற்றின் அடிப்படையிலேயே அப்பிரிவுகள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற பெயர்களையும் பெற்றுள்ளன. 'அகமும் புறமும்' இந்நூலில் இடம் பெற்றுள்ளன. எக்காலத்துக்கும், எந் நாட்டினருக்கும், எச் சமயத்தவருக்கும், எல்லார்க்கும் இந்நூல் பயன்படும் வகையில் அமைந்துள்ளது என்பர். அதனுலேதான் சிற்சில குறட்பாக் களுக்குக் காலத்துக்கும் நிலைக்கும் ஏற்பப் புதுப்புது உரைகளும் வெளி வந்து கொண்டிருக்கின்றன. முன்னைப் புலவர் அவர் காலத்துக்கு ஏற்ப, வள்ளுவர் குறளுக்குப் பொருள் கொண்டனர். அவ்வுரைகளுள் சில இக்கால வாழ்க்கைக்கு ஒவ்வாதனவாய் இருக்கலாம். அதனுல், வேறு சில நூல்களைப் போன்று இக்குறளையும் வேண்டாவென்று ஒதுக்க யாரும் முன் வரவில்லை. அதற்குப் பதிலாக, இதை ஏற்று, தம் காலத்துக்கும் கருத்துக்கும் ஏற்ற வகையில் புதுப்பொருள் புனையவே முன் னிற்பர். எனவே, யாருக்கும் இக்குறளை விட மனம் வாராது. தத்தமது கால, நாட்டு, சமய இயல்புகளுக்கு ஏற்ப உரை காணத் தக்க வகையில் — அவரவர் வாழ்க்கைத் தத்துவத்தை விளக்கும் பொருள் கொள்ளும் வகையில் — இந்நூல் அமைவ தனுலேயே இது சிறந்த நூலாய் வாழ்கின்றது. இந்நூலை ஆக்கிய திருவள்ளுவரும் சாதி, குலம், பிறப்பு என்ற எல்லா வேறுபாடுகளையும் கடந்தவர். அவர் எக் குலத்தில் பிறந்தாரோ, நாமறியோம்... எக்குல வாழ்வை மேற்கொண்டாரோ தெரியாது! எனினும் அவர் பிறந்து சிறக்க வாழ்ந்தார் என்பது உண்மை. அவர் பற்றியும் குலம் முதலிய பற்றியும் ஒன்றும் தெரியாதிருப்பதும், அவர் நூலைப் பொது நூலாக்கிச் சிறப்பிக்க உதவுகின்றது. ஆம்! அப்படிச் சிறந்ததெனக் கூறும் வகையில் இந்நூல் எவ்வாறு வாழ்க்கைத் தத்துவத்தை விளக்குகின்றது? அதைத் தொடர்ந்து காண்போம்.

ஆறறிவு படைத்த மனிதன் வாழ வேண்டிய வாழ்க்கை யினை வள்ளுவர் திட்டவட்டமாக வரைமுறை செய்துள்ளார்.

எத்தகைய வாழ்வில் வாழ விரும்பினாலும், விரும்பும் அவரவருக்கு ஏற்ற அறநெறியை வடித்துக் கொடுத்துள்ளார் வள்ளுவர். இல்லற வாழ்வும் துறவற வாழ்வும் அறம் என்ற பகுதியில் நன்கு பேசப்படுகின்றன. அதனதன் திறத்தில் ஒவ்வொன்றும் சிறந்ததேயாயினும், 'அறன் எனப்பட்டதே இவ்வாழ்க்கை,' என்று இல்லறத்திற்கே வள்ளுவர் தனித்த ஏற்றம் கொடுத்துள்ளார். துறவறத்தை மேற்கொள்பவன் தூயவனாய் இருக்க வேண்டும் என்பதைப் பலபடியாக வற்புறுத்துகின்றார். பிறகு, பொருள் அதிகாரத்தில் உலகத்து இன்றியமையாத பொருளை, 'பொருள் இலார்க்கு இவ்வுலகம் இல்லை,' என்ற அடிப்படையில், பலப்பல வகையாக விளக்கு கின்றார். பொருளை ஈட்டலும் போற்றலும் வகுத்தலும் நாட்டில் நேரிய வழியில் நடைபெறவேண்டுமாயின், அதற்கு நல்ல அரசும், அவ்வரசைச் சார்ந்த அங்கங்களும் அமைய வேண்டும் என்பதைச் சில அதிகாரங்களால் விளக்குகின்றார். மனிதன் தன் வாழ்க்கையில் மனிதத் தன்மையோடு வாழ வேண்டுமானால், இன்னின்ன அறத்தை மேற்கொள்ள வேண்டு மென்றும், இன்னின்னவற்றைத் தள்ள வேண்டுமென்றும் திட்டமாகக் குறித்துள்ளார். சிலவற்றை அவர் கூறும்போது பேசவேண்டிய நாகரிகப் பண்பாடும் நமக்கு விளங்காமற் போகாது. அமைச்சராய் உள்ளாரும் அரசரைச் சேர்ந்தொழுகு வாரும் இன்னின்ன வகையினராய் இருக்கவேண்டும் என்றும், அரசர் யார்யாரைச் சார்ந்தொழுகின் நாட்டு வாழ்க்கை நலமுறும் என்றும் காட்டுகின்றார். அரசன் தன் கீழ்க் குடிகளிடம் கொள்ளவேண்டிய நல்ல தொடர்பினையும், முடியாட்சியாயினும், அது குடியாட்சி வகையிலேயே அமைந் திருக்க வேண்டுமென்பதையும், அவ்வாறு மக்கள் தன் நாட்டு நலத்தைக் காக்கும் வகையில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதையும் கூறுகின்றார். உலகம் வாழ வழிகள் அத்தனைக்கும் மேல்வரிச் சட்டம் போன்று அவர்தம் குறட்பாக் கள் அமைகின்றன. பின், காமத்துப் பாலாகிய இன்பப் பாலிலே தொல்காப்பியர் கண்ட அத்துணை நுணுக்கங்களும் பேசப்படுகின்றன. தொல்காப்பியர் காலத்துக்குமுன் வள்ளு

வர் இருந்திருப்பராயின், இவர் குறளைக் கண்டுதான், அவர் தம் இலக்கணத்தை இயற்றினார் என்றுகூடச் சொல்லிவிடுவர். அவர் காலம் அறிந்தமையின், அவ்வாறு கூறமுடியாது. மிகக் குறைந் அளவில் இருபத்தைந்து அதிகாரங்களிலே மூந்நூறு அடிகளுள்ளே—சங்க இலக்கியங்கள், இலக்கண நூல்கள் அத்தனையும்ஆராய்ந்து அலசி எழுதிய எல்லா அகப்பொருளின் கருத்துக்களையும் மிக நுணுக்கமாக, வள்ளுவர், வாழ்க்கைக்குப் பொருந்தும் வகையில் காட்டியுள்ளார் குறளில் எந்தச் சொல்லையும் நீக்க முடியாத அளவுக்கு வாழ்வின் பொருளைச் செருகித் தம் கவிதையை யாத்துள்ள வள்ளுவர்; யாவராயினும், எக்குலத்தவராயினும், அவர் தமிழராய்ப் பிறந்த இந்நாடு சிறந்த தன்றோ! இனி அவர் கவிதைகளின் வழித் தனித்தனி ஆராய்வோம்.

அவர் முதலாவதாக வாழ்க்கைக்கு இன்றியமையாத தான கடவுள் நெறியைக் காட்டுகின்றார். உலகம் அவர் கண்முன் நிற்கின்றது. அதற்காகத்தானே அவர் அறம் கூறப் புகுந்தார்? "ஆதி பகவன் முதற்றே உலகு," என்றே தம் நூலைத் தொடங்குகின்றார். 'ஆதி பகவன்' என்ற தொடருக்கு யார் என்ன பொருள் கண்டாலும், ஒருவரும், 'இக்குறள் இன்றைக்குத் தேவையானது அன்று,' என்று கூறார். மேலும், 'கடவுள் வாழ்த்து' என்று வரும் பத்துப் பாடல்களிலும், எந்தச் சமயத்தைச் சார்ந்த கடவுளரைப் பற்றியும் பாராட்டா திருப்பதே இந்நூலுக்குத் தனிப்பெருமை தருகின்றது. 'தன் தெய்வம் என் தெய்வம்' என்று தட்டுத்தடுமாறி உலகில் அன்று முதல் இன்றுவரை சமயத்தின் பேரால் எத்துணைப் போர்கள் நடை பெற்றுள்ளன! ஏன்? நம் பரந்த நாடே சமயத்தின் பேரால்தானே இரண்டாக்கப்பட்டது! இந்த வேறுபாட்டு மனப் பான்மைக்குச் சிறிதும் மனிதன் கொடுக்கக்கூடாது என்பதைக் காட்டவே, வள்ளுவர் தம் கடவுள் வாழ்த்தில் எந்தக் கடவுளையும் ஏற்றம் தந்து பாராட்டவில்லை. அதற்கு நேர் மாறாக, ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் கடவுளைத்தான் அவர் கூறுகிறார் என்று, ஒவ்வொரு குறளுக்கும் ஒவ்வொரு வகையில் உரைகண்டு இந் நூலையே தத்தம் சமயத்துக்கு ஏற்ற

நூலாக்கிக் கொண்டு செல்லும் வகையில் குறட்பாக்களை அமைத்துள்ளார். இவ்வாறு தொடக்கத்திலேயே மக்கள் சமுதாயம் யாதொரு வேறுபாடும் இன்றி வாழவேண்டும் என்பதை விளக்கிக் காட்டியவர் வேறு யாவர்? வள்ளுவருக்குத் தனி மனிதன் வாழ்வைக் காட்டிலும் சமுதாய வாழ்வே சிறக்க வேண்டும் என்ற கொள்கை உண்டு. எந்நாட்டில் பிறந்த நல்லவரும் இந்தத் துணிவில்தானே இருப்பர்! அப்போது தானே உலகம் உயர்வுற்று ஓங்கும்! சமுதாயம் தழைக்காமல், தனி மனிதன் மட்டும் ஓங்குவானுனால், அதனால் என்ன பயன்? இந்த உண்மையை வள்ளுவர் நூல் முழுதும் காட்டிக் கொண்டே செல்கின்றார். நாம் மேலே கண்டபடி அவர் காட்டிய வாழ்க்கை சமுதாயத்துடன் நின்றுவிட வில்லை. அதையும் கடக்கிறது. உலகில் உயிர்பெற்றவை யாவற்றை யும் வாழ வைக்கவேண்டும் என்பதே அறிஞர் தம் குறிக் கோளன்றோ!

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்,' என்ற அடிப் படையிலே வள்ளுவர் வாழ்வு தொடங்குகின்றது. நாம் மேலே கண்டபடி எல்லா உயிர்க்கும் இன்பம் இயைவதுதானே! எந்த வகையிலும் வாழ்வு எல்லாவற்றிற்கும் ஒன்றே. வாழும் வகைகளும் வழித்துறைகளும் பலவேறு வகைகளில் வேறுபட்டி ருக்கலாம். எனினும், யாவும் வாழ்கின்றவைதாம். அவற்றின் வாழ்க்கையையெல்லாம் காணவேண்டியே, எல்லா உயிர்க்கும் பிறப்பொக்கும் என்றார். இத்துணை விரிந்த மனப்பான்மையில் அவர் உள்ளம் வாழ்வை அளந்து அறுதியிட்டமையினாலே தான், அவர் நூலும் மற்றெல்லாவற்றைக் காட்டிலும் விரிந்த அளவில் பலராலும் போற்றப்பட்டு வருகின்றது.

எந்தப் பொருளை எடுத்து விளக்கினாலும், வள்ளுவருக்கு உயிர்களின் பொது வாழ்க்கைதான் முன்னிற்கும். அதனால், அவர் பல சொற்களுக்குப் புத்தம் புதிய உரை காண்கின்றாரோ எனும்படி பல குறள்கள் அமைகின்றன. பல சொற்களுக்கு உண்மையில் வாழ்வில் கொண்ட—கொள்ள வேண்டிய— பொருள்கள் இவைதாம் என்று திட்டமாகக் காட்டுவார்

வள்ளுவர். அன்பு, அறிவு, கல்வி, நாகரிகம், தவம், வாய்மை, காதல் இவை போன்ற சொற்களுக்கு வள்ளுவர் காணும் பொருள்களையும், அவர் இவற்றின்வழி விளக்கும் வாழ்க்கை நெறியினையும் அறிந்து கொள்ளுதலே குறட்கவிதைகளுக்கும் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பை அறிந்து கொள்ளுவதாம். இவற்றிற் கெல்லாம் பிற தமிழ் நூலாரும் பிற மொழியாளர்களும் கொள்ளும் பொருளை நாம் அறிவோம்; நானிலமும் அறியும். ஆனால், வள்ளுவர் அந்த அளவில் இவற்றின் பொருள்களைக் காணாது, ஒவ்வொன்றையும் மக்கள் வாழ்வோடு பின்னிப் பிணைத்துப் பேசும் திறனே, அவரைத் தலைவர் ஆக்கிற்று எனலாம். ஒவ்வொன்றாகக் காணலாம்.

அன்பு, வாழ்வின் அடிப்படை; இன்பம் அன்பில் விளைவது. 'அன்பின் வழியது உயர் நிலை,' என்றார் வள்ளுவர். எனவே, உயிர் வாழ்க்கை என்பதே அன்பு செலுத்துவதாகும். உலகில் உயிர் பெற்றுப் பிறந்த ஒவ்வொன்றும் அன்பின் வழியேதான் வாழ வேண்டும். இன்றேல் அது உயிர்ப்பிறவி ஆகாது. 'ஏதோ பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்கின்றோம்' என்ற வாழ்க்கை அன்பாகாது. அது வாழ்வே ஆகாது என்கிறார். கொடிய பாலைவனத்திடை வற்றல்மரந் தளிர்த்தால் யாருக்கு என்ன பயன்? யாரும் அதனால் பயன் பெற முடியாது. அதைப் போன்றேதான் அன்பு உள்ளத்திலில்லாத மக்கள் வாழும் வாழ்க்கையும் அமையும். இதை வள்ளுவர்,

'அன்புஅகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று.' (குறள். 78)

என்கின்றார். மேலும், உயிர் நிலையே அன்பின் வழியது என்று தேற்றத்தொடு திட்டமாகக் கூறிய ஆசிரியர், அன்பற்ற உயிர் வாழ்க்கையைப்பற்றிச் சொல்கின்றவர், அந்த அன்பு இல்லாத வாழ்க்கை உயிர் அற்ற பிண வாழ்க்கையே என்கின்றார். பிணத்தை உலகம் வைத்துக்கொண்டு வாழ விரும்புகிறதா? இல்லையே! அதுபோன்றேதான் அன்பற்றவரோடு உலகம் ஒன்றி வாழ விரும்பாது. அதனுடைய எலும்பும் தோலும் போர்த்த உயிரற்ற உடலால் உலகுக்குப் பயன் என்ன? அதுபோன்றே

அன்பற்று வாழ்பவரானும் பயனில்லை. அவர்கள் அவியினும் வாழினும் இரண்டும் ஒன்றே என்று வெளிப்படக் கூறுகின்றார் வள்ளுவர். உடல் தோற்றத்தில் குறையிலரேனும், உள்ளத்தில் அன்பில்லாராயின், அவர்களுக்கும் அவர்களால் நாட்டுக்கும் யாதொரு பயனும் இல்லை என்பார்,

'புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பில் லவர்க்கு?' (குறள். 79)

என்றும்,

'அன்பின் வழியது உயிர்நிலை; அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.' (குறள். 80)

என்றும் கூறுகின்றார். சிலர், 'நாங்கள் எங்கள் மனைவி மக்களிடம் அன்பாய் இருக்கின்றோமே! அது போதாதா?' என்று கேட்பர். அவர்கள் கூறுவதுகூடச் சரி என்பது போன்று இருக்கும். ஆயினும் 'அது வாழ்வில் எவ்வளவு பொருந்தாத ஒன்று என்பதை அதிகார அமைப்பின் மூலமே வள்ளுவர் விளக்குகின்றார். 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை,' என்று கூறி, அவ்வறத்தின் வழிக்கு உற்ற துணையான மனையாளின் சிறப்பைக் கூறி, அவர் தம் வாழ்வின் வழி நன்கலனாய் விளங்கும் மக்கட்பேற்றினைக் கூறுகின்றார். அதுவரையில் 'தான்' என்று தனித்து வாழ்ந்த மனிதன், தானும் மனையாளுமாகி, பின் குடும்பத்தில் குழந்தைகளோடு கலந்து, ஒன்றிய இல்லற வாழ்வில் சிறக்கின்றான். அதுவரையில் அவன் செலுத்தும் அன்பு அல்லது பாசமானது, யார் வேண்டித் தடுத்தாலும் இயல்பாகச் சென்று பற்றுவதாகும். அதற்குமேல் செல்லும் உள்ள நெகிழ்ச்சியே அன்பாவது. அதனாலேதான் வள்ளுவர் தம் அன்புடைமை என்னும் அதிகாரத்தை, மனை வாழ்க்கைக்கு அடுத்தபடி வையாது, வாழ்க்கைத் துணை நலம், மக்கட்பேறு இரண்டையும் கடந்து வைத்துள்ளார். அவ்வன்பின் ஆற்றலால் விருந்தோம்ப வேண்டும் என்ற உணர்வு வரும்; அதன்வழி இனியவை கூறல் முதலிய நல்லியல்புகளும் தொடர்ந்து மனிதனைப் பற்றிக் கொள்ளும். பின்பு அவன் தன் அன்பின் கண் கொண்டு

தன்னைப் போன்றே பிற எல்லா உயிர்களையும் ஒத்து நோக்கி, வையகமெல்லாம் இன்புற்று வாழ்தலே மேன்மையான வாழ்க்கை என்பதை உணர்ந்து, அறத்தாற்றில் தானும் வாழ்ந்து மற்றவரையும் வாழ வைத்துச் சிறப்பான். அவன் தன் என்பாலும் மற்றவருக்கு உதவுவான். அந்த வள்ளுவர் கண்ட உயரிய அன்பின் உயிர் வாழ்வு நாட்டில் அமையின் என்றும் நாம் வாழ்வோம்!

அடுத்து, 'அறிவு' என்பதை வள்ளுவர் எவ்வாறு விளக்கு கிறார் என்பதைப் பார்க்க வேண்டும். அங்கேயும் அவர் உள்ளம் விரிந்து உலக உயிர்களிடந்தான் செல்கின்றது, அறிவு என்றதும், ஏதோ தேர்வுக்கு மாணவன் படிப்பதும், தேர்வில் 'மார்க்'குகள் வாங்கி முதல் வகுப்பில் தேர்ச்சி பெறுவதுந்தான் அறிவு என்று இன்றும் பலரும் நினைக் கின்றனர். அஃது அறிவின் ஒரு கூறே தவிர, முற்றிய அறிவாகாது. 'மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு,' என்று வள்ளுவரே கூறியபடி, படிக்க வேண்டிய நல்ல படிப்பு—வள்ளுவர் பின் கல்வி என்று வரையறுத்துள்ள படிப்பு—உண்மையில் ஓரளவு அறிவை வளர்க்கும் என்பது உண்மை தான். ஆனால், அதையே அறிவாகக் கொண்டு மற்றவர்களைப் பற்றிக் கவலையுறாது வாழ்வதை வள்ளுவர் அறிவு எனக்கொள்ள மாட்டார். நூலறிவு, உலக அறிவு இன்றேல் பயன்படாது என்பதை,

> **'உலகத்தோடு ஒட்ட ஒழுகல், பலகற்றும்**
> **கல்லார், அறிவிலா தார்.'** (குறள், 140)

என்று திட்டமாக வரையறுத்துக் கூறுகின்றார். மற்றும்,

> **'எவ்வ துறைவது உலகம், உலகத்தொடு**
> **அவ்வ துறைவது அறிவு.'** (குறள். 426)

என்றும் காட்டுகின்றார். இவற்றால், உலகம் செல்லும் வழி விட்டுத் தான் பிறழ்ந்து செல்லாது, அவ்வுலகையும் அவ்வுலகத் தில் வாழும் உயிர்களையும் ஒத்து நோக்கி, அவற்றின் வழி தானும் கலந்து செல்லவேண்டும் என்பது புலனாகும்! 'உலக

உயிர்களெல்லாம் எக்கேடு கெட்டால் எனக்கென்ன?' என்று இராது, தான்மட்டும் சிறக்க வாழ்ந்தால் போதும் என்ற எண்ணத்தில் செம்மாக்காது, உலகைத் தழுவியே செல்ல வேண்டுவதுதான் அறிவின் பயன்.

இனி, 'அறிவு எதற்குப் பயன்பட வேண்டும்? தேர்வில் வெற்றி பெற்று முதல் மாணவனாய் வருவதற்காகவா இது பயன்பட வேண்டும்?' என்று கேட்கிறார். இல்லை என்ற விடையையும் அவரே கூறிவிடுகின்றார். பின் அறிவுதான் எதற்கு?

'அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை (குறள். 315)

என்ற குறளிலேதான் வாழ்வின் நுணுக்கத்தை அறிவின் மேல் ஏற்றி அமைத்துச் சென்றுவிட்டார். நாம் வருந்துகின்றோம். அவ் வருத்தம் நம் உள்ளத்தைச் சுடுகின்றது ஆனால், நம் எதிரிலேயே மற்றவர் வருந்தும்போது, நாம் கவலையற்று மகிழ்ச்சியில் திளைக்கின்றோம். 'ஓரில் நெய்தல் கறங்க, ஓரில் மகிழ்ச்சி சிறக்கும் காட்சி' இன்று உலகில் பல 'அவற்றையா மனித வாழ்வு விரும்புகின்றது?' என்று கேட்கின்றார் அவர். அந்த வகையில் பிற உயிர்வாடத் தான் மகிழ்ந்திருப்பவன் யாவனாயினும், எத்துணைப் படிப்பும் பட்டமும் பெற்று அறிஞன் எனப் பெயர் வாங்கியவனே ஆனாலும், அந்த அறிவினால் என்ன பயன்? அவன் அறிவிழந்தவனே ஆகின்றான் என்கின்றார். எனவே, பிறிதின் நோய் தம் நோயாகப் போற்றி, அந்த நோய்களை நீக்க வழி காண்பதே உண்மை அறிவாகும். சாதாரண மக்கள் உயிர்த் துன்பமட்டு மன்றிப் பிற விலங்கு முதலியவற்றின் துன்பத்தையும் நீக்குதலே சிறந்ததென்பதை, 'பிறரின் நோய்' என உயர்திணையால் குறியாது, 'பிறிதின் நோய்' என்று அஃறிணையாலே குறிக்கின்றார். சங்க காலத்து முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும் கொடுத்த பாரியும், பேகனும் இக்குறளுக்கு இலக்காகி நிற்கிறார்களன்றோ! இவ்வாறு அறிவென்பது உலகில் வாழும் எல்லா உயிர்களையும் ஒத்து நோக்குவதே என்பதும்

அவ்வாறு நோக்கும்போது எல்லா உயிர்களையும் தழுவிச் செல்லும் சமரச மனப்பான்மை உடையது என்பதும், ஒருகால் வாடியும் மற்றொருகால் மலர்ந்தும் இல்லாது, என்றும் எக்காலத்தும் ஒரு தன்மைத்தாகவே இருக்கும் என்பதும், அத்தகைய அறிவுடையார் வழியே உலக வாழ்க்கை மாசற்றுச் சிறக்கின்றது என்பதும் வள்ளுவர் காட்டும் விளக்கங்களாம்.

இனி, வள்ளுவர் கல்வியைக் காணும் முறையினையும், அது வாழ்வொடு பொருந்தும் வகையினையும் காண்போம். திருவள்ளுவர்தம் கல்வி முறையும் மக்கள் சமுதாயத்தை வாழ வைக்கும் முறையிலேதான் செல்கின்றது. எண்ணும் எழுத்தும் கற்றுத் தேர்ச்சி பெற்று, ஏதோ பதவியை நாடிச் செல்லும் வகையிலேதான் இன்றைய கல்வி முறை அமைகின்றது எனலாம். படிக்கும் பள்ளிச் சிறுவனையோ, கல்லூரி மாணவனையோ, 'ஏன் படிக்கிறாய்?' என்று கேட்டால் உடனே 'ஏதாவது ஓர் உத்தியோகத்திற்குப் போக' என்று திட்டமாக விடை கூறிவிடுவான். எல்லோருக்கும் வேலை கிடைக்கிறதா இல்லையா என்பதுபற்றி நாம் ஆராய வேண்டா. ஆனால், இக்காலக் கல்வியின் குறிக்கோள் அப்படியிருக்கின்றது என்பது மட்டும் அறிதல் போதும். ஆனால், திருக்குறளை உணர்ந்து பயில்கின்ற ஒருவனை நோக்கி, 'நீ எதற்காகப் படிக்கின்றாய்?' என்று கேட்டால், 'அதற்குத் தக நிற்க,' என்று திட்டமாகப் பதில் சொல்லுவான். எனவே, படிப்பு என்பது ஏதோ ஆண்டு தோறும் தேர்வில் வெற்றி பெறுவதற்காக, 'மார்க்கு' எண்ணும் ஒன்றாக அமையவில்லை என்பதும், அது வாழ்வை வகுக்கவே பயன்படுவது என்பதும் தேற்றம். 'எதைக் கற்க வேண்டும்?' என்னும் கேள்விகள் அனைத்தையும் ஒன்றாக்கி,

'கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக' (குறள். 391)

என்கிறார் வள்ளுவர். எனவே, படிக்க வேண்டியவற்றைப் படிக்க வேண்டும். ஏதாவது பொழுதுபோக்குக்கென்று எத்தனையோ கதைப் புத்தகங்களைப் படிக்கின்றோம். ஆயினும்,

அவற்றால் பயன் உண்டா? இதை எண்ணித்தான் திருவள்ளுவர் வாழ்க்கைக்கு ஏற்றதாக நாமும் உலகமும் வாழ வழி காட்டும் தன்மைத்தாக—எல்லாவுயிரும் வேறுபாடு காணாத வாழ்வைத் தருவதாக இருக்கும் கல்வியைக் கற்க வேண்டுகிறார். 'கற்பவை கற்க' என்று கூறி, அவற்றையும் மேற்போக்காகப் படியாமல், 'கசடு அறக் கற்க' வேண்டும் என்கின்றார். பின்பு எவ்வாறு வாழக் கற்கிறார்களோ, அதற்கு ஏற்றாற்போலவே வாழ்ந்துகாட்ட வேண்டும் என்கின்றார். படிப்புக்கும் வாழ்வுக்கும் தொடர்பு இல்லையென்று யாரும் சொல்ல முடியாதே! உயிருக்காகக் 'கற்க', என்கின்றார். முன்னரும் வள்ளுவர்-இத்தகைய பொதுநலக் கருத்துக்களைக் குறிக்கும்போது, தனி மனிதனை மட்டும் குறியாது, 'உயிர்' என்றே பொதுப்படையாகக் கூறினார். இங்கும்,

> 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்என்ப வாழும் உயிர்க்கு.' (குறள். 392)

என்று உயிர்மேல் கல்வியை ஏற்றியே பேசுகின்றார். 'மனிதனல்லாப் பிறவுயிர்களும் கற்றுப் பேசுமா!' என்ற ஐயம் எழலாம். அவை கற்கின்றனவோ, அன்றி உணர்கின்றனவோ, நாமறியோம். ஆனால், பிற உயிர்களே-புல் முதல் மாடு வரையில் உள்ள உயிர்களே—மனிதனுக்கு அவனிடை வாழும் கற்றவனைக் காட்டிலும் எத்தனை எத்தனை உண்மைகளை அன்றாடம் உணர்த்திக் கொண்டேயிருக்கும் நல்லாசிரிய நிலையில் அமைகின்றன என்பதை மறுப்பார் யார்?

கல்வி கற்பது உலகை வாழ்விப்பதற்கேதான். மேலே அறிவு, அன்பு ஆகியவை எப்படி உலகை ஒத்து நோக்கி வாழ வழி காட்டிகளாய் அமைவதை பார்த்தோமோ, அதே நிலையிலேதான் கல்வியும் அமைகின்றது. உலக வாழ்க்கையே தன் வாழ்க்கையென்று கருதுவதுதான் கல்வியின் சிறப்பு. அந்த ஒன்றினையேதான் கற்றவர் விரும்புவர். இங்கும் வள்ளுவர் பிறர் இன்புறக் காண்பதென்று கூறாது, உலகம் இன்புறுவதென்றே எல்லா உயிர்கள் மேலும் இன்பத்தை ஏற்றிக் கூறுவது காணத்தக்கது. அவர் கூறுவது இதுதான்;

'தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.' (குறள். 309)

எனவே, நல்லதொரு கல்வி, தன்னைப்போல உலகை ஒத்து நோக்கப் பயன்படத் தக்கதேயன்றி, உத்தியோகத்திற்காகவும், வேறு பட்டம் பதவிக்காகவும் அன்று என்பது வள்ளுவர் உள்ளக் கிடக்கை. அக்கல்வியை எல்லாவற்றாலும் கற்று உணர்ந்து, அதன்படி நடந்து, தாமும் வாழ்ந்து உலகையும் வாழ்விக்க வேண்டுமென்பதே குறட் கவிதையின் கருத்தாகும்.

இனி, அடுத்து வள்ளுவர் 'நாகரிகம்' என்ற சொல்லுக்குக் கண்ணோட்டம் என்றே பொருள் கொள்கின்றார். உலகில் கண் பெற்ற பயன் கண்ணோட்டத்தைப் பெறுதலே என்பது வள்ளுவர் கருத்து. பயின்றாரையும் பிறரையும் மறுக்காது ஏற்றுக்கொண்டு, தண்ணளி செய்தலே கண்ணோட்டமாகும். எனவே, நாகரிகம், கருணையென்னும் பண்பின் அடிப்படையில் பிறக்கின்றது; கருணை மட்டுமன்றி, பழகினவரிடத்து ஐயங் கொள்ளாமை முதலிய நல்ல பண்புகளையும் தன்னிடத்துக் கொண்டுள்ளது. பழகி உற்றாராகிவிட்ட பிறகு சிலர் மற்றவர் மேல் ஐயங்கொண்டவராகி, அவர்களை என்றும் நம்பாது இருக்கும் இன்றைய 'நாகரிகத்தை'யும் காண் கின்றோம். ஆனால், வள்ளுவர் கண்ட நாகரிகம் அத்தகைய தன்று.

'பெயக்கண்டும் நஞ்சுஉண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.' (குறள். 580)

என்கின்றார் அவர். உற்ற நண்பன் என்று ஒருவனைத் தேர்ந் தெடுத்த பின்பு, அவனிடம் முழு நம்பிக்கை வைப்பதுதான் நாகரிகம். ஒருவரை ஒருவர் நம்பவில்லையானால், உலக வாழ்வே நடைபெறாதன்றோ! ஆகவே நம்பிக்கை வைத்தவன், ஒருவரிடம் ஐயம் கொள்ளுதல் தவறு என்பதை விளக்கவும், அவ்வாறு கலந்து பழகியவர் பொருட்டுக் கருணை நலம் காட்டுதல் இன்றியமையாதது என்பதை விளக்கவும், அனைத்தி லும் மேலாக, அவர் தமக்கு மாறு செய்யினும், தாம் 'அவர்

செய்ய மாட்டார்,' என்று திட்டமாக நம்புவதன் மூலம், அம் மாறுபாட்டையும் பின்பு நீக்கி வாழ முடியும் என்பதை விளக்கவுமே இக்குறட் பாவினை அவர் இயற்றினார் என்று கொள்ளுவது பொருந்தும். உற்றவர் எனக்கொண்டவர், தமக்கு நஞ்சினையே கலந்து கொடுத்தாலும், அதனையும் உண்டு சாவாது அமைபவரே நாகரிகம் பெற்றவராவர் என்பது வள்ளுவர் கருத்து. 'விடத்தை உண்டு வாழ முடியுமா?' என்று கேட்கலாம். ஆம்; நம்பிக்கை இருந்தால் வாழலாம் என்று கூறுகின்றார் வள்ளுவர். இந்த நாகரிகம் இன்றைய உலகுக்குப் புரியாத ஒன்றுதான். தனி மனிதர் மட்டுமே யன்றி, சமுதாயமே ஒன்றை ஒன்று நம்பாது, ஒருவரை ஒருவர் மனத்தால் விரோதித்துக் கொடுமை இழைக்கக் காலம் பார்த்துக் கொண்டுதானே இருக்கின்றது? மற்றும் நாகரிகம் என்றால் ஏதோ உடை உடுத்துவதும், உப்பரிகையில் வாழ்வதும், உயர்ந்தவர் என்று கருதுபவரோடு கை குலுக்கு வதும், உற்றாராயினும் செல்வத்தால் தாழ்ந்தவராயின் முகம் கொடுத்துப் பேசாது ஒதுக்குவதும், அறிந்தவரையும், வறியவராயின், அறியாதார் போன்று விலக்குவதுந்தானே இன்றைய நாகரிகமென்று கொள்ளுகின்றோம். மற்றும், மனிதரினும் தாழ்ந்த நாய் முதலிய விலங்குகளை வைத்து அணைக்கும் அளவுக்குத் தன்னை ஒத்த மனிதனை நோக்காத செல்வத்தையும் நாகரிகமென்று கொள்ளுகின்றோம். எனவே, இத்தகைய நாகரிகச் சுழலில் சிக்குண்டிருக்கும் நமக்கு இந்த வள்ளுவர் காட்டும் நாகரிகம் புரியாத ஒன்றுதான். என்றாலும், இதுதான் மனித சமுதாயத்துக்கே—ஏன்?—உயிர் வாழ்க்கைக்கே ஏற்றது. இக் கருத்தை,

> 'முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்,
> நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்.'

என்கின்றது நற்றிணை. எனவே, கண்ணோட்ட முடையவராய் வாழும் நாகரிகப் பண்பாட்டினரே நாகரிகமுடையவர் என்பதும், மற்றல்லாதார் யாரோ என்பதும் தேற்றம்,

அடுத்துத் தவம் என்பதனை வள்ளுவர் எவ்வாறு விளக்குகின்றார் என்று காண்போம். தவம் என்பது என்ன? காடு திரிந்தும் தாழ்சடை வைத்தும் காலம் கழிப்பதைத்தான் பலர் தவம் என்று கருதுகின்றனர். அவ்வாறு இருப்பவரைப்பற்றி நாம் குறை கூறவேண்டா. ஆனால், அவர்களால் உலகுக்குப் பயன் உண்டா? அவர்கள் தங்களைத் தூய்மைப் படுத்திக் கொண்டு, பிறவா நெறியில் சென்று வாழ்வார்கள். ஆனால், அதனால் உலக வாழ்வுக்கு—உலக உயிர்களுக்கு—என்ன பயன் என்று கேட்கலாமன்றோ! திருவள்ளுவர் காட்டும் குறள் அதனினும் மேம்பட்ட கருத்தைத் தருகின்றது. தனக்கு வரும் துன்பத்தைப் பொறுத்துக்கொள்ளுதலும், பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமையுமே தவத்தின் உரு என்று அவர் கூறும் போது, எதை நோக்கினும், எப்பொருள் பற்றி ஆராயினும், அனைத்தும் மற்ற உயிர்களுக்குத் தீங்கு செய்யாது நன்மை நாடச் செய்வதே தம் கவிதையின் குறிக்கோளாக வள்ளுவர் கொள்ளுகின்றார் என்பது புலனாகின்றது.

'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு.' (குறள். 261)

என்று, அவர் தேற்றேகாரம் கொடுத்துக் காட்டுவதை யார் மறுக்க முடியும்? ஒருவன் தவம் செய்யினும், அதனால் மற்ற உயிர்களைத் துன்புறுத்த லாகாது. மற்ற உயிர்களைத் துன்புறுத்தாமையே தவ வாழ்வின் அடிப்படை. இதனாலே தான் திருவள்ளுவனார் மற்றோர் இடத்திலே, உலக அறங்களை யெல்லாம் தவம் உட்படக் கூறி, அவ்வவற்றின் ஏற்றத்தைக் காட்டிவந்த நிலையிலே, அனைத்தினுக்கும் மேலாக, 'ஒன்றாக நல்லது கொல்லாமை,' என்று அந்த அறத்தை உச்சியில் ஏற்றிக் காட்டுகின்றார். ஆகவே, தவமாயினும், வேறு பிறவாயினும், மற்ற உயிர்களுக்குத் தீங்கிழையாது அவற்றின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையவேண்டும் என்பதே வள்ளுவர் நெறி.

இனி 'வாய்மை' என்பதைக் காண்போம். வாய்மை என்பது, கண்டதைக் கண்டபடியே சொல்வதைத்தான் குறிக்கும். இது எம்மொழியும் காட்டும் ஒரு செயல். இதை

மறுப்பார் யாருமில்லை. நீதி மன்றத்தில் சாட்சிக் கூண்டில் நிறுத்தப்பட்ட ஒருவனை 'நான் கண்டதைக் கண்டபடியே சொல்லுகிறேன்,' என்று சொல்லவைத்துப் பிரமாணம் வாங்குவதை நாம் கண்டிருக்கிறோம். ஆனால், வள்ளுவர் அந்த அளவிலேயே வாய்மையின் எல்லைக் கோட்டை அமைத்து முடித்துவிடவில்லை. அதுதான் அவர் எல்லைக் கோட்டின் தொடக்கம். அங்கிருந்துதான்—மற்றவர் வரையறுத்து முடிவு செய்த அந்த எல்லையிலிருந்துதான்—வள்ளுவர் வாய்மையே புறப்படுகின்றது. வாய்மையென்பது கண்டதைக் கண்டபடியே சொல்வது இருக்கட்டும். அப்படிச் சொல்லும்போது யாருக் காவது தீமை உண்டாயின், அதனால் என்ன பயன்? வாய்மை தான் என்றாலும், அதனால் மற்றவருக்குத் தீங்கு உண்டாக்க லாமா? உலகத்தில் உயிரின் வாழ்வுதானே உயர்ந்தோரின் குறிக்கோள்? அந்தக் குறிக்கோளிலிருந்து இது தவறி வீழ்ந்த தாகாதோ? ஆம்; தவறுதான். திருவள்ளுவனார்,

'வாய்மை எனப்படுவது யாதெனின், யாதொன்றும்
தீமை இலாத சொலல்.' (குறள். 291)

என்று திட்டமாகக் கூறுகின்றார். ஆம்! யாருக்கும் தீமை பயவாத சொற்கள் அத்தனையும் வாய்மைதான். கண்டதைக் கண்டபடியே கூறி, அதனால் மற்றவருக்குத் தீமை உண்டாக்கு வதினும், தீமை சிறிதும் கலவாத—மற்றவர்க்கு நன்மை பயக்கும்—சொற்களைப் பேசுவதே சிறந்ததாகும். இதைக் கேட்டதும் தொடர்ந்து மற்றொரு கேள்வி கேட்கத் தோன்றும் நமக்கு. 'அப்படியானால் மற்றவருக்குத் தீமை பயவாத—நன்மை உண்டாக்கும்—சொற்களைப் பொய்யாயினும் சொல்ல லாமா?' என்ற கேள்வி எழுதல் இயல்புதான். அதற்கும் வள்ளுவர், 'ஆம்' என்றுதான் பதில் தருகின்றார். யாருக்கும் யாதொரு தீங்கும் விளைவிக்காத ஒரு பொய்யினால் வேறொரு வருக்கு நன்மை உண்டாகுமானால், அது கண்டதைக் கண்டபடி கூறும் வாய்மையினும் மேம்பட்டு, உண்மையில் 'வாய்மை' என்று போற்றப்படுவதாகும் என்கின்றார் அவர்.

பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்' (குறள். 292)

என்ற குறளில் இக் கருத்தை அவர் தெள்ளத் தெளிய விளக்கு கின்ருர். இதை அறிந்த பின்பும் சிலர் வேறு வகையில் ஐயுறலாம். 'உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்' என்றும், 'மனத்தொடு வாய்மை மொழியின்' என்றும் பலவாறு மனத் தாலும்—உள்ளத்தாலும்—அறிந்து பொய் சொல்லக்கூடாது என்று வள்ளுவர் குறிக்கின்ருரே! அது எப்படி 'பொய்யை மெய்யாக்க வழிகாட்டும்?' என்று ஐய உணர்வு எழுதல் இயல்பே. ஆனுல், அந்த உள்ளமாகிய மனத்தின் உள்ளு ணர்வே இதுதானே? உள்ளம், 'அறிந்து மற்றவருக்குத் தீங் கிழைக்காதே' என்கின்றது. அந்த அடிப்படையில் வாழ்க்கை யமைகின்றது என்பதை வள்ளுவர் எத்தனேயோ இடத்தில் விளக்கியுள்ளாரே! 'கண்ணுல் கண்டதை எப்படி மனம் இல்லை என்று கூற ஒருப்படும்?' என்று கேட்கலாம். அந்த நிலை யிலேதான் மனம் பழக்கப்பட வேண்டும் என்கின்ருர் வள்ளுவர். 'கண்ணுல் கண்டாலும், அதனுல் மற்றவருக்குத் தீங்கு உண்டா யின், அதை வாய்மை என்று கொள்ளாதே,' எனத்தான் மனம் வற்புறுத்துகின்றது. அம் மன எண்ணத்தின் வழியேதான் பொய்மையும் குற்றத்தின் நீங்கிய நன்மை பயக்குமாயின் வாய்மையாகின்றது. எனவே, மனமறிந்த வாய்மைதான் மற்றவருக்குத் தீங்கிழையாதது. இந்த உண்மை எந்த மொழி யிலும் இல்லாத ஒன்று என்பர் பல மொழி கற்று நீதி நூல்களை நன்குணர்ந்த பெரியோர். ஆனுல், வள்ளுவர் தம் கவிதையை மக்கள் வாழ்வின் அடிப்படையிலேயே அமைத்துச் செல்கின்ற மையின், அவ்வாழ்வின் நன்மையே மெய்ம்மை, வாய்மை, உண்மை என்று கூறித் திட்டவட்டமாக எடுத்து விளக்கு கின்ருர். அவர் வழி மற்றவருக்குத் தீங்கிழைக்காத—பிற உயிருக்கு ஏதம் தாராத—இனிய வாய்மையைச் சொல்லி வையம் சிறக்குமாக!

'செல்வம்' என்பதை வள்ளுவர் பல வகையில் ஆய்ந்து காண்கின்ருர். பொருளைச் சேர்த்து வைத்திருக்கும் ஒருவனைக் கண்டுதான் நாம் 'செல்வன்' என்கின்ருேம். ஆனுல், வள்ளுவர் எத்தனையோ செல்வரை நம் கண்முன் கொண்டுவந்து காட்டு கின்ருர். அருட்செல்வர், பொருட்செல்வர், கல்விச்செல்வர்,

கேள்விச் செல்வர், சொற்செல்வர் போன்ற பல செல்வர்கள் வள்ளுவரின் குறள் மூலம் நமக்கு அறிமுகமாகின்றார்கள். செல்வம் இவ்வுலகுக்கு இன்றியமையாத ஒன்று என்பதை மறுப்பாரில்லை. அதிலும் பொருட் செல்வம் இன்றி இவ்வுலகில் மக்கள் வாழ முடியாது என்பது உண்மை. இதையும் திருவள்ளுவர் நன்கு கூறுகின்றார். 'பொருளிலார்க்கு இவ் வுலகம் இல்லை,' என்று அவர் உலகின் இயல்பை நன்கு அறிந்து காட்டுகின்றார். ஆனால், அதே வேளையில் அப்பொருட் செல்வத்தைப் பற்றியும், அதனால் பெறவேண்டிய பயன் பற்றியும் கூறும்போது,

> 'ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை
> வைத்திழக்கும் வன்க ணவர்?' (குறள். 228)

என்று வினவுகின்றார். பொருளால் பெற்ற இன்பம் மற்றவருக்குக் கொடுத்தலே என்பது அவர் கருத்து. செல்வம் பெற்றுச் சிறந்து வாழ்தலை அவர் தவறு என்று குறிக்கவில்லை; குறிக்கவுமாட்டார். செல்வத்தாலாகிய அரசனையும், அவன் செல்வத்தைப் பெருக்கவேண்டிய வழித்துறைகளையும் பற்றி வகுத்துக் கூறும் வள்ளுவனார், அச்செல்வத்தை வேண்டா வென்று கூறமாட்டார். ஆனால் அச் செல்வத்தால் உண்டாகிய பயனை நினைக்கும்போது அவர் திட்டமாக வழி வகுப்பார். பெற்றது கொண்டு தாமும் வாழ்ந்து, பிறரையும் வாழ்விப்பதே செல்வர் கடன்; அதை மறந்து, 'நமக்கே செல்வம்' என்று செம்மாப்பவராயின், அவரை 'வன்கண்ணவர்' என்று கூறவும் பின்அடைய மாட்டார். மற்றவர்களுக்குப் பயன்படாத செல்வத்தை நினைத்துத்தான் போலும்,

> 'அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்; பொருட்செல்வம்
> பூரியார் கண்ணு முள.' (குறள். 241)

என்று எடுத்துக் காட்டுகின்றார்! எனவே, பொருட் செல்வத்தின் பயன், தாமும் உண்டு, மற்றவரையும்—மற்றவற்றையும்—வாழ்விப்பதேயாகும்.

மற்றைய செல்வங்களைப் பற்றியெல்லாம் அவர் சிறப்பித்துக் கூறுகின்றார். கல்வியைச் செல்வமாக்குவார் அவர்.

'கேடில் விழுச்செல்வம் கல்வி; ஒருவர்க்கு
மாடல்ல மற்றை யவை.' (குறள். 400)

என்று அவர் கல்வியைக் கெடாத செல்வமாகக் கூறுகின்றார். அது எப்படிக் கெடக்கூடும்? தாம் இன்புறுவதை உலகு இன்புறக் காணலாகிய அந்த மெய்ந்நெறி வாழ்க்கை அளிக்கும் கல்வி இம்மையில் மட்டுமன்றி ஏழெழு பிறப்பிலும் கெடாத செல்வம் என்பதை,

'ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.' (குறள். 398)

என்று விளக்குகின்றார். இனி, கேள்வியைப் பற்றிக் கூறும் போது அதையே செல்வத்தின் தலைமை நிலையிலே வைத்துக் காட்டுகின்றார். எத்துணைக் கற்ற போதிலும் வழுக்கி விழும் மக்கள் உலகில் என்றுமே வாழ்கின்றார்கள். இன்றைக்கு உலகில் அதிகமாகப் படித்த நாடுகள்தாமே, உலகப் போராட்டங்களுக்கு வித்தூன்றிக் கொடுமையை விளைத்து வருகின்றன? ஆனால், வள்ளுவர் முறைப்படி அவர்தம் கல்வி யெல்லாம் கல்வியாகா. அன்றி, அவ்வாறு அவை கல்வி என்றே கொண்டாலும் அதனால் அவை பயன் பெறவில்லை. காரணம் என்ன? கேள்வி அறிவு இல்லாமையேதான். தாம் எவ்வளவு கற்றவராய் இருப்பினும் மற்றவர் கூறுவதைச் செவிமடுத்து, அவர்தம் சொற்படி ஆராய்ந்து நடத்தலே அறிவுடைமை. உலக அரங்கத்தே கல்வியில் சிறந்த நாடுகள், இந்திய நாடு போன்ற அறநெறி போற்றும் நாடுகளின் சொற்களைக் கேட்டு நடக்கத் தலைப்படின், உலகில் போரும் பிணக்கும் உண்டாகுமா? அதனாலேதான், உலகம் வாழ, உலகச் சமுதாயம் சீர்பெற, மக்கள் நலம் பெற்றோங்க, மற்றெல்லாச் செல்வத்திலும் கேள்விச் செல்வம் சிறந்தது என்கிறார்.

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.' (குறள். 411)

என்று இரு வகையில் வற்புறுத்திக் கூறுகின்றார். உலகத்தில் கூறப்படுகின்ற செல்வங்கள் அத்தனையினும் உலகத்தை ஒன்றாக்கவல்ல அறிஞர்தம் வாய்மொழியைக் கேட்பதாகிய கேள்விச் செல்வத்தினும் சிறந்த செல்வம் எங்ஙனம் அமையும்?

இனி, வள்ளுவர் காட்டும் காதல் வாழ்வு இன்பம் தருவது; எண்ண எண்ணப் புத்தம் புதிய கருத்துக்களையும், அவற்றில் உள்ள இன்பத்தையும், ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடிவரச் செய்வது. உள்ளக் களித்தல் காமத்துக்கு இயல்பு என்பதை அவரே,

> 'உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
> கள்ளுக்கு இல்; காமத்துக்கு உண்டு' (குறள், 1281)

என்று கூறுகின்றார். இவ்வாறு நினைத்து நினைத்து மகிழும் காதல் வாழ்வை, வள்ளுவர், நுணித்தறிந்து உலகுக்கு வழங்கு கின்றார். இரண்டொன்று கண்டு மேலே செல்வோம்.

காமத்தின் தன்மையை அவர் குறிப்பிடும்போது, 'மலரினும் மெல்லிது காமம்' என்று காட்டுவார். அந்த மென்மைத் தன்மைத்தாய காமம் கைகூடல் எல்லார்க்கும் எளிதன்று என்பதனை அதே குறளில் தொடர்ந்து, 'சிலர் அதன் செவ்வி தலைப்படுவார்,' என்றும் காட்டுகின்றார். அத்தகைய மென்மைத் தன்மை வாய்ந்த காமத்தைப் பலபல வகையில், இருபத்தைந்து அதிகாரங்களில் விளக்குகின்றார்.

இக் காதல் நோய் தோன்றி, வளர்ந்து சிறப்பதையும், அதன் ஏற்றத்தையும்,

> 'காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
> மாலை மலரும்இந் நோய்' (குறள், 1227)

என்று காட்டுகின்றார். மாலை நோய் காதலருக்கு இயல்பு தானே? அதை இவர் பொழுது கண்டு இரங்குதலில் பலபடப் பாரித்து உரைத்தல் அறிந்து இன்புறத்தக்கது.

'காதல் என்பது, கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றிக் கூடும் கூட்டம்,' என்று மேலே அகம் பற்றி அறியும்போது

கண்டோம். ஆனால், அந்தக் காதலும் இடையில் முரிந்தால் வாழ்வு சிறவாது என்பதை வள்ளுவர் நன்கு உணர்ந்துள்ளார். அப் பிரிவு இந்த ஒரு பிறப்பில் மட்டுமின்றி, எப்பிறவிலும் நேரலாகாது என்று அழகாகக் கூறுகின்றார். இன்னும் தலைவனும் தலைவியும் சிறுசிறு பிணக்குக் காரணமாக ஊடுதலும் கூடுதலும், அவர் காட்டும் காதல் வாழ்வில் ஏற்றம் பெற்றுச் சிறக்கின்றன. ஒரு தலைவன் தலைவியை நோக்கி, 'உன்னை இந்தப் பிறவியில் விட்டுப் பிரியேன்,' என்று சூளுரைக்கின்றான். அதைக் கேட்டுத் தலைவி மகிழத்தானே வேண்டும்? ஆனால், அதுதான் நடைபெறவில்லை. அதற்கு மாறாக, அவள் அழுதாளாம். ஏன்? 'இம்மையில் பிரியேன்' என்றதால், 'அடுத்த பிறவியில் பிரிந்து விடுவாரோ?' என்ற ஐயம், அவளை வாட்டியிருக்க வேண்டும். இதை வள்ளுவனார்,

'இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்நிறை நீர்கொண் டனள்.' (குறள். 1315)

என்று காட்டுகின்றார். ஆம்! காதல் வாழ்வு அதுதானே? கூடினர் பிரிவ தெங்கே? எப்படிப் பிரிய முடியும்? உயிரினத் தோற்றநாள் முதல் நாளை வரையில் ஆணையும் பெண்ணையும் பிரித்து வைக்க முடியும் என்று யாராவது கூறமுடியுமா? அதுவும் உள்ளத்தால் ஒன்றுபட்ட இருதலை புள்ளின் ஓருயிராகிய காதலரைப் பிரிப்பதென்பது இயலாத செயலன்றோ! அவ்வாறு பிரியின், அவர் இன்ப அன்பின் எல்லையே முடிவுறுமே! இவையெல்லாம் எண்ணித்தான் போலும் வள்ளுவர் காதலைத் தொடர்ந்து வரும் பிறவிகளுக்கும் கொண்டு செல்கின்றார்! அவர் காட்டிய வழியே காதல் சிறக்க என நாமும் வாழ்த்துவோம்.

மேலே கண்ட சில பொருள்கள் பற்றி மட்டுமன்றி, வள்ளுவர் உலக உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத அத்துணைப் பொருள்கள் பற்றியும், என்றென்றும் நிலைக்குமாறு உயர்ந்த கருத்துக்களை வற்புறுத்துகின்றார். வாழ்வு எப்படி அமைய வேண்டும் என்பதைத் தம் 1330 அருங் குறட்பாக் களிலும் விளக்கியுள்ளார். அவர் கூறியவாறு வையத்துள்

வாழ்வாங்கு வாழ்ந்தால், இவ்வுலகே வானுலகமாகிவிடும் என்பதையும், அந்த வானினும் மேம்பட்ட உலகத்தைப் பற்றிப் புலவர்கள் கூறுவது போன்று, என்றென்றும் வற்றாத இன்ப ஊற்றாகவே இவ்வுலகும் இயங்கும் என்பதையும், நன்கு எடுத்துக் காட்டுகின்றார். நமக்கும் அத்தகைய வாழ்வினைக் காட்டும் கவிதைகள்தாமே தேவை!

இவ் வள்ளுவர் குறள் பற்றி அறிஞர் பற்பலர் பலப்பல விதமான ஆராய்ச்சிகளை நாள்தோறும் எழுதிக் கொண்டே வருகின்றார்கள். தமிழர்தம் அகம், புறம் இரண்டையும் இவ்வளவு விரிவாக, எல்லாருக்கும் ஒப்ப, யாரும், என்றும், வள்ளுவர் போலக் கூறவில்லை என்பதை எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றனர். எனவே, நானும் அத்துறையில் அதிகம் செல்லாது இந்த அளவு நிறுத்திப் பிற கவிதைகளைக் காண லாம் என்று அமைகின்றேன். வாய்ப்புள்ளவர்கள் வள்ளுவர் பற்றி வரும் எல்லா நூல்களையும் பயிலுதல் நல்லதாகும். தமிழில் மட்டுமன்றி, ஆங்கிலம் முதலிய பிற மொழிகளிலும் இன்று குறள் பலப்பல பாராட்டுகளைப் பெற்றுச் சிறந் துள்ளதன் காரணம், அது வாழ்வை அடிப்படையாகக் கொண்டதே எனலாம்.

இதுகாறும் கூறியவற்றால், வள்ளுவர் குறட் பாக்களாகிய சிறந்த கவிதைகள் எப்படித் தமிழர்தம் அக வாழ்வையும், புற வாழ்வையும் விளக்கிக் காட்டுகின்றன என்பதை அறிந்தோம். அடுத்துக் காப்பியங்களைக் காணலாம்.

5. காப்பியங்கள்

காப்பியங்கள் என்ற உடனே நமக்கு ஐம்பெருங்காப்பியங்களே நினைவுக்கு வரும். அவை ஐந்து என்ற எண்ணிலே காட்டி உரைக்கப்பட்டாலும், உண்மையில் இன்று தமிழ் உலகில் உலவுவன மூன்று காப்பியங்களேயாகும். **சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி** என்ற மூன்றுமே இன்று வாழும் காப்பியங்கள். மற்றைய காப்பியங்கள் எனப்பட்ட **வளையா பதியும், குண்டல கேசியும்** வாழவில்லை எனலாம். எங்கோ சிற்சில பாடல்களே அவற்றிலிருந்து எடுத்தன என வெளியிடுகின்றனர். அவற்றின் கதைகள் மட்டும் ஓரளவு தமிழரிடையில் இருக்கின்றது. அந்தக் கதை அமைப்பைச் சரியென்று கொண்டு பார்ப்பின், அக் கதைப் போக்கு, மேற்கண்ட இலக்கியங்களின் போக்குக்குச் சற்று மாறுபட்டதாகக் காண்கின்றதோடு, ஒரே சமய நெறியைப் போற்றும் அளவில் நின்றுவிடுகின்றன. வாழ்வோடு தொடர்பு பெறாத கவிதைகளும் காப்பியங்களும் நெடுங்காலம் மக்களோடு உறவுகொண்டு வாழமாட்டா என நாம் மேலே கண்ட முடிவின்படி, ஒருவேளை இவை மறைந்து விட்டனவோ என்ற ஐயமும் உண்டாகின்றது. எப்படியாயினும், இன்று தமிழ் நாட்டில் பேரளவில் ஐம்பெருங்காப்பியங்கள் என்றாலும், உண்மையில் வாழ்வன மூன்று காப்பியங்களே யாகும். அவற்றுள்ளும் சிலப்பதிகாரம் மக்களிடைப் பயின்று வாழும் அளவுக்கு மற்றைய இரண்டும் வாழவில்லை என்றுதான் கூற வேண்டும். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. ஆனால், சிந்தாமணி தமிழ் நாட்டிலேயே பலருக்குத் தெரியாமல் வாழ்கின்றது. சிலப்பதிகாரம் என்ற பெயர் தெரியாவிட்டாலும், **'கோவலன் கதை'**

என்பது தமிழ் நாட்டில் வாழும் அத்தனை பேருக்கும்—படித்தவர் படியாதவர், உயர்ந்தோர் தாழ்ந்தோர் எல்லாருக்கும்—நன்கு தெரிந்த ஒன்று. அது பிற மொழிகளிலும் கதையாய் வழங்குகின்றது. அதே காலத்தில் அதை ஒட்டியே, 'மணிமேகலை மேல் உரைப்பொருள் முற்றிய சிலப்பதிகாரம்' என்றபடி தோன்றிய மணிமேகலை, தமிழ் இலக்கிய உலகிலும் சரி, பொது மக்கள் வாழ்விலும் சரி, அவ்வளவு சிறக்க இடம் பெறவில்லை என்பதை நாம் கூறவேண்டா. தமிழ்நாட்டு வரலாறே அதை எடுத்துக் காட்டுகின்றதே! அதைப்போன்றே மற்றொரு பேரிலக்கியமாகிய சீவகசிந்தாமணியும் அத்துணை விளக்கமாக நாட்டில் கால்கொள்ளவில்லை என்பது தேற்றம். அதற்குக் காரணம் என்ன? ஒரே காலத்தில், ஒத்த கல்வியும் பிற பண்பாடுகளும் பொருந்திய இரு பெரும் புலவர்களால் பாடப் பெற்ற, சிறந்த பாட்டுடைத் தலைவரைப் பெற்றன இரண்டும். முன்னது தாயையும், பின்னது சேயையும் தழுவியுள்ளன எனப் போற்றுமாறு அமைந்த காப்பியத்துள் ஒன்று ஏற்றம் பெற்று, இந்த மொழியில் மட்டுமன்றிப் பிறமொழிகளிலும் சென்று மக்கள் உள்ளங்களை மகிழ்விப்பானேன்? அதே வேளையில் மற்றொன்று பின்னடைந்து, பிறந்த நாட்டிலேயே பலரும் அறியாத வகையில் மங்கிக் கிடப்பானேன்? சிலர் அது அரசர் குடும்பத்தில் பிறந்தவர் இயற்றியதனால் அரசர் ஆணைவழிச் சிறந்திருக்கலாம் என்றும், மற்றது சாதாரணப் புலவர் பாடியது ஆனமையால், அத்துணைச் சிறப்புப் பெறவில்லை என்றும் கூறலாம். ஆனால், அக்கூற்றுச் சரியாகாது. அவர்களுக்குள் அன்று யாதொரு வேறுபாடும் இருந்ததாகத் தெரியவில்லை. அப்படியிருந்ததாகவே கொண்டாலும், அவ்வாறு ஆணை வழியும், அடக்குமுறை வழியும், பிற செல்வாக்குக்கள் வழியும் இலக்கியங்களை என்றென்றும் வாழவைக்க இயலாது. இன்றும் சிலர் எழுத்துக்கள் அவ்வாறு ஏற்றம் பெற்றிருப்பது போலத் தெரியினும், அவர்தம் பதவியோ, வாழ்வோ நீங்கியபின் நூல்களும் வீழ்ச்சியடைவதைக் காண்கின்றோம். இந்த நிலையிலேதான் அன்றும் மக்கள் வாழ்ந்தார்கள். ஏன்? இன்றைய நிலையிலும் சிறந்து வாழ்ந்தார்கள் என்றுகூடச்

சொல்லலாம். ஆகவே, இளங்கோவடிகள் அரசர் குலத் தோன்றல் என்ற ஒரு காரணத்துக்காக மட்டும் ஏற்றம் தந்து அவர் நூலைப் போற்றி, மற்றதைப் புறக்கணித்தார்கள் என்று கூற முடியாது. அன்றி, அவர்கள் அப்படிக் கூறியிருந்தாலும், இன்றைய இருபதாம் நூற்றாண்டில் வாழும் நாம் அவ்வாறு பாகுபடுத்தி உணரத் தலைப்படோம். எனினும், சிலம்பு வாழும் அத்துணைச் சிறப்பில் மேகலை வாழவில்லை. ஏன்? காரணம் ஒன்றுதான். மணியின் நூலிழைபோல, இந்நூல் முழுவதும் தொடர்ந்து காட்டப்பெறும் ஒரே காரணந்தான். அதுதான் அவை வாழ்வொடு பிணைந்துள்ள வகை பற்றியது. சிலப்பதி காரம் மக்கள் வாழ்வை விளக்கி, அவர்தம் வாழ்வொடு தொடர்பு கொண்டுள்ள அளவில் மணிமேகலை மக்கள் வாழ்வைப்பற்றிப் பாடவில்லை. அதனுடன் சிலப்பதிகாரம் மக்கள் வாழ்வின் அடிப்படையாகிய சமரசத்தைத் தன் அச்சாணியாகக் கொண்டு அசைபோட்டு நடைபெறுகின்றது. மணிமேகலையோ, ஒரே சமயத்தைச் சார்ந்ததாகி, அத்துடன் நில்லாமல், பிற சமயங்களைப் பழித்துரைக்கும் அளவுக்கு மக்கள் வாழ்க்கை நெறியிலிருந்து வேறுபட்டுச் சென்று விட்டது. சிந்தாமணியும் ஒரு சமயம் பற்றிய காரணத்தால் அத்துணைச் சிறக்கவில்லை என்று எண்ணத் தோன்றுகின்றது.

தமிழ்நாட்டில் சங்க காலத்திலும், அதற்கு முன்னும் சைவம், வைணவம், பௌத்தம், சமணம் போன்ற சமயங்கள் வாழ்ந்துள்ளன. ஆயினும், அவை தம்முள் வேறுபாடு காட்டாவகையில் ஒன்றிக் கலந்து வாழ்ந்தன. சமயநெறியால் ஒருவரோடொருவர் மாறுபட்டவரும் மனம் ஒத்து வேறுபாடு காணாராய், அவ் வேறுபாடுகள் பற்றிப் பேசாராய் வாழ்ந்து வந்தனர். ஏன்? வேறுபாடு இன்னதென்பதை அறியாமலே கூட அவர்கள் வாழ்ந்தார்கள் எனலாம். சிலப்பதிகாரம் பாடிய ஆசிரியர் இளங்கோவடிகள், சமண சமயத்தைச் சார்ந்தவர் என்பது ஆராய்ச்சியாளர் முடிவு. அச் சமயத்திலிருந்து கொண்டு, பிற சமயங்களை அவர் பழித்ததாக நூல் முழுதும் எங்கே தேடினும் குறிப்புக் கிடைக்கவில்லை; அன்றிப் பிற சமயங்களையெல்லாம்விடத் தம் சமயந்தான் உயர்ந்து நின்றது

என்பதைக் காட்டுதற்குங்கூட வழியில்லை. அதற்கு மாறாக, எடுத்துக்கொண்ட பாத்திரங்களுக்கு ஏற்ப, அவரவர் வழிபாடு களைப் பாடும்போது, 'அவ்வச் சமயத்தவரோ இவர்!' என்று பயில்வார் நினைக்கும் வண்ணம் அவர் மாறிவிடுகின்றார். நூல் முழுதும் அவர் சமண சமயத்தவரே என்று காட்டக்கூடப் போதிய ஆதாரம் இல்லை. ஆய்ச்சியர் குரவையில்,

'மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனர் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்துஆ ரணம்முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே?
நாராய ணாஎன்னு நாவென்ன நாவே?'

என்னும்போதும்,

'கரியவனைக் காணாத கண்என்ன கண்ணே?'

'திருமால்சீர் கேளாத செவிஎன்ன செவியே?'

என்னும்போதும் இவற்றைப் படிப்பவர் இவரை வைணவ அடியவராகவே யன்றோ காண்பர்? இப் பாடல்களைத் தனியாக ஆசிரியர் யாரென அறியாத ஒருவரிடம் பாடிக் காட்டினால், இப் பாடல்கள் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் உள்ளவை என்று திட்டமாகக் கூறும் அளவுக்கு அமைகின்றன. இதைப் போன்றே வேட்டுவ வரியிலும், குன்றக் குரவையிலும் அவரவர் தெய்வ வாழ்த்தை, அவரவர் மனநிலை அறிந்து பாடி, தம்மைச் சமணர் எனப் பிறர் உணரா வகையில் மறைத்து, தம் கொள்கையையோ, சமண நெறியையோ அதில் புகுத்தாது, நேரிய முறையில் செல்கின்றார். கவுந்தி அடிகள் வழிச் சமண சமய உண்மைகளும் விளக்கப் பெறுகின்றன. ஆசிரியர் பின்பு தம் தமையன் செங்குட்டுவனைப்பற்றிப் பேசும் காலத்திலே, சிவபெருமானுக்கு உரிய ஏற்றம் கொடுத்தும் பேசுகின்றார். அவர் காலத்தில் தமிழ்நாட்டில் வளர்ந்து சிறந்த அத்துணைச் சமய நெறிகளும் அவர் நூலில் பேசப்படு கின்றன. எனினும், அவற்றுள் ஒன்றையாவது தூக்கியோ, மற்றொன்றைத் தாழ்த்தியோ பேசக் காண் கிலோம். இதைப் போன்றே, அக்காலத்தில் தமிழ் நாட்டில் வாழ்ந்த பல மரபுகள் பற்றியும் அவர் பாடுகின்றார்

ஆனால், ஒன்றைப் பழித்து, மற்றதைப் பாராட்டும் பண்பாடு அவரிடம் காண இயலவில்லை. ஒன்றைச் சீராட்டிப் பேசுவதற்காக மற்றொன்றைக் குறைக்கத்தான் வேண்டும் என்னும் நியதி உண்டோ? இல்லையே! தாம் கூறவேண்டிய பொருள்பற்றி எத்துணைச் சிறப்பாக வேண்டுமானாலும் பேசலாம். ஆனால், அதற்காக மற்றொன்றைக் குறை கூறி, 'அதனினும் இது உயர்ந்தது' என்று கூற வேண்டா. அவ்வாறு கூறுவது வாழும் மனித சமுதாயத்தின் அடிப்படைக் கொள்கையும் அன்று. இன்று அவ்வாறு பேசுபவர் பலர் இருப்பினும், அவர் வாய்ச் சொல்லே பாராளும் சொல்லாய் அமைவதுபோலக் காணப்படினும், நீண்ட மனித வாழ்வின் வரலாற்றில் அவை யெல்லாம் நீர்க் கோல வாழ்வாகி அழியும். ஆனால், வேறுபாடு காணாது அனைத்தையும் தழுவிச் செல்லும் வாழ்க்கை நெறி என்றென்றும் வாழும். இந்த வகையிலேதான் மக்கள் வாழ்க்கையைத் தழுவிச் செல்கின்றார் இளங்கோவடிகள்.

ஆனால், சீத்தலைச் சாத்தனாரோ, சங்ககாலப் புலவராயினும், இளங்கோவடிகளுடன் நெருங்கிப் பழகியவராயினும் எப்படியோ அவர் உள்ளத்தில் சமயக் காழ்ப்பு தோன்றி விட்டது. அவர் சமயம் பௌத்தம் என்பதை நூலைப் பயில்பவர் அறிந்துகொள்வர். சிலப்பதிகாரம் கொண்டு இளங்கோவடிகளது சமயத்தைத் திட்டமாக அறிந்துகொள்ள இயலாது. ஆனால், அதே சமயத்தில் எழுந்த மணிமேகலையைக் கொண்டு, அதன் ஆசிரியர் சமயத்தை அறிந்துகொள்ள முடிகின்றது. அதனுடன் அவர் தம் சமயத்தை மட்டும் ஏத்திப் பாராட்டியிருந்தாலும் தீதில்லை. தேவையில்லாத ஒன்றைத் தாமே வலியப் புகுத்தி, சமயக் கணக்கர் தம் திறம் மணிமேகலையிடம் காட்டியதாக, ஒவ்வொரு சமயத்தின் கொள்கையைப் பற்றியும் கூறி, அவற்றிற்கு ஒவ்வொரு குற்றம் கற்பித்து, அனைத்துக்கும் மேலாகப் பௌத்த சமயந் தான் சிறந்தது என நிலைநிறுத்த முயல்கின்றார் அவர். நூலில் அவர் வெற்றி பெற்றாரோ இல்லையோ என்று நாம் கவலைப்பட வேண்டா. அவர்தம் நூல் தன் வாழ்வில் ஒருபடி தாழ்ந்து விட்டது என்பதை நாம் மறுக்கமுடியாது. தமிழ்நாட்டில் முதல்

முதல் சமயக் காழ்ப்பினை—வேறுபாட்டை—வெறுப்பை—ஊன்றிய நூல் மணிமேகலை என்பது அறிஞர் முடிவு. அந்த நிலையில் எப்படி இலக்கியம் ஓங்கும்? எவ்வுயிரும் ஒத்து நோக்கும் உயர்ந்த பண்பின் அடிப்படையிலிருந்து விலகிய எந்த நூலும் வாழ முடியாது என்ற முடிவை மேலே கண்டிருக்கிறோம். அந்த உண்மை இந்த நூலுக்கும் பொருந்து கின்றது. எனினும், இதில் உள்ள சில வாழ்க்கைத் தத்துவங் களை ஒட்டியும், இது மறைந்த மற்றவற்றைப் போலக் கெட்டொழியாது ஓரளவு உயிர் வாழ்ந்து வருகின்றது. இது வாழ்க்கை முறைக்கு ஆற்றும் தொண்டை உடன் காண்போம்.

சீவக சிந்தாமணி ஓர் ஒப்பற்ற வீரனைப்பற்றிப் பாடும் நூல். அதில் சமயக் காழ்ப்போ, வேறுபாடோ அதிகமில்லை. நல்ல வேளை! திருத்தக்க தேவர் பிற சமயக் கொள்கைகளை வலியப் புகுத்தி, அவற்றைக் குறை கூறவில்லை; சீவகன் மணங்களைத் தொடர்ந்து கூறி, இறுதியில் தம் சமய உண்மை யின் ஏற்றத்தை மட்டும் பாடிக் காவியத்தை முடிக்கின்றார். இதிலும் பல வாழக்கை உண்மைகள் பேசப்படுகின்றன. அவற்றையும் தொடர்ந்து காண்போம். இந்த மூன்று காப்பிய நூல்களைத் தவிர, எத்தனையோ காப்பியங்கள் அன்றுதொட்டு, நேற்றுவரை வந்துகொண்டே யிருக்கின்றன. ஐம்பெருங் காப்பியத்துள் மற்றைய வளையாபதி, குண்டலகேசி என்ற இரண்டும், ஐஞ்சிறு காப்பியங்களும் காலத்தால் பிந்தியவை யாம். அவற்றிற்குப்பின்—ஒன்பதாம் நூற்றாண்டுக்குப் பிறகு—எத்தனையோ காப்பியங்கள் உண்டாயின. பிற்காலத்திலும் பல காப்பியங்கள் எழுந்தன. அவற்றுள் பெரும்பாலன, ஒரு சமயச் சார்பு பற்றியே எழுந்தனவாகலின், இத்துணை நாள்கள் நெடிதுயிர்த்து வாழ முடியவில்லை; அவ்வச் சமயம் நாட்டில் வாழும் காலத்திலே வாழ்ந்து, வீழும் காலத்துத் தாமும் வீழ்ந்தன. மேலும், அவையெல்லாம் மக்களது சாதாரண வாழ்வோடு பொருந்தாது, வேறு எங்கோ தனிப் பாதையில் செல்வனவாய் அமைந்து விட்டமையின், மக்கள் வாழ்வில் இடம் பெறாது, மறைந்து ஒழிந்தன. அவற்றுள் ஒருசில

மட்டும் உயிர் வாழ்கின்றன. அவ்வாறு வாழ்வனவற்றுள் சேக்கிழார் பாடிய பெரிய புராணமும், கம்பரது இராமாயண மும் முதலிடம் பெறத்தக்கவை. இவற்றைப்பற்றிப் பின்னர் ஆராய்வோம். இங்கு மூன்று பெருங்காப்பியங்கள் மக்கள் வாழ்வோடு பிணைந்திருப்பதைக் காண்போம்.

காப்பியங்களுள் சிறந்ததாகிய சிலப்பதிகாரம் பெரு வாழ்வு நூலாகவே அமைகின்றது. தனி மனிதனுகிய கோவலனை யும் அவன் மனைவியாகிய கண்ணகியையும் சுற்றி வருகின்றது இக்கதை. இதை வெறுங் கற்பனைக் கதையென்று கொள்ள முடியாது. சில சம்பவங்கள் புலவர் வாக்கால் உயர்வு நவிற்சி யாகக் கூறப்பட்டிருப்பதாகக் கொள்ளினும், கதைப் போக்கு வாழ்வில் இடம் பெறத்தக்கதே. வணிகர் குலத்தே நல்ல செல் வக் குடும்பத்திலே பிறந்த கோவலன். தன் தகுதிக்கு ஏற்ற மங்கை நல்லாள் கண்ணகியை மணந்து, இல்லறம் நடத்து கின்முன். அவ்வில்லற வாழ்வின் ஏற்றத்தை முதலில் இளங்கோ வடிகள் காட்டித்தான் மேலே செல்லுகின்ருர். 'அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை,' என்ற வள்ளுவர் குறள் நெறிக்கு ஏற்ப, கோவலன் அவ்வில்லற வாழ்வையே மேற்கொண்டான். கோவலன் வாழ்வை நன்கு புரிந்து கொள்ளாத சிலர், அவன் கண்ணகியோடு வாழவே இல்லை என்றும், மணமான அன்றே பரத்தை வீட்டை நாடிச் சென்ருன் என்றும் கூறுவர். அது சிறிதும் பொருந்தாததாகும். அவன் கண்ணகிபால் கொண்ட காதற் சிறப்பினையும், அவள் தோற்றத்தையும் சிறப்பையும் கண்டும், அறிந்தும், உண்டும் மகிழ்ந்து போற்றிய விதத்தினை யும் மனையறம்படுத்த காதையில் இளங்கோவடிகள் நன்கு எடுத்துக் காட்டுகின்ருர். அவள் வாய்மொழியைக் கோவலன்,

> 'குழலும் யாழும் அமிழ்தும் குழைத்தநின்
> மழலைக் கிளவிக்கு மென்கிளி வருந்தின!'
>
> (மனையறம். 5?-59)

என்று போற்றும்போது, யார்தாம் அவர்தம் வாழ்வை வியவா திருக்க முடியும்? அவன் அவளைப் போற்றிய சிறப்பை யெல்லாம் தொகுத்து,

'மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறல் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வணிகன் பெருமட மகளே!
மலையிடைப் பிறவா மணியே என்கோ!
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ!
யாழிடைப் பிறவா இசையே என்கோ!
தாழிருங் கூந்தல் தையால் நின்னை!' (மனை. 73-80)

என்று எடுத்துக்காட்டி, அவன் வாழ்வை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றார் இளங்கோவடிகள். இத்தகைய இல்லறத்தில் வாழ்ந்த கோவலனைத்தான் மாதவியின் மையல் பிரிய வைத்தது. பின்னரும், அவன் மாதவியை விட்டுப் பிரிந்து, கண்ணகியுடன் கூடி மதுரை மாநகர் சென்று, அங்குத் தங்கும் ஒரு நாள் வாழ்க்கையில், அவர் இருவரும் இருந்த சிறப்பினை யும், அவள் குவளை உண் கண்கள் குய்ப்புகை கமழக் கணவனுக்கு உணவாக்கியிட்ட சிறப்பினையும் அறிகின்றோம்.

இறுதியாகக் கோவலன் கண்ணகியை விட்டு மதுரைத் தெரு வீதிக்குச் செல்லுமுன், இருவர் கூற்றாகவும் இளங்கோ வடிகள் காட்டுவது இல்லற வாழ்வைப் பற்றிய ஒரு விளக்க மாகவே அமைகின்றது.

'இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்!
சிறுமுது குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்!
(கொலைக்களம். 67-68)

என்று அவன் கழிந்ததற்கு இரங்கும் காட்சி, வாழ்வுக் காட்சியன்றி வேறு என்ன? அவன் வாழ்வில் இறுதி எல்லையில் இவ்வாறு அந்தப் பிறவியில் அவன் செய்த பிழைகளை யெல்லாம் எண்ணவைத்து, அவனை உலகிலிருந்து பிரிக்கின்றார் புலவர். இதுதான் வாழ்க்கை நெறி. தவறு செய்யும் மனிதன் அன்றாடம் தான் செய்த தவற்றினை அந்த நாளின் இறுதியில், படுக்கையில் உட்கார்ந்துகொண்டு சிந்திப்பானாயின், அவன் தான் செய்த அப் பிழைகளுக்காக வருந்துவதோடு, அடுத்த நாள் அப் பிழைகளைச் செய்யாதிருக்க வழி காணவும்

முற்படுவான். அதுபோன்றே, பிறவியின் எல்லையில் தன் தவறுகளை எல்லாம் எண்ணி வருந்தின், மறு பிறப்பில் அத் தவறுகளை இழைக்கமாட்டான் என்பார்கள், மறு பிறவியில் நம்பிக்கை உடையவர்கள். இச் சிலப்பதிகாரமே பிறவிகள் பல உண்டென்பதை உணர்த்தி, அவையும் ஊழ்வினையின் வழி உயர்ந்தும் தாழ்ந்தும் நிற்கும் என்பதைக் காட்டிச் செல்லும் நூலன்றோ? ஆகவே, அவனை அறியாமலே அவன் இறுதி நாளில் அந்தப் பிறவியில் செய்த பிழைகளை எண்ணி வருந்துகின்றான். அதே நிலையிலேதான், கண்ணகியும் வருந்துகிறாள். அவளுக்கு வாழ்வின் இன்பமாகிய இல்லறம் ஏமாற்றமடைய வேண்டிய ஒன்றாயமைந்துவிட்டது. இல்லற வாழ்வு என்பது தலைவனோடு கூடி இன்பம் பெறுதல்ஒன்றிலே மட்டும் அமைந்து விடவில்லை. அப்படி அந்த ஒன்றிலே மட்டும் வாழ்வைக் கழித்தால் அது தமக்கே இறுதியை விளைவிக்கும் என்பதைச் சிந்தாமணி ஆசிரியர், சச்சந்தனை முன்னிறுத்தி நமக்குக் காட்டுகின்றார். ஆகவே, பிறர்க்காகவும் இல்லறம் அமைகின்றது. செல்விருந்து ஓம்பி, வருவிருந்து பார்க்கும் வாழ்வு இல்லறவாழ்வு. இவற்றை யெல்லாம் அமைத்து, கணவனைப் பிரிந்தமையின் அனைத்தை யும் இழந்த கண்ணகி வாயிலாக,

> 'அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
> துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
> விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை'

(கொலைக் 71-73)

என்று காட்டி இவ்வாழ்வின் நிலையினை விளக்குகின்றார்.

புற வாழ்வைப்பற்றி வஞ்சிக்காண்டம் விரித்துரைக்கின்றது. போர், வீரம், நிலையாமை என்பன அப்பகுதியில் பேசப் படுகின்றன. சேரன் செங்குட்டுவன், பத்தினிக்குப் படிமம் எடுப்பதற்கென இமயம் நோக்கிச் சென்று, அங்கே தமிழர சரைப் பழித்துரைத்த கனகவிசயரை வெற்றி கொண்டு வந்த வரலாற்றை விளக்கிக் காட்டும் பகுதியில், தமிழர்தம் போர் முறையும் பிறவும் பேசப்படுகின்றன. இறுதியில் விழாவாற்று முன் தன் வீரத்தை இகழ்ந்த தமிழ் வேந்தரின்மேல் செங்குட்டு

வன் படையெடுக்க நினைக்குங்கால் அங்கிருந்த, மாடல மறையோன் காஞ்சியென்னும் நிலையாமையை உணர்த்தி, அவனை மறவழியிலிருந்து அறவழிக்குக் கொண்டு வருகின்றான்.

நூல் முழுவதும் பல்வேறு வாழ்க்கை முறைகள் விளங்குகின்றன. தமிழ்நாட்டு மூவேந்தரையும் பிணைத்துச் செல்லும் இக் காப்பியம், தமிழ்நாட்டுப் பண்டைய நாகரிகம், பண்பாடு அனைத்தையுமே ஒருமுகமாக விளக்குகிறது எனலாம். புகார் என்னும் காவிரிப்பூம்பட்டினத்தின் ஏற்றத்தையும், மதுரை மாநகரின் சிறப்பையும், வஞ்சி நாட்டு மலை வளத்தையும் அவ்வந்நிலத்தும் நகரங்களிலும் வாழும் மக்கள் நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் அனைத்தையும் இந்நூலில் காணலாம். எல்லாவற்றினும் மேலாக, தமிழ் மன்னர்தம் அறவாழ்வை இந்நூல் விளக்குகின்றது. நூலை எழுதிய இளங்கோவடிகள் மூன்று உண்மைகளை விளக்குவதற்காகத் தான் இந்த நூலை எழுதினதாகக் காட்டுகிறார்.

> 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற் றுவதும்
> உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
> ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டும் என்பதும்
> சூழ்வினைச் சிலம்பு காரண மாக
> சிலப்பதி காரம் என்னும் பெயரால்
> நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்.'
>
> (பதிகம். 55-60)

என்றுதானே கூறி நூலைத் தொடங்குகின்றார்? எனவே, அறநெறி முதலாகக் கொள்ளவேண்டிய அரச வாழ்வை அவர் நமக்கு விளக்குகின்றார். பாண்டியன் நெடுஞ்செழியன் அறியாது தவறிழைத்தான்; கோவலனைக் கொலை செய்வித்தான்; ஆனால், பின்பு கண்ணகி உணர்த்தத் தான் தவறிழைத்ததை உணர்ந்தான்! உடனே அதுபற்றி ஆராய்ச்சி செய்யவில்லை; தான் செய்ததுதான் சரி என்றும் வாதாடவில்லை; தான் இழைத்த தவறு மற்ற மன்னர்தம் செவிப்படுமுன் அடிப்பாரும் வற்புறுத்துவாரும் ஆணை செய்வாரும் இன்றித் தானே அந்த அரசு கட்டிலில் வீழ்ந்து உயிர் துறந்தான்.

'யானோ அரசன்! யானே கள்வன்!
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதற் பிழைத்தது! கெடுகஎன் ஆயுள்!'
(வழக்கு. 75-77)

என்று அரசு கட்டிலில் வீழ்ந்து உயிர் துறந்து வளைந்த செங்கோலை நிமிர்த்தி வைத்தான். அருகிலிருந்த பாண்டிமாதேவி, 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்' என்று வீழ்ந்து, கணவனுடன் மாய்ந்து கற்பரசியானாள். இவ்வாறு வாழ்வின் உண்மைகளையெல்லாம் உள்ளடக்கி, உணர்த்தும் சிலப்பதிகாரம் என்னும் இக் காப்பியம் ஒரு வாழ்விலக்கியந் தானே? யாதொரு வேறுபாடுமற்ற சமுதாயத்தை அமைக்கும் பண்பாட்டின் அடி ஒற்றிச் செல்லும் இக்காவியம் என்றும் வாழும் என்பது உறுதி.

இனி, அடுத்து மணிமேகலை மேலே கண்டபடி சமயக் காழ்ப்பைக் வளர்த்தாலும், இன்றளவும் வாழ்வதற்குக் காரணம், அது காட்டும் சில வாழ்க்கைத் தத்துவங்கள்தாம். மணிமேகலை புத்த சமயத்தை விளக்கும் துறவு நூல் என்றாலும், இல்லற வாழ்வின் ஏற்றமும் அதில் பேசப்படுகின்றது. அதனுடன் மக்கள் வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப் பெறும் உணவுதான் அக் காப்பியத்தின் உயிர்நாடி. உணவின் அடிப்படையிலேதான் அக்காப்பியமே உருவாகிறது. மணிமேகலை கையில் உள்ள அமுதசுரபியின் வரலாறே நூல் முழுவதிலும் சுற்றி வட்டமிடுகின்றது. 'உண்டி முதற்றே உணவின் பிண்டம்' என்றபடி, அழியாது வாழ உதவும் உணவை முதலாவதாக அமைத்துப் பாடின், எந்தக் கவிதைதான் உயிர் வாழாது? அதிலும், அந்த உணவைத் தனக்கென வைத்துக்கொள்ளாது, எல்லோருக்கும் வாரி வழங்கும் வகையில் அமையின், அந்நூல் வாழாது போகுமா? உலகத்தில் மழையின்றேல் உண்டாகும் கேடுகளையெல்லாம் விளக்கி, அக்கேட்டின் இடையில், பழுமரம் தோன்றினாற்போல அமுதசுரபி தோன்றி மக்களுக்கு எத்துணை இன்பம் உண்டாகிற்று என்பதைக் காட்டும்போது மகிழ்ச்சி பிறக்கிறதன்றோ! 'நாடு வறங்கூரினும் இவ்வோடு வறங்

கூராது', என்று படிக்கும்போது, 'அத்தகைய அமுத சுரபி ஒன்று இன்று இருக்கலாகாதா!' என்று எண்ணுபவர் பலர் உண்டே! எனவே, இந்தச் சோற்றின் இன்றியமையாமையே மணிமேகலையை வாழ வைக்கின்றது. இது நிற்க.

அதை உபயோகிப்பதன் மூலம், தன் தாய்க் கதையாம் சிலம்பினை ஒத்து அதுவும் கற்பு நெறியைக் காட்டுகின்றது. காய சண்டிகை என்னும் கந்தருவப் பெண்ணின் மூலம் ஆதிரையின் கற்பை ஆசிரியர் சாத்தனுர் எடுத்துக் காட்டுகின்முர். அவள் மணிமேகலைக்குச் சோறிட்டாள். ஆனுல், ஆசிரியர் அதை வெறுஞ்சோறு என்று கூறவில்லை. கூறியிருந்தால், ஒருவேளை கவிதை சிறந்திராது; ஏன்? வாழ்ந்துமிராது. அதை 'ஆருயிர் மருந்து' என்கின்முர். உணவு, உயிர் அனைத்துக்கும் மருந்தாய் அமைந்து, அவ்வுயிர் நெடிது வாழ வழி காணும் ஒன்றல்லவா!

'பாரக மடங்கலும் பசிப்பிணி அறுகென
ஆதிரை யிட்டனள் ஆருயிர் மருந்து.'

என்கின்முர் அவர். ஆம். அவள் வாய் மூடிச் சோறு படைக்கவில்லை. அவ்வாறு தான் சோறிடுவதால் உலகம் முழுதும் பசிப்பிணி நீங்கவேண்டும் என்பது அவள் ஆசை. அந்த ஆசை நிறைவேறுகின்றது. மணிமேகலை அவ்வமுதசுரபியைக் கையில் கொண்டு பஞ்சம் உண்டாகும் இடத்திற்கெல்லாம் விரைந்து சென்று, பசிப்பிணியைப் போக்கினுள் என்று காண்கின்ருேம். ஆகவே, ஆதிரையின் செயலால் அவனி வாழ்ந்தது.

சோற்றினைச் சாத்தனுர் ஆருயிர் மருந்து என்று வழங்குகின்முர். காரணம் என்ன? 'சோற்ருல் உயிரா வளர்கின்றது? உடல்தானே வளர்கின்றது?' என்று வாதிப்பவரும் சிலர் உளர். ஆனுல், உயிர் வளர்கின்றது என்பதை மேலே நாம் கண்டோம். உடலொடு பொருந்திய உயிரின் வளர்ச்சியையே ஆங்கிலத்தில் 'Evolution' என்கின்றனர். எனவே, உடல் வளர்வதைப் போன்றே, உயிரும் வளர்ச்சியுறுவது என்பது ஆராய்ச்சியாளர் கண்ட உண்மை. ஆனுல், உடல் நிலை கெட்டோ, மாறியோ,

அழிந்தோ போகக் கூடியது. உயிர் யாதொரு மாற்றமும் பெறாது நிற்பது. நிலையற்ற மாற்றங்கள் பல நிகழினும், உண்மையில் உயிர் மாற்றமற்ற ஒன்று என்பதுதான் உண்மை. திருமூலர் கூறியபடி 'உடம்பார் அழியில் உயிரார் அழிவர்'. இதில் 'அழிவர்' என்பது நிலை கெடுவதைத்தான் குறிக்கும். உயிர் உடம்போடு கூடிய வழியில்தானே அது பல்வேறு துறையில் பழகி வளர முடிகின்றது? ஆனால், இரண்டும் பிரியின் நிலையற்று, இடமறியா வகையில் எங்கோ இருக்கின்றன. எனவேதான், உடலொடு கூடிய வழியே உயிரும் வளர்கின்றது என்பது புலனாகின்றது. இவற்றையெல்லாம் எண்ணித்தான் போலும் சாத்தனார், 'ஆருயிர் மருந்து' என்று அதை உயிரின் மேல் ஏற்றிச் சொல்கின்றார்!

இன்னும் மக்கள் மனத் தத்துவத்தைச் சாத்தனார் நன்கு சுட்டிக் காட்டுகின்றார். அதற்கு அவர் சமய நெறிப்படி முன்னைப் பிறவிகள் காரணம் என்பார். துறவில் நிலைத்த கொள்கையுடைய மணிமேகலை, உதயகுமரனைக் கண்ட பொழுதுமட்டும் உணர்வு தடுமாறுகிறாள். இந்த உள்ள நிலையைச் சாத்தனார் விளக்கி, இதற்குக் காரணம், அவள் முன்னைப் பிறவியில் அவனுடைய மனைவியாய் இருந்ததே என்பதையும் காட்டுகின்றார். உள்ளத்தால் செயல்கள் நிகழும் என்பதை அவன் இறந்தபின் மணிமேகலை உள்ள நெகிழ்வின் மூலம் காட்டுகின்றார். அறநெறி பிறழா அரசர்கள் வாழ்ந்து நின்ற வரலாறுகளைக் காட்டி, அவற்றின் மூலம் நாட்டில் கொடுங்கோன்மையே இல்லையாகச் செய்கின்றார் அவர்.

ஆதிரையின் கணவனாகிய சாதுவனை நாகர் நாட்டிற்குக் கொண்டு வந்து, நாகர் முன் நிறுத்தி, அவர்களுக்கு அறிவுறுத்துவது போன்று, கள் உண்ணலையும் புலால் உண்ணலையும் தவிர்க்கவேண்டும் என்று அவர் காட்டுவது நலம் சிறந்ததாகும். இங்குள்ள மனிதருட் சிலர் அத்தகைய இழிநிலையில் இருந்தாலும், அவர்களை முன் நிறுத்திப் பேசின் தவறும் மாறுபாடுகளும் உண்டாகும் என்று கருதியே, அவ்வாறு நாகரை முன்னிறுத்தி நல்ல நீதிகளைக் கூறுகின்றார் போலும்!

'பெண்டிரும் உண்டியும் இன்றெனில் மக்கட்கு,
உண்டோ ஞாலத்து உறுபொருள்?'

என்று கேட்கும் நாகர் தலைவனை நோக்கிச் சாதுவன் மக்கள் வாழ்வு அந்த இரண்டினோடு அமைந்து விடவில்லை என்றும், அதற்கும் மேலான பண்பாட்டிலும் ஒழுக்க நெறியிலுமே அவ் வாழ்வு அமைந்துள்ள தென்பதையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றான். மேலும், உலகில் குற்றமற்றவராக வாழ வேண்டி, மக்கள் நீக்க வேண்டிய பத்துக் குற்றங்களையும், அவை தோன்றும் இடங்களையும் காட்டி விளக்கி, அற வாழ்வைப் புலவர் அமைக்கும் முறை சாலச் சிறந்தது. மனிதனிடம் 'மனம் வாக்குக் காயம்' என்ற மூன்றும் தொழிற்படுகின்றன. இம் மூன்றின் வழியும் மனிதன் நல்லதும் செய்கின்றான்; அல்லதும் செய்கின்றான். அல்லதை நீக்கி, நல்லதைச் செய்ய வேண்டுமென்பதே அறிஞர் உலகுக்கு உணர்த்தும் அன்பு நெறி. திருவள்ளுவர் ஒவ்வோர் அதிகாரத் திலும் தனித்தனி இன்னின்னவற்றை நீக்க வேண்டுமெனவும், இன்னின்னவற்றைக் கொள்ள வேண்டுமெனவும், ஒவ்வொன்றைப் பற்றியும் நன்கு விளக்கிப் பேசுகின்றார். சாத்தனார் அவ்வள்ளுவர் குறட் கருத்தையெல்லாம் அடக்கி, இம் மனம், மொழி, மெய் ஆகிய மூன்றிலும் வரும் குற்றங்கள் இன்னின்ன என்று எடுத்துக் காட்டி, அவற்றை நீக்குபவரே முற்றிய பண்பாடு பெற்றவர் என்று குறிக்கின்றார். மனிதன் மனிதனாக வாழ வேண்டுமாயின், இவற்றை நீக்கி, எல்லோரும் வாழ வேண்டும் என்ற மெய்ம்மை நெறியறிந்து, அதன்படி தானும் வாழ்ந்து, மற்றவரையும் வாழவைக்க வேண்டும் என்பதே முடிந்த முடிபாகும்.

'கொலையே களவே காமத் தீவிழை
உலையா உடம்பில் தோன்றுவ மூன்றும்,
பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லில் தோன்றுவ நான்கும்,
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சிஎன்று

உள்ளம் தன்னில் உதிப்பன மூன்றும்
பத்தும் குற்றம்."

என்று சாத்தனுர் அவற்றை விளக்கிக் கூறும்போது, நாம் நம் மனத்தில் அவற்றை எண்ணி ஆராய்ந்து அக் குற்றங்கள் இல்லாமல் வாழ வேண்டும் என்று முடிவு செய்ய நினைக்கிரேம். இன்னும் இவ்வாறு பல அறிநெறிகளையும் வாழ்க்கை வகைகளையும் காட்டும் திறன் சிறந்ததாகும்.

காஞ்சி என்னும் நிலேயாமையைப் பற்றியும் சாத்தனுர் குறிக்கின்முர். மணிமேகலே உதயகுமாரனுக்குக் கூறுவதாக நரை மூதாட்டி ஒருத்தியைக் காட்டி உரைக்கும் உரைகள் மனிதனைத் துறவு மனப்பான்மைக்கு இழுத்துச் செல்லுவன வாகும். நூலே துறவை உணர்த்த வந்த ஒன்ருதலின், துறவினைப் பற்றி அதிகமாய்ப் பேசுகின்முர். வாழ்விடை மக்கள் பலர் விரும்பாத அத்துறவை உணர்த்துவதும் அது சிறந்து வாழாமைக்கு ஒரு காரணமாகும். எனவே, சிலசில மாறுபாட்டுக் கொள்கைகளை விளக்கும் நூலாயினும், மக்கள் வாழ்வின் அடிப்படைக் கொள்கைகளையும் ஆங்காங்கே நன்கு விளக்கிக் கொண்டே செல்கின்றமை ஒன்றே இதுவரை மணிமேகலையை வாழ வைக்கின்றது.

இனி, மூன்ருவதாகிய சீவக சிந்தாமணியை நோக்குவோம். சீவக சிந்தாமணி காதற் காப்பியம் என்பர் சிலர். சிலர் துறவு நூல் என்பர். இப்படி எல்லாப் பொருளும் அதில் பொதிந்து கிடக்கின்றன; எனினும், அதை ஒரு சமய நூல் என்றே சொல்லலாம். சமண சமயத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நூல் அது. சமண முனிவராகிய திருத்தக்க தேவர் நல்ல முறையில் அந்நூலே எழுதியிருக்கின்முர். விருத்தப்பாவில் முதன்முதல் தமிழில் தோன்றிய பெருங்காப்பியம் அதுதான். தம் சமய உண்மையை நூலின் தொடக்கம் முதல், இறுதி வரையில் இடையிடையே காட்டிச் செல்கிருர் இறுதியாகிய முத்தி இலம்பகத்திலே தம் சமய உண்மைகளை நன்கு விளக்கி அறியாதாரும் அறிந்துகொள்ளும்படி செய்துள்

ளனர். எனினும், நூலின் தலைவனாகிய சீவகன் எண்மரை மணம் செய்துகொண்டு, நுகரும் காம விளையாடல்களை யெல்லாம் விளக்கும்போது, 'இது ஒரு காம நூலோ!' எனத் தோன்றும். அதைப் போன்றே போர் முதலியவற்றை விளக்கியும் நன்கு பாராட்டுகின்றார். மக்கள் வாழ்வின் தேவைகளையெல்லாம் அவர் ஆங்காங்குக் காட்டி, அந்த வாழ்வைச் செம்மையாக்கும் முறைகளையும் காட்டுகின்றார். திருக்குறள் போன்ற அற நூல்களின் சாரங்களையெல்லாம் வடித்தெடுத்து, பல பாத்திரங்கள் வாயிலாக அவர் விளக்கும் போது 'இஃது ஓர் அறநூலோ!' என்று ஐயமுறுமாறு நம்மை அழைத்துச் செல்கின்றது. இத்தகைய ஒரு சிறந்த காவியம் பலராலும் ஒருசேரப் போற்றப்படாததற்குக் காரணம், அது துறவை வற்புறுத்துவதுடன், ஒரு சமயம் பற்றியே விளக்கங்கள் கொண்டுள்ளதே யாம். சமயத்துறையில் புகாத ஒரு காவிய மாக அந்நூல் இருந்திருப்பின், அதுவே சிறந்த காப்பியமாய் வாழும் என்பதில் ஐயமில்லை. எனினும், அந்நூல் சமயக் காழ்ப்பை வளர்க்காமையே அதை இந்த அளவுக்கு வாழ வைக்கிறது எனலாம்.

சிந்தாமணியில் அகம் புறம் இரண்டுமே பேசப்படுகின்றன. அகவாழ்வைக் கூறுமுன், நாடு எவ்வாறு சிறக்க வேண்டு மென்பதைத் தேவர் விளக்குகின்றார்; அந்த நாட்டு நலம் காட்டும் நெறியிலேயே அக வாழ்வையும் உடன் காட்டு கின்றார்.

'கண்எனக் குவளையைக் கட்டல் ஓம்பினார்;
வண்ண வாள் முகமென மரையின் உட்புகார்;
பண்எழுத்து இயல்படப் பரப்பி இட்டனர்;
தண்இயல் உழவர்தம் தன்மை இன்னதே' (51)

என்று அவர் வயல் உழவர்தம் வாழ்க்கை முறையிலேயே அகவாழ்வை அழகுபடுத்திக் காட்டும் திறன் அறிந்து மகிழத்தக்கதன்றோ! இது போன்றே புற வாழ்வின் நிலை யாமையே அக வாழ்வின் இறுதி என்பதைச் சச்சந்தன்

வாக்கில் வைத்துக் காட்டுகிறார். தம்மை மறந்து, தரணியை மறந்து, இன்ப வாழ்விலேயே திளைத்து நின்ற சச்சந்தனும் விசையையும் கட்டியங்காரன் சூழ்ச்சியை அறியாராய் மயங்கி நின்று, பின் அவன் இவர்களை வெல்லும் திறம் பெற்றதை உணர்கின்றார்கள். உணர்ந்து என்ன செய்ய முடியும்? நிலையாமையை எண்ணி ஆறுதல் அடைவதைத் தவிர, வேறு வழியில்லை. அதைச் சச்சந்தன் வாயிலாகவே காட்டுகின்றார் தேவர்.

'சாதலும் பிறத்தல் தானும்
தன்வினைப் பயத்த வாகும்;
ஆதலும் அழிவும் எல்லாம்
அவைபொருட்கு இயல்பு கண்டாய்
நோதலும் பிரிவும் எல்லாம்
நுண்ணுணர் வின்மை யன்றே?
பேதை! நீ பெரிதும் பொல்லாய்
பெய்வளைத் தோளி!' (269)

என்று சச்சந்தன் விரிவாகக் கூறுகிறான். அதுவே உலகத்தை நோக்கி நிலையாமையை வற்புறுத்துவதாய் அமைகின்றது. இந்த இறுதி நிலைக்குமுன், அவன் கெடாது வாழலாம் என்று அமைச்சர் வாயிலாகப் பலப்பல அறிவுரைகளைக் கூறுகின்றார் தேவர். அவை அவனுக்கு மட்டும் தனிப்பட்டனவாக அமையாது, தரணி வாழ் மக்களுக்கே இன்றியமையாது வேண்டப்படும் அறவாயில்களாய் அமைகின்றன. தமிழ் நாட்டு வாழ்க்கை முறையைக் கூறிய தொல்காப்பியர்.

'காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.'
(தொல். பொருள்: 190)

எனக் காட்டுகின்றார். இந்த அடிப்படையிலேயே சிந்தாமணி செல்கிறது என்பது ஓரளவு பொருத்தமுடையதே யாகும்.

காதலியரைக் கட்டித் தழுவிப் பேசும் காதல் கவிதைகளைச் சீவகன் வாயிலாகப் படித்த நாம், பின் அவன் துறவு நிலையில் அவர்களை நோக்கிக் கூறுவனவற்றைப் படிப்பின், 'இரு கொள்கைகளும் ஒருவர் உள்ளத்திலிருந்தா பிறந்தன?' என்று எண்ணத் தோன்றும். நூல்வழிப் புகுந்து சீவகன் காதற் பாடல்களையும், அவனுடைய துறவுப் பாடல்களையும் ஒருசேர ஆராய்வார்க்கு இவ்வுண்மை புலப்படும். இன்னும், அரச நெறி, சாதாரண மக்கள் வாழ்வு வாணிபவாழ்வு, பிறவாழ்க்கை இயல்புகள் அனைத்தையும் நூலுள் காணலாம். எனவே, ஒரு சமயம் பற்றிய நூலாயினும், சிந்தாமணி மக்கள் வாழ்வைப் பல கோணங்களில் கண்டு உலகுக்குத் தருகின்ற காரணத்தால், இன்றும் வாழும் இலக்கியமாகிவிட்டது. இம் மூன்று பெருங் காப்பியங்கள் காட்டும் பல்வேறு வாழ்க்கை நுணுக்கங்களையும், அவை பற்றிய விளக்கங்களையும் தனித்தனி ஆராயின், ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெரு நூலாக அமையும். எனினும், இங்கு இந்த அளவோடு நிறுத்தி, வாய்ப்புள்ளவர் அந்நூல்கள் வழி ஆய்ந்து 'உண்மை காண்க' என்று கூறி, மேலே செல்லு கின்றேன்.

இதுவரை கூறியவற்றான், பெருங் காப்பியங்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி என்ற மூன்றும் மக்கள் வாழ்வோடு தொடர்புகொண்டு எவ்வாறு வாழ் கின்றன என்பதை அறிந்தோம்.

6. சமய இலக்கியங்கள்

மணிமேகலையும் சிந்தாமணியும் பௌத்தத்தையும் சமணத்தையும் போற்றிய வகையினை ஓரளவு கண்டோம். அந்தக் காலத்திலிருந்தே சமயங்களைப் போற்றி வளர்க்கும் கவிதைகள் நாட்டில் வளரலாயின. சங்க காலத்தில் ஓரளவு சமய உணர்ச்சி இருந்ததேயாயினும், அக்காலத்தில் சமயப் போட்டியும், சமயப் பூசலும் நாட்டில் இல்லை. முருகன், சிவன், திருமால் போன்ற தெய்வங்களின் பெயர்களும், அவர்தம் திறன், செயல் முதலியனவும் சங்ககால இலக்கியங்களில் பேசப்படுகின்றன. என்றாலும், அவை தம்முள் மாறுபட்டவைகளாகவோ, வேறுபாட்டுக் கொள்கைகளை வளர்ப்பனவாகவோ அமையவில்லை. சங்க காலத்திலே தமிழ் நாட்டில் சைவமும், வைணவமும், சமணமும், பௌத்தமும் இருந்தனவாயினும், அவை தம்முள் மாறுபட்டுப் போராற்றவில்லை. ஒன்றை ஒன்று பழிக்கும் இலக்கியங்களும் எழவில்லை. அவற்றுக்குள் போட்டி மனப்பான்மையோ, பொறாமை மனப்பான்மையோ எழவில்லை. ஆனால், மணிமேகலை காலத்துக்குப் பிறகு இன்றுவரை நாட்டில் சமயக் காழ்ப்பும், கசப்பும் வளர்ந்து கொண்டேதான் வருகின்றன.

உலகில் பல்வேறு சமயங்கள் இன்று வாழ்கின்றன. சமயத்தைத் தோற்றுவித்து வளர்த்த பெரியாரும் பல்லோர். 'கடவுள் இல்லை. உலகப் பொருள்களே சதம்,' என்று போற்றும் நாத்திகம் கலந்த உலகாயத மதம் முதல், சைவ வைணவ சமயங்கள் ஈறாகப் பலப்பல சமயங்கள் தமிழ் நாட்டில் தோன்றியும் குடிபுகுந்தும் வளர்ந்து வருகின்றன. பிற நாட்டுச் சமயங்களும் இன்று இந்நாட்டில் வாழ்கின்றன.

உலகில் வாழும் எல்லாச் சமயங்களும் மக்கள் நல்வாழ்வுக்காக ஏற்பட்டனவே. சமயக் கொள்கைகளும் அவற்றின் அடிப்படைகளும் ஏறக்குறைய ஒரே தன்மையனவாய் இருப்பதைத்தான் காண்கின்றோம். 'உலகமெல்லாம் வாழ வேண்டும்,' என்பதே சமயங்களின் அடிப்படை. எவ்வுயிரும் தம் உயிர்போல எண்ணிப் போற்ற வேண்டும் என்பதே அவற்றின் அறிவுரை. உலகில் எந்த மூலைமுடுக்கில் வாழ்கின்ற மெய்ச்சமயமும் இந்த உண்மையைத்தான் வலியுறுத்தும். சமய உண்மைகளை ஆராய்ந்து பார்ப்பவர்கள், இந்த உண்மையைக் கண்டு எழுதியுள்ளார்கள். சமயப் பேராறுகள் நற்கொள்கை யென்னும் ஒரே கடலிலேதான் சென்று சேர்கின்றன. எந்தச் சமய நெறியும் 'மாற்ருனுக்குத் துன்பம் செய்' என்று கூறுவது எங்கும் காண முடியாத ஒன்று. ஆயினும், இன்று உலகிலே வாழ்கின்ற சமயங்களின் போக்குகளைக் காணின். 'இவையும் வாழ வேண்டுமா!' என்ற ஐய உணர்வு பிறக்கின்றது. சமயத்தால் உலகை வாழவைப்ப தன்றி, சமயத்தால் உலகையே நடுங்கச் செய்யும் பெரும்போர்கள் உண்டாகியிருக்கின்றன. இடைக்காலத்தில் உண்டான சிலுவைப் போர்களும் (Crusades), இன்றையை இந்தியா இரண்டு துண்டானதும், சமயவெறி காரணத்தால் அல்லவோ? 'அன்பால் உலகை அமைக்க வேண்டும்,' என்ற ஏசுவின் பொன்மொழியை ஏட்டில் படித்து, ஆலயங்களில் காலம் தவருது வழிபாடாற்றும் அக் கிறிஸ்தவ சமயத்தார் வாழும் மேலை நாட்டிலேதான் ஒரு தலைமுறையில் மூன்றுபோர்கள் நடக்க வழியேற்படுகின்றது. அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் அணு ஆயுதம் முதலியனவும் அங்கேதான் செய்யப் பெறுகின்றன. அன்பு கூறிப் போற்றும் அல்லாவின் சமயத்தின் பேரிலேதான் அண்மையிலும் நம் நாட்டின் சில பகுதிகளில் ஆயிரக்கணக்கான கொலைகள் நடைபெற்றன. இன்று மட்டுமல்லாது, தமிழ்நாட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பும் எத்தனையோ சமயப் போராட்டங்கள் நடைபெற்றன. 'தென்னுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறை,' என்ற சமரச உணர்வு தோன்றி வளர்ந்த நாட்டிலேதான் சமணர்

கழுவேற்றங்களும், பிற கொடுமைகளும் நிகழ்ந்தன என அறிகின்றோம்.

சங்க காலத்திலே தமிழ்நாட்டில் சிறக்க வாழ்ந்த சமயங் கள், சைவம் வைணவம் என்ற இரண்டுமேயாம். பௌத்தமும் சமணமும் பிற நாடுகளிலிருந்து தமிழ்நாட்டில் குடியேறின. எனினும், இவையும் வரவேற்கப்பட்டுப் போற்றப்பட்டன. இந்த நான்கு பெருஞ்சமயங்களும் சிறுசிறு கிளைச் சமயங்களும் தம்முள் மாறுபடாது சங்க காலத்தில் வாழ்ந்து வந்தன. என்றாலும், எப்படியோ ஒன்றினைக் காட்டிலும் மற்றது மேலோங்க வேண்டும் என்று விரும்பிற்று. அவ் விருப்பின் பயனாகவே, நாட்டில் பலப்பல இன்னல்கள் தோன்றலாயின. சங்ககாலத்தை அடுத்துப் பௌத்தமும், அதை அடுத்துச் சமணமும், ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சைவ வைணவ சமயங்களும் தலை எடுத்து ஒன்றை மற்றொன்று தாழ்த்தி வளரலாயின. ஏழாம் நூற்றாண்டில் மேலோங்கிய சைவமும் வைணவமும் இன்றுவரை நாட்டில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

தமிழ் நாட்டில் ஒரு காலத்தில் புத்த சமயம் மிகச் சிறந்த நிலையில் இருந்தது. என்றாலும், அதுபற்றிய இலக்கியங்கள் அதிகம் நாட்டில் இல்லை. மணிமேகலை ஒன்றுதான் பௌத்த இலக்கியம் என்று சொல்லக்கூடிய அளவில் வாழ்கின்றது. வேறு பௌத்த இலக்கியங்கள் அக்காலத்தில் தோன்றி வாழ்ந்தனவோ, நாமறியோம். எனினும், மணிமேகலை அத்துணை வேகமாக முதல் முதல் பிற சமயங்களின் திறம் கண்ட காரணமே அச்சமய இலக்கியங்களை மேலும் வளரவொட்டாமல் செய்துவிட்டது என்பர் ஆராய்ச்சி யாளர்.

அடுத்து சமணம், தமிழ் நாட்டில் நன்கு வேரூன்றி வளர்ந்த சமயம். இன்றைக்கும் தமிழ்நாட்டில் பெரிய அளவில் சமணர்கள் வாழாவிடினும், மூலை முடுக்குகளிலெல்லாம் சமண சமயம் வாழ்ந்து வருகின்றது. அச் சமயத்துக்குப் பெருந்

கோயில்களும் சிறந்துள்ளன. சமண சமயத்தவர்களும் நாட்டில் ஆங்காங்கே வாழ்ந்து வருகின்றார்கள். அச் சமயத்திலே நல்ல ஒழுக்கசீலராய்த் துறவியர் பலர் வாழ்ந்துள்ளனர். அவர்கள் தமிழ் இலக்கிய இலக்கணத் துறைகளுக்குச் செய்துள்ள தொண்டு அளவிடற்கரிது. அவர்தம் கவிதை களிலே பல இன்றும் வாழ்கின்றன. அவர் செய்த காப்பியங் களுள் சில மறைந்து போயினும், சில இன்றும் வாழ்கின்றன. சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் சமணசமயத்தவர் என்பர். கவுந்தி அடிகள் வாயிலாக இவர் அச் சமய உண்மைகள் பலவற்றை விளக்குகின்றார். சிந்தாமணியின் சமயம் பற்றிய பாடல்கள் நாடறிந்தவை. இப் பெருங்காப்பியங்களைத் தவிர, மற்ற இரண்டு பெருங்காப்பியங்களாகிய வளையாபதியும் குண்டலகேசியும் ஐஞ்சிறு காப்பியங்களும் சமண சமயத் தலைவர்கள் எழுதியனவே என்பர். இவை தவிர்த்து எத்தனையோ சிறு காப்பியங்களை அவர்கள் எழுதியுள்ளார்கள். இலக்கணத் துறையிலோ, நன்னூலும், காரிகையும், சின்னூலாம் நேமிநாதமும், பிறவும் சமண சமயத்தவர் இயற்றியவைதாம். இவற்றைத்தவிர வேறு இசை நூல்களும் பிறவும் சமண சமயத்தவர் எழுதினரென அறிகின்றோம். இடைக்காலத்திலேயும் எத்தனையோ சமண நூல்கள் வெளி வந்துள்ளன. எனினும், ஏழாம் நூற்றாண்டுக்குப் பிறகு சமணம் தமிழ் நாட்டில் குடத்துள் விளக்கெனவே அமைதி பெற்றுவிட்டது எனலாம்.

காலத்தால் மிகப் பிந்தி வந்த மகமதியமும் கிறிஸ்தவ முங்கூடத் தத்தம் சமய வளர்ச்சிபற்றிப் புத்தம் புதிய கவிதை களை இயற்றியுள்ளன. மேலை நாட்டிலிருந்து சமயம் பரப்ப வந்த ஐரோப்பியப் பாதிரிமாருட் சிலர், தமிழில் சிறந்த புலமை பெற்றதோடமையாது, தமிழில் இனிய செய்யுள் இயற்றும் திறனும் பெற்றிருந்தனர், பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் இயற்றிய தமிழ்க் கவிதைகள் தமிழ்நாட்டுப் பெரும் புலவர் பலராலும் பாராட்டப் பெறுகின்றன. இன்னும் கிறிஸ்தவப் பெருமக்கள் எழுதிய இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய சரிதம், கித்தேரி அம்மானை போன்ற காவியக்

கவிதைகள் தமிழ் நிலைக்கும், நடைக்கும் ஏற்ற வகையில் அழகாய் அமைந்து செல்கின்றன. அவற்றைப் போன்றே மகமதிய சமயத்திலும் மிக அதிகமாக இல்லாவிடினும், ஓரளவு சமயப் பாடல்களும் சமய வரலாற்றுக் கவிதைகளும் இருக்கின்றன. இவை அனைத்தும் இன்று தமிழ்நாட்டின் கவிதை உலகில் இடம் பெற்றுத்தான் வாழ்கின்றன.

பிற இலக்கியங்களைப் போன்று சமயக் கவிதை அதிகமாகச் சிறந்தோங்கவில்லை என்பது உண்மைதான். எனினும் ஒரு சில, காலத்தை வென்று, இன்றும் வாழ்கின்றன. சமயக் காழ்ப்பை வளர்த்து, பிற சமயங்களைக் குறை கூறி, மக்களின் அமைதி வாழ்வை வளர்ப்பதற்குப் பதிலாக, ஆரவாரக் கொடுமை வாழ்வை வளர்க்கும் இலக்கியங்கள் சமயச் சார்புடையவை எனினும், அவை நிச்சயம் அழிந்தொழிதல் தானே முறை? அந்த வகையில் எல்லாச் சமயங்களிலும் இடைக்காலத்தில் தோன்றிய எத்தனையோ பாடல்கள், இன்று மாய்ந்தொழிந்தன. அன்பை வளர்க்கவேண்டிய சமயங்கள், ஆரவாரத்தை வளர்க்க முற்படின், அவை எப்படி வாழும்? ஒரு சில இலக்கியங்கள் அவ்வச் சமயத்தாரால் மட்டும் ஓரளவு போற்றி வளர்க்கப்படுகின்றன. அச்சமயங்களிலும் எல்லோரும் எல்லா இலக்கியங்களையும் பயில்கின்றனர் என்று சொல்ல முடியாது. மிகச் சில சமய இலக்கியங்களே பிற சமயத்தவரும் பாராட்டக்கூடிய அளவில் அமைகின்றன. அவையும் தத்தம் சமயநெறிகளை மற்றவர்வழி வற்புறுத்தும் இடங்களில் வளர்ச்சியில் குறைவுற்றே செல்கின்றன. சமயத்தை வளர்த்தாலும், அன்றிப் பிற சமயங்களில் உள்ள குறைகளைக் காட்டினாலும், ஒருசில சமய இலக்கியங்கள் காலத்தால் அழியாது வாழ்வதற்கு ஒரே காரணம், அவையும் மக்கள் வாழ்வுக்கு வேண்டிய சிற்சில உண்மைகளை உணர்த்துவது தான்.

சமயமே தன்னலமற்ற வாழ்வில் தோன்றிய ஒன்று. வாழ்வைத் தனக்கென ஆக்கிக்கொள்ளாது, உலகில் உள்ள அனைவரையும்—அனைத்துயிரையும்—ஒன்றாக அணைத்துச்

செல்வதே சமய வாழ்வு. 'எவ்வுயிரும் பராபரன் சன்னிதிய தாகும்,' என்று இறைவனைப் பாடும் அடியவர்கள், உயிர் எல்லாம் கடவுளின் தோற்றமென்றும், அதனால் எந்த உயிருக்கும் தீங்கு செய்யாதிருப்பதே சமய வாழ்வு என்றும் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார்கள். 'அன்பே கடவுள்.' என்ற தொடரும் அதனால் எழுந்ததன்றோ? யார் யார் அன்பு காட்டு கிறார்களோ, அவர்கள் சமயவாழ்வினை அல்லது கடவுள் நெறியினைப் போற்றி வளர்ப்பவராகின்றார்கள். அவர்கள் பாடிய பாடல்கள், காணாத கடவுட் காட்சியை மக்களோடு பிணைக்கும் அன்புப் பாடல்களே யாகும். திருமூலர் தாம் கண்ட கடவுளாகிய சிவனைப்பற்றி,

'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்;
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்;
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே.'

என்று தமது திருமந்திரத்தில் கூறுகின்றார். எனவே, அவர் சமயம் அன்பின் வழிப்பட்ட ஒன்று என்பது நன்கு விளங்கு கின்றதன்றோ! கடவுளை மனித வாழ்வோடு பிணைக்காது. எங்கோ தனித்து வைக்க விரும்பும் சமயங்களெல்லாம் நாட்டில் வாழா. இவ்வாறு கடவுள் நெறியை மக்கள் வாழ்வோடு பிணைத்து, அவர் வாழ்வுக்கு ஏற்றதே சமயம் என்ற கொள்கையில் நிற்பனவே என்றென்றும் வாழ்வனவாகும். மக்களுக்குத் தொண்டு செய்வதுதான் கடவுள் நெறி என்பதை எல்லாச் சமயங்களும் ஒரு மனமாய் ஏற்றுக் கொள்கின்றன.

'நடமாடும் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடும் கோயில் பரமர்க்குஅங்கு ஆகும்.'

என்ற வாக்கு இந்த உண்மையை வலியுறுத்துவதாகும். உண்மையை விளக்க ஒவ்வொரு சமயத்திலும் எத்தனையோ கதைகள் உள்ளன. அவைபற்றிக் கவிதைகளும் காவியங் களும் நாட்டில் உள்ளன. சமயநெறி என்பது மக்கள் வாழ் வோடு தொடர்பு படாத ஒன்று என்று யாரும் நினைக்கலாகாது

என்பதை, அவ்வப்போது அடியவர் பலர் கவிதைகள் மூலம் காட்டிக்கொண்டு வருகின்றனர். சமயப் பாடல் என்ருல் ஆண்டவனைப் போற்றும் அளவிலேயே அமைந்த ஒன்று என்ற எண்ணம் கூடாது என்பதையும் கவிஞர் உணர்ந்து தத்தம் பாடல்களில் வெளியிட்டுள்ளனர். ஆண்டவனைப் போற்றுவதே மக்கள் வாழ்வைச் செம்மைப்படுத்துவதற்காகத்தான் என்பதை அவர்கள் பலப்பல பாடல்களில் பாடியுள்ளார்கள். அண்மையில் வாழ்ந்து மறைந்த இராமலிங்க அடிகளாரின் சமரசப் பாடல்கள் இந்த உண்மையை விளக்குகின்றன. வெறுங் கோயில் வழிபாடும், பூவும் நீரும் கொண்டு செய்யும் பூசனையுமே கடவுள் நெறி என்று எந்த மெய்ச்சமயத் தலைவரும் கூறி முடிவு கட்டி அமையாது, அதற்கு நேர் மாருக, உலக மக்களிடத்து அன்பு செலுத்துவதும், மனமாசு அற்று வாழ்வதுமே கடவுள் நெறி என்று பாடியுள்ளார்கள். திருவள்ளுவர் கூறியபடி, எத்துணை ஆரவாரம் இருப்பினும், மனம் மாசுற்றதாய் இருப்பின், அவர்தம் வாழ்வால் பயனில்லை என்பதை அப்பர், சமய நெறியில்,

'குறிக ளும்அடை யாளமும் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நீர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியி லீர் மனம் என்கொல் புகாததே?'

என்று எடுத்துக் காட்டுகின்றனர். "மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்தறன்; ஆகுல நீர பிற," என்னும் வள்ளுவர் வாக்கை இது நினைப்பூட்டுகின்றதன்ருே! இவ்வாறே சமயம் வளர்த்த பெரியோர்கள் மக்கள் வாழ்வை மனத்திற்கொண்டு, மற்றவருக்கு உதவி, மனமாசு நீங்கி வாழ வேண்டுவதே சமய அடிப்படையின் நோக்கம் என்று பாடியுள்ளார்கள்.

வாழ்வில் எல்லாரும் இன்புற்றிருக்கும் வாழ்வைத்தான் அறிஞர் விரும்புவர். அந்த விருப்பதைத் தாயுமானவர்,

'எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேருென்று அறியேன் பராபரமே!'

என்ற வேண்டுகோளாக விடுக்கின்றார். இவ்வாறு உலகில் வாழும் உயிரினம் அனைத்தும் இன்பத்தில் திளைப்பதே சமயம். அதுதான் சமய வாழ்வு. அந்தச் சமய வாழ்வுக்குப் பல வழிகளைச் சமயம் வளர்த்த அறிஞர்கள் காட்டுகின்றார்கள்.

'வைத்த பொருள் நமக்கு ஆம்என்று சொல்லி
மனத் தடைத்துச்
சித்தம் ஒருக்கிச் சிவய நமவென் றிரு.'

என்ற கூற்று, உலகில் பொருளாதார ஏற்றத் தாழ்வைப் போக்குவதன்றோ! பொருள் ஆசை கொண்டு, 'பெற்றது போதும்,' என்று அமைதியுறாது, மேலும் மேலும் உழன்று பொருள் பெருக்கும் தனி மனிதனால் அந் நாட்டுச் சமூகம் சீர் கெட்டுக் குலைகின்றது. பெற்ற எல்லையும் செல்வமும் போதா என்று வெறி கொண்டு பிற நாடுகளையும் வென்று, தம் ஆதிக்கத்துக்குக் கொண்டு வர வேண்டும் என்ற உணர்வால், உலக அமைதியே கெட, அவ்வாறு உண்டான அமைதி யின்மையால் விளையும் போர் வழியில் நாடுகள் ஒரு சேர நாசமுறுகின்றன. அந்த நாசத்தையெல்லாம் தடுத்து, உலக உயிர்கள் அமைதிபெறக் காட்டிய மேலே கண்ட, மன நிறைவுற்ற வழியில் வாழ்வதுதான் சமய வாழ்க்கை.

இன்னு சமயக் கவிதைகள் மக்கள் வாழ வேண்டிய வீர வாழ்வையும் வற்புறுத்துகின்றன. அஞ்சாத பொருளுக் கெல்லாம் அஞ்சி அஞ்சிச் சாகும் மனித இனத்தின் இடையில் வாழும் நமக்கு வீரம் ஓரளவு மறைந்த பொருளாகிவிட்டாலும், தமிழ்க் கவிதை உலகில் அன்றுதொட்டு இன்றுவரை அது வாழ்ந்தேதான் வருகின்றது. சங்க காலத்தில் அரசர்க்கும் அஞ்சாது, அறம் உரைத்த புலவர் வரிசையில் ஒரு சிலரை மேலே கண்டோம். அதைப் போன்றே சமயத் துறையிலும் யாருக்கும் அஞ்சாது தாம் ஒழுகிய மெய்ந்நெறியிலே செல்பவரையும் காணல் வேண்டும். நம் நாட்டில் மட்டுமன்றி, எந்நாட்டிலும் சமயம் வளர்த்த தலைவர்கள், தங்கள் நாட்டு மன்னருக்கோ, மற்றவருக்கோ முடி வணங்கினார்கள் என்று கூற

முடியாது. இங்கே அப்பரும் மணிமொழியாரும் வாழ்ந்த வரலாறுகள் அந்த நெறியை நமக்கு விளக்குகின்றன.

தமிழ்நாட்டிலே சிறந்த ஆதிக்கம் செலுத்திய மன்னருள் ஒருவனாக **மகேந்திரப் பல்லவன்** காஞ்சியில் ஏழாம் நூற்றாண்டில் ஆட்சி செய்தான். அவன் கீழே சமயத் தலைவராயிருந்தவர் தாம் **அப்பர்.** ஆயினும், அவர் அவனை விட்டு நீங்கித் தாம் மெய்யாக கண்ட சமயநெறியில் வாழுங்காலத்து, நெறியல்லா நெறி செல்லத் தம்மை அரசன் அழைத்ததாகக் கருதிய காலத்து, அவர் அவனுக்கு அஞ்சவில்லை. அவன் அனுப்பிய ஆள்களிடம், 'நாமார்க்கும் குடியல்லோம்! என்ற வீர வார்த்தைகளை வீசினார்.

> **'பாராண்டு பகடுஏறி வருவார் சொல்லும்**
> **பணிகேட்கக் கடவமோ பரிசற் றோமே.'**

என்றும்,

> **'நாவலந்தீ வகத்தினுக்கு நாத ரான**
> **காவலரே ஏவி விடுத்தா ரேனும்**
> **கடவோ மல்லோம்.'**

என்றும் அவர் யார்க்கும் அஞ்சாது வீறு பெற்றுப் பேசும் நிலை எண்ணத்தக்கது. மற்றோரிடத்தில் மதம் பிடித்த யானையைக் கண்டும் மதி மருண்டு ஓடாது, 'அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை.' என்று வீரம் காட்டி நின்று, யானையை வென்றார் என்றும் காண்கின்றோம். பிற சமயத்திலும் இயேசுவும் பிறரும், அவ்வந் நாட்டு மன்னர்கள் தீங்கிழைக்க நினைத்த காலத்தில், அவர்களுக்குத் தலைதாழ்த்தாது நிமிர்ந்து அஞ்சா வாழ்விலேயே வாழ்ந் தார்கள் என்பதை அவர்தம் வரலாறுகள் விளக்குகின்றன. மற்றொரு சமயத் தலைவராகிய **மாணிக்கவாசகரும்** இந்தக் கொள்கையை வற்புறுத்துகின்றார். 'யாம் யார்க்கும் குடியல்லோம்! யாதும் அஞ்சோம்!' என்று எதற்கும் அஞ்சாத வீர மொழி அவர்தம் வாயில் வருகின்றது. சைவ சமய வழியில் நின்ற நாயன்மாரைக் குறிக்கும்போது சேக்கிழார்,

'ஈர அன்பினர் யாதும் குறைவிலர்
வீரம் எம்மால் விளம்பும் தகையதோ?'

என்று அடியவர்தம் வாழ்வை வீர வாழ்வாகவே குறிக்கின்றார். 'எது வரினும் வருக; அலது எது போயினும் போக.' என்று கொடுமைக்குத் தலை வணங்காமல் வாய்மை வழிச் செல்லும் நல்லவராலேதான் நானிலம் நலம் பெறும் என்பது கண்கூடு. ஆங்கிலேயர் செய்த கொடுமைகளுக்கு அஞ்சித் தலை வணங்கி அண்ணல் காந்தி நின்றிருப்பாராயின், இந்நாடு நலம் பெற்று இருக்குமா? அது போன்றே மற்றத் தலைவர்களும் கொடுமைக்குத் தலைவணங்காராய் இருந்து, உரிமையை நிலை நாட்டினதை அரசியல் வாழ்வில் கண்டோம். சாதாரண வாழ்விலும் இதைத்தான் மக்கள் மேற்கொள்ள வேண்டுமென அறிஞர் விரும்புகின்றனர். பொல்லாங்குக்கு அடிமையாகாது உண்மைக்குத் தலைவணங்கி நிற்றலே வாழ்வாகும். எதிர்ப்புக் கொடியதாயினும், அதை எதிர்த்துச் சாவதே மேல். அன்றித் தலை வணங்கி வாழ நினைத்தால், மனித சமுதாயமே—ஏன்?—உயிர் இனமே நிலை கெட்டு ஒழியும். அதைக் கண்ணாரக் காணும் இருபதாம் நூற்றாண்டு நாகரிகத்தின் இடையிலே தான் நாம் வாழ்கின்றோம். இந்த உண்மையைத்தான் சமயம் பற்றிய கவிதைகள் நமக்கு வற்புறுத்துகின்றன.

தமிழ் நாட்டில் இச்சமயக் கவிதைகளின் வழியேதான் தம் வாழ்க்கை அனைத்தையும் புகுத்தி நின்றனர் கவிஞர். சமயத்தைப் பற்றியே கவலைப்படாத ஒரு காலம் தமிழ் நாட்டில் நெடுநாளைக்கு முன்னே இருந்ததுண்டு. எனினும், இடைக்காலத்தில் சமயமன்றி வேறு வாழ்க்கை இல்லை என்று கூறக்கூடிய அளவுக்குச் சமயம் மக்கள் வாழ்வில் இடம் பெற்றது. ஒருவன் சமயத்தைச் சேராது வாழ்வானாயின், அவனை மக்கள் வெறுக்கத் தலைப்பட்டார்கள். அத்தகைய இடைக்காலத்தில் எல்லாப் பொருளையும் சமயத்துள் அடக்கியே பேசினர். நாம் மேலே உலகத் தோற்றத்திலும் உயிர்த் தோற்றத்திலும் காட்டிய பல மேற்கோள்கள் சமயக் கவிதைகளிலிருந்து எடுத்தனவே. சமூக வளர்ச்சிக்கான மேலே

கண்ட பல கருத்துக்களும் சமயக் கவிதைகளைச் சேர்ந்தனவே யாம். இவ்வாறு எல்லாவற்றையும் சமயத்தின்மேல் ஏற்றிக்கண்ட காரணத்தால், தமிழ்க்கவிதை உலகில் இன்று சமயப் பாடலே அதிக இடத்தைப் பெற்றுள்ளது.

உலகில் பிற நாடுகளைக் காட்டிலும் சமயம் பற்றிய கவிதைகள் தமிழ் நாட்டிலேதான் அதிகம் உண்டு. சமயம் மக்கள் வாழ்வோடு பிணைந்துவிட்டது. இந்த உண்மையை உணர்ந்த நிலையில் சமயத் தலைவர்கள் தங்கள் கவிதைகளை வாழ்வோடு பிணைத்தே காட்டினார்கள். நாட்டில் சமய வெறியும் காழ்ப்பும் உண்டான காலத்திலே மற்றச் சமயங்களைப் பழித்துப் பாடியும் தம் சமயத்தைப் பாராட்டிப் போற்றியும் வீண் தொல்லையை நாட்டில் வளர்த்து வந்தனர் சிலர். ஆயினும், அது போன்றே விரோத மனப்பான்மையை வளர்க்கும் பாடல்கள் கால வெள்ளத்தில் அழிந்து கேட்பாரற்றுக் கிடக்க, சமயத்தை வாழ்வொடு பிணைத்த பாடல்கள் அனைத்தும் கால வெள்ளத்தை எதிர்த்து வாழ்கின்றன. எனினும், நாகரிகம் சிறந்ததெனக் கூறிக் கொள்ளும் இந்த இருபதாம் நூற்றாண்டிற்கூட, சமயம் குறுகிய மனப்பான்மையாளரின் கைப்பாவையாய் இருக்கின்ற காரணத்தால்—ஒரு சமய நூல்களை மற்றவர்கள் படிப்பது தவறு என்ற மனப்பான்மையால்—பிற சமயங்களில் உள்ள நல்ல கருத்துக்களையும் அறிய முடியாது, பொருள் பொதிந்த கவிதைகளை அனுபவிக்க முடியாது, மக்கள் வாளாகழிகின்றார்கள். பிற்காலத்தில் வந்த தாயுமானார் போன்ற சமயத் தலைவர்கள் இந்த வாழ்க்கை உண்மைகளை யெல்லாம் நன்கு வெளியிட்டிருக்கின்றார்கள்.

சங்ககாலத்தே கவிதை வாழ்க்கையைப் பற்றி நின்றது. அதில் சமயக் கருத்துக்கள் இங்கொன்றும் அங்கொன்றும் இடம் பெற்றிருந்தன. பத்தாம் நூற்றாண்டுவரை சமய இலக்கியம் நாட்டில் வளர்ந்தது. அக் கவிதைகள் சமயத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தன. அவற்றுள் வாழ்க்கை பற்றிய கருத்துக்கள் இங்கொன்றும் அங்கொன்றும் இடம் பெற்றுச்

சிறந்தன. ஆனால், பிற்காலத்தில் சமயம் வேறு, வாழ்க்கை வேறு என்று எண்ணக்கூடிய அளவிற்குச் சமயப்பாடல்கள் தனிப் பாதையில் செல்லலாயின. அதனால், அவை வளர்ச்சி பெறவில்லை. தமிழர் வாழ்வில், அவர் வாழ்வு தொடங்கிய நாள் தொட்டுச் சமயம் இடம் பெற்றிருந்ததெனினும், அதை என்றும் ஒரு தன்மைத்தாக மக்கள் போற்றவில்லை என்பது தெளிவு. எப்படியும் முற்காலத்தில் சமயக்கவிதைகள் ஓரளவு மக்கள் வாழ்வொடு தொடர்பு கொண்டு எழுந்தமையினாலேதான் அவை பிற சமய வேறுபாட்டுக்கும் மாறு பாட்டுக்கும் இடையிலும் இன்றளவும் வாழ்கின்றன எனலாம். அத்தகைய சமயக் கவிதைகள் வாழ்வொடு பிணைந்தவை. அவை வாழும் என்ற அளவோடு இதை நிறுத்திக்கொள்ளலாம்.

இது வரை கூறியவற்றால், தமிழ் நாட்டில் வாழ்ந்த சமயங்கள் எவை எவை என்பதும், அவற்றின் கவிதைகள் பல மாயச் சில வாழக் காரணம் இது என்பதும், சமயம் வாழ்வோடு எவ்வாறு பின்னப் பெற்றுள்ளதென்பதும், அவ்வாறு பின்னிப் பிணைந்த கவிதைகளே இன்றும் வாழ்கின்றன என்பதும் அறிந்தோம்.

7. கம்பரும் சேக்கிழாரும்

இடைக்கால இலக்கியங்களிலே பலப்பல காலத்தால் கொள்ளப்பட்டும் தள்ளப்பட்டும் நிற்கின்றன. கவிதைத் தொகுப்பின் காவியங்கள் பல அந்த இடைக்காலத்தில் தோன்றலாயின. அக்காலத்தில் தமிழ்நாட்டு மக்களையும் வாழ்க்கையையும் விளக்கும் காவியங்களுடன், பிற மொழியிலேயிருந்து மொழிபெயர்க்கும் காவியங்களும் பல தோன்றலாயின. அரசர் மூலமும் பிற ஆணையாளர் வழியும் சங்ககாலத்துக்குப் பின் தமிழ்நாட்டில் வடமொழி தலைதூக்கி ஓங்கலாயிற்று. சிலகாலம் தமிழ்நாட்டில் வடமொழி பயின்றால்தான் சிறந்த புலவன் ஆகலாம் என்றும் அன்றேல் அவன் கல்வியால் சிறப்பில்லை என்றும் கருதும் அளவுக்குக் காலம் மாறி நின்றது. அக்காலத்தில் தமிழினும் வடமொழியே நாட்டில் ஆதிக்கம் செலுத்திற்று எனலாம். என்றாலும், அரசரும் பிற ஆணையாளரும் வடமொழியை உயர்நிலைக்குக் கொண்டுவர நினைத்த போதிலும், சாதாரண மக்கள் தங்கள் வாழ்வுக்குப் புறம்பான அம்மொழியைப் போற்றி வளர்க்க விரும்பவில்லை. அந்தப் பொதுமக்களது எண்ணமும் செயலுமே இன்றுவரை இரு மொழிகளையும் வேறுபடுத்திக் காட்டுகின்றன. கடவுளைப் பாடின அடியவர்கள், 'ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்,' என்றும், 'ஆரியமும் தீந்தமிழும் ஆயினான் காண்,' என்றும், 'இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர்,' என்றும் பாடி, இரண்டையும் தமிழ்மக்கள் இடத்தில்—தமிழ் வாழ்வின் இடையில்—கலக்கும் வகையில் அமைத்த போதிலும், பொது மக்கள் மட்டும் தம் வாழ்வில் அம்மொழியை அதிகமாக ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. அதனாலேயே, தமிழ் இன்றும் தனித்தியங்கும் தன்மை பெற்றுள்ளது.

தமிழ்நாட்டு அண்டையில் வாழும், தமிழின் சேய் மொழிகளே என்று கூறக்கூடியவாகிய நலம் வாய்ந்த கன்னடமும், தெலுங்கும், மலையாளமும் இன்று தாய்மொழியிலிருந்து நெடுந்தூரம் பிரிந்து சென்றுவிட்டன. அதற்குக் காரணம், அவற்றில் வடமொழி ஆட்சி அதிகமாக உள்ளமையேயாம். எத்தனையோ சொற்களும், அமைப்புக்களும்—ஏன்?—இலக்கண வரம்புகளுங்கூட வடமொழியில் உள்ளன போன்று அம்மொழிகளில் இடம்பெற்றுள்ளன. அதனால், அவை அனைத்தும் வடமொழித் தொடர்பை வளர்த்துக் கொண்டன. எனினும், தமிழ்மொழி அந்த அளவுக்குச் செல்லவில்லை. ஓரளவு வடமொழிச் சொற்களை ஏற்றுக் கொண்டாலும், அவற்றிற்கும் வரம்பும் வழியும் அமைத்தே ஏற்றுக்கொண்டது. எனவே, வேண்டிய காலத்தில் அவற்றை நீக்கவும், தேவையாயின் கொள்ளவுமான வழியில் தமிழ்மொழி அமைந்துள்ளது.

எனினும், தமிழ்நாட்டு இலக்கிய வாழ்வில் பல வடமொழி நூல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் தலையாயது கம்பரது இராமாயணம். எத்தனையோ வடமொழிக் காவியங்களும் புராணங்களும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. அவற்றை மொழி பெயர்ப்பதையே ஒரு பெரும்பேறு என்று எண்ணிக் கொண்டு வாழ்ந்தவரும் இருந்தனர் அக்காலத்தில். எனினும், அத்துணையும் இன்று வாழவில்லை. இராமனுடைய கதை மட்டுந்தான் தலைநிமிர்ந்து வாழ்கின்றது. அந்த மொழி பெயர்ப்பும் அப்படியே வடமொழி வாக்கியங்களைத் தமிழில் கொண்டுவந்து விடவில்லை. அவ்வாறு கதைப்போக்கு மாறாமல், கருத்துக்கள் வேறுபடாமல் சொல்லுக்குச் சொல் அது மொழி பெயர்க்கப்பட்டிருப்பின், ஒருவேளை அது என்றோ இறந்துபட்டிருக்கும். அவ்வாறன்றி, கதைப் போக்கை ஒருவாறு தழுவிக்கொண்டு, தமிழ்நாட்டுக் கொள்கைக்கு மாறுபடாது, இனிய கவிதைகளால் அக்கதையை ஆக்கித் தந்தமையே இந்நாள்வரை அதை இங்கு வாழவைக்கின்றது. இன்று அதை நாட்டில் வேண்டா என்று கூறக்கூடிய அளவுக்கு

ஒரு சாரார் பெருமுயற்சி செய்தும், அது மேன்மேலும் வளர்ந்து செல்வதன் காரணம், அது தமிழ்நாட்டு வாழ்வுக்கு ஒப்பச் செல்லும் கதையாக மாற்றப்பட்டமை எனலாம்.

தமிழ்நாட்டு மக்கள் கண் எனக் காக்கும் கற்பு, உடன் பிறப் பொற்றுமை முதலிய நல்லஇயல்புகளைக் கம்பர் அப்படியே தம் கவிதைகளில் காட்டியிருக்கின்றார். வடநாட்டு வால்மீகி இராமாயணத்தில் காட்டிய காட்சிகள் பல கம்பராமாயணத் தில் இல்லை. அதற்கு நேர்மாறாகக் கம்பர் தமிழ்ப் பண்பாட்டுக்கும் வாழ்க்கைக்கும் ஏற்பத் தம் காவியத்தை அமைத்துக் கொண்டார். இந்த அடிப்படையே அவர் இராமாயணத்தை இன்றும் வாழ வைக்கிறது. தமிழ் நாட்டில் தோன்றிய எத்தனையோ இலக்கியங்களும் இலக்கணங் களும் மக்கள் வாழ்வோடு பொருந்தாது நின்று, தம் போக்கில் மாறுபட்டு, பிற மொழி தழுவியும் பிற வாழ்க்கையை விளக்கியும் நின்ற காரணத்தால், அவற்றின் அடிச்சுவடுகூட அறிய முடியாமல் மறைந்தொழிந்தன என்பதை மேலே கண்டோம். ஆனால், கம்ப ராமாயணம் இவற்றிற்கு நேர்மாறாகப் பிற மொழியிலிருந்து மொழி பெயர்த்துச் சொல்லப்பட்ட தாயினும், அது வாழ்வோடு பொருந்திய ஓர் இலக்கியமாகி விட்டது. அதன் கவிதைகளில் பல கற்பனையிலும், முதல் நூல் கதைப்போக்கிலும் சென்றன என்றாலும், ஒரு சில, தமிழ் மக்கள் வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடிகளாய் அமை கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

கற்பு நிலை தமிழ்நாட்டின் தலையாய ஒன்று. அக் கற்பு, கம்பராமாயணத்தில் பேசப்படுகின்றது. பலப்பல இடங் களில் பற்பல கவிதைகளால் கற்பின் நிலையைக் கம்பர் எடுத்துக் காட்டுகின்றார்; சீதையைப் பாத்திரமாக அமைத்துக் காட்டுகின்றார் கம்பர். சீதையை இராவணன் பற்றி ஈர்த்துப் பக்கத்தணைத்துக் கொண்டு சென்றான் என்று வால்மீகி கூறிய தாக வடநூற் புலவர் கூறுவர். இவ்வாறான நிலை தமிழ்நாடு ஏற்காத ஒன்று. கற்புடை பெண்டிரைப் பிறர் தீண்டுவது குற்றம் என்று கண்டது தமிழ்நாடு. அதற்கு மேலாக,

'கற்புடைப் பெண்டிர் பிறர் நெஞ்சு புகார்,' என்ற அந்த உயர்ந்த அளவுக்கு, மற்றவன் தம்மை விரும்பாத வகையில் தம்மைச் சரிசெய்து வாழவேண்டுவதே கற்புநெறியென்பது இந்நாட்டுக் கொள்கை. அந்த வகையில் சீதையின் கற்பு மாசுண்டதே எனினும், மற்றவர் தீண்டின் அடியோடு கெட்டழியும் என்பதைக் கருதித்தான், கம்பர், சீதையை இராவணன் 'மண்ணொடும் கொண்டு போனான்' என்றார். இராவணன் மண்ணொடும் கொண்டு சென்று தன்னாட்டில் அவளைச் சிறை செய்த காலத்து, அவள் தன் நிலை பிறழவில்லை என்பதை மேலும் எண்ணி, அனுமன் வாக்கினாலே அதையும் விளக்கு கின்றார். சீதை இராவணன் மண்ணையும் மிதிக்கவில்லை என்பதை,

'உம்பி புல்லினால் தொடுத்த தூய
சாலையில் இருந்தாள் ஐய!
தவம் செய்த தவமாம் தையல்.'

என்று எடுத்துக் காட்டுகின்றார். மனத்திலே மாசு உண்டாயின், அதனால் கற்புக் கெடும் என்பதை, இராமன் அம்பால், இராவணன் இறுதி நாளில், பின் மற்றொரு சிறந்த பாடலில், பிறர் நெஞ்சு புகாத கற்புக்கரசி மண்டோதரி புலம்பலில் வைத்து,

'கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்,
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி!'

என்று காட்டுகின்றார். உள்ளத்தால் உள்ளலும் தீதே என்ற வள்ளுவர் வாய்மொழி இங்கு அப்படியே விளங்குவதைக் காணலாம். இப்படித் தமிழ்நாட்டிற்கே சிறந்த ஒன்றாகிய கற்பின் பொற்பினை வால்மீகி எப்படிக் கூறினபோதிலும், கம்பர் இந்நாட்டு முறையில் தவறாதபடி செம்மையாக்கிக் காட்டும் நெறிதான் அவரை இந்நாட்டில் இன்றும் வாழ வைக்கிறது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்,' என்ற உயிர்த் தத்துவத்தை மேலே சில இடங்களில் கண்டிருக்கிறோம். மனித

இனம் மட்டுத்தான் வாழ வேண்டும் எனும் குறுகிய மனப் பான்மை கடந்து, உயிர்களெல்லாம் வாழ வேண்டும் என்ற அன்பு வழியிலன்றோ தமிழர் பண்பாடு விரிந்து நிற்கின்றது! இவ்வுண்மையைக் கம்பர் நன்கு காட்டுகின்றார். மனித இனத்தைக் கடந்து விலங்கினத்தையும் பறவை இனத்தையுங் கூடக் கம்பர் ஒத்து நோக்கிக் காண வைக்கின்றார். அயோத்தி நகர மன்னன் தசரதன் மக்களாகிய நால்வரும் உடன்பிறப்பால் ஒன்றியது உண்மைதான். ஆனால் அதற்கும் மேலாகக் கம்பர் வன வேடனாகிய குகனையும், குரங்கரசனாகிய சுக்கிரீவனையும் உடன் பிறப்பாளர்களாகவும், ஜடாயு என்னும் பறவையைத் தந்தையாகவும் காட்டும் காட்சி உயிர்த்தத்துவத்தின் அடிப் படைக் காட்சி யன்றோ! 'குரங்கை உடன்பிறப்பாளனாக எங்காவது யாராவது கொண்டிருக்க முடியுமா?' என்று கேட்கத் தோன்றும். ஆனால், குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்பதும், மனிதப் பிறவியே மீனினத்தின் அடியிலிருந்து வளர்ந்த ஒன்று என்பதும் மறுக்க முடியாத உண்மைகளாகி விட்ட இந்த நாளில், அந்தக் குரங்கை உடன் பிறப்பாளனாகக் கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை என்பது புலப்பட வில்லையா!

**'முன்புளம் ஒருநால்வேம்! முடிவுளது எனஉன்னா
அன்புள இனிநாம்ஓர் ஐவர்கள் உளர் ஆனோம்.'**

என்று இராமன் கூறினானே இல்லையோ நாமறியோம். ஆனால் கம்பர், அவ்விராமன் வாக்கில் இத் தொடர்மொழியை அழகாகக் கூறி, அதனால் மக்கள் இனத்தில் ஏற்றத்தாழ்வு வேண்டா என்பதை வற்புறுத்திக் காட்டுகின்றார் அல்லவா? மக்கட் பிறவியில் பிறந்தார் யாவருக்கும் வேறுபாடு இல்லை என்பதும், அன்பு அனைவரையும் ஒன்று சேர்க்க வல்லது என்பதும் இதனால் அறியப்படும் வாழ்க்கை உண்மையன்றோ? இனிச் சடாயுவை நோக்கும்போதும், சுக்கிரீவனை நோக்கும் போதும் இந்த உணர்வு மேலும் விரிவடைகின்றது. 'சடாயு ஒரு பறவை; அது எப்படிப் பேசும்?' என்ற கேள்வி எழலாம்.

அது பேசிற்றே இல்லையோ, அதுபற்றி நாம் ஆராயவேண்டா. ஆனால், அந்தச் செயல்வழிக் கம்பர் காட்டவந்த உண்மையே நமக்குத் தேவை. தசரதன் உடன்பிறந்த ஒன்றேபோல அது வாழ்ந்ததையும், இராம இலக்குமணருக்கு வந்த துன்பத்தைத் தனக்கே வந்ததுபோல எண்ணி, அது இராவணனுடன் போரிட்டு மடிந்ததையும் நோக்கின், உயிரினத்தின் தன்மை ஒருவாறு விளங்காமற் போகாது. பறவைகளுக்கும் விலங்குகளுக்கும்—ஏன்? மரங்களுக்குங்கூட உணர்ச்சி உண்டு என்னும் உண்மையை அது விளக்குகின்றதன்றே!

வானரங்கள் இராமாயணத்தில் முக்கியப் பங்கு பெறுகின்றன. மனித இனத்தின் முந்திய நிலைதான் வானரம். அந்தப் பேசா மனிதஇனத்தில் பிறந்த சுக்கிரீவன் பேசுகின்றான். அனுமன் பேசுகின்றான். அவன் பேச்சில் மயங்கி அவனைச் 'சொல்லின் செல்லன்' என்றே காட்டுகின்றார் கம்பர். எத்தனையோ வீரர்களையும், மனிதப் பண்பாளரையும் காட்டுகின்ற கம்பர், அவர்களையெல்லாம் சொற் செல்வர்களாக்கிக் கூறாது, குரங்காகிய அனுமனைச் சொல்லின் செல்வனாக்கியதன் கருத்தென்ன? குரங்குகளின் உயிர்த்தோற்ற வளர்ச்சியின் எல்லையே மனித வாழ்வு என்பதைத்தானே அது குறிக்கின்றது!

இவ்வாறு எவ்வுயிரும் வேறுபாடற்று உடன்பிறந்தாரைப் போன்று வாழவேண்டும் என்று காட்டிய கம்பர், இன்னும் எத்தனையோ உண்மைகளைத் தம் கவிதைகளில் உள்ளடக்கி மனித வாழ்வுக்கு ஏற்ற வகையில் அவைகளை வெளியிடுகின்றார். இந்த இருபதாம் நூற்றாண்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் கம்பர் ஏது காட்டி விளக்குகின்றார். இந் நாகரிக நூற்றாண்டில், நம் நாட்டில் நடந்த கொடுமையைக் கண்டோம். நாடு இரண்டாகத் துண்டாடப்பட்ட காலத்து வங்காலத்திலும் பீகாரிலும் எத்தகைய கொடுமைகள் நடைபெற்றன! எத்தனை இலட்சம் இந்துக்களும் மகமதியர்களும் சமய வெறிக்கு இரையானார்கள்! எத்தனை இளம்பெண்கள்

கற்பழிக்கப்பட்டார்கள்! அவர்களையெல்லாம் 'தள்ளிவிடுவதா, அன்றிக் கொள்வதா!' என்று எத்தனை கணவன்மார் அல்லல் உற்றனர். ஆனால், அந்த வேளையில் அண்ணல் காந்தியடிகள் அங்கே சென்று நின்று, 'இளம்பெண்கள்-கற்பழிக்கப்பட்ட பெண்கள். மனமறிய அவ்வாறு குற்றம் செய்யவில்லை. அவர்களை அவர்கள் கணவர்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.' என்று அவரவர் கணவரிடம் உரியவரைச் சேர்த்து வைத்தார். இந்தச் செய்தியை நாளிதழில் படிக்கும் காலத்து நாம் நம்மை மறந்தோம்! இத்துணைச் செம்மை நெறியில் வாழ வழி காட்டிய அண்ணல் காந்தியை வாயாரப் போற்றினோம். இந்த உண்மையைக் கம்பர் அன்றே நமக்குக் காட்டிச் சென்றிருக்கின்றார். வால்மீகியினும் கம்பர் அங்கு வேறு பட்டு விட்டார். இராமன் அடி தீண்டக் கல் பெண்ணுபிற்றோ இல்லையோ, அதுபற்றி நமக்குக் கவலையில்லை. அப்பெண்ணைக் கொண்டு கம்பர் நமக்குக் காட்டும் உண்மைதான் நமக்குத் தேவை. அப் பெண்ணுருவம் பெற்ற அகலிகையை அவள் கணவனோடு சேர்ப்பித்து இராமன் விஸ்வாமித்திரருடன் மேலே சென்றுவிட்டான் என்ற அளவோடு வால்மீகி இராமாயணம் செல்கிறது. ஆனால், கம்பர் அந்த அளவோடு விட்டிருப்பின், அவர் இராமாயணம் தமிழ்நாட்டில் வாழ்ந் திராது. இன்று காந்தி அடிகள் காட்டிய வழியைத்தான் அன்று கம்பர் காட்டினார். பெண்ணுருவாகிய அகலிகையைக் கௌதமரிடம் அழைத்துச் சென்றான் இராமன். பின்பு, 'நெஞ்சினால் பிழைப்பிலாளை நீ அழைத்திடுக!' என்று ஆணையும் இடுகின்றான். அகலிகை மனமறியப் பிழைகள் செய்யவில்லை என்றும், அவளை ஏற்றுக் கொள்ளுவதே கணவன் கடன் என்றும் திட்டமாகக் கூறி இராமன் வழிக் கம்பர், கணவன் அவளை ஏற்றுக்கொள்ளச் செய்கின்றார். இக் கருத்தை வாழ்வொடு பொருத்தி அதற்கு வழிகாட்டிய அண்ணல் காந்தியைப் போற்றும் நாம், அதே நெறியில் வழுக்கி வீழ்ந் தவரை வாழ வைக்கக் கம்பர் கடைப்பிடித்த அந்த நெறியைப் போற்றா திருத்தல் நியாயமோ?

இவ்வாறே கம்பராமாயணத்தில் எத்தனையோ பகுதிகள் வாழ்வோடு இணைந்து கிடக்கின்றன. அரசன் ஆளவேண்டிய நெறியும், குடிகள் அரசன் ஆகியோர் இணைந்து நின்று நாட்டில் அமைதி வளர்க்க வேண்டிய வழியும், சமுதாயச் சீரமைப்பு முறைகளும், பிறவும் பலப்பல வகையில் பாராட்டிப் பேசப்படு கின்றன. உள நூற் புலவனை ஒத்துக் கம்பர் ஒவ்வொரு பாத் திரத்தின் உள்ளத்தன்மையையும் விளக்கிக்காட்டி, உள்ள நிகழ்ச்சியையும், அதன்வழி வாழ்வில் தோன்றும் நெறித் துறைகளையும், பண்பாடுகளையும், பிறவற்றையும் எடுத்துக் காட்டும் திறன் அறிந்து மகிழ வேண்டிய ஒன்றாகும். இக் கம்பரின் கவிதைகளைப் பற்றி நாள்தோறும் பலப்பல புதிய நூல்கள் வெளிவந்து கொண்டே யிருக்கின்றமையின் அவற்றைப்பற்றி ஒன்றும் நான் இங்கு அதிகமாகக் கூற வேண்டுவதில்லை. இத்துணை வாழ்க்கைத் தத்துவங்களையும் உள் ளடக்கிய கவிதைகளாகக் கம்பர் தன் பாடல்கள் அமைந்துள்ள மையினாலேதான் அவை கெடாது வாழ்கின்றன என்ற ஒன்றை மட்டும் கூறி, அதுபோன்று வாழும் மற்றொரு காப்பியத்தைக் காணலாம்.

சேக்கிழார் கம்பரைப் போலத் தம் காவியத்தைப் பிறமொழியிலிருந்து மொழி பெயர்த்து எழுதாவிட்டாலும், அவருக்கும் முதல் நூல் இல்லாமல் இல்லை. சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகையும், அதையொட்டி நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியும் அவர்தம் பெரிய புராணத்துக்கு முதல் நூல்களாய் அமைந்தன. ஆனால், கம்பர் வடமொழிக் காப்பியத்தைத் தமிழில் மொழி பெயர்த்தார். சேக்கிழாரோ, தமிழ் நாட்டிலேயே நிகழ்ந்த நிகழ்ச்சிகளைத் தம் காவியத்தில் தீட்டியிருக்கிறார். இதில் அறுபத்து மூன்று நாயன்மார் கதைகள் கூறப்படுகின்றன. கதைகள் அத்தனையும் நடந்தனவா அன்றி அனைத்தும் கட்டுக்கதையா என்ற ஆராய்ச்சி நமக்கு வேண்டா. சேக்கிழார் நாயன்மார்களின் வரலாறுகளை அமைத்துப் போகும் கவிதைப் போக்குத்தான் நமக்குத் தேவை. ஒவ்வொரு அடியவரைப் பற்றியும் கூறும் போது அவர்தம் உள்ள நெகிழ்ச்சிகளைப் பற்றி அவர் காட்டும்

முறைதான் அக்கவிதைகள் வாழ்வோடு பொருந்தின வகையை விளக்குகின்றன.

ஒரு பொருளிடத்து நாம் பற்று வைப்போமாயின், அப் பொருளுக்கு நம்மால் செய்யக்கூடிய அத்துணைச் சிறப்பையும் செய்து விடுவோம். ஒருவரிடம் நாம் பற்றுக்கொண்டால் நம்மை மறந்து நம் பொருள் அனைத்தையும் அவருக்கு ஈடாக்கு வோம். அந்தப் பற்று, சில சமயங்களில் வெறியாக மாறுவதும் உண்டு. அந்த நிலையில் நாம் செய்வது சரியா தவறா என்ற ஆராய்ச்சிகூடச் செல்லாது. நாம் செய்யும் காரியம் மக்கள் இனத்தால் ஏற்றுக்கொள்ளக் கூடியதா அன்றா என்றுகூட எண்ணத் தோன்றாது. அந்த நிலையில் வாழ்ந்த அடியவர் சிலர் தம்மை மறந்து, மக்கள் செய்ய முடியாத—ஏன்—செய்யக் கூடாத செயல்களையுங்கூடச் செய்துள்ளார்கள். அவர்களுள் ஓர் அடியவரைப் பற்றித்தான் மக்கள் பல்வேறு வகையில் குறை கூறுகின்றார்கள். 'என்னதான் பற்றுக்கொண்டாலும், கொண்ட மனைவியை ஓர் அடியவர் பின்னே அனுப்புதல் தவறு தானே?' என்பது வாதம். தவறு இல்லை என்று யாரும் எக்காலத்திலும் சொல்லவில்லை. சாதாரண மனிதர்கள் செய்யத்தகாத செயல்தான் அது. இல்லை என்று மறுப்பார் யாரும் இல்லை. இன்று அவர் செயல் தவறு என்று பேசுகின்றவர் பலர் உள்ளனர். ஆனால், கொடுத்த அன்றும் உடன் இருந்த அனைவரும் இச்செயலைத் தலைமேல் வைத்துக் கொண்டாட வில்லை. அதற்கு நேர் மாறாகப் பழித்ததோடு, 'நாங்கள் உயிருடன் இருக்கும் வரையில் இந்தச் செயலைக் கண்டு சகியோம்!' என்று போரிட்டு மடியவும் புறப்பட்டார்கள். அவர்தம் உள்ள நெகிழ்ச்சியை,

"ஏடா! நீ என்செய் தாயால்?
இத்திறம் இயம்பு கின்றாய்;
நாடுறு பழியும் ஒன்னார்
நகையையும் நாணாய்; இன்று
பாடவம் உரைப்ப துன்றன்
மனைவியைப் பனவற்கு ஈந்தோ?

கூடவே மடிவ தன்றிக்
கொடுக்கயாம் ஒட்டோம்.” என்றார்
(இயற்பகை: 18)

என்று எடுத்துக் காட்டுகின்றார் சேக்கிழார். இந்த நிலையில் யாரும் அச்செய்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெளிவு. இன்று நாட்டில் இதைக் கண்டிப்பவரைக் காட்டிலும் அன்று அவர் சுற்றத்தார் கண்டிப்பு மிகக் கொடியதாகத்தானே உள்ளது? இயற்பகையார் சமயவெறி கொண்டவர். அத்தகை யார் அன்று மட்டுமன்றி, இன்றும் வாழ்கின்றனர். சேக்கிழார் சுற்றத்தார்தம் மன நிலையையும் அவர்தம் செயலையும் கூறாது, இயற்பகையாரைப் புகழுவதில் தலைநின்றிருப்பாராயின், அவர் பெரிய புராணம் வாழ்வோடு பொருந்தாத நூலாகி, வழக்கற்று என்றோ அழிந்து போயிருக்கும். இவ்வாறே அவர் வரலாற்றில் வரும் ஒவ்வொன்றைப் பற்றியும் ஆராயின், உண்மை புலனாகும்.

பெரிய புராணம் சமயச் சார்பான காவியமான போதிலும், அதிலும் வாழ்வொடு பொருந்தியே கவிதைகள் பல இடம் பெற்றுள்ளமைதான் அந்நூல் ஆயிரம் ஆண்டுகளுக்கும் அதற்கு மேலும் வாழக் கூடிய வகையில் நிலைபெற்றுள்ளது. ‘செயற்கரிய செய்வார் பெரியர்,’ என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு ஏற்ப, சாதாரண மக்களால் செய்ய முடியாதவற்றைச் செய்தவர் செயலைத் தொகுத்துத் தாம் பாடுவதாக அவர் குறிக்கின்றார்; அவர்தம் செயலை ‘வீரம்’ என்றே குறிக்கின்றார்.

இந் நூலில் தனியடியவர் தொகைஅடியவர் எனப் பலர் பேசப்படுகின்றனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் சிவனுக்கும் சிவனடியாருக்கும் தொண்டுசெய்து இறைவனை அடைந்தனர் என்பதுதான் கதை. இந்தச் சமயக் கதையைக் கூறும் காலத்துச் சேக்கிழார் சமணம் போன்ற பிற சமயங் களையும் ஓரளவு பழித்துரைக்கின்றார். அதனாலே இந்நூலின் சிறப்பு ஓரளவு குறைந்தது எனலாம்.

‘தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறை’

என்றும்,

"விரிவிலா அறிவி னூர்கள் வேறொரு சமயம் செய்தே
எரிவினுற் சொன்ன ரேனும் எம்பிராற்கு ஏற்ற தாகும்"

என்றும், சமரச உணர்வை உலகுக்கு வழங்கும் அச்சைவ சமயத்தே, பிற சமயத்தைப் பழித்துரைக்கும் மாசு அறியக் கூடாத ஒன்றுதான். அதனுலே இடைக்காலத்திலும் இன்றும் சைவர்களே சைவத்தை வெறுக்கும் அளவுக்கு அச்சமயம் சற்றுத் தளர்ந்துள்ளது. சைவம் மட்டுமன்றி, வேறு எச்சமயத்தில் எழுந்த நூலாயினும், மக்கள் வாழ்வோடு அது பொருந்தி, மற்ற உயிர்களுக்குத் தீங்கிழைக்காது, நல்ல பண்பாட்டு நெறியில் செல்லின் வாழும். சேக்கிழாரே தம் நூலில் மனு நீதி கண்ட சோழன் வரலாற்றில் பிற உயிர்களை எவ்வாறு போற்ற வேண்டும் என்பதைத் திட்டமாகக் குறிக்கின்றார். அறத்தாறு வாழ வேண்டியவன் அரசன். அவ்வற நெறிக்கு யாரும் எதிர்நிற்க முடியாது. பெற்றவராயினும், பிறர்க்கு ஊறு செய்வார் தண்டனையைப் பெற்றே ஆக வேண்டும். அப்பிறர் மனிதராகவே இருக்க வேண்டுவதில்லை. எந்த உயிராயினும், அதற்கு ஊறு நேரலாகாது. அதுதானே உயிர்த்தோற்ற அடிப்படை! அரசன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைச் சேக்கிழார் கூறுவதைக் காணலாம் :

'மானிலம்கா வலன்ஆவான் மன்னுயிர்காக் கும்காலை
தான் அதனுக்கு இடையூறு தன்னுல்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்தும்தீர்த்து அறம்காப்பான் அல்லனே?'

என்று சேக்கிழார் கூறும்போது, உலகில் அரச நீதி எவ்வாறு புரக்கப்பட வேண்டும் என்பது நன்கு விளங்குகிறது அன்றோ! இவ்வாறு கூறிய அரச நெறியை மனுச்சோழன்மேல் ஏற்றி ஓர் உயிராகிய பசுவின் கன்றுக்காக மற்றோர் உயிராகிய மன்னவன் மகனையே பழி வாங்கும் நிலை உயிர் வகையில் வேறுபாடு காணுராய், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்,' என்ற வள்ளுவர் வாய்மொழியை வரலாற்றுல் போற்றும் வகையில் விளக்குகின்றார். அவர் கூறும் நிலை இதுதான்

'ஒருமைந்தன் தன்குலத்துக்கு உள்ளானென்
பதும் உணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழி உறஊர்ந்தான் மனுவேந்தன்;
அருமந்த அரசாட்சி அரிதோ மற்று எளிதோதான்.'

என்று ஆட்சி செய்தலின் அருமையைக் காட்டுகின்றார் அவர்.

அரச நெறியைக் கூறிய சேக்கிழார் மக்கள் நிலை பற்றியும் கூறுகின்றார்; மக்களுள் ஆடவரும் பெண்டிரும் உயர்வு தாழ்வு மனப்பான்மை இன்றி வாழவேண்டும் என்பதையும், இல்லற வாழ்வு தம்மை ஒறுத்தாயினும் மற்றவருக்கு உதவி செய்வதற்கே என்பதையும், சமுதாய வாழ்வில் உயர்வு தாழ்வு இன்றிச், சாதிபேதமற்ற ஒரு நிலை நிலவ வேண்டுமென்பதையும், அரசனாயினும் ஆண்டியாயினும் உயிரமைப்பில் இருவரும் ஒருவரே என்பதையும், இவை போன்ற பல உண்மைகளையும் நல்லவகையில் விளக்குகின்றார். சங்க காலத்தே சாதியின் பெயர்கள் தொழில்பற்றி வந்த வகையினைக் காண்கின்றோம். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான்,' என்ற வள்ளுவர் வாக்கு அன்றும் போற்றப்பட்டுத்தான் வந்தது. அவரவர் தொழிலாலேயே பலர் வழங்கப்பட்டனர் என்பது தெரிகிறது. பின்னால் தோன்றிய வகுப்பு வழியில் வரும் பட்டப் பெயர்களைச் சங்க காலத்தில் யாண்டும் காணல் அரிதாகும். சேக்கிழார் காலத்தில் சாதிகள் நாட்டில் ஊன்றி நிலைத்த இடம் பெற்றுவிட்டன. சாதி வெறியும், சமய வெறியும் நாட்டில் தலை விரித்தாடின. எனினும், அக்காலத்திலும் சாதியால் வரும் பட்டப்பெயர்களை யாரும் சூட்டிக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆயினும், சாதியின் பேரால் உயர்வு தாழ்வு மனப்பான்மையும் பிற வேறுபாடுகளும் நாட்டில் நிலை பெற்று விட்டன. அக்காலத்தில் சேக்கிழார் தம் நூலில் இந்த வேறுபாடுகளையெல்லாம் வேரறுக்க வேண்டிய வகையில், பல உண்மைகளைத் தேடி ஆராய்ந்து எழுதி வைத்துள்ளார்.

பெரிய புராணத்தில் வரும் அத்தனை நாயன்மார்களைப் பற்றிய வரலாறுகளையும் எப்படி இவர் பெற்றார் என்று கூற முடியாது. 'இல்லையே என்ற இயற்பகை' எனும் ஒரு தொடரை வைத்துக்கொண்டும், அதன் அடி ஒற்றிய அந்தாதிப் பாடல் ஒன்றை வைத்துக்கொண்டும், சேக்கிழார் அவர் வரலாற்றை எப்படி இத்துணை விரிவாக எழுதினார்? 'இளையான்றன் குடிமாறன்' என்ற பெயரைக் கொண்டு, இரவில் நெல் முளை வாரி அடியாரை உண்பித்தார் என்பது, எப்படி விளங்கிற்று? கதைகள் திருத்தொண்டத் தொகை பாடிய சுந்தரர் காலத்தி லேயே நடந்தன அல்ல. 'கலைமலிந்த சீர் நம்பி கண்ணப்பர் எப்படிக் காட்டு வேடுவரானார்?' என்றால் என்ன பதில் கூற முடியும்? இத்தனைக்கும் பதில் கூற முடியாதுதான். எனினும், சேக்கிழார் சோழ மன்னனிடம் அமைச்சராய் இருந்தமை யானும், அவன் பொருட்டே தாம் இந்தப் பெரிய புராணத்தைப் பாடினமையானும், பல இடங்களுக்குச் சென்று தகவல்கள், சேகரித்திருப்பார். எனினும், அத்தனையும் உண்மையான தகவலாக அவருக்குக் கிடைத்திரா. கிடைத்த வற்றை வைத்துக்கொண்டு ஆராய்ந்து அவர் தம் நூலை எழுதியிருப்பார். இந்த நிலையில் காலத்தொடர்பில் சில கதைகள் அறுபட்டிருக்கலாம். என்றாலும், சமுதாயத்தில் வாழ வேண்டிய வாழ்க்கை நெறியைச் சேக்கிழார் சுட்டிக் காட்டிக் கொண்டேதான் செல்கின்றார். சாதி வேறுபாடற்ற சமுதாயம் அவர் விரும்பிய ஒன்று. அந்தணராகிய அப்பூதி அடிகளைத் திருநாவுக்கரசு என்ற வேளாண் குடிமகனுக்குக் குடும்பத்தோடு அடிமையாக்குகின்றார். ஆனால், காலத்தின் போக்கு 'அந்தணர் வேறோர் அந்தணருக்கு அடிமையாதல் இல்லை,' என்றிருந்ததைச் சுந்தரர் வாழ்க்கை வாயிலாகக் காட்டி, அக்கொள்கையையும் தோற்கடிக்கச் செய்கின்றார். அந்தணர் குலத்தவரான சம்பந்தரைப் பாணர் குலத்தவரான திருநீலகண்ட யாழ்ப்பாணரோடு பிணைத்துப் பேசுகின்றார். ஆதிசைவ குலத்துச் சுந்தரருக்கு வேளாண் குலத்துச் சங்கிலியாரை மணம் செய்துவைக்கிறார். பூசை செய்வதற்கே பிறந்த குலம் தம்முடையது என்று தருக்கிய சிவகோசரி

யாரைக் காட்டி, அவர் பூசையினும் தீண்டத்தகாதவன் எனப்படும் கண்ணப்பன் பூசை எத்தனையோ மடங்கு மேலானது என்பதை விளக்குகின்றார். ஒரு குலத்திலோ, அன்றிச் சாதியிலோதான் ஆண்டவன் அடியவர் பிறக்க முடியும் என்ற வேற்று எண்ணத்தை மாற்றி, எக் குலத்திலும் அடியவர் அன்பு காரணமாக வாழ முடியும் என்ற உண்மையை நூல் முழுதும் காட்டிக் கொண்டே செல்கின்றார். ஏழை பணக்காரர் என்ற வேறுபாடும் மாயவேண்டும் என்பதைச் சேக்கிழார், சுந்தரர் சேரமான் பிணைப்பில் விளக்குகின்றார். அரசர் சேரமானும், எளிய வாழ்வு வாழ்ந்த சுந்தரரும் இணைபிரியாத் தோழராய் இருந்ததைக் காட்டுகின்றார். தம்மை ஒறுத்தவருக்கும் தீங்கிழைக்காத புனிதப் பண்பினை மெய்ப் பொருள் நாயனாரிடம் காட்டி, கொல்ல வந்தானையும் காப்பாற்றச் சொல்லி வாழவைக்கின்றார். இவ்வாறு மனித வாழ்வுக்குத் தேவையான—சமுதாயத்தை வாழவைக்கத்தக்க—உயர்ந்த பண்புகள் அத்தனையையும் தம் நூலில் காட்டியுள்ளமையினாலேதான், சமயப்பற்று முதலியவற்றால் தோன்றும் சிறு சிறு குற்றங்களுங்கூடத் தெரியாதபடி அப் பேரிலக்கியம் வாழ்கின்றது.

எனவே, இதுவரை கூறியவற்றால், கம்பரது இராமாயணமும், சேக்கிழாரது பெரிய புராணமும் சிறுசிறு குறையாடுகள் உடையனவேனும், அவை, மனித வாழ்வின் அடிப்படையைப் பற்றியே அமையும் கவிதைகளானமையின், இன்றும் வாழ்கின்றன, இனியும் வாழும் என்பதை அறிந்து கொண்டோம்.

8. பிற்கால இலக்கியங்கள்

''வெண்பாவிற் புகழேந்தி; பரணிக்கோர்
சயங்கொண்டான்; விருத்தமென்னும்
ஒண்பாவிற்கு உயர்கம்பன்; கோவைஉலா
அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்;
கண்பாவு கலம்பகத்திற்கு இரட்டையர்கள்;
வசைபாடக் காளமேகம்.'

என்று ஒவ்வொரு புலவனுக்கும் இலக்கியத்தைப் பிரித்துத் தரும் வகையில் பிற்காலத்தில் இலக்கியங்கள் எனப்படும் கவிதைத் தொகுதிகள் பலப்பலவாகப் பல்கிப் பெருகிவிட்டன. வசை பாடலையும் ஒருவருக்கு வரையறுத்து, அதன்வழி அவர் புகழும் தேடிக் கொள்ள வகை செய்தார்கள் என்றால், அந்தக் காலத்தை என்னென்பது! 'மனத்தானும் மாணா செய்யாமை தலை,' என்ற அறம் வகுத்த வள்ளுவர் பிறந்த நாட்டிலே, வசை பாடி இசைபெறும் புலவரும் வாழ்ந்தனர் என்றால், அதைக் காலத்தின் கோளாறு என்று கூறுவது தவிர, வேறு என்ன முடியும்?

தமிழ் நாட்டில் 14-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு சிறு பிரபந்தங்கள் என்ற ஒரு வகை இலக்கியங்கள் பல்கிப் பெருக லாயின. அதற்குமுன் அவை இங்கொன்றும் அங்கொன்று மாய் இருந்தன எனலாம். கடவுளைப் போற்றுவதிலிருந்து சாதாரண தனிமனிதனைப் புகழும் வரையில் எத்தனையோ வகை வகையான பாடற்றொகுதிகள் நாட்டில் வளரலாயின. அவற்றிற்குப் பிறப்பிடம் எங்கே என்று திட்டமாகக் கூற முடியாவிடினும், ஒரு சிலர் வடமொழிக் காவியங்களின் வழிதான் அவை வளர்ந்தன என்கின்றனர். ஆராய்ந்து

பார்ப்பின், அவர் கூற்று அத்துணைப் பொருத்தமானதெனத் தோன்றவில்லை. எப்படியோ பலவகைப் பிரபந்தங்கள் நாட்டில் உருப் பெற்றுவிட்டன. கோவை, உலா, அந்தாதி, கலம்பகம், தூது, மாலை முதலிய இலக்கியங்கள் நாட்டில்பெருகி விட்டன. பின்பு அவற்றின் இலக்கணம் கூறவும் ஒரு நூல் உண்டாகிவிட்டது. 'பாட்டியல்' என்பதே அதற்குப் பெயர். பாட்டுக்களின் இயல்பினைக் கூறுவதானமையின், அது பாட்டியல் என்ற பெயரைப் பெற்றது.

ஒரு புலவன் தன்னைச் சோறிட்டு ஆதரித்த ஒருவனைப் பாடவேண்டுமாயின், அதற்காக ஒரு பிரபந்தமே பாடி விடுவான். ஆனால், அந்தப் பிரபந்தத்தில் உண்மையைக் காட்டிலும் கற்பனையே அதிக இடம் பெற்றிருக்கும். சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்கள் தங்கள் நிலையிற் றாழாமலும், தாழ்வுவரின் மானத்திற்கஞ்சி வாழாமலும், நாட்டில் சிறந்த பண்பாட்டை வாழ வைத்தார்கள். தாங்கள் எதிர்பார்த்த பொருளுக்குக் குறைவாகக் கொடுத்தாலும், அன்றித் தங்கள் பெருமை அறிந்து கொள்ளாது, நேரில் பாராது, தங்களை ஒரு யாசகன் எனக் கருதி, முகம் நோக்காது பொருள் கொடுத்தாலும், அதை ஏற்றுக்கொள்ளாது, துச்சமாகக் கருதி, ஒதுக்கிவிடுவார்கள். ஆனால், இந்தப் பிற்காலப் புலவர்களோ, ஒன்றும் கொடாவிட்டாலும், மற்றவர்களை இந்திரனே சந்திரனே என்று புகழ்ந்து வாய்நோகின்ற அந்த ஒன்றைத் தவிர, வேறு பயன் பெற்றிருக்க மாட்டார்கள். அக்காலப் புலவர்கள் அறிவற்றவனை அணுகமாட்டார்கள். பிற்காலத்தவரோ, அறிவற்றவனை அண்டி அண்டி வாயலுக்கப் பாடி, வருவாய் இல்லாது போவார்கள். ஒரு சிலர் தாம்பெற்ற வருத்தத்தைக் கூறுவது காணின், பாவம், அவர்கள் கண்ணீர் விட்டுக் கதறுவது புலனாகும்! ஒரு புலவர்,

'வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்
வாசல்தொறும் முட்டுண்ட தலையில் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகும் நெஞ்சில் புண்ணும்
தீருமென்றே சங்கரன்பால் சேர்ந்தேன் அப்பா!'

என்று தாம் வஞ்சகரைப் பாடிப்பாடி வாயலுத்து, மெய் யலுத்துக் காலலுத்து வாடி நின்றதைப் பாடித் தீர்க்கின்றார். பாவம்! இந்தப் புலவர் நிலை எங்கே? காவலன் கவரி வீச முரசு கட்டிலில் துஞ்சிய சங்கப்புலவன் நிலை எங்கே! இத்தகைய வர்கள் பொருள் ஒன்றையே பொருளாகக் கொண்டார்கள். அவர்களோ, வாழ்வு எல்லா உயிர்க்கும் சமம் என்றும், அந்த வாழ்வு சமரச உணர்வில் வளரவேண்டும் என்றும் கூறி, அந்தக் குறிக்கோளுக்கு எல்லை வகுத்தார்கள். வாழ்வுக்குப் பொருள் இன்றியமையாததுதான். 'பொருளிலார்க்கு இவ் வுலகம் இல்லை,' என்று வள்ளுவரே கூறியிருக்கிறார். ஆனால், அந்தப் பொருளுக்காக மானம் இழக்கவில்லை சங்கப் புலவர்கள். பிற்காலப் புலவர்கள் அனைத்தையும் அப்பொருள் ஒன்றுக் காகவே பணயம் வைத்துத் தோல்வியே கண்டார்கள். கல்லாதவனைப் பாடி அவனுடைய பொல்லாப்பையும் தேடிக் கொண்டதை ஒரு புலவர் அழுதழுது பாடுகின்றார், அவர் ஒரு கல்லாத செல்வனைக் கண்டு,

'சீருலா வியகாம தேனுவே! தாருவே!
சிந்தா மணிக்கு நிகரே;
செப்புவச னத்துஅரிச் சந்த்ரனே!'

என்று புகழ்ந்து பாடினாராம். அவன் உடனே கோபங் கொண்டான் என்று கூறுகின்றார். அவர் கூற்றுக்குப் பதிலாக அவன்,

'ஆரைநீ மாடுகல் மரம்என் றுரைத்தனை?
அலால் அரிச்சந்த்ரன்என்றே
அடாதசொற்கூறினை? யார்க்கடிமை யாயினேன்?
யார்கையில் பெண்டு விற்றேன்?
தீருமோ இந்த வசை?'

என்று எதிர்த்துப் பேசிக் கோபித்துக்கொண்டு அனுப்பி விட்டான் என்கின்றார் அவர். இவ்வாறு கல்லாத புல்லரிடம் சென்று சங்ககாலப் புலவர்கள் பாடுவார்களா? கண்டவனைப்

பாடிக் கருத்தழிந்து, ஏதோ வாழ்வுக்கு வேண்டும் பொருளைச் சம்பாதிக்க நினைக்கும் அந்த இழிந்த நிலையிலேதான் பிற்காலப் புலவர்கள் வாழ்ந்தார்கள் எனலாம் அதனால், யாரைப் பற்றியோ, எவரெவரைப் பற்றியோ சிறு நூல்கள் இயற்றி, அவற்றைப் பிரபந்தங்கள் எனக் கொண்டாடி வெளியிட்டு விட்டார்கள். இவர்கள் பாவம் வாழத் தெரியாதவர்கள் என்றுதான் கூற வேண்டும். இப்படிப்பட்ட புலவர்கள் பாடிய எத்தனையோ வகையான பாடல்களெல்லாம் இவர்கள் இருக்கும் காலத்திலேயே மண்ணோடு மண்ணாய் மாண்டு மறைந்து விட்டன. அப்பப்ப! அத்தனையும் இருந்திருந்தால், நாடே இடங்கொள்ளாதே! இவர்கள் உயிர் வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவத்தை மறந்து, உணர்வின் வழி உருவாகும் கவிதையை இயற்றாமல், ஏதோ காசு பறிக்க எழுத்துக்களைப் பாட்டாக எப்படியோ பாடி வைத்த காரணந்தான் அவை வழக்கிழந்து நிற்க வழியாயிற்று எனலாம்.

இனி, மற்றொரு வகையில் இப்பிற்கால இலக்கியங்களைக் காணலாம். நாட்டுப் பற்று, சமயப் பற்று, மொழிப் பற்று முதலிய பற்றுக்கள் மனிதனுக்கு ஓரளவுக்கு இருக்கவேண்டுவனதாம். ஆனால், அவை எல்லைமீறி வெறியாக மாறினால் அதை மனித சமுதாயம் எப்படி ஏற்றுக் கொள்ளும்? அந்த வெறி தன்னைத் தவிர மற்றவர்களை மறக்கச் செய்தது. மறக்கச் செய்ததோடு மட்டுமின்றிப் பழிக்கவும் செய்தது. இந்த நிலையில் பல காவியங்கள் எழுந்தன. தத்தம் ஊரிலுள்ள கடவுளர் பேரில் பல பதிகங்கள் பாடி, அக் கடவுளே எல்லாக் கடவுளருக்கும் மேல் என்ற வகையில் அவற்றை அமைத்தனர்.

அப்பாலுக்கப்பாலாய் இருக்கும் ஆண்டவனை மனிதன் போலாக்கி, அவனையும் காமம் முதலிய உலகப் பொருள்களில் கட்டுண்டவனாக்கி, எப்படி எப்படியோ பலப்பல பாடல்களைப் பாடியிருக்கின்றனர். கடவுளைக் குழந்தையாக்கி அக்குழந்தையைப் பாராட்டும் பாடல்களுக்குப் 'பிள்ளைத்தமிழ்' என்று பெயரிட்டனர். அந் நூலில் குழந்தை பிறந்த மூன்றும் திங்கள்

முதல் இருபத்தோராம் திங்கள் வரை சில பருவங்களை அமைத்துக் கொண்டு, ஒவ்வொரு பருவத்துக்கும் பத்துப் பாடல்கள் வீதம், நூறு பாடல்களைப் பாடுவர். அப்பாடல்கள் வெறுங் கற்பனைகளில் மிதப்பன வேயன்றி உலகினுக்கு ஏற்பச் செல்லாதன. அதனாலேயே அவை வழக்கிழந்து மறைகின்றன எனலாம்.

உலகிற் பிறந்த குழந்தையைத் தாலாட்டிப் பாலூட்டிச் சீராட்டாத பெற்றோர் இல்லை. விதம் விதமான தாலாட்டுப் பாடல்கள் பாடிப் பெற்றோர்கள் குழந்தைகளை மகிழ்வித்துத் தாங்களும் மகிழ்வார்கள். தாலாட்டுப் பாடாத தாயே இருக்க மாட்டாள். எனினும், இப் பிள்ளைத்தமிழில் வரும் தாலாட்டுப் பாடல்களை ஒருவரும் பாடுவதில்லை. ஏன்? அவ்வாறான பாடல்கள் இருப்பதே ஒருவருக்கும் தெரியாத வகையில் அவை தம் முடிவின் எல்லைக்குச் சென்று கொண்டேயிருக்கின்றன. தோன்றிய அந்நாளிலும் சரி, இன்றும் சரி, அவை வாழவில்லை என்றே சொல்லலாம். எங்கோ இரண்டொருவர் ஏதாவது தேர்விற்குப் பாடம் வைத்துவிட்டதால் படிக்க வேண்டுமென்ற கட்டாயத்துக்காகப் படிப்பார்கள். சில பாடகர்கள் இரண்டொரு பாடலை இசையோடு பாடுவார்கள். அவ்வளவுதான். அவை எல்லோருக்கும் தேவையான பாடல்களாயிருந்தும், ஏன் அவ்வாறு வாழாது கெடுகின்றன? ஒரே காரணம், அவை வாழ்வோடு பொருந்தாமைதான். பிள்ளைத்தமிழ் என்று பெரிய தமிழ் பாடியதாக நினைத்துக்கொண்டு, தமிழுக்கும் தொண்டு செய்தாகக் கூறிக்கொண்டு, தமிழ் நாட்டில் தமிழ் மக்கள் வாழ்வுக்கும் உணர்வுக்கும் தொடர்பற்றவற்றைப் பாடி மகிழ்வார்கள். இவ்வாறு மக்கள் வாழ்வுக்குத் தேவையான பாட்டாக இருப்பினும், அது வாழ்வுக்குப் பொருந்தாத வகையில் வெறுங் கற்பனையில் மட்டும் மிதப்பதாயின், அது வழக்கழிந்து போதல் உறுதியேயாம்.

பிள்ளைத் தமிழைப் போன்றே தூது, கலம்பகம், சதகம் முதலிய பிரபந்தங்களும் பிற்காலத்தில் அதிகமாக எழுதப் பட்டன. என்றாலும், அவையும் மக்கள் வாழ்வுக்குப் புறம்பாக

அமைந்தமையால் இந்த இரண்டொரு நூற்றாண்டுகளுக்குள்ளே இறுதிப் படியை நாடிப் புறப்பட்டுவிட்டன என்று சொல்லலாம். சதகம் என்பது நூறு பாடல்களைக் கொண்டது. அதில் ஏதாவது செய்யுட்கோவையோ, பொருட்கோவையோ காண முடியாது. ஏதோ பாடல்களைச் சேர்த்து நூறு என்று கணக்கிட்டு, ஏதேதோ பொருள்களைப்பற்றிப் பாடி முடிப்பார்கள். தமிழ் நாட்டில் இல்லாத பல்வேறு பாகுபாடுகளை விளக்கி, அவரவர்களுக்கென்று தனித் தனித் தொழிலையும் பிரித்து, அவற்றை இயல்பாக்கி, அந்தணர் இயல்பு, வணிகர் இயல்பு, அரசர் இயல்பு, வேளாளர் இயல்பு என்று சாதியும் தொழிலும் பிரிக்கும் இழிதகைமைக் கவிதைகள் நாட்டில் வாழ முடியுமோ? 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்,' என்று மனித இனத்தையும் கடந்து, எல்லா உயிர்களையும் ஒன்றாகப் பிணைக்கும் பெருநெறி பிறந்த நாட்டிலே சாதி வேறுபாடுகளையும், பிற வேறுபாடுகளையும் கற்பித்துக் கூறும் எந்தக் கவிதைதான் வாழ முடியும்? மேலும், வாழ்வுக்குத் தேவையற்ற சடங்குகளையும்—ஏன்?—சகுனங்களையுங்கூட வரையறுக்கும் பாடல்கள் சதகங்களில் இடம் பெற்றுள்ளன.

பிரபந்த வகையில் உலா என்பது ஒன்று இருக்கின்றது. அதில் பெண்கள் வருணனை படிப்பதற்கு இன்பமாகத்தான் இருக்கும். எழுவகைப் பருவத்திலும் உள்ள பெண்களையெல்லாம் சித்திரிக்கும்போது நன்கு அமைந்தது போலத்தான் அப்பிரபந்தம் தோன்றுகின்றது. எனினும், அது சிறந்து வாழவில்லை. காரணம் என்ன? அப்பெண்களின் அழகைப் பலவகைகளில் விளக்கிக்காட்டும் ஆசிரியர்கள், அவர்கள் போக்கை விளக்கும் காலத்து, உலக வாழ்க்கைக்கப்பால் செல்கின்றார்கள். தாங்கள் ஒரு தலைவனைச் சிறப்பிக்க விரும்பினால், அவனை முன்னிறுத்தி அவனுக்கு இத்தனை பெண்களது கற்பினையும் காணிக்கையாகப் பலியிடுவர். அத் தலைவன் தெருவில் பவனி வருவதாகவும், அவனைக் கண்ட காரிகையார் கருத்தழிந்து, உடை நெகிழ, உணர்வு கெடத் தம் வசம் இழந்து அவனை நாடும் நிலையில் மானமழிந்து மதி கெட்டு நிற்பதாகவும்

காட்டுவர். 'தெய்வம் தொழாஅள் கொழுநற்றொழு தெழுவாளாய்க்' கற்புக்கடம் பூண்ட தமிழ் நாட்டுத் தாய் பேரிளம் பெண்ணாகிய, முதுமைப் பருவத்து நிலையிலேயும், தெருவில் செல்லும் ஒருவனைக் கண்டு தன் வசமிழந்து கருத் தழிந்து நிற்பதாக ஒரு காவியம் பாடின், அக்காவியம் எத்தனை சொற்சுவை, பொருட்சுவை பொருந்தியதாய் நிற்பினும், இம்மண்ணில் வாழுமோ? நல்லவேளை! அதுபோன்ற இலக்கியம் நாட்டில் அதிகமாக வளரவில்லை., தோன்றிய இரண்டோர் உலாக்களுங்கூட, எங்கோ மூலை முடுக்குக்களில் அடங்கிக் கிடக்கும் வகையில் அமைந்து விட்டன என்று கூறலாம். அவற்றைப் பற்றி மேடையில் பேசுவாரும் அதிகம் இல்லை. ஏதோ கல்லூரி மாணவர்களுக்குப் பாடங்களுக்காக இரண் டொன்று வைக்கப்பட்டிருக்கும். அவ்வளவே! மனிதனை மட்டு மன்றிக்கடவுளரையும் இத்தகையஉலாக்களுக்குத் தலைவராக்கி, அவரைக் கண்டு பெண்டிர் கருத்தழிவதாகவும் சிலர் பாடுவர். ஆனால், அதிலேயும் கற்புடைப் பெண்டிர் நிலை குலையும் வகை தான் காணப்படுகின்றது. இவ்வாறு உலாப் பாடுவதன் கருத்து வேறு என்றும், அது பெண்களுக்கு இழிவு தேடித் தருவதன்று என்று சிலர் வாதிப்பர். எனினும், எப்படியாயினும், அது மனித வாழ்வை விளக்க வல்ல ஒரு நூலன்று என்பது தேற்றம். அதன் வளர்ச்சியின்மை ஒன்றே அந்நூல் உலக மக்கள் வாழ்வு நெறிக்கு மாறுபட்ட ஒன்று என்பதைத் திட்டவட்டமாகக் காட்டுமன்றோ!

இவற்றைத் தவிர, இன்னும் எத்தனையோ பிரபந்தங்கள் கடந்த நூற்றாண்டுகளில் தோன்றி நின்றன. மாலையும், கோவை யும், தூதும், அந்தாதியும் எண்ணற்று வளர்ந்தன. எல்லாம் ஒன்றை ஒன்று பார்த்து எழுதுவது போன்று அமைந்து, பொருளாழ மற்று, வெற்றுப் பாடல்களாகவே நின்றன. உண்டாக்கியவன் வாழ்ந்த காலத்திலேயே கேட்பாரற்று மடிந்தன பல. இக்காலத்திலேதான் நாம் மேலே கண்ட தல புராணங்களும் தோன்றலாயின. ஊர் மேற்கொண்ட பற்றாலோ அல்லது ஒரு நூறு வெண்பொற் காசுக்காகவோ ஒரு புராணம்

எழும்பும். ஆனால், பாவம், அப்போதே அது மங்கி மறைந்து விடும்! இன்னும் வசை பாடலும், வழி நடைப் பாடலும் பிற வகைப் பாடல்களும் இக்காலத்தில் தோன்றித் தோன்றி மறைந்தன. அவையெல்லாம் ஒரு சிறிதும் வாழ்வோடு பொருந்தாத வகையிலே அமைந்தனவாகும்.

தமிழ் நாட்டில் எத்தனையோ வழக்காறுகள் இடம் பெற்றன. பிற நாட்டுப் பழக்க வழக்கங்கள் நாட்டில் குடிகொண்டன. அதைப்போன்றே பிற நாட்டு இலக்கியங்களையும் மொழிபெயர்க்க வேண்டும் என்று சிலர் விரும்பினர். அவ்வாறு மொழி பெயர்க்கவும் செய்தனர். தூது முதலிய பிரபந்தங்கள் வடமொழிச் சந்தேசங்களின் வழி வந்தனவோ என்றுகூடச் சிலர் ஐயமுறுவர். தவிர, சில தோத்திரப் பாடல்களும் இக்காலத்திலே தோன்றின. அருணகிரிநாதர் திருப்புகழ், பட்டினத்தடிகள் பாடல் போன்ற சில தோத்திரப் பாடல்கள் நாட்டில் தோன்றின. அவையெல்லாம் வாழ்வைப் பாராட்டி, மக்கள் வளம் பெறத் தக்க வழி துறைகளை வகுக்காமல், எங்கோ சென்ற காரணத்தினாலே—மக்கள் வாழ்வோடு பொருந்தாத காரணத்தாலே—சிறந்து போற்றப்படாமல் எங்கோ சிலர் கைப்பட்டு நின்றுவிட்டன. சில அழிந்தும் ஒழிந்தன.

இக்காலத்தில் எழுந்த சில நாடோடிப் பாடல்களும், இரண்டொரு கவிதைத் தொகுதிகளும் மட்டும், அவை வாழ்வோடு ஓரளவு பொருந்திய காரணத்தால் ஒரு வகையில் வாழ்கின்றன எனலாம்.

இவ்வாறு பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழில் எத்தனையோ வகையான இலக்கியங்கள் தோன்றின போதிலும் அவை பெரும்பாலும் மக்கள் வாழ்வோடு தொடர்பு கொள்ளா வகையில் தனித்து நின்றதோடு, இல்லாத கற்பனைகளையெல்லாம் புகுத்தி, அக்கற்பனைகளைச் சொல்லடுக்கால் சிறப்பிப்பதே தம் வீரச் செயல் என்று கருதிய புலவரால் பாடப்பட்டமையின், அவற்றின் வாழ்வும் வெறுங்கற்பனையாகவே கழிந்

தொழிந்து விட்டது. ஒரு செல்வன் பத்தும் இருபதும் கொடுத்து, அதற்குப் பதிலாக ஒரு பதிகத்தையோ, கலம்பகத்தையோ பெற்று வெளியிடுவானாயின், அந்த நூல் உலகில் வாழக் காரணம் உண்டோ? இப்பிற்கால இலக்கியங்களுள் பெரும் பாலன இந்த வகையைச் சேர்ந்தனவேதாம். இந்த வகை இலக்கியங்களைப்பற்றி இந்த அளவோடு நாமும் நிறுத்தி, இறுதியாக இன்றைய இலக்கியம் வாழ்வோடு பொருந்திய வகையினைக் கண்டு நூலினை முடிப்போம்.

9. இக்கால இலக்கியங்கள்

இருபதாம் நூற்றுண்டு, தமிழ்க்கவிதை உலகில் பெரு மாறுதல் செய்துவிடவில்லையாயினும், இந்த நாளிலும் கவிதைகள் தோன்றி வளராமலில்லை. 'கவிதை என்னும்போது வெறும் பாட்டுக்களை மட்டும் கொள்ளாது, நாம் முதலில் கண்ட இலக்கணப்படி மக்கள் உள்ளங்களைத் தொட்டு உயர்ச்சி அடையும் அத்தனையையும் சேர்த்துக் கணக்கிட்டால், இந்த நூற்றுண்டிலும் கவிதை வளர்ச்சியுற்றதென்றே சொல்லலாம். நாம் மேலே கவிதை உலகம் உயிர்த்தோற்ற வளர்ச்சியோடு சம்பந்தப்பட்டவற்றை யெல்லாம் நன்கு கண்டோம். அவற்றையெல்லாம் இந்த நூற்றுண்டின் விஞ்ஞான வளர்ச்சி மெய்ப்பித்து வருகின்றது. உலகம் இன்று தன்னளவில் மிகச் சுருங்கிய ஒன்றுகி விட்டது. உலக இலக்கியங்கள் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்படுகின்றன. தமிழ் நாட்டுக் கவிதைக் குவியல்களுள் சிலவும் அவ்வாறு பிற மொழிகளில் பெயர்க்கப்பட்டுச் சேர்க்கப்படுகின்றன. அவற்றுள் தலையாயது திருக்குறள். குறளைப் பற்றி மேலே கண்டோம். அந்நூல் சாதி சமய வேறுபாடற்ற ஒன்று என்பது போலவே, நாடுகளுக்கிடையிலும், பிற மொழியாளர்களுக்கிடையிலுங் கூட, அது யாதொரு வேறுபாடு மற்று வாழ்கின்றது எனலாம். அடுத்துச் சிலப்பதிகாரம், கம்பராமாயணம், திருவாசகம் போன்ற நூல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அப்படியே பல பிற நாட்டு நூல்கள் தமிழில் பெயர்க்கப்பட்டுள்ளன. மொழி பெயர்ப்புக் கலையே ஒரு நல்ல நிலையில் வளரத் தக்க வாய்ப்பு அண்மையில் தோன்றியது எனலாம்,

அடிமை வாழ்விலிருந்த இந்தியா, இன்று விடுதலை பெற்றுள்ளது; எனவே, தன்னிடம் உள்ள, கலைகளை வளர்க்க வேண்டுமென்று விரும்புகின்றது; அதற்கான புதிய துறைகளை ஆய்கின்றது; ஒவ்வொரு மொழியிலும் இந்த நூற்றாண்டில் வந்த நூல்களின் பெயர் முதலியவற்றைத் திரட்டி ஆராய் கின்றது. எந்தெந்த மொழிகளில் எவ்வெவ்வகையான இலக்கியங்கள் வந்துள்ளன என்பதை ஆராய மத்திய அரசாங்கத்தார் பல்வேறு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். இந்த நாட்டு அரசாங்கத்தார் மொழியில் சிறந்த கவிஞரென்பாரை ஆத்தானக் கவிஞராக்கிச் சிறப்புச் செய்த னர். நாட்டு மொழிக் கலைகளையும் பிறவற்றையும் வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் அரசாங்கமும் மக்களும் ஒருசேர உறுதி கொண்டு பாடுபடுகின்றனர் என்பது ஒருதலை.

உலக அரங்கத்திலும் இத்தகைய பணிகள் நடை பெற ஏற்பாடாகின்றது. ஒவ்வொரு நாட்டிலும் சிறந்த இலக்கியங் களாக உள்ளவற்றைக் கண்டெடுத்து, பல்வேறு மொழிகளில் மொழி பெயர்த்து, உலக அரங்கத்திலே அவற்றைப் பல நாடு களிலும் உலவச் செய்ய வேண்டும் என்பது அதன் நோக்கம். புத்தம் புதிய கலைகளையும் ஆக்க வேண்டுமெனவும் உலகம் விரும்புகின்றது. அதற்காக ஒரு தனிப்பகுதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உலகில் இதுவரை இல்லாத அளவுக்கு இன்று மக்கள் உள்ளத்தில் மொழிப்பற்றும், கலையுணர்வும் அரும்பியிருக்கின்றன. எத்தனையோ புது நூல்கள் வந்து கொண்டே யிருக்கின்றன. என்னவாயினும், நாம் மேலே கண்டபடி, மக்கள் வாழ்வொடு தொடர்பு கொண்டுள்ள இலக்கியங்கள் அத்தனையும் பெரிய அளவில் வாழ்ந்து வருகின்றன. மற்றவை.........?

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நாட்டில் உணர்ச்சி மிக்க புலவர் சிலர் வாழ்ந்து வந்தனர். தமிழ் நாட்டில் பாரதியாரை இந்த நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர் என்று போற்றுவார்கள். 'பாட்டுக்கு ஒரு புலவன் பாரதியடா' என்று

அவர் பின்னே வந்த மற்றொருவர் பாடியுள்ளார். அக் கவிஞர் அடிமை நாட்டுக்கு விடுதலை பெற விரும்பிப் பலப்பல பாடல்களை எழுதினார். அவர் பாடல்கள் அன்றைய அடிமை நாட்டுக்கு உணர்வை ஊட்டின. அடிமை வாழ்வில் அஞ்சிச் சாகும் நிலை மாறி அஞ்சாமை பெற வேண்டிய அவசியமும், அதன் வழி ஆளும் வர்க்கத்தார் நாட்டை விடுதலை செய்து தம் நாட்டுக்குச் செல்ல வேண்டிய நெருக்கடியையும் உண்டாக்க வேண்டும் என்றார். அவர் பாடிய பாடல்கள் பல.

'அஞ்சுவது யாதொன்று மில்லை
அஞ்ச வருவதும் இல்லை.'

என்று ஏழாம் நூற்றாண்டில் அப்பர் பாடிய அடியை எண்ணியோ, அன்றி ஆங்கிலேயர்தம் கொடுமை கருதி நைந்தோ, உறங்கும் உள்ளங்களை யெல்லாம் தட்டி எழுப்பும் வகையில் நன்கு பாடியுள்ளார்.

'உச்சி மீது வானி டிந்து வீழ்ந்து விட்ட போதிலும்
அச்ச மில்லை அச்ச மில்லை அச்ச மென்ப தில்லையே!'

என்று தம் உள்ளம் வீறுபெற்ற தன்மையை விளக்கிப் பாடும் போது, எல்லாத் தமிழரும் நிமிர்ந்து நின்றிருப்பார் அன்றோ!

பாரதியார் அன்றைய நாட்டுச் சமுதாயத்தை நன்கறிந்து கொண்டார். சமுதாயத்தில் எவ்வெவ்வாறு மக்கள் வாழ்விழந்தும், வறுமையுற்றும் வாடுகின்றார்கள் என்பதையும், இந்திய நாட்டு மக்கள் உரிமை வாழ்வு அற்று, மிருகங்களிலும் கீழாக நடத்தப்படுவதையும் உள்ளத்தால் உணர்ந்து கொண்டார். அந்த உணர்ச்சி வழியே உதட்டில் பாடல்கள் ஒன்றன்பின் ஒன்றாக உருண்டோடி வந்தன. தமிழ் நாட்டிலும் வட நாட்டிலும் உரிமை வாழ்வு மலரப் பாடுபட்ட பல பெரியவர்தம் திருவுருவங்கள் அவர் கண்முன் நிழலிட்டன. இந்திய நாட்டு மக்கள் பிற நாடுகளில் வெள்ளை முதலாளி

களின் தேயிலைத் தோட்டங்களிலும், ரப்பர்த் தோட்டங்களிலும் வாடி வருந்தும் கொடுங் காட்சியை அவர் எண்ணி எண்ணி ஏங்கி நின்றார். வாழ்கின்ற மக்களுக்குள் சாதி சமய வேறுபாடு களும் அவற்றின் வழி உண்டான பிணக்குக்களும் அவர் உள்ளத்தை உலுக்கி விட்டன. எல்லாவற்றையும் ஒன்றன்பின் ஒன்றாக எண்ணி எண்ணிப் பாடல்களை உதிர்க்கின்றார் அவர்.

'ஆயிரம் உண்டிங்கு சாதி—எனில்
அன்னியர் வந்து புகல்என்ன நீதி?—ஓர்
தாயின் வயிற்றில் பிறந்தோர்—தம்முள்
சண்டைசெய் தாலும் சகோதரர் அன்றோ!

என்று நாட்டிலே இருக்கும் வேறுபாடு காரணமாக அயலான் ஆளுதல் எவ்வாறு பொருந்தும் எனக் கேட்கின்றார். ஓர் ஆங்கிலேயனை எதிர்த்து,

'நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ பன்றிச் சேய்களோ?
நீங்கள்மட்டும் மனிதர்க ளோ? இது நீதமோ?'

என்று கேட்டு, மனித உணர்வில் அனைவரும் ஒன்றி அடிமை வாழ்வை நீக்க வேண்டிய நிலையை விளக்குகின்றார். இன்னும் இது போன்ற எத்தனையோ பாடல்கள் அவரால் பாடப்பட்டன. அக்காலத்தில் அவர் பாடலுக்கே ஒரு தனி உணர்ச்சி ஊட்டும் சத்தி இருந்தது. எனினும், இன்று விடுதலைபெற்ற இந்தியா வில் அந்தப் பாடல்களை யாரும் பாடவில்லை. பாடவேண்டிய தேவையும் இல்லையன்றோ! அவை அந்தக் காலத்துக்கு இன்றியமையாதனவாயிருந்த போதிலும், அன்றைய மக்கள் உள்ளத்தைத் தட்டி எழுப்பும் திறம் பெற்றனவாய் இருந்த போதிலும், இன்று அவை மக்களுக்குத் தேவையற்ற பாட்டாகி விட்டன. அன்று ஆங்கிலேயர் அவற்றைப் பாடக்கூடாது என்று சட்ட திட்டங்களால் தடுத்து நிறுத்தியபோதிலும் ஊர் தொறும், தெருத்தொறும் அப் பாடல்கள் முழங்கின. இன்று யாரும் தடுப்பாரற்று, யாரும் பாடலாம் என்ற நிலையிருந்தும்,

பாடுவாரைக் காணேம். காரணம், அத்தகைய பாடல்கள் எல்லாக் காலங்களுக்கும் ஏற்புடைய பாடல்களாக அமையாமையேயாம். சங்க காலத்தில் உணர்ச்சி மிக்க, விடுதலை விரும்பிய பாடல்கள் உள்ளன. அவை இன்றும் போற்றப் படுகின்றன. காரணம், அவை ஒரு தனி மனிதனுக்கோ, நாட்டுக்கோ, சமுதாயத்துக்கோ, ஒரு காலத்துக்கோ அமைந்த வெற்று உணர்ச்சிப் பாடலாக அமையாது, பொதுவாக மக்களினத்துக்கே நீதி புகட்டும் பாடல்களாய் அமைந்தமையே.

வெள்ளைக்குடி நாகனர் என்னும் புலவர், தம் பழஞ் செய்க் கடனை விடுத்துக்கொண்டதுடன் உலகம் நலம் பெறவே பாடிய ஒரு பாட்டுப் புறநானூற்றில் உள்ளது[1] என்பதை மேலே கண்டோம்.

அதைப்போன்று பாரதியார் விடுதலை வேட்கைப் பாடல் களைப் பொதுப்பட, எல்லார்க்கும் என்றும் பொருந்தியனவாகப் பாடியிருப்பாராயின், அவை என்றென்றும் வாழும். அவர் அவ்வாறன்றி, ஆங்கிலேயரையும் நம் நாட்டவரையுமே நினைத்து நினைத்து விடுதலை வேட்கை உணர்ச்சியும் வெறியுள்ளமும் உந்தப் பாடியனவாதலின், இன்று விடுதலை பெற்றபின் சொந்த நாட்டிலேயே அவை பாடப்படாமல் மங்கி விடுகின்றன. ஆனல், அதே வேளையில் அவர் பொதுவாகத் தமிழ் பற்றியும், நாட்டு வாழ்க்கை பற்றியும், காதல், கடவுள் நெறி முதலியவற்றைப் பற்றியும் பாடிய பாடல்கள், இன்றும் மக்களால் பாராட்டப் பட்டும், மேற்கோள்களாக எடுத்தாளப் பட்டும் வருகின்றன. அவை என்றென்றும் பாரதியாரை வாழ வைக்கும் என்பது உறுதி.

கடந்த நூற்றுண்டின் பிற்காலத்தில் வாழ்ந்த இராமலிங்க அடிகளாரைப்பற்றியும் இங்கு நினைத்தல் வேண்டும். அவர் பாடல்கள் சமயம் பற்றியவாயினும், அவற்றின் இடை

1. இந்நூல் பக்கம் 317 (புறம். 35)

யிடையே சமரசஞானம் விளங்குதல் கண்கூடு. அவர் பாடல்களை 'அருட்பா' எனலாகாது என்று வாதப் பிரதி வாதங்களும், வழக்குக்களுங்கூட நடைபெற்ற போதிலும், அவர்தம் சமரசப் பாடல்கள் நாட்டில் இன்று அதிகமாக உலவத் தலைப்பட்டு விட்டன. 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்!' என்று உயிர்த்தோற்றத் திறனை அவர் உணர்ந்து கூறுவது வாழ்க்கை நூலாக வாழாமல் போகுமா? ஓரறிவு உயிர்க்கும் வாட்டம் உண்டானால் பொறுது செயலாற்றிய பழம்பெருந் தமிழ் மன்னன் பாரியின் நிலையிலன்றோ அவர் இரக்க உள்ளம் இயங்குகின்றது! பயிர் வாடினால் அவர் வாடுவானேன்? ஆம்; அதுவும் ஓர் உயிர் அன்றோ! அது வாடுவதும் ஆறறிவுடைய மனிதன் வாடுவதும் உயிர் அமைப்பின் வழி ஒன்றுதானே? இந்த உணர்வுடைய பாடல் வாழாது போகுமோ? இது போன்ற சமரசக் கருத்துக்கள் அவர்தம் பாடல்களில் எத்தனையோ உள்ளன. அவர் இறைவனை வேண்டும்போது 'ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்' என்ற வேண்டுகோளைத்தான் முன் வைத்து வேண்டுகின்றார். உலகில் 'சமரச சன்மார்க்கம்' நிலவ வேண்டும் என்பதே அவர் ஆசை. சாதியாலும் சமயத்தாலும் பிறவற்றாலும் பிளவுபட்டு நிற்கும் சமுதாயத்தை நோக்கி நோக்கி நைந்து நைந்து அவர் பாடிய பாடல்கள் பல. நாட்டில் நடமாடும் 'கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக' வேண்டுமென்று அவர் வெள்ளை உள்ளமும் விரும்பிற்று. அவர் கடவுளை அருட்பெருஞ் சோதியாகவே கண்டார். அவர் காட்சியில் உலக உயிர்கள் அனைத்தும் ஒன்றாகவே தோன்றிக் காட்சியளித்தன. கடல் சூழ்ந்த உலகத்தில் வாழும் மக்களைக் கூப்பிட்டு கூப்பிட்டு அவர் கூறும் அற உரைகள் எல்லா உயிர்க்கும் ஏற்றனவாய் அமைந்துள்ளன; சிறந்துள்ளன. எனவே, அவர் பாடல்கள் ஒரு சமயத்தைச் சார்ந்தனவாக அமையினும் மக்கள் வாழ்க்கையையும் வளத்தையும் செம்மை யான முறையில் போற்றியும் பாராட்டியும் சிறக்கச் செய்தமையின், எதிர்ப்புக்களை யெல்லாம் வென்று, 'அருட்பா' வாகவே அவை வாழ்கின்றன எனலாம்.

இன்றும் நாட்டில் கவிஞர் சிலர் கவிதை புனைகின்றனர். பாரதிதாசன் என்பார் பாரதி அடி ஒற்றிச் சமூகநல சம்பந்த மான பல பாடல்களைப் பாடினர். அண்மையில் மறைந்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பாடல்களையும் மாணவரும் மற்றவரும் நன்கு அறிவர். அரசாங்கக் கவிஞரா யிருந்த நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் பாடல் களும் நாடறிந்தனவே. இவர்களையன்றி எத்தனையோ எழுத்தாளர்கள் புத்தம் புதிய கவிதைகளைப் புனைகின்றார்கள். நாள்தோறும் வெளிவரும் இதழ்களில் பலப்பல கவிதைகள் தீட்டப்படுகின்றன. கவிதைக் குவியல்கள் நூல்களாக வந்த படியே இருக்கின்றன. ஆனால், அத்தனை பாடல்களும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்று கொள்ள முடியுமா? ஏதோ காலப்போக்கிற்கு ஏற்ப, சமுதாய ஏற்றத் தாழ்வுகளைச் சித்திரித்துப் பாடும் பாடல்களில் ஒரு சிலவே போற்றப்படுகின்றன; மற்றவை, காண்போரால் படிக்கவும் படாது மாய்ந்தொழிகின்றன.

உலகம் சிறிதாகிவிட்டபடியால், பலப்பல கொள்கைகள் நாட்டில் நடமாடுகின்றன. ஒரு நாட்டில் தோன்றிய கொள்கை விரைவிலேயே உலக முழுவதும் பரவும் கொள்கையாக மாறி விடுகிறது. அதற்கேற்ற சுற்றுச்சார்புகள் இன்று நாட்டில்-உலகில்-அதிகமாய் உள்ளன. இந்த நிலையில் சாதாரண மக்கள் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் வகையில் பல வகைப் பாடல்கள் உண்டாகின்றன. ஏழை பணக்கார வேறுபாட்டைச் சித்திரிக்கும் பாடல்கள், நாட்டுக்கு நாடு காட்டும் ஏற்றத்தாழ்வை விளக்குவன என்று எத்தனையோ வகையில் பாடல்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. எனினும், அத்தனையும் வாழ்வதில்லை. சங்ககாலப் புலவன் ஒருவன் ஏழை பணக்கார வேறுபாட்டைச் சித்திரிக்கும் பாடலிலும் இன்றைய பாடல் கடுமையாகவே அவ் வேறுபாட்டைக் காட்டு கின்றது. எனினும், இவை ஒரு சில ஆண்டுகள் கூட வாழாது மறைந்துவிடுகின்றன. அன்றைய பாடலில் அமைதியும் ஆக்கப் பணிக்கு வழி வகையும் காணப்படுகின்றமையின், அது

வாழ்கின்றது. இன்றைய பாடலில் ஆரவாரமும் வெறியுணர்வும் அழிவு மனப்பான்மையும் இடம் பெற்றுள்ளமையின், இது தன்னைத்தானே அழித்துக்கொள்கின்றது.

பாடல் எழுதுவதில் மட்டுமன்றி, மேடையில் ஏறிப் பேசுவதிலும், உரைநடை நூல்கள் இயற்றுவதிலுங்கூட இந்த வேறுபாட்டைக் காணமுடியும். மக்கள் உள்ளத்தில் வெறியுணர்ச்சியையும், வேறுபாட்டு உணர்ச்சியையும் வளர்க்கும் பேச்சுக்கள் அவ்வேளையில் ஆரவாரத்தோடும் கைதட்டல்களோடும் கேட்கப்படுமேனும், சிறிது காலத்திலேயே அவை வாழ வைக்க முடியாதன என்ற உண்மை வெளியாகிவிடும். அதே, வேளையில் சமுதாய நல அமைப்பில், மக்கள் வாழ்வில் ஆரவாரமற்ற தொண்டு கலந்த சொற்பொழிவுகள், அவற்றைக் கேட்பார் ஒரு சிலரேயாயினும், அவர்வழி நாட்டுக்கு நல்ல நிலைத்த பணிகளைச் செய்யும். நூல்களும் அத்தகையனவே. நாட்டில் ஒரு சிலர் நூல்கள் பல ஆயிரக்கணக்கில் விற்பனையாயாவதற்கும் ஒரு சிலர் நூல்கள் முதற்பதிப்பும் முடியாது திண்டாடுவதற்கும் வேறு காரணம் ஆராய வேண்டா. நல்லவர் எழுதும் நூல்கள், தமக்குள் மக்கள் வாழ்வைப் பொதியப் பெற்றுள்ளன. எக்கருத்தைப் பற்றிய நூலாயினும், எந்த வகையில் அமைந்த ஏடாயினும், அதில் அமைந்த முக்கியமான பொருள் மக்கள் வாழ்க்கையொடு தொடர்பு கொண்டதாகவே இருக்கும். எழுத்தும் சொல்லும் மக்கள் வாழ்வென்னும் பொருளோடு செல்லின் என்றென்றும் வாழ்வது உறுதி என்பதோடு, அந்தச் சொல்லோவியங்களாகிய நூல்கள் பலராலும் நன்கு விரும்பப்பெற்று, அவற்றின் ஆசிரியர்களுக்கு வாழும் காலத்திலேயே நல்ல வளனையும் பெயரையும் தேடித் தரும் என்பது உறுதி. இந்த வகையில் இன்று எழுத்தாளர் சிலர் மக்கள் உளமறிந்து, வாழ்வறிந்து. அவர்தம் பண்பறிந்து நல்ல நூல்களை இயற்றிப் பேரும் புகழும் ஒருசேர எய்துகின்றனர். ஆனால், இந்த அடிப்படை உண்மையை அறியாத சிலர், 'வான் கோழி பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போன்று' ஏதோ

நூலியற்றித் தமக்கு அத்துணைச் செல்வமும் சிறப்பும் பெருக வில்லையே என்று மனம் சாம்புவர். அவர்கள் சற்று நின்று நிலைத்து கவிதை அல்லது இலக்கிய வரலாற்றை எண்ணுவார்களாயின்—அவை தோன்றி வளரக் காரணமாயிருந்த மக்கள் வாழ்க்கைப் பிணைப்பை உணர்வார்களாயின்—உண்மையில் கண் திறக்கப் பெற்றவர்களாவார்கள். கவிதையாயினும் சரி, அது வாழ்வோடு பிணைந்ததாயின், நெடுங்காலம் நிலைபெற்று வாழ்வது மட்டுமன்றி—வாழ்ந்து தன்னை எழுதினவனுக்குப் புகழைத் தேடித் தருவது மட்டுமன்றி—அவன் வாழும் காலத்திலேயே அவனுக்கு வளத்தையும் சீரினையும் தேடித்தரும் என்பது இதனால் நன்கு புலனாகுமன்றோ! இந்நிலை கவிதை தோன்றிய அந்த நாள் தொட்டு, இன்றுவரை நிலை கெடாது வாழ்வதைக் காண்கின்றோம்.

இன்றைய இலக்கிய உலகில் இன்னொரு வளர்ச்சி மொழி பெயர்ப்பாகும். உலக அரங்கில் பல்வேறு மொழிகளில் எழுதப் பெற்ற இலக்கியங்களில் சிறந்தனவெல்லாம் பிற மொழிகளில் பெயர்த்தெழுதப்படுகின்றன. தமிழில் உள்ள சில சிறந்த கவிதைகள் பிற மொழிகளில் பெயர்த்தெழுதப்படுவதை மேலே கண்டோம். அதைப் போன்றே, தமிழிலும் பிற மொழிக் கவிதைகளும், காவியங்களும், புதினங்களும், பிறவும் மொழி பெயர்க்கப்படுகின்றன.

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்.
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்.'

என்று கனவு கண்டார் பாரதியார். அக் கனவு ஓரளவு இன்று நனவாகி வருகின்றது என்பது உண்மைதான். எனினும், போதிய அளவு அவை செயலாக்கப்பெறவில்லை என்பது கண்கூடு. இன்று வங்க மராத்தி மொழிகளிலிருந்தும், ஆங்கில மொழியிலிருந்தும் மொழிபெயர்ப்பு நூல்களும், தழுவல் நூல்

களும் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால், அவற்றுள்ளும் இந்நாட்டுச் சமுதாய வாழ்க்கை நலனோடு பொருந்திய மொழி பெயர்ப்பு நூல்களே வாழ்கின்றன. அல்லன, அற்ப ஆயுள் உடையனவாக, ஆயிரம் பிரதிகளுக்கும் வழியற்றனவாக, மறைந்து விடுகின்றன. பிற நாட்டுப் புலவர்தம் கவிதைகளின் மொழி பெயர்ப்பும் அப்படியே வாழ்ந்தும் வீழ்ந்தும் நிற்கின்றன. எனினும், இன்றைய உலகில் இலக்கியம் வளர எல்லோரும் சேர்ந்து பாடுபடுகின்றனர் என்பது மட்டும் கண் கூடான உண்மை.

இன்றைய நிலையில் இனி வரும் நாள்கள் என்னாகும் என்பதை நம்மால் எண்ணிப் பார்க்க முடியாது. அதிலும் சிறப் பாகக் கவிதை உலகில் எத்தகைய மாற்றங்கள் நேரும் என்பதைக் கூறமுடியாது. பேச்சு வழக்கும் பிறவும் அழியினும், கவிதைக் கருத்துக்கள் மக்கள் இனம் வாழும் வரையில் அழியாது என்பது உறுதி. இந்த உண்மையைத்தான் இதுவரை—வரலாறு காணாத காலம் தொடங்கி இன்று வரை— கண்டு கொண்டே வந்தோம். இவ்வாறு வரலாறு அறியாக் காலம் தொட்டுக் கவிதை ஒரு கலையாய் வளர்ந்து வாழ்வோடு பின்னிக்கொண்டே வளர்ந்து வருகின்றது. அவ்வாறு பின்னிக் கொண்டகவிதைகள், தாம் தோன்றிய மொழியும், தாம் தொடர்பு கொண்ட சமுதாயமும் மறையினும், தாம் மறையாது உலகம் உள்ளளவும் வாழ்ந்து கொண்டேதான் இருக்கும். கவிதைக்கு மட்டுமன்றி, நிலை பெற்ற கலைகள் எல்லாவற்றிற் குமே இவ்வுண்மை பொருந்தும். எனவே, கவிதை புனைவோரும், கலைகளைச் செழிக்கச் செய்ய விரும்புவோரும், மக்கள் வாழ்வை யும் பண்பாட்டையும் பிற நிலைகளையும் கண்டு, கருத்தால் உணர்ந்து, தத்தம் கவிதைகளையும் கலைகளையும் ஆக்கு வாராயின், அவை நிலைத்து வாழ்வதோடு, அவற்றின் மூலம் அவர்களும் அமரராகிவிடுவார்கள். அந்த உணர்வில்—உலக உயிரினம் ஓங்கவே கலைகள் வாழ்கின்றன என்ற நல்ல வழியில் —கவிஞர் உலகமும் கலைஞர் உலகமும் நாட்டையும் உலகை யும், அவற்றில் வாழும் உயிரினத்தையும் என்றென்றும் ஓங்கச்

செய்யும் என்பது உறுதி. அத்தகைய சாகா வரம் பெற்ற கவிதைகளின் வழி உலகில் மக்கள் உள்ளம் மாறாத நல்ல பண்பாடு அரும்புவதாக! அந்த ஆக்கப் பணிக்கு இந்நூல் ஒரு சிறிதாவது உதவக்கூடும் என்ற நம்பிக்கையின் உறுதியுடன் நான் இந்நூலை முடிக்கின்றேன். கவிதையும் வாழ்க்கையும் கலந்து சிறப்பனவாக!

Books referred

1. *The Discovery of Poetry* —*P. H. B Lyon,* M. C., M. A
2. *The Poetic mind* —*F. C. Prescott*
3. *Poetry for Poetry's sake* —*A. C. Bradley,* M. A., LL. D
4. *Reason and beauty in the Poetic mind* —*Charles Williams*
5. *Milton's theory of Poetry and Fine Arts* —*Ida Langdon*
6. *The Idea of great Poetry* —*Lascelles Abercrombic*
7. *The Theory of Poetry* —*Lascelles Abercrombic*
8. *Life in Poetry* —*William John Courthope*
9. *Essays on Literature and Life* —*Clutton Brook*
10. *The Art of Poetry* —*William Pator Ker*
11. *The Poetry of Nonsense* —*Emile Cammaerts*
12. *Poetry and the ordinary Reader* —*M. R. Ridley*
13. *Poetry* —*John Masefield*
14. *Man and Nature* —*M. N. Roy*
15. *The Prindiples of criticism* —*W. Basil Worsfold*
16. *Literary taste* —*Arnold Bennett*
17. *Story of Creation* —*Edward Clodd*
18. *Human Origin* —*S. Laing*
19. *The Principles of Biology* —*Herbert Spencer*
20. *Stars and Atoms* —*Eddington*
21. *Man in the modern World* —*Julian Huxley*
22. *Deserted Village* —*Oliver Goldsmith*
23. *The Evolution of man* —*E. Hackel*
24. *The History of creation*